HINDU LAW.

ஹிந்து லா.

லா பப்ளிஷர்

[illegible]. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்

அச்சிட்டது.

மது[illegible]ரவேணிவிலாசம் புஸ்த[illegible],—

வேப்பேரி போஸ்டு—மதராஸ்.

M. V. PRESS, VEPERY—MADRAS.

உடைமை.

ந. சு. ராம.

இருப்பக்குடி:

HINDU LAW.

ஹிந்து லா.

லா பப்ளிஷர்

R. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.

இயற்றியது.

மதுகரவேணிவிலாசம் புஸ்தகசாலை,

வேப்பேரி போஸ்டு—மதராஸ்.

M. V. PRESS. VEPERY—MADRAS.

1925.

விலை ரூபா 2—0—0. தபால் சார்ஜ் வேறு.

ந. சு. ராம. இருப்பு.

விஷயசூசிகை.

4-வது மைனர்களின் சம்ரட்சணம்.

5-வது பொது ஐக்கிய குடும்பம்.

நெ.		நெ.	
141	செலவை குறைக்க கேட்கக்கூடாது.	160	அவிபக்த பாகஸ்தனொருவன் தன் பங்கை தானஞ் செய்யக்கூடாது.
142	மோசமானசெலவை வசூல்செய்வது.	161	ஒருபங்காளிக்கு அதிகச்செலவு.
143	எல்லாம் குடும்பக்கடனுக மாட்டாது.	162	பொதுக்கடன்கள்.
144	குடும்ப எஜமானன்நடவடிக்கை.	163	குடும்ப பொது வியாபாரம்.
145	குடும்ப எஜமானனுடைய நஷ்டநடவடிக்கை.	164	வரவுசெலவைப்பரிசோதிப்பது.
146	குடும்ப பொதுசொத்தை வாங்கிறவர் கவனிக்கவேண்டிய விஷயம்.	165	பொதுதாவா.
147	தகப்பன் முதலிய முன்னேருக்கு அதிக அதிகாரம்.	166	மிதாட்சரப்படி பாகபாத்தியம்.
148	அவிபக்த குடும்பப்பொது சொத்துக்கள்.	167	பொதுச்சொத்தில் தனிப்பாத்தியம்.
149	அவிபக்த குடும்ப பொதுச்செலவுகள்.	168	அப்பிரதிபந்த சொத்து.
150	அவிபக்ச குடும்பஸ்தர்களின் (பாத்தியாபாத்தியம்).	169	சப்பிரதிபந்தசொத்து.
151	குடும்பபொதுசொத்தை பாகஸ்தர்கள் சேர்ந்து அனுபவிக்கவேண்டும்.	170	அநந்தரவார்சாய் கிடைக்கும் சொத்துசுவயார்ஜிதமென்பது.
152	அவிபக்த குடும்பத்தில் ஒருவன் பாகம் இவ்வளவென்று குறிப்பிடமுடியாதென்பது.	171	மாதாமகர்சொத்து பிதுரார்ஜிதம்.
153	ஒருவன் செலவெல்லாம் குடும்பபொது சொத்தில் கொடுக்கவேண்டும்.	172	பொதுக்குடும்பத்தில் பாகயோக்கியமுள்ளவர்கள்;
154	பொதுக்கும்பத்தில் ஒருவனிறந்தால் அவன் சொத்து மற்றபாகஸ்தர்களுக்குசேருவது.	173	மூலபுருஷனைவிட்டு மூன்று தலைமுறை எண்ண வேண்டியது.
155	பொதுக்குடும்பத்தில் ஒருவன்சுவயார்ஜிதம் அவன் சந்ததியாருக்குச் சேருவந்து.	174	தாயபாகத்தின்படி சொத்துப்பிரிவினை.
156	பொதுக்குடும்பத்தில் ஒருவன்சுவயார்ஜிதத்தை செலவழித்து பின்வாங்கிக்கொள்ள ஏற்பாடு செய்வது.	175	ஸ்வயார்ஜித சொத்து.
		176	பிதுரார்ஜித சொத்து.
		177	தகப்பன் தேடினசொத்துபிள்ளைகளுக்கு பிதுரார்ஜிதம்.
		178	தானமாய்க்கிடைத்தசொத்து.
		179	அடமானசொத்தைத் திருப்புதல்.
		180	சொத்தின் விருத்தி.
		181	பிரிக்கக்கூடாத சொத்தின் ஆதாயம்.
		182	சுவயார்ஜிதத்தை இஷ்டத்துடன் குடும்பத்தில் சேர்ப்பது.
		183	படிப்பினுல் சம்பாதித்த பொருள்.
157	பாகவியாச்சியம்.	184	குடும்பசொத்தால் விருத்தியடைந்த சொத்து.
158	மைனருக்காக பாகவியாச்சியம்.	185	கைமாறிப்போன சொத்து.
159	ஒருபாகஸ்தனின் பங்கைவாங்கியவனுல்பாக வியாச்சியம்.	186	ஸர்க்காரால் இனும்.
		187	ருஜுபாரம்.

8 வது உயில்கள்.

11-வது பாகம்.

12-வது ஸ்திரீதனம்.

13-வது வார்சு பாத்தியம்.

லா ரிப்போர்ட்டுகளின் குறிப்புகள்.

1 மத. 12 அல்லது 1 ம. 12—இந்தியன் லா ரிப்போர்ட் மதரூஸ் சீரிஸ் 1-வது வால்யூம் 12-வது பக்கம்.

3 கல். 17—கல்கத்தா சீரிஸ் 3-வது வால்யூம் 17-வது பக்கம்.

3 அல 78—அலகாபாத் சீரிஸ் 3-வது வால்யூம் 78-வது பக்கம்.

8 பம். 11—பம்பாய் சீரிஸ் 8-வது வால்யூம் 11-வது பக்கம்.

2 க. ஐ. 16—கல்கத்தா ஐகோர்ட் ரிபோர்ட் 3-வது வால்யூம் 16-பக்கம்.

3 பம். ஐ. 78—பம்பாய் ஐகோர்ட் ரிப்போர்ட் 3-வது வால்யூம் 78-வது பக்கம்.

6 அ. ஐ. 32—அலகபாத் ஐகோர்ட் ரிப்போர்ட் 6-வது வால்யூம் 32-வது பக்கம்.

3 ம ஐ 16—மதரூஸ் ஐகோர்ட் ரிப்போர்ட் 3-வது வால்யூம் 16-வது பக்கம்.

ம. தீ.—மதரூஸ் தீர்ப்புகள்.

ம. ஸ. தீ.—மதரூஸ் ஸதர்கோர்ட் தீர்ப்புகள்.

பங். ஸ. தீ—பங்காள ஸதர்கோர்ட் தீர்ப்புகள்.

பாரோ—பாரோடேல் தீர்ப்புகள்.

மார்லி—மார்லி டைஜெஸ்டு.

டப்ளியூ மேக்—டப்ளியூமேக்னுடன் இந்துலா

எப். மேக்—எப். மேக்னுடன் இந்துலா.

ஸ்ட்ரே—ஸ்ட்ரேஞ்சு இந்துலா.

ஸ—ஸதர்லாண்டு விக்கிலி ரிப்போர்ட்.

மூ. இ. அ.—மூர்ஸ் இந்தியன் அப்பீல்.

ஹிந்துலா.

1-வது மூலாதாரங்கள்.

1. ஹிந்துக்களின் ஜாதி:—ஹிந்துக்கள் பிராம்ஹண, க்ஷத்திரிய, வைசிய சூத்திரர் என்று நான்குஜாதிகளாக இருக்கிறார்கள். முதல் மூன்று ஜாதியாரும் த்விஜர்களென்று பெயர். அதாவது அவர்கள் வேதம் ஓதவும், வைதீக கர்மங்களைச்செய்யவும் பாத்தியப்பட்டவர்கள். சூத்திரர்கள் மேற்கண்ட பாத்திய மில்லாதவர்கள். மேற்கண்ட ஜாதிப்பிரிவுகள் மிகவும் முக்கியமானது. தத்து விஷயத்தில் தத்து தகப்பனும், தத்துப் பிள்ளையும் ஒரே ஜாதியாயிருக்கவேண்டும். சூத்திரர்களுக்கு ஹிந்துலாவை யனுசரித்த அநேக விதிகள் அநுஷ்டிக்கப்படுகிறதில்லை. மேலேகண்டபிரதான நான்கு ஜாதிகளுக்குள் வெவ்வேறு ஜாதியில் விவாகஞ் செய்துகொண்டு பிறக்கும் பிள்ளைகளுக்கு அனுலோமஜர்கள்என்றுபெயர். ஒரு க்ஷத்திரியனுக்கும் சூத்திரஸ்திரீக்கும் பிறந்த பிள்ளை "உக்ரன்" என்று பெயர்; இந்தப்பிள்ளை சூத்திரனைக்காட்டிலும் மேலானவன் (12 ம. 72, 78, 79; 41. அல. 629).

2. நியாயபரிபாலனவிதம்:—இந்துதேசமானது இங்கிலீஷ்க்காரர் கைவசமாகி அவர்களுடைய ஆளுகைக்கு வந்தபிறகு ஸிவில், க்ரிமினல், ரிவினியூ விஷயங்களில் அவர்கள் அனேக சட்டங்களை ஏற்படுத்தினதுபோல, நமது மதாசார விஷயமாய் வரும் தாவாக்களைத் தீர்மானஞ்செய்வதற்காக அங்கங்கே கோர்ட்டுகளில் பண்டிதர்களை ஏற்படுத்தி, அந்தப் பண்டிதர்களின் அபிப்பிராயப்படி ஜட்ஜிகள் தீர்ப்புச்செய்து வந்தார்கள். பிறகு நமது மூல கிரந்தங்களை பரிசோதித்து இங்கிலீஷில் தர்ஜுமா செய்துவிட்டபடியால், ஜட்ஜிகளே அவைகளைப்பார்த்து தீர்ப்புச்சொல்லும்படியாய், அப்பண்டிதர்களை 1868-ம்வருஷத்தில் எடுத்துவிட்டார்கள். தற்காலத்தில் நமது சாஸ்திரிகளைக்காட்டிலும் வக்கீல்களும், ஜட்ஜிகளும் நமது மதவிஷயமாய் ஏற்பட்ட சந்தேகங்க

ளைத் தீர்மானிக்க அனேக கிரந்த கர்த்தாக்களுடைய பிரமாணங்களை எடுத்துச்சொல்ல வல்லவர்களா யிருக்கிறார்கள்.

3. தர்மசாஸ்திரத்தின் வரலாறு :—சர்வஞ்ஞான கடவுளால் படைக்கப்பட்ட இவ்வுலகத்தின்கண் மனிதர்களின் கணக்கிலடங்கப்படாத அனேகமாயிரம் ஆண்டுகளாக கல்வியிலும் ஐசுவரியத்திலும் நாகரீகத்திலும் மேன்மைபெற்றும், பலதேச ஜனங்களால் புகழ்ச்சியாகப் பேசப்பட்டதுமான ஆர்யவர்த்தமென்கிற இவ்விந்துதேசமானது அனேகமாயிர வருஷங்களாக ஆரியர்களின் சொந்த தேசமாயிருக்கிறது. மகா தர்மிஷ்டர்களான மனுமாந்தாதா முதலிய இந்து அரசர்களால் ஆளப்பட்ட இந்த ஆர்யவர்த்தத்தில் இந்துமதமும், அந்த மதத்துக்கு ஆதாரமாயுள்ள வேதங்களும், ஸ்மிருதிகளும், புராணங்களுமே நம்முன்னோர்கள் அநாதிகால முதற்கொண்டே நாகரீகம்பெற்றவர்களென்பதைக் குறிக்கின்றது ; ஆரியர்கள் கல்வியிலும், ஐசுவரியத்திலும் நாகரீகத்திலும் உலகத்தில் அனேகமாயிரம் வருஷங்களாக சிறப்புப்பெற்றிருந்ததற்கு மூலகாரணமாயிருந்த சுருதி என்கிற வேதம் கடவுளால் ஆரியர்களுக்கு அளிக்கப்பட்டதாக கருதப்படுகிறது. இந்த வேதத்தை ஆதாரமாகக்கொண்டுதான் மனுமுதலிய நமது பெரியவர்கள் உலக ரக்ஷணார்த்தம் "ஸ்மிருதிகள் தர்மசாஸ்திரங்கள், தர்ம சூத்திரங்கள்" முதலிய கிரந்தங்களைச்செய்து அதை ஆரியர்கள் அனுஷ்டிக்கும்படி செய்திருக்கிறார்கள். இவைகளில் ஆதியும், முக்கியமானதும் மனுஸ்மிருதி. இதற்கிரண்டாவது யாக்ஞவல்கிய ஸ்மிருதி. இதற்குப் பிற்காலத்தில் தான் நாரதர், பராசரர், சங்கர், லிகிதர், காத்தியாயனர், கௌதமர். வஷிஷ்டர், போதாயனர், ஆபஸ்தம்பர் முதலிய தேவாம்சங்கொண்ட ருஷிகள் அந்தந்தகாலத்திற்கும், தேசத்திற்கும் தக்கபடி பல கிரந்தங்களைச் செய்திருக்கிறார்கள்.

கிருதயுகத்தில் 'மனுஸ்மிருதியும்' திரேதாயுகத்தில் 'யாக்ஞவல்கிய ஸ்மிருதியும்', துவாபரயுகத்தில் 'சங்கர், லிகிதர்' இவர்கள் ஸ்மிருதிகளும், கலியுகத்தில் 'பராசரஸ்மிருதியும்' முக்கிய ஆதாரகிரந்தங்களாக கொள்ளப்படுகின்றன.

நமக்கு மூலாதாரங்கள், வேதங்கள், சுருதிகள் என்பதாகவே நமது கிரந்தகர்த்தாக்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் விவகாரத்துக்கு வேண்டிய தக்க ஆதாரங்கள் சுருதிகளிலில்லாததால், அவை

கள் அங்கங்கே அப்போதைக்கப்போது ஜனங்கள் நடந்துகொண்ட ஆசாரங்களை அனுசரித்தே பிற்காலத்தில் பல வித்வான்களால் பல தர்மசாஸ்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

4. தற்கால அனுஷ்டான கிரந்தங்கள்:—பொதுவாய்த் தர்ம சாஸ்திரங்கள் ஒன்றாயிருந்தபோதிலும் தேசத்துக்குத் தேசம் வழக்கங்கள் வித்தியாசப்பட்டிருப்பதால், அவ்வழக்கங்களுக்குத் தக்கபடி வியாக்கியான கிரந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை ஏற்படுத்தின கிரந்த கர்த்தாக்களையும் சாஸ்திரங்களையும் இதனடியில் காட்டியிருக்கிறோம்.

மனுவாதி மகான்களால் செய்யப்பட்ட மேற்சொன்ன பல மூலகிரந்தங்களுக்கு பிற்காலத்தில் அநேக வியாக்கியான கிரந்தங்கள் பல வித்துவான்களால் எழுதப்பட்டன. அவ்வியாக்கியானங்களில் அடியிற்கண்டவை முக்கியமானவைகள்:—

(1) மிதாக்ஷரை:—இது விக்ஞானேச்வர யோகியால் செய்யப்பட்டது, அதுபற்றி இதற்கு விக்ஞானேச்வரீயம் என்ற பெயருமுண்டு. இது பெரும்பான்மையில் யாக்ஞவல்கிய ஸ்மிருதியின் வியாக்கியானமாக இருக்கிறது.

(2) தாயபாகம்:—இது ஜீமூதவாகனரால் செய்யப்பட்டது.

(3) ஸ்மிருதி சந்திரிகை:—இது விஜயநகர ராஜவம்சம் தக்ஷிணத்தில் அரசுபுரிந்த காலத்திலிருந்த தேவானந்தபட்டர் என்றவரால் செய்யப்பட்டது. இதை மிதாக்ஷரைக்கு அடுத்ததாகச்சொல்லலாம்.

(4) தாயவிபாகம்:—இது ஷை விஜயநகர இராஜவம்சத்தில் மந்திரியாக இருந்த மாதவய்யர் என்னும் வித்வானால் செய்யப்பட்டது. அதனால் இது மாதவீயம் என்றும் சொல்லப்படும். இது முக்கியமாய் பராசரஸ்மிருதியின் வியாக்யானமாக இருக்கிறது.

(5) ஸரஸ்வதி விலாசம்:—இது பிரதாபருத்திரர் என்பவரால் செய்யப்பட்டது.

(6) வியவஹார நிர்ணயம்:—இது வரதராஜர் என்பவ்வரால் எழுதப்பட்டது. அதனால் இதற்கு வரதராஜீயம் என்ற பெயருமுண்டு.

(7) மயூகம்:—இது நீலகண்டரால் இயற்றப்பட்டது.

(8) வீரமித்திரோதயம்:—இது மித்ிரமிஸ்ரா என்பவரால் எழுதப்பட்டது. இதுவும் மேலேசொன்ன மயூகமும் அநேகமாய் மிதாக்ஷரையை அனுசரித்திருக்கின்றன.

(9) தத்தக சந்திரிகை:—இது தேவாநந்தபட்டரால் செய்யப்பட்டது.

(10) தத்தக மீமாம்சை:—இது நந்த பண்டிதரால் செய்யப்பட்டது. இதுவும் மேற்கூறிய தத்தகசந்திரிகையும் ஸ்வீகார விஷயத்தைப்பற்றியே முக்கியமாய் சொல்லுகின்றன.

மேற்கூறிய பல வியாக்கியான கிரந்தங்களில் மிதாக்ஷரையும், தாயபாகமுமே பிரதானமானவைகள். இவையிரண்டும் முக்கியமான சட்டவிதிகளில் நிரம்பவும் வித்தியாசப்படுகிறபடியால் இவைகள் இந்துலாவின் இரண்டு பிரிவுகளாக இருக்கின்றன. தாயபாகமானது இந்தியாவின் வடகிழக்கு பாகமாகிய பங்காளதேசத்தில் முக்கியஆதார கிரந்தமாக வழங்குகிறது. மிதாக்ஷரையானது மற்ற இடங்களாகிய காசிப் பிரதேசத்திலும், மேல் இந்தியாவாகிய பம்பாய் இராஜதானியிலும், தென் இந்தியாவாகிய இச்சென்னை இராஜதானியிலும் ஆதார கிரந்தமாக இருக்கிறது. மேலும் ஸ்மிருதி சந்திரிகை, ஸரஸ்வதி விலாஸம், வியவஹார நிர்ணயம், தாயவிபாகம், ஆகிய இவை மேல் இந்தியாவிலும், மிதாக்ஷரையோடு ஆதாரமாக வழங்கி வருகின்றன. இவைகள் தவிர வேறு சில கிரந்தங்கள் அங்கங்கே மேற்சொன்னவைகளோடு உபயோகப்பட்டு வருகின்றன. அவைகளை அடியிற்கண்ட அட்டவணையிற் காணலாம்.

ஸ்வீகாரம் அல்லது தத்து விஷயங்களைக்குறித்த விதிகளுக்கு தத்தகசந்திரிகை, தத்தகமீமாம்சை என்ற மேற்சொன்ன இரண்டு வியாக்கியானங்களும் ஆதாரமாக இருக்கின்றன.

இதனடியில் காட்டியிருக்கிற ஷெட்யூலில் இன்னின்ன கிரந்தங்கள் இன்னின்னரால் எழுதப்பட்டதென்பதையும், எந்தெந்த தேசங்களில், அவை அனுஷ்டானத்திலிருக்கிறதென்பதையும் ஒரே அட்டவணைப்படுத்தி விவரித்திருக்கிறோம்.

நிபந்த கர்த்தாக்களின் பெயர்.	தர்மசாஸ்திரங்களின் பெயர்.	எந்த தேசத்தில் வழங்குகிறது.
விக்ஞானேச்வரர் தேவாநந்தபட்டர் பிரதாபருத்திரதேவர் மாதவர் வரதராஜர் கூபோர் வித்தியாரண்ணியர்	1. மிதாக்ஷரம் 2. ஸ்மிருதிசந்திரிகை. 3. ஸரஸ்வதிவிலாசம் 4. தாயவிபாகம் 5. விவகாரநிர்ணயம் 6. தத்தகசந்திரிகை 7. பராசரமாதவீயம்	தமிழ் முதலான தென்னிந்தியாவில்.
விக்ஞானேசுவரர் நீலகண்டர் நந்தபண்டிதர்	1. மிதாக்ஷரம் 2. விவகாரமயூகம் 3. தத்தகமீமாம்ஸை	மகாராஷ்டிர தேசம், டெகன்னடம், குஜராத்தி, பம்பாய் வடகொங்கணம், முதலிய மேலிந்தியாவில்.
விக்ஞானேச்வரர் மித்திரமிச்ரர் கமலாகர் நந்தபண்டிதர்	1. மிதாக்ஷரம் 2. வீரமித்திரோதயம் 3. நிர்ணயஸிந்து 4. தத்தகமீமாம்ஸை	காசிராச்சியத்தில்.
விக்ஞானேச்வரர் வாசஸ்பதிமிச்ரர் லக்ஷ்மிதேவி சண்டேசுவரர் நந்தபண்டிதர்	1. மிதாக்ஷரம் 2. விவாதசிந்தாமணி 3. விவகாரசிந்தாமணி 4. விவாதசந்திரிகை. 5. விவாதரத்நாகரம் 6. தத்தகமீமாம்ஸை	வடபேகார், மிதிலை தேசம்.
ஜீமூதவாகனர் ரகுநந்தர் ஸ்ரீகிருஷ்ண தர்க்காலங்காரர். ஜகன்னாதர் குபேரர்.	1. தாயபாகம் 2. தாயதத்துவம் 3. தாயக்கிரமஸங்கிரகம் 4. விவாதபங்கார்ணவம் 5. தத்தகசந்திரிகை	கௌடதேசமென்கிற பங்காளம்.

4. (1) அனுஷ்டானம் :—சுருதிகள், ஸ்மிருதிகள், தர்மசாஸ்திரங்கள், மிதாக்ஷர நியாயபாக முதலிய கிரந்தங்கள் இவைகளில் சொல்லப்பட்டவைகளுக்கு விரோதமாக சில ஆசாரங்கள் வழக்கமாக பல ஜனங்களால் அங்கீகரிக்கப்பட்டு வெகுகாலமாக அனுஷ்டிக்கப்பட்டு வந்தால் அந்த ஆசாரங்கள் தர்மசாஸ்திரத்துக்கு சமமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. புராதனவழக்கம் தர்மசாஸ்திரத்துக்கு மேலானதென்று மனுவே அபிப்பிராயப்பட்டிருக்கிறார்.

(2) ஆனால், ஒரு வழக்கமானது சட்டப்பிரமாணமுள்ளதாய் அங்கீகரிக்கப்படுவதற்கு அது பலர்களாலும் கிரமமாயும் சீராயும் சந்தேகமன்னியிலும் நெடுநாளாய் மாறுதலின்றித் துடர்ச்சியாய் அனுஷ்டிக்கப்பட்டுவந்திருக்கிற நல்ல வழக்கமாக இருக்கவேண்டும். (7 மது 3; 3 ம. ஹை கோர்ட் 75; 7 ம. ஹை கோர்ட் 250; 3 இ. அ. 259; 27, கல். 379 ; 32 அல. 247; 45 கல். 450; 45 இ. அ. 10.) புராதனமில்லாமலும் தொடர்ச்சியாய் அனுஷ்டிக்கப்படாமலும், சந்தேகத்துக்கிடமாயும், நியாய விரோதமாயும், துராசார சம்பந்தமாயும், இருக்கிற வழக்கங்கள் சட்டப்பிரமாணமுள்ளதாகமாட்டாது. (12 ம. 214 ; 1 ம. 168 ; 12 ம. 277 ; 1 ம. 235 ; 1 ம. ஹை கோர்ட் 51 ; 14 பம். 90 ; 2 அ. 49 ; 1 க. 186 ; 4 பம். 545 ;) சிலர்கள் கூடி ஒப்பந்தமாய் நடத்திவருகிற வழக்கஞ் சட்டபிரமாணமுள்ள வழக்கமாகமாட்டாது. (8 மு. இ. அ. 400).

(3) ஒரு சரியான வழக்கமானது ஒரு பிரதேசத்தையாவது ஒரு கூட்டத்தை அல்லது ஜாதியையாவது ஒரு குலம் அல்லது குடும்பத்தையாவது பற்றியதாக இருக்கலாம். (12 மு. இ. அ. 523 ; 6 மு. இ. அ. 164 ; 2 இ. அ. 263 ; 17 இ. அ. 134 ; 4 ம. 272 ; 6 ம. 274 ; 16 ம. 54. 40 கல். 879; 37 இ. அ. 93 ; 32 அல. 247; 45 பம். 754.).

(4) மேற்சொல்லியவாறான ஒரு வழக்கம் எழுத்து மூலமாயிருக்கிற சாஸ்திர விதிகளையுங்கூட மீறினதாகும். நிச்சயமாயும் நியாயமாயும் புராதனமாயுமுள்ள ஒரு வழக்கமானது சாஸ்திர விதிகளுக்கு நேர் விரோதமாக இருந்தாலும் அவ்வழக்கமே பிரமாணமாகவுஞ் சட்டமாகவும் நியாயஸ்தலத்தாரால் ஒப்புக்கொள்ளப்படவேண்டும். (5 மு. இ. அ 169 ; 12 மு. இ. அ. 436 ; 14 மு. இ. அ. 585 ; 11 ம. 98 ; 13 ம. 426 ; 16 ம. 545 ; 15 இ. அ. 51 ; 10 அ. 272 ; 17 இ. அ. 134).

(5) சாஸ்திர விரோதமாயிருக்கிற ஒரு வழக்கத்தின் அனுஷ்டானத்தை திருப்தியாய் ருசுப்படுத்தப்படாவிட்டால் அது நியாயஸ்தலங்களில் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. (24 அ. 273; 37. இ. அ. 93; 32 அல. 247; 50 இ. அ. 58; 2. பாட். 230; 45 ம. 378; 49இ. அ. 119.)

(6) ஒருவன் தன் சுயதேசத்திலிருந்து வேறொரு தேசத்தில் போய் வசித்தால் அவனுடைய வழக்கம் மாறுபட்டு அவ்விடத்திய ஆசாரத்தைத் தழுவுவது நியாயமல்ல. (2 மூ. இ. அ. 132 ; 12 மூ. இ. அ. 91). ஆனால், அவ்விடத்திய வழக்கப்படி சிரார்த்த முதலிய கர்மங்களை அனுசரித்தால் அந்தப் புது தேசத்திய சாஸ்திரமே அவனுக்குச் செல்லும். (12 மூ. இ. அ. 8; 50 கல். 370 ; 24 ம. 650; 34 ப. 553; 31 அல 497).

6. (1) ஹிந்துலாயாருக்குறியது :—ஆரியர்களாய்ப் பிறந்து ஹிந்து தர்மசாஸ்திரங்களை யனுசரிக்கிறவர்களுக்கு ஹிந்துலா செல்லுபடியாகிறது. ஹிந்துவாகப் பிறந்தவர்கள் கிறிஸ்து, மகம்மது முதலிய மதங்களில் சேர்ந்துவிட்டால் அவர்களுக்கு ஹிந்து தர்மசாஸ்திரம் செல்லமாட்டாது. (10 மூ. இ. அ. 537 ; 1865-ம்ஞூத்திய 10-வது ஸக்ஷென் ஆக்ட்.) ஆனால் அவர்கள் எந்த மதத்தை அனுஷ்டித்தார்களோ அந்த மதத்துக்குரிய சட்டமே செல்லும். ஆனால் அதுவரையில் உண்டாயிருந்த சொத்து பாத்தியம் போகமாட்டாது ; (1850-ம்ஞூத்திய 21-வது ஆக்ட்.) பம்பாய் இராச்சியத்திலுள்ள கோஜா ஜாதியர்களும் கச்சிமேமனு ஜாதியர்களும், மகம்மது மதத்தை யனுசரித்தாலும், ஹிந்து தர்மசாஸ்திர வழக்கத்தை யனுஷ்டிக்கிறார்கள். (1 பம். ஐ. 71, 73 ; 2 பம். ஐ. 292 ; 12 பம். ஐ. 294 ; இ. லா. ரி. 3 பம். 34 ; இ. லா. ரி. 6 பம். 452 ; இ. லா. ரி. 8 பம். 115 ; இ. லா. ரி. 10 பம். 1.)

(2) பவுத்தர், ஜைநனர், ஸீக், பிரம்மசமாஜம் முதலான மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும், நம்பூதரி பிராமணர்களுக்கும், ஹிந்துமத அனுஷ்டானமே வழக்கத்திலிருப்பதால் அவர்களுக்கும் ஹிந்து தர்மசாஸ்திர ஆசாரமே செல்லுமென்று தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. (8 ஸ. 116 ; 10 பம்ஐ. 258 ; இ. லா. ரி. 1 அ. 688 ; 5. இ. அ. 87 ; 4 கல். 744 ; 37 இ. அ. 93 ; 45 பம். 754, 757 ; 31 கல். 11 ; 30 இ. அ. 249 ; 34. ம. 496.)

(3) சில தேசங்களிலும், சில குடும்பங்களிலும் தர்மசாஸ்திரத்துக்கு விரோதமான ஆசாரங்களாவது, வாடிக்கைகளாவது, நடவடிக்கைகளாவது வெகுகாலமாக நடந்துவந்ததாக ருசுவானால், அவைகள் நியாயஸ்தலங்களில் செல்லத்தக்கவைகள். (12 மூ. இ.

அ. 436; 3 ம. ஐ. 59) ஆனால், அப்படிபட்ட வழக்கங்கள், ஆசாரங்கள் முதலியவைகள் நடுவில் விட்டுவிடப்பட்டால், பிறகு அப்படிப்பட்ட ஆசாரங்களை மறுபடி அனுஷ்டிக்க கோர்ட்டார் தீர்ப்புச் செய்யமாட்டார்கள்.

சிலவிடங்களில் ஏற்பட்ட துர்வழக்கங்கள் வெகுகாலமாய் அனுஷ்டானத்திலிருந்தாலும் சட்டப்படி செல்லமாட்டாது. (3 ம ஐ 75, 77; 14 மூ. இ அ 570, 585; இ. லா. ரி. 2 பம் 14; 15. ம. 307.) அதாவது தாசிக்குப்பிறந்த பிள்ளைகள் பங்குகேட்பது, புருஷன் துஷ்டனாயிருக்கிறானென்று சில ஜாதியில் பெண்சாதி வேறொருவனை விவாகஞ்செய்துகொள்வது முதலியது சட்டப்படி செல்லாது.

7 தற்கால சட்டம்—மேற்சொன்ன சாஸ்திரங்கள், வழக்கங்கள் தற்கால அரசாங்கத்தாரால் ஏற்கப்பட்டபோதிலும், காலதேச வர்த்தமானங்களை யனுசரித்து சிலவிதிகளை மாற்றி சட்டமேற்படுத்தியிருக்கிறார்கள், அவ்வகளாவன:—

(1) மதப்பிரஷ்டன் அல்லது ஜாதிப்பிரஷ்டனான ஹிந்துவுக்கு பிதுரார்ஜிதசொத்து பாத்தியமுண்டென்று 1850-ம்ளுத்திய 21-வது ஆக்டினாலும், ஷமதப்பிரஷடன் தன் பூர்வமதபெண்சாதியின் விவாகத்தை ரத்துசெய்துகொள்ள 1866-ம்ளுத்து 21-வது ஆக்டினாலும்,

(2) மேலான ஜாதியைச்சேர்ந்த விதவைகள் புனர்விவாகஞ் செய்துகொண்டால் செல்லத்தக்கதென்றும் அவர்களுக்குப்பிறக்கும் பிள்ளை சரியான வார்சென்று 1856ளுத்து 15-வது ஆக்டினாலும்,

(3) 16-வயதுக்கு மேற்பட்டவர்கள் பால்யாவஸ்தை நீங்கி மேஜராவதாக தர்மசாஸ்திரங்களிலிருந்த போதிலும், 18-வது வயது முடிந்தபிறகே பிள்ளைகள் மேஜராவதாகவும், கோர்ட் ஆப் வார்ட்சாருடைய விசாரணையின் கீழ்ப்பட்ட மைனர்கள் 21-வது வயது சென்ற பிறகே மேஜராவதாகவும் 1875ளுத்து 9-வது ஆக்ட்டாகிய இந்தியன் மெஜாரிடி ஆக்டினாலும்,

(4) பூர்வகிரந்தங்களில் காணப்படாத (சொத்தை தன்னிஷ்டப்படி தனக்குப்பிறகு விநியோகஞ்செய்ய) உயில் ஏற்பாடு செய்ய 1870-ம்ளுத்திய 21-வது சட்டமாகிய ஹிந்து உயில் ஆக்டினாலும்,

(5) தகப்பன் பட்ட கடனை பிள்ளை கொடுக்கவேண்டுமென்று தர்ம சாஸ்திர மிருந்தபோதிலும், தகப்பன் சொத்து பிள்ளைக்கு வராதபோது தகப்பன் வாங்கிய கடனையடைக்க பாத்தியம் பிள்ளைக்கில்லையென்றும்,

(6) தர்ம சாஸ்திரப்படி எந்த விஷயத்துக்கும் வாய்க்கூறே போதுமென்றிருந்தாலும், 100 ரூபாய்க்கு மேற்பட்ட ஸ்தாவரசொத்தை தானம், ஒத்தி, கிரயம் முதலியவை செய்வதாயிருந்தால் எழுத்து மூலமாயிருக்கவேண்டுமென்று 1882௵த்திய 4-வது ஆக்டினாலும்,—இன்னும் பலவிதிகள் தற்காலம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

8. **ஹைகோர்ட் சித்தாந்தங்கள்.**—தர்ம ராஜாங்கமென்று பெயர் பெற்ற பிரிடிஷ் அரசாட்சியில் கல்கத்தா, பம்பாய், மதராஸ், அலகாபாத், பாட்னா, ரெங்கூன், லாகூர் இந்த இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஹைகோர்ட்டுகளின் ஜட்ஜிகளாலும், மகாராஜா சக்கிரவர்த்தி அவர்களுடைய பிரிவிகவுன்சில் என்கிற நியாயசபையிலுள்ள ஜட்ஜிகளாலும் தீர்மானிக்கப்படுகிற சித்தாந்தங்களும் சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ப்ரிவிகவுன்சில் தீர்மானங்கள் இந்தியாவிலுள்ள எல்லா கோர்ட்டுகளிலும் சட்ட பிரமாணமாக ஒப்புக்கொள்ளப்பட்டாலும் அந்தந்த ஐகோர்ட் தீர்மானங்கள் அதனதன்கீழுள்ள கோர்ட்டுகளில்மாத்திரமே செல்லுபடியாகும். (10, கல். 82 ; 17. பம். 555.)

9. **மருமக்க தாயச்சட்டம்.**--சென்னை ராஜதானியைச்சேர்ந்த மலையாள இராச்சியத்திலுள்ள நாயர் என்கிற வகுப்பாருக்குள் விவாகம் இல்லாததால், அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு சொத்து பாத்தியமேற்படாமல், சகோதரி பிள்ளைகளுக்கு அவர்கள் சொத்து சேர்ந்துவிடுவதால், மாமன் சொத்துக்கு பாத்தியதையடைந்த மருமக்களில் ஜேஷ்டனயிருப்பவன் கரணவன் என்கிற பெயரோடு குடும்ப எஜமானனாகிறான்; மற்றவர்கள்ஜீவனாம்சத்துக்குமட்டும் பாத்தியஸ்தராகிறார்கள்.

ஹிந்து தர்மசாஸ்திரங்களில் என்ன சொல்லியிருந்தபோதிலும், 1872-ம் ௵த்து 9-வது ஆக்டாகிய இந்தியன் காண்டிராக்ட் ஆக்டும், (14 பங்கால் லா. ரி. 76) இந்தியன் சாட்சி ஆக்டும், வார்சுபாத்தியசர்டிபிகேட்டு ஆக்டும் இந்தியன் பினல்கோட் சட்டமும் அவைகளை புறக்கணித்து விடுகின்றன.

2-வது விவாகம்.

10. விவாகங்களின் விதங்கள்.—முன்காலங்களில் பிராம்ம, தைவ, ஆர்ஷ, பிராஜாபத்ய, காந்தர்வ, ராக்ஷஸ, ஆசுர, பைசாசமென்னும் 8-வித விவாகங்கள் நடந்துவந்தன அவைகளில்,

(1) வேதாத்தியயனம் செய்திருக்கிற பிராம்மணனை அழைத்து வந்து உபசரித்து மனமொப்பி பெண்ணை தானம்செய்வதாகிய "பிராம்மம்" என்பதும்,

(2) கிருஹிருத்திய வைதிகசடங்குகளைச் செய்துவைக்கிற ஆசாரியனாகிய பிராம்மணனுக்கு கன்னிகையை அலங்கரித்துக்கொடுப்பதாகிய "தைவம்" என்பதும்,

(3) வரனிடமிருந்து ஒன்றல்லது இரண்டு ஜதை பசுக்களைப் பெற்றுக்கொண்டு கன்னிகையை கொடுப்பதாகிய "ஆர்ஷம்" என்பதும்,

(4) ஒரு பிர்ம்மசாரிக்கு பெண்ணைக்கொடுத்து தம்பதிகள் வைதிக லௌகிக காரியங்களை விதிப்படி நடத்தி 'வாழக்கடவீர்' என்று ஆசீர்வதிப்பதாகிய "பிராஜாபத்தியம்" என்பதும்,

ஆகிய இந்நான்கும் பிராம்மணர்களுக் குரித்தானவைகள். ஸ்திரி புருஷர்கள் மனமொப்பிச்சேருவது **காந்தர்வவிவாகம்**. யுத்தத்தில் ஜயித்து அல்லது பலாத்காரமாகக்கொண்டு போயாவது செய்யும் விவாகம் **ராக்ஷஸ** விவாகம். காந்தர்வ ராக்ஷஸவிவாகங்கள் க்ஷத்திரியர்களுக் குரித்தானவைகள். பெண்ணை விக்கிரயம்செய்வதாகிய **ஆசுரவிவாகம்** வைசியர், சூத்திரர் இவர்களுக்குரித்தானவைகள். தூக்கம், மயக்கம், பைத்தியம் இவைகளினால் மெய்மறந்திருக்கும்போது, ஸ்திரிகளுடன் சம்போகஞ்செய்வதும், மோசஞ்செய்தாவது, பலவந்தஞ்செய்தாவது சம்போகஞ்செய்வதும் **பைசாசவிவாகம்**. இது எல்லா ஜாதிகளுக்கும் உரித்தானதல்ல.

11. தற்கால அனுஷ்டானம்.—தற்காலத்தில் பிராம்ம (கன்னியாதானம்) ஆசுர (கன்னியாவிக்கிரயம்) இவை இரண்டுந்தான எல்லா ஜாதியாராலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன். பிராம்மண ஜாதியில் நடக்கிற ஆசுரவிவாகம் சாஸ்திர விரோதமாயிருந்தபோதிலும், வழக்கத்திலிருந்து வருவதால் அவைகளைக் கோர்ட்டார்நியாயமானதென்று அங்கீகரித்திருக்கிறார்கள். (13 ம. 83; 33. பம். 433; 32.ம. 512; 37 பம். 295; 43 பம். 173 177.)

12. காந்தர்வவிவாகம்.—க்ஷத்திரிய ஜாதியில் காந்தர்வவிவாகஞ் செல்லுமென்று பங்காளா ஹைகோர்ட்டார் தீர்மானஞ்செய்திருக்கிறார்கள். (14 மு. இ அ. 357.) ஆனால், அலஹாபாத் ஹைகோர்ட்டார் அந்த விவாகத்தை ஒப்புக்கொள்ளாமல், அப்படிப்பட்ட விவாகத்தில் வந்த ஸ்திரீயானவள் தாசிக்குச் சமானமானவளென்றும் தீர்ப்புச்செய்திருக்கிறார்கள். (3 அ 738.) மதராஸ் ஹைகோர்ட்டார், ஹோமம் முதலிய விதிகளுடன் சரியாக நடந்த காந்தர்வவிவாகம் செல்லுமென்று தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 12.ம. 72; 13 மு.இ. அ. 566.) இக்காலங்களில் காந்தர்வ விவாகம் சிலவிடங்களிலுள்ள ஜமீன்தார்களும், இராஜாக்களும், செய்வதாகச் சொல்லுகிறார்கள். இவர்கள் தவிர மற்றவர்கள்செய்கிற காந்தர்வவிவாகமும், பொதுவாக ராக்ஷஸம், பைசாசம் இந்தவிரண்டு விவாகமும் இந்தியன்பினல்கோடு 366, 376-வது பிரிவுகளின்படி தண்டிக்கப் படத்தக்க குற்றமாவதால் யாரும் செய்யக்கூடாது.

13. விவாகத்துக்கு வயது.—(1) கடவுளால் படைக்கப்பட்ட ஆண்பெண்களில் பெண்சீக்கிரம் வளர்ந்து பக்குவத்தை யடைகிறபடியால், அப்பெண்ணை யடக்கியாளப் போதுமான வயதையுடைய பிள்ளைக்கு பெண்ணைக்கொடுப்பது அவசியமெனக்கருதி நம்முன்னோர்கள் பெண்ணைக்காட்டிலும் பிள்ளைவயதில் பெரியவனாக விருக்கவேண்டுமென்று சாஸ்திரத்தில் எழுதியிருக்கிறார்கள். இதுபிர்ம்ம, க்ஷத்திரிய, வைசியர்களாலும், சூத்திரஜாதிகளில் பலராலும் அனுஷ்டிக்கப்பட்டாலும், சிலசூத்திரஜாதிகளில் பால்மணமாறாத சிறுபுருஷ குழந்தைக்கு 20 வயதுள்ளகுமரியைக் கலியாணம் செய்விப்பதுடன், அவள்வயற்றிற்பிறந்த குழந்தைகள் அவ்விளஞ்சிறுவனுக்குப் பிறந்ததாகவே ஒப்புக்கொள்ளப்படுகிறது.

(2) தர்மசாஸ்திரப்படி பெண்ணுக்கு 8-வது வயதுவந்ததும் விவாகஞ்செய்யலாம். விவாகத்திற்குமுன் ஒரு பிராம்மண கன்னிகை புஷ்பவதியாய்விட்டால் அவள் ஜாதிபிரஷ்டையாய் விடுவதாக சாஸ்திரத்தின்கருத்து.

(3) புஷ்பவதியாவதற்குமுன் விவாகஞ்செய்வது பிராமணர்களில் கட்டாயமாய் அனுஷ்டானத்திலிருந்தபோதிலும், க்ஷத்திரிய, வைசியஜாதிகளிலும் சிலர் புஷ்பவதியாவதற்கு முன்னும், சிலர் பிறகும் விவாகஞ்செய்கிறார்கள். சூத்திரர்களில் புஷ்பவதியாகி தகு

ந்த பருவமடைந்தபிறகுதான் பெண்களுக்கு விவாகஞ்செய்கிறார்கள்.

14. பெண்ணை விவாகஞ்செய்விக்க அதிகாரம்—(1) பெண்ணுக்குத்தகுந்தவரனை சம்பாதித்து விவாகஞ் செய்விக்குமதிகாரம் முதல் முதலில் தகப்பனுக்கென்றும், அவனுக்குப்பிறகு வரிசையாய்பிதாமகன், தமயன், சிறிய தகப்பன், பெரிய தகப்பன், மாமன், தாய், தாயாதி யிவர்களுக்கென்றும், இவர்களொருவருமில்லாமற் போனால், பெண் தானே வரனை நிச்சயித்துக்கொண்டு அரசன் அனுமதியின்பேரில் விவாகம்செய்துகொள்ளலாமென்றும் மிதாட்சரம் முதலான தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. குழந்தைகளின் கார்டியனுயிருக்க புருஷனுக்கு அடுத்தபடி பெண்ஜாதி யிருந்தபோதிலும், பெண்ணை விவாகம்செய்யும் பாத்தியதையில் மிகவும் தாழ்ந்திருக்கிறார்கள்.

(2) பெண்ஜாதி குழந்தைகளுடன் குடும்பத்தை ஆதரிக்காமலிருக்கிற புருஷனைத் தள்ளிவிட்டிருந்தால், தாயாரே சுவதந்திரமாக பெண்ணுக்கு விவாகஞ்செய்யலாம். (இ. லா. ரி. 11 பம் 247.) தகப்பன் உயிரோடிருந்தும் அவனனுமதியின்றி, தாய் மோசடியாகவாவது பலாத்காரமாகவாவதில்லாமல், பெண்ணின் நன்மையின்பொருட்டும் க்ஷேமத்தை உத்தேசித்தும் நல்ல எண்ணத்தோடு பெண்ணுக்கு விதிப்படி விவாகஞ்செய்துகொடுத்து சாஸ்திரமுறை வழுவாமல் சடங்குகளை முடித்திருந்தால் செல்லுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (14 ம. 316; 12 கல். 140; 19 அல. 515; 11 பம். 247; 22 பம். 509; 22 பம் 812.)

ஆனால், வேறு எந்த நிலைமையிலும் தகப்பன் அனுமதியன்னியில் தாயாராவது வேறுயாராவது குமாரத்திக்கு விவாகஞ்செய்விப்பது செல்லமாட்டாது. (இ லா. ரி 12 பம் 10.) தாயாரனுமதியன்றியில் தகப்பன் குமாரத்திக்கு விவாகஞ்செய்யலாம்.

(3) குமாரத்திக்கு விவாகம் செய்யும்படியான பாத்தியம் புருஷர்களுக்கே யல்லாமல் தாயாருக் குண்டாகமாட்டாதென்று தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிற எல்லா நியாயங்களும் அவிபக்த குடும்பத்துக்கேயொழிய, விபக்த குடும்பங்களில் பெரிய தகப்பன் சிறிய தகப்பன்களைப்பார்க்கிலும் தாயாருக் கதிகபாத்தியமானதால், அவளுடைய அனுமதியன்றியில் மேற்கண்டவர்களி

லொருவரும் கன்னிகைக்கு விவாகம்செய்யக்கூடாதென்று மதராஸ் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (4 ம ஐ. 339.)

(4) ஸபத்தினி மாதாவைக்காட்டிலும், மாதாமகனுக்கு (தாயின் தகப்பன்) கன்னிகையை விவாகஞ்செய்துகொடுக்க அதிகபாத்தியமுண்டென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (7 ஸ. 321.)

15. **விவாகத்தைநிறுத்தஅதிகாரம்.**-(1) கன்னிகையைவிவாகம் செய்துகொடுக்க அதிகாரம் யாருக்கென்று மேலே தெரிவிக்கப்பட்டிருக்கிறதோ அவர்கள் அனுமதிக்கு விரோதமாக கன்னிகையை விவாகம்செய்துகொடுக்க எத்தனிக்கும்பட்சத்தில் கோர்ட்டில் மனுக்கொடுத்து விவாகத்தை நிறுத்தலாம். (இலா. ரி. 11 பம் 253) கன்னிகையை சம்ரட்சித்துவருபவர்கள், கெட்ட எண்ணத்தோடாவது, சுயபிரயோஜனத்தை உத்தேசித்தாவது, அக்கன்னிகையின் நன்மைக்கு விரோதமான சம்பந்தத்தைத் தீர்மானஞ்செய்து விவாகஞ்செய்ய எத்தனித்தால் கன்னிகையின் பந்துவாவது சினேகிதனாவது கோர்ட்டில் மனுக்கொடுத்து விவாகத்தை நிறுத்தலாம். ஆனால், தகப்பனே அப்படிப்பட்டசம்பந்தம் ஏற்படுத்தி விவாகஞ்செய்ய எத்தனித்தால் அது எவ்வளவு அயோக்கியமாயிருந்தாலும் அதை நிறுத்த கோர்ட்டார் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். (இ. லா. ரி. 12 பம் 480; 8 கல். 266.)

(2) கோர்ட்டார் நிறுத்தும்படி செய்த உத்திரவைமீறி விவாகத்தை நடத்தினால், அப்படி நடத்தியவர்களை உத்திரவைமீறி நடந்த குற்றத்திற்காக சிட்சிப்பார்களேயொழிய, விவாகத்தை ரத்துசெய்யமாட்டார்கள். (இ. லா. ரி. 11 பம் 247; இ. லா. ரி. 12 கல். 140; இ. லா. ரி. 14 ம. 260; 22 பம் 509.)

16. **விவாகத்தை ரத்துசெய்தல்.**—அனுமதி கொடுக்கவேண்டியவர்களுடைய அனுமதியில்லாமலும், கன்னிகையை முதன் முதலில் நிச்சயம்செய்திருந்தவனுக்குக் கொடுக்காமலும், ஸ்திரிபுருஷர்கள் வரநிர்ணய விஷயமாய் விரோதப்பட்டும், பெரியரோகம், பைத்தியம், நபும்ஸகம் முதலிய காரணங்களாலும் விவாகத்தை நிறுத்தவேண்டியிருந்தால்; விவாகம் பூர்த்தியாகநடப்பதற்குமுந்தி அதை நிறுத்துவார்களேயொழிய முடிந்துபோனபிறகு கோர்ட்டார் அதை ரத்து செய்யமாட்டார்கள். (இ. லா. ரி. 14 ம. 316.)

17. கன்னிகாதானம்-சப்தபதி.—விவாகத்துக்கு கன்னிகாதானம், சப்தபதி - இவ்விரண்டு காரியங்களும் அவசியம். (1) கன்னிகையைப்போஷித்துவருபவர்கள் கன்னிகையினுடைய க்ஷேமத்தை உத்தேசித்து நல்ல வரனைத்தேடிக் கன்னிகாதானம் செய்வது; (2) பிள்ளை கன்னிகையின் கையைப்பிடித்தலாகிய பாணிக்கிரகணம்செய்துகொள்வது. தானம், பாணிக்கிரகணம் இவ்விரண்டும் எல்லாஜாதியாருக்கும் முக்கியமானவை. தம்பதிகள் கையைப்பிடித்துக்கொண்டு ஹோமம் செய்த அக்கினிக்கு நேரே மந்திர பூர்வமாக ஏழடி நடப்பதற்கு 'சப்தபதி' என்பது; இதன் பிறகு பேதிக்க முடியாத விவாகபந்த மேற்படுகிறது. மேலே சொன்ன விரண்டும் கிரமமாக நடந்த பிறகு விவாகத்தை ரத்துசெய்ய முடியாது. இவ்விதம் கிரமமாய் நடந்த விவாகத்தினால் புருஷன் பெண்ணை தன்னுடன் சம்சாரஞ்செய்ய கூட்டிப் போகவும் அவளை சம்ரக்ஷிக்கவும் கார்டியனாயிருக்கவும் கடமைப்பட்டவனாகிறான். இந்த தம்பதிகளுக்குண்டாகும் சந்தானங்கள் தான் கிரமமான வார்சாகிறார்கள். ஆனால், மோசஞ்செய்தாவது, பலாத்காரமாகவாவது, கன்னிகையைக் கொண்டுபோய் விவாகம் செய்யும் பட்சத்தில் சப்தபதி மந்திரபூர்வமாய் நடந்திருந்தாலும் அந்த விவாகம் செல்லமாட்டாது. ஏனென்றால், ஸம்ரக்ஷணகர்த்தர் அன்னியில் செய்யும் தானம் கன்னிகாதான மாகாததால் சப்தபதி சர்மம் பலிக்காமல் போவதுடன் விவாக பந்தமும் ஏற்பட முடியாது. (14. ம. 316.)

(1) சாஸ்திரத்தில் சொல்லியபடி சப்தபதி கர்மத்தில் ஏழாவது அடியின்பேரில் கால் வைக்கும் வரையில் விவாகம் முடியவில்லையென்றும், அதுவரையிலும் விவாகத்தை நிறுத்திவிடலாமென்று மேற்படுகிறது. மேற்சொன்னபடி ஏழடியும் பூர்த்தியாய் ஆகவில்லையென்று வாதிப்பவர்கள் அதை ருசுச்செய்யவேண்டும். (12. க. 140; 33. பம். 433 ; 32. ம. 512.)

(2) ஆனால் சாஸ்திரத்தில் எப்படியிருந்தபோதிலும் தென்தேசங்களில் மங்கள சூத்திரதாரணமானவுடனே விவாக பந்தம் ஏற்பட்டுவிட்டதாகப்பொதுவாய் நம்பப்பட்டுவருவதால் அந்த தேசாசாரமே செல்லும். சப்தபதியைத்தவிர வேறு கர்மங்களின் முடிவால் விவாகம் பூர்த்தியாவதாக தேசாசாரமிருந்தால் அதுசெல்லும். (5. க. 692 ; 10. க. 138 ; 1. ரங். 129.)

18. நிஷேகம்.—விவாஹபந்தம் பூர்த்தியாய் உண்டாவதற்கு நிஷேகமாக வேண்டியதவசியமில்லை. நிஷேகம் (திரட்சி) நடக்காமலேயிருந்தாலும் தாம்பத்தியம் விடமுடியாது. (9 ம. 466.)

19. பெற்றோரிஷ்டமின்றி பெண் விவாகம்.—பலாத்காரமாகவாவது மோசடியாகவாவது பெண்ணைக்கொண்டுபோய்க் கல்யாணம்செய்தால் அந்தக் கல்யாணத்தை ரத்துசெய்து, மறுபடி அந்தப் பெண்ணுக்குக்கல்யாணம் செய்யலாம். (14. ம. 316, 320.) அப்படி அந்தப் பெண்ணை மோசடியாய்க்கொண்டுபோனவன் பினல்கோட் 363-வதுபிரிவுபடி தண்டனைக்குள்ளாகிறான். ஆனால், பெற்றோரிஷ்டப்படி சிறியதகப்பன், பெரியதகப்பன், மாமன், பாட்டன்முதலிய பந்துக்களுடைய சம்ரக்ஷணையில் பெண்ணிருக்கும்போது அவர்கள் நல்ல எண்ணத்தோடு சரியானபடி அந்தப்பெண்ணுக்கு தகுந்தவரனை சம்பாதித்து பெற்றோர்கள் அனுமதியின்றி விவாகம்செய்யலாம். அதைசம்மதியாமல் பெற்றோர்கள் மறுபடிவிவாகஞ்செய்தால் பினல்கோட் 494-வது பிரிவுப்படி தண்டனைக்குள்ளாவார்கள். வேறு விவாகஞ்செய்ய இஷ்டமிருந்தால் முதலில் நடந்தவிவாகம் நியாயமல்லவென்று கோர்ட்டில் தாவாசெய்து ரத்துசெய்தபிறகு மறுபடி விவாகஞ்செய்யலாம். (14. ம. 316, 318.)

20. பெற்றோரிஷ்டமின்றிப் பிள்ளைக்கு விவாகம்.—பெற்றோர்களிஷ்டமின்றிப் பிள்ளையைக் கொண்டுபோய் கன்னிகையின் பெற்றோர்கள் பெண்ணைக்கொடுத்து பலவந்தமாக விவாகம்செய்துவிட்டால் அவர்கள் எவ்விதமான தண்டனைக்காவது, நஷ்டத்துக்காவது பாத்திரர்களாயினும், விவாகம் செல்லாமற் போகமாட்டாது. (22 பம் 509, 812.)

21. விவாகம் வேதோக்தம்.—மேலே சொல்லப்பட்ட காரணங்களினால் ஹிந்துக்களுடைய விவாகம் மதசம்பந்தமான க்ருமமேயொழிய, (32. பம். 81; 37. ம. 273) கிறிஸ்துமத முதலானவைகளில் ஸ்திரீபுருஷர்கள் சம்மதித்துச் செய்துகொள்ளும் உடன்படிக்கைப்படி யல்லவென்று தெளிவாகிறது. அதினால்தான் இளங்குழந்தைகளுக்கும், பித்தர்களுக்கும், நபும்ஸகர்களுக்கும் செய்கிற விவாகம் செல்லுகிறது. (5 அ 513; 1 அ. 549; 14 ம. 316, 318; 19 அல. 515; 21. பம். 23, 30, 31.) அப்படிப்பட்ட பித்தன் முதலானவர்களுக்கு வார்சுபாத்திய மில்லாமற்போனாலும் அவர்கள் குமாரர்களுக்கு வார்சுபாத்திய முண்டென்று ஏற்படுகிறது.

22. நிச்சயமான விவாகத்தை மாற்றுதல்.—(1) விவாகத்தை நிச்சயித்து லக்னப்பத்திரிகை முதலானவை பந்துக்களுக்கு அனுப்பின பிறகு விவாகத்தை மாற்றக்கூடாதென்று மனுஸ்மிருதியில் சொல்லியிருந்தபோதிலும், முதல் சம்பந்தத்தைக்காட்டிலும் இரண்டாவது சம்பந்தம் மேன்மையாயிருப்பதினுலாவது அல்லது கெட்ட வியாதி, நபும்ஸகத்தன்மை முதலிய காரணங்கள் தெரியவருவதினுலாவது விவாகத்தை மாற்றுவது தோஷமல்லவென்று யாக்ஞியவல்கியஸ் மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. நிச்சயதார்த்தமான பிறகு காரணமில்லாமல் விவாகத்தை மாற்ற எண்ணங்கொண்டால், பலவந்தஞ் செய்து விவாகத்தை நடத்தலாமென்று நாரதஸ்மிருதியில் சொல்லியிருந்தபோதிலும், இக்காலத்தில் அப்படிப்பட்ட விவாகத்தைப் பலவந்தஞ்செய்து நடத்த கோர்ட்டாருக்கதிகாரமில்லை. (1877-ஞுத்திய 1-வது ஆக்ட்டாகிய ஸ்பெசிபிக் ரிலீப் ஆக்ட் 21-வது பிரிவு, b-வது கிளாஸ் (1 க. 741; 11 பம் 412).

(2) ஆனுல், தகுந்தகாரணமின்றி அக்கிரமமாக உடன்படிக்கையை மீறினவன்பேரில் நஷ்டமடைந்தவன் நஷ்டத்துக்காக தாவா செய்து அதைப்பெற்றுக்கொள்ளலாம். (7 பம். ஐ. 122; 11 பம். 412; 21 பம். 23.) விவாகவிஷயமாய் பெண்ணின் தகப்பனுக்குக் கொடுத்த பணத்தை வாப்பற்ற பிள்ளை தாவாசெய்யலாம். (10 க. 1054; 16 பம் 673).

23. வேறு ஜாதியில் விவாகம்.—தர்மசாஸ்திரத்தில் எந்த ஜாதி புருஷனும் தன் சுயஜாதிப்பெண்ணையாவது, தன் ஜாதிக்கு தாழ்ந்த ஜாதிப்பெண்ணையாவது விவாகஞ் செய்துகொள்ளலாமென்றிருப்பதால், முற்காலத்தில் அவ்வழக்கம் சாதாரணமாய் நடந்துகொண்டிருந்தபோதிலும், இக்காலத்தி லனுஷ்டானத்திலில்லாததால் அப்படிப்பட்ட விவாகம் செல்லமாட்டாது. தன் ஜாதியிலும் ஒரே கோத்திரமுள்ள பெண்பிள்ளைகளுக்கு விவாகஞ் செய்யக்கூடாது.

24. தம்பதிகளின் குலகோத்திரங்கள்.—வதூவரர்களுக்குள் ஸபிண்ட பந்துத்வங்கூடாது. அதாவது பிள்ளையின் முன்னோர்கள் பெண்ணின் முன்னோர்கள் (பிள்ளையையாவது பெண்ணையாவது பிடித்துக்கொண்டு) தகப்பன் வர்க்கத்தில் 7-தலைமுறைகளுக்குள்ளும், தாய் வர்க்கத்தில் 5-தலைமுறைகளுக்குள்ளும், ஒருவராகவேயானுல் விவாகங்கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனுல் தென்னிந்தியா மேலிந்தியா தேசங்களில் இதற்கு விரோதமாக மாமன் பெண்,

அத்தையின் பெண், சகோதரிகளின் பெண் இவர்களை பிராமண ஜாதியார்கள் கூட கல்யாணஞ்செய்வது கோர்ட்டில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. ஒரேகோத்திரமுள்ள குலங்களில் நடந்த விவாகம், சூத்திர ஜாதிகளைத்தவிர பிராமணஜாதிகளில் செல்லமாட்டாது. (5 க. 708.)

25. சாஸ்திர விரோத சம்பந்தங்கள்.—நீதிமுறைக்கு விரோதமாய் இருக்கிற சிலவிவாகங்கள் அனுஷ்டானத்திலிருக்கின்றன. அதாவது, மைத்துனியின் (மனைவியின் சகோதரி) பெண்ணையும் அல்லது மாமனின் மைத்துனியையும் மணப்பது ஒழுங்கீனமாய் இருப்பினும் வழக்கத்திலிருக்கிறது. (20 ம. 280.) மேலும், பம்பாய் ஐகோர்ட்டார் ஒருமேல்ஜாதி பிள்ளைக்கும், கீழ்ஜாதி பெண்ணுக்கும் நடக்கும் விவாகம் செல்லுமென்றும், ஒருவைசியனுக்கும் சூத்திரஸ்திரீக்கும் நடந்தவிவாகம் செல்லுமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். (46 பம். 871) விபசாரி அல்லது அனாதைப்பிள்ளைகள் எந்த ஜாதியாருடன் கூட்டுறவுடன் வாழ்கிறார்களோ அந்த ஜாதியைச்சேர்ந்தவர்களாய் எண்ணப்படுவார்கள். (18 கல். 264 ; 34 அல. 589.)

26. செய்யக்கூடாத விவாகங்கள். -(1) அண்ணன் தம்பிகளின் குமாரத்தி, தங்கை, அத்தை, சிறியதாயார், சிற்றப்பன் பெரியப்பன் பெண்கள், சிறியதாயார் பெரியதாயார் பெண்கள், இவர்களைச் சூத்திரர்கள் கூடக் கல்யாணஞ்செய்யக்கூடாது. (6 ம 43).

(2) கல்யாண விஷயத்தில் சபத்னி மாதாவைச்சேர்ந்த பந்துக்கள் சொந்தத் தாயாரைச்சேர்ந்த பந்துக்களைப்போலவே எண்ணி நிஷேதம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

(3) ஸ்வீகாரமாகப்போன ஒருவன், ஜனனகுடும்பத்திலும், தத்தாகப்போன குடும்பத்திலும் மேற்சொன்ன உறவினர்களை விவாகஞ்செய்து கொள்ளக்கூடாது. இது முக்கியமாய் பிராமணர்களுக்குரியது.

(4) குருசிஷியர் குமாரத்திகளையாவது, தன் தாயார்பேருள்ள பெண்ணையாவது, வரனைக்காட்டிலும் பெரிய வயதுள்ள பெண்ணையாவது தமக்கை கல்யாணமாகாதிருக்க தங்கையையாவது விவாகஞ்செய்யக்கூடாதென்று ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், இக்காலத்தில் மேலே சொல்லியபடி நடக்காமல் போனபோதிலும், ஒருவேளை நடந்தால் செல்லாதென்று சொல்ல ஆதாரமில்லை.

(5) தர்மசாஸ்திரத்தில் கன்னிகையை ரஜஸ்வலையாவதற்கு முந்திவிவாகஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதுபிராமண ஜாதியில்மட்டும் அனுஷ்டானத்திலிருக்கிறது.

27. வெவ்வேறு ஜாதிகளில் விவாகம்.—பிர்ம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்று நான்கு ஜாதிகள்தான் தர்ம சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் ஒவ்வொரு ஜாதியிலும் அனேகம் உட்பிரிவுகளிருக்கின்றன. ஒரு ஸ்மார்த்த வடமப்பிராமணர் பிரஹசரணம், வாத்திமன், மாத்துவார், வைஷ்ணவார், நியோகிகள் முதலான ஜாதிகளில் பெண்ணைக் கல்யாணஞ்செய்தால் சாஸ்திர விரோதமில்லை. பாஷைகளில் வித்தியாசத்தைப்பற்றிக்கூட தர்மசாஸ்திரத்தில் சொல்லியிராத்தால், ஒரு பாஷையைப் பேசுகிறவன் மற்றொரு பாஷையைப் பேசுகிற தன் சுவஜாதி பிராமண க்ஷத்திரிய, வைசிய சூத்திரப்பெண்ணைக் கல்யாணஞ்செய்யலாம். ஆனால் வெவ்வேறு ஜாதியில் விவாகஞ்செய்ய தற்காலம் அனுஷ்டானம் முக்கியமென்று கல்கத்தா ஹைகொர்ட்டில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (9 ஸ 552; 1 க. 1) மற்ற ஹைகோர்ட்டுகளில் வெவ்வேறு ஜாதியில் விவாகஞ்செய்ய அனுஷ்டான மவசியமில்லையென்று தீர்மானித்ருக்கிறார்கள். (1 ம ஐ. 478; 13 மூ. இ. அ. 141; 14 மூ. இ. அ. 346, 352; 15 ச 708.) 28 அல. 458; 14 பம். லா. ரி. 547).

28. ரஜஸ்வலையாகாத பெண்சாதியை யிரட்சிக்கும் பாத்தியம்:-

(1) விவாக பந்தத்தால் ஸ்திரீபுமான்கள் இகபர கர்மங்களில் ஒன்றாய் விடுகிறபடியால், விவாகமான சிறிய பெண்ணை அவள் புருஷனே சம்ரட்சிக்கவேண்டும்; புருஷன் மைனராகயிருந்தால், அவனைப் போஷிக்கிறவர் அவன் பெண்சாதியையும் சம்ரட்சிக்க வேண்டுமென்று தர்மசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது; ஆனால் பெண்கள் ரஜஸ்வலையாகிறவரையில் பிறந்த வீட்டிலேயே யிருப்பது தற்காலம் அனுஷ்டானத்திலிருப்பதால் அதற்கு முந்தியே பெண்சாதியை வீட்டுக்கு அனுப்பும்படி கட்டாயப்படுத்த புருஷனுக் கதிகாரமில்லை. (23 ஸ 178; 17 கல். 298 ; 24 ம 255.)

(2) ரஜஸ்வலையான பிறகு பெண்களை யிரட்சிப்பது புருஷனுடைய கடமை (13 அ-126.) பருவமடைந்த பெண் புருஷன் வீட்டில் வசிக்க கடமைப்பட்டவள். அவள் பெற்றோர்கள் அல்லது போஷகர்

பெண்ணை புருஷனிடத்துக் கனுப்பமாட்டேனென்பது சட்டவிரோதம். (11 மு. இ. அ. 551 ; 28. க. 751.)

29. ருதுசாந்திக்கு வயது நிர்ணயம்.—பெண்கள் ருதுவானாலும் 12-வயது முடிவானபிறகுதான் ருதுசாந்தி செய்யவேண்டும். அதற்குள் எவனாவது செய்தால், பினல்கோட் 376-வது பிரிவுப்படி "பலவந்தப்புணர்ச்சி" என்னும் குற்றத்திற்காக தண்டனையடைவதுடன் அதற்கு உடந்தையாயிருந்தவர்களும் தண்டனையடைவார்கள்.

30. பெண்ஜாதி புருஷனுக் கடங்கியிருப்பது.—அன்னவஸ்திரங்கொடுத்துப் பெண்சாதியை இரட்சிப்பது புருஷன் கடமை. அவளும் புருஷன் கட்டளைக்குட்பட்டு அவனிஷ்டப்படி வீட்டுவேலைகளைச் செய்து அவனுடன் வாசஞ்செய்து ஸம்ஸாரஞ்செய்யவேண்டியது. (13 அல 126.). புருஷன்போகிற விடங்களுக்கெல்லாம் பெண்சாதி போகக் கடமைப்பட்டவள்.

31. பெண்சாதியைக் கட்டுப்படுத்துவது.—வயது வந்த பெண்சாதி தானாகவாவது, பெற்றோர்கள் முதலிய பந்துக்களின் துர்போதனையினாலாவது தன் புருஷனிடம் போகமாட்டேனென்றாலும், அல்லது அவனுடைய வீட்டைவிட்டு வெளியேபோனாலும், அவள் பேரிலும், அவளுடைய பந்துக்கள் பேரிலும் தாவாசெய்து அவளைப் புருஷன் வீட்டிலிருக்கும்படி கட்டாயப்படுத்தலாம். (5 க 500 ; 1 பம் 164.) ஆனால், அவள் கோர்ட்டார் உத்திரவை நிராகரித்தால், அவளை பலவந்தஞ்செய்து புருஷன் வீட்டுக்கனுப்ப சட்டமில்லாமற் போனபோதிலும், சிவில் புரோசிஜர் கோட் 260-வது பிரிவுப்படி கோர்ட்டாரவர்களுக்கு யுக்தமாகத் தோற்றினால் அவளை 6மீ வரையில் சிவில் ஜயிலில் வைக்கலாம். அவளுடைய ஸ்திரீதன முதலிய சொத்துக்களை ஜப்திசெய்து ஏலம்போட்டு புருஷனுக்குக் கொடுக்கலாம். (5 க. 500 ; 13 அல 126 ; 10 பம் 301.)

32. பெண்சாதி புருஷனை விட்டு நீங்குவது.—புருஷன் மதப்பிரஷ்டனாகப்போனாலும், ஜாதிப்பிரஷ்டனாகப்போனாலும் புருஷன் வீட்டில் மாமியார் நாத்தனர் முதலியவர்கள் பெணணை அதிகமாக அடித்துத் தொந்திரவு செய்தாலும், புருஷன் கெட்ட வியாதியினால் அவஸ்தைப்படும்போது பெண்சாதி சமீபத்திலிருந்தால் அந்த வியாதி அவளுக்கு ஒட்டிபிராணாபாயம் உண்டாகுமென்று தோன்றினாலும் பெண்சாதி புருஷனை விட்டு நீங்கியிருக்கலாம், (11 மு. இ. அ. 126 ; 34

கல் 971; 1 பம் 164; 5 க 500; 13 அ. 126) திருப்திகரமான ருஜு கோர்ட்டார் அவர்களுக்குத் தெரிந்தாலொழிய புருஷனைவிட்டு விலகியிருக்கப் பெண்சாதிகளுக்கு உத்திரவு கொடுக்கமாட்டார்கள். (4 அ. 374.) தகுந்த காரணமிருந்தால் அவளுக்கு ஜீவனும்சம் கிடைக்கும். புருஷன் நாசியைப் வீட்டிலேயே வைத்துக்கொண்டு அவளுடன் சம்சர்க்கஞ் செய்துகொண்டிருந்தாலும், பெண்சாதியை உபத்திரவஞ் செய்யாமலிருந்தால், அவனைவிட்டு நீங்கியிருக்க அந்தப் பெண்சாதிக் கதிகாரமில்லை. (1 ம. ஐ. 375; 34 கல் 971.) மகம்மதிய கிறிஸ்தவ முதலான அன்னிய மதஸ்திரீகளை வைத்திருப்பவன் ஜாதிப்பிரஷ்டனுகிறபடியால். அவனுடன் ஹிந்துமதப் பெண்சாதி சம்சாரஞ்செய்யமாட்டாள். (14 ஸ. 145) அப்படிப்பட்டவன் தன் ஹிந்துப் பெண்சாதியை தன் வசப்படுத்த தாவாசெய்ய பாத்தியமில்லை. (5 ஸ. 235) ஆனால், 1866ஹூத்திய 21-வது ஆக்ட்டுப்படி மதபிரஷ்டன் தன்னுடைய விவாகத்தை ரத்துசெய்ய கோர்ட்டில் தாவாசெய்யலாம். (18 கல் 252.)

33. பெண்சாதியை வசப்படுத்த தாவாவுக்குக் காலமும் கட்டணமும்.—தாம்பத்திய சம்பந்தமானது செத்தாலொழிய விடாததலால் பெண்சாதியை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ள கொண்டுவரப்படுகிற தாவாவுக்குக் கால நிர்ணயமில்லை. (13 அ. 126.) இந்த பிராதுக்கு கோர்ட்டு பீசு ஸ்டாம்பு ரூ. 5.

34. ஸ்திரீ புனர் விவாகஞ்செய்துகொள்ள அதிகாரமில்லை.—32-வது பாராவில் சொல்லியபடி புருஷனுடைய துர் நடத்தையினால் பெண்சாதி விலகியிருப்பதாக ருஜு ஏற்பட்டு புருஷன்செய்த தாவா தள்ளுபடியானலும், அதைக்கொண்டு தாம் பத்தியபந்தம் போய்விட்டதாக எண்ணி பெண்சாதி இரண்டாந்தரம் கல்யாணஞ் செய்துகொள்ளக்கூடாது. (18 க. 264; 13 அ. 126) விவாக பந்தத்தைரத்துசெய்ய கோர்ட்டில் தாவாசெய்து டிக்கிரிபெற்ற பிறகு புனர்விவாகம்செய்துகொள்ளலாம். (4 பம். 330.)

35. பெண்சாதிக்கு ஜீவனும்சம்.—தகுந்த காரணமில்லாமல் பெண்சாதி புருஷனைவிட்டு விலகியிருந்தாலும், வியபசாரியாயிருந்தாலும் அவளுக்குப் புருஷன் ஜீவனும்சம் கொடுக்கமாட்டான். (2 பம் 634) ஆனால், பிறகு நல்ல நடத்தையாயிருப்பவளுக்கு தயா தாட்சணியமாய் ஏதாவது கஞ்சிக்குக் கொடுக்கலாமென்று தர்ம சாஸ்திரம் முறையிடுகிறது. தகுந்த காரணமின்றி அநாதரவாய்

விடப்பட்டிருக்கிற பெண்சாதி தன் ஜீவனத்துக்காக புருஷன் பேரால் கடன் வாங்கினால் அதை அவன் கொடுக்க கடமைப் பட்டவன். ஆனால், சம்சாரப் பொது விஷயமான செலவைத் தவிர வேறே சொந்தச் செலவுக்காகப் பெண்சாதி கடன் வாங்கினால் அதைப் புருஷன் கொடுக்கமாட்டான். (1 ம. ஐ. 375; 3 அ. 122; 1 பம். 121.) விபசாரியானவள் புருஷன் பேரில் ஜீவனாம்சத்துக்கு தாவா செய்யக்கூடாது. (1 ம. ஐ. கோ. ரி. 372; 2 ம. ஐ. கோ. ரி. 377.)

36. **பெண்சாதியை வைத்துக்கொள்ளப் புருஷனைக்கட்டுப்படுத்தல்.** (1) நிஷ்காரணமாகத் தனது பெண்சாதியை துரத்திவிட்டால், அப்படித் தள்ளிவிடாமல் அவளோடு வைத்துக்கொள்ளும்படி தாவா செய்யலாம். கோர்ட்டு டிகிரிக்குப் பிறகும் நல்ல நடத்தையாயிருக்க அவனிடம் ஷ்ரத்துகள் வாங்கலாம். சில சமயங்களில் அவனை விட்டிருப்பதே நலமாகத் தோன்றினால் ஜீவனாம்சத்துக்குமட்டும் தாவா செய்து அதைப் பெற்றுக்கொள்ளலாம்.

(2) புருஷன் பெண்சாதியை யிரட்சியாமல் நிஷ்காரணமாய்த் தள்ளிவிட்டால். மாஜிஸ்ட்ரேட்டாரிடம் கி.பு.கோ. 488-வது பிரிவுப்படி மனுக்கொடுத்து அவள் ஜீவனாம்சம் பெற்றுக்கொள்ளலாம். விபசாரியின் தாவா செல்லாது.

37. **புருஷன் இரண்டாந்தாரம் செய்துகொள்ளல்.**—முதல் தாரம் பிள்ளையில்லாதிருத்தல், மலட்டுத்தனம், துர்வியாதி, துற்மார்க்கம், துற்குணம், இவைகளுள்ளவளாயிருந்தால் புருஷன் 2-வது தாரம் விவாகம் செய்துகொள்ளலாமென்று தர்மசாஸ்திரத்தில் சொல்லப் பட்டிருந்தாலும், இக்காரணங்களில்லாமலே புருஷன் தன்னிஷ்டப்படி எத்தனை தாரங்களையாவது விவாஹஞ்செய்துகொள்ளத் தடையில்லை. புனர்விவாகம் செய்துகொண்ட காரணத்தைப்பற்றி, முதல் பெண்சாதி அவனை விட்டு நீங்கக்கூடாது (1 ம. ஐ. 375) அவனே அவளை தள்ளிவிட்டிருந்தால் அவளுக்கு ஜீவனாம்சபாத்தியமுண்டு.

38. **ஸ்திரீ புனர்விவாகம்.**—புருஷனிறந்துபோனாலும், வெகு காலம் தேசாந்திரம் போய்திரும்பிவாராமலிருந்தாலும், நபும்ஸகனாயிருந்தாலும், ஜாதிபிரஷ்டனானாலும் ஸ்திரீபுனர்விவாகஞ் செய்துகொள்ளலாமென்று நாரதருடைய கிரந்தத்திலும், புஷ்பவதியாவதற்குள் புருஷனையிழந்த கன்னிகை புனர்விவாகம் செய்துகொள்ளலாமென்று மனுஸ்மிருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. புனர்விவாகஞ் செய்துகொள்ளக்கூடாதென்று ஆதிகால தர்மசாஸ்திரங்

களில் ஆதாரத்தைக்காணுதபோதிலும் பிராம்மண, க்ஷத்திரிய வைசியர்களிலும், சூத்திரர்களில் உயர்வகுப்பாரிலும் ஸ்திரீகளுக்கு புனர்விவாகம் செய்வதில்லே. சூத்திரர்களில் கீழானவகுப்பாரில் ஸ்திரீகளுக்குப் புனர்விவாகஞ் செய்வது வழக்கத்திலிருக்கிறது (6 ம. ஹை. கோ. ரி. 379; 1 ம. 226; 17 ம. 479.) ஈனசாதிகளில், புருஷன் உயிரோடிருக்கும்போதும் பெண்களுக்குப் புனர் விவாகம் செய்வது சிலதேசங்களில்வழக்கமாயிருக்கிறது (4 பம். 330; 8. ம. 440) அதைத்தவிர மற்ற ஜாதிகளில் எந்தக் காரணத்லதக் கொண்டாகிலும் புருஷன் உயிரோடிருக்கும்போது ஸ்திரீகளுக்குப் புனர்விவாகம் செய்வது செல்லாது. அப்படிச்செய்து கொண்டால் இ. பி. கோ. 494-வது பிரிவுப்படி தண்டனேக்குண்டான குற்றத்தைச்செய்தவளாகிறுள்.

39. விதவாவிவாகம்.—மனுஸ்மிருதியில் கர்ப்பாதானத்துக்கு முந்தி வைதவியம் அடைந்த பெண்ணுக்கு புனர்விவாகம் செய்யலாமென்றிருந்தாலும், அதற்குப்பின் எழுதப்பட்ட சில ஸ்மிருதிகளில் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால்தான் உபய கட்சிக்காரர்களுக்கும் ஆதாரங்கள் தர்மசாஸ்திரங்களிலிருக்கின்றன. எப்படி யிருந்தாலும் தற்காலத்தில் சில தாழ்ந்த ஜாதிகளில் தவிர மற்ற ஜாதிகளில் விதவா விவாகம் அனுஷ்டானத்திலில்லே. ஆனல், 1856-ம் ஹூ 15-வது ஆக்ட்ப்படி விதவைகள் புனர் விவாகம் செய்துகொள்ளலாம். அப்படி விவாகஞ் செய்துகொள்ள முதல் புருஷனல் அனுமதி கொடுக்கப்பட்டிருந்தாலொழிய அவனுடையசொத்தில் அவளுக்கு யாதொரு பாத்தியமாவது ஜீவனும்சமாவது கிடைக்காது, (ஷை ஆக்ட் 1, 2 பிரிவுகள்) சரியானகாரணங்களேகாட்டி கோர்ட்டுமூலமாய் விவாகபந்தத்தை நீக்கிக்கொண்ட ஸ்திரீ புனர்விவாகஞ்செய்து கொள்ளலாமென்று பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறர்கள். (1 பம். 347; 4 பம். 330.)

40. கிறிஸ்து மதத்தில் சேருவது.—புருஷனுவது பெண்சாதியாவது மதப்பிரஷ்டர்களாய் கிறிஸ்து மதத்தைச் சேர்ந்தால் சேராதவர்கள் 6மீ 'காத்திருந்து ரூ 2. ஸ்டாம்பு ஒட்டி டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டில் மனுக்கொடுத்து விவாகத்தை ரத்து செய்த பிறகு அவர்கள் புனர்விவாகம் செய்துகொள்ளலாம். (1866ஹூ 21 ஆக்ட்) மே

லான ஜாதியான் சேர்ந்தால், அவன் பெண்ஜாதி புனர்விவாகம் செய்துகொள்ளமாட்டாளென்பது நிச்சயமாயிருந்தாலும், சட்டத்தில், செய்துகொண்டால் பாதகமில்லையென்று ஏற்பட்டிருக்கிறது.

---

3 - வது புத்திரசுவீகாரம்.

(1) ஸ்வீகாரம் யார் எடுத்துக்கொள்ளலாம்.

41. புத்திரனின் பிரயோசனம்:—புத்திரனில்லாதவன் இறந்த பிறகு "புத்" என்னும் நரகத்தில் அவன் ஆத்துமா தள்ளப்படுமென்றும், அந்நரகத்திலிருந்து தப்புவதற்குப் பிள்ளை அவசியமென்றும், பிள்ளையைத் தவிர வேருருவர் அந்த நரகத்திலிருந்து காப்பாற்றூர்களென்றும், ஆகையால், ஒவ்வொருவனும் தன் உத்தரகிரியை நடத்தவும், தன் வம்சோத்தாரணத்திற்கும், தன் சொத்தை அனுபவிப்பதற்கும் அவசியம் பிள்ளையை பெற்றிருக்கவேண்டும். தன் மனைவியிடமாக தனக்குப்பிறக்கும் புத்திரன் ஔரஸன் என்று பெயர். புத்திரப்பேரில்லாதவன் புத்திரனைப்போல் வேருருவனையடையலாமென்று தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன.

42. வேறு வகைகளில் அடையும் போலிப்புத்திரர்கள். அடியிற்கண்டபடி பதின்மூன்று வகைப்படுவார்கள்:

(1) புத்திரிகா புத்திரன்:— தன்புத்திரியிடம் (பெண்ணினிடம்) பிறக்கும் முதல் பிள்ளை தனக்கும் பிள்ளையாக பாவிக்கப்படுவான் என்ற ஒப்பந்தத்துடன் அப்பெண்ணை ஒரு புருஷனுக்கு விவாகஞ்செய்து கொடுப்பது ஆதிகாலத்தில் வழக்கமாயிருந்தது. இப்படிப்பட்ட புத்திரியின் பிள்ளைக்கு புத்திரிகா புத்திரன் என்று பெயர்.

(2) தன் சம்மதத்தின்பேரில் தன் மனைவியிடமாக வேறு புருஷனுக்குப் பிறக்கும் பிள்ளை அல்லது க்ஷேத்திரஜன்.

(3) பெண்சாதி திருட்டுத்தனமாய் விபசரித்துப் பெற்ற பிள்ளை.

(4) கன்னிகையின் புத்திரன்.

(5) ஒரு ஸ்திரீயை விவாகம் செய்துகொள்ளும்போது அவளுடன் அடைகிற (விவாகத்துக்கு முன் அவளுக்கு பிறந்த பிள்ளை.

(6) புனர் விவாகம் செய்துகொள்ளுகிறவளுடைய (முதல் விவாகத்துக்கு பிறந்த) பிள்ளை.

(7) ஸ்வீகாரன் அல்லது தத்துப்பிள்ளை.
(8) கிருத்தரமன்.
(9) விலைக்கு வாங்கின பிள்ளை.
(10) அனாதரவாய் இருந்து எடுத்து வளர்க்கப்பட்ட பிள்ளை.
(11) தானேவந்து சேர்ந்த பிள்ளை.
(12) சூத்திர ஸ்திரீக்குப் பிறந்த பிள்ளை.
(13) வைப்பாட்டி பிள்ளை.

43. சந்தானத்தின் அவசியம்.—(1) சரியான வழியினாலாவது சரியென்று ஒப்புக்கொள்ளத் தகாத வேறு அநேக வழிகளினாலாவது ஓர் புத்திரனை யடையவேண்டுமென்று சொல்லப்பட்டதினால் சந்தான பாக்கியத்தின் ஆவசியகமும் மகிமையும் வெளிப்பட்டது

(2) ஆனால், மேற்சொல்லிய பலவழிகளாலும் புத்திரனையடையும் வழக்கம் பல காரணங்கள் பற்றி நாளடைவில் கொஞ்சங்கொஞ்சமாக நின்றுகொண்டே வர, கடைசியில் இப்போது ஆண் சந்ததி யில்லாமற்போனால் ஸ்வீகாரத்தால் புத்திரனை யடைகிற வழக்கமொன்றே நம்பிரதேசத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இச்ஸ்வீகார புத்திரனைப்பற்றி பின்னால் விவரவாய் கூறப்படும்.

(3) ஸ்வீகாரத்தால் புத்திரனையடையும் வழக்கம் இல்லாத சில இடங்களில் பெற்ற தாய் தகப்பனால் கொடுக்கப்படாமல் தானே சம்மதித்து வந்தடைகிற பிள்ளையை இஷ்டத்தின்பேரில் ஒப்புக்கொண்டு புத்திரன்போல் பாவித்துக்கொள்ளும் வழக்கம் ஏற்பட்டு வருகிறது. இப்படி யடையப்படும் பிள்ளை **கிருத்தரமன்** எனப்படுவான்.

* புத்திரனாக எடுத்துக்கொள்ளப் படுவதற்கு அப்பிள்ளையினுடைய சம்மதம் வேண்டியிருக்கிறபடியால் அவன் மைனாரிட்டியி

விருந்து நீங்கினவனுயிருக்கவேண்டும். இப்புத்திரன் புதுத்தகப்பனுக்கு உத்தரக்கிரியை முதலியவற்றைச்செய்யவும் அவனுடையசொத்து சுதந்திரங்களை யடையவும் உரியவனுக இருப்பதும் தவிர பிறந்த குடும்பத்தினின்றும் அதனுடைய சொத்து சுதந்திரங்களினின்றும் விலகாதவனுகவுமிருக்கிருன். இவ்வித வழக்கம் மிதிலைநாட்டிலும், பஞ்சாப் காச்மீரப் பிரதேசங்களிலும் லங்கைத் தீவிலும் மலையாளத்திலுள்ள நம்பூரி பிராமணர்களுக்குள்ளும் தவிர மற்றெங்கும் அனுஷ்டானத்தில் இல்லை. (11 மது. 164.)

(4) தென் இந்தியாவிலுள்ள சில செட்டி ஜாதிகளுக்குள் பிள்ளையில்லை மற்போனுல் பெண்ணின்புருஷனை மருமகனை பிள்ளையாக பாவித்துக்கொள்ளும் வழக்கம் நடந்துவருகிறது. இதற்கு இல்லத்த ஸ்வீகாரம் என்று பெயர். இவன் தன் செண்சாதியின் தகப்பனுடைய சொத்துக்களன்றி தன் சொந்தத் தகப்பனுடைய சொத்துக்கும் பாத்தியஸ்தனுக இருக்கிருன். (4 மது. 272 ; 21 மது. 226 ; 6 மது. 267 ; 42 மத 805 ; 46 இ. அ. 168)

(5) அபிமானப்பிள்ளை அல்லது வளர்ப்புப்பிள்ளை.—பிரியத்தின்பேரில் பிள்ளையொப்பந்தம் குடும்பத்தில்வளர்க்கப்படுகிறவன் அபிமான பிள்ளை யென்று சொல்லப்படுவான். ஆனுல் சாஸ்திரவிதிகளின்படி இவனுக்கு குடும்பத்தில் யாதொரு அந்தஸ்தும் பாத்தியமும் கிடையாது. அபிமானத் தகப்பனுக்கு இவன் வார்சாகவுமாட்டான். அத்தகப்பனுலே இஷ்டத்தின் பேரில் ஏதாவது சொத்து கொடுக்கப்பட்டிருந்தால் அதைமட்டும் அவன் அடையலாமேயன்றி வேறுவித சுதந்திரம் ஒன்றும் அவனுக்கு ஏற்படமாட்டாது. (20 அல 209.)

44. எவர்கள் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம்.—வயது வந்த ஒவ்வொரு புருஷரும், விதவைகள் புருஷனுக்காகவும் ஸ்வீகாரம்செய்துகொள்ளலாம். ஆனுல், புருஷனுடைய பூர்வமான அனுமதியுடன் அவன் ஜீவகாலத்திலேயே மனைவி ஸ்வீகாரஞ்செய்துகொள்ளலாம். பிரம்மசாரியும், தாரமிழந்தவனும், தாயபாகத்துக்கு தகுதியற்ற அங்கவீனன் தீராதநோய் உள்ளவர்கள்கூட ஸ்வீகாரம்எடுத்துக்கொள்ளலாம். (4 மத. ஹைகோ. 270; 12 பம் 329; 12 அல. 352.) புத்திரனுயிரோடிருக்கும்போதும், புத்திரனில்லாதபோது பவுத்திரன், பிரபவுத்திரன்இவர்களில் யாரிருந்தாலும் புத்திரனைப்போல உத்தரகிரியை செய்ய பாத்

தியப்பட்டவர்களாகலால் அவர்கள் உயிரோடிருக்கும் சமயத்திலும் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளக்கூடாது (46 பம் 455) ஸ்வீகாரப் பிள்ளையாவது, அவனுக்குப் பிறந்த பவுத்திரர், பிரபவுத்திரர்களில் யாராவதிருக்கும்போதும் ஸ்வீகாரங்கூடாது. ஆனால் மேலே சொல்லப்பட்டவர்களில்லாமல் பிரபவுத்திரன் பிள்ளை யுயிரோடிருந்தாலும் அவன் 3 தலைமுறைக்கு மேல்பட்டவனாகி உத்தரகிரியைசெய்ய பாத்தியப்பட்டவனல்லாததால், வேறொரு பிள்ளையை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அவ்வளவு காலம்வரையில் ஜீவித்தவர்களில்லை. தௌகித்திரன் (பெண்ணின் புத்திரன்) உயிரோடிருந்தால் ஸ்வீகாரம் செய்துகொள்வதில் தடையில்லை.

45. ஆண்சந்ததி யிருக்கும்போது ஸ்வீகாரம் செல்லாது.—**(1)** ஆண்சந்ததி பிறந்திருந்து பிறகு இறந்துபோயிருந்தாலும் ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம். ஸ்வீகாரம் செய்துகொள்ளுங்காலத்தில் யாதொரு ஆண்சந்ததியிருக்க ஸ்வீகாரம் வாங்கிக்கொண்டால் அது செல்லமாட்டாது. (21 மு. இ. அ. 181 ; 22 பம். 482 ; 23 பம். 236.)

(2) அவுரஸபுத்திரன், பிரபவுத்திரன், தத்துப்புத்திரன், பவுத்திரன் பிரபவுத்திரன் இவர்களில் யாராவது ஜீவித்திருக்கு போதும் அவர்கள் துஷ்டர்களாயும், துன்மார்க்கர்களாயுமிருப்பதாயும் பிதா மாதா சொற்படி நடக்கிறவர்களாயில்லை யென்கிற நியாயத்தைக்கொண்டும் அல்லது ஊமை செவிடு, தீராதநோய் இவைகளின் காரணமாகவாவது (46 பம். 455) வேறு ஸ்வீகாரஞ் செய்துகொள்ளக்கூடாது. மேற்சொன்னவர்கள் ஜாதிப்பிரஷ்டர்களானால் வேறு ஸ்வீகாரஞ்செய்துகொள்ளலாம். இவர்கள் அனுமதியின்பேரிலு மெடுத்துக்கொண்ட ஸ்வீகாரமும் சொல்லமாட்டாது. (4 மு. இ. அ. 1; 1856ளுத்து மதராஸ் தீர்ப்பு 20-வது பேஜ்.)

46. ஜாதிப் பிரஷ்டனாகப்போன பிள்ளை யிருக்கையில் சுவீகாரம்.—சொந்தப் பிள்ளையாவது தத்துப்பிள்ளையாவது ஜாதிப்பிரஷ்டனாகப்போய்விட்டால் ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளலாம். ஆனால், ஜாதிப்பிரஷ்டனான பிள்ளைக்கு சொத்துபாத்தியதை போகாதென்று 1850ளுத்து 21-வது ஆக்டில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், தகப்பன் சம்பாதித்த சுவயார்ஜித சொத்துமட்டும் கிடைக்கும். சுவ

யார்ஜித சொத்தை சுவயமாகவே தன்னிச்சையாய் செலவுசெய்யலா மென்றிருப்பதால் ஒருவர் ஜாதிப்பிரஷ்டனுன தன்பிள்ளைக்குச் சொத்தைக்கொடுக்காமல் வேறுவித வினியோகம் செய்வானென்பது நிச்சயம். ஆகையால் ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டு அந்த ஸ்வீகாரப் பிள்ளைபேரில் தன் சொத்துக்களை உயில்எழுதிவைத்தால்செல்லும்.

47. தாயபாகத்துக்குத் தகுதியற்றவரிருக்க சுவீகாரம்.— பிறவிக்குருடு, செவிடு, ஊமை, குஷ்டரோகி, நபும்ஸகன், அங்கஹீனன், ஜடன், பைத்தியன் தீராதரோகி, முதலியவர்களை பிள்ளை ாகப் பெற்றிருப்பவன் ஆண்சந்ததியை உடையவனுகமாட்டானென்றும் அவன்ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளலாமென்றும் தர்மசாஸ்திரத்தில்சொல்லப்பட்டிருக்கிறது. ஆனுல் மேற்சொன்ன பிரவிக்குருடர் முதலியவர்களுக்கு ஆண்சந்ததிகளிருந்தால் ஸ்வீகார மெடுத்துக்கொள்ளக்கூடாது.

48. புத்தி சுவாதீனமில்லாதவன் சுவீகாரமெடுத்துக்கொள்ளக்கூடாது.—புத்திர ஸ்வீகாரஞ்செய்துகொள்வது மனப்பூர்த்தியானசெய்கையாகவும் தத்தின் பிரயோசனமின்னதென்று அறியக்கூடியவர்களாயுமிருக்கவேண்டுமென்றிருப்பதால் பைத்தியக்காரன் ஜடன்முதலியோர் செய்துகொள்ளும் ஸ்வீகாரம் செல்லமாட்டாது. (10 மூ. இ. அ. 429; 40 மத. 660.)

49. இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட சுவீகாரம்.—ஒருஸ்வீகாரப்பிள்ளை உயிரோடிருக்கும்போது மற்றொருவனை ஸ்வீகாரமெடுக்கக்கூடாது. (19.இ. அ. 108; 19. க. 513.) அவனிறந்து போகும்பட்சத்தில் மறுபடி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம். 2-வது பிள்ளையுமிறந்தால் 3-வது பிள்ளையையும் இவ்விதமாக எத்தனை பிள்ளைகளேயாவது எடுத்துக்கொள்ளலாம். (4 மூ இ. அ. 1). முதலில் எடுத்தஸ்வீகாரப்பிள்ளை யிருக்கும்போது இரண்டாவது ஸ்வீகாரமெடுத்து அதன் பிறகு முதல் ஸ்வீகாரப்பிள்ளை இறந்துபோனுலும் இரண்டாவது ஸ்வீகாரம் செல்லாது. ஏனென்றால், முதலில் செல்லாத ஸ்வீகாரம் எக்காலத்திலும் செல்லாது. (4 மு. இ. அ. 1; 22 பம். 551, 20 க. 487; 22 பம் 482: ஏககாலத்தில் 2, 3 சுவீகாரமும் செல்லாது: (12 க 406; 686; 20 இ. அ. 30.) புருஷனுல் அனுமதி கொடுக்கப்பட்ட அவனிர

ண்டு சபத்னிகள் ஒரே காலத்தில் தனித்தனியாய் ஒவ்வொரு பிள்ளையை ஸ்வீகாரமெடுத்தால் இரண்டும் செல்லாது (12 கல் 686.) ஆனால் காலவித்தியாசமிருந்து மற்ற அம்சங்களில் நியாயமானதாயிருந்தால் முதலில் எடுத்த சுவீகாரம் செல்லும்.

50. புருஷர்கள் எல்லாரும் சுவீகாரம் எடுத்துக்கொள்வது.—பிரம்மசாரி, பெண்டாட்டி இழந்தவர்கள், பிள்ளையுண்டாகும் ஸ்திதியில் சம்சாரஞ்செய்துகொண்டு வருகிறவர்கள் ஸ்வீகாரமெடுத்துக்கொள்வது அனுசிதமென்று சிலர் சொன்னாலும், அப்படிப்பட்டவர்கள் ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளலாமென்று கோர்ட்டார் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். (2 ம. ஐ. 367; 4 ம. ஐ. 270; 12 பம் 329; 12 அ. 352.)

51. பெண்சாதி கர்ப்பமாயிருக்கையில் சுவீகாரஞ்செய்துகொள்வது.—பெண்சாதி கர்ப்பமாயிருக்கையில் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளக் கூடாதென்று மதராஸ் ஹைகோர்ட்டார் 1860-ம்வூத்தில் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். (1860-வூ மதராஸ் தீர்ப்பு 97 பக்கம்) ஆனால், தர்ம சாஸ்திரத்தில் அவுரஸ புத்திரன் பிறந்தால் ஸ்வீகாரப் பிள்ளைக்கு இன்ன பாகங்கொடுவென்று சொல்லியிருப்பதால் இதுகளை யோசித்து பெண்சாதி கர்ப்பிணியா யிருந்தாலும் ஸ்வீகார மெடுத்துக்கொள்ளலாமென்று மதராஸ் ஹைகோர்ட்டிலேயே வேறொரு கேசில் தீர்ப்புச் செய்யப்பட்டிருக்கிறது. (3. ம. 180.)

52. குஷ்டரோகிகள் முதலியவர்கள் சுவீகாரமெடுத்துக்கொள்வது—குஷ்டரோகிகள், அங்கவீனர்கள், நபும்ஸகர்கள், பித்தர்கள் பிறவிக்குருடு செவிடுஊமை முதலியவர்கள்கூட ஸ்வீகாரம்எடுத்துக்கொள்ளலாம். அப்படி எடுத்துக்கொண்ட ஸ்வீகாரப்பிள்ளைக்கு பிதுரார்ஜித சொத்தில் யாதொரு பாத்தியமுமில்லை. ஆனால், குடும்பசொத்தில் அவர்கள் தத்துத் தகப்பனுக்குக்கிடைத்த ஜீவனும்சமும், அவன் சுவயார்ஜித சொத்து ஏதாவதிருந்தால் அந்த சொத்தும் அந்த ஸ்வீகாரப் பிள்ளைகளுக்குக் கிடைக்கும். (28 கல். 128.)

53. சுவீகாரத்துக்கு பெண்சாதி சம்மதம் அவசியமில்லை.—ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும் சுதந்திரம் புருஷனுக்கே உரித்தானது. புருஷன் பொருட்டாகவே ஸ்வீகாரம் செய்துகொள்ளப்படுகிறது.

ஆகையால் ஸ்வீகாரத்துக்கு பெண்சாதியினுடைய சம்மதம் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. மேலும் ஒருபையனை ஸ்வீகாரம் செய்துகொள்வதற்கு பெண்சாதி இஷ்டப்படாதவளாக இருந்தாலும், அவளுடைய ஆக்ஷேபணையைத் தள்ளிவிட்டுங்கூட புருஷனானவன் தன் இஷ்டப்படி ஸ்வீகாரம் வாங்கிக்கொள்ளலாம். அப்படிப்பட்ட ஸ்வீகாரமும் சட்டப்படி செல்லத் தக்கதாகும். (4 மூ. இ. அ. 1.)

54. மைனர்கள் சுவீகாரமெடுத்துக்கொள்வது.—இன்ன நன்மையை யடைவதற்கு ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வது என்றறியக் கூடிய ஞானமுள்ள 15 வயது வந்த மைனர்கள் சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம். தானிறந்தபிறகும் எடுத்துக்கொள்ளும்படியாய் தன் பெண்சாதிக்கும் உத்தரவுகொடுக்கலாம். (15. வை. 548; 15 பம். 565, 1 க. 289; 40 மத. 925) ஆனால், சர்க்காரால் பாதுகாத்து வருகிற மைனர்கள் மேலேகண்ட காரியங்கள் செய்வதற்குமுந்தி, கோர்ட் ஆப் வார்ட்ஸாரவர்களுடைய அனுமதி பெறவேண்டும். (1 க. 289; 9 மூ. இ. அ. 287; இ. லா. ரி. 2 பம் 529.).

55. ஸ்திரீகள் தானாகவே ஸ்வீகாரமெடுத்துக் கோள்வது.—மிதிலதேசத்து ஸ்திரீகள் தவிர மற்றவர்கள் புருஷன் உத்திரவின்றி புருஷனுக்குகாக ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டாலும், தனக்காக மட்டுமென்று ஸ்வீகாரமெடுத்துக்கொண்டாலும் செல்லாது. (12 மூ இ. அ. 356.) பெண்ஜாதியனுமதியின்றி புருஷன் எடுத்துக்கொண்ட ஸ்வீகாரம் செல்லும். (4 மூ. இ. அ. 1.)

56. விதவைகள் ஸ்வீகாரமெடுத்துக் கோள்வது.—தேசத்துக்குத்தக்கபடி விதவைகள் எடுத்துக்கொள்ளும் ஸ்வீகாரம் நான்குவிதம். (1) திராவிட தேசமாகிய மதராஸ் இராஜதானியிலும், மைசூர் ராச்சியத்திலும் புருஷனுடைய அனுமதியின்பேரிலாவது. புருஷன் அனுமதி கொடுக்காமலிருந்தால் அவனுடைய தகப்பன் (மாமனார்) அனுமதியின்பேரிலாவது, மாமனாரில்லாவிட்டால் மைத்துனன் (புருஷனின் சகோதரன் முதலிய ஸபிண்டர்கள் (தாயாதிகள்) அனுமதியின் பேரிலாவது, விதவைகள் ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளலாம். (2) காசி பங்காளா இராச்சியங்களில் புருஷனுடைய அனுமதியின்பேரில் மட்டு

ந்தான் விதவைகள் சுவீகாரம் எடுத்துக்கொள்ளலாம். (12 அல. 323.)

(3) மகாராஷ்டிர தேசங்களில், சுவீகாரம் முக்கியமாய் புருஷனுடைய ஆத்துமாவின் நன்மைக்காகவேசெய்வதால், சுவீகாரம்எடுத்துக்கொள்ளவேண்டாமென்றுபுருஷன் உத்தரவு செய்திருந்தா லொழிய, அவன் அதை எடுத்துக்கொள்ள அனுமதி கொடுத்ததாகவே அபிப்பிராயப்படுவதால், பம்பாய் ராச்சியங்களில் விதவைகள் ஒருவருடைய அனுமதியுமில்லாமலே சுவயமாக சுவீகாரமெடுத்துக்கொள்ளலாம். (15. பம். 565.)

(4) மிதிலதேசங்களில், சுவீகாரகாலத்தில் புருஷன் உயிருடனிருந்து அனுமதிகொடுத்தால்தான் பெண்சாதி சுவீகாரம் செய்துகொள்ளலாமென்று தர்ம சாஸ்திரத்திற்கு அர்த்தம் செய்தார்கள். ஆகையால், அவ்விடங்களில் விதவைகள் சுவீகாரம் செய்துகொள்ள அர்கர்களல்ல. ஆனால், கிருத்திரம சுவீகாரம் செய்துகொள்ளும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது; இதுவிஷயம் பின்னால் விவரிக்கப்படும்.

57. சுவீகார அதிகாரம் கொடுப்பது மூன்றுவிதம். (1) தகுந்த சாட்சிகள் முன்னிலையில் வாயினால் பெண்சாதிக்கு அனுமதிகொடுப்பது. (7 மூ. அ. 54, 64). (2) 10 ரூ. ஸ்டாம்பு ஒட்டிய பத்திரத்தில் எழுத்துமூலமாய் எழுதி ரெஜிஸ்டர்செய்து அதிகாரங்கொடுப்பது. ரெஜிஸ்டர்செய்யாதிருந்தால் பத்திரம் செல்லாது.

(2) உயிலில் எழுத்துமூலமாய் எழுதி அதிகாரங்கொடுக்கவேண்டும். இதற்கு ஸ்டாம்பும் ரெஜிஸ்திரேஷனும் அவசியமில்லை.

(3) சுவீகாரப்பிள்ளை ஒருவேளை இறந்துபோவானாகில் இரண்டாந்தரமாவது அவனுமிறந்தால் மூன்றுவதுதடவையாவது அதேமாதிரி அனேகந்தடவைகளாவது சுவீகாரமெடுத்துக்கொள்ளலாமென்று அனுமதி புருஷனால்கொடுக்கப்பட்டிருந்தால், அந்தவிதவை எத்தனைதடவை வேண்டுமென்றாலும் சுவீகாரமெடுத்துக் கொள்ளலாம். (10 மூ. இ. அ. 279; இ. லா. ரி. 1 க. 289; இ. லா. ரி. 1 ம 174) ஆனால், பிள்ளை உயிருடனிருக்கும்போது வேறொருவனையாவது, ஒரே தடவையில் இரண்டு மூன்று பிள்ளைகளையாவது சுவீகாரமெடுத்துக் கொள்ளலாமென்று பெண்சாதிக்கு அதிகாரங் கொடுக்க

நியாயமில்லை. இந்தப் பிள்ளையிறந்துபோனுல்மட்டும் இந்த அதிகாரத்தைக்கொண்டு வேறொருபிள்ளையை எடுத்துக்கொள்ளும் சுவீகாரஞ் செல்லுமென்று சமீபத்தில் தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஒருவனுக்கு இரண்டு மூன்றுக்கு மேற்பட்ட பெண்சாதிகளிருந்தாலும் ஒரு ஸ்வீகாரமட்டும் எடுக்க அதிகாரம்கொடுக்கலாம். ஆனுல் எல்லா மனைவிக்கும் பொதுவாய்எடுக்கும்படி சேர்த்துக்கொடுக்கலாம். (37 மத 199; 41 இ. அ. 51) அவர்கள் எல்லோரும் சம்மதித்து ஸ்வீகாரம் செய்யவேண்டும். அவர்களில் யாராவது ஒருவர் இறந்தால் ஸ்வீகாராதிகாரம் செல்லாது (42 அல 266) அவர்களில் எல்லோருக்கும் தனித்தனியாக அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தால் முதல் மனைவிக்குதான் முந்தின உரிமை உண்டு. முதல் மனைவிஸ்வீகாரம் செய்யமறுத்தால் தான் அடுத்த இளையமனைவி ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம். (18 கல். 69; 38 கல் 694; 39 கல் 582.)

58. (a புருஷன் சொன்னஷரத்துப்படி சுவீகாரமெடுப்பது.—(1) புருஷன் ஸ்வீகார மெடுத்துக்கொள்ளென்று பொதுவாய்ச் சொல்லியிருந்தால் யாரையாவது எடுத்துக்கொள்ளலாம். (2) இன்ன பிள்ளையை சுவீகார மெடுத்துக்கொள்கிறதென்று குறித்துச் சொல்லியிருந்தால், அந்தப் பிள்ளையைத்தவிர வேறெந்தப் பிள்ளையையும் சுவீகாரமாக எடுக்கக்கூடாது. அந்தப் பிள்ளை இறந்துபோய் விட்டாலும் அவன் பெற்றோர் கொடுக்கமாட்டோமென்றாலும் சும்மாவிருப்பதைத் தவிர வேறொருவனை சுவீகாரம் செய்து கொள்ளக்கூடாது. (3) ஒருவனிறக்கும் சமயத்தில் பெண்சாதி கர்ப்பிணியாயிருந்தாள். பிறக்கும் பிள்ளை யிறந்துபோனுல் சுவீகாரஞ்செய்து கொள்ளென்று அதிகாரம் கொடுத்தான். பிறகு பெண் பிறந்து சுகமாயிருந்தது. அதற்கு மேல் சுவீகாரம் செய்யக்கூடாது (46 இ. அ. 259; 47 கல் 456.) (4) இராமனுக்கு இரண்டாவது புத்திரன் பிறந்தால் சுவிகாரம் செய்துகொள்ளென்று புருஷன் அனுமதி கொடுத்தான். பெண்சாதி கொஞ்சகாலம் சும்மாவிருந்து வேறொருபிள்ளையை எடுத்துக்கொண்டாள். இது விஷயமாய் சிலர், சுவீகாரப் பிள்ளை இராமனுடைய இரண்டாவது பிள்ளையாயிருந்தால் நலம் என்று புருஷன் அபிப்பிராயப்பட்டு உத்திரவு கொடுத்தானென்று அபிப்பிராயப் பட்டார்கள். சிலர் இராமனுடைய 2-வது குமாரனைத்தவிர வேறொருவனையுங் கூடா

தென்று அபிப்பிராயப் பட்டார்கள். தற்கால அபிப்பிராயமும் அவ்விதமே வித்தியாசப்பட்டே யிருக்கிறது.

(b) ஒருவன் தன் சொத்துக்கள் தன் பெண்சாதியின் ஜீவதசைவரையில் அவள் ஸ்வாதீனத்திலேயே யிருக்கவேண்டுமென்றும், அவளிறந்தபிறகு தான் தன் சொத்து ஸ்வீகாரப்பிள்ளையைச் சேர வேண்டுமென்று நிபந்தனை யேற்படுத்தினால் செல்லுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (8. க. 357).

59. சுகாராதிகாரம் பெண்சாதிக்குமட்டுங் கொடுப்பது.—புருஷன் தனக்காக சுவீகாரஞ்செய்ய பெண்சாதிக்குமட்டும் உத்திரவுகொடுக்கலாம். மருமகள் விதவையாயிருந்தால் பிள்ளைக்கு சுவீகார மெடுத்துவைக்க அவளுக்கு உத்திரவு கொடுக்கலாம் (12 பம் 185).

60. சுவீகாராதிகாரம் பெற்ற பெண்சாதி சும்மாவிருக்கலாம்.—சுவீகார மெடுத்துக்கொள்ளென் று புருஷனால் அனுமதி கொடுக்கப்பட்ட பெண்சாதி சும்மாவிருந்தால், சுவீகாரம் எடுத்துக்கொள்ளென்று கட்டாயப்படுத்த நியாயமில்லை, (33 இ. அ 55; 28 அல 377; 12 பம் 202; 7 கல் 288.) அப்படி கட்டாயப்படுத்தியாவது, பலவந்தப்படுத்தியாவது எடுத்துக்கொண்ட சுவீகாரம் செல்லாது. (13 ம. 214, 220.)

61. சுவீகாராதிகாரஞ்செல்லுங்காலம்:—சுவீகாராதிகாரம்பெற்றவிதவை எவ்வளவுகாலத்திற்குப் பிறகுகூட சுவீகாரம் செய்து கொள்ளலாம். இதற்கு காலவரையறை கிடையாது. (4 பம். ஐ. 191; 9 பம் 58). ஆனால். சுவீகாராதிகாரம் கொடுத்தவனுடைய ஆஸ்தி அவளுடைய கையிலிருந்து வேறொருவர்வசம் போனால், அதோடு சுவீகாராதிகாரம் போய்விடும். (10 மூ. இ. அ 279; 10 ம 205; 17 க. 122; 13 க. 69 - 385; 17 பம். 164; 26 பம் 526.)

உதாரணம்—பிள்ளை இறந்துபோனால் ஸ்வீகாரம் செய்துகொள்ள பெண்சாதிக்கு ஒருவன் உத்திரவு கொடுத்தான். அவ்விதமே அந்தப் பிள்ளை விவாகமான பிறகு இறந்துபோனான். பிறகு அவனுடைய ஆஸ்தி முழுவதும் மருமகளுக்குப் பாத்தியமானதால், மாமியாருக்கு மறுபடி ஸ்வீகாரஞ்செய்து கொள்ள பாத்தியமில்லை. (10 மூ. இ அ. 279; 10 ம 205; 17 க. 122) மருமகளிறந்த பிறகு பிள்ளையிறந்துபோனால், மாமியார் மறுபடி ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளலாம். (10 மூ. இ அ 11; 22 ஸ 121) ஒரு வேளை மகனிறந்த பிறகு மருமகளிறந்து, அதற்குமேல் ஆஸ்திகளெல்லாம் மாமியாருக்குச் சேர்ந்தா

லும் ஸ்வீகாரஞ் செய்து கொள்ளக்கூடாது. (10 மூ. இ. அ. 279; 10 ம. 295; 7 க. 122). பெண்சாதிக்கு ஸ்வீகாராதிகாரங் கொடுத்த பிறகு புருஷன் தானே ஸ்வீகார மெடுத்துக்கொண்டால், முன் பெண்சாதிக்குக் கொடுத்த அதிகாரம் ரத்தாய்விடும்.

62. மைனர் விதவைகள் சுவீகார மெடுக்கலாம்.—சுவீகாரம் புருஷனுடைய நன்மைக்காகச் செய்வதால் 15 வயது நிறைந்த மைனர் விதவைகளும் சுவீகார மெடுத்துக்கொள்ளலாம். (40 மத. 925; 43 பம். 481; 46 பம். 307.) பம்பாய் தேசத்து விதவைகள் சுவதந்திரமாக சுவீகாரஞ்செய்துகொள்வதால் மேஜரானபிறகு தான் அவர்கள் தத்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

63. வியபசாரியான விதவை சுவீகாரஞ் செய்துகோள்ளக் கூடாது.—புருஷனுல் அனுமதிபெற்றிருந்தாலும், வியபசாரியாயிருந்தால் வைதிக கர்மங்களைச் செய்ய யோக்கியதை போய்விடுவதால், அப்படிப்பட்ட விதவை தகுந்த பிராயச்சித்தங்களால் சுத்தியடைந்தாலொழிய ஸ்வீகார மெடுத்துக்கொள்ளக் கூடாது. வியபசாரத்தால் கர்ப்பந் தரித்தவளுக்கு பிராயச்சித்தமே கிடையாது. (13 பங். லா. ரி. 14.)

64. தலைமயிர் வைத்திருந்த விதவை சுவீகாரம் எடுத்தல்.—விதவை தலைமயிர் வைத்திருந்தால் சுவீகாரம் செய்துகொள்ளக்கூடாது. ஆனால், அந்த தோஷத்தை பிராயச்சித்தங்களால் நிவாரணம் செய்த பிறகு சுவீகாரமெடுத்துக்கொள்ளலாம். (11 பம். 381; 22 பம். 590.)

65. 2, 3 விதவைகளிருந்தால் யார் சுவீகார மேடுத்துக்கோள்வதேன்பது.—ஒருவனுக்கு 2, 3 விதவைகளிருந்தால், அவன் எவளுக்கு சுவீகாராதிகாரம் கொடுக்கிருனே அவள் மட்டும் சுவீகாரம் செய்து கொள்ளலாம். எல்லாருக்கும் தனித்தனியே சுவீகாராதிகாரம் கொடுத்திருந்தும் முதல் பெண்சாதி நிராகரித்தால் அவளனுமதியின்றி இரண்டாவது பெண்சாதி சுவீகாரம் எடுத்துக்கொள்ளலாம். (39 கல். 582; 38 கல். 694.) பம்பாய் இராச்சியத்தில் முதல்பெண்சாதி சுவயமாகவும், இரண்டாவது பெண்சாதி முதல் பெண்சாதியின் அனுமதியின் பேரிலும் சுவீகார மெடுத்துக்கொள்ளலாம். ஆனுல், விபசாரியான முதல் பெண்சாதியின் அனுமதி அனுவசியம்.

66. ஸபிண்டர்களின் அனுமதியால் விதவை சுவிகார மெடுத்தல்.—(1) புருஷனுல் அனுமதி கொடுக்கப்படாதிருந்தாலும் ஸபிண்டர்களுடைய (தாயாதிகள்) அனுமதியால் சுவீகாரம் செய்து கொள்ளலாம். அப்படிப்பட்ட ஸபிண்டர்களில், முதலில் மாமனுர் யிருந்தால் அவரனுமதியே போதுமானது. அவரிறந்திருந்தால் புருஷனுடைய அவிபக்த சகோதரர்களுடைய அனுமதி அவசியம். குடும்பம் பிரிந்திருந்தால் சில தாயாதிகளுடைய அனுமதியே போதுமானது. புருஷன் சுவீகாரம் வேண்டியதில்லையென்று சொல்லி இறந்துபோயிருந்தால், மேலே சொல்லப்பட்டவர்களுடைய அனுமதியிருந்தும் சுவீகாரம் செல்லாது. (12 மூ இ. அ 397 ; 45 மத. 876 ; 45 இ. அ. 265 ; 47 இ. அ. 99 ; 43 மத. 485.)

(2) அநேக தாயாதிகளிருந்தால் எல்லாருடைய அனுமதியையும் பெறவேண்டுமென்ற அவசியம் இல்லை. அவர்களில் பெரும்பான்மையோர் அனுமதிகொடுத்து மற்றவர் அசூசையினுலாவது பொருமையினுலாவது அவ்வித அனுமதியைக்கொடுக்க மறுதளித்தாலும் விதவையானவள் சுவீகாரம் செய்து கொள்ளலாம். (23 மது. 486). ஆனுல், சமீபதாயாதிகளிருக்க அவர்களை விட்டுவிட்டு தூரதாயாதிகளுடைய சம்மதம் மட்டும் வாங்கிக்கொள்வது பிரயோஜனப்படமாட்டாது. (12 மு. இ. அ. 397 ; 47 இ. அ. 99 ; 43 மத. 650; 43 மத: 876.)

(3) தாயாதிகளுடைய அனுமதியை விதவையானவள் அயோக்கியமாயும் மோசடியாயும் லஞ்சம் முதலியன கொடுத்து அக்கிரமமாயும் பெருமல் கிரமமாய் பெற்றிருக்கவேண்டும். ஆனுல், வைதீகமான நோக்கங்களுடனேயே விதவையானவள் ஸ்வீகாரத் தச் செய்துகொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை. கிரமமானபடி தான்பெற்ற அனுமதியின் பேரில் சுவீகாரம் வாங்கப்பட்டிருந்தால் அது எவ்விதமான எண்ணத்தின் பேரில் விதவையால் செய்யப்பட்டிருந்தபோதிலும் சரியானபடி செல்லத் தகுந்ததேயாகும் என்று பிரிவி கௌன்ஸில் கோர்ட்டார் அவர்களால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (4 இ. அ. 113 ; 22 பம். 199, 206, 558.)

(4) மோசடியாகவாவது அயோக்கியமாகவாவது அக்கிரமமாகவாவது பெற்ற அனுமதிப்படி விதவையால் எடுத்துக் கொள்ளப்

பட்ட ஸ்வீகாரம் செல்லுபடியுள்ளதாக மாட்டாது. (7 இ அ. 173; 2 மதூ. 270; 8 மது. 545; 26 மது. 627.)

(5) விதவையானவள் தாயாதிகளில் பெரும்பான்மையோருடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு ஸ்வீகாரத்தைச் செய்து கொள்ளலாமென்றிருந்த போதிலும் புருஷனுடைய குடும்பமானது அவிபக்த நிலைமையிலேயே இருந்தால் அவள் எல்லா பாகஸ்தர்களுடைய சம்மதியையும் பெற்றுக்கொண்டே ஸ்விகாரம் செய்து கொள்ள வேண்டும். மேலும் அவிபக்தர்கள் சம்மதி கொடுக்காமல் விபக்தர்களுடைய சம்மதி இருந்தாலும் பிரயோசனப்படமாட்டாது. (23 மத 486; 28 மத 315; 1 மது.69; இ. அ. 154;) விபக்த குடும்பமாயிருந்தால் எல்லாருடைய சம்மதமும் பெறவேண்டுமென்ற அவசியமில்லை. சிலருடைய சம்மதம் இருத்தலே போதுமானது. கெட்ட எண்ணத்தினாலும் பொறாமையினாலும் மற்றவர்கள் சம்மதம் கொடுக்க மறுதளித்தாலும் பாதகமில்லை. (2 மது. 202;)

(6) ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும்படி பெண்சாதிக்கு அனுமதி கொடுக்க அவகாசமில்லாமலாவது தவறியாவது போய் புருஷன் இறந்திருந்தால் அவனுடைய அனுமதிக்கு பர்த்தியாக மாமனார் மைத்துனர் முதலான சபிண்டர்களுடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு ஸ்வீகாரத்தைச் செய்துகொள்ளலாம் என்பது சட்டத்தின் கருத்து. ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று புருஷன் தடை செய்திருந்தாலும், அல்லது இறந்து போவதற்கு முன் அவனால் செய்யப்பட்ட சொத்துக்களின் விநியோகம் முதலிய நடவடிக்கைகளால் ஸ்வீகாரம் செய்துகொள்ள வேணுமென்கிற அபிப்பிராயம் அவனுக்கு இல்லை என்று அனுமானிக்கக் கூடியதாக விருந்தாலும் விதவை ஸ்வீகாரம் செய்து கொள்ளக்கூடாது. இப்படிப்பட்ட விஷயத்தில் மாமனார் முதலிய தாயாதிகளுடைய அனுமதியும் பிரயோஜனப்படமாட்டாது. (12 மு. இ. அ. 443.)

குறிப்பு.—தாயாதிகள் கொடுக்கும் அனுமதி, மோசக் கருத்தாகவாவது திரவிய லாபத்தைப் பெற்றாவது கொடுத்ததாக ஏற்படக்கூடாது. (2 ம. 270) விபக்த தாயாதிகளில் சிலர் சுவீகார மெடுத்துக்கொள்ள அனுமதி கொடுத்தாலும் போதுமானது. (2 ம. 202.)

67. மகாராஷ்டிர விதவைகள் ஒருவருடைய அனுமதியில்லாமலே ஸ்விகாரமெடுப்பது.—(1) மகாராஷ்டிர தேசமாகிய பம்பாய்

இராச்சியத்தில், விபத்தனை புருஷனால் சுவீகாரஞ்செய்துகொள்ள அதிகாரங்கொடுக்கப்படாமற் போனபோதிலும் அவனிறந்துபோனதும் அவன் ஆத்மா நல்லகதியை யடைவதற்கு அவன் விதவை வேறுயாருடைய அனுமதியின்றியிலும் சுவீகாரமெடுத்துக்கொள்ளலாம். (5 பம் ஐ. 181; 10 பம். ஐ 257; 6 பம். 498, 505; 9 பம். 58) சுவீகாரங் கெட்ட எண்ணத்தினால் செய்யப்பட்டதாக வாதிக்கிறவர்கள் அதை ருசுப்படுத்தவேண்டும். (15 பம். 565) ஆனால், அவிபக்த குடும்பத்லைதச்சேர்ந்த விதவை ஜீவனாம்சத்துக்குமட்டும் பாத்தியமுள்ளவளாவதால் சொத்துக்கு பாத்தியமுள்ள அவள் மாமனாராவது, மைத்துனர்களாவது அனுமதிகொடாமற்போனால் சுவீகாரஞ் செய்து கொள்ளக்கூடாது. (6 பம். 498; 15 பம் 110; 29 பம் 410. 34 இ. அ. 107.) ஆனால், சமீபத்தில் ப்ரிவிகவுன்சில் தீர்மானத்தின்படி ஒரு விதவை, தன் புருஷனின் நன்மைக்காக ஸபிண்டர்களுடைய சம்மதமில்லாமல் ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம். (48 இ. அ. 513; 46 பம். 490; 47; பம் 110; 49 கல். 1.)

(2) புருஷன் வெளிப்படையாய் வாயினாலாவது, காரியத்தினாலாவது சுவீகாரம் வேண்டியதில்லையென்று சொல்லியிருந்தால் அவள் சுவீகாரமெடுத்துக்கொள்ளக்கூடாது. (23 பம். 250; 37 பம். 107).

(3) புருஷன் மைனராகவிருந்து இறந்துபோனாலும் அவன் விதவை சுவீகாரமெடுத்துக் கொள்ளலாம். (15 பம். 565).

(2) ஸ்வீகாரங் கொடுக்கும் அதிகாரம் யாருடையது.

68. தகப்பன் தாயின் அதிகாரம்.—ஒரு பிள்ளையைப்பிறனுக்கு தத்தாக கொடுத்துவிட்டால் அப்பிள்ளையானவன் பிறந்த குடும்பத்தைவிட்டு முற்றிலும்விலகி அக்குடும்பத்தில் உடைத்தாயிருந்த சகலசுதந்திரங்களையும் இழந்து அன்னிய குடும்பத்லைதயே சேர்ந்தவனாக ஆய்விடுகிறான். ஆனபடியால், பிள்ளையைப்பெற்று வளர்த்து அவனுடைய க்ஷேமத்தையும் நன்மையையுமே சுபாவத்தில் கருதுகின்றவர்களான தகப்பன் தாய்மார்களைத் தவிர வேறுயாருக்கும் பிள்ளையை தத்துக்கொடுக்கும் சுதந்திரம்கிடையாது.

பெற்றோர்களிருவரில் தகப்பனே முக்கிய பாத்தியஸ்தனாகவும் அதிக சுதந்தரவாளியாகவும் இருப்பதால் பிள்ளையை தத்துக்கொடுப்பதிலும் அவனுக்கே விசேஷ பாத்தியம் இருக்கிறது. (33 பம். 107).

69. சுவீகாரம் கொடுக்க தாய் தகப்பனுக்கு அதிகாரம்.—தாயாரனுமதியன்றி தகப்பன் பிள்ளையை சுவீகாரம் கொடுக்கலாம் (11 பம். ஐ. 199). தாய் மட்டும் புருஷன் அனுமதியன்றி கொடுக்கக்கூடாது. ஆனால், புருஷனிறந்துபோயிருந்தாலும், வெகுகாலம் தேசாந்திரம் போயிருந்தாலும் ஜாதிப்பிரஷ்டனானாலும், சன்னியாசியானாலும், நீங்காத பித்தனானாலும், இறந்தவனைப்போல் பாவிப்பதால், புருஷன் அனுமதியின்றி தாய் சுவீகாரம் கொடுக்கலாம். (2 பாட். 469; 30 க. 965.) ஆனால், ஒரே குமாரனாயிருந்தால் புருஷன் உத்திரவு அவசியம் வேண்டும். (4 பங்களா சதர் கோர்ட்டு தீர்ப்பு 320; 12 பம். ஐ. 364; 6 பம். 524).

புருஷன் பிள்ளையை சுவீகாரம் கொடுக்கவேண்டாமென்று வெளிப்படையாய்ச் சொல்லி இறந்துபோயிருந்தாலும், சந்தர்ப்பம் அவனுடைய நடவடிக்கை இதுகளிலிருந்து அவன் எண்ணத்தை அனுமானிக்க கூடியதாயிருந்தாலும் தன் பிள்ளைகளில் எவனையும் விதவை சுவீகாரம் கொடுக்கக்கூடாது. (11 ம 113). புருஷன் அனுமதியின்றி விதவை தன் சக்களத்தி பிள்ளையை எந்த விதத்திலும் சுவீகாரமாக கொடுக்கக்கூடாது. (16 ம. 384).

70. தமயன் முதலானவர்கள் சுவீகாரங்கொடுப்பது.—பிள்ளையை சுவீகாரங் கொடுப்பது பெற்றோர்களுடையதே தவிர, பாட்டன் தமயன், மாற்றாந்தாய், சித்தப்பன், பெரியப்பன் முதலிய பந்துக்களுக்குப் பாத்தியமில்லை. (3 பங்களா ஸதர் கோர்ட் தீர்ப்பு 337; 1852-ம் ௵ மதராஸ் தீர்ப்பு 97; 10 பம். ஐ. 235). தாய் தகப்பன் இல்லாத பையன் சுவீகாரத்துக்கு யோக்கியமாவனல்ல. (10 பம். ஐ. 268; 37 மத. 529; 44 மத. 260). ஆனால், பெற்றோர்கள் இன்னாருக்குப் பிள்ளையை ஸ்வீகாரம் கொடுக்கவேண்டுமென்று நிச்சயித்து, தானம் முதலிய ஸ்வீகாரச்சடங்குசெய்யும் சமயத்தில் வியாதிமுதலிய காரணங்களால் சக்கியற்றவராயிருந்தால், அந்ததானத்தை மற்ற பந்துக்கள் மூலமாய் செய்துகொள்ளலாம். ஒருவேளை தத்து சமயத்தில் தாய் தகப்பன் இறந்தாலும் அவர்களால் தானங்கொடுக்க அதிகாரம் பெற்றவன் அப்படி நிச்சயமாயிருந்த சுவீகாரத்தை செய்துகொடுக்கலாம். (8 பம், ஐ. 244; 7 ம. 549; 21 ம. 497; 22 பம். 590.) மேலும், அவர்களிறந்துபோகும்முன் சுவீகாரவிஷயமாய் என்னஷாத்து

கள் ஏற்படுத்தி யிருந்தார்களோ அவ்விதமாகவே தானஞ்செய்யவேண்டும். (2 பம் 377).

71. சுவீகாரம் கொடுக்க முடியாதவர்கள்.—ஸ்வீகாரகர்மங்களை செய்யக்கூடிய தேகபலம் அல்லது வியாதியினால் சக்தியற்றிருப்பது காரணமாக வேறொருவரை ஸ்வீகாரகர்மங்களைச்செய்யும்படி நியமிக்கலாம். (25 பம். 551). மதப்பிரஷ்டனுடைய பிள்ளை ஹிந்துவாய் இருந்தால் ஷை குமாரனை 1850-ம்ஷ 21-வது ஆக்டின்படி வேறொருவரைக் கொண்டு ஸ்வீகாரம் கொடுக்கலாம். கோர்ட் ஆப் வார்ட்ஸின் சம்ரக்ஷணையின் கீழ் இருக்கப்பட்ட மைனர்களை கவர்ன்மெண்டாரின் உத்திரவின்மேல் ஸ்வீகாரம் கொடுக்கலாம்.

(3) எந்தப் பிள்ளையை ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளலாம்.

72. ஸ்வீகாரப்பிள்ளையின் ஜாதியுங் கோத்திரமும்.—வேறு ஜாதிகளில் ஸ்வீகாரஞ்செய்யலாகாதென்று ஸ்மிருதிகளி லிருந்தபோதிலும் தற்கால சம்பிரதாயப்படி, தன்சுயஜாதி வகுப்பிலேயே சுவீகாரமெடுத்துக்கொள்ளவேண்டும். ஆனால், ஸ்வகோத்திரமில்லாத வேறு எந்த கோத்திரப் பிள்ளையையும் சுவீகார மெடுக்கலாமென்று வழக்கத்தில் வந்துவிட்டது. ஆனால், தர்மசாஸ்திரத்தில் ஸகோத்திரத்தில் அண்ணன் தம்பிகளின் பிள்ளைகளையாவது அவர்களில்லாவிட்டால் சமீப தாயாதிகளின் பிள்ளைகளையாவது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முறையிட்டிருக்கிறது. (15 க. ஐ, 405 ; 3 க. 587 ; 7 பம். ஐ. 70; 10 பம். 80.)

73. சாஸ்திர விருத்தாசாரங்கள்.—(1) சுவீகாரப்பிள்ளை சுவீகாரமெடுத்துக்கொண்ட தகப்பனுக்கு, ஔரஸ பிரதி பிம்பனாக அதாவது பெற்ற பிள்ளைக்குச் சமானமானவனாக விருக்கவேண்டுமென்று சவுனகர்சொன்ன வாக்கியத்தை யனுசரித்து சுவீகாரப்பிள்ளையினுடைய ஜனனதாயார் கன்னிகையாயிருந்தால் சுவீகாரஞ்செய்துகொள்ளுகிற தகப்பன் அவளைக்கல்யாணம் செய்துகொள்ளத்தகுந்தவனா யிருக்கவேண்டும். ஆகையால், தௌஹித்திரன், சகோதரி பிள்ளை, அத்தை பிள்ளை, தாயின் சகோதரியின் பிள்ளை, தம்பி, சிற்றப்பன், பெரியப்பன், மாமன் முதலானவர்களை சுவீகாரஞ் செய்துகொள்ளக்கூடாது. (1 ம. ஐ. 240 ; 2 ம. ஐ. 462 ; 7 மூ. ஐ. 250 ; 9 மூ.

இ. அ. 506; 3 பம். 273, 298; 8 அ. 1; 12 அ. 51; 11 ம 49; 26 இ. அ. 153; 21 அ. 412; 17 அ. 294.)

(2) சுவீகார மெடுத்துக்கொள்வன் தானே சுவீகாரம் போயிருக்தால் மேலே சொன்ன உறவை ஜனன குடும்பத்திலும் ஸ்வீகார குடும்பத்திலும் பார்க்கவேண்டியது. மேலே சொன்ன நியமங்கள் சூத்திரஜாதிக்குமட்டும் கிடையாது. (1858ஹூத்து மதராஸ் தீர்ப்பு 117 - வது பக்கம்.)

(3) தர்ம சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிற விஷயத்திற்கு விரோதமாக தமக்கை தங்கைகளின் பிள்ளை, சிறியதாயார் பெரிய தாயார் பிள்ளைகள், அத்தைமகன், தம்பி, சிறியதகப்பன், அம்மான் இவர்களைக்கூட சுவீகாரமெடுத்துக்கொள்கிற வழக்கத்தைத் தற்காலம் அனுஷ்டித்துவருகிறார்கள். (9 ம. 44; 7 ம. 3; 11 ம 55.)

(4) ஆகிலும் மேற்சொன்ன விதியானது பிராமணர் முதலிய உயர்ந்த ஜாதியாருக்கே எடுத்ததல்லாமல் சூத்திரர்முதலிய கீழ்ஜாதியார்களால் அனுஷ்டிக்கப்படவேண்டிய அவசியமில்லை. (2 ம. ஹை கோ. ரி. 462; 3 ம. 15; 11 ம. 49). சூத்திரர்முதலிய ஜாதியார்கள் ஸஹோதரி பிள்ளை, பெண்ணின் பிள்ளையான தௌகித்திரன், முதலானவர்களையும் தத்துவாங்கிக் கொள்ளலாம். (10 கல். 688.)

(5) சூத்திரர்களுக்குள் தாயாருடைய சகோதரியின் பிள்ளையை தத்துவாங்கிக் கொள்ளுவதும் செல்லுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (1 மது. 62.)

(6) பிராமணர் முதலிய உயர்ந்த ஜாதியாருக்குள் தௌகித்திர சுவீகாரமும் சகோதரி புத்திர சுவீகாரமும் ஹிந்துதர்ம சாஸ்திரங்களின்படி ஒப்புக்கொள்ளப்படத் தக்கதல்லவாகையால் அவைகள் சாதாரணமாய் செல்லுபடி யுள்ளதாகமாட்டாதென்று முன் தீர்மானிக்கப்பட்டிருந்தது, (1 ம. ஐ. கோ. ரி. 120; 7 ம. ஐ. கோ. ரி. 250; 24 அ. 195; 21 அ. 412.)

(7) ஆனால் அப்படிப்பட்ட சுவீகாரங்கள் சாஸ்திர விரோதமாக இருந்தாலும் பிராமணர் முதலியோர்களுக்குள்ளாகவும் வழக்

கமாய் நடந்துவருகிறதென்று பின்னிட்ட வியாச்சியங்களில் ரூபிக்கப் பட்டபடியால் வழக்கத்தை யனுசரித்து அவ்வித சுவீகாரங்களும் அவ்வழக்கம் இருக்கும் இடங்களில்செல்லத் தகுந்ததாகும் என்று இப் பால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (7 மது. 3; 9 மது. 44; 14 அல. 53;) ஆனால் அவ்விதவழக்கம் இருக்கிறதாக திருப்தியாய் ரூபிக்கப் படாமற்போனால் சாஸ்திரவிரோதமான அந்த தத்துக்கள் ஒப்புக்கொ ள்ளப்படமாட்டாது. (24 அல. 195; 17 அல. 294.)

74. எந்தப் பிள்ளைகளை சுவீகாரமேடுக்கக்கூடாதேன்பது.—ஊமை, குருடு, செவிடு அங்கஹீனம், குஷ்டரோகம் முதலிய வியாதி களால் பீடிக்கப்பட்ட பிள்ளைகளை சுவீகாரமெடுத்துக்கொள்ளக் கூடாது. மேலும், ஒருதரம் சுவீகாரமாகப்போன பிள்ளையை மறுபடி வேறொருவர் சுவீகாரமெடுக்கக்கூடாது.

75. சுவீகாரப்பிள்ளையின் வயது—(1) சுவீகாரப்பிள்ளை ஐந்து வயதுக்குட்பட்டும், ஜனனகுடும்பத்தில் சவுளகர்மம் (அதாவது குடு மிவைப்பது) நடத்தப்படாமலிருக்கவும் வேண்டுமென்று தத்தகமீமாம் சையில் சொல்லியிருக்கிறது. (2) பிரம்ம க்ஷத்திரிய வைசிய ஜாதி களில் உபநயனத்திற்கு முந்தியும், சூத்திரஜாதியில் விவாகத்திற்கு முந் தியும் பிள்ளைகளை சுவீகாரம் செய்துகொள்ளலாமென்று தத்தக சந் திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது. (3) எவ்வளவு வயதுள்ளவனு யிருந்தாலும், கல்யாணமாகி பிள்ளைகளைப் பெற்றவனுயிருந்தாலும், சுவீகாரப்பிள்ளை சுவீகார தகப்பனைக்காட்டிலும் பெரியவனுகமட்டு மில்லாதிருந்தால், அவனை சுவீகாரஞ்செய்து கொள்ளலாமென்று மயூ ககிரந்தத்தில் சொல்லியிருக்கிறது. இதை யனுசரித்தே பம்பாய் ராச்சியத்தில் எல்லா ஜாதியாரிலும் அனுஷ்டான மிருப்பதாக பம் பாய் ஹைகோர்ட்டார் தீர்ப்புகள் செய்திருக்கிறார்கள் (4 பம். ஐ. 191; 8 பம். ஐ. 67, 11 பம். ஐ. 190; 12 பம் ஐ. 364; 10 பம். 80, 83 பம். 669;)

பம்பாய் ராச்சியம் தவிர மற்றப்பிரதேசங்களில், பிரம்ம, க்ஷத் திரிய வைசிய ஜாதிகளில் தத்தஹோமம் முக்கியமானதால் உபநய னத்துக்கு முந்தியே பிள்ளையை ஸ்வீகாரம் செய்யவேண்டுமென்றும், ஸ்வீகாரதகப்பனும்பிள்ளையும் ஒரே கோத்திரமுள்ளவனுகவிருந்தால்

அந்தப்பிள்ளையை உபநயனத்திற்குப் பிறகு கூட ஸ்வீகாரஞ்செய்து கொள்ளலாமென்னும் தீர்மானஞ்செய்யப்பட்டிருக்கின்றன. (9, அல 253; 9 மத. 148; 13 மத. 128; 10 மூ. இ. அ. 279; 6 மத. 43.)

உபநயனத்துக்குப் பிறகு வேறு கோத்திரத்தைச் சேரமுடியாதென்ற கருத்துக்கொண்டே இந்த விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மேலும் சகோத்திர பிள்ளையாயிருந்தாலும் விவாகஞ்செய்வதற்கு முந்தியே ஸ்வீகாரஞ்செய்து கொள்ளவேண்டும் (13 ம. 128; 6 ம, 148.) முதல் மூன்று ஜாதிகள் தவிர நான்காவது ஜாதியாகிய சூத்திரர், விவாகத்திற்குமுன் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளவேண்டும். (2 லாகூ. 69.)

76. ஏகபுத்திர ஜேஷ்ட புத்திர சுவீகாரங்கள்.—ஏகபுத்திர ஜேஷ்டபுத்திர சுவீகாரங்கள் கொடுக்கிறவர்களுக்கும் வாங்குகிறவர்களுக்கும் மகாதோஷமுண்டாகுமென்று தர்மசாஸ்திரத்தில்சொல்லியிருந்தபோதிலும் முற்காலத்தில் அபிப்பிராயபேதமிருந்தபடியால் சில ஹைகோர்ட்டார் செல்லுமென்றும் சில ஹைகோர்ட்டார் செல்லாதென்றும் தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. மதராஸ், பம்பாய் அலகாபாத் ஹைகோர்ட்டார்கள் ஏகபுத்திர சுவீகாரம் பாவமுள்ளதாயிருந்தாலும் நடந்துபோனால் செல்லுமென்றே தீர்மானித்திருக்கிறார்கள். (22 மத 398; 21 அல 460; 24 பம் 367; 25 பம் 537) கல்கத்தா ஹைகோர்ட்டார் சூத்திரஜாதிகளில் கூட ஏகபுத்திர ஸ்வீகாரஞ்செல்லமாட்டாதென்றே தீர்ப்புச்செய்திருக்கிறார்கள். (3. ப. ஸ. கோ. தீ. 232; 1. க. ஐ. 221; 10 ஸ. 347; 2 க. 365; 3 க. 433.) ஒரு கேசில் கல்கத்தாஹைகோர்ட்டார் ஜேஷ்ட பிள்ளையிறந்தபிறகு அவன் (ஜேஷ்டபிள்ளை) பெண்சாதி ஸ்வீகாரஞ்செய்துகொண்டாள். ஸ்வீகாரபோனிருப்பதால் ஜீவித்திருக்கிற இளையபிள்ளையை ஸ்வீகாரங்கொடுக்கலாமென்று தீர்ப்பு செய்திருக்கிறார்கள். (17 க 518, 536.) பம்பாய் ஹைகோர்ட்டாரும் ஏகபுத்திர ஸ்வீகாரம் செல்லுமென்றே முதலில் தீர்மானித்திருந்தார்கள். (2 பாரோ. 75; 7பம் ஐ. அபண்டிக்ஸ். 26; 4 பம் ஐ. 191; 24 பம். 367.) ஆனால் கடைசியாக 1889-ஷுத்தில் பம்பாய் ஐகோர்ட்டு புல்பெஞ்சில் ஏகபுத்திர சுவீகாரஞ் செல்லாதென்றே நிச்சயித்து தீர்ப்புச்செய்திருக்கிறார்கள். (14 பம். 249.) ஏக புத்

திர ஸ்வீகாரஞ்செல்லுமென்றே இப்போது பிரிவிகவுன்சிலில் முடிவாக 1898ல் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. (24 பம். 473; 25 பம் 537; 21 இ. அ. 460;26. இ. அ. 113.)

அடியிற் கண்ட பிள்ளைகளை ஸ்வீகாரஞ்செய்து கொண்டதற்காக செல்லுமென்று தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. (a) பெண்சாதியின் சகோதரன், (4 ம. 15) (b) பெண்சாதியின் சகோதரன் குமாரன் (22 பம் 973.) (c) பெண்சாதியின் சகோதரியினுடைய குமாரன். (2? ம. 283.) (d) சகோதரனுடைய பேரன் (6 க. 41.) (e) சகோதரியினுடைய பிள்ளையின் பிள்ளை (பேரன்.) (f) தாயின் சகோதரியின் மகனுடையமகன். (7 ம. 548). தகப்பனின் சகோதரன்பிள்ளை. (14 ம. 459.

77. துவியா முஷியாயண சுவீகாரம்.—ஏகபுத்திரனிருக்கையில் அவனை வேறொருவனுக்கு சுவீகாரமாகக் கொடுக்கும்போது ஜனனபிதாவுக்கும் சுவீகாரப்பிதாவுக்கும் அவனே உத்தரகிரியைகளை நடத்தவேணுமென்று ஏற்பாடுசெய்துகொண்டு கொடுக்கும் சுவீகாரத்துக்கு துவியா முஷியாயணம், அதாவது இரண்டு தகப்பன்களுக்குப்பிள்ளையாயிருந்து கர்மஞ்செய்வதாம். 25 பம் 537.)

புருஷர்கள் இருவர் சேர்ந்து வேறொருவனுடைய பிள்ளையை துவியாமுஷியாயண சுவீகாரமெடுத்துக்கொள்ளக்கூடாது.

புருஷன் அனுமதியில்லாமல் விதவை ஏகபுத்திரனை துவியா முஷியாயண சுவிகாரமாகக் கொடுக்கக்கூடாது. (4 பம். ஸ. 320; 12 பம். ஐ. 364; 6 பம். 524.)

துவியாமுஷியாயண சுவீகாரம், அநித்யை, நித்யை என்று இரண்டு விதம். அதாவது ஸ்வீகாரப்பிள்ளை வேறு கோத்திரமாய்இருந்து தான் பிறந்தகுடும்பத்தில் சௌளகர்மம் நடந்து ஸ்வீகாரமாகி ஜனனதகப்பனுக்கும், ஸ்விகார தகப்பனுக்கும் உத்தரகிரியைகள் செய்கிறவனுக்கு அநித்ய த்வியாமுஷியாயண னென்றும், ஜனனதகப்பனுக்கும், தத்து தகப்பனுக்கும், பிள்ளையாயிருக்கவேண்டு மென்கிற நியந்தனையின் பேரில் தத்தாகப்போய் இருதகப்பனுக்கும் உத்தரகிரியைகளைச்செய்வதற்கு நித்யை என்றும் பெயர். அநித்ய ஸ்வீகாரத்தில் ஸ்வீகாரப்பிள்ளை இரண்டுகுடும்பசொத்துக்கும் வார்சானாலும், அவன் சந்ததிகள், ஸ்வீகாரத்தகப்பனின் ஜனன குடும்பத்தையே சேருகிறார்கள். நித்திய ஸ்வீகாரப்பிள்ளைக்கு அவன் சொந்ததாய் வார்சாகிறாள். (26 அல 472) நித்யன் தத்து தகப்பனுக்கு வார்சில்லாவிட்டால்

அவன் சொத்தை யடைகிறன். இந்த வழக்கம் பம்பாய் லிங்காயத்து களுக்குள்ளும், மலையாள நம்பூதரிகளுக்குள்ளும் அனுஷ்டானத்தில் லிருக்கிறது. (21 பம் 105 ; 11 மத. 167.)

(4) ஸ்வீகார கர்மங்கள்.

78. சுவீகாரதானம், சுவீகார பரிக்கிரஹம்.—(1) சுவீகாரத்துக்குச் செய்யவேண்டிய பிரதம கிரியைகளைச் சாஸ்திரோக்தமாய் முடித்தபிறகு சுவீகாரப்பிள்ளையின் பாத்தியஸ்தனுல் கைமேலாக தானம் செய்யப்பட்டு, சுவீகாரம் வாங்கிக்கொள்ளுகிறவனுல் பரிக்கிரகம் செய்யவேண்டியது. அப்போது சொல்லவேண்டிய மந்திரத்தின் தாத்பரியத்தை இங்கு விவரித்திருக்கிறது. தானம் வாங்குகிறவன் சுவீகாரம் கொடுக்கிறவனிடம் போய் பிள்ளையைத் தனக்கு சுவீகாரமாகக் கொடுக்கவேணுமென்று கேட்க அவன் கொடுத்தேனென்று சொல்லி தானம்கொடுக்க, சுவீகார பிதா பிள்ளையைப் பார்த்து “நான் உன்னை தானம் வாங்கிக்கொண்டேன், மதாசார சாஸ்திரப்படி கிரியைகள் செய்வதற்கும், வம்ச விருத்திக்காகவும் பெற்றுக்கொண்டேன், என்று சுவிகரிக்கவேண்டியது. ஆனல், இது அங்கங்குள்ள வழக்கப்படி செய்தால் போதுமானது. (6 க. 381 ; 11 ம. 5 ; 13 ம. 214 ; 7 இ. அ. 24.)

(2) தானமில்லாமல் பரிக்கிரகம் செல்லமாட்டாது. தானபரிக்கிரஹ விஷயத்தில் அந்தந்த தேசத்தில் நடந்துவருகிற வழக்கமே பிரதானமென்று கோர்ட்டார் ஒப்புக்கொள்ளுகிறர்கள்.

(3) சுவீகார மெடுத்துக் கொள்வதாக வெகுநாளாக பிள்ளையை வளர்த்துக் கடைசியாக தான பரிக்கிரஹ மில்லாவிட்டால் சுவீகாரம் செல்லாது. ஸ்வீகாரம் கொடுக்கிறதாகவும், எடுத்துக்கொள்ளுகிறதாகவும் தஸ்தாவேஜுகள் ஏற்பட்டிருந்து, பிறகு தானமும் பரிக்கிரஹமும் ஏற்படாவிட்டால் தத்து செல்லாது. (6 க. 381 ; 13 ம. 214 ; 7 இ. அ. 250 ; 19 க. 452.)

78. தத்தஹோமம்.—சுவீகாரம் நிறைவேறுவதற்கு தத்தஹோமம் முக்கியமானது. பிரம்ம க்ஷத்திரிய வைசியர்களுக்கு மட்டும் தத்தஹோமம் அவசியமென்றும், சூத்திரர்கள் வைதிக கர்மங்களுக

குப் பாத்திரர் இல்லாததால் அவர்களுக்குந் தத்தஹோமம் அநுவசியமென்றும் சொல்லித் தீர்ப்புச்செய்திருக்கிறார்கள். (13 க. ஐ. 401 ; 5 க. 770 ; 6 க. 381 ; 5 ம. 358 ; 7 இ. அ. 250; 7 ம. 548; 13 ம. 214 ; 11 பம். 381 ; 42 இ. அ. 135.)

ஆனால், தேசாசாரப்படி சூத்திர ஜாதிகளில்கூட தத்தஹோமஞ் செய்து தான பரிக்கிரகஞ்செய்கிற வழக்கமிருந்தால் அந்த வழக்கப்படியே தத்த ஹோமஞ்செய்யாமல் தான பரிக்கிரகமட்டுஞ் செய்தால் செல்லமாட்டாது. (6 க. 381 ; 13 ம. 214.)

பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, ஜாதியர்களில் ஸ்வீகாரபிள்ளை ஸ்வகோத்திரனாகவாவது, தௌகித்திரனாக (பெண்ணின் பிள்ளை) வாவதிருந்தால் தத்தஹோமம் வேண்டியதில்லையென்று இப்போது எல்லா கோர்ட்டாராலும் தீர்ப்பு செய்யப்பட்டிருக்கின்றன. (11 ம. 5 ; 24 பம். 218 ; 13 ம. 214.) தத்துத்தகப்ப னிறந்தபிறகு அவன் விதவை தத்த ஹோமம்செய்து பிறகு தத்து வாங்கிக்கொண்டால் செல்லும். (21 ம. 214).

79. தீட்டில் சுவீகாரம்.—வேத மந்திரங்களைத் தீட்டில் சொல்லக் கூடாததால் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் முதல் மூன்று ஜாதியார் சுவீகார மெடுக்கக்கூடாது. (13 ம. 222 ; 19 ம. 397.) ஆனால், சூத்திர ஜாதிகளில் சுவீகாரமெடுக்க வேத மந்திர மூலமான கிரியைகளில்லாததால் தீட்டில்கூட அவர்கள் சுவீகார மெடுத்துக்கொள்ளலாம். (5 ம. 353; 9 மூ. இ. அ. 506; 22 பம். 590; 27 மத.538.)

(5) தள்ளிவிடப்பட்ட சுவீகாரங்கள்.

80. செல்லாத சுவீகாரங்கள்.—சுவீகாரங்கொடுக்க பாத்தியமில்லாதவர்களால் கொடுத்த சுவிகாரமும், சுவீகாரம் வாங்க பாத்தியமில்லாதவர்களால் ஏற்றுக்கொண்ட சுவீகாரமும், சுவீகாரமாக எடுத்துக்கொள்ளக்கூடாத பிள்ளைகளின் சுவீகாரங்களும், சாஸ்திரவிருத்தமான சுவீகாரங்களும் செல்லமாட்டாது. ஆனால், அந்தந்த தேசாசாரப்படி சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிற சில அம்சங்களை விட்டிருந்தாலும் பாதகமில்லை. (12 பம். ஐ. 398; 10 ப. ஐ. 86 ; 3 க. 601;) அன்னிய கோத்திர பிள்ளையையாவது, ஐந்து வயதிற்கு மேற்பட்ட

பிள்ளையாவது ஸ்வீகாரமெடுத்தல் சாஸ்திர விரோதமானாலும் செல்லக்கூடியது. (9 அ. 354 ; 3 க. 587.)

81. சுவீகார சம்பந்தமான தாவாவுக்கு காலமும் பத்திரகிரயமும்.—(1) சுவீகாரத்தை ஏற்றுக்கொள்ளாதவன் ஸ்வீகாரம் எடுத்த சங்கதி அவனுக்குத் தெரிந்தது முதல் 6-வருஷத்துக்குள்ளும், சுவீகாரத்தை உறுதிப்படுத்த இஷ்டமுள்ளவன், சுவிகாரப்பிள்ளையின் பாத்தியத்துக்கு ஆக்ஷேபனை அல்லது கெடுதியுண்டான நாள்முதல் 6 வருஷத்துக்குள்ளும் தாவாசெய்யவேண்டும். மேலேகண்ட தாவாக்களுக்கு கோர்ட்டுக் சட்டணம். ரூ. 10.

(2) சுவீகாரத்தை ஸ்தாபிக்க அல்லது ஆக்ஷேபிக்கமட்டுங்காலாவதி ஆறுவருஷமேயொழிய, ஸ்தாவரசொத்துக்கள் விஷயமாய்கொண்டுவரப்படும் தாவாக்களுக்கு எல்லாவிஷயம்போல 12 வருஷகாலாவதிக்குட்பட்டிருக்கின்றன. (8. அ. 644 ; 14 க. 401).

82. சுவிகாரவிஷயமாய் தீர்ப்புகள்.—சுவிகாரத்தைக் கோர்ட்டார் ஒருதாவாவில் உறுதிப்படுத்தினால், அந்ததாவாவில்சேராமலிருந்தவர்கள் மறுபடியும்தாவாசெய்து ருஜூமூலமாய் சுவிகாரத்தை ரத்துசெய்யலாம். (2 ம. ஐ. 276 ; 3 ம. ஐ. 217 ; 14 மு. இ. அ- 367 ; 1. க. 289.)

(6) சுவீகாரத்தை உறுதிப்படுத்துவது.

83. சுவீகார விஷயத்தில் பந்துக்கள் சம்மதம்.—(1) வெகுகாலத்துக்குமுன் நடந்திருந்த சுவீகாரத்தை பந்துக்கள் ஆட்சேபிக்காமலே விட்டு காலதாமதஞ்செய்தால், சுவிகாரத்தைக் கோர்ட்டார் உறுதிப்படுத்துவார்கள். (14. மு. இ. அ, 67; 7 பம். ஐ. அபெண்டிக்ஸ் 33,) சொத்து பாத்தியமுள்ளவர்கள் ஒருவனுக்கு ஏற்பட்டிருக்கும் சுவீகாரத்தை ஒப்புக்கொண்டு அதற்கு உடந்தையாயுமிருந்தால் அந்த சுவீகாரம்செல்லும்; ஆனால் மேலேகண்டசுவீகாரங்கள் எல்லாராலும் சாஸ்திர விருத்தமானதென்று நம்பக்கூடியதாயிருந்தால், எந்தபந்துக்களால் ஒப்புக்கொள்ளப்பட்டதாயிருந்தாலும் செல்லாது. (2 ம. ஐ. 114, 270, 428; 7 ம. ஐ. 250; 11 பம். ஐ. 190; 11 பம். 381, 396; 2 அ. 366; 14 மு. இ. அ. 77; 7 ம. 3.)

(2) மேலும் குடும்பத்திலுள்ளவர்களாலும், அண்டை அயல் வீட்டிலுள்ளவர்களாலும் ஒருவனை தத்துப்பிள்ளையென்று அழைக்கப் பட்டுவந்து அதற்குத் தகுந்தாற்போல பல நடவடிக்கைகள் நடத்தப் பட்டிருந்தால் அவைகள் சுவிகாரத்தை ருசுப்படுத்தத் தகுந்த சாட்சி யாகும்.

ஆனால் சுவீகார விஷயமாய் ஒரு வியாச்சியத்தில் செய்யப்பட்ட தீர்ப்பானது அதே விஷயமான மற்றொரு வியாச்சியத்தில் சாட்சிய மாக உபயோகப்படுத்தலாம். (9 மூ. இ. அ. 287.)

84. சுவீகார ருசுபளு —சுவீகாரம் செய்துகொண்டதாக யார்சொல்லுகிறார்களோ அவர்களே அதை ருஜுப்படுத்தவேண்டும். (3 க. ஐ. 146) அனேகமாய் சுவீகாரமெடுத்துக்கொண்டவன் கிழவனும், ரோகஸ்தனும், தாயாதிகளிடத்தில் விரோதமுள்ளவனுயிருப்பதைக்கொண்டும் வேறு மற்றகாரணங்களைக்கொண்டும்தான் சுவீகாரம் நடந்திருக்குமென்று கோர்ட்டார் ஊகிக்கிறார்கள். சுவீகாரபிதா திடகாத்திரமுள்ளவன் சந்தானமுண்டாகக்கூடிய நிலைமையிலிருந்தான் என்று ருசுவற் பட்டால் சந்தேகத்திற்கிடமுண்டு. (4 மூ. இ. அ. 414; 7 மூ. இ. அ. 64 ; 1 ம. 69 ; 15 ஸ. 548 ; 2 பம். ஐ. 21; 1857-ம்ஷு த்து மதறாஸ் தீர்ப்புகள் 53.) ஒருவருக்குந்தெரியாமல் இரகசியமாக எடுத்துக் கொண்ட தத்து செல்லாது.

(7) ஸ்வீகாரத்தால் ஏற்பட்ட பிரயோசனம்.

85. சுவீகாரப்பிள்ளைக்கு ஜனன குடும்ப பாத்தியமில்லை.— நியாயமாய் கொடுக்கப்பட்ட ஒரு சுவீகாரப்பிள்ளை தன் ஜனன குடும்ப கோத்திரம் சொத்து வார்சு பாத்தியம் முதலிய சகலத்தையும் விட்டு நீங்கி, சுவீகாரம்போன கோத்திரத்தை யடைந்து சுவீகார தகப்பனுக்கு சகல வைதிக சம்பந்தமான கிரியைகளைச்செய்து அவனுடைய சொத்தையும் அடையவேண்டியது. சுவிகார தகப்பனும் சுவிகாரப் பிள்ளையை தன் வயிற்றிற்பிறந்த பிள்ளையைப்போல போஷித்து உபநயன முதலிய கிரியைகளைச் செய்யவேண்டியது. (1 ம. ஐ. கோ. ரி. 363 ; 26 ம. 394.) ஆனால், சுவீகாரப்பிள்ளைக்கு ஜனனகுடும்பத்தில் சகலவிதமான பாத்தியமும் போனபோதிலும் அந்தக் குடும்பத்திலிருந்தால் யாரையாரை விவாகம் அல்லது தத்து செய்துகொள்ளக்

கூடாதோ அவர்களை சுவீகாரம் போனபிறகும் விவாகம் அல்லது ஸ்வீகாரஞ்செய்யக்கூடாது.

86. ஸ்வீகாரன் ஸ்வீகார குடும்பத்தின் முன்னோர்களுக்கும் வார்சாவது.—ஸ்வீகாரன் ஸ்வீகாரமெடுத்துக் கொண்டவனல்லாமல் சுவீகாரதகப்பனின் பாட்டன் முதலிய முன்னோர்களுக்கும், பக்க தாயாதிகளான சிற்றப்பன் பெரியப்பன் முதலியவர்களுக்கும், சுவீகாரத்தாயார் அவள் சொத்துக்களுக்கும் அந்தத்தாயாரின் தகப்பனுக்கு தௌகித்திரனாகவும் மற்ற அவளுடைய பந்துக்களுக்கும் வார்சாக ஏற்பட்டு சொத்தையடைய பாத்தியமுள்ளவனாகிறான், (7 ம. 255; 33 கல் 947; 46 பம் 541; 8. இ. அ. 229; 6 கல், 256; 1 அ. 256; 9 க. 70; 10 க. 232; 10 இ. அ. 137) துவியா முஷ்யாயண ரூபமாக சுவீகாரம் செய்தால் அந்தப்புத்திரனுக்கு உபயகுடும்பத்திலும் சொத்து பாத்தியமுண்டு. இந்தவழக்கம் கயாவுக்குச்சமீபமான தேசங்களிலும், மலையாளத்தில் நம்பூதரிஜாதியினும் நடந்துவருகிறது. மற்றவிடங்களில் கிடையாது. (1 ம. ஐ. 180; 1858௵ ம. தீ. 117; 11 ம 167, 168.)

87. ஏற்பட்ட சுவீகாரம் ரத்தாகமாட்டாது.—சாஸ்திரப்படி கிரமமாக நடந்த சுவீகாரம் எந்தவிதத்திலும் தள்ளமுடியாது. சுவீகாரப்பிள்ளை சுவீகாரகுடும்பத்தின் பாத்தியதையைத்தானே தள்ளிவிடலாமென்றிருந்தாலும் அவனுக்கு பிறகு ஜனன குடும்பத்தில் பாத்தியமுண்டாகமாட்டாது, (2. அ. 366; 2. பாரோ 666; 2 ம. ஐ 144, 270, 428; 19 பம் 239. சாட்சியசட்டம் 115-வது பிரிவு.)

விலை கொடுத்து வாங்கி தத்தஹோமம் முதலியது செய்த பிள்ளை சுவீகாரஞ்செய்துகொண்ட பிறகு, ஸ்வீகார தகப்பனே விலை கொடுத்து வாங்கிய காரணத்தால் தத்து ரத்தாக வேண்டுமென்று சொன்னாலும் செல்லாது. (29 ம. 161; 46 பம் 908.)

88. சுவீகாரப் பிள்ளையின் வார்சுபாத்தியம்.—ஒரு குடும்பத்தில் ஔரஸபுத்திரன் (பெற்றபிள்ளை) என்னவார்சு பாத்தியதைகளை அடைவானோ அந்த பாத்தியதைகள் சுவீகாரப்பிள்ளைக்குமுண்டு. (6 க 289, 5 க. 615; 1 பம். ஸ. 209; 9 ஸ. 423; 1859௵ பம். ஸ. தீ. 1091; 3 ஸ. 49; 1 அ 259; 6 க 236; 10 க. 232; 9 க. 70.)

புருஷனிறந்த பிறகு தன் புருஷன் நற்கதிக்காக ஒரு விதவை ஸ்வீகாரமெடுத்துக்கொண்டாள். பிறகு அவனுடன் மனஸ்தாபப்பட்டு சொத்துக்கு தன் ஸ்வாதீனத்தில் வைத்துக்கொண்டு தன் பேரில் பட்டாவும் செய்துகொண்டு 10-வருஷகாலமாக அனுபவித்து வந்தாள். பிறகு தத்து புத்திரன் சொத்து தனக்குக்கிடைக்க வேண்டுமென்று வழக்கிட்டதில், சொத்து ஸ்வாதீனமான 6-வருஷத்துக்குள் தாவா செய்யாததால் காலாவதி ஆய்விட்டதென்று ஆக்ஷேபம் செய்யப்பட்டது. தத்து ஸ்தாபிதமாக வழக்கு கொண்டு வரவில்லையென்றும், சொத்து ஸ்வாதீனமாக வேண்டுமென்று வழக்குச் செய்திருப்பதால் அதற்கு 12-வருஷம் காலாவதியுண்டென்றும் சொல்லி தீர்மானம் செய்தார்கள். (26 பு. 291; 32. பம் 7.)

89. ஸ்வீகாரத்துக்குப்பிறகு ஒளரஸபுத்திரன் பிறந்தால் ஸ்வீகாரப்பிள்ளையின் பாகம்.—(1) ஸ்வீகாரத்துக்குப்பிறகு ஒருவேளை ஒளரஸன் (சொந்தப்பிள்ளை) பிறந்தால் ஸ்வீகாரம் ரத்தாகமாட்டாது. ஆனால் ஸ்வீகாரனைக்காட்டிலும் ஒளரஸனுக்கு குடும்பத்தில் அதிக அந்தஸ்தும் பாத்தியதையுமுண்டு. ஸ்வீகாரப்பிள்ளைக்கும் ஒளரஸப்பிள்ளைக்கும் பாகம் கொடுப்பதைப்பற்றி அந்தந்த தேசங்களில் வெவ்வேறுவிதமாய் சாஸ்திரங்களுக்கு அர்த்தமெழுதி அம்மாதிரியே வழக்கத்தில் ஆசரித்து வருகிறார்கள். பங்காளாதேசத்தில் ஸ்வீகாரப்பிள்ளையைக்காட்டிலும் ஒளரஸப்பிள்ளைகளுக்கு இரண்டுமடங்கும், காசிதேசத்தில் ஒளரஸப்பிள்ளைகளுக்கு 3-மடங்கும், மதராஸ், பம்பாய் இராச்சியங்களில் ஒளரஸப்பிள்ளைகளுக்கு 4-மடங்கும் பாகித்துக்கொடுப்பது வழக்கமாயிருக்கிறது. பம்பாய் மதராஸ் ராச்சியங்களிலுள்ள வழக்கப்படி ஒரு ஒளரஸனும் ஒரு ஸ்வீகாரனுமிருந்தால் தகப்பன்சொத்தை 5-பாகம் போட்டு ஒருபாகம் தத்தனுக்கும், நான்குபாகம் ஒளரஸனுக்குஞ்சேரும். இரண்டு ஒளரஸன் பிறந்துவிட்டால் சொத்தை 9 பாகமாக்கி ஒளரஸ பிள்ளைகள் ஒவ்வொருவரும் நான்குபாகமும், தத்தன் ஒருபாகமும் அடையவேண்டும். இதுபோலவேதான் மற்றதேசவழக்கப்படியும் பாகிக்கவேண்டும். (9 ஐ. 423; 1 ம. ஐ. 45; 16 பம். 327; 17 பம். 100; 7 ம. 253.)

(2) பிரம்ம, க்ஷத்திரிய வைசியஜாதிகளில்மட்டும் ஒளரஸனுக்கும் ஸ்வீகாரனுக்கும் பாரவிஷயமாய் வித்தியாசமேற்பட்டிருந்தாலும்

சூத்திரஜாதிகளில் அவ்வித வித்தியாசமில்லை. ஸ்வீகாரனும் ஔரஸனும் சமபாகமாகத்தான் பங்கிட்டுக்கொள்ளவேண்டும். (44. மத. 656.)

(3) ஆனால், பாகிக்கக்கூடாத ஜமீன் விஷயத்திலே, ஸ்வீகாரபுத்திரனைக்காட்டிலும் ஔரஸபுத்திரன் ஜமீன்சொத்து முழுவதையும், ஏகஸ்வதந்திரமாக அடைகிறான். ஸ்வீகாரன் ஜமீன்சொத்தில் ஜீவனாம்சத்துக்குமட்டும் பாத்தியஸ்தனாகிறான். (17ம. 435.)

90. ஔரஸனிறந்தால் ஸ்வீகாரப்பிள்ளையின் பாத்தியம்.—ஔரஸப்பிள்ளை சந்ததியின்றி யிறந்துபோனால், அவனுடைய சொத்துக்களெல்லாம் ஸ்வீகாரபுத்திரனைச் சேர்ந்துவிடும். (1ம. ஜ. 49.) சொத்துப்பிரிவினையானபிறகு இறந்துபோன ஔரஸனுக்குப் பெண்ணிருக்கும் பட்சத்தில் அந்தப்பெண்ணுக்குச் சொத்து சேர்ந்துவிடும்.

91. (1) துவியா முஷியாயணன் ஔரஸன்.—துவியா முஷியாயணவிதமாய் ஸ்வீகாரஞ்செய்துகொள்ளப்பட்டவன் உபயதகப்பனுடைய சொத்துக்கும் பாத்தியஸ்தனாயிருக்கிறான். இவனுடைய ஜனனதகப்பனுக்கு வேறொருபிள்ளை பிறந்தால் துவியாமுஷியாயணனுக்கு அந்தப்பிள்ளையின்பாகத்தில் பாதிகிடைக்கும். அதாவது சொத்தை மூன்று பாகம்போட்டு சொந்தபிள்ளைக்கு இரண்டுபாகமும் துவியாமுஷியாயணனுக்கு மூன்றில் ஒருபாகமும் கிடைக்குமென்று தத்தகசந்திரிகையில் சொல்லப்பட்டிருக்கிறது.

(2) துவியா முஷியாயணனுடைய ஸ்வீகாரதகப்பனுக்கு ஔரஸபிள்ளை பிறந்தால், ஸ்வீகார பிள்ளைக்கு என்ன பாகங்கிடைக்குமென்று 89-வது பாராவில் சொல்லப்பட்டிருக்கிறதோ அந்த பாகத்தில் பாதிதான் துவியாமுஷியாயணனுக்குக் கிடைக்கும். அதாவது:—ஒரு ஔரஸனிருந்தால் பங்காளராஜ்ஜியத்தில் 6-ல் ஒருபாகமும், மதராஸ், பம்பாய் தேசங்களில் 10-ல் ஒருபாகமும், காசிதேசத்தில் 8-ல் ஒருபாகமும் துவியா முஷியாயணனுக்குக் கிடைக்கும்.

(3) உபய குடும்பங்களிலும் ஔரஸபுத்திரனுண்டானால், துவியாமுஷியாயணனுக்கு ஜனனகுடும்பத்தில் பாகமே கிடையாதென்றும், ஸ்வீகார குடும்பத்தில் அந்தந்த தேசத்தில் சாதாரணமாய்ஸ்வீகாரனுக்கு கிடைக்கவேண்டிய பாகங்கிடைக்குமென்று மயூகநிபந்தத்தில் சொல்லியிருக்கிறது.

92. (1) ஸ்வீகாரத்துக்குப் பிறகுதான் ஸ்வீகாரனுக்கு சோத்துச் சேருமேன்பது:—ஸ்வீகாராதிகாரம்பெற்ற விதவை உடனே ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளவேண்டுமென்கிற கட்டாயமில்லை. எவ்வளவு நாள் கழிந்தபிறகுகூட ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளலாமென்று முன் சொல்லியிருக்கிறோம். அவள் ஸ்வீகாரஞ் செய்துகொள்ளுகிற வரையில் அவள் புருஷன் சொத்து அவனிறந்த நிமிஷமே அவனுடைய சமீப வார்சு யாரோ அந்த வார்சுக்குச் சேர்ந்து விடும். அவள் ஸ்வீகாரஞ்செய்துகொண்டால் அந்த சொத்து உடனே ஸ்வீகாரப் பிள்ளைக்குச் சேர்ந்துவிடும். ஆனால், அப்படிப்பட்ட சொத்து இறந்துபோனவனுடைய வார்சுக்குச் சேர்ந்து, பிறகு அந்த வார்சின் வார்சுக்குச் சேர்ந்துவிட்டால், அதற்குமேல் ஸ்வீகாரஞ் செய்துகொண்ட பிள்ளைக்கு சொத்துச்சேராது. (10 மு. இ. அ. 279; 10 ம. 205; 17 க. 122; 26 பம். 526; 41 மத 855; 45 இ. அ. 156; 46 மத. 423.)

(2) புருஷனிறந்த பிறகு வார்சுபாத்தியமாக சொத்தையடைந்த விதவை புருஷன் அநுமதிகொடுத்தபடி ஸ்வீகாரமெடுத்துக்கொண்டால் சொத்து முழுவதும் ஸ்வீகாரனுக்குச் சேர்ந்துவிடுவதால் ஜீவனும்சத்துக்கு மட்டும் அவள் பாத்தியமுள்ளவளாகிறாள். (3 மு. இ. அ. 229; 1 ம. 174; 7 பம். 225; 11 பம். 281, 397.) இறந்தவனுக்கு இரண்டு மூன்று விதவைகளிருந்து அவர்களுக்கு அவன் சொத்து சேர்ந்திருக்கும் பட்சத்தில் அவர்களில் ஸ்வீகாராதிகாரம் பெற்றவள் ஸ்வீகாரமெடுத்துக்கொண்டவுடன் அவர்களுக்குக் கிடைத்திருந்த சொத்தெல்லாம் ஸ்வீகாரனைச் சேர்ந்துவிடும். (5 பம். ஐ. 181; 28 மத. 315; 18 கல். 69.) ஆனால், ஸ்ரீதனமாய்க் கிடைத்த சொத்துக்கள் ஸ்வீகாரனைச்சேராது.

உதாரணம்.—(1) A, B என்கிற இரண்டு அவிபக்த சகோதரர்களில், A என்பவன் தன் பெண்சாதிக்கு ஸ்வீகாராதிகாரங் கொடுத்து விட்டு இறந்து போனான். அவனிறந்ததும் அவன் சொத்துக்கு B என்பவன் வார்சாகி, A என்பவன் விதவைக்கு ஜீவனும்சபாத்தியமட்டுமுண்டாகிறது. ஆனால் அவள் ஸ்வீகாரஞ் செய்துகொண்டால் ஸ்வீகாரன் B. என்பவனோடு குடும்ப சொத்துக்கெல்லாம் கூட்டு பாகஸ்தனாகிறான். (18 கல் 385.)

(2) ஒருவேளை விதவை சுவீகாரமெடுப்பதற்குள் B என்பவனிறந்துபோய் சொத்து B. என்பவனுடைய வார்சுக்கு கிரமமாய்ச்சேர்ந்திருக்கு அவள்

சுவீகாரஞ் செய்துகொண்டால், அந்த பிள்ளைக்கு சொத்து கிடைக்கமாட்டாது. (14 பம். 463, 505; 15 பம் 565; 7 க 293; 12 க. 18.)

(3) சென்னப்பட்டணம் இராஜதானியில் பாகஞ்செய்யக்கூடாத ஒரு ஜமீனில் A. என்பவன் தன்பெண்ஜாதிக்கு ஸ்வீகாராதிகாரம் கொடுத்து விட்டு இறந்து போனான். உடனே A என்பவனுடைய சொத்து அவனுடைய அவிபக்த சகோதரனான B என்பவனுக்குச் சேர்ந்தது. பிறகு A என்பவனுடைய விதவை ஸ்வீகாரமெடுத்துக்கொண்டாள். உடனே ஜமீன்முழுவதும் சுவீகாரப்பிள்ளைக்கு சேர்ந்தது. (1 ம. 69.)

(4) A. என்பவன் விவாகமில்லாமலே இறந்து போனான். அப்போது அவனுடைய சபதநீகமாதா உயிருடனிருந்தாலும் அவளுக்கு நியாயப்படி அவன் சொத்துச்சேராமல் அவனுடைய தூரதாயாதிகளான வார்சுகளுக்குச் சேர்ந்து விடும். அதன் பிறகு அவளால் எடுத்துக்கொண்ட ஸ்விகாரப்பிள்ளைக்கும் சொத்துச்சேராது. (8. ம ஐ. 108; 12 க. 216; 1 பம். 463 ; 9 பம். 94.)

(5) மேற்சொன்ன நான்காவது உதாரணத்தில் A. என்பவனிறந்து போனபோது அவனைப்பெற்றதாய் உயிருடனிருந்து அவளுக்கு சொத்து சேர்ந்தபிறகு அவள் ஸ்வீகாரமெடுத்துக்கொண்டால் அந்த தத்து பிள்ளைக்கு சொத்து பாத்தியமுண்டாகிறது (1 ம. 174).

93. ஸ்வீகாரத்துக்கு முன் சொத்தின் துர்வினியோகம்.—சுவீகாரப்பிள்ளைக்குச் சேரவேண்டிய சொத்தின் பாத்தியம் அவன் சுவீகாரமாகப்போன நாள் முதலுண்டாகிறது. (7 மு. இ. அ. 169.) அதற்கு முன் அந்தச்சொத்தை வைத்திருந்தவர்கள் கிரமமான நடவடிக்கையில் சொத்தை நடத்திவிருந்தால் அந்த நடவடிக்கையை ரத்து செய்ய சுவீகாரப்பிள்ளைக் கதிகாரமில்லை. (5 பம். 630.) ஆனால், அவருக்குள்ள பாத்தியதையை மீறி சொத்தைப்பற்றி நடத்தியிருந்தால் ஸ்வீகாரப்பிள்ளை அவைகளை ஆக்ஷேபித்து தன் வசப்படுத்திக் கொள்ளலாம். (5 க. 251 ; 4 ம. 160 ; 8 மு. இ. அ. 443; 11 பம். 609, 614 ; 24 ஸ. 183 ; 16 க. 140.) ஆனால், சுவீகாரத்துக்கு முந்தி தாயால்செய்யப்பட்ட துர்வினியோகம், அவள் அடுத்த வாரிசின் சம்மதியின்பேரில் செய்திருந்தாலும், சுவீகாரன் உடனே ஆட்சேபித்து தத்துத்தாயால் பாராதீனஞ்செய்யப்பட்ட சொத்துக்களைத் திருப்பியடையலாம். (11 பம். 609 ; 11 பம். 809 ; 33 பம். 88 ; 26 ம. 143 ; 41 மத 75.)

உதாரணம்.—ஒரு மிட்டாதாரருடைய சொத்து ஸ்வீகாரப்பிள்ளை ஏற்படுவதற்குமுன் அவன் சிறியதகப்பன் சுவாதீனத்திலிருந்தது; அந்த சொத்தின் வரவுசெலவு கணக்குகளைக் காட்ட அந்தச்சிறிய தகப்பன் கட்டுப்பட்டவனல்ல. ஆனால், சொத்தை விற்கவாவது வேறே துர்வினியோகமாவது செய்திருக்கக்கூடாது. (1 ம. 69.)

94. இறந்தவன் செய்யும் ஷரத்துகள்.—(1) பெண்சாதிக்கு சுவீகாராதிகாரம் கொடுத்தபோது, அவள் ஜீவதசைவரை சொத்தை முழுவதையுமாவது யாதொரு பாகத்தையாவது அனுபவித்து அதற்குப் பிறகு சுவிகார புத்திரனுக்குச் சேருவதென்று புருஷன் எழுதிவைத்துப் போயிருந்தால் அதன்படியே செல்லும். (1855-ஞ பம். ஸ. 139; 1859-ம் ஞ பம். ஸ. 162; 5 ச. 357; 8 ச. 357.)

(2) சில சொத்துவிஷயமாய் ஒருவன் ஜனன பிதாவோடு உடன்படிக்கை செய்துகொண்டு அவன் குமாரனை மீதிசொத்துக்கு மட்டும் சுவீகாரம் எடுத்துக்கொண்டால் அந்த உடன்படிக்கைப்படி சுவீகார தகப்பனால் வினியோகஞ்செய்த சிலசொத்து ஸ்வீகாரப் பிள்ளைக்குச் சேராது. (12 ம. 490; 14 ம. 172; 19 பம். ஐ. 428.)

(3) ஆனால், ஒருவனுக்கிருந்த சொத்தெல்லாம் இதாரனுக்குச் சேரும்படி உயிலெழுதி வைத்துவிட்டுப் பிறகு சுவிகாரஞ்செய்துகொண்டால் அந்த உயில் ரத்தாய்விடும். (6 பம். ஐ. 230; 6 மூ. இ. அ. 320; 12 பம். 105; 8 மத. 89.)

(4) சுவீகாரத்தாயார் தன்னுடைய வயதுவராத சுவீகாரப் பிள்ளையோடாவது அல்லது சுவீகாரத்துக்கு முன் ஜனன பிதா முதலிய பந்துக்களோடாவது சொத்து விஷயமாய்ச் செய்துகொள்ளும் உடன்படிக்கை நியாயமானதாயும், கிரமமாயும் இருக்கவேண்டும். ஆனால், அப்படிப்பட்ட உடன்படிக்கை ஸ்வீகாரனுடைய நன்மைக்காகவே இருக்கவேண்டும். (27 மத. 577; 11 பம். 381; 40 அல. 692.) அவ்வித உடன்படிக்கையை ஸ்விகாரப்பிள்ளை மேஜரான பிறகு ஆட்சேபிக்காமல் இருந்தால் செல்லும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

95. சுவீகார விஷயமாய்க் குடும்பத்தார் ஏற்பாடு.—ஒரு குடும்பத்தில் எவரும் தத்து செய்துகொள்ளக்கூடாதென்று ஒருவருக்கொருவர் உடன்படிக்கை செய்துகொண்டால் அவ்வுடன்படிக்கை

செல்லாது. அவ்வுடன்படிக்கைக்கு விரோதமாய் செய்யப்பட்ட சுவிகாரமும் ரத்தாகமாட்டாது. (9 ம. 499.)

96. சுவீகாரமில்லாமல் பாத்தியமில்லை.—இன்னாருடைய குமாரன் இன்னானை சுவிகாரமெடுத்துக்கொண்டு சொத்துக்களை யெல்லாம் அவனுக்குக் கொடுவென்று புருஷன் சொல்லிப் போயிருந்தபடி சுவிகாரஞ் செய்யாமல் அவன் விதவை சும்மாயிருந்தால், அப்படிக் குறித்துச்சொன்ன பிள்ளைக்கு எவ்வித பாத்தியமும் கிடையாது. (12 பம் 202; 6 ம. 355; க. 463; 12 க. 688.)

97. சுவீகாரம் ரத்தானால் ஜனனகுடும்பத்தில் சேரலாம்.—சுவீகாரம் தர்மசாஸ்திரப்படி செய்யப்படவில்லை யென்றாவது, கிரமமாய் செய்யபடவில்லை யென்றாவது ரத்தாய்விட்டால் அந்தப்பிள்ளை ஜனன குடும்பத்தில் சேரலாமென்று விதித்திருக்கிறது. (1 ம. ஐ. கோ 363; 12 பம். ஐ. கோ ரி. 397; 45 பம். 829; 37 மத 529.) ஆனால், தற்காலத்தில் தான பரிகிரகங்கள் சரியாய் நடந்திருந்து சுவீகாரம் ரத்தானால் அந்தப் பிள்ளைக்கு ஜனன குடும்பத்தில் பாத்தியம் உண்டாகமாட்டாதென்றும், தானபரிகிரகங்கள் சாஸ்திரப்படி நடக்காதிருந்தால் பிரம்ம, க்ஷத்திரிய, வைசியர்கள் உபநயனத்துக்கு முன்னும், சூத்திரர் கல்யாணத்துக்கு முன்னும், ஜனன குடும்பத்தில் சேரலாமென்றும் தீர்ப்பு செய்திருக்கிறார்கள். (12 பம். ஐ. 397; 1856-59 ஹு கல் ஸுபிரீம்கோ. தீர்ப்பு 137 பக்கம்; 13 க. ஐ. அபெண்டிக்ஸ் 42.) ஆனால் உபநயனமாவது, விவாகமாவது ஸ்வீகார குடும்பத்தில் நடந்திருந்தா, பிறகு ஸ்வீகாரம் ரத்தானால் ஸ்வீகாரகுடும்பத்தில் ஜீவனம்சமட்டும் அடைய பாத்தியமுண்டு.

98. சுவீகாரம் ரத்தானால் அவனுக்குக் கொடுத்ததானம்செல்லுமா.—உயில் அல்லது தான சாசனத்தில் குறிக்கப்பட்டிருந்தபிள்ளை சுவிகாரப்பிள்ளை என்கிற காரணமில்லாமல், இன்னான் என்று குறிப்பிடுவதற்காக "ஸ்வீகாரன்" என்கிறநாமத்தோடு அவன் பெயர் விவரமாய்ச் சொல்லப்பட்டிருந்தால், சுவீகாரம் ரத்தானாலும் தானம் செல்லும். (24 ம. 214; 19. இ. அ. 101; 41 அல 666; 47 பம். 65.) ஆனால், அப்படிப்பட்ட தானம் சுவீகாரப்பிள்ளை என்கிற எண்ணத்தால் செய்யப்பட்டதென்கிற முழுநம்பிக்கையோடு செய்ததாயிருந்தால் ஸ்வீகாரம் ரத்தானால் தானம் செல்லாது. (12 இ. அ. 72; 11 க. 463; 16 ம. 355; 24 இ. அ. 86. 23 பம். 718; 19 கல். 523.)

உதாரணம்.—(1) "கிருஷ்ணய்யருடைய ஸ்வீகாரப்பிள்ளையாகிய வாசுதேவனுக்கு இந்த ஒரு வேலி நிலத்தையும் தானங்கொடுத்தேன்" என்று ஒருவன் உயில் எழுதிவைத்தான்; சுவீகாரம் ரத்தானாலும் தானம் செல்லும்.

2. "முத்துசாமியை" நான் சுவீகாரஞ் செய்துகொண்டேன்; என் பெண்சாதி —டை முத்துசாமி உயிருடனிருக்கையில் வேறொருவனையும் ஸ்வீகாரஞ் செய்துகொள்ளக்கூடாதென்றும், அவனுக்கே என் சொத்தெல்லாம் சேரவேண்டியதென்றும், அவன் சுவீகாரத்துக்கு வேண்டிய காரியங்களை என் பெண்சாதியே செய்யவேண்டுமென்றும் ஒருவன் உயில் எழுதிவைத்தான். பிறகு அவன் பெண்சாதி சுவீகாரத்துக்கு வேண்டிய கர்மம் ஒன்றும் நடத்தாமல்போனாலும் அந்தப் பிள்ளைக்குக்கொடுத்த தானம்செல்லும். (26. ஸ. 91.)

3 "குப்புசாமி" என்ற ஒரு பையனை குழந்தைமுதல் தன் அபிமான புத்திரனாக வளர்த்துக்கடைசியில் தன் சொத்தையெல்லாம் அவனுக்கு உயிலெழுதிவிட்டு இறந்துபோனான். இந்தப்பிள்ளை ஸ்வீகாரப் பிள்ளையாக இல்லாதபோதிலும் தானம் செல்லும். (1861-ஆு மதராஸ் தீர்ப்பு 124; 1 ம. ஐ. 393.)

4. "எனக்கும் என் முன்னோர்களுக்கும் உத்தரகிரியை முதலானது செய்துவிட்டு நீ என்னுடைய சொத்துக்களை அடையவேண்டியது என்கிற உடன்படிக்கையின்பேரில் நான் உன்னை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டேன்" என்று ஒருவன் ஒரு சம்மதிபத்திரம் எழுதினான். பிறகு ஸ்வீகாரம் செல்லாதென்று போய்விட்டது. இதில் ஸ்வீகாரத்தை உத்தேசித்தே தானம் செய்ததால் ஸ்வீகாரமில்லாவிட்டால் தானம் செல்லாது. (11 க. 463; 12 க. 86; 12 பம். 18, 2 2; 15 பம். 573.)

(8) கிருத்திரம் ஸ்வீகாரம்.

59. கிருத்திரம ஸ்வீகாரம்.—(1) இது மிதிலதேசத்திலும், மலையாளத்தில் நம்பூதிரி ஜாதிகளிலும் யாழ்ப்பாணத்திலும், பஞ்சாப்தேசத்து ஹிந்துக்களுக்குள்ளும், காஷ்மீர ராஜ்ஜியத்திலும், தற்காலத்தில் வழக்கமாயிருக்கிறது. புருஷன் பெண்சாதிகளிருவரும் சேர்ந்தாவது தனித்தனியாகவாவது சுவீகாரமெடுத்துக்கொள்ளலாம். ஆனால் ஒருவருக்காக மற்றொருவர் எடுக்கக்கூடாது. (2 பம். ஸ. தீ. 173; 11 ம. 174.)

(2) சுவீகாரம் செய்துகொள்ளப்பட்டவன் சுவஜாதியாயிருக்கவேண்டும்; வயதைப்பற்றி நிபந்தனை இல்லை. உபநயனம், விவாகம் ஜனனகுடும்பத்தில் நடந்திருந்து பிள்ளைகளைப்பெற்றிருந்தாலும், தாய்

தகப்பன் இல்லாவிட்டாலும் சுவீகாரம்செய்யலாம். (8 ஸ. 155; 6 பம். ஸ. தீ. 192; 3 பம். ஸ. தீ. 144, 145) இந்த சுவீ காரத்துக்கு வைதிக கர்மங்களே கிடையாது. "நீ என் பிள்ளையாயி ருக்கவேண்டுமென்று" சுவீகார பிதா கேட்டு, நான் உன்பிள்ளையாயி னேன் என்று சுவீகாரப்பிள்ளை சொன்னாற் போதுமானது. கிருத்தி ரம சுவீகாரப்பிள்ளைக்கு அவன் ஜனன குடும்பத்திலுள்ள பாத்தியதை போகமாட்டாது. (1 பம். ஸ. தீ. 9; 6 பம். ஸ. தீ. 271.)

(3) சுவீகார குடும்பத்தில் எவனால் சுவீகரிக்கப்பட்டானோ அவனுக்கு மட்டும் உத்தரகிரியைசெய்து அவனுடைய சொத்துக்கு மட்டுந்தான் அவன் வாரசுதாரனாகிறான். ஸ்வீகாரப்பிதாவினுடைய தகப்பன், பாட்டன், அண்ணன் தம்பி முதலானவர்களுக்கு உத்தர கிரியை செய்யவாவது அவர்களுடைய சொத்தை யடையவாவது அந்த ஸ்வீகாரபுத்திரனுக்கு பாத்தியமில்லை. (1 பம். ஸ. தீ. 15; 3 பம் ஸ தீ. 307; 2 பம். ஸ. தீ. 23; 8 ஸ 155; 25. ஸ. 255) பெ ண்சாதியாவது புருஷனாவது தனக்கு மட்டுமென்று ஸ்வீகாரமெடு த்துக்கொண்டால் அந்த தத்தன் ஸ்வீகாரதாய் அல்லது தகப்பனுக்கு மட்டும் உத்தரகிரியைசெய்து அவள் அல்லது அவன் சொத்தையடை யலாம். (2 பம். ஸ, தீ. 23; 7 ஸ. 500; 8 ஸ. 155.)

100. மாப்பிள்ளை — சிலவிடங்களில் சூத்திரர்கள் ரெட்டிகள் இவர்கள் வீட்டு மாப்பிள்ளையை வீட்டில் வளர்த்துப் பிள்ளையைப் போல் வைத்துக்கொண்டிருந்து பிறகு மாமனார் சொத்துக்கு அவன் பாத்தியஸ்தனாகிறான. அந்தமாப்பிள்ளைக்கு ஜனன குடும்பபாத்தியம் போகமாட்டாது. வீட்டுமாப்பிள்ளைக்கு தத்துபுத்திரனைப்போல் மா மனார் சொத்து பாத்தியமாகிறது. ஆனால், அது அவன் சுவயார்ஜித சொத்தாக பாவிக்கப்படுகிறது. மாப்பிள்ளையை வீட்டில்வைத்துக் கொண்டபிறகு மாமனாருக்குப் புத்திரனுண்டானாலும் அந்தப் புத்திர னுடன் மாப்பிள்ளைக்கும் சமபாகமுண்டு. (6 ம. 267; 4 ம. 272; 12 ம. 442 17 மத. 287.)

101. யாழ்ப்பாண சம்பிரதாயம். —யாழ்ப்பாணம் முதலிய விட ங்களிலுள்ள தமிழர்கள் கிருத்திரம ஸ்விகாரம்போன்றதொன்றை எடு த்துக்கொள்வதுடன், ஒரு பெண்ணையும், பிள்ளையையும் ஸ்விகாரஞ் செய்துகொண்டு அவர்களுக்கு விவாகஞ்செய்வித்து வீட்டில் வைத் துக்கொள்கிற வழக்கமுண்டு.

102. பெண் தத்து.—தென்னிந்தியாவில் தாசிகள் பெண் ஸ்விகாரஞ்செய்துகொள்வது வெகுகால வழக்கமாயிருக்கிறது. பெண் சுவிகாரம் தாசிகள் தவிர மற்ற ஜாதியார்கள் எடுக்கக்கூடாது. பெண் சுவிகாரத்துக்குத் தான பரிக்ரஹ முதலான கர்மங்கள் கிடையாது. இன்ன ஜாதிப்பெண்ணைத்தான் சுவிகாரம் செய்துகொள்ள வேண்டுமென்கிற நியமமும் கிடையாது. எந்தவிதமாகவாவது ஒரு பெண்ணை வாங்கி வளர்ப்பதே போதுமானது. வழக்கமிருந்தாலொழிய பம்பாய், பங்காளா தேசங்களில் தாசிகளின் தத்து செல்லாது. (13 பம். 690; 11 ம. 393; 13 ம. 133 ; 4 பம். 545 ; 14 பம். 90 ; 37 பம். 117 ; 26 பம். 491, 495 ; 2 மார்வி. டை. 133.)

ஏக கன்னிகையைத் தான் சுவிகாரஞ் செய்துகொள்ளலாம். அதற்குமேல் எடுக்கலாமென்று தேசாசாரமிருந்தால் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கன்னிகைகளை சுவிகாரம் செய்துகொள்ளத்தடையில்லை. (11 ம. 393, 12. ம, 214,)

தாசிகள் விபசாரத் தொழில் செய்வதற்காக சுவிகாரம் எடுக்கக்கூடாது. (4 பம். 545; 21- ம 229) அவர்களுடைய சொத்துக்கு வார்சாக இருக்கவேண்டுமென்கிற உத்தேசத்தோடு எடுப்பதால் தான் சுவிகாரம் ஊர்ஜிதப்பட்டு வருகிறது. சுவிகாரப் புத்திரிகளை மைனர் நீங்குவதற்குள் (16 வயதிற்குள்) விபசாரத் தொழிலுக்குரிய கர்மங்கள் (சுவாமிக்கு பொட்டுக்கட்டுவது) சாந்தி முதலியது செய்தால் அப்படிச் செய்கிறவர்களும் அதற்குடந்தையாயிருப்பவர்களும் அந்தப்பெண்ணுடன் விபசாரஞ் செய்தவனும் இந்தியன் பினல்கோட் 372, 373-வது பிரிவுகளின்படி தண்டனைக்குள்ளாவார்கள். தாசிகள் ஸ்விகார மெடுத்துக்கொள்வது தென்னிந்தியாவிலும் மேலிந்தியாவிலும் வழக்கமாயிருக்கிறது.

தாசிகள், ஆண்பிள்ளையை ஸ்விகார எடுக்கவே கூடாது. (34 கல். 824) ஆனால், ஆண்பிள்ளை தனக்குப்பிறந்திருந்தாலும், பெண்ணை மட்டும் ஸ்விகார மெடுத்துக்கொள்ளலாம்.

4. வயது மைனர்களின் சம்ரக்ஷணம்.

103. மைனர்களென்பது.—நமது புராதன தர்மசாஸ்திரங்களில் ஸ்திரீ புருஷர்களுக்கு 16 வயது முடிந்துவிட்டால் தக்கவயது வந்தவர்களென்று சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், தற்காலம் 1875-ஆம் வருஷத்திய 9-வது சட்டமாகிய இந்திய மெஜாரிடி ஆக்ட்டுப்படி 18 வயது முடிந்தபிறகுதான் தக்க வயதுவந்ததாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், கோர்ட்டாரால் கார்டியன் நியமிக்கப்பட்ட மைனர்களுக்கும், சர்க்கார் பார்வையில் போஷித்துவருகிற மைனர்களுக்கும் (கோர்ட் ஆப்வார்ட்ஸ் மைனர்கள்) மட்டும் 21-வது வயது கழிந்தபிறகுதான் தக்கவயது வந்ததாக எண்ணப்படுகிறார்கள்.

104. குழந்தைகள் சம்ரக்ஷணை.—(1) தர்மசாஸ்திரப்படி குழந்தைகளை யிரட்சிப்பது முதலில் தகப்பன், (12 பம். 110.) பிறகு தாய், (28 அல. 233.) தாயில்லாவிட்டாலும், இரட்சிக்கத் தகுதியற்றவளாயிருந்தாலும், பிறகு அண்ணன், பெரிய தகப்பன், சிறிய தகப்பன் முதலிய பிதா வம்சஸ்தர்களும், அவர்களில்லாவிட்டால் தாய் வம்சஸ்தர்களும் இரட்சிக்கவேண்டியது. (32 பம். 50.) மிதிலதேசத்தில் தகுந்த வயதுவராத குழந்தைகளைக் காப்பாற்றும் பாத்தியம் தகப்பனைக் காட்டிலும் தாய்க்கே அதிகமென்று சொல்லப்பட்டிருக்கிறது. (5. க. 43.)

(2) பிரிவினையாகாத குடும்பத்தில் குழந்தைக்குச் சேரவேண்டிய சொத்துடன் குடும்ப பூராசொத்தையும் விசாரணை செய்கிற குடும்ப எஜமானன் குழந்தையின் கார்டியனாயிருக்க தாயைக்காட்டிலும் அதிக பாத்தியமுடையவனாகிறான். ஆனால் அக்குழந்தையின் சரீர சம்ரட்சணையைத் தாயே செய்யவேண்டியது. (3 ம. ஐ. 69; 5 க 219; 19 கல். 301; 25 அல. 407; 19 பம். 309.) குடும்பம் பிரிக்கப்பட்டு மைனர் சொத்து வேறாக்கப்பட்டால், சொத்தை பரிபாலிக்கவும் குழந்தைக்கு கார்டியனாயிருக்கவும் தாய்க்குச் சுதந்தரமுண்டு. (30 இ. அ. 165.)

குழந்தைகளை சம்ரட்சிக்க சிறிய தகப்பன், பெரிய தகப்பன், இவர்களைக்காட்டிலும், ஸபத்நீக மாதாவுக்கு அதிக பாத்தியம் கிடையாது. (1 மார்லீஸ் டைஜஸ்ட் 275; 2 பாரோ. 144; 7 ஸ. 321.)

105. தகப்பன் தன்பிள்ளைக்கு வேறொருவனை கார்டியனாயிருக்க நேமிக்கலாம்.—குழந்தைகளின் சம்ரட்சணையில் பூர்ண சுவதந்திரமுள்ள தகப்பன் தனக்குப்பிற்காலத்தில் இன்னார் குழந்தைகளுக்கு கார்டியனாகயிருக்கவேண்டுமென்று உயில்மூலமாய் நியமிக்கலாம். அப்படி நியமிக்கப்பட்டவன் தாய் முதலியவர்களைக்காட்டிலும் முந்தின பாத்தியமுள்ளவனாகிறான். (43 அல. 213; 44மத. 189; 31 பம். 413) உயில் மூலமாய் கார்டியனை நியமிக்குமதிகாரம் தகப்பனைத்தவிர தாய் முதலிய வேறு யாருக்கும் கிடையாது. (21 ம. 401.)

106 வைப்பாட்டி குழந்தைகளை இரட்சிப்பது.—சாஸ்திரப்படி வைப்பாட்டியின் குழந்தைகளைக் காப்பாற்றுவது முதல் கடமை அவளுடையதே (16 பம். 307.) ஆனால், அவள்வசத்திலில்லாமல் தகப்பனாலாவது அல்லது அவனால் ஏற்படுத்தின வேறொருவராலாவது குழந்தைகள் சம்ரட்சிக்கப்பட்டால், அவளுடைய பாத்தியம் போய்விடும். தாய் விபசாரியாயிருந்தாலும், குழந்தைகளை அவளிடம் விடுவது அவர்களின் க்ஷேமத்துக்கு கெடுதலாயிருக்கும் போதும் தன் குழந்தைகளைத் தன்னிடத்தில் விடவேண்டுமென்று வைப்பாட்டி செய்கிற தாவா செல்லாது. (4 க. 374; 12 ம. 67; 19 மத. 461.)

107. விதவை மைனராயிருந்தால் இரட்சிக்குங் கடமை.—தர்மசாஸ்திரப்படி மைனரான விதவைகளை அவள் புருஷனுடைய தாயாதிகளே காப்பாற்றவேண்டும். மற்ற எவரும் அவளைக் காப்பாற்ற கடமைப்பட்டவர்களல்ல. (16 க. 584; 8 பம். ஐ. கோ. 31.)

108. போஷகர் கெட்டவர்களானால், மைனரை யிரட்சிப்பதிலிருந்து நீக்குவது.—தர்மசாஸ்திரப்படி மைனர்களைப்போஷிக்கும் பாத்தியம் தகப்பன், தாய் தமையன் முதலிய பந்துக்களைச் சேர்ந்ததாயிருந்தாலும் அவர்கள் கெட்ட நடவடிக்கையுள்ளவர்களாயிருந்தாலும், அந்தக் குழந்தைகளுடைய க்ஷேமத்துக்கும் நன்மைக்குங் கெடுதியுண்டாகும்படியான காரியங்களைச் செய்தாலும், அப்படிப்பட்ட குழந்தைகளுக்குப் பந்துவாயினும், சிநேகிதனாயினும் கோர்ட்டில் மனுக்கொடுத்து அவர்களை குழந்தைகளின் சம்ரட்சணையிலிருந்து நீக்கி வேறொருவரை ஏற்பாடுசெய்யலாம். (3 ம. ஐ. 69; 14 மூ. இ. அ. 209; 1. அ. 549, 598.)

109. சுவிகார மைனர் ரட்சணை.—பிள்ளையை சுவீகாரம் கொடுத்தபிறகு அவனைக் காப்பாற்றும் பாத்தியம் ஜனன பிதாவுக்கு இல்லாதுபோய், சுவீகாரப் பிதாவுடையதும் அவனைச் சேர்ந்தவர்களுடையதாயுமிருக்கிறது. (11 பங்கால் லா. ரி. 171; 9 பம். 365.) ஆனால், சுவீகார தகப்பனாவது அவனைச் சேர்ந்தவர்களாவது சுவீகாரப் பிள்ளையைக் கெட்ட எண்ணத்தோடு வருத்தப்படுத்தினாலும், வேறு எவ்விதமாகவாவது அந்தப்பிள்ளையினுடைய க்ஷேமத்துக்குக் கெடுதியுண்டாகும்படி ஏதாவது செய்தாலும், ஜனன தகப்பன் முதலியவர்கள் அந்தப் பிள்ளையை ரட்சிக்கலாம். (3 பம். 1.)

110. புனர் விவாகஞ் செய்துகொண்ட தாயின் சம்ரட்சணையிலிருந்து மைனரை நீக்குவது.—புருஷனிறந்த பிறகு பெண்சாதி புனர் விவாகம் செய்துகொண்டால் முதல் புருஷனால் அவளுக்குண்டான குழந்தைகளை அவள் வசமிருந்து நீக்க, யாதொரு பந்து அல்லது சினேகிதர் டிஸ்டிரிக்டு கோர்ட்டில் மனுசெய்து கொள்வதின்மேல் விலக்கி, முதல் புருஷன் பந்துக்களிடத்தில் ஒப்புவித்து அவர்களிடத்தில் தக்க ஜாமீன் வாங்கலாம். (1856-ம்வருஷத்து 15-வது ஆக்ட்டாகிய ஹிந்து விதவா புனர்விவாக சட்டம் 3-வது, 5-வது பிரிவு; 38 கல். 862; 1 லாகூர் 146; 33 பம். 107.)

111.—மதப்பிரஷ்டையான தாயிடமிருந்து குழந்தைகளை நீக்குவது.—தர்ம சாஸ்திரப்படி பிதாவின் மதத்தையே பிள்ளை யனுசரிக்கவேண்டியது. ஆகையால், தாயார் குலப்பிரஷ்டையாகவாவது மதப்பிரஷ்டையாகவாவது போனால் அவளுடைய போஷணையிலிருக்கிற குழந்தைகளை சம்ரட்சிக்கும் பாத்தியம் அவளைவிட்டு நீங்கிவிடும். குழந்தைகள் நன்மை தீமை என்கிற வித்தியாசந் தெரியாத மைனராயிருக்கிற சமயத்தில், மதப்பிரஷ்டையான தாயாரிடத்திலிருந்து அவள் மதத்தையே தாங்களும் அனுஷ்டிப்பதாகச் சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்ளாமல் அவர்களை அவளிடமிருந்து நீக்கிவிடலாம். ஆனால், அவர்கள் தகுந்த வயது வந்தவர்களாயும், பகுத்தறிவு உள்ளவர்களாயுமிருந்து, அவர்களைத் தாயாரிடமிருந்து நீக்கினால் அவர்கள் நன்மைக்குப் பாதகமுண்டாகுமென்று தோன்றினால் அவளிடமிருந்து அவர்களை நீக்கக் கோர்ட்டார் உத்திரவு செய்யார்கள். (14 மூ. இ. அ. 309).

புருஷனுடன் தகுந்த காரணமின்றி சண்டையிட்டோ அல்லது வேறு காரணத்தினாலோ வேறாகவிருக்கிற (தாயிடம்) மனைவியி

டம் பிள்ளைகளிருந்தால், கோர்ட்டில் தாவாசெய்து குழந்தைகளைத் தன் சுவாதீனத்தில் வரவழைத்துக்கொள்ளலாம். (8 க. 969.)

112. (1) **தகப்பன் மதப்பிரஷ்டனானால் மைனர் ரட்சணம்.**—(1) தகப்பன் மதப்பிரஷ்டனாய் விட்டால், அவனுடைய மைனர் குழந்தைகளுக்குக் கார்டியனாயிருக்கும் பாத்தியம் அவனுக்குப் போகமாட்டாது. அந்தக் குழந்தைகளும் தகப்பன் அனுசரித்த மதத்தையனுஷ்டிக்க வேண்டியதுதான். (14 மூ. இ. அ. 309; 9 ம 391; 28 அல. 233) ஆனால், மதப்பிரஷ்டனானபிறகு துர்வழக்கங்களால் கெட்ட காரியங்களைச் செய்துகொண்டு குழந்தைகளுடைய நன்மைக்கு விரோதமான காரியத்தைச்செய்தால் அப்படிப்பட்ட தகப்பனிடமிருந்து குழந்தைகளை நீக்கிவிடலாம். (பேர்ரீ துறை ஓரியண்டல் கேஸ் 91.) தகப்பன் வேறு மதத்தில் சேர்ந்தாலும் தன்மக்களை பழைய மதத்திலேயே வளரும்படி விட்டிருந்தால் பிறகு தன் வசப்படுத்த பாத்தியமில்லை. (25 க, 881.)

(2) அன்னிய மதஸ்தன் ஒருவன் ஒரு மைனரை தன் வசத்தில் வைத்திருந்ததை வெகுகாலம் தெரிந்திருந்தும் மீட்காமலிருந்தால் பிறகு அந்த மைனரை மீட்கும் சுதந்தரம் தகப்பன் முதலானவர்களுக்குப்போய் விடுகிறது. (16 பம். 307; 23 கல். 290.)

113. மைனர்களின் ஸ்வதந்திரம்.—18 வயது ஆகாத மைனர்கள் தங்கள் கார்டியனுத்திரவில்லாதிருக்கையில் சுவயேச்சையாய் எதையும் செய்யக்கூடாது. பகுத்தறியும் அறிவு தங்களுக்கு வந்துவிட்டதால் தாங்கள் பிறமதங்களை அனுஷ்டிப்போமென்றும், அப்படிப்பட்ட வேறு மத குருக்களால் பாதுகாக்கப்படுகிறோமென்றும் சொன்னாலும் அதைக் கோர்ட்டார் ஒப்புக்கொள்ளாமல் அந்த மைனர்களுடைய நியாயமான கார்டியனிடம் அவர்களை ஒப்புவித்து விடுவார்கள். (9 ம. 391; பேர்ரீ ஓரியண்டல் கேஸ் 103.)

மேலும் எவனாவது 14 வயதுக்குட்பட்ட பெண் பிள்ளையையாவது 16 வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளையையாவது அவர்களுடைய கார்டியனிடமிருந்து திருட்டுத்தனமாகவாவது பலாத்காரமாகவாவது அழைத்துப்போய் ஒளித்து அல்லது அடைத்து வைத்தாலும், பிறமதங்களில் சேர்த்துக்கொள்கிற எண்ணத்துடன் எவராவது கொண்டு போனால் பினல்கோட் 363-வதுபிரிவுப்படி தண்டனைக்குள்ளாவார்கள்.

114. கார்டியனை நீக்க சர்க்காருக்கதிகாரம்.—எல்லா ஜனங்களையும் அவர்களுடைய சொத்து சுதந்திரங்களையும் பாதுகாத்துக்கொண்டு தேசபரிபாலனம் செய்கிற இராஜாங்கத்தாரே எல்லா மைனர்களுக்கும் மேலான கார்டியன்களாக இருக்கிறார்கள். ஆனது பற்றி கார்டியன்களில்லாத மைனர்களுக்கு சரியான கார்டியன்களை நியமிக்கும் அதிகாரம் சர்க்காரைச் சேர்ந்ததாக இருக்கிறது; மேலும் சுபாவமாய் ஏற்பட்டிருக்கிற ஒரு கார்டியன் மைனருடைய அக்கரைக்கு விரோதமாய் நடந்துகொண்டால் அவனை அவ்வதிகாரத்தினின்றும் நீக்கிவிட்டு சரியான வேறு கார்டியனை நியமிக்கவும் சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

115. பித்தன், மைனர் இவர்கள் சொத்தை சர்க்காரில் பரிபாலிக்க ஜில்லா கோர்ட்டாருக்கு அதிகாரம்.—மைனர்களுக்கும், தக்க வயதை யடைந்தும் சித்த சுவாதீன மில்லாமலிருக்கிற பைத்தியக்காரர் மைனர்களைப்பந்தம் பாவிக்கப்படத்தக்கவர்களா யிருப்பதால் அவர்களுடைய தேகசம்ரக்ஷணையின் பொருட்டும் சொத்தின் பாதுகாப்பின்பொருட்டும் தக்க கார்டியன்களை நியமிக்கும் அதிகாரம் சர்க்காரையே சேர்ந்திருக்கிறது. மேலும், அந்த அதிகாரத்தை நமது கவர்ன்மெண்டார் ஒவ்வொரு ஜில்லா கோர்ட்டாருக்கும் கொடுத்திருக்கிறார்கள். இதைப்பற்றி 1890-௵த்திய 8-வது ஆக்ட்டாகிய கார்டியன் அண்டு வார்ட்ஸ் ஆக்ட்டைப்பார்க்க.

116. கார்டியனை நீக்க அதிகாரம்.—எப்படிப்பட்ட மைனர் கார்டியனையும் தகுந்த காரணத்தின் பேரில் சம்ரக்ஷணைபாத்தியத்தினின்று நீக்கவும், சரியான கார்டியன் ஒருவனை நியமிக்கவும் சர்க்கார் அல்லது நியாயஸ்தலத்தாருக்கு அதிகாரமுண்டு. (3 மது. ஐ. கோ. ரி. 69; 14 மு. இ. அ. 309; 12 பம் 480.)

117. தகப்பனை கார்டியனிலிருந்து நீக்குவது.—தகப்பன் உயிருடனிருக்கும்போது வேறு கார்டியனை நியமிக்க கோர்டாருக்கு அதிகாரமில்லாமலிருந்தாலும், தகப்பன் தாய்முதலான கார்டியன்களுடைய நடத்தையானது அதிக விபரீதமாயும்மைனருடைய க்ஷேமத்துக்கும் அபிவிர்த்திக்கும் கெடுதியை யுண்டுபண்ணக்கூடிய அவ்வளவு துன்மார்க்க முள்ளதாயு மிருந்தால், அக்கார்டியன்கள் தங்கள் அதிகாரத்தி

னின்று நீக்கப்படுவார்கள். ஆனால் தகப்பனை கார்டியன் அதிகாரத்தினின்று நீக்குவதற்கு தக்க விசேஷமான காரணம் இருக்கவேண்டும். (25 கல். 885; 1 அல. 549; 41 இ. அ. 314; 38 மத. 897; 1890-ஹூத்து 8-வது கார்டியன்ஸ் அண்டு வார்டுஸ் ஆக்ட் 19 செக்ஷன் (c) கிளாஸ்.)

118. மைனர்சோத்து விஷயமாய் கோர்ட்டார்கடமை.—ஒரு மைனருடைய சொத்து சுதந்திரங்கள் ஒரு வியாச்சியத்தில் சம்பந்தப்பட்டதாயிருக்கும்போது மைனரின் பாத்தியதைக்கு கெடுதிவராமலிருக்கும்படி பாதுகாக்கவும் கோர்ட்டார் கடமைப்பட்டிருக்கிறார்கள். (5 மது. 337.)

119. மைனர் கார்டியனுக்குள்ளடங்கியிருப்பது.—மைனர்கள் யாவரும் தக்க வயதாகிய மெஜாரிடியை அடையும் வரையில் சம்ரக்ஷணைக்கர்த்தர்களுடைய கட்டுக்குள்ளடங்கி யிருக்கவேண்டும். கார்டியனுடைய அதிகாரத்தை மீறித் தங்கள் இஷ்டம்போல் சுயேச்சையாய் இருக்கமைனர்களுக்கு சுதந்திரமில்லை. ஆகையால் மைனர்கள் கிறிஸ்து முதலிய அன்னிய மதத்தில் சேரவாவது அவர்களைப் பிறர் சேர்த்துக்கொள்ளவாவதுகூடாது. ஒருக்கால் மைனர்கள் அன்னிய மதத்தில் சேர்ந்துவிட்டாலும் அல்லது சேர்க்கப்பட்டுவிட்டாலும் அவர்களைத் திரும்பியும் சுவாதீனப்படுத்திக்கொள்ள தகப்பன் தாய்முதலான கார்டியன்களுக்கு அதிகாரமுண்டு. அன்னியமதத்தில் சேர்ந்ததற்கு மைனருடைய சம்மதம் ஏற்பட்டிருந்தாலும் பிரயோஜனப்படமாட்டாது. (9 மது. 391; 14 மு. இ. அ. 309.)

120. மைனர்கள் பொறுப்பு.—மைனர்களால் எழுதியாவது, வாய்மொழியாகவாவது செய்துகொடுக்கும் உடன்படிக்கைகள், மைனருக்கு இலாபகரமாயிருந்தாலொழிய, செல்லாது. ஆனால், அப்படிச் செய்துகொடுத்தவன் தக்க வயது வந்தபிறகு அந்த உடன்படிக்கையை ஊர்ஜிதஞ்செய்தால் பிறகு அது செல்லும். (3 ஸ. 10; 13 ஸ. 166, 172; 8 மூ. இ. அ. 119; இந்தியன் காண்டிராக்ட் ஆக்ட். 11 பிரிவு) மேலும் மைனருக்கு எவ்விதமான கடன் கொடுத்துப்பிராது செய்தாலும் செல்லாது. (12 பம். 50; 18 க. 259; 18. ம. 415; 23 பம். 146.) ஆனால், அவசியமான ஆகாரத்துச்குவேண்டிய வஸ்துக்க

ளேதாவது கொடுத்திருந்தால் அவைகளை வாங்குவதற்காகச் செய்யும் பிராது செல்லும். (இந்தியன்காண்டிராக்ட் ஆக்ட் 68-வது பிரிவு) மைனர்கள் கொடுத்த கடன்மட்டும் செல்லும்.

121. மைனர் கார்டியன் அதிகாரம்.—(1) ஒரு மைனருக்கு கார்டியனாக ஏற்பட்டவன் அவனுடைய சொத்து விஷயமாய் அவன் செய்த பரிபாலனம் செலவு முதலிய காரியங்கள் மைனருக்கு இலாபத்தைக் கொடுக்கத் தகுந்ததும், அவனுக்குத் தக்கவயது வந்திருந்தால் தானே செய்யத்தகுந்த காரியங்களாயிருக்கவும் வேண்டும். மேலும் கார்டியன் அக்கிரமமான செலவு அல்லது துர்விநியோகப் படுத்தக்கூடாது. கெட்ட எண்ணத்தோடு தன் சுவயப்பிரயோசனத்துக்காக எந்தக்காரியமும் செய்ததாயிருக்கக்கூடாது. (2 ம. ஐ. 47; 12 பம். 636; 14 பம். 564; 4 க. 76; 5 க. 363; 3 அ. 535; 9 பம். 365; 10 மூ. இ. அ. 454; 6 மூ. இ. அ. 393; 26 பம். 433; 29 அல. 135.) கார்டியன்செய்த நடவடிக்கைகளை மைனர்மேஜரான பிறகு அக்காரியத்தை உறுதிசெய்துவிட்டால் அவைகள் செல்லும். (8 மூ. இ. அ. 319) சொத்தை விக்கிரயஞ்செய்தால், இலாபமாயும் நியாயமாயுமிருக்கும்பட்சத்தில் மைனர் கட்டுப்படுவான்; இல்லாவிடில் கார்டியன் செய்த விக்கிரயம் செல்லாது, (8 பம். ஐ. 81; 3 பம். ஐ. 234, 237; 7 அ. ஐ. 201.)

மைனர்கள் கார்டியன் மைனர் சொத்தை பெந்தகம் வைத்து சுயபிரயோசனப் படுத்திவிட்டான் பெந்தகம் பெற்றவன் மைனரையும், மைனர் கார்டியனையும் சேர்த்து தாவாசெய்து பெந்தகச் சொத்தை ஏலத்தில் விற்றுவிட்டான். பிறகு மைனர் மேஜரானதும் தாவாசெய்து அந்த ஏலவிற்பனையை ரத்துசெய்துவிட்டான். (28 அல. 137.)

(2) கார்டியனால் அக்கிரமமாகச் செய்யப்பட்ட உடன்படிக்கைகள், டிக்கிரிகள், இராஜி நாமாக்கள், விற்பனைகள் முதலிய காரியங்கள் செல்லாது. மைனர் நீங்கிய பின்னர்தான் அப்படிப்பட்ட அக்கிரமமான காரியங்களைக் கோர்ட்டு மூலமாய் ரத்துசெய்யவேண்டும். யாதொரு கார்டியனால் நியாயமாய்ச்செய்யப்பட்ட எல்லா நடவடிக்கைகளுக்கும் மைனர் கட்டுப்பட்டவனே. (6 மூ. இ. அ. 293; 6 அ. 417; 3 பம். 234, 237; 6 அ. 417; 3 ம. 103; 13 பம். 137; 11 ம. 309; 12 ம. 483; 14 மூ. இ. அ. 393; 5 க. 450; 10 க. 357; 1859ஷு பம். ஸ. தீ. 913; 6 க. 687; 17 க. 361.)

மைனர் கார்டியன் கோர்ட்டாரால் நியமிக்கப்பட்டிருந்தால் அவன் மைனருடைய சொத்தை கோர்ட்டாருடைய அனுமதியின்றி விநியோகம் செய்யக்கூடாது. ஆனால், கோர்ட்டாருடைய உத்தரவின் பேரில் கார்டியன் செய்த பராதீனங்களை மைனர் அல்லது அதில் சம்பந்தப்பட்டவர்கள் விசேஷ காரணம் இருந்தாலொழிய ஆட்சேபிக்கக்கூடாது. (12 இ. அ. 47; 22 மத. 289; 25 அல. 59; கார்டியன் அண்டு வார்ட்ஸ் ஆக்ட் 29—30 பிரிவுகள்). கோர்ட்டார் அனுமதியின்றி நல்ல எண்ணத்தோடு சார்டியன் மைனர் விஷயமான தாவாவை பஞ்சாயத்துத் தீர்மானத்துக்கு விடுவது நியாயமானதாகும். (28 அல. 35)

122. கார்டியன் செய்த செலவு.—கார்டியன் அவசியமான செலவுகளின்பொருட்டும் மைனருடைய அக்கரையின் பொருட்டும் கடன் முதலியன வாங்கவும் சொத்துக்களை பந்தக பராதீனங்களுக்குட்படுத்தவும் கார்டியனுக்கு அதிகாரமுண்டு. நியாயமானதாயும் மைனரின் நன்மையின் பொருட்டுமிருக்கிற கார்டியன்களுடைய செய்கைகளை மைனர்கள் ஆக்ஷேபிக்கமுடியாது. மேலும் குடும்பசம்ரக்ஷணை முதலிய அவசியமான செலவுகளுக்கும், அச்செலவுகள் நிமித்தம் கார்டியன் அல்லது குடும்ப மானேஜரால்வாங்கப்படுகிற கடன்கள், செய்யப்படுகிற குடும்ப சொத்தின் பந்தகபராதீனங்கள் ஆகிய இவைகளுக்கும் மைனரானவன் கட்டுப்பட்டவனாக இருக்கிறான். (2 ம ஹை. கோ. ரி. 47; 12 பம். 686; 14 பம். 562; 5 கல். 363; 3 அல. 535; 20 பம். 61; 26 கல். 820; 17 மது. 306; 20 மது. 330.)

123. மைனரின் தாவாக்கள்.—மைனரானவன் யுக்த வயதையடையாமலிருக்கிற காரணத்தினாலே கோர்ட்டில் வியாச்சியம் செய்யவாவது அல்லது அவன் பேரில் பிறனொருவன் வியாச்சியம் தொடரவாவது கூடாது. மைனர்களுக்காக அவர்களின் கார்டியன்களே வியாச்சியங்களில் சக்ஷிக்காரர்களாக இருந்து மைனர்களின் பொருட்டு நடவடிக்கைகளை நடத்தவேண்டும். இவ்விதம் நடத்தப்பட்ட தாவாக்களில் ராஜிசெய்ய வேண்டியிருந்தால் கோர்ட்டாரே விசாரித்து ராஜிசெய்ய உத்தரவு கொடுக்கவேண்டும். அப்படிக்கில்லாவிட்டால் அந்த ராஜி செல்லாது. (29 ம. 104.)

124. மைனரின் பாபர் வியாஜ்ஜியம்.—மைனரின் பொருட்டு வியாச்சியம் செய்யவேண்டியதாயிருந்து மைனரும் சொத்தில்லாத

வனாக இருந்தால், அடுத்த சிநேகிதன் தன் சொந்தத்தில் சொத்து உடையவனாக இருந்தாலும் மைனருக்காக பாபர் வியாச்சியம் கொண்டு வரலாம். (3 மத 3.)

125. அவிபக்த குடும்பத்தின் மைனர் சோத்தை பாகிப்பது.—அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவனாபிருக்கும் மைனருடைய பங்கு சொத்தானது பிரிக்கப்பட வேண்டுமென்று தாவா கொண்டுவரக்கூடாது. ஆனால் குடும்பத்தலைவன் முதலானவர்களுடைய நடவடிக்கைகளால் மைனரின் பாக சொத்துக்குக் கெடுதியும் நஷ்டமும் நேரிடக் கூடியதாயிருந்தாலும், அல்லது மைனரின் பாத்தியதை மறுதளிக்கப்பட்டாலும் மைனரின் பொருட்டு அடுத்த சிநேகிதன் பாகத்துக்காக வியாச்சியஞ்செய்யலாம். (8 கல். 537; 29 அல 373; 12 மத. 401; 19 பம் 99.)

126. மைனரின் தாவாவின் காலம்.—யாதொரு தாவாவின் வியாச்சிய மூலமானது வாதியின் மைனாரிடி காலத்திலேயே தொடங்கி முடிவும் பெற்றிருந்தால், அப்போது மைனாரிடி நீங்கினதினம் முதல் மூன்று வருஷங்களுக்குள்ளாக அந்த வியாச்சியம் அவ்வாதியால் கொண்டுவரப்படலாம்; ஒரு வியாச்சியத்துக்குள்ள காலாவதியானது வாதி மைனாரிடியிலிருந்து நீங்கினது முதல் மூன்று வருஷங்களுக்கு மேற்பட்ட அதிக காலம்வரையிலிருந்தால் அந்தகாலத்திற்குள்ளாகவும் அந்தவியாச்சியம் கொண்டுவரப்படலாம். (9 கல். 663. லிமிடேஷன் ஆக்டு 7-வது பிரிவையும் பார்க்க.)

127. கார்டியன் செய்த துர்விநியோகத்தை ரத்துசெய்வது.—கார்டியனுடைய துர்விநியோகங்களை ரத்துசெய்வதற்காகவும், மோசடியாயும் அக்கிரமமாயும் உள்ள கார்டியனுடைய நடவடிக்கைகளால் நேரிட்ட நஷ்டத்தை பெறுவதற்காகவும் செய்யப்படுகிற வியாச்சியமானது மைனாரிடி நீங்கினது முதல் மூன்றுவருஷங்களுக்குள்ளாக கொண்டுவரப்பட வேண்டும். (லிமிடேஷன் ஆக்ட் 44 ஆர்டிகில்)

128. மைனர்செலுத்தவேண்டிய கடன்கள் காலாவதியாயிருந்தால் கார்டியன் பொறுப்பு.— (1) மைனர் பாத்தியப்படவேண்டிய கடன்களில் ஏதாவது காலாவதியாய்ப் போயிருந்தால் அப்படிப்பட்டதைத் தீர்க்கவாவது, அல்லது வட்டி முதலியன செலுத்தியோ ஒப்புக்கொண்டோ அக்கடனுக்கு மறுபடியும் உயிருண்டாக்கவாவ

து கார்டியனுக்கு அதிகாரமில்லை. ஆகையால் கார்டியனுடைய அப்படிப்பட்ட செய்கைகள் மைனரை எவ்வளவும் கட்டுப்படுத்த மாட்டாது. (20 பம். 155, 35 அல 207; 6 பாட். லா. ரி. 256)

(2) ஆனால் காலாவதிதோஷத்துக்குட்படாமலிருக்கிறகடனுக்காக வட்டி முதலியன செலுத்தி அதைக் காலாவதியாய்ப்போகாமல் நிறுத்தி வைக்கவும் அவன் காலாவதியை அதிகப்படுத்தவும் கார்டியனுக்கு அதிகாரமுண்டு. (26 மது. 330; 17 மது. 221; 27 மது. 243; 26 பம். 221; 37 கல். 461.)

யாதொரு கார்டியன் அக்கிரமமாயும், நஷ்டமுண்டாக்கக்கூடிய காரியங்களைச்செய்திருந்தால், மைனர் தகுந்த வயதுவந்த பிறகு தனக்கு நேரிட்ட நஷ்டத்தை வாங்க அந்த கார்டியன்பேரில் தாவாசெய்து பெறவேண்டும். (1860-ஹு பம். ஸ. தீ. 1,349.)

5-வது பொது ஐக்கிய குடும்பம்.

129. குடும்பம் ஓர் சிறியராச்சியம்.—ஆதிகாலத்தில் ஹிந்து குடும்பங்களில் பிரிவினையும் வேறுபாடும் இல்லாமலிருந்ததுடன் தகப்பனானவன் குடும்பமென்னும் இராச்சியத்துக்கு ஓர் சிற்றரசன் எனச் சொல்லும்படி குடும்பத்தில் சகல அதிகாரங்களையுமுடையவனாக இருந்தான். குடும்பத்திலுள்ள எல்லா ஸ்தாவர ஜங்கம சொத்துகளும் தகப்பனுக்கே சொந்தமானதாயிருந்தன. அவனுக்குக் கீழிருக்கும் பிள்ளை முதலியோர் சம்பாதிப்பதும் அவனுடைய ஆதீனத்துக்குட்பட்டதாகவே யிருந்தன. அக்காலத்தில் தகப்பனுள்ள வரையில் பிள்ளைகளுக்கு சொத்துக்களில் யாதொரு சுதந்திரமும் இல்லாமலிருந்தது.

130. தகப்பனிறந்தபிறகும்குடும்பம்பொது.—(1) தகப்பன் இறந்த பிற்பாடும் பிள்ளைகள் சொத்துக்களைத் துண்டுதுண்டாகப் பிரித்துக்கொண்டு தனித்தனியா யிருக்கும் வழக்கமும் ஆதிகாலத்தில இல்லை. அநேக குடும்பங்கள் வெகுகாலம் வரையில் பாகம் செய்து கொள்ளாமல் சேர்க்கையாகவே இருந்து வந்ததாகவும், அதனால் அப்படிப்பட்ட குடும்பங்களின் சொத்துக்கள் நாளடைவில் பாகிக்கத்தகாத தன்மையை யடைந்ததாகவும் தெரியவருகிறது.

(2) இக்காலத்திலும் இவ்விதம் பாகார்கமில்லாதசொத்துக் களையுடைய குடும்பங்கள் மலையாளத்திலும் தென்கன்னடத்திலும் இருக்கின்றன.

131 பிற்கால வேறுபாடுகள்.—ஆனால் காலஞ்செல்லச்செல்ல குடும்ப எஜமானனான தகப்பனுடைய அதிகாரம் குறையத்தொடங்கிற்று. தகப்பனிடமிருக்கும் முன்னோர்கள்தேடிய சொத்தில் பிள்ளைகளும் பாத்தியம் பாராட்டத் தொடங்கினார்கள். குடும்பஸ்தர்களுக்குள்ளிருந்த ஒற்றுமையுந்தளர ஆரம்பித்தது. குடும்பத்திலுள்ள ஒருவன் தன் சொந்தப்பிரயாசையாலும் சாமர்த்தியத்தாலும் சொத்து சம்பாதித்தால் அதை அவன் பொதுக்குடும்ப சொத்தாகப் பாவிக்காமல் தன் சொந்தமாகவே பாராட்டத் தொடங்கினான். அதிகமாய்ச் சம்பாதிக்கிறவன் தன்னுடைய அவ்வித சம்பாத்தியங்கள் சகோதரர் முதலிய மற்றவர்களுக்குஞ் சேராமல் தன்னையும் தன்பெண்டு பிள்ளைகளையுமே சேரவேண்டுமென்று விரும்பினான். மேலும் ஒவ்வொருவரும் தனித்தனியாயிருந்தால் குடும்பத்தில் அப்போதப்போது நடத்தப்படும் சிரார்த்தம் முதலிய பல வைதீகச்சடங்குகளை அவரவர்கள் தனித்தனியாய்ச் செய்யலாமென்றும், அவ்வாறு தனித்தனியான பல சடங்குகள் ஏற்படுவதினால் அவைகளுக்கு அதிகமான பலன் உண்டென்றும் பிராம்மணர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். இவ்விதமான அநேக காரணங்களினால் குடும்பங்களில் வேறுபாடும் பிரிவினையும் உண்டாக, சகோதரர்கள் தங்கள் தகப்பன் முதலிய முன்னோரிடமிருந்து அடைந்த சொத்துக்களைத் தங்களுக்குள் பாகித்துக்கொண்டு அவரவர்களுடைய பெண்டு பிள்ளைகளுடன் தனித்தனியாயிருக்கத் தொடங்கினார்கள்.

132. குடும்பம் பிரிவினை உண்டானகாலம்.—அக்காலத்திலும் தகப்பன் உயிரோடிருக்கும் வரையில் பிள்ளைகளுக்கு குடும்பசொத்துக்களில் யாதொரு சுதந்திரமும் இல்லாமலிருந்தது. தகப்பனிறந்த பிறகே பிள்ளைகள் குடும்ப சொத்துக்களைப் பாகித்துக்கொள்ள அதிகாரமுள்ளவர்களாக ஏற்பட்டார்கள். தகப்பனுள்ள வரையில் குடும்பசொத்தைப் பாகித்துக்கொள்ளவாவது, பாகித்துக் கொடுக்கும்படி அவனைக்கேட்கவாவது பிள்ளைகளுக்கு அக்காலத்தில் அதிகாரமில்லை. ஆனாலும் தகப்பனானவன் விருத்தாப்பிய தசையை யடைந்து மிகவும்

ஒடுங்கிப்போய்விட்டால் பிள்ளைகள் குடும்பசொத்துகளை பாகம் செய்துகொள்ளலாமென்று கொஞ்சகாலத்துக்குப்பிறகு ஏற்பட்டது. அதற்கும் பிறகு கடைசியாய், பாட்டன் முதலிய முன்னோர்கள் தேடிய குடும்பசொத்தில் தகப்பனும் பிள்ளைகளும் சமமானபாத்தியஸ்தர்கள் என்றும், அப்படிப்பட்ட பூர்வார்ஜிதமான சொத்தை பாகித்துக்கொடுக்கும்படி தனக்கிஷ்டமான போது மகன் தகப்பனைக் கேட்கலாமென்றும் ஏற்பட்டு விட்டது. இத்தென்னிந்தியாவில் பிரமாண கிரந்தமாக வழங்கி வரும் மிதாக்ஷரா என்னும் வியாக்கியான நூலை எழுதிவைத்த விக்ஞானேசுவர யோகியும் இவ்விதமே சொல்லிருக்கிறார்.

133. பிதுரார்ஜித சுவயார்ஜித பெயருண்டானகாரணம்.—மேற்கூறியவாறு குடும்பங்களில் ஐக்கியபத்தியம் குறைந்து வேறுபாடும் சுயநயமும் ஏற்பட்டதினால், தகப்பனுடைய அதிகாரம் மட்டுப்பட்டதோடு பிள்ளைகளுடைய சுதந்திரமும் அதிகரித்தது. அதனால் குடும்ப நிலைமையும் சொத்துக்களின் தன்மையும் இருவகையான பிரிவையடைந்தன. பிதா (தகப்பன்) முதலான முன்னோர்வழியாக வந்த சொத்துக்களுக்கும், ஒருவனால் சுயமாகவே சம்பாதிக்கப்படுகிற சொத்துக்களுக்கும் உள்ள வித்தியாசத்தால், முந்தியது **பிதுரார்ஜித** மென்ற பெயரையும், பிந்தியது **சுயார்ஜித** மென்ற பெயரையும் அடைந்தது. குடும்பஸ்தர்களெல்லோரும் ஐக்கியமாயிருந்து குடும்ப யோக க்ஷேமங்களை ஒன்றாய் நடத்துவது **அவிபக்த** நிலைமையென்றும், குடும்பஸ்தர்கள் பாகம் செய்துகொண்டு தனித்தனியாய் இருப்பது **விபக்த** நிலைமையென்றும் வழங்கத்தொடங்கிற்று.

134. பிதுரார்ஜிதம்.—முதல் மூன்று முன்னோர்களான தகப்பன் பாட்டன் முப்பாட்டன் (பிதா, பிதாமகர், பிரபிதாமகர்) ஆகிய இவர்களிடமிருந்து அடையும் சொத்துக்கள் பிதுரார்ஜிதம் எனப்படும். பிதுரார்ஜிதமான சொத்துக்கள் இம்மூன்று முன்னோர்களாலேயே தேடப்பட்டிருக்க வேண்டுமென்பதில்லை: இம்முன்னோர்களுடைய பூர்வீகர்களால் தேடப்பட்டு இம்முன்னோர்கள் வழியாக வந்திருக்கிற சொத்துக்களுக்கும் பிதுரார்ஜிதமேபாகும். தவிர பிதுரார்ஜித சொத்தானது இம்மூன்று முன்னோர்களாலும் ஒருவரின்பின் ஒருவரால் அடையப்பட்டு வந்து கடைசியில் ஒருவனுக்குச்

கிடைத்திருக்க வேண்டுமென்பதுமில்லை. இம்மூன்று முன்னோர்களில் எவரிடமிருந்து கிடைத்திருந்தபோதிலும் அச்சொத்து பிதுரார்ஜிதமே யாகும்.

தகப்பன் பாட்டன் முப்பாட்டன் ஆகிய மூன்று நேரான முன்னோர்களிடமிருந்து அடையப்படும் சொத்துக்கள் பிதுரார்ஜித மாகுமென்ற காரணத்தால் ஒருவனுடைய பிதுரார்ஜித சொத்தில் அவனுடைய மகன், பேரன், கொள்பேரன் (புத்திரன் பௌத்திரன், பிரபௌத்திரன்) ஆகிய முதல் மூன்று ஆண் சந்ததியார்களும் குடும்பத்தில் பிறந்தமாத்திரத்திலேயே பாத்தியஸ்தர்களாக ஏற்படுகிறார்கள். (19 பம். 528; 33 அல. 283.)

135. பொதுக்குடும்பம்.—(1) ஹிந்து குடும்பங்களில் சாதாரணமாய்த் தகப்பன், பிள்ளை, பேரன்கள் முதலியவர்கள் சேர்ந்து ஒரே குடும்பமாய் ஜீவனம் செய்துகொண்டிருப்பது வழக்கம். இக்குடும்பங்களில் சிலராவது, எல்லோருமாவது, பொதுச்சொத்தை பாகம்செய்து கொண்டு தனியாய்ப்போய் சம்சாரம் செய்தாலும், அவர்களுக்கு சந்ததியுண்டானவுடனே மறுபடியும் சந்ததிகளுடன் பொது குடும்பம் ஏற்படுகின்றன. இந்த பொது குடும்பத்தைப்பற்றியும், பொதுசொத்தைப்பற்றியும் பின்னால் விவரமாய்ச் சொல்லப்படும்

(2) குடும்பப்பொதுவான சொத்தில் பாகத்துக்குரியவர்களாயிருக்கிற பாகஸ்தர்கள் ஏகோபித்திருந்துக்கொண்டு குடும்பயோக க்ஷேமாதிகளை ஒருமித்து நடத்திவருவது அவிபக்த குடும்பம் அல்லது பொது நிலைமை என்று சொல்லப்படும்.

136. அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.—(1) ஹிந்து தர்மசாஸ்திரங்களின்படி ஸ்திரீகள் பாகத்துக்குரியவர்களல்ல. நம்முடைய மிதாக்ஷரை கிரந்தத்தின் படிக்கும ஸ்திரீகளுக்கு குடும்ப சொத்தில் பாகபாத்தியம்கிடையாது. ஆனதுபற்றி புருஷர்களே அவிபக்த குடும்பத்தைச்சேர்ந்த பங்காளிகளாக இருக்கிறார்கள்.

(3) அவிபக்த குடும்ப பாகஸ்தர்களாக இருக்கத் தகுதியுடையவர்கள் இன்னின்னார்களென்பது வைதீகமான சில சாஸ்திரவிதிகளையனுசரித்ததாகவிருக்கிறது. தர்ம சாஸ்திரங்களின்படி ஒரு ஹிந்துவானவன் தன்னுடைய தகப்பன், பாட்டன், முப்பாட்டன் ஆகிய

முதல் மூன்று முன்னோர்களுக்கும் உத்தரக்கிரியைகளைச் செய்யவும் அக்கிரியைகளிலும் சிரார்த்தாதிகளிலும் அவர்களின்பொருட்டு பூர்ண மான பிண்டங்களைப்போடவும் பாத்தியஸ்தனாகவும் கடமைப்பட்டவ னாகவும் இருக்கிறான்; அதுபற்றி உத்தரக்கிரியை முதலியவற்றைச் செய்து பிண்டம்போட பாத்தியஸ்தர்களாக இருக்கிற ஒருவனுடைய பிள்ளை, பேரன், சொள்பேரன் ஆகிய மூவரும் ஒருவனுக்கு சபிண்டர் களெனப்படுவார்கள். மேலும் பிண்டம்போடுகிறவர்களன்றி பிண்ட த்தைப் பெறத்தக்கவர்களான தகப்பன், பாட்டன் முப்பாட்டன் ஆகி யமூவரும் ஒருவனுக்கு சபிண்டர்களாக இருக்கிறார்கள். அல்லாம லும் ஒரே முன்னோர் அல்லது முன்னோர்களைக்குறித்து மேற்சொ ன்ன பிண்டங்களை எவர்கள் போடத்தகுந்தவர்களாயிருக்கிறார்களோ அவர்களும் ஒருவருக்கொருவர் சபிண்டர்களாகிறார்கள். அதாவது தகப்பனுடைய சந்ததியாரான சகோதரன், சகோதரனுடைய பிள்ளை, சகோதரனுடைய பேரன் ஆகிய இவர்களும், பாட்டன் முப்பாட்டன் களுடைய முதல் மூன்று சந்ததியார்களும், ஒருவனுக்கு சபிண்டர்க ளாக இருக்கிறார்கள். இவ்வாறு கீழாகவும், மேலாகவும், சுற்றுப்பக்கத் திலும் உள்ள முதல் மூன்று ஆண் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் ஒருவனுக்கு சபிண்டர்கள் என்று சொல்லப்படுவார்கள். (6 மது. ஹை. கோ. ரி. 94; 13 மூ. இ. அ. 373.)

(3) மேற் கூறியபடி பலர்கள் ஒருவனுக்கு சபிண்டர்களாயி ருந்தாலும் அப்பலர்களில் அநேகர் ஒருவருக்கொருவர் சபிண்டர்க ளாகிறதில்லை. எவர்கள் ஒருவருக்கொருவர் சபிண்டர்களாக இருக் கிறார்களோ அப்படிப்பட்டவர்களே அவிபக்த குடும்பபாகஸ்தர்களாய் இருக்கத்தகுந்தவர்களாகிறார்கள். அதாவது அவிபக்த குடும்பத்தி லிருக்கப்பட்ட ஒவ்வொரு பாகஸ்தனும் மற்றொவ்வொருவனுக்கும் சபிண்ட முறையில் இருக்கவேண்டும். அவ்விதமில்லாதவன் அந்த அவிபக்த குடும்பத்தைச்சேர்ந்த பாகஸ்தனாகமாட்டான்.

உதாரணம் —A-என்பவனுக்கு B-என்ற பிள்ளையும், C-என்ற பேரனும், D-என்ற சொள்பேரனும் E-என்ற சொள்பேரனுடையபிள்ளையும், இருக்கிறதாக வைத்துக்கொண்டால், E-என்பவன், B, C, D, என்ற மூவருக்கும் சபிண்டனாக இருந்தாலும் A-க்குச் சபிண்டனாகிறதில்லை. ஆகையால் A, B, C, D, ஆகிய இவர்களடங்கியகுடும்பத்தில் E-பாகஸ்தனாகமாட்டான். A-இறந்தபிறகே E யான

வன் பாகஸ்தனாகிறான். ஏனெனில் A-என்பவன் உயிரோடிருக்க B,C,D, மூவரும் ஒருசமயம் இறந்துபோய்விட்டால் அக்குடும்ப சொத்து பூராவும் A-என்பவனை யே சேர்ந்து அவனுக்குப்பின் அவனுடைய விபக்த சகோதரர் முதலான சமீப தாயாதிகளை வார்சு பாத்தியப்படி சேர்ந்துவிடுமேயன்றி E என்பவனுக்குச் சேராமட்டாது. ஆகையால் அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவர்க ளெல்லோருமே ஒருவருக்கொருவர் சபிண்ட முறைமையில் இருக்கவேண்டும்.

(4) பாட்டன், தகப்பன், சகோதரர் முதலானவர்களோடு அவிபக்த குடும்பமாயிருந்து பிறகு அவர்களிடமிருந்துபாகம் பிரித்துக் கொண்டு விலகுகிற ஒவ்வொருவனும் மகன் பேரன் முதலான ஆண் சந்ததியார்களுடன் மறுபடியும் அவிபக்த (பொதுகுடும்ப) நிலைமை யை அடையக்கூடியவனாக இருக்கிறானென்று 135 - வது பாராவில் சொல்லியிருக்கிறது. ஆனதுபற்றி அவிபக்த நிலைமையும் விபக்த நிலைமையும் ஒவ்வொரு குடும்பத்திலும் மாறி மாறி வந்துகொண்டே யிருக்கிறது.

137. பொதுகுடும்ப எஜமானன்.—பொதுக் குடும்பத்திலுள்ள ஸ்திரீகள் ஜீவனாம்சத்துக்கு மட்டும் பாத்தியஸ்தர்கள். (23 மத. 512; 31 கல். 476.) புருஷர்களில்கூட எல்லாரும் பொதுச்சொத்துக்கு பாத் தியஸ்தர்களல்ல சாதாரணமாய் அந்தகுடும்பத்தில் தகப்பன் எஜமான னாயிருந்து எல்லாக்காரியத்தையும் நடத்தவேண்டியது. தகப்பன் கிழத் தனம் முதலிய காரணங்களால் அசக்தனாயிருந்தாலும் அல்லது இற ந்துபோனாலும் பிள்ளைகளில் மூத்தவனும், அவனும் அசக்தனாயிருந் தால் புத்தியுள்ள தம்பி குடும்பகாரியங்களை நடத்தவேண்டும். (32 மத. 167; 29 கல். 799.)

138. தகப்பனுக்குப்பிறகு குடும்ப எஜமானன்.—பூர்வார்ஜித மான குடும்பசொத்தில் பிள்ளைகள் தகப்பனோடு சமமான பாத்தியஸ் தர்களாக இருந்தாலும், குடும்பத்தலைவனான தகப்பனே குடும்ப சொத்துக்களைத் தன் வசத்தில் வைத்துக்கொண்டு பரிபாலனம் பண் ணவும் குடும்பகாரியங்களை நடத்திவரவும் அதிகாரமுடையவனாக இரு க்கிறான். (1 அல. 77) தகப்பன் இறந்த பிறகு பிள்ளைகளில் மூத்தவ னாயிருக்கும் ஜேஷ்ட சகோதரனே குடும்ப மானேஜரென்னும் அதிகாரத்தை சாதாரணமாய் அடைவான். மூத்தவன் இருக்க இளை

யவன் அவ்வதிகாரத்தையும் அந்தஸ்தையும் அடைந்து விசேஷமாய் வழக்கத்திலில்லை. ஆனால் இளையவனொருவன் மற்ற பாகஸ்தர்களுடைய சம்மதம் அல்லது அங்கீகாரத்தின் பேரில் குடும்ப காரியங்களை நடத்திவந்தால் அவனே மானேஜராகவும் பாவிக்கப்படலாம். (29 கல். 751.)

139. குடும்ப எஜமானன் செய்கிறசெலவு.—அவிபக்த குடும்பப் பொதுவான சொத்துக்கள் குடும்பத்தலைவனான மானேஜருடைய வசத்தில் இருக்கத்தக்கதாயிருக்கின்றன. குடும்ப அவசியமான செலவுகளின்பொருட்டு அவன் தன்னிஷ்டப்படி செலவு செய்யலாம். சம்பளத்துக்கு வேலைபார்க்கிற ஏஜெண்டு முதலான அன்னிய மனுஷனைப் போல அவன் குடும்பச்செலவுகளை மட்டாயும் செட்டாயும் செலவழிக்கக் கடமைபட்டவனல்ல. (3 மது. ஹை. கோ. ரி. 177; 10 பம். 528; 17 பம். 271; 2 மது. 339; 22 அல. 307.)

140. குடும்ப செலவுக்கு கணக்கு.—குடும்ப மானேஜரானவன் தன்னால் செய்யப்படுகிற செலவுகளுக்குக் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்கிற அவசியமுமில்லை. ஆகிலும், பாககாலத்தில் அவன் மற்றவர்களால் கணக்குக் கேட்கப்படலாமாகையால் குடும்பார்த்தமாய் செய்யப்படும் செலவுகளுக்கு அவன் கணக்குவைத்து வருவதே உசிதமானதாகும். (17 பம். 271.)

141. செலவைக்குறைக்க கேட்கக்கூடாது.—குடும்பம் ஒன்றாயிருக்கும் வரையில் குடும்பார்த்தமாயும் நல்ல எண்ணத்தோடும் குடும்ப மானேஜரால் செய்யப்படும் செலவுகளுக்கு மற்றவர்கள் கட்டுப்பட்டே யிருக்கவேண்டும். குடும்பத்தலைவன் அதிகமாய்ச்செலவுசெய்கிறானென்றாவது அவனுடைய மேல்விசாரணை குடும்பத்துக்கு லாபகரமாயில்லை என்றாவது அபிப்பிராயப்படும் பாகஸ்தர்கள் பாகம் பிரித்துக்கொள்ள வழிதேடலாமேயன்றி மானேஜருடைய அதிகாரத்தை மட்டுப்படுத்தவாவது குடும்பச்செலவுகளை மட்டாகச் செலவழிக்க வேண்டுமென்று அவனை நிர்ப்பந்திக்கவாவது இடமில்லை. (1 மது. 561; 5 பம். 48; 1 அல. 105; 4 கல். 425.)

142. மோசமான செலவை வசூல்செய்வது.—ஆனால், குடும்ப மானேஜரால் செய்யப்படும் மோசடியான நடவடிக்கைகளை ரத்து

செய்துகொள்ளவும், அதனால் நேரிடும் நஷ்டங்களுக்கு அவனையே உத்தரவாதியாக்கவும், அவனால் செய்யப்படும் அனாவசியமான செலவுகளை அவனிடமிருந்து வசூல்செய்துகொள்ளவும் மற்ற பாகஸ்தர்களுக்கு பாத்தியமுண்டு. (4 பம். 29.)

143. எல்லாம் குடும்பக் கடனாகமாட்டாது.—மேலும் குடும்ப மானேஜரால் வாங்கப்பட்ட எல்லாக்கடன்களும் குடும்பார்த்தமான வையே என்று பாவிக்கப்படவுமாட்டாது. (21 பம். 898; 31 கல். 643.)

குடும்பப் பொதுவான திரவியத்தை மானேஜரானவர் தன்சொந்தச் செலவுகளுக்காக உபயோகித்திருந்தால் அதை அவனிடமிருந்து மற்ற பாகஸ்தர்கள் குடும்பத்துக்கு வசூல் செய்யலாம்.

144. குடும்ப எஜமானன் நடவடிக்கை.—குடும்ப மானேஜரானவன் குடும்பத்துக்கு வரவேண்டிய பணம் குத்தகை முதலியவற்றை வரப் பற்றவும், குடும்பத்திலிருந்து கொடுபடவேண்டியவைகளைக் கொடுக்கவும் குடும்பார்த்தமாயுள்ள சகலவித செலவுகளைச் செய்யவும், அவைகளின் பொருட்டு அவசியமானால் கடன்கள் வாங்கவும், அச்செலவுகளுக்காகவும் கடன்களுக்காகவும் அவசியமானால் குடும்பப்பொதுவான சொத்துக்களை அவசியத்தின் அளவுக்கு பந்தக பராதீனங்கள் செய்யவும் அதிகாரமுடையவனாக இருக்கிறான். மானேஜருடைய மேற்சொன்ன நடவடிக்கைகளுக்கு மற்ற பாகஸ்தர்களும் உடன்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். (9 கல். 508.)

145. குடும்ப எஜமானனுடைய நஷ்ட நடவடிக்கை.—ஆனால் குடும்பார்த்தமாயுள்ள அவசியமான காரணங்களன்னியில் குடும்பத் தலைவனானவன் தன் பங்கு வீதத்துக்கு மேற்பட்டசொத்தை பந்தக பராதீனம் செய்யக்கூடாது. (26 கல். 820; 21 அல. 83.) மேலும் காலாவதியாய்ப்போன ஒரு கடனை ஒப்புக்கொள்ளவாவது அக்கடனைக் குடும்பசொத்திலிருந்து தீர்க்கவாவது குடும்ப மானேஜருக்கு அதிகாரமில்லை. அது விஷயமாய் அவன் செய்யும் நடவடிக்கைகள் மற்றவர்களை எவ்வளவுங் கட்டுப்படுத்தவுமாட்டாது. (29 பம். 155; 17 பம். 512; 17 மது. 221; 5 மத. 169; 6 பாட். லா. ஜ. 256, 35 அல. 207.)

146. குடும்ப பொது சொத்தை வாங்குகிறவர் கவனிக்கவேண்டிய விஷயம்.—குடும்ப மானேஜருக்கு மற்ற பாகஸ்தர்களைக் காட்டிலும் விசேஷமான அதிகாரமிருந்தாலும் குடும்பப் பொதுசொத்தின் விநியோகமாவது குடும்பார்த்தமாயுள்ள அவசியத்தைப் பொறுத்ததாக இருக்கவேண்டியிருக்கிறபடியால், அவனுடைய பங்கு வீதத்துக்கு மேற்பட்ட சொத்தை அவனிடமிருந்து விநியோகம் பெறுகிறவர்கள் அவ்விநியோகத்தின் அவசியத்தைச் செவ்வையாய் விசாரித்துத் தெரிந்துகொண்டும் நல்ல எண்ணத்தோடும் விநியோகம் பெறவேண்டும். இல்லாவிடில் அவ்விநியோகம் மற்ற பாகஸ்தர்களுடைய பங்கு சம்பந்தப்பட்டமட்டில் செல்லமாட்டாது. (6 மூ. இ. அ. 391.)

147. தகப்பன் முதலிய முன்னோருக்கு அதிக அதிகாரம்.—குடும்பார்த்தமாயுள்ள செலவுகளின் பொருட்டும் கடன் முதலிய ஆவசியங்களின் பொருட்டு மாத்திரம் குடும்ப மானேஜரானவன் தன்பங்கு வீதத்திற்கு மேற்பட்ட குடும்ப சொத்தை விநியோகம் செய்யலாமென்று மேலே சொன்ன விதியானது ஜேஷ்ட சகோதரன் முதலான சாதாரண மானேஜருக்கே ஏற்பட்டது. தகப்பன் பாட்டன் ஆகிய முன்னோர்கள் குடும்ப மானேஜராக இருந்தால் அவர்கள் தங்கள் சொந்தக்கடன்களுக்காகவுங் கூட தங்கள் பங்கு வீதத்துக்கு மேற்பட்ட குடும்ப சொத்தை விநியோகம் செய்ய அதிகாரமுள்ளவர்களாக இருக்கிறார்கள். (1 இ. அ. 321; 16 மது. 99; 27 மது. 326; 17 இ. அ. 11.)

148. அவிபக்த குடும்பப்பொது சொத்துக்கள்.—(1) அவிபக்த குடும்பஸ்தர்கள் தங்கள் தகப்பன் பாட்டன் முப்பாட்டன் ஆகிய முதல் மூன்று முன்னோர்களிடமிருந்து அடைந்திருக்கும் சொத்துக்களும், அச்சொத்துகளுடைய விருத்திபம்சங்களும், அச்சொத்துக்களின் சகாயம் அல்லது உபயோகத்தைக்கொண்டு சம்பாதித்திருக்கிற சொத்துக்களும், குடும்ப பொதுவானதாகும். அதாவது பிதுரார்ஜித சம்பந்தமான சொத்துக்கள் யாவும் குடும்பப்பொதுவானதாக இருக்கின்றன. (22 இ. அ. 139.)

(2) மேலும் எல்லா பாகஸ்தர்களுஞ் சேர்ந்து பிரயாசைப்பட்டு சம்பாதித்திருக்கிற சொத்துக்களும் அவர்களுடைய குடும்பப் பொதுவானதாகும். (3 பம். 151; 10 மூ. இ. அ. 490; 3 கல். 508.)

(3) ஒருவன் தன் தாயின் தகப்பனிடமிருந்து தௌகித்திரபாத்தியப்படி அடைந்திருக்கிற சொத்தானது அவனுக்கும் அவனுடைய பிள்ளைகளுக்கும் பொதுவில் பாத்தியப்பட்ட குடும்பப்பொதுவான சொத்தாக இருக்கிறதென்று சமீபத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (25 மத. 687 ; 29 இ. அ. 156 ; 27 மது. 382.)

(4) ஒரு சொத்தானது ஒரு பாகஸ்தனால் குடும்ப திரவிய சகாயமன்னியில் தனியாய் சம்பாதிக்கப்பட்டிருந்தபோதிலும், அதை யவன் தன் தனியான சொத்தாக பாராட்டாமல் குடும்பப்பொதுவான சொத்துக்களோடு கலந்து குடும்பப் பொதுவானதாகவே பாவித்து வந்திருந்தால் அதுவும் குடும்பப்பொதுவானதாய் விடுகிறது. (3 இ. அ. 259 ; 16 இ. அ. 71 ; 16 கல். 397 ; 27 மது. 228 ; 10 மு. இ. அ. 490 ; 7 மது. 458; 21 பம். 349; 18 கல். 341; 40 அல. 159.)

149. அவிபக்த குடும்ப போதுச்செலவுகள்.—(1) குடும்பத்திலுள்ள குழந்தைகள், ஸ்திரீ புருஷர் இவர்களுடைய காலக்ஷேபத்துக்காகவும், வஸ்திரம் முதலிய ஆடைகளுக்காகவும், வித்தியாப்பியாசம், உபநயனம், கல்யாணம் முதலிய காரியங்களுக்காகவும், இன்னும் மற்ற வைதிக லவுகிக கர்மங்களுக்காகவும் குடும்ப சொத்திலிருந்து எஜமானன் தன்னிஷ்டப்படி செலவுசெய்யலாம். செலவை குருக்கவும், இவ்வளவு தான் செலவுசெய்ய வேணுமென்றும் கேட்க அந்தக் குடும்பத்திலுள்ள மற்றவர்களுக்கு அதிகாரமில்லை. வெகு செட்டாகவாவது உதாரியாகவாவது எஜமானன் சொத்தைச் செலவழிப்பது மற்றவர்களுக்கு ஏற்காதிருந்தால் அவரவர்களுக்கு வரவேண்டிய பாகத்தை மட்டில் கேட்கலாமேயொழிய அவனைக் கண்டிக்க அதிகாரமில்லை. (3 ம். ஐ. 177; 10 பம். 528.) குடும்ப சொத்தை எஜமானன் துர்வினியோகம் செய்தால் பாக காலத்தில் அதை அவன் பங்கில் குறைக்கலாம். ஆனால், குடும்ப இலாபத்துக்காக வர்த்தகம் செய்து நஷ்டமடைந்தால் அந்த நஷ்டத்தை எல்லாரு மொத்துக் கொடுக்கவேண்டும்.

(2) ஒவ்வொரு ஹிந்துப்பெண்ணும் கட்டாயமாய் விவாகம் செய்யப்பட வேண்டுமென்றும், பிராமணர் முதலிய உயர்ந்த ஜாதிகளில் பெண்ணானவள் விவாகமாவதற்கு முந்தியே புஷ்பவதியாய் விட்டால் ஜாதிபிரஷ்டையாய் விடுகிறாள் என்றும் சாஸ்திரங்களில்

சொல்லப்பட்டிருக்கிறது. ஆனதுபற்றி ஒவ்வொரு ஹிந்து தகப்பனும் தன் பெண்களுக்கு விவாசம் செய்யக்கடமைப்பட்டவனாக இருக்கிறான். ஆகையால் பெண்களின் விவாகம் சுபசோபனாதிகளின் பொருட்டு ஏற்படுகிற செலவுகளும் குடும்பப்பொதுவானதாக இருக்கின்றன. பிராமணர் முதலிய உயர்ந்த ஜாதிகளில் ஆண் பிள்ளைகளுக்கு கட்டாயமாய் உபநயனம் செய்யப்படவேண்டுமாகையால் அது நிமித்தம் ஏற்படுகிற செலவும் குடும்பப் பொதுவானதாகும். (23 மத. 512; 26 மத. 497; 35 மத. 728; 38 மத. 556.)

(3) ஆண் பிள்ளைகளுக்கு விவாகம் செய்யப்படவேண்டுமென்பது சாஸ்திரத்தின்படி கட்டாயமானதல்ல. விவாகம் என்ற ஸம்ஸ்காரமானது ஸ்திரீகளுக்குத்தான் பிரதானமேயன்றி, ஆண்களுக்குப் பிரதானமானதல்லவென்று சாஸ்திரங்களில் இருந்தபோதிலும், ஒரு ஹிந்து தன் குமாரர்களுக்கு விவாகஞ்செய்ய கடமைப்பட்டவன் ஆனதால், குமாரர்களின் விவாகத்தின் பொருட்டும் ஏற்படுகிற செலவுகள் குடும்ப அவசியமான பொதுச்செலவுகளாகாதென்று முன் தீர்ப்புகளிருந்தாலும், பின் தீர்ப்புகளால் குமாரர்களின் விவாகச்செலவுகளும் குடும்பப் பொதுச்செலவுகள் தான் என்று ஸ்திரப்பட்டிருக்கிறது. (32 பம். 81 ; 32 அல. 575 ; 37 மத. 273)

150. அவிபக்த குடும்பஸ்தர்களின் பாத்தியா பாத்தியம் — அவிபக்த குடும்பத்தைச்சேர்ந்த எல்லா பாகஸ்தர்களும் அக்குடும்ப சொத்துக்களைப் பொதுவிலனுபவிக்கவும் அவைகளிலிருந்து சம்ரக்ஷணாதிகளை யடையவும் சுதந்திரமுடையவர்களாக இருக்கிறார்கள். பாகஸ்தன் குடும்ப சொத்துக்களின் பொது அனுபவத்தினின்றும் விலக்கப்பட்டுவிட்டால் அவன் பாக வியாஜ்ஜியம் செய்யவேணுமென்ற அவசியமில்லை யென்றும், குடும்பசொத்தை மற்றவர்களுடன் சேர்ந்து பொதுவாய் அனுபவித்துவரும் பொருட்டும் வியாச்சியம் செய்யலாமென்றும், பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (20 பம். 467 ; 26 பம். 141.)

151. குடும்பபொது சொத்தை பாகஸ்தர்கள் சேர்ந்து அனுபவிக்கவேண்டும். — குடும்பப்பொதுவான சொத்துக்களை எல்லா பாகஸ்தர்களும் பொதுவில் அனுபவிக்க சுதந்திரமுடையவர்களாக இருக்கிறார்களென்றாலும், தகப்பன், ஜேஷ்ட சகோதரன் முதலான குடும்

பத்தலைவனே குடும்ப சொத்துக்களைப் பரிபாலனம் செய்யவும் குடும்பகாரியங்களை நடத்திவரவும் அதிகாரமுடையவனாக இருக்கின்றான் குடும்பத்தலைவன் நீங்கலான மற்ற கீழ்பட்ட பாகஸ்தர்களுக்கு அவ்வித அதிகாரமில்லை. பாகமாகும் வரையில் அவர்கள் குடும்ப சொத்திலிருந்து சம்ரக்ஷணை முதலியவற்றைபடைய பாத்திய முள்ளவர்களாக இருக்கிறார்களேயன்றி குடும்பப்பொதுவான சொத்தில் யாதொரு பாகத்தையாவது தனியாய் தங்கள் சுவாதீனப்படுத்திக்கொள்ளக் கூடாதவர்களாக இருக்கிறார்கள். (11 மு. இ. அ. 75.)

152. அவிபக்த குடும்பத்தில் ஒருவன் பாகம் இவ்வளவென்று குறிப்பிடமுடியாதென்பது,—பாகம் ஆகும் வரையில் குடும்பப்பொதுவான எல்லா சொத்துக்களும் அச்சொத்துக்களின் வரும்படிகளும் எல்லோருக்கும் பொதுவில் பாத்தியப்பட்டதாக இருக்கின்றன. பாகம் ஏற்படுகிறவரையில் அவிபக்தக்குடும்ப சொத்தில் ஒரு பாகஸ்தனுக்கு இவ்வளவு பங்கு இருக்கிறதென்று சொல்ல முடியாது. ஏனெனில் புதிதான பாகஸ்தர்கள் பிறக்க பாகஸ்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. அதனால் ஒவ்வொருவருக்கும் கிடைக்கக் கூடிய பங்கு வீதம் குறைவடைந்து கொண்டேவரும். பாகஸ்தர்களில் யாராவது ஒருவன் ஆண்சந்ததியின்றி இறந்து போனால் அவனுடைய பங்கு பாத்தியமானது அவனோடு மறைந்துபோய் பொதுக் குடும்ப சொத்துடன் சேர்ந்துவிட அதனால் உயிரோடிருக்கும் மற்ற பாகஸ்தர்களுடைய பங்கு வீதம் அதிகப்படுகிறது. ஆகையால் அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் தன் பங்கு இவ்வளவென்றாவது இன்னதென்றாவது குறிப்பிட முடியாது. (9 மு. இ. அ. 539; 16 மது. 11; 11 மு. இ அ. 75; 23 பம் 144.)

153. ஒருவன் செலவெல்லாம் குடும்பபொதுசொத்தில் கொடுக்கவேண்டும்.—அவிபக்த குடும்பத்திலுள்ள ஒவ்வொரு பாகஸ்தனும் அவனுடைய பெண்டுபிள்ளைகளும் குடும்பபொதுவான எல்லா சொத்துக்களைக் கொண்டும் சம்ரக்ஷிக்கப் படுகிறார்களே யன்றி அவரவருடைய பங்கிலிருந்து அவரவர்கள் சம்ரக்ஷணைமுதலியவற்றை யடைகிறார்களென்பதில்லை. குடும்பம் ஒன்றாயிருக்கும் வரையில் குடும்

பார்த்தமாய் எவன் பொருட்டு எவ்வளவு செலவழிந்தாலும் அவ்வளவும் குடும்பப்பொதுவான செலவுகளாகவே பாவிக்கப்படும். உதாரணமாக:-ஒரு பாகஸ்தனுக்கு அநேக குழந்தைகளிருந்து அவர்களுடைய சம்ரக்ஷணை உபாயனம் விவாகம் சோபனம் முதலிய குடும்ப அவசியங்களின் பொருட்டு அதிகமாக செலவழிந்தாலும் அவையாவும் குடும்பப் பொதுவான செலவுகளாகவே எண்ணப்படும். ஒரு பாகஸ்தன் நிமித்தம் இவ்விதமாய் ஏற்படும் அதிகச்செலவுகளை மற்றவர்கள் ஆக்ஷேபிக்கவாவது பாகத்தில் ஒத்துக்கொடுக்க வேணுமென்று வழக்குச்சொல்லவாவது கூடாது. (5 பங்காள லா ரிபோர்ட்டு 347, 349.)

154. பொதுக்குடும்பத்தில் ஒருவனிறந்தால் அவன் சொத்து மற்றபாகஸ்தர்களுக்கு சேருவது.—(1) குடும்பம் அவிபக்தநிலைமையிலிருக்கும்போதே ஒருபாகஸ்தன் ஆண்சந்ததியின்றி இறந்துபோய் விட்டால் அவனுடைய பாகபாத்தியமானது பொதுக்குடும்ப சொத்தோடு சேர்ந்துவிட அப்பங்குக்குள்ள சொத்தையுஞ்சேர்த்து உயிரோடிருக்கும் மற்ற பாகஸ்தர்கள் அடைந்துவிடுகிறார்கள் என்று மேலே சொல்லப்பட்டது. (152-வது பிரிவைப்பார்க்க). அப்படியடைவதற்கு ஸர்வைவர்ஷிப் பாத்தியம் என்று இங்கிலீஷில் சொல்லப்படுகிறது. ஆண் சந்ததியை வைத்துவிட்டு இறந்துபோகிறவனுடைய பங்கு பாத்தியம் அச்சந்ததியாரையே சேருகின்றது. ஆண் சந்ததியின்றி இறந்துபோகிறவனுடைய பங்கு பாத்தியமானது சகோதரர் முதலிய மற்ற பங்காளிகளைச் சேருகின்றது. இறந்து போனவனுடைய பெண்ஜாதி ஆயுசுகாலம்வரையிலும், புத்திரிகள் விவாகமாகும் வரையிலும் குடும்பத்தில் ஜீவனம்ச பாத்தியஸ்தர்களாகமட்டும் இருக்கிறார்களேயன்றி அவர்களுக்கு யாதொரு பங்கு பாத்தியமும் கிடையாது. ஆனாலும் புத்திரிகளுடைய சம்ரக்ஷணையன்றி விவாகம் கிரகப்பிரவேசம் சாந்திமுகூர்த்தம் முதலிய சுபசோபனங்களும் குடும்ப சொத்திலிருந்து நடத்தப்படவேண்டும். (26 மது. 497.)

(2) ஆண் சந்ததியின்றி ஒவ்வொரு பாகஸ்தனும் இறந்துகொண்டே வந்தால் குடும்பசொத்து முழுவதும் கடைசியில் உயிரோடிருக்கும் பாகஸ்தனையே சேர்ந்து, அவனுக்குப்பின் அவனுடைய சந்ததியாரையே யடைகிறது. அவனும் சந்ததியில்லாமல் இறந்துபோனால் அவனுடைய விதவையே குடும்பசொத்துக்களை யடையத்

தக்கவளாகிறுள். முன்னாடியே இறந்துபோய்விட்ட பாகஸ்தர்களின் விதவைகள் கடைசியிலிறந்த பாகஸ்தனுடைய விதவையினிடமிருந்து ஜீவனாம்சம்பெறவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

(3) ஆண் சந்ததியையுடைய ஒரு பாகஸ்தன் இறந்துபோனால் அவனுடைய பிரதிநிதிகளான மகன் முதலான அச்சந்ததியாரே அவனுடைய பங்கு பாத்தியத்தில் நிற்கிறபடியால், அப்பங்கு அவனுடைய சகோதரன் முதலான மற்றவர்களுக்கும் ஸர்வைவர்ஷிப்புப்படி பாத்தியப்படுகிறதில்லை (5 மது. 362; 1 அல. 105.)

155. போதுக்குடும்பத்தில் ஒருவனுடைய சுவயார்ஜிதம் அவன் சந்ததியாருக்குச் சேருவது.—ஒருவன் அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவனாக இருந்தபோதிலும் அவனுடைய சுவயார்ஜிதமான சொத்துக்கள் முழுவதும் அவனுக்கே பாத்தியப்பட்டதாயிருக்கின்றன. மற்றவர்களுக்கு அதில் யாதொரு பாத்தியமும் இல்லை. ஆண் சந்ததியில்லாமல் அவன் இறந்துபோனாலும் அச்சுவயார்ஜித சொத்துக்கள் அவனுடைய பெண்சாதி, பெண், தௌஹித்திரன் முதலான வார்சுகளுக்குச் சேருமேயன்றி சகோதரன் முதலான அவிபக்த குடும்ப பாகஸ்தர்களுக்குச் சேர்ந்து விடமாட்டாது. (9 மு இ. அ. 610; 5 இ. அ. 61; 5 இ. அ. 190; 1 மது. 312; 17 கல். 33.)

156. போதுக்குடும்பத்தில் ஒருவன் சுவயார்ஜிதத்தை செலவழித்து பின்வாங்கிக்கொள்ள ஏற்பாடுசெய்வது.—ஒருவன் தன் சுயார்ஜித சொத்தைக் குடும்பப்பொதுவான செலவுகளுக்கு உபயோகப்படுத்த வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஒரு சமயம் உபயோகப்படுத்தும்படி நேர்ந்தாலும் பின்னிட்டு அதை வாபசு பெற்றுக்கொள்ளும் விஷயமாய் மற்றவர்களுடன் ஏதேனும் ஒரு ஏற்பாடு செய்துகொள்ளலாம். (1 மது. ஹை. கோ. ரி. 309.)

157. பாகவியாச்சியம்.—அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு பாகஸ்தனும் தனக்குள்ள பங்கைப் பிரித்துக்கொடுக்கும்படி தனக்கிஷ்டமானபோது குடும்பத்தலைவனைக் கேட்கலாம். அவசியமானால் அதற்காக வியாச்சியமும் செய்யலாம். மேலும் குடும்பத்தினுடைய ஸ்திதி இன்னதென்று அறிந்துகொள்ளும்பொருட்டு குடும்பத்தலைவனைக் கணக்கும் கேட்கலாம். பாகவியாச்சியம் செய்யும்

போதும் குடும்ப பரிபாலனத்தைப்பற்றி கணக்குகொடுக்கும்படிக்கு குடும்பத்தலைவனைக் கேட்கலாம். (17 பம். 271.)

158. மைனருக்காக பாகவியாச்சியம்.—ஆனால் மைனராயிருக்கும் பாகஸ்தனுக்கு மேற்கூறியபடி பாகம் கேட்கவாவது பாகத்துக்காக வியாச்சியம் செய்யவாவது அதிகாரமில்லை. ஆகிலும் குடும்பத்தலைவனுடைய நடவடிக்கைகள் குடும்பசொத்துக்கும் மைனர் பாகத்துக்கும் நஷ்டம் உண்டுபண்ணக் கூடியதாயிருந்தாலும் அல்லது குடும்பத்தில் மைனரின் பாத்தியம் மறுதளிக்கப்பட்டாலும் மைனரின் பொருட்டும் அவனுடைய கார்டியன் அல்லது அடுத்த சிநேகிதன் பாகத்துக்காக தாவா செய்யலாம் (8 கல் 537; 12. மது. 401; 29 அல. 373; 19 பம். 99.)

159. ஒருபாகஸ்தனின் பங்கைவாங்கியவனால் பாகவியாச்சியம்.—ஒவ்வொரு பாகஸ்தனும் குடும்பப்பொதுவான சொத்தில் தன் பங்கு வீதத்துக்குள்ளதை அடமான ஒத்தி கிரயம் முதலிய பந்தக பருதீனங்களுக்குட்படுத்தவும் சுதந்திரமுடையவனாக இருக்கிறான். (5 கல். 148; 25 மத. 690; 42 மத. 154; 44 பம். 341; 15 அல. 339; 20 இ. அ 116). அவிபக்த குடும்பத்திலுள்ள ஒரு பங்காளியிடமிருந்து ஒத்தி கிரயம் முதலான விநியோகத்தைப் பெற்ற அன்னியன் தான் விநியோகம் பெற்ற பங்கை அவன் ஜீவகாலத்திலேயே மற்ற பாகஸ்தர்களுடன் சேர்ந்து பொதுவிலனுபவிக்கலாம். சவுகரியப்படாவிட்டால் பாகத்துக்காக வழக்கிட்டு தான் வாங்கின பங்கைத் தனியே பிரித்துச் சுவாதீனப்படுத்திக்கொள்ளலாம். (45 மத. 449; 29 மத 294; 1 லாகூ 134; 2 பாட் 386. 11. இ. அ. 26; 4 இ. அ. 247.)

160. அவிபக்த பாகஸ்தனொருவன் தன்பங்கை தானஞ்செய்யக்கூடாது.—ஆனால் ஒருபாகஸ்தன் தன்பங்குக்குள்ள சொத்தை தானம் செய்யவாவது உயில்செய்யவாவது கூடாது (27 மத. 162; 12 பம். ஐ. கோ. 229; 19 பம். 803; 7. இ. அ. 181; 42 அல. 461.) ஏனெனில் அவிபக்த குடும்பத்தைச்சேர்ந்த ஒருபாகஸ்தன் இறந்துபோனால் அவனுடைய பங்கானது சர்வைவர்ஷிப் என்னும் பாத்தியப்படி அவன் இறந்த நிமிஷமே மற்றவர்களையடைந்து விடுகிறது. இறந்த பிற்பாடே ஊர்ஜிதத்துக்கு வரவேண்டியதாயிக்கிற உயிலிற்கண்ட

பாத்தியமானது பிந்தினதாக ஏற்பட்டு விடுகிறபடியால் அவ்வுயில் பிரயோஜனமற்றதாய் விடுகிறது. (8 ம. ஹை. கோ. ரி. 6.)

161. ஒரு பங்காளிக்கு அதிகச்செலவு.—பொதுக் குடும்பத்தில் ஒருவனுக்கு அதிக குழந்தைகளிருந்து, அவர்களுடைய சுபசோபனங்களுக்காவது, வேறு காரணங்களுக்காவது அதிகச்செலவு பிடித்தால், அதை எல்லாரும் ஒத்துக்கொடுக்கவேண்டுமென்று 153-வது பிரிவில் சொல்லியிருக்கிறது. (5 க. ஐ. 347, 349) ஆனால் சிலகுடும்பத்தில் அதிகச்செலவு யாரால் நேர்ந்ததோ அவர்பாகத்தில் குறைப்பதும் வழக்கமுண்டென்று ஏற்பட்டிருக்கிறது. (5 மூ. இ. அ. 540.)

162. போதுக் கடன்கள்.—குடும்பப் பொதுச்செலவுக்காக அக்குடும்ப எஜமானனால் வாங்கப்பட்ட கடனை எல்லா பாகஸ்தனும் கொடுக்கவேண்டும். ஆனால் காலாவதி தப்பிப்போன யாதொரு பத்திரத்தை, எஜமானன் மற்ற பாகஸ்தர்களுடைய அனுமதியின்றி புதுப்பித்தால் அவன் மட்டும் அதற்குக் கட்டுப்படுவான், (145-வது பிரிவை கவனிக்கவும்) (5 ம. 169; 17 பம். 512.)

163. குடும்ப போது வியாபாரம்.—ஒரு அவிபக்த குடும்பத்தார் எப்படி பிதுரார்ஜித சொத்துக்களை அடைகிறார்களோ அப்படியே ஒரு வியாபாரம் அல்லது தொழில் பாத்தியத்தையும் சமமாய் அடைகிறார்கள். பாகஸ்தர்களில் ஒருவர் இறந்தாலும் வியாபாரத்தை நிறுத்தாமல் தொடர்ச்சியாய் நடத்தலாம். (5 பம் 33; 14 பம் 189; 5 கல் 792; 29 அல. 176.) குடும்பத்தின் பொதுவில் எஜமானன் அல்லது மனேஜர்வாங்கின கடனை எல்லாபாகஸ்தர்களும் கொடுக்கவேண்டும். (2 லா. கூ. 159; 20 பம். 767; 26 பம். 206.) எஜமானனைத்தவிர மற்ற பாகஸ்தர்கள் எவரும் பொதுவில் கடன்வாங்க அதிகாரமில்லை. (23 மத. 597) குடும்ப எஜமானன் அன்னியர்களையும் பங்குக்காரர்களாய்ச் சேர்த்துக்கொள்ளலாம். அப்படி சேர்த்துக்கொண்ட எஜமானன் இறந்துபோனால் அந்தக் கூட்டுப்பங்கு ரத்தாய்விடும்; மற்றகுடும்ப பாகஸ்தர்களின்மேல் கூட்டுப்பங்குகாரன் தன்பங்குக்காக தாவா செய்ய முடியாது. (41 மத. 545; 43 அல. 116.) பொதுக்குடும்பத்துடன் வாழ்கிற ஒருவர், வியாபாரம் செய்தால், உடன்படிக்கை இருந்தாலன்றி, குடும்பப்பொதுவில் வியாபாரம் செய்கிறார் என்று எண்ணக்கூடாது. (27 பம். 157; 40 கல். 523; 48 இ. அ. 162; 2 லா. கூர் 40.)

164. வரவுசேலவை பரிசோதிப்பது.—யாதொரு பொதுக் குடும்பத்திலுள்ள எவராவது குடும்ப வரவுசெலவு கணக்குகளைக் காட்டும்படி, சாதாரண காலத்திலாவது, பாககாலத்திலாவது குடும்ப எஜமானனைக்கேட்டால் அவன் தடையின்றிக்காட்டவேண்டும். (5 க. ஐ. 354) பாககாலத்தில் தவிர மற்ற காலத்தில் கணக்குக்கேட்கக்கூடாதென்று முன் தீர்மானமாயிருந்தது. (6 மூ. இ. அ. 540; 9 ஸ. 483; 3 க. ஐ. 1) ஆனால், இப்போது ரத்தாய்விட்டது.

165. பொது தாவா.—(1)பொதுகுடும்பத்தாருக்கு வரவேண்டிய கடனைப்பற்றி தாவாசெய்தால் எல்லாரும் சேர்ந்துவாதியாக தாவாசெய்யவேண்டும். (32 மத. 284) மேற்படி குடும்பசொத்தைப் பற்றியாவது அவர்களால் கொடுக்கவேண்டிய கடனைப்பற்றியாவது வேறேயாராவது தாவா செய்தால் அந்தக் குடும்பத்தாரெல்லாரையும் பிரதிவாதிகளாகச் சேர்க்கவேண்டும். இல்லாவிட்டால் தாவா செல்லாது. (3 ம. 234; 11 க. 338, 615; 17 க. 160; 1 க. 226; 11 பம். ஐ. 69; 6 ம. 90; 12 பம். ஐ. 85; 3 பம். 23; 7 க. 470; 7 அ. ஐ. 58; 8 க. 353; 12 க. ஐ. 291; 4 க. 96; 5 க. 941; 7 பம். 217.)

(2) ஆனாலும் ஒரு பாகஸ்தன் அல்லது மானேஜர் குடும்பத்தின் பொருட்டு ஏதாவது ஒரு உடன்படிக்கை அடைமானம் அல்லது விற்பனையை தன் பெயரால் மட்டும், பிறனொருவனோடு செய்துகொண்டிருந்தால் அவ்வுடன்படிக்கை சம்பந்தமாயுள்ள வியாச்சியத்தை அவன் மட்டும் கொண்டுவரலாம், அல்லது அவன் கட்சிக்காரனாக சேர்க்கப்படலாம். (38 இ. அ. 45; 46 பம். 358; 9 பம். 311; 25 அல. 378; 27 அல. 361; 32 மத. 284.)

(3) அவிபக்த குடும்பத்தின்பேரில் வியாச்சியம்கொண்டுவருகிற அன்னியன் குடும்பத்தின் பிரதிநிதியான குடும்பமானேஜரையாவது அல்லது எல்லா பாகஸ்தர்களையுமாவது கக்ஷியில்சேர்த்துதாவா செய்யலாம். ஆனால், குடும்பசொத்து விஷயமாயுள்ள வியாச்சியங்களில் எல்லாபாகஸ்தர்களும் கக்ஷிக்காரர்களாக சேர்க்கப்படவேண்டும்.

(4) ஹிந்துகுடும்பங்களில் முதலில் அவிபக்த நிலைமையும் அதிலிருந்து பிறகுவிபக்த நிலைமையும் ஏற்பட்டுவருகிறபடியால், ஒரு வியா

ச்சியத்தில் சம்பந்தப்பட்ட வாதிப்பிரதிவாதிகள் பாகம் பிரிந்தவர்களா அல்லது பிரியாதவர்களா என்றகேள்விபிறந்தால், அவர்கள் பாகம் பிரியாதவர்களென்றே முதலில் பாவிக்கப்படுவார்கள். பாகம் பிரிந்த தாக வாதாடுகிறவனே தன் வாதத்தை முதலில் ருசுப்படுத்தவேண் டும். (9 மூ. இ. அ. 66; 8 பம். 154; 17 கல். 85.)

166. மிதாட்சரப்படி பாகபாத்தியம்.—பொதுக் குடும்பத்திலு ள்ள புருஷரெல்லாம் பொதுச்சொத்துக்கு பாகஸ்தர்களல்லவென்று 136-வது பிரிவு (3) உட்பிரிவில் சொல்லியிருக்கிறோம். அவனவன் தகப்பன் தேடிவைத்த சுவயார்ஜித சொத்துக்கு மட்டுந்தான் அவன வன் பாத்திய முடையவன்; மிதாட்சரப்படி பிள்ளைபாகப் பிறந்தவுட னே அந்தப் பிள்ளைக்குத் தன் தகப்பன் பிதுரார்ஜித சொத்தில் பாக ங்கிடைக்கும். பிதுரார்ஜிதசொத்துக்கு மூல புருஷனாக ஏற்பட்டவ னுக்குக் கீழ் பிண்டப்பிரதானம் உத்தர கிரியை முதலியது செய்யக் கூடிய பிள்ளை, பேரன், கொள்பேரன் முதலிய மூன்றுதலைமுறைவ ரையிலுள்ளவர்க்குத்தான் குடும்ப சொத்தில் பாகங்கிடைக்கும். மூன்று தலைமுறை தாண்டிப் பிறந்தவர்களுக்கு பாக பாத்தியம் கிடை யாது. மேலேசொன்ன பிள்ளை, பேரன், கொள்பேரன் முதலிய பாத் தியஸ்தர்களைத்தான் பொதுச்சொத்துக்கு பாகஸ்தர்களென்று சொல் லப்படுவார்கள். ஆனால், கொள்பேரனுக்குப் பிள்ளைபிறந்து அவன் பாகம் கேட்கும்வரையில் பிழைத்தவர் கிடையாது.

167. பொதுச்சொத்தில் தனிப்பாத்தியம்.—பொதுச்சொத்தை பாகஸ்தர்களெல்லாம் பொதுவாய் அனுபவிக்கலாமேயொழிய தனித் தனியாய் அவனவன் பாகத்தை யனுபவிக்க பாத்தியமில்லை. ஏனெ ன்றால், பொதுச்சொத்துக்கு பாத்தியமுள்ளவர்களில் ஒருவனிறந் தால் அவன்சொத்து மற்றவர்களுக்குச் சேரும். அல்லது ஒருவன் பிறந்தால் பாகஸ்தர்களின் சொத்து குறையும். ஆகையால் குடும்பம் பிரிகிற வரையில் ஒவ்வொருவனுக்கு மிவ்வளவு பாகந்தான் கிடைக்கு மென்று சொல்வதரிது. (152-வது பிரிவைப்பார்க்கவும்.)

168. அப்பிரதிபந்த சொத்து.—முதல் மூன்று முன்னோர்க ளான தகப்பன், பாட்டன், முப்பாட்டன்களுடைய சொத்துக்களு க்கு பிள்ளை, பேரன், கொள்பேரன் ஆகிய முதல் மூன்று சந்ததியார் கள் நேரான முதல் வார்சுகளாக இருக்கிறார்கள். இச்சந்ததியார்களின்

ருக்கும்போது அச்சொத்தானது வேறு எவனையும் சேரமாட்டாது. அதுகாரணம் பற்றி ஷை மூன்று முன்னோர்களிடமிருந்து பிள்ளை, பேரன், கொள்பேரன் என்றமுறைபற்றி அடையப்படும் சொத்துக்கள் அப்பிரதிபந்தசொத்துக்களெனப்படும். பிரதிபந்தம் - என்றால் தடை; அப்பிரதிபந்தம் என்றால் தடையின்மை; இங்கு வேறு எந்த வார்சுகளாலும் தடுக்கப்படாமலிருப்பது என்பது பொருள். பிள்ளை, பேரன், கொள்பேரன், என்றவார்சு பாத்தியத்தால் சொத்தையடைவது அப்பிரதிபந்ததாயம் (நேரான வார்சு) எனப்படும். அப்பிரதிபந்த தாயத்தால் அடையும் சொத்துக்கள் மேற்குறித்தபடி பிதுரார்ஜிதமானவைகளாகவே இருக்கின்றன. (20 மதா. 207).

169. சப்பிரதிபந்த சொத்து.—மேலே சொன்ன முதல் மூன்று முன்னோர்களல்லாத மற்றெல்லோரிடமிருந்தும் வார்சு பாத்தியப்படி அடையும் சொத்துக்கள் சப்பிரதிபந்த (அநந்தரவார்சு) சொத்துக்களெனப்படும்; (அதாவது தடையோடு கூடிக்கொண்டிருக்கிற தாய சொத்துக்கள் என்பது பொருள்.) முதல் மூன்று முன்னோரல்லாத மற்றவர்கள் சந்ததியின்றி இறந்துபோனாலொழிய அவர்களுடைய சொத்துக்கள் பிறனொருவனுக்குச் சேரமாட்டாது; மேலும் வார்சுக்கிரமத்தில் முந்தினவர்களிருக்கப் பிந்தினவர்களுக்கு சொத்து கிடைக்கவுமாட்டாது. ஆண் தலைமுறையிற் சேர்ந்த முதல் மூன்று முன்னோர்களைத் தவிர மற்றவர்களிடமிருந்து சொத்துக்களை வார்சு பாத்தியத்தால் அடைவது இவ்வாறு நிச்சயமற்றதாயும் தடையுடன் கூடினதாயுமிருக்கிறபடியால் அப்படிப்பட்ட சொத்து சப்பிரதிபந்த தாயசொத்து (அநந்தரவார்சு சொத்து) என்று சொல்லப்படுகிறது.

170. அநந்தரவார்சாய் கிடைக்கும் சொத்து சுவயார்ஜிதமென்பது.—அகஸ்மாத்தாய் (எதேச்சையாய்) ஏற்படுகிற சப்பிரதிபந்ததாயமானது மேற்சொன்னபடி நிச்சயமற்றதாயிருப்பதுடன் அச்சொத்தை அடைபவனுக்கு அநந்தரவார்சு பாத்தியம் ஏற்படுகிறவரையில் அச்சொத்தில் யாதொரு பாத்தியமும் இல்லாமலிருக்கிறது. அது பற்றி அவனுடைய மகன் முதலிய சந்ததியார்களுக்கு பிறந்த மாத்திரத்தினாலேயே அச்சொத்தில் யாதொருவித பாத்தியமும் ஏற்பட நியாயமில்லை என்றும், சப்பிரதிபந்ததாய (அநந்தரவார்சாய்) சொத்

ஷை யடைந்தவன் இறந்துபோன பிறகே அவனுடையமகன் முதலான சந்ததியார்களுக்கு அதில் பாத்தியம் உண்டாகிறதென்றும், அதுகாரணம்பற்றி சப்பிரதிபந்ததாயத்தால் அடையும் சொத்துர்கள் யாவும் அடைபவனுடைய சுவயார்ஜிதமென்றே பாவிக்கப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (1 அல. 651.)

171. மாதாமகர்சோத்து பிதுரார்ஜிதம் —(1) ஆனாலும் மேற்சொன்ன தீர்ப்பு இப்பால் ஒருவகையான மாறுதலை யடைந்திருக்கிறது. அதாவது, மாதாமகரிடத்திலிருந்து (தாயினுடைய தகப்பன்) தௌகித்திர பாத்தியப்படி யடையும் சப்பிரதிபந்த தாயசொத்து தௌகித்திரனுடைய சுவயார்ஜிதமாக மாட்டாவென்று மதராஸ் ஹைகோர்ட்டார் கொஞ்சகாலத்துக்கு முன் தீர்மானிக்க (22 மது. 305.) மேலான ப்ரிவி கௌன்சில் கோர்ட்டார் சமீபத்தில் இன்னமும் அதிகமான மாறுதலைச்செய்து அடியில் வருமாறு தீர்மானித்திருக்கிறார்கள். அதாவது, தகப்பனுடைய தகப்பன் எப்படி முன்னோன் என்று சொல்லப்படுகிறானோ அதுபோலவே தாயினுடைய தகப்பனான மாதாமகரும் முன்னோன் என்ற அந்தஸ்தில் சேர்ந்தவரென்றும். அவரிடமிருந்து தௌகித்திரபாத்தியப்படி யடையும் சொத்தானது தௌகித்திரனுடைய சுயார்ஜிதசொத்தாகாமல் பூர்வார்ஜிதமான சொத்தாகவே பாவிக்கப்படவேண்டுமென்றும், அத்தௌகித்திரனுடைய பிள்ளை முதலான ஆண்சந்ததியாருக்குப் பிறந்தவுடன் அதில் பாத்தியம் ஏற்படுகிறதென்றும் இப்பால் பிரிவிகௌன்சில் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (25 மது. 687; 29 இ. அ, 156.) இதையனுசரித்து மதராஸ் ஹைகோர்ட்டாரும் சமீபத்தில் அவ்வாறே இரு கேசுகளிலும் தீர்மானித்திருக்கிறார்கள். (27 மது. 300, 382.)

(2) ஆனால், முன்னோன் முறையிலிருக்கிற மாதாமகர் முதலானோர் நீங்கலாக மற்றெல்லோரிடமிருந்தும் சப்பிரதிபந்த தாயத்தால் (அநந்தரவார்சு பாத்தியத்தால்) அடைகிற சொத்துக்கள் சுயார்ஜிதமென்றே பாவிக்கப்படும். மேலும், தாயார் உள்பட எல்லா ஸ்திரீகளிடமிருந்தும் வார்சுபாத்தியப்படி யடையும் சொத்துக்கள் யாவும் சுயார்ஜிதங்களே யாகும். (27 மது. 300.)

172. பொதுக்குடும்பத்தில் பாக யோக்கியமுள்ளவர்கள் :—

(1) சேஷய்யர்

(மூலபுருஷன்)

மூலபுருஷன் பிள்ளைகள்.

(4) கிருஷ்ணய்யர். (3) இலட்சுமணய்யர். (2) நாராயணய்யர்.

மூலபுருஷன் பேரன்கள். (5) வேணுகோபாலய்யர்.
(மூலபுருஷன்பேரன்.)

(7) வரதய்யர். (6) ரெங்கய்யர்.

(மூலபுருஷன் கொள்பேரன்கள்.

(8) சுப்பய்யர்.

(9) இராமய்யர்

(10) வேம்பய்யர்.
(கொள்பேரன் பிள்ளை).

மேலே விவரித்திருக்கிற வம்ச விருட்சத்தில் 1 2, 3, பெயர்கள் மட்டுமிருந்தால் பிதுரார்ஜித சொத்தில் ஒவ்வொருவருக்கும் 3 - ல் ஒரு பாகம் கிடைக்கும் 1, 2, 3, 4, பேர்களிருந்தால் 4 - ல் 1 பாகம் கிடைக்கும் ; 1 - வது புருஷன் இறந்துபோனால் 2, 3, 4 இவர்களுக்கு 3 - ல் 1 பாகம் கிடைக்கும், 4 - வது புருஷனு மிறந்துபோய்விட்டால் 2, 3 புருஷர்களுக்குச் சொத்தில் பேர்பாதி கிடைக்கும். குடும்பம் ஏகோபித்திருந்து 1, 2, 3, 4 இவர்களிறந்த பிறகு 5, 6, 7, இவர்கள் பாகம் செய்துகொண்டால் 5-வது புருஷனுக்கு பேர்பாதி ஆஸ்தியும், 6, 7 பேர்களுக்கு ஒவ்வொருவனுக்கும் 4-ல் 1 பங்கு ஆஸ்தியும் கிடைக்கும். 8, 9 பேர்வழிகளுக்கு 5-வது புருஷன் பாகத்தை தான் அவர்கள் சரியாக பாகம் செய்துகொள்ள வேண்டும். 10-வது புருஷன் மூன்று தலைமுறைக்கு மேலாய்

விட்டதால் அவனுக்கு பாகம் கிடைக்காது. எல்லோருக்கும் முந்தி மூலபுருஷனிறந்தால், 2, 3, 4 பேர்கள் மூலபுருஷர்களாகி பின் 10 - வது பேர்வழி 2 - வது மூலபுருஷனுடைய பாகத்தில் பாகம் கேட்கலாம்; 1, 4, 8, 10 - வது புருஷர்கள்மட்டும் பாககாலத்தில் ஜீவித்திருந்தால், 1, 4, 8 பேர்கள்மட்டும் பிதுரார்ஜித சொத்துக்கு பாகஸ்தர்களே தவிர 3 தலைமுறை தாண்டின 10 - வது புருஷனுக்கு பாகம் கிடையாது.

173. மூலபுருஷனைவிட்டு மூன்று தலைமுறை எண்ணவேண்டியது.—இதற்கு முந்தின பாராவில் சொல்லியபடி 3 தலைமுறைக்கணக்கு மூலபுருஷனைவிட்டுப் பிறகு எண்ணவேண்டும்; மூலபுருஷனுக்குப்பிறகு 3 தலைமுறை தாண்டாமலிருந்தால் பிதுரார்ஜிதசொத்தில் பாகங்கிடைக்கும். (10 பம். ஐ 449, 463; 6 ம. 94, 106.)

உதாரணம்.

(1) ரெங்கய்யர்

(மூலபுருஷன்)

(2) இராமய்யர்—ஷை யான்பிள்ளை.

(3) கிருஷ்ணய்யர்—ஷை மூலபுருஷன்பேரன்.

மூலபுருஷன் கொள்பேரன்கள்,

(4) வாசுவய்யர். (5) சந்திரமய்யர்.

கொள்பேரன் பிள்ளைகள்.

(6) ரெகுநாதய்யர். (7) சுப்பய்யர்.

(8) விசுவநாதய்யர்.

(கொள்பேரன் பேரன்).

இந்த வம்சவிருட்சத்திலுள்ள 1, 2, 3, 4, 5, பேர்வழிகள் மட்டும் பிதுரார்ஜித சொத்துக்கு பாகஸ்தர்கள் ஆவார்கள். மூலபுருஷனிற

ந்தபிறகு 2 - வது பேர்வழி மூலபுருஷனாகையால், 6, 7 பேர் வழிகள் கூட சொத்துக்கு பாகஸ்தர்களாகிறார்கள். 1-வது புருஷன் உயிரோடிருந்து, 2, 3 பேர்வழிகள் இறந்துபோனால்கூட 1, 4, 5 பேர்வழிகள் மட்டுந்தான் பாகஸ்தர்களாகிறார்கள். அதன்பிறகு ஆதி மூலபுருஷனிறந்தால் 4 - வது புருஷனின் பாகத்தில் 6, 7, 8 பேர்வழிகளுக்குப் பாகங்கிடைக்கும். 1-வது புருஷன் உயிரோடிருக்கையில் 2, 3, 4 பேர்வழிகளிறந்தால் 6, 7, 8 பேர்வழிகளுக்குப் பாகமில்லாமல்போய், எல்லா சொத்தும் 1, 5 - வது பேர்களுக்குச் சேர்ந்துவிடும். பிறகு 1 - வது புருஷன் இறந்தால் அவன் சொத்தும் 5-வது புருஷனுக்குச் சேர்ந்துவிடும். ஆகையால் மூலபுருஷன்முதல் 3 தலைமுறைகள் பின்னமாகாமல் சம்பூர்ணமாக விருந்தாலொழிய அதற்குக் கீழ்ப்பட்டவார்சுகளுக்கு பாகங்கிடைக்காதென்று தெரிந்து கொள்ள வேண்டியது.

174. தாயபாகத்தின்படி சோத்துப்பிரிவினை.—மேலே சொன்ன இரண்டு உதாரணத்திலும் மிதாட்சர பாகப்படி சொத்தைப் பிரிக்கும் வகையைச் சொன்னோம். தாயபாகப்பிரகாரம் தகப்பனுடைய பிதுரார்ஜித சொத்தில் பிள்ளை பாகமாவது, மிதமாய்ச் செலவு செய்யும்படியாவது தகப்பனைக் கேட்கக்கூடாது. ஜீவனாம்சமட்டும் கிடைக்கும். ஆனால் தகப்பனுக்குப் பிறகு பிள்ளைகளுக்குச் சொத்து சேர்ந்தால் அவர்கள் அவிபக்தர்களாயிருந்தாலும் தனித் தனியாய் சொத்துக்கு பாத்தியமுள்ளவர்களாவார்கள். இவர்களில் ஒருவனிறந்தால் மிதாட்சரத்தைப்போல் அவன் சொத்து மற்ற பாகஸ்தர்களுக்குச் சேராமல் அவனுடைய பெண்சாதிக்காவது அல்லது அவனுடைய மற்ற வார்சுகளுக்காவது சொத்துச்சேரும். இது வங்காளதேச சம்பிரதாயம். (6 மூ. இ. அ. 553.)

175. ஸ்வயார்ஜிதசோத்து.—(1) பிதுரார்ஜித சொத்தையாவது, குடும்ப சொத்தையாவது தொடாமலே தன்னுடைய புத்தியாலும், வல்லமையினாலும் சம்பாதிக்கப்பட்ட சொத்தும், தாயார், பாட்டி (தாயின் தாய்) தாயின் தகப்பன், அண்ணன், தம்பி, பெரியதகப்பன், சிறியதகப்பன், இவர்களுடைய பிள்ளை முதலியவர்களிடமிருந்து கிடைத்த சொத்துக்கும் ஸ்வயார்ஜிதம் என்னப்படும். இவ்விதம் சொத்தைசம்பாதித்த ஒருவன் பொதுக்குடும்பத்துடன்வாழ்ந்தாலும், தன்னுடைய சுயார்ஜிதத்தை, சர்வசுதந்திரத்துடன், யதேச்சையாய் விநியோகம்

செய்யலாம். அவனுடைய வார்சுகளுக்குக் கூட அந்தசொத்தில் அவன் இறந்தாலொழிய பாத்தியமில்லை. (29 அல. 267; 25 இ. அ. 54; 24 மத 429; 28 மத 386; 9. மு. இ. அ. 543; 8 க. 131; 17 ச. 38; 12. பம். 33; 9 பம் 445.)

(2) மேலும் அவ்வாறு சம்பாதிக்கப்பட்ட சொத்து குடும்பப் பொதுவான பிதுரார்ஜித சொத்தோடு கலக்கப்படாமலும் குடும்பப் பொதுவாக பாவிக்கப்படாமலுமிருந்து சம்பாதித்தவனுடைய சொந்தமாகவே அவனால் பாராட்டப்பட்டு மிருக்கவேண்டும். (27 மது. 228.)

(3) யாதொரு சொத்தானது முன்னோர்களால் கைவிடப்பட்டு குடும்பத்தினின்றும் விலகிப்போய்விட்டதோ அதை ஒரு பாகஸ்தன் மற்ற பாகஸ்தர்களுடைய சம்மதம் பெற்றுக்கொண்டாவது, அல்லது அவர்களும் கைவிட்டு விட்டார்களென்று தெரிந்துகொண்டாவது, நல்ல எண்ணத்தின்பேரில் தன் சொந்த முயற்சியாலும் குடும்பசொத்தின் சகாயமன்றியிலும் மீட்டுக்கொள்ளுவானேயானால் அதுவும் அவனுடைய சுயார்ஜிதமாகும். (29 அல. 267.)

(4) ஆனால் மற்ற பாகஸ்தருக்கில்லாமல் தானே அச்சொத்து முழுவதையும் அடைந்துவிடவேண்டுமென்ற கெட்ட எண்ணங்கொண்டு அவர்களுக்கு முன் மோசடியாயாவது அவர்களுடைய சம்மதி பெறாமலாவது அச்சொத்தை மீட்டுக்கொண்டால் அது அவனுடைய சுயார்ஜிதமாகமாட்டாது. மேலும் மற்ற பாகஸ்தர்களுக்கும் பாத்தியப்பட்ட குடும்பப்பொதுவான சொத்தின் சகாயத்தைக்கொண்டு ஒரு பாகஸ்தன் அதை மீட்டுக்கொண்டிருந்தாலும் அது அவனுடைய சுயார்ஜிதமாய் விடமாட்டாது. (5. மது. ஹை. கோ. ரி. 150; 8. இ. அ. 99.)

(5) பிறரிடமிருந்து தானம் உயில் முதலியவற்றாலும் விவாச காலத்தில் வெகுமதியாகவும் அடையப்படும் சொத்துக்களும் சுயார்ஜிதங்களாகும். (3 மது. ஹை. கோ. ரி. 50.)

176. பிதுரார்ஜித சொத்து.—தகப்பன், பாட்டன், முப்பாட்டன் முதலியவர்களிடமிருந்து வார்சு பாத்தியமாகவாவது, உயில் மூலமாகவாவது, தானமாகவாவது கிடைத்த சொத்துக்கு பிதுரார்ஜித சொத்தென்று பெயர். இந்த சொத்துக்கு மூன்று தலைமுறை

வரையிலுள்ள பிள்ளைகள் பாகஸ்தர்களென்று முன்சொல்லி யிருக்கி ஹேம்.

177. தகப்பன் தேடினசோத்து பிள்ளைக்கு பிதுரார்ஜிதம்.—தகப்பன் சுவயார்ஜிதமாய்ச் சம்பாதித்த சொத்து பிள்ளைகளுக்கு கிடைத்தவுடன் பிதுரார்ஜித சொத்தாகி அவர்களுடைய பிள்ளைகளுக்கும் பாத்தியமுண்டாகிறது. ஆனல், அந்தச்சொத்து பிள்ளைகளுக்குச் சேருவதற்குமுன் அவர்களில் யாராவது ஒருவன் இறந்துபோனல் அப்படி இறந்தவனுடைய பெண்சாதிக்காவது பிள்ளைகளுக்காவது அப்படிப்பட்ட சொத்தில் பாத்தியம் கிடையாது. (11 அ. 194.)

178. தானமாய்க் கிடைத்த சோத்து.—(1) தகப்பனுடைய சொத்து பிள்ளைகளுக்கு வார்சு பாத்தியமாய்க்கிடைக்காமல் தானமாகக்கிடைத்தாலும் அது பிதுரார்ஜித சொத்தாகவே எண்ணப்படும். அப்படிப்பட்ட சொத்தில் பிள்ளைகளின் வம்சஸ்தர்களுக்கு பாகமுண்டு. (6 ஸ 71, 73; 24 மத 429.) ஆனல், பம்பாய் அலகாபாத் ஹைக்கோர்ட்டார்கள் தானம் அல்லது உயில் மூலமாய் தகப்பனிடமிருந்து கிடைத்த சொத்து சுயார்ஜிதமாகும் என்று தீர்மானித்திருக்கிறர்கள். (10 பம் 528; 29 அல 354.)

(2) இவ்விதமாகவே உயில்மூலமாய் தகப்பனிடமிருந்து கிடைத்த சொத்தும் பிதுரார்ஜிதமென்றே எண்ணவேண்டும். (3 ம. ஐ. 50, 55; 13 இ. அ. 5; 24 மத. 429.) தகப்பனே உயில் செய்யும்போது சொத்தை பிள்ளை சுவயார்ஜிதமாகவே அனுபவிக்க வேணுமென்று பாத்தியத்தை எழுதிவைத்தாலொழிய, சொத்து ஸ்வயார்ஜிதமாகாது. தகப்பனானவன் தன்னுடைய சுயார்ஜித சொத்தை சர்வ சுதந்திரபாத்தியத்தோடு அடைந்தனுபவித்துக் கொள்ளத்தக்கதென்று தன்மகனுக்கு தானமாயாவது உயில்மூலமாயாவது கொடுத்துவிட்டால் அது அம்மகனுடைய சுயார்ஜிதம்போலாய்விடுகிறதென்றும், அதில்பாகம் கொடுக்கும்படிகேட்க அவனுடைய மகனுக்கு சுதந்தரமில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (12 பம். 528; 24 மது. 429.)

179. அடமான சோத்தைத் திருப்புதல்.—அடமானத்திலிருந்த பிதுரார்ஜித சொத்தை ஒருவன் தான் சுவயார்ஜிதமாய் சம்பாதித்த பணத்தைக்கொடுத்துத் திருப்பினல் அப்படித்திருப்பப்பட்ட சொத்து

பிதுரார்ஜிதமாகவே எண்ணப்பட்டு அவன் பிள்ளைகளுக்குப்பாத்திய முண்டு. (5 ம. ஐ. 150; 4 ம. 250; 18 ம. 83.)

180. சொத்தின் விருத்தி.—(1) பிதுரார்ஜித சொத்தின் வரும்படியைக் கொண்டு சொத்தை விருத்திசெய்தாலும், வியாபார முதலியவற்றால் ஆதாயமடைந்தாலும் அப்படி விருத்திசெய்யப்பட்ட சொத்தும், ஆதாயமும் பிதுரார்ஜித சொத்தாகும். (8 ம. ஐ. 25; 8 க. 131; 11 ம. 246; 29 அல. 244; 34 இ. அ. 65; 13 மூ. இ. அ. 542; 18 மத 73.)

(2) குடும்பத்தில் ஒரு பாகஸ்தன் தன் முயற்சியாலும், மேற்பார்வையாலும் பிதுரார்ஜிதசொத்தை விருத்திசெய்தால் அந்த விருத்தி பிதுரார்ஜிதமாய் விடும். (6 பம். 225.)

181. பிரிக்கக்கூடாத சொத்தின் ஆதாயம்.—மிதாட்சரப்படி பிரிக்கக்கூடாத ஜமீன் சொத்து பொதுச்சொத்தாயிருப்பதால் அந்தக் குடும்பத்தின் மூத்தவனே அடையவேண்டும். மற்றவர்களுக்கு ஜீவனும்சமட்டும் கிடைக்கும். மூத்தவன் சந்ததியின்றி இறந்துபோனால் தம்பிகளில் மூத்தவனுக்கு அந்த ஜமீன் கிடைக்கும். (9 மூ இ. அ. 539, 589, 610; 13 மூ. இ. அ. 336.) ஆனால், மூத்தவன் இறப்பதற்கு முந்தி ஜமீன் சொத்தின் வரும்படியிலிருந்து ஏதாவது சொத்து சம்பாதித்திருந்தால் அது பொதுச் சொத்தாகாமல் சுவயார்ஜித சொத்தாகி அவன் பெண்சாதி முதலிய அவன் வார்சுக்குச்சேரும். (15 ம. ஐ. 31, 41; 12 மூ. இ. அ. 540; 29. இ. அ. 82.) ஆனால் அப்படிச் சம்பாதித்த சொத்து பின்னால் வந்த ஜமீன்தாரைச் சேர்ந்தால் அது பொது சொத்தாய்விடும். ஒரு ஜமீன்தார் ஜமீன்வரும்படியைக் கொண்டு சிலசொத்து சம்பாதித்திருந்தான்; ஜமீனுக்கு அவன் வாங்கினகடனை அந்த சொத்திலிருந்து கொடுக்கக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது ஏனென்றால் அது சுவயார்ஜிதத்துக்குச்சமானம் (3 ம. 145.)

182. சுவயார்ஜிதத்தை இஷ்டத்துடன் குடும்பத்தில் சேர்ப்பது.—ஒருவன் தான் சம்பாதித்த சுவயார்ஜிதசொத்தைப் பொதுக் குடும்பத்தில் இஷ்டப்பட்டு சேர்த்துவிட்டால் அது பொதுச் சொத்தாய்விடும். (16 க. 397; 10 மூ. இ. அ. 505; 7 ம. 458; 18 க. 341; 40 அல 159; 44 இ. அ. 65; 45 இ. அ. 733; 15 பம் 32; 21 பம் 349.

183. படிப்பினால் சம்பாதித்த பொருள்.—(1) தகப்பன், அண்ணன் தம்பி முதலியவர்களுடைய உதவியில்லாமல் குடும்பத்தை விட்டு நீங்கி தன்னுடைய சுய முயற்சியினாலும் புத்தியினாலும் வித்தை கற்றுக் கொண்டு அதனால் சம்பாதித்த சொத்தானது பொதுச்சொத்தாகமாட்டாது. குடும்ப சொத்தால் சாதாரணமான வித்தை கற்பிக்கப்பட்டிருந்தாலும், இன்னும் வேறே மேலான படிப்புகளுக்கு அந்தக் குடும்பத்தாருடைய உதவியில்லாமல் கற்று அதனால் சம்பாதித்த சொத்தும் பொதுச்சொத்தாகமாட்டாதென்று தற்காலத்தில் உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. (45 இ. அ. 666; 48 இ. அ. 162; 6. பம் 225; 15 பம். 32; 10 பம் 528; 20 அல 435; 32 அல 305; 1மத 252; 7மத. ஜ. 47; 45 கல் 666.)

(2) பிதுரார்ஜிதசொத்தின் சகாயத்தைக்கொண்டு சம்பாதிக்கப்படுவதும் பிதுரார்ஜிதத்தின் தன்மையையடைகிறபடியால், குடும்பப்பொதுவான சொத்தின்செலவினால் கற்றுக்கொண்ட சாஸ்திரப்பயிர்ச்சி முதலியவற்றால் சம்பாதிக்கப்படுகிற சொத்துக்களும் குடும்பப் பொதுவானதாகுமேயன்றி சம்பாதிக்கிறவனுடைய சுயார்ஜிதமாய் விடமாட்டாதென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. (48 இ. அ. 162; 2 லாக. 40.)

(3) மேற்சொன்ன சாஸ்திரவிதியை யனுசரித்து, குடும்பப் பொதுவான சொத்தின் சகாயத்தால் சாமான்யமான படிப்பை யடைந்த ஒருவக்கீல் சம்பாதித்த தனியானசொத்துக்களும் பாகார்கமுள்ள குடும்பப்பொதுவானதேயன்றி அவ்வக்கீலுடைய தனியான சுயார்ஜிதமாக மாட்டாதென்று மதுராஸ் ஹைகோர்ட்டார் முதலில் தீர்மானித்தார்கள். (7 மது. ஹை. கோ. ரி. 47.)

(4) ஆனால் அத்தீர்ப்பு சரியானதல்லவென்றும், தேசபோஷணை சாமான்யப்படிப்பு முதலியவற்றை இளம்பிராயத்தில் குடும்ப சொத்திலிருந்து அடைய எல்லோரும் உரிமையுள்ளவர்களாக இருக்கிறபடியால், அவைகளின் நிமித்தம் குடும்பசொத்தின் பிரயோஜனத்தை ஒருவன் சிறுவயதில் அடைந்துவிட்டதினாலேயே அதனால் பின்னிட்டு சம்பாதிக்கப்படும் சொத்துக்கள் யாவும் குடும்பப்பொதுவானதாய் விடுமென்று சொல்லுவது எவ்வளவும் நியாயமல்லவென்றும் பிரிவிகௌன்சில் கோர்ட்டார் அபிப்பிராயப்பட அதற்குப்பின்

அவ்வபிப்பிராயத்தை யனுசரித்தே தீர்ப்புகள் செய்யப்பட்டு வருகின்றன. (6 பம் 225; 45 இ. அ. 53.)

(5) குடும்ப திரவியசகாயத்தால் சாதாரணப் படிப்பைமட்டும் அடைந்த ஒருவர் தன் சொந்த முயற்சியாலும் குடும்பதிரவிய சகாய மன்னியிலும் சட்டப்பரீக்ஷைகொடுத்து சப்ஜட்ஜி உத்தியோகம்செய்து தனியாய் சொத்துசம்பாதிக்க, அச்சொத்து அவருடையசுயார்ஜித மேயன்றி குடும்பப்பொதுவானதாக மாட்டாதென்று பம்பாய் ஹைகோர்ட்டாரும் தீர்மானித்திருக்கிறார்கள். (6 பம். 225.)

(6) குடும்பசொத்தின் செலவால் பால்யத்தில் தேகபோஷணையையும் சாமான்யப்படிப்பையும் அடைந்த ஒருவன் வயதுவந்தபிறகு பெருத்த வர்த்தகத்தைச்செய்து ஏராளமான பொருளைச் சம்பாதிக்க அப்பொருள் முழுவதும் அவனுடைய சுயார்ஜிதமானதென்று மதராஸ் ஹைகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (4 மதராஸ் ஜூரிஸ்டு 54; 1 மது. 252.)

(7) ஆகையால் குடும்பசொத்திலிருந்து யாவரும் சிறுவயதில் அடையஉரிமைபெற்றிருக்கிற அன்னவஸ்திராதிகளின் பொருட்டும் சாமான்யமான படிப்பின்பொருட்டும் ஒருவன் குடும்பசொத்தின் பிரயோஜனத்தை யடைந்திருந்தபோதிலும் தன்சொந்த முயற்சி அல்லது சாமர்த்தியத்தால் வர்த்தகம், உத்தியோகம் கைத்தொழில் முதலிய வேலைகளைச்செய்து அவன் தனியான சொத்து சம்பாதித்தால் அச்சொத்து முழுவதும் அவனுடைய சுயார்ஜிதமாகுமேயன்றி குடும்பப்பொதுவான தாகமாட்டாது. (4 இ. அ. 117; 6 பம். 225; 15 பம். 32; 20 அல. 435.)

(8) ஆனால் சாமான்யமான படிப்பன்றி விசேஷத் திறமையையும் யோக்கியதையும் உண்டுபண்ணக்கூடிய விசேஷப்படிப்பை ஒருவன் குடும்பப்பொதுவான சொத்தின்செலவினால் அடைந்திருந்தால், அப்படிப்பினால் ஏற்பட்ட யோக்கியதையைக்கொண்டு சம்பாதிக்கப்படுகிற சொத்து குடும்பப்பொதுவானதாகுமேயன்றி அவனுடைய தனியான சுயார்ஜித சொத்தாய்விடமாட்டாது. (6 மு. இ. அ 539; 1 மது. 252; 4 இ. அ. 117.)

(9) பாரிஸ்டர், ஹைகோர்ட்டு வக்கீல், ப்ளீடர்ஷிப் முதலான சட்டபரீக்ஷைகள், ஸர்ஜன், டாக்டர், அபாதிகிரி முதலான வைத்திய பரீட்க்ஷைகள், சீவில் சர்விஸ் பரீட்க்ஷை, ஓவர்சியர் முதலான இஞ்சினியர் இலாகா பரீக்ஷைகள், எப். ஏ., பி. ஏ., எம். ஏ., முதலான கலாசாலை பரீக்ஷைகள், முதலானவைகளின் பொருட்டுள்ள படிப்புகள் விசேஷபடிப்புகளாகும்.

184 குடும்ப சோத்தால் விருத்தியடைந்த சோத்து.—(1) ஒரு குடும்பத்தில் ஒருவன் தன்னுடைய வல்லமையினல் குடும்பச்சொத்தின் ஒரு பாகத்தைக்கொண்டு விபாபாரம் முதலியவற்றால் வேறே சொத்து சம்பாதித்தால் அந்தச்சொத்தில் அவனுக்கு இரண்டுபங்கு கிடைக்குமென்று சில ஸ்மிருதிகளில் சொல்லியிருக்கிறது. மிதாட்சரப்படி எல்லாரும் சரிபாகந்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனல், பங்காள தேசத்தில் இரண்டுபாசம் எடுத்துக்கொள்கிற வழக்கமிருக்கிறது (1 பங். ஸ. தீ. 6, 336; 3 பங். ஸ தீ 98; 5 பங். ஸ. தீ. 335)

(2) குடும்பப் பொதுவான திரவியத்தைக் கைமுதலாகக்கொண்டு வர்த்தகம் முதலிய தொழில்களைச்செய்து ஒருவன் பொருள் சம்பாதித்தாலும் அது அவனுடையசொந்த சொத்தாகமாட்டாது. எத்தொழிலைச் செய்தாலும் குடும்பதிரவிய சகாயமன்னியில் சொந்த முயற்சியாலும் சாமர்த்தியத்தாலும் ஒருவனல் தனியாய் சம்பாதிக்கப்படுவது மட்டுமே அவனுடைய ஸ்யார்ஜிதமாகும். (1 மத. 252; 4 இ. அ. 109.) இல்லாவிடில் அச்சொத்து குடும்பப்பொதுவானதாகவே ஏற்படும் ஆகிலும் இவ்வகையான குடும்பப்பொது சொத்தில் குடும்பசொத்தின் பிரயோஜனத்துடன் சம்பாதித்தவனுடைய சொந்தப்பிரயாசையும் கலந்திருக்கிறபடியால், சம்பாதித்தவனுக்கு மற்ற பாகஸ்தர்களைவிட ஒருபங்கு அதிகம் கிடைக்கவேண்டுமென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. குடும்ப திரவிய சகாயம் மூலகாரண மாயிருப்பதால் அதில் மற்றவர்க்கும் பங்குகிடைக்கிறது. சம்பாதித்தவனுடைய விசேஷசாமர்த்தியமும் பிரயாசையும்கலந்திருப்பதினல் அவனுக்கு இரண்டுபங்கு கிடைக்கிறது. (6 மூ. இ. அ. 526, 539)

(3) தாயாருடைய திரவிய சகாயத்தின்பேரில் கற்றுக்கொடுக்கப்பட்ட நாட்டியத்தொழிலால் ஒருதாசி சொத்து சம்பாதித்தால் அது அவளுடைய சுயார்ஜிதமாய் விடமாட்டாது. அவளுடைய தாயாருககும் அதில் பாத்தியமுண்டு. முன்பிரிவில் சொல்லியபடி அச்சொத்தில் தாசி இரண்டு பங்கையும் தாயார் ஒருபங்கையும் அடைய வேண்டும். (2 மது. ஹை. கோ. ரி. 56.)

(4) ஆனால் தாசியானவள் வியபசாரித்தனம்செய்து சொத்து சம்பாதித்தால் அது அவளுடைய சுயார்ஜிதமேயாகும். அதில் அவளுடைய தாயாருக்கு யாதொரு பங்குங் கிடைக்கமாட்டாது. (4 மது. 330.)

185. கைமாறிப்போன சோத்து.—பெரியவர்களால் இழக்கப்பட்டு பாத்தியம் இழந்துபோன பொதுச் சொத்தை குடும்பத்தார் அல்லது குடும்பத்தின் பொது திரவியத்தின் உதவியின்றி ஒருவன் தன் முயற்சியினால் திருப்பினால், அது அவனுடைய ஸ்வயார்ஜித சொத்தென்றே பாவிக்கவேண்டியதென்று மிதாட்சரத்தில் சொல்லியிருக்கிறது. (5 ம. ஐ. 150) ஆனால், அப்படி திருப்பின சொத்து தகப்பனால்திருப்பப்பட்டிருந்தால் அது அவனுடையசுயார்ஜிதமாகும். வேறு குடும்பபாகஸ்தர்களால் திருப்பப்பட்டசொத்து அசையாப்பொருளாயிருந்தால் திருப்பினவனுக்கு அந்தசொத்தில் வெகுமதியாக 4-ல் ஒரு பங்கும், மீதியை எல்லோரும் (திருப்பினவன் உட்பட) சரிபாகமாக எடுத்துக்கொள்ளவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (34 பம் 106; 5. ம. ஐ. 150.)

186 ஸர்க்காரால் இனும்.—கவர்ன்மெண்டாரால் வெகுமதியாக கொடுக்கப்பட்ட நிலம் முதலிய சொத்துக்களும், இன்ஷூரன்ஸ் துகையும், ஒருவனுக்கு தண்டம் விதித்து அவனிடமிருந்து சொத்தைப் பிடுங்கி வேறொருவனுக்குக் கொடுத்த சொத்தும் சுவயார்ஜித சொத்தாகும். (9 மு. இ. அ. 610; 8 க. 769; 3 பம். 186; 12 மு. இ. அ. 540) ஆனால், சர்க்காரால் பறிமுதல் செய்யப்பட்ட சொத்து அப்பீலில் அல்லது பின்னால் சொத்தைத் திருப்பிக்கொடுத்தால் அது முன்படி பொதுசொத்தாகும். (12 க. 1.) சர்க்கார் கிஸ்திக்காக ஒருவனால் மொத்தமாய் ஒரு நிலத்துக்காகப் பணம்கொடுத்துப் பட்டாபெற்றால் அந்த நிலம் சுவயார்ஜித சொத்தாகாது. (10. ம. 1.)

187. ருஜுபாரம்.—(1) குடும்பம்பிரிக்கப்பட்டதென்றாவது, பிரிவினையாகவில்லையென்றாவது, சுவயார்ஜிதமாய்ச் சம்பாதிக்கப்பட்டதென்றாவது, பிதுரார்ஜித சொத்தே இருந்ததில்லையென்றாவது, பொதுச்சொத்தை அக்கிரமமாய் பெண்சாதி முதலியவர்கள் பேரில் எழுதிவைத்திருக்கிறானென்றாவது வாதிப்பவர்களே அந்த அம்சங்களை ருஜுப்படுத்தவேண்டும்.

(2) பொதுக் குடும்பங்களில் ஒருவன்பேரில்மட்டும் சொத்தின் ஸர்க்கார் கணக்குகள் ஏற்பட்டிருந்தால் அப்படிப்பட்ட சொத்து சுவயார்ஜித சொத்தாகமாட்டாது. (6 பம் 225; 8 பம் 104; 8 க. 517; 2 ம. 19; 11 மூ. இ. அ. 639; 2 ம 214.)

(3) அவிபக்த குடும்பத்தைச்சேர்ந்த ஒரு பாகஸ்தனின் வசத்திலிருக்கும் சொத்துக்களைப் பற்றி வழக்கு உண்டாய் அவைகள் அவனுடைய சுயார்ஜிதமா அல்லது குடும்பப்பொதுவானதா என்ற கேள்விபிறந்தால், மூலாதாரமாயிருக்கக்கூடிய சில பூர்வீகசொத்துக்களும் அக்குடும்பத்தில் இருக்கிறதாக ஏற்பட்டவிடத்து தாவாசொத்தைத் தன்னுடைய சுயார்ஜிதமென்று சொல்லுகிற பாகஸ்தனே அச்சங்கதியை முதலில் ருசுப்படுத்தவேண்டும். (12 இ. அ. 134; 22 கல் 85; 10 மது. 251.) மூலாதாரமாயிருக்கக்கூடிய பூர்வீகமான சொத்து யாதொன்றும் இல்லாமலிருக்கும்போதும் அல்லது குடும்பசொத்தானது மிகவும் அற்பமாயிருக்கும்போதும் அவன்பேரில் அப்பளுவு சுமத்தப்படமாட்டாது. அப்போது தாவாசொத்து அவனுடைய சுயார்ஜிதமாகவே பாவிக்கப்படும். (10 மூ. இ. அ. 505; 3 பம். 534,)

(4) மேலும் ஒரு குடும்பஸ்தர்களுக்குள் குடியிருப்பு, சாப்பாடு, சடங்குமுதலியவைகள் ஒன்றாயிருப்பதினாலேயே அக்குடும்பத்தைச்சேர்ந்த ஒரு பாகஸ்தன் வசமிருக்கும் சொத்துக்கள் யாவும் குடும்பப் பொதுவானவைகளென்று பாவிக்கப்படவுமாட்டாது. (8 பம் 154; 13 பம் பம் 61; 33 அல 677.)

(5) பாகப்பிரிவினை ஆனபிறகு பொதுச்சொத்து இருப்பதாய் வாதிப்பர்வகள் அதை ருஜுசெய்யவேண்டும். (25 பம் 367.)

6. வது கடன்கள்

188. கடன் விஷயமாய் தர்மசாஸ்திரம்.—(1) கடனைத்தீர்க்காமலிறந்தவன் மறுஜன்மத்தில் கடன்காரன் வீட்டில் ஊழியக்காரனாகவாவது, தொழில் செய்கிறவனாகவாவது, மிருகங்களாகவாவது பிறந்து உழைக்கவேண்டுமென்றும், சன்னியாசி கடனோடிறந்தால் அவன் புண்ணியமெல்லாம் கடன் காரர்களைச் சேருமென்றும், தகப்பன் பாட்டன் இவர்கள் பட்ட கடன்களை பிள்ளை பேரன்கள் தீர்க்கக் கடமைப்பட்டவர்களென்றும், அவர்களிடமிருந்து சொத்து கிடைக்கவேண்டுமென்கிற அவசியமில்லையென்றும் தர்ம சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. தகப்பன் கடனை வட்டியுடன் பிள்ளையும், பாட்டன் கடனை வட்டியில்லாமல் பேரனும் கொடுக்கவேண்டுமென்று பிரகஸ்பதி சொல்லியிருக்கிறார். முற்காலத்தில் அதன்படியே தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. (2 பம் ஐ. 64.)

(2) ஆனால், தற்காலத்தில் முன்னோர்களுடைய சொத்து ஒருவனுக்குவார்சு கிரமத்தில் எவ்வளவு கிடைத்ததோ அவ்வளவுக்குமட்டும் அவர்களுடைய கடனை தீர்க்கக்கடமைப்பட்டவனென்றும், ஒருவனை அப்படிக்கிடைத்த சொத்தைத் தோற்றுவிட்டாலும், விரயஞ்செய்தாலும் அவர்களுடைய கடனைக்கொடுக்கப் பாத்தியப்பட்டவர்களென்றும் தீர்ப்புச்செய்திருக்கிறார்கள். (3 மத. 370; 13 பம். 653; 1866-ம்வருக்து பம்பாய் 7-வது ஆக்ட்) தகப்பன் பாட்டன் பட்ட கடன்களை பிள்ளை பேரன் அவர்கள் சொத்தை யடையாதபோது கொடுக்க கட்டுப்பட்டவர்களல்லர். (22 ம. 166; 27 ம. 243.)

189. நியாயமான கடன்கள்.—(1) ஒருவன் தானேயாவது, தன் ஏஜெண்டினாலாவது, தகப்பன் பாட்டன் முதலிய முன்னோர்களாலாவது, ஏஜெண்டும் முன்னோருமல்லாத பெண்சாதி, வேலைக்காரன், சிநேகிதன் முதலிய இதராளாவது, குடும்ப காலக்ஷேபம், பெண், பிள்ளை இவர்களுக்கு விவாகம், உபநயனம், இறந்தவரின் உத்தரகிரியை சிரார்த்தம் முதலிய காரியத்துக்கு வாங்குகிற கடன்களும், (2) மேற்சொன்னவை தவிர வேறு குடும்ப காரியங்களுக்கு வாங்குகிற அவசியமான கடன்களும் நியாயமான கடன்களாகும்.

190. தகப்பன் பாட்டன் கடன்கள்.—(1) முன்னோர்களிடமிருந்தாவது அவர்கள் வழியாகவாவது ஏதேனும் சொத்தை யடைந்திருந்தால் என்று 188-வது பிரிவில் சொல்லப்பட்டதினால், பிள்ளை பேரர்கள் இதர வார்சுகள் அடைந்திருக்கிற சொத்தானது அம்முன்னோருடைய சுயார்ஜிதமாகவே இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. அம்முன்னோருடைய பூர்வார்ஜித சொத்தாகவே யிருந்தாலும் அதைக்கொண்டும் பிள்ளை பேரன்கள் அம்முன்னோருடைய கடன்களைத்தீர்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதாவது, குடும்பப் பொதுவான சொத்தில் தகப்பனுடைய பங்கன்றி பிள்ளையினுடைய பங்கு சொத்தும் தகப்பனுடைய கடனுக்கு பாத்தியப்பட்டதாக இருக்கின்றது. சாஸ்திரவிதிகளை யனுசரித்து தகப்பனுடைய கடன்களைப் பிள்ளையானவன் தீர்க்கவேண்டியதற்கு அவைகள் குடும்பார்த்தமான செலவுக்காகவே ஏற்பட்டிருக்கவேண்டுமென்ற அவசியமுமில்லை. குடும்பார்த்தமாயில்லாமல் தகப்பனுடைய சொந்த உபயோகத்துக்காகவே வாங்கப்பட்டதாக இருந்தாலும் அப்படிப்பட்டகடன்களையும் பிள்ளையானவன் குடும்பசொத்து முழுவதையுங்கொண்டு தீர்க்கக்கடமைப்பட்டவனாக இருக்கிறான். (1 இ. அ. 321; 7 சல். 52; 6 இ. அ. 88; 4 மது. 1; 9 இ. அ. 128; 8 அல. 231; 16 மது. 99; 20 சல். 328; 29 மத. 200; 44 மத 214; 41 மத. 136.)

(2) ஆனால், அக்கிரமமாயும் அனாவசியமாயும் கடன்வாங்கினால் அந்தக்கடனுக்கு தகப்பன் பாகமட்டும் கட்டுப்படுமேயன்றி பிள்ளைகள் பாகம் கட்டுப்படாது. (15 இ. அ. 99.) குடும்பத்தில் தகப்பன் உதாரத்தனமாய் கடன்வாங்கி செலவழித்தால் அக்கடனுக்கு பிள்ளைகள் கட்டுப்படவேண்டியதுதான். (8 அல. 231; 14 பம். 329; 2 லாகூ. 263.)

191. துர்வியாபாரக்கடன்.—(1) தாசீகமனம், சூது, குடி துஷ்டகிருத்யம் முதலிய அயோக்கியமான காரியங்களைச் செய்வதற்காகக் கடன்பட்டிருந்தால் அவைகளைத் தீர்க்கப்பிள்ளை கட்டுப்பட்டவனல்ல. பிரதிப்பிரயோசனமின்றி தகப்பனால் வாக்குத்தத்தஞ்செய்த பொருளையும், கன்யாசுல்கத்துக்காக அவன் கொடுக்கவேண்டிய பாக்கியையும் கொடுக்க புத்திரன் கட்டுப்பட்டவனல்லன். (2 பாரோ. 194) தகப்பன் எவனுக்காவது ஜாமீனாக நின்றாலும் அதையும் பிள்ளை தீர்க்க பாத்தியப்படக்கூடாதென்று தர்மசாஸ்திரத்திலிருந்தபோதி

லும், தற்காலத்தில் அதை தீர்க்கவேண்டுமென்றே தீர்ப்புச்செய்யப் பட்டிருக்கிறது. (11 ம. 83; 23 பம். 454; 26 அல. 611; 39 கல் 843.) தகப்பன் பேரில்போடப்பட்ட அபராதமாவது அபகரிக்கப் பட்ட பொருள்விஷயமாயேற்பட்ட டிகிரியாவது பிள்ளையை பாதிக் காது. (16 அல 234; 24 கல் 672; 27 மத. 71.) தகப்பனிடமிரு ந்து எவ்வளவு பிதுரார்ஜித சொத்து பிள்ளைக்குக்கிடைத்திருந்தாலும், நியாயமில்லாத அக்கிரமமான கடன்களென்று ஏற்பட்டால் அவைக ளைப்பிள்ளை கொஞ்சமேனும் தீர்க்கமாட்டான். ஸ்வயார்ஜிதசொத்து அவனுக்கிருந்தால் அதிலிருந்து அவன்கடனைத் தீர்க்கலாம். அக்கிரம மாய் கடன்கள்வாங்கி துர்விநியோகம் செய்யப்பட்டதென்று வாதிப் பவர்களே அத்துர்வினியோகங்களைப் பூர்த்தியாய் ருஜுப்படுத்தவே ண்டும். (10 க. 717; 14 பம். 320.)

(2) ஆனால் துன்மார்க்கமாயும் அக்கிரமமாயுமுள்ள செலவு களுக்காக தகப்பன் கடன்கள் வாங்கியிருந்தால் அப்படிப்பட்ட கடன் களுக்கு தகப்பனுடைய பங்குமட்டும் பாத்தியப்படுமேயன்றி பிள்ளை யினுடைய பங்கு சொத்து எவ்வளவும் பாத்தியப்படமாட்டாது. (20 கல். 328; 11 மது. 64; 29 மத. 200; 6 அல. 234; 24 பம். 343.)

(3) தாசிவேசிகள் விஷயமாயும் கள் சாராயம் குடித்தல் சூதா டுதல் முதலான கெட்டநடத்தை விஷயமாயும் செய்கிற செலவுகள் துன்மார்க்கமான செலவுகளெனப்படும். அயோக்கியமான செய்கை களையும் சர்க்காரால் தண்டிக்கப்படத்தக்க குற்றங்களையும் செய்வதி னால் ஏற்படும் செலவுகளும் தண்டங்களும் அபராதங்களும் அக்கிரம மான செலவுகளாகும். இவ்வகைப்பட்ட காரணங்களால் தகப்பனால் வாங்கப்படும் கடன்களைத் தீர்க்கவேண்டிய கடமை பிள்ளைக்கு ஏற்படு கிறதில்லையென்று தர்மசாஸ்திரங்களில் கூறியிருக்கிறதை யனுசரித்து அப்படிப்பட்ட கடன்களுக்கு பிள்ளை எவ்வளவும் பாத்தியப்படவேண் டியதில்லையென்று எல்லா ஹைகோர்ட்டுகளாலும் தீர்மானிக்கப்பட்டி ருக்கிறது.

(4) ஆனாலும் தகப்பன்பட்ட ஒரு கடனானது துன்மார்க்க மான அல்லது அக்கிரமமான செலவுகளுக்காக அவனால் வாங்கப்பட் டதென்றும், அதுகாரணம்பற்றி தான் அதற்குக் கட்டுப்பட்டவனல்ல வென்றும் பிள்ளையானவன் வாதம்செய்தால் அப்படிப்பட்ட வாதத்தை

திருப்தியாய் ருசுப்படுத்தும்பளுவு அப்பிள்ளையினுடைய தாகவே இருக்கிறது. அதைத்திருப்தியான சாக்ஷியத்தால் ருசுப்படுத்தாதவரையில் பிள்ளையானவன் அக்கடனுக்கு பாத்தியப்பட்டே தீரவேண்டும். (15 இ. அ. 99; 24 அல. 459; 14 பம். 320.)

(5) கடன்பட்ட தகப்பன் உதாரித்தனமாயும் விமரிசையில்லாமலும் தாறுமாறுகச் செலவுகள் செய்துவந்தான் என்பதினுலேயே அவனுடைய கடன்கள் துன்மார்க்கசம்பந்தமாய் அல்லது அக்கிரமமாய் ஏற்பட்டனவென்று எண்ணப்படமாட்டாது. இன்ன கடனுனது இன்னகுறிப்பிட்ட துன்மார்க்கமான அல்லது அக்கிரமமான நடத்தையால் ஏற்பட்டது என்று பிரத்தியேகமான சாக்ஷியத்தால் ருசுப்படுத்தப்படவேண்டும்; இல்லாவிடில் பிள்ளையினுடைய வாதம் பிரயோஜனப்படமாட்டாது.

(6) தகப்பன் வேறு யாருக்காகிலும் ஜாமீனுகநின்று கடன் வாங்கிக்கொடுத்திருந்தால் அச்சாமீன் கடனுக்கும் பிள்ளைகள் பாத்தியப்படவேண்டியவர்களாக இருக்கிறுர்கள். ஜாமீன் கொடுப்பதானது துன்மார்க்க சம்பந்தமானதுமல்ல, அக்கிரமமானதுமல்ல. ஆகையால் அதற்குப்பிள்ளைகளுடையபங்கு சொத்தும் பாத்தியப்பட்டதாக இருக்கிறது. அதாவது கடன்கொடுத்தவன் ஜாமீன்தாரனுடைய பிள்ளைகளின்பங்கு சொத்தின்பேரிலும் தொடர்ந்து அக்கடனை வசூல்செய்துகொள்ளலாம். (11 மத. 83; 23 பம் 454; 28 மத 377.)

(7) (1) ஒருவரை ஆஜர்ப்படுத்துவதற்கும் (2) யோக்கியதைக்கும் (3) கடனை வாபீஸ்செய்வதற்காகவும் (4) ஒருபொருளை ஒப்படைப்பதற்குமாக நான்கு விதமான ஜாமீன்கள் ஹிந்துலாவின்படி ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. முதல் இரண்டு ஜாமீனுக்காக தகப்பன் ஏதாவது சன்மானம் பெற்றிருந்தாலன்றி பிள்ளைகள் அந்த ஜாமீனுக்கு கட்டுப்படமாட்டார்கள். மற்ற இரண்டிக்கும் பிள்ளைகள் உத்தரவாதியாவார்கள். ஆனல் பேரன்கள் (3) (4) வது ஜாமீன்களில் பாட்டனுக்கு ஏதாவது பிரதிபலன் கிடைத்திருந்தாலொழிய அதற்கு உட்படமாட்டார்கள் (28 மத. 377; 41 மத. 1071; 39 கல் 843; 8 பம் 408.)

(8) ஆனபடியால் தகப்பனுடைய கடன்களுக்கு பிள்ளைகள் எம்மட்டும் பாத்தியப்பட்டிருக்கிறுர்களென்பது கடனின் தன்மையை

பனுசரித்ததாக இருக்கிறதேயன்றி தகப்பனிடமிருந்து அடைந்திருக்கிற சொத்தின் தன்மையைப் பொறுத்ததாக இல்லை. அதாவது, சொத்தானது தகப்பனுடைய சுயார்ஜிதமாக இல்லாமல் பூர்வார்ஜிதமானதாகவே இருந்தாலும் துன்மார்க்க சம்பந்தமாயும் அக்கிரமமாயுமுள்ள கடன்கள் நீங்கலாக மற்றெவ்வகைப்பட்ட தகப்பனுடைய கடன்களுக்கும் பிள்ளையினுடைய பங்குசொத்தும் பாத்தியப்பட்டதாக இருக்கின்றது. (6 மூ. இ. அ. 421; 1 இ. அ. 321; 11 மது. 64; 12 மது. 309; 13 மத 51, 21 மத. 28.)

(9) ஆனாலும் ஒருவனுடைய எல்லாக்கடன்களுக்கும் அதாவது ஒருவனுடைய துன்மார்க்கமாயும் அக்கிரமமாயுமுள்ள கடன்களுக்குங்கூட அவனும் அவனுடைய தனியான சொந்த சொத்துக்களும் பாத்தியப்பட்டதாக இருக்கிறபடியால், தகப்பனிடமிருந்து பிள்ளை அடைந்திருக்கும் சொத்தானது அத்தகப்பனுடைய சுயார்ஜிதமானதாக இருந்தால் அப்போது அவனுடைய துன்மார்க்கமாயும் அக்கிரமமாயுமுள்ள கடன்களையும் பிள்ளையானவன் அச்சொத்தைக்கொண்டு தீர்க்கக்கடமைப்பட்டவனாகிறான். அதாவது:—அவிபக்தகுடும்பத்திற்குத் தான் ஸர்வைவர்ஷிப் பாத்தியப்படிக்கல்லாமல் பிள்ளையானவன் தகப்பனிடமிருந்து வார்சு பாத்தியப்படி சொத்தையடைந்திருந்தால் அப்போது அச்சொத்து முழுவதும் தகப்பனுடைய எவ்வகைப்பட்ட கடன்களுக்கும், பாத்தியப்பட்டதாக இருக்கின்றது. (6 இ. அ. 88; 17 மது. 144; 7 மது. 586.)

(10) தகப்பன்பட்ட கடன்களுக்கு அவனுடைய ஜீவதசைக்குப் பிறகுதான் பிள்ளைகள் பாத்தியப்பட்டவர்களாவார்கள் என்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் குடும்பப் பொதுவான சொத்தில் பிள்ளைகளுடைய பங்கானது தகப்பன் உயிரோடிருக்கும்போதே அவன் கடன்களுக்கு பாத்தியப்பட்டதாக இருக்கின்றது. (20. கல். 328; 11 மது. 64; 22 மது. 49.)

(11) மேலும், தகப்பன் கடன்பட்ட காலத்தில் பிள்ளைபிறக்காமல் இருந்தாலுங்கூட, தகப்பன் உயிரோடு இருக்கும் போதாவது அல்லது அவன் ஜீவகாலத்திற்குபிறகாவது பிள்ளைகள் தகப்பன் பட்ட கடனை கொடுக்க கடமைப்பட்டவர்களென்று மதராஸ் பம்பாய் ஹைகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (41 மத. 136; 42 மத 711; 43 மத 421; 46 மத 64; 43 பம் 612.) ஆனால் அலகாபாத்

ஐக்கோர்ட்டார் தகப்பனுடைய ஜீவதசைக்குப்பிறகுதான் அக்கடனை பிள்ளைகள்கொடுக்கபாத்தியப்பட்டவர்கள் என்று தீர்மானித்திருக்கிறுர்கள். (45 அல 90.) தகப்பன் இருக்கும்போது பேரன்கள் பாட்டனுடையகடன்களை தீர்க்க கட்டுப்பட்டவர்களல்ல. பிள்ளை கோர்ட் ஆவ்வார்டவின் கீழ் இருந்தகாலத்தில் தகப்பன் பட்ட ரொக்கக்கடனை பிறகு பிள்ளை கொடுக்கபாத்தியப்படவில்லை. (44 அல. 388.)

192. உதாரக் கடன்கள். — துர்வினியோகமில்லாமல் அனுவசியமான செலவுக்காக பிதா கடன்பட்டிருந்தால் அவைகளைப் பிள்ளைகளே தீர்க்கவேண்டும். அக்கடனுல் பிதுரார்ஜித சொத்து முழுமையும் போகிறதாயிருந்தால் கூட பிள்ளைகள் தங்கள் பாகத்தையுஞ்சேர்த்து கடனைக்கொடுத்துவிடவேண்டும். (6 மூ. இ. அ. 421; 14 க. ஐ. 187; 5 க. 148; 34 அல. 292; 24 பம். 343; 16 மத. 99.)

193. குடும்ப எஜமானன் அதிகாரம் —(1) குடும்பத்தலைவனுயிருக்கும் குடும்பமானேஜரானவன் குடும்பகாரியங்களை நடத்துவதில் குடும்பத்திலுள்ள மற்றெல்லாப் பங்காளிகளின் ஏஜண்டாக பாவிக்கப்படுவான். குடும்பார்த்தமாயுள்ள செலவுகளுக்காக அவசியமானுல் கடன்வாங்க மானேஜருக்கு சட்டப்படி அதிகாரமுண்டு. அவ்வாறு குடும்பார்த்தமான செலவுகளுக்காக கடன்வாங்கும் விஷயத்தில் அவன் மற்றவர்களின் காரியஸ்தனுக இருக்கிறுன். ஆகையால் அவனுல் வாங்கப்படும் குடும்ப அவசியமாயுள்ள கடன்களுக்கு குடும்பத்திலுள்ள மற்றவர்களெல்லோரும் கட்டுப்பட்டவர்களாகிறுர்கள். மேலும் குடும்பார்த்தமான செலவுகளுக்காக கடன்வாங்கும்படி நேர்ந்தால் மனேஜரானவன் மற்றப்பங்காளிகளுடைய சம்மதியைப் பெற்றுக்கொண்டே கடன்வாங்கவேண்டுமென்ற அவசியமுமில்லை. குடும்ப அவசியமாயுள்ள கடன்களுக்கு மற்றவர்கள் சம்மதிகொடுக்க மறுதளித்தாலும் மானேஜரானவன் தன்னதிகாரத்தை இழக்கவுமாட்டான். ஆகையால் குடும்பமானேஜருடைய கடன்களுக்கு மற்றவர்கள் கட்டுப்பட்டவர்களா அல்லவா என்பது தீர்மானிக்கப்படுவதற்கு அக்கடன்கள் குடும்ப அவசியத்தின்பொருட்டு வாங்கப்பட்டனவா அல்லவாவென்பது குறிப்பேயன்றி அக்கடன்களுக்கு அவர்கள் சம்மதிகொடுத்திருக்கிறுர்களா இல்லையாவென்பதும் அக்கடனின் வசூலுக்காக செய்யப்பட்டதாவாவில் அவர்கள் கக்ஷிக்காரர்களா அல்லவாவென்பதும் காரணங்களாகமாட்டாது. (20 கல். 453; 23 பம். 372.)

(2) குடும்பார்த்தமாய் ஏற்பட்ட ஒரு கடனை காலாவதியாய் போவதற்கு முந்தி ஒப்புக்கொண்டு அதன் காலாவதியை அதிகப்படுத்தவும் மானேஜருக்கதிகாரமுண்டு. ஆனல், காலாவதியாய்ப்போன ஒரு கடனை குடும்பசொத்திலிருந்து தீர்க்க மானேஜருக்கு அதிகாரமில்லை. (5 மது. 169 ; 17 பம். 512.)

(3) குடும்பார்த்தமான செலவுகளுக்காக குடும்பமானேஜரானவன் தன்சொந்த ஐவேஜிலிருந்து செலவு செய்திருந்தாலும் அல்லது தன்சொந்த ஜவாப்தாரித்தனத்தின்பேரில் கடன்வாங்கியிருந்தாலும் அவற்றைக் குடும்பப்பொதுவான சொத்திலிருந்து வாப்சுபெற்றுக் கொள்ள அவன் உரிமையுடையவனாக இருக்கிறான். (20 கல். 18.)

(4) அவிபக்த குடும்பத்திலுள்ள ஒரு பாகஸ்தனான மானேஜரால் குடும்பார்த்தமான செலவுகளின்பொருட்டு வாங்கப்பட்டிருந்த கடனின் வசூலுக்காக கடன்கொடுத்தவன் வியாச்சியம் செய்வதாயிருந்தால், கடன்வாங்கின மானேஜரையன்றி மற்றபாகஸ்தர்களையும் பிரதிவாதிகளாகச் சேர்த்து அவன் வழக்கிடலாம். அல்லது கடன்வாங்கின மானேஜரைக்குடும்பப் பிரதிநிதியாக வைத்தும் தாவாசெய்யலாம். அப்படிப்பட்ட தாவாவில் பெறும் தீர்ப்பும் கக்ஷிக்காரர்களாக சேர்க்கப்படாத மற்ற பாகஸ்தர்களுடைய பங்குசொத்தையும் கட்டுப்படுத்தும். அதாவது, குடும்பமானேஜரால் குடும்பார்த்தமாய் வாங்கப்பட்ட கடன்களின்பேரில் பிறக்கும் டிக்ரிகளுக்கு எல்லாபாகஸ்தர்களும் கட்டுப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவ்வாறு கட்டுப்படுவதற்கு அவர்களும் வியாச்சியத்தில் கக்ஷிக்காரர்களாக இருந்து அவர்கள்பேரிலும் டிக்ரி பிறந்திருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. அவர்களுடைய பொறுப்பானது கடனினுடைய சுபாவத்தைப்பற்றியதாக இருக்கிறதேயன்றி வழக்கில் அவர்கள் கக்ஷிக்காரர்களாக சேர்க்கப்பட்டிருக்கிறார்களா இல்லையா என்பதைப்பற்றியதாக இல்லை. (10 கல் 1; 14 பம் 597; 18 பம் 147; 21 பம் 616; 23 பம் 372.)

(5) குடும்ப அவசியமானசெலவுகளுக்காக குடும்பமானேஜரால் வாங்கப்பட்ட நியாயமான கடன்கள்மட்டும் மற்றபாகஸ்தர்களையும் கட்டுப்படுத்துகின்றனவேயன்றி தன் அதிகாரவரம்பைமீறி மானேஜர் வாங்கும்கடன்கள் மற்றபாகஸ்தர்களைக் கட்டுப்படுத்தமாட்டாது. (6 மூ. இ. அ. 393.)

(6) ஆகையால் அவிபக்தகுடும்பத்தின் காரியங்களை நடத்தும் மானேஜருக்குக் கடன்கொடுக்கிறவர்கள் மற்ற பாகஸ்தர்களையும் கட்டுப்படுத்தவேண்டுமென்று விரும்பினால், அக்கடன் வாங்கப்படுகிற அவசியத்தையும் நியாயத்தையும்பற்றி செவ்வையாய் விசாரித்துத் தெரிந்துகொண்டும் நல்ல எண்ணத்தோடும் கடன்கொடுக்கவேண்டும். குடும்பமானேஜரால் வாங்கப்பட்ட கடனைப்பற்றி வழக்கு உண்டானால் அக்கடன் குடும்ப அவசியத்தின்பொருட்டு வாங்கப்பட்டதென்பதை ருசுப்படுத்தும்பளுவும் கடன்கொடுத்தவன் பேரிலேயே சுமந்திருக்கிறது. (6 மூ. இ. அ. 393; 21 அல 83; 21 பம் 808; 26 கல் 820.)

194. பெண்சாதிவாங்கும் கடன்.—(1) குடும்பவிஷயமான காரியங்களை நடத்துவதில் பெண்சாதியானவள் சிலசமயங்களில் புருஷனுடைய ஏஜண்டாக ஏற்படுகிறாள். அவள் தன்னுடையவும் தன்குடும்பத்தினுடையவும் சம்ரக்ஷணைமுதலிய குடும்பார்த்தமான முக்கிய செலவுகளுக்காக கடன்வாங்கினால் அவைகளுக்கு புருஷன் கட்டுப்பட்டவனாக இருக்கிறான். (1 அல 122; 9 அல 147.)

(2) ஆனால் புருஷனுடைய வீட்டினின்றும் விலகி தனியே இருப்பவளுடைய கடன்களுக்கு புருஷன் கட்டுப்பட்டவனாகமாட்டான். (1 மது. ஸஹ. கோ. ரி. 375.)

(3) புருஷனால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்பேரில் பெண்சாதியானவள் புருஷன்பொருட்டு ஒருகாரியம் அல்லது அலுவலை நடத்தினால் அதுவிஷயமாக தன் அதிகாரவரம்புக்குட்பட்டு பெண்சாதி வாங்கும் கடன்களுக்கு புருஷன் கட்டுப்பட்டவனாகிறான். புருஷன் கடனிறுக்க சக்தியற்றவன் என்றானால், மனைவிபுருஷனுக்காகத் தான் வாங்கியகடனை, தனக்கு சீதன சொத்திருந்தால் அதிலிருந்து கொடுக்ககடமைப்பட்டவள் (6 பம் 473.)

195. வியாபாரத்துக்காக குடும்ப பொதுக்கடன்.—அவிபக்த குடும்பஸ்தர்கள் ஒன்றுசேர்ந்து வியாபாரம்முதலிய காரியங்களைக் கூட்டாக நடத்தினால் அவைகளிலிருந்து ஏற்படுகிற லாபநஷ்டங்கள் குடும்பத்தாரெல்லோருக்கும் பொதுவாய் பாத்தியப்பட்டதாக இருக்கின்றன. ஆகையால் அக்காரியங்களை நடத்துகிற முக்கியஸ்தன் அல்லது முக்கியஸ்தர்கள் அவைகளின்பொருட்டு குடும்ப சொத்

தின் நாணயத்தின் பேரிலும் கடன்வாங்க அதிகாரமுள்ளவர்களாக இருக்கிறார்கள். நல்ல எண்ணத்தோடும் யோக்கியமாயும் வாங்கப்படு கிற அப்படிப்பட்ட கடன்களுக்கு மற்றவர்களும் கட்டுப்பட்டவர்க ளாக இருக்கிறார்கள். (1 கல். 475; 14 இ. அ. 187; 15 கல். 70; 20 கல். 453; 20 பம். 767.)

196. ஒருபாகஸ்தனின் தனிக்கடன்.—அவிபக்த குடும்பத்தி லுள்ள ஒரு பாகஸ்தன் தன் சொந்தச்செலவுக்காக கடன்வாங்கி னால் அதில் மற்ற பாகஸ்தர்களுக்கு யாதொரு சம்பந்தமும் இல்லை. கடன்வாங்கினவனும் அவனுடைய பங்கு சொத்துமே அவன் ஜீவித்தி ருக்கிறவரையில் அதற்குபாத்தியப்படும். (1 மது. 354; 10 கல் 316.)

ஆனால் தகப்பன் பாட்டன் ஆகிய முன்னோர் பட்டகடன்கள் இவ்விதிக்கு விலக்காயிருக்கின்றன. இதைப்பற்றி பின்னால் சொல்லு வோம்.

197. தகப்பனிருக்கும்போது பிள்ளைபேரில் பிராது.—தகப்பன் உயிருடனிருந்தும் சன்னியாசியாகப்போனாலும், தேசாந்திரம்போய் 20 வருஷம் காலமாய் விட்டாலும், தீராத வியாதியுள்ளவனா யிருந்தா லும் குடும்பசொத்துப் பிள்ளைக்குச்சேர்ந்ததாக எண்ணப்படுவதால் அப்போது தகப்பன் பட்ட கடனைக்கொடுக்கும்படி அவன் பிள்ளை பேரில் கோர்ட்டில் தாவாசெய்யலாம். மேற்சொன்னபடி சொத்து சே ராமல் இருந்து தகப்பன் உயிரோடிருந்தாலும் தகப்பனுடைய கடனு க்கு பிள்ளைகள் ஜவாப்தாரிஅல்ல என்று சமீபத்தில் தீர்ப்புசெய்யப்பட் டிருக்கிறது. (22 மீத. 49; 27 ம. 243; 20 கல். 328; 28 பம். 383; 36 பம். 68.)

198. பொது சொத்தை விற்பது.—நியாயமான கடன்களுக்கா கத் தகப்பன் பொது சொத்தை ஒத்தி பந்தக முதலிய பாத்தியங்க ளுக்கு உட்படுத்தவும் கூடும். அக்கிரமமான கடன்களுக்கு சுவயார் ஜித சொத்தின் பாகத்தைமட்டும் விற்கலாம் அல்லது பாத்தியப் படுத்தலாம். பிள்ளைகளுடைய பாகத்தை விற்கவும் மற்றப்படி செய்யவும். பாத்தியமில்லை. (14 க. ஐ. 187; 15 க. ஐ. 264; 3 க. 1; 5 பம் 622; 3 அ. 625, 125, ; 6 பம். 520; 8 க. 517; 5 ம. 61; 7 பம் 438; 8 பம். 481; 9 ம. 343; 11 க. 396.) மேலே சொல்லிய படி தகப்பன் கடனுக்காகச் சொத்தை ஒத்தி முதலிய பந்தகம் வைக் கும்போது பிள்ளைகள் மைனராயிருந்தால்செல்லும். இல்லாவிடில் அவர்கள். அனுமதி அவசியம்.

199. போது சொத்தின்பேரில் டிகிரியை நிறைவேற்றுதல்.—தகப்பன்பட்ட நியாயமான கடனுக்காக குடும்பப் பொதுசொத்தை பாத்தியப்படுத்தி யிருந்தால், கடன்காரன் தகப்பன்பேரில்மட்டும் அடைந்த தீர்ப்பைக்கொண்டு பொதுசொத்து முழுவதையும் ஜப்தி செய்து ஏலம்போடலாம். (27 அல 16; 44 கல் 524; 37 அல. 214; 43 பம் 612 48 கல் 341; 12 மத 142; 27 மத 243) ஆனால், பிள்ளைகள் அந்த பாத்தியத்தைத் தீர்க்க முன்வந்தால் அவர்களுக்கிடங்கொடுக்கவேண்டும். (4 ம. 1, 69; 8 க. 525; 8 பம். 43.)

200. நியாயமான கடனைப்பற்றியதாவாவில் பிள்ளைகளை கக்ஷிக்காரர்களாக சேர்க்கவேண்டாமேன்பது.—(1) நியாயமாய் பிள்ளைகளும் கட்டுப்படக்கூடிய கடன் விஷயமான தாவாவில் பிள்ளைகளை விட்டுவிட்டுதகப்பனை மட்டும் கக்ஷிக்காரனாக சேர்த்திருந்தால் தகப்பன் பேரில் பெற்றடிகிரியை பிள்ளைகளின் பங்கையும்சேர்த்து முழுசொத்தின் பேரிலும் நிறைவேற்றலாம். (21 அல. 356; 21 பம். 616; 23 பம். 72; 21 ம. 122; 22 ம. 207 ; 13 இ. அ. 1.)

(2) தாவாவில் பிள்ளைகளைச் சேர்க்காமல் டிகிரியை தகப்பன் பேரில் பெற்றபோதிலும் டிக்கிரியை நிறைவேற்றுகையிலும் ஏலநடவடிக்கைகளிலும் பிள்ளைகளேயும் அவர்கள் சொத்தை பங்கையும் சேர்க்காமல் குடும்பபொது சொத்தை ஏலம்போட்டால் அந்த ஏலத்தால் பிள்ளைகள் கட்டுப்படமாட்டார்கள். (5 க. 148; 15 க. 717 ; 14 க. ஐ. 187 ; 12 ம. 142; 14 இ. அ. 84 ; 10 ம. 241 ; 11 ம. 64 ; 11 பம். 42; 24 பம். 343.) "தகப்பன் கடனுக்காக சகல சொத்தும் ஏலம் போடப்படும்" என்று கோர்ட்டார் பிறப்பிக்கிற இஸ்தியாரினுல் தகப்பனுக்குண்டான பாத்தியமட்டும் ஏலம்போடப்படுமென்று அர்த்தஞ் செய்யக்கூடாது. தகப்பன் பட்டகடனுக்கு குடும்பசொத்தை எவ்வளவு வினியோகஞ்செய்ய பாத்தியமிருக்கிறதோ அவ்வளவென்று எண்ணவேண்டும் (13 க. 21) பிராதிலாவது, நிறைவேற்றுகிற மனுவிலாவது, ஏலசர்ட்டிபிகேட்டிலாவது, ஏலம் போட்டுவந்ததுரையானது தகப்பனுடைய பாத்தியமட்டில் நடவடிக்கையில் கொண்டுவரப் பட்டதாக நிச்சயமாய்த் தெரியவந்தால், அந்த ஸ்திதியில் பாக்கிக்கடனுக்குப் பிள்ளைகளின் பாகம் கட்டுப்படாது. (11 பம். 42; 10 ம. 241; 3 க. 198; 10 க. 998.) குடும்பத்தாருடைய பாத்தியங்களெல்லாம் மேற்கண்ட நடவடிக்கைகளில் சேர்க்கப்பட்டு ஏலம் போடப்பட்டிருந்

தால், அதில் ஏதாவது கொஞ்சம்தவறுதல் ஏற்பட்டிருந்தாலும்; ஏலத்தை ரத்துசெய்யமுடியாது. (14 மு. இ. அ. 605; 10 க. 985; 11 பப். 361; 14 க. 401; 16 க. 40.)

ஆகையால் வியாச்சியமுதலிலேயே பிள்ளைகளை கக்ஷிக்காரர்களாக சேர்ப்பது அவசியமானதாகும் (12 அல. 99; 9 ம. 343; 11 ம. 64)

201. பிள்ளைகள் ஏலத்தைப்பற்றிய விவாதம்.—அயோக்கியமான கடன்களுக்காக குடும்ப பொதுசொத்து முழுவதும் ஏலம் போடப்பட்டு கடன்காரனே அந்த சொத்துக்களை ஏலமெடுத்திருந்தால், பிள்ளைகள் அவன்பேரில் பிராதுசெய்து கடன் அயோக்கியமானதென்கிற அம்சத்தை ருசுபடுத்தித் தங்கள் பாகத்தைத் திருப்பிக்கொள்ளலாம். (5 க. 855; 8 க 522) கடன்காரனைத் தவிர வேறே யாராவது ஏலமெடுத்திருந்தால் அப்படி ஏலமெடுத்தவருக்கு கடன்கள் அயோக்கியமானவையென்று ஏலத்திற்கு முந்தியே தெரிந்திருந்தும் சொத்தை ஏலமெடுத்திருக்கிறானென்கிற அம்சத்தையும் ருஜுப்படுத்தவேண்டும். அப்படி ருஜுச்செய்யாவிட்டால் பிள்ளைகள் தங்கள் பாகத்தையடைய முடியாதென்று பிரிவி கவுன்சிலார் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். (14 க. ஐ. 187; 22 ஸ. 56; 5 க. 148; 12 பம். 625; 8 பம். 481). பிராது மனுவிலேயே கடன் துர்விநியோகங்களுக்கு வாங்கப்பட்டதாக ஏற்பட்டு, சொத்து ஏலம் போடப்பட்டிருந்தால், அந்த சங்கதி தெரிந்தே ஏலமெடுத்தவன் ஏலத்திலெடுத்திருப்பதாக எண்ணப்படுவதால், பிள்ளைகள் வேறு ருஜுச்செய்யாமலே தங்கள் பாத்தியதையை அடையலாம். (6 அ. 234.) வேறு சில கேசுகளில் கடன் அயோக்கியமென்று கொஞ்சங்கூட அறியாமலே ஏலத்தில் எடுத்திருந்தாலும், பிள்ளைகள் ஏலதாரன்பேரில் தாவாசெய்து தங்கள் பாகத்தைத் திருப்பியடையலாமென்று ஏற்பட்டிருக்கின்றன. (12 ம. 142; 13 க. 121; 15 க. 717; 17 க. 584.)

202. தகப்பன்பேரில் ஏற்பட்ட டிக்கிரியை பிள்ளைபேரில் நிறைவேற்றக் கூடாதென்பது.—கடனுக்காக தகப்பன்பேரில் பெற்ற டிக்கிரியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கைகள் நடத்தி ஜப்திசெய்வது

ற்கு முன் அவனிறந்தால் அந்த டிக்கிரியை பிள்ளைகளிடஞ்சேர்ந்த தகப்பன் சுவயார்ஜித சொத்துத் தவிற பிதுரார்ஜித சொத்தின்மேரில் நிறைவேற்றக்கூடாது. பிதுரார்ஜித சொத்தைக் கட்டுப்படுத்த இஷ்டமிருந்தால் தகப்பனிறந்த 6-வருஷத்துக்குள் பிள்ளைகள்.பேரில் தாவா செய்யவேண்டும். (5 ம. 232; 3 ம. 42; 13 ம. 265.) மேற்சொன்ன கடன் அயோக்கியமானவையென்று ஏற்பட்டால், பிள்ளைக்குக் கிடைத்த பிதுரார்ஜித சொத்தில்தகப்பன்பாகங்கூடக் கட்டுப்படமாட்டாது. தகப்பனுயிருடனிருக்கும்போது பிள்ளை பாகத்தை ஜப்திசெய்திருந்தால் செல்லுர. (5 க. 148.)

203. சொத்தையும் கடனையும் பாகஞ்செய்துகொள்வது.—தகப்பனிறந்த பிறகு பிள்ளைகள் கடன்காரர்களுக்குக் கொடுக்கவேண்டிய கடன்களைத் தீர்க்காமல், சொத்தையும் கடன்களையும் அவர்களெல்லோரும் பிரித்துக்கொண்டால் அந்த பாகத்துக்குக் கடன்காரன் சம்மதித்தாலொழிய அவர்களுடைய பாகங்களையெல்லாம் கடன்காரன் கட்டுப்படுத்தலாம். தகப்பன்பட்ட கடனுக்கு ஏற்பாடுசெய்யாமல் சொத்தை பிள்ளைகள் பிரித்துக்கொள்ளக்கூடாது. (3 ம. ஐ. 177, 181.)

204. பிள்ளைகளுடன் பாகஞ்செய்துகொண்ட பிறகு தகப்பன் கடன்கள்.—தகப்பனும் பிள்ளைகளும் சொத்துக்களைப் பிரித்துக்கொண்ட பிறகு தகப்பன் கடன் வாங்கினுல் அதை அவன் பாகத்திலிருக்கும் சொத்தைக்கொண்டே தீர்க்கவேண்டியதே யொழிய பிள்ளைகளுடைய சொத்தை பாத்தியப்படுத்தக்கூடாது. பாகத்துக்குப் பிறகு தகப்பனுக்கு வேறு பிள்ளைபிறந்தால் அந்தப்பிள்ளையின் பாகமட்டும் அதற்குக்கட்டுப்படும். ஆனுல், கடன்காரனை மோசஞ்செய்வதற்காக பாகஞ்செய்துகொண்டால் தகப்பன் கடனுக்குப் பிள்ளைகளின் பாக சொத்தும் கட்டுப்படவேண்டியது. (22 ம. 519.) கடனை துரோகஞ்செய்வது பாவமானதால் காலாவதியாய்ப் போய்விட்ட கடன்களையொப்புக்கொண்டு அவைகளையும் உபிருண்டாக்கிக்கொடுக்கவும், அக்கடனுக்காக பாகஞ்செய்துகொண்ட பிள்ளைகள்சொத்துள்பட தன்சொத்தையும் பாத்தியப்படுத்தலாம். (6 ம. 293.)

205. கடனுக்குப் பேரன் கொள்பேரன் கட்டுப்படுவது—இது வரையில் தகப்பன் வாங்கின கடன்களைப் பிள்ளைகள் தீர்ப்பதைப்பற்றிச்சொன்னோம். பாட்டன், முப்பாட்டன் பட்ட கடன்களையும் பேரன் கொள்பேரன்கள் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தகப்பன், பாட்டன், முப்பாட்டன் இவர்களைத் தவிர, பொதுக்குடும்பத்திலுள்ள மற்றவர்கள் வாங்குகிறகடன்களுக்குப் பிள்ளை கட்டுப்படமாட்டான். (19 அல. 26.)

206. பொது குடும்பத்தில் பாகஸ்தர்களுடைய கடன்கள்.—பொது குடும்பத்தில் தகப்பனைத்தவிர வேறு பிள்ளைகள், அண்ணன் தம்பி, முதலியவர்கள் கடன்வாங்கி அந்தக்கடனுக்காக தங்கள் பாகத்தை விற்கலாம் அல்லது வேறே விதமாய் பாத்தியப்படுத்தலாம். (21 பம். லாரி. 213; 25 மக. 690; 42 மத. 154; 7 இ.அ. 181; 20 இ.அ. 116.) அதை வாங்கினவன் அல்லது பாத்தியதாரன் அந்த பாகஸ்தன் உயிரோடிருக்கையிலே சொத்தைச் சுவாதீனப்படுத்த தாவாசெய்து அமுல்நடத்தியிருக்கவேண்டும். இல்லாவிடில் அவன் பாகம் மற்ற பாகஸ்தர்களுக்குச் சேர்ந்துவிடும். (11 பம். ஐ. 76; 11 அ. 302; 7 க. 52, 54; 4 ம. 302; 6 இ. அ. 88.)

207. சொத்தையடைந்தவன் கடனுக்கு ஜவாப்தாரி.—ஒருவன் பட்டகடனைத் தீர்க்க அவனுடைய பிள்ளை, பேரன், கொள்பேரன் இவர்களைத்தவிர, அவனுடைய பெண்சாதி, தகப்பன் முதலியவர்கள் கட்டுப்பட்டவர்களல்ல. ஒருவன் தன் தகப்பன் முதலிய முன்னோர்களும் ஏஜெண்டுகளும் பட்டகடன்கள் தவிற மற்றவர்கள் வாங்கின கடன்களை கொடுக்கக்கடமைப்பட்டவனல்ல. (10 ம. 316; 1855-ம் ஞு ம. தீ. 183; 12 ம. 325.) ஆனால், ஒருவனுடைய ஆஸ்தி வார்சுபாத்தியமாகச் சேர்ந்தால், அந்த ஆஸ்தி எவ்வளவு பெறுமோ அவ்வளவு கடனைமட்டும் அவன் தீர்க்கவேண்டும். (3 ம. 359; 7 ம. 586.)

208. சொத்துப்போய்விட்டாலும் கடனைத்தீர்க்கும் பொறுப்பு விலகாது.—இறந்தவனுடைய சொத்தையடைந்த ஒருவன் அச்சொத்தைத் தன்சொந்த செலவுகளுக்காக விநியோகப்படுத்தி விட்டாலும்

சொத்துதாரனுடைய கடனைத்தீர்க்கவேண்டிய கடமை அவனைவிட்டு விலகிப்போகமாட்டாது. அச்சொத்தினளவுக்கு அவன் சுதாவிலும் பாத்தியப்பட்டவனாக இருக்கிறான். (8 பம். 220.)

209. தகப்பன் முதலிய முன்னோர் தவிர மற்றவர்கடனை யடைக்க பாத்தியமில்லை யென்பது.—தகப்பன் முதலிய முன்னோர்பட்ட கடனைத் தவிற மற்ற தாயாருடைய சொந்தக்கடனுக்கு மகனாவது மகனுடைய சொந்தக்கடனுக்கு தாய் தகப்பனாவது பாத்தியப்பட்டவர்களல்ல. அண்ணன் தம்பி முதலிய தாயாதிகளில் ஒருவனுடைய கடனுக்கு மற்றவன் பாத்தியப்படவேண்டியதில்லை. புருஷனுடைய சொந்தக்கடனுக்கு பெண்சாதியாவது பெண்சாதியினுடைய சொந்தக்கடனுக்கு புருஷனாவது பாத்தியப்பட்டவர்களாக மாட்டார்கள். 208-வது பிரிவிற் கூறியபடி மேற்சொல்லியவர்களில் ஒருவன் மற்றொருவனுடைய சொத்தை வார்சுபாத்தியப்படி அடைந்திருந்தால் மட்டும் அச்சொத்தினளவுக்குள்ள கடன்களுக்கு அவன் பாத்தியப்பட்டவனாவான்.

210. போது குடும்பத்தின் ஒரு பாகஸ்தனின் சொந்தக்கடன்.—(1) அவிபக்த குடும்பத்தில் தகப்பன் முதலிய முன்னோர் தவிர வேறு பாகஸ்தன் எவனாவது தன்சொந்தத்தில் கடன்வாங்கினால் அவன் குடும்பசொத்தில் தனக்குள்ள பங்கைக்கொண்டும் தன் சுயார்ஜிதத்தைக் கொண்டும் அக்கடனைத் தீர்த்துக்கொள்ளவேண்டுமேயன்றி மற்றபாகஸ்தர்களுடைய பங்கு சொத்து அக்கடனுக்கு எவ்வளவும் பாத்தியப்படமாட்டாது.

(2) அவிபக்த குடும்பத்திலுள்ள ஒரு பாகஸ்தனுடைய சொந்தக் கடன்களுக்கு அவனுடைய பங்குசொத்து பாத்தியப்படவேண்டுமானால் அது அக்கடனுக்காக அப்பாகஸ்தனால் பந்தகபறுதீனம்செய்யப்பட்டாவது அல்லது அவன் உயிரோடிருக்கும்போதே கோர்ட்டாரால் ஜப்திசெய்யப்பட்டாவது இருக்கவேண்டும். இல்லாவிடில் அப்பங்கானது அவன் இறந்த பிறகு அவனுடைய கடனுக்கு பாத்தியப்படமாட்டாது. அவன் இறந்தவுடன் அப்பங்கு அவனுடன் மறைந்துபோய் ஸர்வைவர்ஷிப்பு என்னும் பாத்தியப்படி மற்றபங்காளிகளைச் சேர்ந்துவிடுகிறபடியால் அது கடன்காரர்களுக்கு பாத்தியப்படத்தகாததாய் விடுகிறது. உயிரோடிருக்கும் பாகஸ்தர்கள் இறந்தவனுடைய

கடனைத்தீர்க்கக் கடமைப்படாதவர்களாக இருக்கிறபடியால் கடன்வாங்கினவனுக்கு தனியான சொத்து ஏதேனுமிருந்தால் அதன் பேரில் மட்டும் கடன் கொடுத்தவன் தொடரலாமேயன்றி குடும்பப்பொதுவான சொத்தின்பேரில் தொடர நியாயமில்லை. (6 இ. அ. 88; 5 கல். 148 ; 4 மது. 392 ; 5 மது. 223; 17 மது. 144; 23 அல. 126.)

211. வார்சு சர்டிபிகேட்.—(1) கடன் கொடுத்தவன் இறந்துபோனபிறகு அக்கடனை அவனுடைய வார்சு அல்லது வார்சுகள் கோர்ட்டு மூலமாய் வசூல்செய்யவேண்டியதாயிருந்தால், அதற்காக அவ்வார்சு அல்லது வார்சுகள் ஜில்லாகோர்ட்டில் மனுசெய்துகொண்டு வார்சுபாத்திய சர்டிபிகேட்டுவாங்கி ஒப்புவிக்கவேண்டும்.

(2) இறந்துபோனவனுக்கு பலவார்சுகளிருந்தால் அவர்கள் ஒவ்வொருவரும் கடன்தொகையில் தன் தன் பங்குக்குள்ளது கிடைக்கவேண்டுமென்று தனித்தனியாய் பலதாவாக்கள் கொண்டுவரக்கூடாது. ஒரு கடன்விஷயமாய் எல்லோரும்சேர்ந்து ஒரே தாவாவைக் கொண்டுவரவேண்டும். அவர்களில் யாராவது வாதியாகச்சேர சம்மதிக்காமலிருந்தால் அவன் பிரதிவாதியாக சேர்க்கப்படவேண்டும். (7 அல. 313.)

(3) இறந்துபோனவன் சொத்தொன்றையும் வைக்காமல் கடனைமட்டும் வைத்துப்போனுல், அவனுடைய வார்சுகள் அவன்பட்ட கடனைத் தீர்க்கவேண்டியதில்லை. இறந்தவன்சொத்து அவன் வார்சுக்குக் கிடைக்காமல் அயலார் கொண்டுபோய்விட்டாலும், கடன்காரன் இறந்தவன் சொத்தின்பேரில் தாவாசெய்யவேண்டுமே யொழிய அவன் வார்சின்பேரில் தாவாசெய்ய நியாயமில்லை. (2—டப்ளியூ மேர்னுடன் 286)

(4) இறந்தவனுடையவார்சில்லாத ஒருவன் அவன்சொத்தை அக்கிரமமாய் அடைந்து அவன் கடனுக்குத் தான் வார்சில்லையென்று வாதாடினுலும் கடன்கொடுத்தவர்கள் அப்படி அக்கிரமமாய் அடைந்த சொத்தின்பேரில் தாவாசெய்யலாம். இறந்தவனுடைய உத்தரகிரியை சிரார்த்தம் முதலியவைகளுக்கு சொத்தை விரயம் செய்ததாக ருஜுச் செய்தால் செல்லும்.

212. கடன்காரனை மோசஞ்செய்வது.—(1) கடன்காரனுக்குச் சொத்துசேராமல் செய்யவேணு மென்கிற கெட்ட எண்ணத்தோடு எவனுவது தன்னுடையசொத்தை ஒன்றுசேர்த்து மோசமாய் மிகவும்குறைந்த பிரதி பிரயோஜனத்துக்காவது, அல்லது பிரதிபிரயோசனமில்லாமலாவது வினியோகஞ்செய்தால் அந்தவினியோகம் செல்லமாட்டாது. கடன்காரர்கள் அந்த வினியோகசொத்தின்பேரில் தீர்ப்பை நிறைவேற்றலாம். கெட்டஎண்ணமில்லாமலே தகுந்த பிரதிப்பிரயோஜனத்துக்காகவாவது தானமூலமாகவாவது உயில் மூலமாகவாவது சொத்தை வினியோகம்செய்தால் செல்லும். (4 ம. ஐ. 84; 6 அ. 560; 21 ஸ. 155.)

(2) ஒரு வார்சு நல்ல எண்ணத்தோடு தகுந்த பிரதிப்பிரயோசனத்துக்கு இறந்தவன் சொத்தைப் பராதீனம்செய்தால், இறந்தவனுடைய கடன்காரன் அந்த சொத்தின்பேரில் தன் கடனுக்காக தாவா செய்யக்கூடாது. ஆனல், அதை விற்ற வார்சு அதன்மதிப்புக்குச் சரியான தொகைவரையில் கடனை தீர்க்க பாத்தியப்பட்டவனுவான்.

213. சொத்தை யடையாதவர்கள் கடனைத்தீர்ப்பது.—(1) இதுவரையில் ஒருவன்பட்டகடனை அவன்சொத்தை யடைகிறவன் கொடுக்கவேண்டுமென்று சொன்னேம். இனிச்சொத்துக்குப் பாத்தியமில்லாதவர்கள் கடனைத்தீர்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பது அடியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதாவது (1) குடும்பத்தின் நியாயமான பொதுச்செலவுக்காக வாங்கின கடன் குடும்பத்திலுள்ள எவனுல் வாங்கப்பட்டாலும் எல்லா பாகஸ்தர்களும் கொடுக்கவேண்டியது. (2) அவசியமான வீட்டுச்செலவுக்காக பெண்சாதி, வேலைக்காரன், சிஷன் முதலியவர்களால் பட்ட கடன்களையும், அதிகாரத்தை மீறுமல் ஏஜண்டுகள்செய்த நியாயமான கடன்களையும் எஜமானன் தீர்க்கக் கடமைப்பட்டவன். (3) பொது குடும்பத்தில் கூட்டாகச்செய்த வியாபாரத்துக்காக அவர்களில் ஒருவன்மட்டும் கடன்வாங்கி யிருந்தால் அதைக் குடும்பத்தார் எல்லாரும் தீர்க்கவேண்டும். (1 க. 475) மேலேகண்ட வியாபாரவிஷயமாய் வாங்கின கடனுக்காக ஒருவன்பேரில் மட்டும் தீர்ப்புப்பெற்றுலும் அந்தத்தீர்ப்பை நிறைவேற்ற குடும்பச் சொத்து முழுவதையும் ஏலம்போட்டால், மற்றபாகஸ்தர்கள் ஆட்சேபிக்க நியாயமில்லை. (15 க. 70.)

(2) குடும்பத்தலைவன் சொத்தை பாத்தியப்படுத்தாமல் ரொக்கக் கடன் வாங்கினதற்காக டிக்கிரி பெற்றிருந்தால், அந்தக்கடன் குடும்பச்செலவுக்கு வாங்கப்பட்டிருந்தாலும், டிக்கிரிபெற்றவன் அந்தக்குடும்பத் தலைவனுடைய பாகத்தை மட்டும் ஜப்திசெய்து விற்கலாமேயொழிய மற்றவர்கள் பாகத்தை ஜப்திசெய்யக்கூடாதென்று பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள் (6 பம். 564; 11 பம். 700.)

7.—வது சோத்து வினியோகம்.

214. சொத்துக்களின் வினியோகங்கள்.—(A) சொத்துக்களின் வினியோகங்கள் அடியிற்கண்டபடி பலவகைப்படும்.

(1) சரியான பிரதிப் பிரயோஜனத்தின்பேரில் செய்யப்படும் அடமானம், போக்கியம், குத்தகை முதலிய பந்தகங்கள்.

(2) சரியானபிரதிப் பிரயோஜனத்தின்பேரில் செய்யப்படும் பரு தீனமாகிய கிரயம், இது சொத்துதாரனாலேயே செய்யப்படுகிற சாதாரண கிரயமென்றும், அவனுடைய கடன்காரர்களால் கோர்ட்டு மூலமாய் செய்விக்கப்படும் ஏலக்கிரயமென்றும் இருவகைப்படும்.

(3) யாதொரு பிரதிப் பிரயோஜனமுமின்றி இஷ்டத்தின்பேரில் இனாமாகக் கொடுக்கப்படும் தானம்.

(4) பொதுஜன நன்மையின் பொருட்டும் பரலோகஸார்த்தகமாயும் மதவிஷயமாயும் செய்யப்படும் தர்மங்கள்.

(5) தன்ஜீவதசைக்குப் பிறகு தன்சொத்துக்களை இன்னின்னார் அடைந்துகொள்ளத்தக்கதென்று ஏற்படுத்திவைக்கும் உயில்.

B. பிரதிப் பிரயோஜனத்தின் பேரில் ஏற்படுகிற பந்தக பருதீனங்களைப்பற்றியும் பிரதிப்பிரயோஜனமின்றி செய்யப்படும் தான தர்மங்களைப்பற்றியும் உயில்களைப்பற்றியும் பின்னால் விவரித்துச்சொல்லப்பட்டிருக்கிறது.

C. மேலும், சொத்துக்களை வினியோகம் செய்வதில் ஒருவனுக்குள்ள சுதந்திரமானது அச்சொத்துக்களின் பிதுரார்ஜிதம்

சுயார்ஜிதமென்ற பிரிவுக்குத்தக்கபடி இருப்பதோடு, சொத்துதாரன் மற்ற பாரஸ்தர்களுடன் சேர்ந்து அவிபக்த குடும்பமாயிருக்கிருனு அல்லது விபக்தனுயிருக்கிருனு என்றதையும் அனுசரித்ததாக இருக்கிறது. இவைகளைப்பற்றி அடியில் வருமாறு தனித்தனியாய் கவனிப்போமாக.

(1) மிதாட்சரப்படி சொத்து வினியோகம்.

215. புத்திரசந்ததி யற்றவர்களால் வினியோகம்.—புத்திரசந்ததி அதாவது பிள்ளை பேரன் கொள் பேரன் முதலியவர்கள் இல்லாத ஒருவன் அண்ணன் தம்பி முதலியவர்களுக்குப் பொதுவாயில்லாமல் பிரிந்துபோய் தன்வசமிருக்கிற சுவயார்ஜித பிதுரார்ஜிதமான ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் முழுவதையும் அவனிஷ்டப்படி பாரதீனம் முதலிய வினியோகம்செய்யலாம். (2 மூ. இ. அ. 54; 6 மூ. இ. அ. 309; 3 பம். ஐ. 6; 24 மத. 429; 45 அல. 48; 34 கல். 372.)

216. புத்திர சந்ததி யற்றவர்களால் வினியோகம்—புத்திரசந்ததியுள்ள ஒருவன் தன்வசத்திலிருக்கிற சுவயார்ஜிதமான ஸ்தாவர ஜங்கம சொத்துக்களைமட்டும் தன்னிஷ்டப்படி வினியோகஞ்செய்யலாம். (20 அல. 267; 28 மத. 386; 10 ஸ. 287. 9 மூ. இ. அ. 96.) புத்திரன் முதலிய ஆண்சந்ததியாரிடமிருந்து பாகஞ்செய்துகொண்டவனும் தன்னிஷ்டப்படி தன்சொத்தை வினியோகஞ் செய்யலாம். (11 ம. 246; 8 மத. லா. ஜ. 599.)

217. பிதுரார்ஜிதமான தன் பாகத்தைமட்டும் வினியோகம்செய்வது.—தகப்பனும் பிள்ளையும் பாகஞ்செய்துகொண்ட பிறகு அவரவர் தன் தன் பாகசொத்தையும், அதன் பிறகு அவனவன் சம்பாதித்த சொத்தையும் இஷ்டப்படி அவனவன் வினியோகஞ்செய்யலாம். (6 மூ. இ. அ. 309.)

218. பிதுரார்ஜித பொதுச்சொத்தின்பேரில் தகப்பனுக்குப் பாத்தியம்.—பிதுரார்ஜிதமான ஸ்தாவர ஜங்கம சொத்துக்களைக்கூட பிள்ளைகளிஷ்டமின்றி தகப்பன் வினியோகஞ்செய்யக்கூடாது. ஆனுல் குடும்பத்தில் சாஸ்திரப்படி செய்யவேண்டிய சத்கர்மங்களுக்காக தன் சக்திக்குத் தக்கபடி ஜங்கம சொத்துக்களைத் தானமாக தகப்பன் வினியோகஞ்செய்யலாம். அன்பினுலாவது, அல்லது கஷ்டதசையிலிருப்பவர்

களுக்காவது தகப்பன் பிதுரார்ஜித ஜங்கம சொத்தில் சிறிதளவு நியாயவிரோதமில்லாமல் தன் பெண்சாதி, பெண் அல்லது பிள்ளைக்கும் கூட தானமாய் கொடுக்கலாம். (29 பம் 51; 49 இ. அ. 163; 5 பட். லா ரி. 516.) தன் பெண்ணுக்கு சிறிது ஸ்தாவரசொத்தையும் கொடுக்கலாம். (35 மத. 628) உயிலில்கூட தகப்பன் தன் பிள்ளைகளின் சம்மதியின்பேரில் மேற்சொல்லிய வினியோகங்களை தன் குடும்பபெண்களுக்கு செய்யலாம் என்று மதராஸ் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (40 மத. 122) வேறேவிதமாய் வினியோகஞ்செய்யவாவது பிள்ளைகளுக்கு தன்னிஷ்டப்படி பிரித்துக்கொடுக்கவாவது அதிகாரமில்லை. (1 பம். 561; 7. ம 357; 7 இ. அ. 181; 16 மத 353; 30 மத 453.)

219. பிதுரார்ஜிதசோத்தில் பிள்ளைகளுக்கும் தகப்பனுக்கும் சமமானபாத்தியம்.—பிதுரார்ஜிதமான சொத்து விஷயமாய் பிள்ளைகளைக் காட்டிலும் தகப்பனுக்கு அதிகபாத்தியமில்லாமல் சமமாயிருக்கிறது. ஆனால், தகப்பன் மானேஜராக இருந்து கிரமமாய் சொத்துக்களைப் பாதுகாத்து வரவேண்டியது. அனுவசியமாய் சொத்தை வினியோகஞ் செய்தால் பிள்ளையினுடைய பங்கு அதற்கு உட்படமாட்டாது (9 பம் லா. ரி. 595.)

220. தகப்பன்செய்த வினியோகங்களைப் பிள்ளைகள் ஆட்சேபிப்பது அல்லது சம்மதிப்பது. (1) அநியாயமாக தகப்பன்செய்தபிதுரார்ஜித சொத்து வினியோகங்களைப் பராதீனகாலத்திற் பிறந்த பிள்ளையும், கர்ப்பத்திலிருக்கிற பிள்ளையும் ஆட்சேபித்து ரத்துசெய்யலாம். அப்படிப்பட்ட வினியோகத்தைப் பிறந்திருக்கிற பிள்ளை சம்மதித்திருந்தால் அதை அதற்குப்பிறகு பிறக்கிறபிள்ளை ரத்துசெய்யமுடியாது. (16 மத 76; 11 மத. 246; 1 இ அ 321; 38 அல 126) வினியோகத்துக்குப்பிறகு கர்ப்பம்தரித்துப் பிள்ளைபிறந்தாலும் அந்தப்பிள்ளை வினியோகத்தை ரத்துசெய்யமுடியாது. (4 ம. 307 ; 8 ம. 89) வினியோககாலத்தில் பிறந்திருந்தபிள்ளை அதை ரத்துசெய்ய முடியாவிட்டாலும் கர்ப்பத்திலிருந்து பிறந்தபிள்ளை அவனுக்குமுன் தாவா செய்து வினியோகத்தை ரத்துசெய்யலாம். (11 ஸ. 480.) தகப்பனால் செய்யப்பட்ட வினியோகத்தை ரத்துசெய்ய கடன் கொடுத்தவன் சொத்தின் ஸ்வாதீனமடைந்த தேதியிலிருந்து 12வருஷத்துக்குள் தாவா செய்யவேண்டும். (லிமிடேஷன் ஆக்ட் 126-வது ஆர்ட்டிகில்; 1 லா கூ. 558.)

(2) தகப்பனால் செய்யப்பட்ட பிதுரார்ஜித சொத்தின் வினியோக விஷயமாய்ப் பிள்ளைகளுக்கு எவ்வளவுபாத்தியங்களுண்டோ அவ்வளவுபாத்தியங்கள் பிள்ளைகளில்லாதபோது பேரன்களுக்கும், பேரன்களில்லாதபோது, கொள்பேரன்களுக்கும் உண்டு.

221. **சுவீகாரப்பிள்ளையின் பாத்தியம்.**—தகப்பன்செய்த பிதுரார்ஜிதசொத்தின் துர்வினியோகவிஷயமாய்ப்பெற்றபிள்ளைக்கு ஆட்சேபித்து ரத்துசெய்ய எவ்வளவுபாத்தியமிருக்கிறதோ அவ்வளவு பாத்தியம் சுவீகாரப்பிள்ளைக்குமுண்டு. ஆனால், சுவீகாரம் எடுப்பதற்குமுந்தி செய்யப்பட்ட துர்வினியோகங்களை ஆட்சேபிக்க சுவீகாரப்பிள்ளைக்கு அதிகாரமில்லை. (11 ஸ. 755; 5 பம். 630.)

222. **வினியோகத்தைச் சம்மதித்தல்.**—தகப்பன்செய்த பிதுரார்ஜிதசொத்தில் வினியோகங்களை யுடனேயாவது, பிறகாவது பிள்ளைகள் ஒப்புக்கொண்டால் அந்தவினியோகம்செல்லும். (45 மத 499); பிதுரார்ஜிதசொத்தைவிற்று, பிதா விற்றபணத்தைக்கொண்டு வேறு சொத்துவாங்கி பிள்ளைகள் சுவாதீனத்தில்விட்டால் அந்த விற்பனையைப் பிள்ளைகள் ஒப்புக்கொண்டதாகவே எண்ணப்படும். (2 பம். ஐ. 318; 9 ஸ 511.) சொத்தைவினியோகஞ்செய்ய சிலபாகஸ்தர்கள் மட்டும் அனுமதிகொடுத்து சிலர்கொடாமலிருந்தால், கொடாதவர்கள் பாகங்கட்டுப்படமாட்டாது. (22 மத 312; 23 மத 89) பிதுரார்ஜிதசொத்தை வினியோகஞ்செய்யத் தகப்பனுக்குப் பிள்ளைகள் அனுமதிதந்தகாலத்தில பேரன்களாவதிருந்தால் அவர்கள்பாகம் கட்டுப்படாது. வினியோகத்துக்குப்பிறகு பேரன் கொள்பேரன்கள் பிறந்தால் அவன்செய்த வினியோகத்தை அவர்கள் ஆட்சேபிக்கக்கூடாது. குடும்ப எஜமானன் பிதுரார்ஜிதசொத்தை வியாபாரவிஷயத்தில் பராதீனஞ்செய்ய அதிகாரமில்லாமற்போனாலும், மற்றபாகஸ்தர்கள் ஆட்சேபிக்காமல்இருந்தால் அதற்குச்சம்மதித்திருந்ததாகவே எண்ணப்படும். (45 மத. 281.) பிள்ளைகள் மைனராயிருந்து தக்கவயது வராதவர்களாயிருந்தால்மட்டும் அவர்களனுமதியின்றி பிதுரார்ஜிதசொத்தை மானேஜராயிருக்கிற தகப்பன் அவசியமான குடும்பக்காரியங்களுக்குப் பராதீனஞ் செய்யலாமென்றும் பிள்ளைகள் மேஜராயிருந்தால் அவர்களனுமதி யவசியமென்றும் மிதாட்சர கிரந்தத்தின் அபிப்பிராயப்படி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (12 கல் 389; 30 இ. அ. 165) ஆனால், குடு

ம்ப எஜமானன் மானேஜராணை மற்றபாகஸ்தர்களுடைய அநுமதியின் பேரில்தான் குடும்பப்பொதுக் காரியங்களுக்கு சொத்தைப் பராதீனஞ்செய்வதாக நம்பப்படுவதால், அவர்கள் அநுமதிகொடுக்காமலிருந்தாலும் மானேஜர் நியாயவிரோதமில்லாமல் தானே பராதீனஞ்செய்தாலும் செல்லும். (42 அல 264; 29 கல் 797; 11 பம் 605; 44 இ. அ. 126.)

223. **குடும்ப எஜமானன் அதிகாரம்.**—பொதுக் குடும்பத்தில் நியாயமானதும் அவசியமானதுமான காரியங்களைச் செய்வதற்காக ஏற்பட்ட கடன்களைத்தீர்க்க குடும்ப எஜமானன் மற்றபாகஸ்தர்களைக் கேட்காமலே சொத்துக்களைப் பாத்தியப்படுத்தவும் விற்கவும் அதிகாரமுண்டு. (6 மூ. இ. அ. 393; 46 இ. அ. 145; 50 இ. அ. 14) ஆனால், அப்படிப்பட்ட சமயங்களில் தக்கயோசனைசெய்து காரியங்களை நடத்த வேண்டும். சொத்தை விற்றுத்தான் கடனைத் தீர்க்கவேணுமென்று அந்நியாவசியமாயிருந்தாலொழிய விற்கக்கூடாது. (1 ஸ. 96; 6 ம. ஜ. 371; 2 பம் 666; 14 ஸ. 72; 25 பம். 353.) காரணமின்றி அநாவசியமாய்ச்செய்த சொத்தின் விநியோகஞ் செல்லமாட்டாது.

(1) ஆகிலும் மேற்சொல்லியவாறான குடும்பார்த்தமான அவசியம் யாதொன்றுமில்லாமல் மானேஜரானவன் குடும்பப்பொதுவான சொத்தை விநியோகம் செய்யக்கூடாது. அப்படிச்செய்தால் அவனுடைய பங்குமட்டுமே அவ்விநியோகத்துக்கு பாத்தியப்படும். மற்ற பாகஸ்தர்களுடையபங்கு உட்படமாட்டாது. மானேஜருடையவிசேஷ அதிகாரமானது இவ்வாறுகுடும்ப அவசியத்தைப் பொருத்ததாக இருக்கிறபடியால், மற்றபாகஸ்தர்களையும் கட்டுப்படுத்த வேணுமென்ற எண்ணத்துடன் அவனுக்குக்கடன் கொடுக்கிறவர்களும் குடும்பப்பொதுவான சொத்தை அவனிடமிருந்து விநியோகம் பெறுகிறவர்களும் அவைகளினுடைய அவசியத்தையும் நியாயத்தையும் செவ்வையாய் விசாரித்துத் தெரிந்துகொண்டும் நல்ல எண்ணத்துடனும் நடவடிக்கை நடத்தவேண்டும். (6 மூ. இ. அ. 393; 19 இ. அ. 33; 26 கல். 8[illegible]0; 26 பம். 433; 42 அல 559).

(2) தகப்பனானவன் கடன்பட்டு நரகத்துக்கு ஆளாக்காமல் அதினின்றும் அவனைவிடுவிப்பது பிள்ளைகளுடைய முதற்கடமையாக இருக்கிறதென்று தர்மசாஸ்திரங்களில்சொல்லப்பட்டிருக்கிறது. துன்மார்க்கமாயும் அக்கிரமமாயுமுள்ள செலவுகளுக்காக தகப்பன் கடன்

பட்டிருந்தால் அக்கடன்களுக்குமட்டும் பிள்ளைகள் கட்டுப்பட்டவர்களல்லவேதவிர அது நீங்கலாக மற்றெவ்வகைப்பட்ட கடன்களையும் பிள்ளைகள் பிதுரார்ஜிதமாயாவது சுயார்ஜிதமாயாவது உள்ள எல்லாசொத்தைக்கொண்டும் தீர்க்ககடமைப்பட்டிருக்கிறார்கள். பிள்ளைகள் தீர்க்கக் கடமைப்பட்டிருக்கிற கடனை தகப்பனானவன் தானேயுந்தீர்த்துக் கொள்ள அதிகாரமுடையவனாக இருக்கிறான். ஆகையால் அப்படிப் பட்ட கடன்களைத் தீர்ப்பதற்காக தகப்பனால் செய்யப்படுகிற குடும்ப சொத்தின் பந்தகபராதீனங்களை பிள்ளைகள் ஆக்ஷேபிக்கக் கூடாதவர்களாக இருப்பதும் தவிர அவைகளுக்கு அவர்கள் முற்றிலும் கட்டுப் பட்டவர்களாகவு மிருக்கிறார்கள். (1 இ· அ. 321; 11 மது. 64; 13 அல· 216; 12 மது. 309; 17 கல். 584; 13 இ. அ. 1; 21 மது· 222; 22 மது· 207; 28 கல். 517; 44 மத 214.)

224. தகப்பன்செய்த துர்வினியோகத்தை ருசுப்படுத்துங்கடமை பிள்ளைகளுடையது —குடும்பசொத்தில் தங்கள பாகத்தையுஞ்சேர்த்து தகப்பனால்செய்யப்பட்ட பந்தகபராதீனங்கள் தங்களைக்கட்டுப்படுத்த மாட்டாதென்று ஆக்ஷேபிக்கிறபிள்ளைகள் அவ்விநியோகங்கள் தகப்பனுடைய துன்மார்க்கமாயும் அக்கிரமமாயுமுள்ள செலவுகள் அல்லது கடன்களின்பொருட்டு செய்யப்பட்டனவென்று ருசுப்படுத்தவேண்டும். அதைத்திருப்தியாய் ருசுப்படுத்தும் பளுவும் பிள்ளைகள் பேரிலேயே இருக்கிறது. அவ்வாறு அவர்கள் ருசுப்படுத்தாதவரையில் கடன்களின்பொருட்டு தகப்பனால் செய்யப்பட்ட குடும்பப்பொதுவான எல்லா சொத்தின் விநியோகங்களுக்கும் அவர்கள் கட்டுப்பட்டவர்களாகவே யிருக்கிறார்கள். தகப்பனால்செய்யப்பட்ட குடும்பசொத்தின் விநியோகங்கள் குடும்பார்த்தமாயுள்ள செலவுகளுக்காகவும் கடன்களுக்காகவும் ஏற்படவில்லையென்றாவது பிள்ளைகள் செய்யும் ஆக்ஷேபணைகள் எவ்வளவும் செல்லமாட்டாது. (1 இ. அ. 321; 9 இ. அ. 128; 15 இ. அ. 105; 16 இ. அ. 1; 27 அல 16; 44 கல் 524; 43 பம் 612.)

225. தகப்பன் செய்த சொத்து வினியோகத்துக்கு பிள்ளை கட்டுப் படுவேது.—தகப்பனுடைய சொந்தக் கடனுக்காக அவனால் செய்யப் படும் குடும்ப சொத்தின் பந்தக பராதீனங்கள் அவ்விநியோககாலத்

திற்கு முன் ஏற்பட்ட பழைய கடன்களின் பொருட்டே செய்யப் பட்டிருக்க வேண்டுமென்று முன் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இப் போது அதுவும் மாறிப்போய்விட்டது. தற்காலததில் வாங்கப் பட்ட ஒரு கடனுக்காகவே குடும்பசொத்து தகப்பனுல் விநியோ கப்படுத்தப்பட்டாலும் அதற்கும் பிள்ளைகள் கட்டுப்பட்டவர் களாகவே யிருக்கிறூர்கள் என்றும், முன்னுடியே ஏற்பட்டதாயிருக் கிற பழைய கடன்களின் பொருட்டு செய்யப்படும் விநியோகத்துக் கும் தற்காலத்தில் வாங்கப்பட்ட கடன்களின்பொருட்டு செய்யப் படும் விநியோகத்துக்கும் யாதொரு பேதமுமில்லையென்றும் இர ண்டுக்கும் பிள்ளைகள் சமமாகவே கட்டுப்பட்டிருக்கிறூர்கள் என்று மதராஸ் ஹைகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதாவது தகப்பன் கடனுக்கு பிள்ளை கட்டுப்பட்டவனு அல்லவா என்பதை நிச்சயப்படுத்துவதற்கு ஷை கடனுனது எத்தன்மையதானது என்பது குறிப்பேயன்றி அது எப்போது வாங்கப்பட்டது என்பதுகாரணமாக மாட்டாது. தகப்பனுல் செய்யப்பட்ட குடும்பசொத்தின் விநியோகமா னது புதிதாய் வாங்கப்பட்ட கடனின் பொருட்டு ஏற்பட்டதாக விருந் தாலும் அதற்குப்பிள்ளை கட்டுப்பட்டவனுகவே இருக்கிறுன். (13 மத. 51; 21 மத. 26; 29 மத. 200; 43 மத. 421.)

226. தகப்பன் கடனைத்தீர்க்க பிள்ளைகள் சொத்தும் கட்டுப்படு வது.—தகப்பனுடைய சொந்தக் கடன்களைத் தீர்க்கும் கடமையா னது அவன் இறந்தபிறகே பிள்ளைகளுக்கு ஏற்படுகிறதென்றுலும் பிள்ளைகளுடைய பங்கு சொத்தானது தகப்பனுடைய கடன்களுக்கு அவனுடைய ஜீவகாலத்திலேயே பாத்தியப்பட்டதாக இருக்கிறது. ஆனபடியால் அக்கடனைத் தீர்க்கும்பொருட்டு பிள்ளையினுடைய பங்குஞ்சேர்ந்த பூரா குடும்பப் பொதுவான சொத்தை தானே பந் தக பராதீனம் செய்யவும் தகப்பனுக்கு அதிகாரமுண்டு.

227. தகப்பன்கொடுத்த ஜாமீனுக்கு பிள்ளைசொத்து கட்டுப்படு வது.—தகப்பனுனவன் தன்சொந்த உபயோகத்துக்காக வல்லாமல் பிறனொருவனுக்கு ஜாமீன் நின்று கடன் வாங்கிக்கொடுத்திருந் தால் அக்கடனுக்கும் பிள்ளைகளுடைய பங்குசொத்து பாத்தியப் பட்டதாக இருக்கிறது ஆகையால் அப்படிப்பட்ட கடனுக்காக குடும்பசொத்து விநியோகமானுல் அதற்கும் பிள்ளைகள் கட்டுப்பட்

டவர்களாகவே யிருக்கிறார்கள். (11 மது. 373; 23 பம். 454; 41 மத. 197.)

228 தகப்பன்செய்த துன்மார்க்ககடன் பிள்ளையை பாதிக்காது.—தகப்பனுடைய துன்மாக்கமாயும் அக்கிரமமாயுமுள்ள செலவுகளுக்கும் அதன் நிமித்தம் ஏற்பட்ட கடன்களுக்காகவும் குடும்பப்பொதுவான சொத்து விநியோகம் செய்யப்பட்டிருந்தால் அதுமட்டும் பிள்ளைகளைக் கட்டுப்படுத்தமாட்டாது. தகப்பனுடைய பங்கு வீதத்துக்குள்ள சொத்துமட்டும் அவ்விநியோகத்துக்கு உட்பட்டதாகும். (13 மது. 51; 20 கல். 238.)

229. தகப்பன்பட்ட துன்மார்க்க கடனேயடைக்க பிள்ளை சம்மதியாவிட்டால் தகப்பன்பாகமட்டும் கட்டுப்படுமேன்பது—(1) தகப்பனால் செய்யப்படும் குடும்பசொத்தின் விநியோகமானது குடும்பார்த்தமான செலவுகளுக்கும் கடன்களுக்குமாகவாவது, அல்லது துன்மார்க்க சம்பந்தமில்லாத சொந்தக் கடன்களுக்காகவாவது ஏற்படாவிட்டால், தகப்பனானவன் தன்பங்கு வீதத்திற்கு மேற்பட்ட சொத்தை விநியோகம் செய்வதற்கு பிள்ளைகளுடைய அனுமதியைப் பெறவேண்டும். மேற்சொன்ன காரணங்களன்னியிலும் பிள்ளைகளுடைய அனுமதிபெருமலும் தகப்பனானவன் தன் பங்கு வீதத்திற்கு மேற்பட்ட சொத்தை விநியோகம்செய்தால் அது பிள்ளைகளைக்கட்டுப்படுத்தமாட்டாது. (5 மது. 337; 8 மது. 75; 13 மது. 51; 16 மது. 96; 21 மது. 28.)

(2) தகப்பனால் செய்யப்படுகிற பந்தகபராதீனங்களுக்குப் பிள்ளைகள் எவ்வாறு கட்டுப்பட்டிருக்கிறார்களோ அவ்வாறே பாட்டனுடைய விநியோகங்களுக்கும் பேரர்கள் கட்டுப்பட்டவர்களாக இருக்கிறார்கள். (19 அல 26.)

230. பிள்ளைபிறப்பதற்குமுந்தி தகப்பன்செய்த சொத்து விநியோகம்.—தகப்பனிடமிருக்கிற பூர்வீகமான சொத்தில் பிள்ளைகளுடைய பாத்தியம் அவர்கள் பிறக்கும்போது தான் ஏற்படுகிறபடியால் அவர்கள் பிறப்பதற்கு முந்தியே தகப்பனால் செய்யப்பட்டுப்போன விநியோகங்களை ஆக்ஷேபிக்க பிள்ளைகளுக்கு அதிகாரமில்லை. (1 இ. அ. 321.) ஆனால், ஹிந்து சாஸ்திரப்படி, தாயின்கர்ப்பத்திலுள்ளபிள்ளை, பிறந்திருக்கிற பிள்ளைச்குசமானம் என்பதால் சொத்து விநியோககாலத்தில் கர்ப்பத்திலிருந்து பிறகு பிறந்த பிள்ளை, அப்படிப்பட்ட விநியோகங்களை ஆட்சேபித்து ரத்து செய்யலாம். (11 மத. 246; 16 மத 76; 45 இ. அ. 284; 220-வது வீசக்ஷணைப்பார்க்க.)

231. கடன்கோடுப்பவன் விசாரிக்கவேண்டிய சங்கதிகள்.—பிதுரார்ஜித சொத்தின்பேரில் கடன்கொடுக்கிறவனும், டிக்கிரியின் பேரில் ஜப்திசெய்த சொத்தை ஏலமெடுக்கிறவனும், கடன் என்ன அவசியமான குடும்பப் பொதுச்செலவுக்குக் கொடுக்கப்பட்டதென்றும், குடும்ப லாபத்துக்காகக் கொடுக்கப்பட்டதா, அந்தச்செலவை மற்ற பாகஸ்தர்கள் தடைசெய்யாமல் ஒப்புக்கொள்ளத் தக்கதாவென்றும், எவ்விதமான மோசமில்லாமல் தாவாசெய்து ஏலத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா, அல்லது நியாயமான கடன்களுக்காக டிக்கிரி பெறப்பட்டதா, அல்லது அந்த டிக்கிரியை ரத்து செய்யக்கூடிய பாகஸ்தர்கள் ஏற்பட்டு ஏதாவது ஏலவிஷயம் செல்லாதென்று நோடீசு முதலானது கொடுத்திருக்கிறார்களாவென்றும் யோசித்து கடன்கொடுக்கவாவது சொத்தை ஏலமெடுக்கவாவது வேண்டும். (31 அல. 176; 26 பம். 326; 8 மத. 75; 15 கல். 717; 16 மத. 99; 24 பம். 343; 34 அல 292.) தகுந்த கவனத்துடன் விசாரித்து நியாயமானதென்றுநம்பி, நல்லஎண்ணத்தோடு துகைகொடுத்து சொத்தை சுவாதீனஞ்செய்துகொண்டவன், அந்தத்துகை சரியானபடி செலவிடப்படுகிறதாவென்று பார்க்கவேண்டியதில்லை. (32 கல். 158; 40 அல. 171; 6 மு. இ. அ. 399 ; 21 ஸ. 196; 42 அல. 559; 1 பாட். 715.)

232. ருஜுப்பண்ணுவது.—பிதுரார்ஜித சொத்துக்களை வினியோகஞ்செய்த விஷயமாய் தாவா ஏற்பட்டால் சமயத்துக்குத் தக்கபடி இருகட்சிக்காரரும் வினியோகம் செய்தது நியாயம் அல்லது அநியாயமென்பதை ருசுச்செய்யவேண்டும். (10 மூ. இ. அ. 454 ; 13 மத. 51; 16 மத. 99; 24 பம். 343; 31 அல. 599; 39 இ. அ. 109; 15 இ. அ. 99; 26 பம். 433; 8 ம. 75; 1882ளூத்து 4-வது டிரான்ஸ்பர் ஆவ் பிராபர்டி ஆக்ட் 38-பிரிவு) முக்கியமாய் தகப்பனாவது மற்ற பாகஸ்தர்களாவது பிதுரார்ஜித சொத்தை அவர்கள் வாங்கின கடனுக்காகப் பராதீனம் முதலிய வினியோகஞ் செய்தால், அந்த வினியோகம் நியாயமானதென்றும் கடன் குடும்பத்தின் அவசியமான சிலவை உத்தேசித்தே வாங்கப்பட்டதென்றும் ருசுச்செய்யவேண்டிய பாரம் சொத்தை வாங்கினவனைப் பொறுத்தது. (16 ம. 76; 6 மு. இ. அ. 393; 21 ஸ. 171; 20 அல. 135; 42 அல. 559.)

233. குடும்பத்தில் எல்லாரையும் தாவாவில் சேர்ப்பது.—தகப்பன் அல்லது குடும்பத்துக்கு ஏஜண்டாயிருக்கிற மானேஜர் இவர்கள் தங்கள் பெயரால் மட்டும் குடும்பத்துக்காக செய்யும் நடவடிக்கைகளில் தாங்கள் ஒரு தாவாவில் வாதி அல்லது பிரதிவாதியாய் இருந்து முடிவாகும் தீர்மானத்திற்கு குடும்ப பாகஸ்தர்களெல்லோரும் கட்டுப்படுவார்கள். (40 பம். 329; 41 இ. அ. 216; 22 மத. 461; 29 கல். 583.) இரண்டுக்கு மேற்பட்ட மானேஜர்களிருந்தால் அவர்கள் எல்லோரும் தாவாவில் சேர்க்கப்படவேண்டும். (6 கல். 815; 14 அல 524; 38 இ. அ. 45.) தவிர மற்ற பாகஸ்தர்களில் எவராவது வாங்கின கடன் குடும்பத்துக்காக வாங்கப்பட்டதென்கிற காரணத்தைக் கொண்டு, குடும்பப் பொதுச்சொத்து முழுவதையும் பாத்தியப்படுத்த எண்ணங்கொண்டால் எல்லா பாகஸ்தர்களையும் பிராதில் பிரதிவாதியாகச் சேர்க்கவேண்டும். அப்படிக்கில்லாமல் ஒருவன்பேரில்மட்டும் தாவாசெய்தால் மற்றவர்கள் கட்டுப்படமாட்டார்கள். (3 க. 198; 5 ம. 12, 125; 7 ம. 136; 8 ம. 208; 10 ம. 316; 11 க. 293; 6 பம். 564; 7 பம். 9; 10 க. 996, 1001; 5 ம. 201, 205.)

(2) பொதுவாய் தகப்பன் அயோக்கியமான காரியங்களுக்காக வாங்கின கடன்கள் தவிற, மற்ற உதாரிச்சிலவுக்காகவும், சக்திக்கு மிஞ்சின சிலவுக்காகவும் வாங்கின கடன்களை பிள்ளைகள் பிதுரார்ஜித சொத்திலிருந்தே கொடுக்கவேண்டும். தகப்பன் தன்னிஷ்டப்படி உதாரிச்சிலவுக்காகக் கடன்வாங்கி, அதைத் தீர்ப்பதற்காக பிதுரார்ஜிதசொத்து முழுவதையும் பராதீனம்செய்யலாம். (14 பம். 329.)

234. குடும்பத்தில் மற்ற பாகஸ்தர்கள் பாத்தியம்.—தகப்பனைப்போல மற்றபாகஸ்தர்களும் பொதுச்சொத்தில் தங்களுடைய பாகங்களைமட்டும் தடையன்னியில் பிரதி பிரயோஜனத்துக்காக விற்கவும் பாத்தியப்படுத்தவும் கூடும். (8 மத. ஐ. கோ. ரி. 6; 25 மத. 690; 45 மத. 449.) ஆனால், தானமாகவாவது, உயில் மூலமாகவாவது பராதீனம் செய்யக்கூடாது. கடன்கொடுத்திருந்தால் ஜப்திசெய்து விற்றிருந்தால் செல்லும். (10 பம். ஐ. 139, 162; 7 ம. 357; 9 ம. 273; 11 ம. 246; 11 பம். ஐ. 229; 19 பம். 803; 27 மத. 162.)

235. சொத்தை வாங்கினவனுக்குள்ளபாத்தியம்.—(1) பொதுக் குடும்பத்திலுள்ள யாதொரு பாகஸ்தனுக்கு எவ்வளவு பாத்திய

முண்டோ அவ்வளவு பாத்தியமும், அவன் பாகத்தைக் கோர்ட்டு ஏலத்தில் எடுத்தவனுக்கும், அவனிடமிருந்து டிரான்ஸ்பர் அல்லது விலைக்கு வாங்கினவனுக்கும் உண்டு. கிரயதாரனாவது டிரான்சுபர்தாரனாவது எல்லாசொத்தைப் பிரிக்கும்படி கேட்கலாம். (4 இ. அ. 247; 10 க. 626; 2 பாட். 386.) ஆனால், தாவாசெய்தால் குடும்பத்தார் எல்லாரையும் சேர்த்துச்செய்யவேண்டும். (11 பம். ஐ. 72; 22 ஸ. 116; 8 ம. ஐ. 6; 29 மத. 294; 1 லாகூ. 134; 45 மத. 449.) இன்ன பாகந்தான் தனக்கு வேண்டுமென்று கிரயதாரனாவது, டிரான்ஸ்பர் தாரனாவது பொதுசொத்தில் கேட்கக்கூடாது, (22 ஸ. 249; 2 பம். 476; 14 மூ. இ. அ. 50; 5 ம. ஐ. 166; 10 பம். ஐ. 156.) சில சொத்துக்கள் மட்டும் தனியாய் ஒரு பாகஸ்தன் வசமிருந்து அது டிரான்ஸ்பர் அல்லது ஏலம் போடப்பட்டால் அந்த சொத்துக்களைமட்டும் ஏலதாரன் அல்லது டிரான்ஸ்பர்தாரன் அனுபவிக்கலாம். ஏலம் அல்லது டிரான்ஸ்பர் பெற்றவன் அப்படி அனுபவிப்பது மற்றபாகஸ்தர்களுக்கு இஷ்டமில்லாதிருந்தால் எல்லாசொத்தையும் சேர்த்து பாகஞ்செய்துகொள்ள தாவாசெய்யலாம். (23 பம். 184; 24 பம். 128; 46 பம். 925.) 1882-ம்ஷூத்து டிரான்ஸ்பர் ஆவ் பிராபர்டி ஆக்ட், 44-வது பிரிவுப்படி பொது வீட்டிலுள்ள ஒருவனுடைய பாத்தியதையை டிரான்ஸ்பர் பெற்றவன் அந்த வீட்டை மற்றபாகஸ்தர்களோடு கூட அனுபவிக்க பாத்தியமில்லை. குடும்ப பாகஸ்தனால் செய்யப்படும் விநியோகத்தை மற்ற பங்குக்காரர் சம்மதித்தால், ஒரு பாகஸ்தனுடைய சொத்தின்மேல் கடன் கொடுத்தவன் அவனுடைய பாகஸ்தனாயிருந்தால் அந்த பராதீனத்தை ஆட்சேபிக்க முடியாது. (42 அல. 50; 19 கல். 401.)

(2) ஒரு பாகஸ்தனின் பாகத்தை டிரான்ஸ்பர் பெற்றவன், டிரான்ஸ்பர் காலத்தில் குடும்பம் எந்த நிலமையிலிருந்ததோ, அந்த பாகந்தான் தாவாவில் கேட்கவேண்டும். அதாவது.—ஒரு குடும்பத்தில் தகப்பனும் இரண்டு பிள்ளைகளுமிருந்தார்கள். அவர்களில் ஒரு பிள்ளை தன் பாத்தியத்தை விற்றான்; டிரான்ஸ்பர்தாரன் பிராதுசெய்த போது இரண்டு பிள்ளைகள் அதிகமாகப்பிறந்து பிறகு தகப்பனிறந்தான். தற்கால நிலமைப்படியில்லாமல் சொத்தில் 3-ல் ஒரு பாகம் டிரான்ஸ்பர்தாரனுக்குக் கிடைக்கும்.

(3) மிதாட்சர சம்பிரதாயத்தை யநுஷ்டிக்கிறவர்களுக்கு கல்கத்தா ஹைகோர்ட்டாரும் அலகாபாத் ஹைகோர்ட்டாரும், மதருஸ் பம்பாய் தீர்ப்புகளுக்கு விரோதமாகத் தீர்மானித்திருக்கிறார்கள். அதன்படி பொதுக்குடும்பத்தில் ஒருபாகஸ்தன் தன் சுவயப் பிரயோசனத்துக்காக தன் பாகத்தை பிரதி பிரயோசனத்திற்கு சாஸனம், ஒத்தி, பந்தகம் முதலியவைகளாக பராதினஞ்செய்ய மற்ற பாகஸ்தர்களின் சம்மதியில்லாமல்விநியோகம்செய்யக்கூடாது. (31 அல. 507; 20 இ. அ. 116; 33 அல. 783; 3 க. ஐ. 31; 18 க. 157.) ஷி பாகஸ்தன் உயிரோடிருக்கும்போதே தாவாசெய்தால் இவனுக்குச்சேரவேண்டிய பாகபாத்தியதையை டிரான்ஸ்பர் பெற்றவனுக்குச்சேரும்படி கோர்ட்டார் தீர்ப்புசெய்வார்கள். (12 க. ஐ. 90; 3. க 198; 18 க. 157.)

236. வினியோகசோத்தின் பிரதி பிரயோசனத்தைக் குடும்பத்துக்கு உபயோகித்தல். — யாதொரு பாகஸ்தனால் துர்வினியோகம் செயத சொத்தின் பிரதிபலனின் சில பாகத்தைக்கொண்டு அவசியமான குடும்பச் செலவில் உபயோகப்படுத்தியிருந்தால், டிரான்ஸ்பர் ரத்தானாலும், அந்த டிரான்ஸ்பர் விஷயமாய் கிடைத்த தொகையால் குடும்பத்துக்கு உபயோகப்படுத்தின பணத்தையும், டிரான்ஸ்பர் ரத்தாவதற்கு முந்தி டிரான்ஸ்பர்தாரனால் மராமத்துச்செய்த தொகையையும் குடும்பத்தார் கொடுக்கவேண்டும். ஆனால், டிரான்ஸ்பர் அக்கிரமமென்று தெரிந்திருந்தும் மராமத்துச்செய்தால் அந்தப் பணம் கிடைக்கமாட்டாது. (க. ஐ. ஸப்ளிமெண்ட்ல் வாலியம் 1018; 8 க. ஐ. 358; 6 அ. 417; 2 பம். ஐ. 318; 4 க. ஐ. 118, 125; 15 க. ஐ. 350; 4. க. ஐ. 15; 11 க. ஐ. அபெண்டிக்ஸ் 29; 5 பம். 450.)

237. பிரிக்கக்கூடாத ஜமீன் அதிகாரம் —சாதாரணமாய் ஜமீன்களில் அங்கங்கே எந்த ஆசாரத்தை அனுஷ்டிக்கிறார்களோ அதன்படியே பாத்தியங்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஜமீன் சொத்து பிள்ளைகளுக்கெல்லாம் பாத்தியமில்லாமல் ஜேஷ்டபுத்திரனுக்குமட்டும் சேரும்பட்சத்தில், மற்றப்பிள்ளைகள் பாகங்கேட்க அதிகாரம் எப்போது ஏற்படவில்லையோ அப்போதே அவர்கள் தகப்பன் சொத்தை வினியோகம் செய்தால் அதைக்கேட்க பிள்ளைகளுக்கு அதிகாரமில்லை. ஆகையால் பிரிக்கக்கூடாத ஜமீனில் தகப்பன் உயில் அல்லது தானமாக சொத்தை வினியோகம்செய்யலாம். பிரிக்கக்

கூடிய ஜமீனாயிருந்தால் மிதாட்சர நியாயத்தை அனுசரித்து நடக்க வேண்டியது. ஆனால், இவைகளெல்லாம் ஆங்காங்குள்ள வழக்கத்தை அனுசரித்ததாகவே இருக்கவேண்டும். (45 இ. அ. 148; 15 இ. அ. 51; 26. இ. அ. 83.)

238. அநந்தரவார்சால் கிடைத்த சொத்து.—(1) சந்ததியில்லாமல் இறந்துபோன ஒரு தாயாதியினுடைய சொத்து ஒருவனுக்கு அநந்தரவார்சு பாத்தியமாய்கிடைத்தால் அதை சுவயார்ஜித சொத்துப்போல் தன்னிஷ்டப்படி விநியோகஞ்செய்யலாமென்றும், அதில் பிள்ளைகள் பாகங்கேட்கக்கூடாதென்றும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், மாதாமகர் (தாயின் தகப்பனின்) ஆஸ்திகிடைக்கும்போது அது ஸ்வயார்ஜிதமாகாதென்றும், அந்த சொத்தில் பிள்ளைகளுக்கும் பாத்தியமுண்டென்றும் மதராஸ் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (9. இ. அ. 128; 27 மத. 382.)

(2) தாய்வழியைச் சேர்ந்த முன்னோரிடமிருந்து அடைந்த சொத்து பிதுரார்ஜிதம்போல பாவிக்கவேண்டுமென்றும், தௌகித்திர பாத்தியத்தால் சொத்தையடைந்தவனுக்கு பிள்ளையாய் பிறந்த தினலேயே அவர்களுக்கும் அந்தசொத்து பிதுரார்ஜிதமென்றும், ஆகையால் பிள்ளைகள்பாகங்கேட்க பாத்தியமுண்டென்றும், தகப்பன், பாட்டன் சொத்துவிஷயத்தில் ஒருவனுக்கு எவ்வளவு சுதந்திரமுண்டோ அவ்வளவு சுதந்தரந்தான் தௌகித்திர பாத்தியமாய் அடைந்த சொத்து விஷயத்திலு முண்டென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (25 ம. 687; 27 ம. 300-382.)

239. ஸ்திரீகளின் அல்லது வேறொருவன் சொத்தையடைவது.—ஸ்திரீகளிடமிருந்தும் முன்னோன் முறையில் இல்லாதவர்களிடமிருந்தும் அநந்தரவார்சுபாத்தியத்தால் அடையும் சொத்துக்கள் யாவும் சுயார்ஜித சொத்துக்களாகவே பாவிக்கப்படும். ஆகையால் அவற்றை யடைந்திருப்பவனுக்கு அவைகளில் பூர்ண சுதந்திரமுண்டு. அவைகளை அவன் தன்னிஷ்டப்படி விநியோகம்செய்து கொள்ளலாம். (27 மது. 300.)

240. சுவயார்ஜித சொத்துக்களைப்பற்றி.—(1) பிள்ளை முதலிய சந்ததியாரையுடைய ஒருவன் தன்னுடைய சுவயார்ஜிதமான சொத்துக்களில் ஜங்கமங்களை மட்டும் பூர்வாக தன்னிஷ்டப்படி விநியோ

கம் செய்தாலெல்லாமேயன்றி ஸ்தாவரசொத்து விஷயத்தில் அவனுக்குப்பூர்ண அதிகாரமில்லையென்றும், பிள்ளைகளுக்கு ஒன்றும் வைக்காமல் எல்லா ஸ்தாவரசொத்தையும் அவன் தன்னிஷ்டப்படி விநியோகம் செய்து விடக்கூடாதென்றும் மதுராஸ் ஹைகோர்ட்டாரால் முன் தீர்மானிக்கப்பட்டிருந்தது. (3 மது. ஹை. கோ. ரி. 50.) ஆனால் அத்தீர்ப்பு இப்போது மாறிப்போய்விட்டது. மற்ற ஹைகோர்ட்டுகளால் தீர்மானிக்கப்பட்டிருப்பது போலவே நமது மதுராஸ் ஹைகோர்ட்டாரும் அடியிற்கண்டபடி இப்பால் தீர்மானித்திருக்கிறார்கள். அதாவது ஒருசொத்தானது ஒருவனுடைய சுயார்ஜிதமானதாக இருந்தால் அது ஜங்கமமாயிருந்தாலும் அல்லது ஸ்தாவரமாகவே இருந்தாலும் அதில் அவனுக்கு பூர்ண சுதந்திரமிருக்கிறது. அதை அவன் தன்பிள்ளைகளுக்கு விரோதமாயும் தன்னிஷ்டம்போலும் பந்தகபஹுதீனம் செய்யவும் தானம் அல்லது உயில்மூலமாய் அன்னியருக்குக் கொடுத்துவிடவும் முழு சுதந்திரமுடையவனாக இருக்கிறான். (10 மது. 251; 20 அல. 267; 24 மது. 429.)

(2) ஆகையால் ஒருவன் விபக்த நிலைமையிலிருந்தாலும் அல்லது அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவனாகவேயிருந்தாலும் அவன் தன்னுடைய சுயார்ஜிதமாயிருக்கிற ஸ்தாவர ஜங்கம சொத்துக்களெல்லாவற்றையும் தன்னிஷ்டம்போல் வினியோகம்செய்ய பூர்ண அதிகாரமுடையவனாக இருக்கிறான்.

241. ஜீவனாம்சத்துக்கு கட்டுப்பட்டே வினியோகிக்க வேண்டும் —பிதுரார்ஜித வகையிலாவது. சுயார்ஜித வகையிலாது பாத்தியப்பட்டிருக்கிற சொத்தில் பூர்ணசுதந்தரவாளியாக இருப்பவன் அச்சொத்து முழுவதையும் தன்னிஷ்டப்போல் விநியோகம் செய்துவிடலாமென்று மேலே சொல்லப்பட்டபோதிலும், அவனால் எவர்கள் சட்டாயமாய் சம்ரக்ஷிக்கப்படவேண்டுமோ அவர்களுடைய ஜீவனாம்சத்துக்காக யாதொன்றும் வைக்காமல் சொத்துமுழுவதையும் அவன் தன்னிஷ்டம்போல் விநியோகம் செய்துவிடக்கூடாது. ஒருசமயம் எல்லாவற்றையும் தன்னிஷ்டப்படி கிரயம், தானம், உயில் முதலியனவற்றால் அன்னியர்களுக்கு வினியோகப்படுத்திவிட்டாலும் ஜீவனாம்சக்காரர்களுடைய பாத்தியம் சம்பந்தப்பட்டமட்டில் அவ்வினியோகங்கள் செல்லுபடியுள்ளதாக மாட்டாது. (12 மது. 267; 2 அல.

315; 23 அல. 86; 10 கல். 633; 5 பம். 99; 18 பம். 452; 22 கல் 410; 23 பம். 342.)

242. சொத்துக்களை ஒருவர்பேரில் நம்பிக்கையாக எழுதிவைப்பது.—(1) சொத்துக்களை உடையவர்களும் புதிதாய்க் கிரயம் பெறுகிறவர்களும் அச்சொத்துக்களுக்கு தாங்கள் உடையாளிகளென்பதை உலகத்துக்குக் காட்டிக்கொள்ள சில சமயங்களில் பிரியப்படாமல், நம்பிக்கையும் விசுவாசமுமுள்ள தங்கள் உறவினர் சிநேகிதர் முதலியோர் பேரில் அவற்றை நிபத்துக்கு எழுதிவைக்கிறார்கள். இவ்வழக்கம் நம் நாட்டில் வெகுகாலமாக நடந்துவருகிறது. யாதொரு பிரதிப் பிரயோஜனமுமில்லாமல் இவ்வாறு நம்பிக்கையின்பேரில் சொத்தைப் பிறர்பேருக்கு நிபமாக எழுதிவைப்பதற்கு பினாமி பேர்இரவல்என்றும் யார்பேருக்கு அவ்வாறு சாசனம் எழுதிவைக்கப்படுகிறதோ அவன் பினாமிதார் என்றும் இங்கிலீஷில் சொல்லப்படும்.

(2) இஷ்டப்பட்ட நடவடிக்கை கூடாதென்று ஒரு குறிப்பிட்ட சட்ட விதியால் தடுக்கப்பட்டிருக்கிற சந்தர்ப்பமும் கடன்காரர் முதலிய பிறரை மோசம்பண்ண வேணுமென்றகெட்ட எண்ணங்கொண்டு செய்யப்படுகிற சந்தர்ப்பமும் நீங்கலாக மற்ற சமயங்களில் இவ்விதமான பினாமி நடவடிக்கை சரியென்றும் அது சட்டப்படி செல்லத்தக்கது தான் என்றும் மேலான நியாயஸ்தலத்தாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (11 மு. இ. அ. 551; 13 இ. அ. 70.)

243. பணங்கொடுத்தவனுக்கே சொத்து சித்திக்கும்.—(1) ஒரு சொத்தின் நிஜமான சொந்தக்காரனுக்கும் போலிச் சொந்தக்காரனாகிய பினாமிதாரனுக்கும் அச்சொத்தைக்குறித்து வழக்கு உண்டானால், தஸ்தாவேஜு எவன்பேருக்கு ஏற்பட்டிருக்கிறதென்பதே முடிவாக எண்ணப்படமாட்டாது. ஷை சொத்துயாரால் அதாவது யாருடைய பணத்தைக்கொண்டு வாங்கப்பட்டதோ அவனே அச்சொத்தின் சொந்தக்காரனென்று தீர்மானிக்கப்படுவான். (6 மு. இ. அ. 53; 6 இ. அ. 233; 9 பம். 115; 10 கல். 686.)

(2) ஆனால் தஸ்தாவேஜில் கண்டிருப்பதற்கு மாறாக எவன் தன்னை நிஜமான சொந்தக்காரனென்று சொல்லிக்கொள்ளுகிறானோ அதாவது எவனொருவன் யாதொரு நடவடிக்கையை பினாமி யென்றும் தானே நிஜமான சொந்தக்காரனென்றும் சொல்லுகிறானோ, அவ

னே அச்சங்கதியை திருப்தியான சாக்ஷியத்தால் முதலில் ருஜுப்படுத்த வேண்டியவனாக இருக்கிறான். (11 மு. இ. அ. 28; 14 மு. இ. அ. 234; 14 இ. அ. 127; 25 இ. அ. 225.)

(3) யாதொரு கோர்ட்டு ஏல விற்பனையில் பினாமிதாரனால் வாங்கப்பட்ட சொத்தின் ஏல ஸர்ட்டிபிகேட் பினாமிதாரர் பெயரால் இருந்தால் பணம் செலுத்தின கிரயதாரருக்கு சொத்தில் சுதந்திரம் ஏற்படாது. ஆனால், கிரயதாரருடைய கடன்காரர்கள் பினாமிதாரரையும் பிரதிவாதியாய் தாவாவில் சேர்த்து, சொத்து பினாமி என்பதை ருஜுப்படுத்தி அதை கடனுக்கு உட்படுத்தலாம். (12 கல். 204; 21 கல். 511.) பினாமிதாரன் (பேரிரவல் தாரன்) சொத்தை கிரயம் முதலிய விநியோகம்செய்யக்கூடாது. கிரயதாரர் அச்சொத்து பினாமி என்று தெரிந்து வாங்கினால் விநியோகம் ரத்தாகும். பினாமிதாரன் பேரில் ஏற்பட்ட டிக்ரிக்கும், அவனால் செய்யப்பட்ட உடன்படிக்கைக்கும், சொத்தின் சொந்தக்காரன் கட்டுப்படுவான். (42 மத. 348; 15 மத. 267.)

(2) தாயபாகப்படி சொத்து விநியோகம்.

244. தாயபாக சம்பிரதாயம்.—தாயபாகப்படி, பங்காள தேசங்களில் பொதுக்குடும்பத்தில் தகப்பன் தன்னுடைய ஸ்தாவர ஜங்கம, சுவயார்ஜித, பிதுரார்ஜித சொத்துக்களை யெல்லாம் தன்னிஷ்டப்படி விற்கவாவது, ஒத்திபந்தகமாவது, தானமாயாவது உயில் மூலமாயாவது விநியோகஞ்செய்ய அதிகாரமுண்டென்றும், தன்னுடைய சொத்துக்களையெல்லாம், ஒரு பிள்ளைக்காவது மற்ற வேறொரு அன்னியனுக்காவது கொடுக்கலாமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. (6 பம். ஸ. தீ. 73; 5 க. 113; 7 க. 461; 17 க. 886; 3 பம். ஸ. தீ. 234, 397.) ஆனால் எல்லாப் பிள்ளைகளுக்கும் பாகஞ்செய்து கொடுத்தால் அதில் மட்டும் ஏற்றத்தாழ்ச்சியின்றி சமமாக பாகஞ்செய்து கொடுக்கவேண்டும். (2 பங். ஸ. தீ. 202; எப் மெக்னாடன் 283, 284.)

245. பிள்ளைகளால் விநியோகம்.—பங்காளதேசத்தில் தகப்பன்ஜீவித்திருக்கையில் பிள்ளைகளுக்கு யாதொரு பாத்தியமுமில்லை. அதாவது தகப்பனும் பிள்ளையும் மிதாட்சரப்படி பொதுக்குடும்ப பாகஸ்தர்களல்ல. (68-வது பக்கம் 174-வது பிரிவைபார்க்க) ஆகையால் பிள்ளைகள் செய்யும் விநியோகங்கள் செல்லமாட்டாது. தகப்ப

னுக்குப் பிற்காலத்தில் பிள்ளைகளுக்குச் சொத்துபாத்தியம் உண்டான பிறகு பிள்ளைகள் முந்திச்செய்த வினியோகங்களை ரத்து செய்து சொத்தை மறுபடி யடையலாம். ஆனால், சொத்தை வினியோகம் செய்தபோது பணம்பெற்றிருந்தால் அதைமட்டும் திருப்பிக்கொடுக்க வேண்டும். (2 மூர். வீ. டைஜஸ்ட் 152.)

246. சேர்ந்திருக்கிற சகோதரர்களின் அதிகாரம்.—தகப்பனிறந்த பிறகு பிள்ளைகள் ஒரேகுடும்பமாயிருந்தாலும் அவர்கள் ஒவ்வொருவரும் சொத்துக்கு தனிபாத்தியமுள்ளவர்களாகி தங்கள் தங்கள் பாகங்களைமட்டும் வினியோகஞ்செய்ய பாத்தியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். (1 பம். ஸ. தீ 44, 45, 115, 3 பம். ஸ. தீ 196; 5 பம். ஸ. தீ. 388; 2 டப்ளியூமெக்னுடன் 291, 294, 293, 306, 313; 17 ஸ. 420; 21 ஸ. 17.)

247 வினியோகவிஷயமாய் பாகஸ்தர்களுடைய உடன்படிக்கை.—சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தர்களில் ஒருவன் தன் பாகத்தை வேறு பாகஸ்தனைத் தவிற மற்றவர்களுக்கு வினியோகம் செய்வதில்லையென்று உடன்படிக்கை செய்திருந்தால், அந்த உடன்படிக்கையின்படியே வேறெவனுக்காவது சொத்தை வினியோகஞ் செய்தால் செல்லாது. (1 அ. 618; 2 அ. 826.) ஆனால் மேற்படி உடன்படிக்கையின் சங்கதி தெரியாமல் பணங்கொடுத்து சொத்தை வாங்கியிருந்தால் அந்த வினியோகம் செல்லும் (8 ம. 381; 4 அ. 518.)

(3) தானம் முதலியவைகளால் சோத்துவினியோகம்.

248. தானங்கள்.—ஒருவன் தன் சொத்தைத் தானஞ்செய்யும்போது தானம் வாங்கினவன் தன்னை சம்ரட்சிக்கவேண்டுமென்றாவது, தனக்குப்பிறகு தன்னுடைய உத்தரகிரியைகளைச் செய்யவேண்டுமென்றாவது, தான் ஒருவேளை வியாதியிலிருந்து பிழைத்துக்கொண்டால் அந்தச்சொத்து மறுபடி தன்னைச் சேரவேண்டுமென்றாவது தான் கொடுக்கவேண்டிய பாக்கியைத் தள்ளவேண்டுமென்றாவது, இன்னும் தனக்கு இஷ்டமான ஷரத்துகளையாவது ஏற்படுத்தி தானஞ்செய்யலாம். (6 ம. ஐ. 270; 3 பம். தீ 377; 1853ஆ பம். ஸ. தீ. 103; 14 க. 292; 9 மூ. இ. அ. 123, 135; 4 க. ஐ. 192.) அந்த ஷரத்துகளின்படி நடத்தத் தவறினால் தானஞ்செல்லாது. தானத்திற்கு முந்தியே ஷரத்துகள் ஏற்படவேண்டுமேயொழிய அதற்குப்பிறகு ஏற்படு

த்தக்கூடாது. தானம் வாங்கினவனுக்கு சொத்து விஷயமாய் சகல பாத்தியமும் (தான விக்கிரயம் முதலானபாத்தியம்) கொடாமல் தானஞ்செய்தால் தானம் ரத்தாய் விடும். (6 அ. 313; டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட் 18. 25 பிரிவுகள்.)

249. சுவயார்ஜித சோத்தை எவரும் தானஞ்செய்யலாம்.—(1) ஒருவன் அவிபக்த நிலைமையிலிருந்தாலும் விபக்தநிலைமையிலிருந்தாலும் தன்னுடைய சுயார்ஜிதமானசொத்துக்களில் அவன்பூர்ண சுதந்திரமுடையவனாக இருக்கிறபடியால், அவற்றை அவன் தன்னிஷ்டமானவர்களுக்கு தானமாகக் கொடுத்துவிட அதிகாரமுடையவனா யிருக்கிறான்.

(2) அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருபாகஸ்தன்குடும்பப் பொதுசொத்தில் தனக்குள்ள பங்கைதானமாகக் கொடுக்கக்கூடாது. கொடுத்தாலும் அது செல்லாகமாட்டாது. (7 மது. 357; 9 மது 273; 11 மது. 246 ; 16 மது. 84; 27 மது. 162 ; 19 பம். 803.)

250. தானம் எழுத்துமூலமாய் ஏற்படவேது.—ஸ்தாவரசொத்தானது தானம் செய்யப்படவேண்டுமானால் அதற்கு எழுத்துமூலமான தஸ்தாவேசு ஏற்படவேண்டும். மேலும் அத்தஸ்தாவேசுநிறைந்தது இரண்டுசாக்ஷிகளால் கையெழுத்து செய்யப்பட்டு ரிஜிஸ்தர் செய்யப்படவும்வேண்டும். ஜங்கமசொத்தானது மேற் சொன்னபடியான ரிஜிஸ்டர் தஸ்தாவேஜு மூலமாயாவது தானம் வாங்குகிறவனிடம் ஒப்புவிக்கப்படுவதினாலாவது தானம்செய்யப்படலாம். (1882-ம் வருஷத்திய 4-வது ஆக்ட்டு 123-வது பிரிவைப்பார்க்க.)

தானம் பூர்த்தியாவதற்கு சொத்தானது தானம்வாங்குகிறவனிடம் சுவாதீனப்படுத்தப்பட வேண்டுமென்று ஹிந்துதர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் அவ்வாறு சுவாதீனம் செய்யப்படவேண்டுமென்பதுஇப்போது அவசியமில்லை என்றும் 1882-ம் வருஷத்திய 4-வது ஆக்ட்டின்படி தானபத்திரம் எழுதிரெஜிஸ்டர் செய்தால் போதுமென்றும் ஏற்பட்டிருக்கிறது. (14 கல். 446; 23 பம். 234 ; 16 அல. 185 ; 11 இ. அ. 218; 24 கல் 446; 27 கல். 243.)

251. செல்லுகிற தானம்.—தானம் செல்லுபடியுள்ளதாவதற்கு அடியிற்கண்டவிதிகள் அவசியமாய் அனுசரிக்கப்பட்டிருக்கவேண்டும்.

(1) தானம்செய்யப்படும் சொத்தானது இன்னதென்று குறிப்பானதாக இருக்கவேண்டும். அதாவது தானகாலத்தில் இல்லாமல் பிற்பாடு உண்டாகக்கூடும் சொந்துகள் தானத்துக்குத் தகுதியுள்ளதாகமாட்டாது. (டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட் 124 பிரிவு.)

(2) தானம்செய்கிறவனுக்கு தானசொத்தானது முழுசுதந்திரத்தோடு பாத்தியப்பட்ட தனியான சொத்தாக இருக்கவேண்டும். ஆகையால் அவிபக்தகுடும்ப பாகஸ்தனொருவன் தன் பங்குக்குள்ள சொத்தை தானமூலமாய் விநியோகம் செய்யக்கூடாது. (16 மது. 84; 3 மது. 357.)

(3) தானம்செய்கிறவன் யுக்தாயுக்தமறிந்த பகுத்தறிவுடையவனாகவும் மனப்பூர்த்தியான சம்மதமுள்ளவனாகவும் இருக்கவேண்டும். அதாவது யுக்தவயதையடையாத மைனர்களும் சித்தசுவாதீனமில்லாத பைத்தியக்காரர் முதலியோரும் தானம்கொடுக்கக்கூடாது. ஆனால் இவர்களுக்கு தானம் கொடுக்கப்படலாம்.

(4) தானம் யாருக்குக் கொடுக்கப்படுகிறதோ அவன் தானகாலத்தில் ஜீவித்திருப்பவனாக இருக்கவேண்டும். (2 கல். 265; 4 கல். 455; 15 பம். 443; 30 கல். 521.) ஆனால், இப்பொழுதுதான காலத்திற்குப் பிறகு பிறக்கப்போகிறவர்களுக்குங்கூட செய்யும் தானம்செல்லும் என்று 1914-ம்வருஷத்து 1-வது ஆக்டால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

252. தானம் ரத்தாவது.—(1) தான சொத்தானது தானம் வாங்குகிறவனுக்கு உடையாளினால் வாய்மொழியாயாவது எழுத்துமூலமான தஸ்தாவேஜினாலாவது கொடுக்கப்படுவதோடு உடையாளியானவன் அச்சொத்தில் தனக்குள்ள சுதந்திரங்கள் எல்லாவற்றையும் கைவிட்டுவிடவும் வேண்டும். சுதந்திரங்கள் அவ்வாறு கைவிடப்படாமல் தஸ்தாவேஜுமட்டும் எழுதி ரிஜிஸ்டர் செய்து கொடுக்கப்படுவதினாலேயே தானம் பூர்த்தியானதாக மாட்டாது. (24 இ அ 1; 19 அல. 267; 20 கல். 464.) தானம் பூர்த்தியாய்செய்து முடிந்தால், பிறகு தானம் கொடுத்தவனாலும், அதை ரத்துசெய்ய முடியாது. (22 இ. அ. 153; 23 பம். 131.)

(2) ஒரு குறிப்பிட்ட சம்பவம் நேரிட்டால் தானம் ஸ்திரமாகுமென்றும் இல்லாவிடில் தானம் ஊர்ஜிதத்தை யடையாதென்றும் உள்ள ஒரு நிபந்தனையை ஏற்படுத்திவைத்தும் ஒருவன் தானத்தைச் செய்யலாம். ஆனால், நிபந்தனையாக ஏற்படுத்தப்படுகிற அச்சம்பவம் அக்கிரமமானதாகவும் சட்டவிரோதமானதாகவும் இருக்கக்கூடாது. (6 மது. ஹை. கோ. ரி. 270; 9 மூ. இ. அ. 123.)

உதாரணம்.—வியாதியா யிருக்கும்போது தானம் செய்கிறவன் தான் இறந்துபோய் விட்டால் தானம் ஸ்திரப்படாமல் சொத்தானது தன்னையே சேரத்தக்கதென்பதும் உள்ள நிபந்தனையை ஏற்படுத்தி தானத்தைச்செய்கிறான். இது சரியான நிபந்தனையாகும்.

253. தானம்செய்கிறவன் ஏற்படுத்தும் ஷராக்கள்.—(1) ஒரு சொத்தைப் பிறனுக்கு தானம்செய்கிறவன் தன்னுடைய கடன்களையும் அச்சொத்தின்பேரிலுள்ள பொருப்புகளையும் தானம்பெற்றவனே தீர்த்துக்கொள்ள தக்கதென்றும் ஏற்படுத்தலாம். அப்படிப்பட்ட தானத்தை ஒப்புக்கொண்டு அதன்படி சொத்தை யடைகிறவன் அக்கடன்களையும் பொறுப்புகளையும் தீர்க்கக் கடமைப்பட்டவனாகிறான். (1882-ம் வருஷம் 4-வதுசட்டமாகிய டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட்டின் 127, 128-வது பிரிவுகளைப்பார்க்க.)

(2) முன் இரண்டு பிரிவுகளில் சொல்லப்பட்டிருப்பதைத்தவிர வேறு எவ்விதமான நிபந்தனைகளையும் நிர்ப்பந்தங்களையும் தானம் கொடுக்கிறவன் தானம் பெற்றவன்பேரில் சுமத்தக்கூடாது. உதாரணம்—தானம்பெற்றவன் தானசொத்தை பந்தகபறுதீனங்களுக்குட்படுத்தாமல் அனுபவித்து வரவேணுமென்றும், தானம்பெற்றவன் இறந்தபிறகு தானசொத்தானது சட்டப்படியுள்ள அவனுடைய கிரமமான வார்சுகளுக்குப் போகாமல் வேறு நபர்களைச் சேரவேண்டுமென்றும் உள்ள இவ்வாறு நிபந்தனைகள் செல்லமாட்டாது. (4 மது. ஹை. கோ. ரி. 345; 4 மது. 200; 6 மது. ஹை. கோ. ரி. 356; 7 மது. 315; 4 அல. 518; 14 கல் 222; 1882-ம் வருஷத்திய 4-வது ஆக்ட்டு 10, 11, 12-வது பிரிவுகளையும் பார்க்க.)

(3) சட்ட விரோதமாகவும் துன்மார்க்கமாகவுமுள்ள காரியங்களை உத்தேசித்து செய்யப்படுகிற தானமும், கடன்காரர்களை மோச

ஞ்செய்யவேணுமென்ற கெட்ட எண்ணத்தின்பேரில் செய்யப்படுகிற தானமும் செல்லமாட்டாது. (4 மது. ஹை. கோ. ரி. 84.)

(4) ஜீவனாம்சக்காரர்களுடைய பாத்தியத்துக்கு விரோதமாக ஒருசொத்தானது தானம்கொடுக்கப்பட்டாலும் ஜீவனாம்சபாத்தியத்தி னளவுக்கு அத்தானம் செல்லமாட்டாது. அதாவது தானம்பெற வன் அச்சொத்திலிருந்து ஜீவனாம்சம்பெறவேண்டிய நபருடையஜீவனா ம்சத்தைக்கொடுத்துவரக் கடமைப்பட்டவனாகிறான். (12 மது. 257; 23 அல. 86; 23 பம். 342.)

(5) சொத்துக்களில் ஸ்திரீகளுக்கு சாதாரணமாய் முழுசுதந் திரம் கிடையாதென்றிருந்தாலும், தானமாகப்பெறும் சொத்துக்களி லும் அவர்களுக்கு முழுசுதந்திரம் இல்லையென்று சொல்ல சாஸ்திரங் களில் ஆதாரமில்லை. ஆதலால் ஒருசொத்தானது ஒருஸ்திரீக்கு முழு சுதந்திரத்தோடும் தானமாகக் கொடுக்கப்படலாம். (23 இ. அ. 37; 23 கல். 670.)

(6) முழு சுதந்திரத்தோடல்லாமல் ஸ்திரீயானவள் தன் ஆயி சுகாலம் வரையில் மட்டுமே தானசொத்தை அனுபவித்துக்கொள்ளத் தக்கதென்றும் பிறகு அச்சொத்து வேறொருவனைச் சேரத்தக்க தென் றும் கண்டு ஸ்திரீக்கு ஒரு சொத்துதானம் செய்யப்படலாம். அப் போது அதில் அவளுக்கு பூர்ண சுதந்திரம் ஏற்படமாட்டாது. ஆயிசு காலம் வரையில் அதை அனுபவிக்கமட்டுமே அவளுக்கு சுதந்திர முண்டு.

(7) மேலும் ஒரு சொத்தானது சர்வ சுதந்திரத்தோடு ஸ்திரீ க்கு தானம் செய்யப்பட்டதென்று வியக்தமாய்க்காணப்படாமலிருந் தால், அதில் அவளுக்கு ஆயிசுகாலம் உள்ள வரையில் அனுபவிக் கும் பாத்தியம் மட்டுமே இருக்கிறதாக எண்ணப்படும். (2 இ. அ. 7; 17 பம். 503; 21 பம். 376; 22 மது. 357.)

(8) புருஷனால் பெண்சாதிக்குக் கொடுக்கப்பட்ட தானமா னது சர்வ சுதந்திரத்தோடு கொடுக்கப்பட்டதாக விருந்தாலொழிய அத்தான சொத்தைத் தன்னிஷ்டப்படி விநியோகம் செய்ய அவளு க்கு அதிகாரம் இல்லை. (5 கல். 684; 7 மது. 387; 17 பம். 503.)

254. தானமடைந்தவன் பிறந்தாவது கர்ப்பத்திலாவது இருக்கவேண்டுமென்பது.—ஒருவன் தன்சொத்தை உயில்மூலமாகவாவது வேறு எவ்விதமாகவாவது தானஞ்செய்தால் அந்தக்காலத்தில் அந்த தானத்தைப்பெறக்கூடியவன் பிறந்தாவது கர்ப்பத்திலாவதிருக்கவேண்டுவது தர்மசாஸ்திரம். தானத்திற்குப்பிறகு கர்ப்பமுண்டாகி அதில்பிறந்தவனுக்குச்செய்ததானஞ்செல்லாது. (9 க. ஐ. 399; 15 பம். 443.) ஆனால், ஸ்வீகாரப்பிள்ளை தானத்திற்குப் பிறகு கர்ப்பத்திலுண்டாகிப் பிறந்திருந்தாலும் அவன்விஷயமாய்செய்த தானஞ்செல்லும். அதாவது ஒருவன் தன் ஆஸ்தியெல்லாம் சுவீகாரப்பிள்ளையைச் சேரவேண்டியதென்றும் தன் பெண்சாதி தக்கபிள்ளையை சுவீகாரஞ்செய்துகொள்ளவேண்டியதென்றும் உயில் எழுதிவைத்து இறந்துபோனான். பிறகு வெகுகாலங்கழித்துப்பிறந்த பிள்ளையை சுவீகாரமெடுத்தாலும் அந்தப்பிள்ளைக்குச்செய்த தானஞ்செல்லும். (4 க. ஐ. 103 ; 9 க. ஐ. 377, 397, 400, 404.) ஆனால், 1914-ம்வருஷத்து 1-வது ஆக்டால் பிறக்காதவருக்குக்கூட தானஞ்செய்தால் செல்லுமென்றுபின்னால் ஏற்பட்டிருக்கிறது.

255. பொதுவில் தானம்.—ஒருசொத்தைப் பொதுவாகப்பலருக்கு தானஞ்செய்தால், அவர்களில்சிலர்மட்டும் தானகாலத்திலிருந்து மற்றவர் தானஞ்செய்தவனிறப்பதற்குள் பிறக்காமலிருந்தால் அவர்கள் விஷயத்திற் தானஞ்செல்லாமற்போனபோதிலும், தான காலத்திலிருந்தவர்களுக்குச் சொத்துமுழுவதுஞ் சேர்ந்துவிடுமென்று முன் ஏற்பட்டிருந்தது. இப்போது தானம்பெறக்கூடியவர் எல்லோருக்குமே சொத்துசித்திக்குமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (6 அ. 573, 560; 12 க. 663; 12 ம. 393; 15 பம். 562; 11 இ. அ. 164 ; 13 ம. 393; 14 க. 685; 24 க. 646; 21 பம். 71; 22 பம். 533; 26 பம். 449.)

தானம்வாங்குகிறவன் நேரில் இருக்கவேண்டிய அவசியமில்லை. அவன் எங்கேயிருந்தாலும அவனுக்குக் கொடுத்ததானஞ் செல்லும்) (4 க ஐ. 291.)

256 தானசொத்தை வசப்படுத்துவது.—தானசொத்து அசையும்பொருளாயிருந்தால் தானம்வாங்கினவுடன் அதைத்தன் வசப்படுத்திக்கொள்ளவேண்டும். அசையாப்பொருளாயிருந்தால் அதையும் உடனேதன் சுவாதீனப்படுத்தி தன் அனுபோகத்தில் வைத்துக்கொ

ள்ளவேண்டும். மற்றவர்களால் குத்தகை வாடகைமுதலான விஷயத்துக்குவாங்கப்பட்டிருந்தால் அந்தக்குத்தகை அல்லது வாடகைப்பத்திரத்தை தன்பேரிலெழுதிக்கொண்டால் சொத்தை சுவாதீனப்படுத்திக் கொண்டதாகவே எண்ணப்படும் (5 பம். ஐ. 83; 6 ம. ஐ. 194; 4 பம். ஐ. 31; 12 அ. 40; 9 ம. 267; 7 ம. 23; 12 பம். 513; 7 பம். 452; 4 ம. ஐ. 460.) மைனர்களுக்காவது, பித்தர்களுக்காவதுகொடுத்த தானத்தை தானங்கொடுத்தவன் தன் வசத்திலேயே வைத்துக்கொள்ளலாம் தானஞ்செய்த அசையாப்பொருளை தானங்கொடுத்தவன் தனசுவாதீனத்தில் வைத்துக்கொண்டு தானம்வாங்கினவனுக்கு அதற்காக குத்தகை அல்லது வாடகைச்சீட்டெழுதிக்கொடுத்தால் அது சுவாதீனஞ் செய்யப்பட்டதாக பாவிக்கப்படும். (3 பம். ஸ. தீ. 234) தானம்வாங்கினவனுக்கு தானசொத்தைச்சேரவிடாமல் அயலார் யாராவது அதை சுவாதீனப்படுத்திக்கொண்டால், அவர்கள்பேரில் தானம்பெற்றவன் தாவாசெய்து தன்வசப்படுத்த பாத்தியமுண்டு. (11 ச. 721.)

தனக்கு இனிகிடைக்கக்கூடிய சொத்தை தானஞ்செய்தால் அந்த தானஞ் செல்லமாட்டாது. (டிரான்ஸ்பர் ஆவ் பிராபர்டி ஆக்ட் 124 பிரிவு.)

257. மோசமான தானங்கள்.—ஒருவன் கடன்காரர்களையாவது, வார்சுகளையாவது மோசஞ்செய்யவேணுமென்கிற எண்ணங்கொண்டு தானஞ்செய்தால் அந்த தானஞ்செல்லாமல் சொத்தைகடன்காரர் ஜப்திசெய்து ஏலம்போட்டுவிடுவார்கள். (1858-ம்௵ ம. தீ. 61; 1 ம. ஐ. 393; 4 ம. ஐ. 84; 2 அ. 891; 6 அ. 560; 11 இ. அ. 164, 22 இ. அ. 153; 23 பம். 131.) தானம்கொடுப்பவனை மோசஞ்செய்து தானம் வாங்கினாலும் செல்லமாட்டாது. (15 பம். 549). பிரதிப் பிரயோஜனத்துக்காக சொத்தை டிரான்ஸ்பர்செய்கிற விஷயத்தில் அதை ஸ்வாதீனஞ்செய்வது அவசியமென்றும், ஸ்வாதீனப்படுத்தாத டிரான்ஸ்பரை பிந்தி வேறொருவனுக்கு ஸ்வாதீனத்துடன் சொத்தை டிரான்ஸ்பர்செய்தால் முதல் டிரான்ஸ்பருக்குக் கெடுதியில்லையென்றும் அவன் இரண்டாவது டிரான்ஸ்பர்தாரனை நீக்க தாவாசெய்யலாமென்றும், சொத்தின் சொந்தக்காரன் அதைத் தன் வசத்தில் வைத்

துக் கொள்ளாமலிருந்தாலும் அதை டிரான்ஸ்பர் செய்யலாமென்றும், கல்கத்தா மதராஸ்ஹைகோர்ட்டுகளிலும், பிரிவிகவுன்சிலார்களாலும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. (13 க. 297; 14 க. ஐ. 307; 5 ம. 6; 6 ம. 404; 9 மூ. இ. அ. 303.) பம்பாய் ஹைகோர்ட்டார் எந்த டிரான்ஸ்பரிலும் சொத்து ஸ்வாதீனஞ் செய்யப்படாவிட்டால் அது தெரியாமல் அதை பிந்தி கிரயம், ஒத்தி, பந்தகம் முதலியவைகளுக்கு வாங்கினவனை முதல் டிரான்ஸ்பர் பாதிக்காதென்று தீர்மானஞ் செய்திருக்கிறார்கள். (7 பம். ஐ. 4; 10 பம். ஐ. 491; 2 பம். 299; 6 பம். 490.) ஆனால், சொத்து ஸ்வாதீனமில்லாத முதல் டிரான்ஸ்பர் சங்கதிதெரிந்திருந்தும் இரண்டாவது டிரான்ஸ்பர் பெற்றாலும், முதல் டிரான்ஸ்பர் ரெஜிஸ்டராயிருந்தபோது இரண்டாவது டிரான்ஸ்பர் சாதாரணமாகவாவது, கோர்ட்டு ஏலத்திலாவது பெற்றாலும்செல்லாது. (6 பம். 168, 515; 9 பம். 427; 7 பம். ஐ. 69; 8 பம் ஐ. 50; 11 பம். ஐ. 37.) இரண்டாவது டிரான்ஸ்பர் கோர்ட்டு ஏலத்தில் கிடைத்திருந்தால் பிரதிவாதியின் பாத்தியமட்டும் அந்த ஏலத்தில் விற்கப்பட்டதேயொழிய, அவனால் ஸ்வாதீனஞ்செய்யாமல் டிரான்ஸ்பர்மட்டும் செய்த விஷயத்தில் இந்த ஏலம் பாதிக்காது. (3 பம். ஐ. 304 ; 6 பம். 93) சொத்து ஸ்வாதீனமாகவில்லையென்கிற காரணத்தால் டிரான்பர் செல்லாமற்போகாது. (7 பம். ஐ. 45; 6 பம். 168.) கோர்ட்டு ஏலத்தில் எடுத்தசொத்தை ஸ்வாதீனஞ்செய்யாமலே விற்றால் செல்லும்.

258. பத்திரங்களை ரெஜிஸ்டர்செய்வது.—சில தஸ்தாவேஜுகளை ரெஜிஸ்டர்செய்ய வேண்டாமென்றிருந்தபோதிலும் ஒருசொத்து விஷயமாய் முதலில் தஸ்தாவேஜு ஏற்பட்டு ரெஜிஸ்டர் செய்யாமலிருந்து, பிறகு அதேசொத்தின்பேரில் வேறுதஸ்தாவேஜு ஏற்பட்டு ரெஜிஸ்ட்ராயிருந்தால் ரெஜிஸ்டரானதஸ்தாவேஜேசெல்லும். (ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 50-வது பிரிவு) ஆனால், முதலில் ஏற்பட்ட பத்திரத்துக்கே யாதொரு சொத்துங்கிடைக்கவில்லையென்று தெரிந்திருந்தும் அந்தசொத்து விஷயமாய் வேறுபத்திரம் எழுதி பின்னால் ரெஜிஸ்டர் செய்தாலும் சொத்துக்கிடைக்கமாட்டாது. (8 அ. 540; 13 க. 70; 12 பம். 569; 16 ம. 449; 16 க. 22.)

259. ரெஜிஸ்டர் அவசியம்.—ஹிந்து தர்மசாஸ்திரங்களின்படி தானம், விக்கிரயம், ஒத்தி பந்தக முதலியவைகளுக்கு தஸ்தாவேஜுங் கிடையாது ரெஜிஸ்டருங் கிடையாது. தற்காலத்தில் டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி சட்டப்படி ரெஜிஸ்டர்முதலியது செய்யவேண்டியதாயிருக்கிறது. அதாவது:—யாதொரு அசையாப்பொருளை விற்கும்போது அதன் மதிப்பாவது கிரயமாவது, ஒத்திபந்தகத்தின் துகையாவது, 100 ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்டதாயிருந்தால், ரெஜிஸ்டர்செய்த பத்திரமூலமாகவே அந்தக் கிரயம் முதலானதைச்செய்ய வேண்டும். மேலேசொன்ன விஷயங்களின் துகை 100 ரூபாய்க்கு உட்பட்டிருந்தால் ரெஜிஸ்டர் வேண்டியதில்லை. (டிரான்ஸ்பர் ஆப்பிராபர்டி ஆக்ட். 54, 59 பிரிவுகள்.) ஸ்தாவரசொத்தை குத்தகைவிடுகிற விஷயத்தில் ஒருவருஷ கெடுவுக்கு மேற்பட்டாவது, அல்லது வருஷம் ஒன்றுக்கு இவ்வளவு துகைகொடுக்க வேண்டுமென்று கரார்செய்துகொண்டு விட்டால் அந்தக்குத்தகை எழுத்து மூலியமாயும்ரெஜிஸ்டர் செய்யப்பட்டு மிருக்கவேண்டும். மற்ற விஷயங்களில் சாதாரணப் பத்திரங்களினாலாவது, வாய்மொழியாகவாவது குத்தகை விடலாம்.

260. தானங் கொடுப்பது.—தானங்கொடுத்த சொத்து அசையும் பொருளாயிருந்தால் தானம் வாங்குகிறவனுக்கு உடனேயாவது ரிஜிஸ்டர்செய்த தஸ்தாவேஜு மூலியமாயாவது கொடுக்கவேண்டும். ஸ்தாவர சொத்தாயிருந்தால் தஸ்தாவேஜுயேற்படுத்தி ரெஜிஸ்டர் அவசியம் செய்யவேண்டும், தஸ்தாவேஜுகள் மேலேகண்ட சங்கதிகளுக்கு ஏற்பட்டுவிட்டால் சொத்தை சுவாதீனஞ்செய்ததாகவே எண்ணப்படும். (14 ம. 446.)

8-வது உயில்கள்.

261. உயிலென்பது.—ஒருவன் தானிறந்த பிறகு தன்னுடைய சொத்துக்களை இன்னின்னார் இன்னவிதமாய் அனுபவிக்கவேணுமென்றும் தானினைத்தபடி தன்னிஷ்டத்தைக்காட்டுகிற சட்டசம்மதமான தஸ்தாவேஜுக்கு உயில் என்று பெயர். இந்த ஏற்பாடு முற்காலத்தில்லாதிருந்தபோதிலும் இக்காலத்தில் அநேகர் உயில்மூலமாகவே

தங்களுடைய சொத்துக்களைத் தன் வார்சுகளுக்குக் கொடுக்கிறார்கள்.

262. மிதாட்சரப்படி உயில்கள்.—மிதாட்சர வழக்கப்படி ஒருவன் தன் சுவயார்ஜித சொத்தையாவது, குடும்பத்தில் சேராத தன்னுடைய சொத்தையாவது, குடும்பப் பொதுசொத்தில் தானஞ்செய்ய தனக்கு எவ்வளவு பாத்தியமுண்டோ அந்த சொத்தையாவது தன்னிஷ்டப்படி உயில்மூலமாய் விநியோகஞ்செய்யலாம். மேலும் புத்திரன் பேரன், கொள்பேரன் முதலிய சந்ததியில்லாத காலத்திலும் தனக்கு வேறே தம்பி தமயன் முதலிய பாகஸ்தர்களில்லாதபோதும் பிதுரார்ஜித சொத்துக்களெல்லாவற்றையும் தன்னிஷ்டப்படி விநியோகஞ்செய்ய உயில் எழுதிவைக்கலாம். (1 ம. ஐ. 326, 339; 6 மூ. இ. அ. 309, 344; 10 மூ. இ. அ. 308; 12 மூ. இ. அ. 38; 3 பம். ஐ. 6; 12 ம. 126) ஆனால், பொதுக்குடும்பத்தில் சேர்ந்திருக்கிற ஒருவன் தன் பாகத்தை உயில் மூலம் தானஞ்செய்ய பாத்தியமில்லை. ஏனென்றால், அவனிறந்தபிறகு அவனுடைய சொத்தை மற்றபாகஸ்தர்கள் அடைந்து அவர்கள் பாத்தியம் உயிலைக்காட்டிலும் மேலாகிவிடுகிறது. (8 ம. ஐ. 5, 13; 3 பம். ஐ. 66; 11 பம். ஐ. 66; 5 பம் 48; 12 பம். 105; 7 ம. 357; 14 ம. 459; 16 ம. 353; 19 பம். 803; 7 இ. அ. 181; 1881-ஞ 5-வது சட்டம் 4-வது பிரிவு.)

(2) ஆனதுபற்றி பிள்ளைமுதலிய சந்ததியாரோடு அவிபக்தமாயிருக்கும் தகப்பனும் குடும்பசொத்தில் எந்தபாகத்தையாவது உயில் மூலமாய் விநியோகம்செய்ய அதிகாரமில்லாதவனாக இருக்கிறான். (5 பம். 48; 7 இ. அ. 181; 8 மது. 89; 16 மது. 84; 16 மது. 353; 43 மத. 824; 40 மத. 1122; 39 பம். 593.)

(3) உயில்செய்யப்படுகிறசொத்தில் உயில் செய்பவனுக்கு பூர்ண சுதந்திரமிருக்கவேண்டியிருக்கிறபடியால் அவிபக்தகுடும்ப நிலைமையிலிருந்தும் விலகி யாதொருபங்காளியுடனுஞ் சேர்ந்திராமல் தனித்திருப்பவனும், சுயார்ஜித சொத்தை யுடையவனுந்தான உயில் மூலமாய் சொத்தைவிநியோகம் செய்யலாம். (2 மூ. இ. அ. 54; 6 மூ இ. அ. 309; 10 மது. 251. 24 மது. 429.)

263. தாயபாகப்படி உயில்கள்.—(1) தாயபாகப்படி பொது குடும்பத்தின் தகப்பன் தன்னுடைய சுவயார்ஜித, பிதுரார்ஜித ஸ்தா

வர ஜங்கம சொத்துக்களை தன்னிஷ்டப்படி விநியோகம் செய்யலாமென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். சேர்ந்த குடும்பத்திலுள்ள பாகஸ்தன் எல்லாரும் குடும்ப சொத்தில் தனித்தனி பாத்தியமுள்ளவர்களாயிருப்பதால் அவர்கள் தங்கள் தங்கள் பாகங்களை உயில்மூலமாய் கொடுக்கலாம். (6 மூ. இ. அ. 344; 4 க. ஐ. 159; 9 க. ஐ. 396.)

(2) உயில் மூலமாய் விநியோகிக்கப்படும் சொத்தானது உயில் செய்பவனுக்கு சர்வ சுதந்திரமாய் பாத்தியப்பட்ட அவனுடைய தனியான சொத்தாக இருக்கவேண்டும். சொத்தில் முழு சுதந்திரமில்லாதவன் அதை உயில்செய்யக்கூடாது. (12 மூ. இ. அ. 83; 12 மது. 126; 22 மதி. 9.)

264 ஸ்திரீகள் மைனர்கள் உயிலெழுதுவது.—(1) ஸ்திரீதனமாகவந்த சொத்தைமட்டும் ஸ்திரீகள் உயில் மூலமாய் விநியோகஞ் செய்யலாம். (2 ம. 333.) வார்சு பாத்தியமாகக்கிடைத்த சொத்தையாவது, இரண்டல்லது பலபேர் விதவைகளுடன் கூட்டாய்க்கிடைத்த சொத்தையாவது உயில்செய்யக்கூடாது. (17 பம். 690; 28 பம். 453; 32 பம். 59; 7 மத. 93.) மைனர்கள் உயில்செய்ய அர்கர்களல்ல. (266-வது பிரிவைப்பார்க்க).

(2) வார்சுபாத்தியத்தாலடைந்திருக்கிற தாயசொத்துக்களில் ஸ்திரீகளுக்கு பூர்ண சுதந்திரமில்லையாகையால் அவைகள் விஷயமாய் அவர்கள் உயில்செய்யக்கூடாது. (17 பம். 690; 21 பம் 190; 7 மது. 93.)

265. ஜமீன்தாரர் உயிலெழுதுவது.—பாகிக்கத்தகாத ஜமீன் சொத்துக்களில் ஜமீன்தாரர்களுக்கு முழுசுதந்திரம் இருப்பதாக இப்பால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடியால் அவற்றை அவர்கள் தங்களிஷ்டப்படி உயில்செய்யலாம். ஆனால், ஆங்காங்கே ஏற்பட்டிருக்கிற வழக்கத்துக்கு விரோதமாய் உயில் செய்யக்கூடாது. (15 இ. அ. 51; 22மது. 383; 26 இ. அ. 83.)

266. உயில் விஷயமாய் மற்ற நிபந்தனைகள்.—(1) உயில் மூலமாய் சொத்தை விநியோகிக்கிறவன் மனப்பூர்வமான சம்மதமுள்ள

வனுகவும் யுக்தா யுக்தந்தெரிந்த பகுத்தறிவுடையவனுகவு மிருக்கவேண்டும். ஆகையால் யுக்தவயதை அடையாதவர்களான மைனர்களும் சித்த சுவாதீனமில்லாத பைத்தியகாரர் முதலியோர்களும் உயில்செய்யக்கூடாது. (25 இ. அ. 109; 25 கல். 824; 22 இ. அ, 171; 23 கல். 1.)

(2) உயிலானது எழுத்துமூலமாகவே ஏற்படவேண்டுமென்ற கட்டாயமில்லை. வாய்மொழியாகவும் ஏற்படலாம். (2 மது. ஐ. 37; 1 பம். 641; 12 மூ. இ. அ. 2; 11 பம். 89.)

(3) ஆனுலும் உயில்செய்பவன் அதை எழுத்து மூலமாய் ஏற்படுத்திவைப்பதே உசிதமானதாகும். எழுத்து மூலமாய் ஏர்ப்படுகிற உயிலில், உயில்செய்தவனுவது, அவனுல் அனுமதிபெற்றவனுவது, அதில் கையெழுத்துசெய்து, இரண்டு சாக்ஷிகளின் கையெழுத்தும் வாங்கவேண்டும். (ஹிந்து உயில் ஆக்ட் பிரிவு 2.) அப்படிப்பட்ட தஸ்தாவேஜு ஒன்று இருந்தால் உயிலை ருஜுப்படுத்துவது மிக்க சுலபமாயிருக்கும் மேலும் வீண் விவகாரங்களுக்கும் தொல்லைகளுக்கும் இடமிராது.

(4) எழுத்து மூலமாக ஏற்படும் உயிலானது இன்னமாதிரியாகத்தான் எழுதப்படவேண்டுமென்ற அவசியமில்லை. அது எழுதிவைக்கிறவனுல் கையெழுத்து செய்யப்பட்டிருக்கவேண்டுமென்ற அவசியமுமில்லை (3 பம். 7; 20 பம். 674; 31 அல. 236; 10 மத. 251.) உயில்செய்கிறவனுடைய எண்ணம் இன்னதென்று சந்தேகமன்னியிலும் தெளிவாயும் தெரியக்கூடியதாக இருந்தலே போதுமானதாகும். (2 இ. அ. 7; 17 இ அ. 82; 18 கல். 1; 26 இ. அ. 194.) ஒருவன் தன்னுஸ்திகளை இன்னவிதஞ் செய்கிறதென்கிற மார்க்கங்களை சர்க்காருக்கு மனுமூலமாய்த் தெரிவித்துப் பிறகிறந்தாலும் அந்த மனுவே உயிலாக பாவிக்கப்படும். (14 க. ஐ. 226; 26 ஸ. 55 7 அ. 163; 18 க. 1.)

(5) உயில் தஸ்தாவேஜில் கண்டிருக்கும் வாசகங்கள் தெளிவாயிராமல் சந்தேகமாயும் சங்கதி அல்லது உயில் செய்தவனுடைய எண்ணம் இன்னதென்று வியக்தமாய் அறியமுடியாததாயுமிருந்தால் அப்படிப்பட்ட உயில் செல்லமாட்டாது. (18 மத. 347; 24 கல். 834; 34 பம். 278; 21 பம். 646; 22 பம். 774; 14 கல். 222; 23 பம் 725.)

(6) உயில் தஸ்தாவேஜுக்கு ஸ்டாம்பு வேண்டியதில்லை. மேலும், உயில் தஸ்தாவேஜானது சட்டாயமாய் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டுமென்ற அவசியமுமில்லை. ஆனாலும் உயில் தஸ்தாவேஜானது கெட்டுப்போகாமலும் பிறரால் அபகரிக்கப்பட்டுப் போகாமலும் இருக்கும்பொருட்டு அதை ரிஜிஸ்டர் செய்வித்துக்கொள்ளுவதே நலமாகும். மேலும், உயில் தஸ்தாவேஜானது எழுதிவைத்தவனால் டிஸ்திரிக்ட் ரிஜிஸ்திரார் ஆபீசில் பந்தோபஸ்துக்காக வைத்து வைக்கவும்படலாம்.

(7) உயில்மூலமாய் சொத்தைப் பிறனுக்குக் கொடுக்கும் விஷயத்தில் அவனதை இன்னவிதமாகத்தான் அடைந்தனுபவிக்கவேண்டுமென்றும் அவனுக்குப்பின் அச்சொத்து அவனுடையக்கிரமமான வார்சுகளுக்குப்போகாமல் இன்னாருக்குத்தான் சேரவேண்டுமென்றும் உள்ளசட்ட விரோதமான நிபந்தனைகளை உயிலில் ஏற்படுத்தக்கூடாது. (6 இ. அ. 29; 19 மத 591; 10 மூ. இ. அ 51.) மேலும், 25-வயதானபிறகே சொத்தை அடையவேண்டுமென்றும் சொத்தையடைகிறவர்கள் அதை விநியோகிக்காமல் அனுபவித்து வரவேணுமென்றும், (28 மத 363; 31 கல் 111.) அவர்கள் அதைத் தங்களுக்குள் பாகம் செய்துகொள்ளக்கூடாதென்றும், (15 இ. அ. 37) சொத்தின் வரும்படியை செலவழிக்காமல் சேர்த்து வைத்து வரவேண்டுமென்றும், (25 கல் 662; 11 கல் 684; 12 இ. அ. 103) இவ்வாறான நிபந்தனைகளும் சட்டவிரோதமானதாக இருக்கிறபடியால் இப்படிப்பட்ட நிபந்தனைகளை உயிலில் ஏற்படுத்தியிருந்தால் அவ்வித ஷரத்துக்கள் இல்லாததுபோலவே உயில் பாவிக்கப்படும். அதாவது உயிலின்படி சொத்தையடைகிறவன் அவ்வித நிபந்தனைகளுக்கு சட்டுப்படாமலே சொத்தையடைந்து அனுபவிக்கலாம்.

(8) மேலும் துன்மார்க்கமானதாயும் நியாய விரோதமானதென்று சட்டத்தால் தடுக்கப்பட்டுமிருக்கிற செலவுகளின் பொருட்டு சொத்தை உபயோகப்படுத்தும்படி ஏற்படுத்திவைக்கும் உயில்களும் செல்லமாட்டாது. (6 மூ. அ. இ. 526; 19 கல். 418; 23 மது 643.)

(9) ஸ்திரிகளுக்கு சொத்துக்களில் சாதாரணமாய் முழுசுதந்திரமில்லையாகையால் அவர்களுக்கு உயில்மூலமாய் சொத்தைக்கொடுப்பவன் அவர்கள் அச்சொத்தை விநியோகம் செய்யாமல் தங்கள்

ஆயிசு காலம்வரையில் அநுபவித்துக்கொள்ளத் தக்கதென்றும் பிறகு அச்சொத்து வேறொருவருக்கு சேரத்தக்கதென்றும் உயிலில் ஏற்படுத்திவைத்தால் அது செல்லுபடியுள்ளதாகும். (2 இ. அ. 14; 22 பம். 409; 24 கல். 646; 26 இ. அ. 96; 26 கல் 707; 31 ம. 310.)

(10) உயிலின்படி சொத்தை அடையவேண்டியவன் உயில் செய்தவனுடைய மரணகாலத்திற் பிறந்திருக்கவேண்டும், அல்லது தாயின் கர்ப்பத்திலாவது இருக்கவேண்டும். தாயின் கர்ப்பத்திலிருப்பதும் பிறந்திருப்பதற்குச் சமானமாகவே பாவிக்கப்படும். அவ்வாறு மில்லாமல் உயில்செய்தவனுடைய மரணகாலத்திற்குப்பிறகு தாயின் கர்ப்பத்திலுண்டாகிப் பிறக்கும்பிள்ளை உயிலின் பிரயோஜனத்தை யடையமாட்டான். (19 பம். 647; 15 இ. அ. 149; 30 கல். 521; 31 மத. 310.)

(11) உயிலின்படிசொத்து கிடைக்கவேண்டுமென்று தாவா செய்கிறவன் உயிலின்படி சொத்துகிடைக்கவேண்டிய காலம் முதல் பன்னிரண்டு வருஷங்களுக்குள்ளாக தாவாசெய்யவேண்டும். (லிமிடேஷன் ஆக்ட்டு 1-வது ஷிட்யூல் 123-வது பிரிவு.)

267. **உயில் சொத்தை யடைவது.**—உயில் செய்தவன் இறந்தபிறகுதான் அவனால் கொடுக்கப்பட்டசொத்து அவரவர்களுக்குக் கிடைக்கும். மைனர்கள் பித்தர்கள் மகாகோரமான ரோகிகள் முதலானவர்களுக்கும் உயிலால் கொடுத்த சொத்து கிடைக்கத் தடையில்லை.

268. **பலர்சேர்ந்து உயில்செய்வது.**—பொதுக் குடும்பத்திலுள்ளவர்கள் ஒன்றுய் சேர்ந்து எல்லாசொத்திற்கும் ஒரு உயில்செய்யலாம். (45 அல 145; 38 இ அ 112). ஆனால், அவர்களில் ஒருவர் இறந்தால், மற்றொருவர் உயிலைரத்துசெய்யமுடியாது. (33 மத 406.) இரண்டுக்கு மேற்பட்டவர்களுக்கும் சொத்தை உயில் அல்லது தானமாய் கொடுக்கலாம். அப்படி அடைந்தவர்கள் பொதுக்குடும்பசொத்தாகவாவது, பொது அனுயோகதாரராகவாவது, பங்குக்காரர்களாகவாவது, சொத்தை அனுபவிக்கலாம்.

269. **உயில் செய்தவன் கடன்கள்.**—ஒருவன் தான் கொடுக்கவேண்டிய ஜீவனாம்சம், கடன்கள் முதலியவைகளைக்கொடாமல் சொத்தைமட்டும் உயில்மூலமாய் வேறொருவருக்கு விநியோகஞ்செய்

தால் அவருக்கு, ஜீவனாம்சம் கடன்காரர் இவர்களுக்குக் கொடுக்கவேண்டியதுபோக பாக்கி சொத்துத்தான் கிடைக்கும். (25 கல் 662; 12 மு. அ 38.) ஒருவன் தன் கடனுக்காவது, ஜீவனாம்சக்காரனுக்காவது கொடுக்கவேண்டிய கடன், ஜீவனாம்சம் இவைகளைக் கொடாமல் அவர்களுக்குத் தன் சொத்தில் கொஞ்சம் உயில்மூலமாய் கொடுத்தால் அவர்கள் அந்த சொத்தைப்பெற்றுக்கொண்டு சும்மாவிருக்க வேண்டியதுதான். இல்லாவிடில் உயில்மூலமாய் கிடைத்தசொத்தை தள்ளிவிட்டு, தங்கள் கடன்களையும் ஜீவனாம்சத்தையும் அவன் முழுசொத்திலிருந்தும் வசூல்பற்ற தாவாசெய்யவேண்டும். (14 பம். 438; 3 ம. ஐ. 8; 2 மூ. இ. அ. 54; 10 க. 633; 12 ம. 267.)

270. உயிலின் நிரந்தர ஏற்பாடுகள்.—சொத்தை விநியோகஞ் செய்யாமல் அதிலிருந்து கிடைக்கும் வரும்படியை மட்டும், ஒருவர் பின்னொருவர் அனுபவிக்கவேண்டுமென்று உயில் செய்தால் முதலில் சொத்தை யடைந்து யனுபவிப்பவன் அதை விற்பனை தானம் முதலிய பராதீனஞ்செய்யக்கூடாது. செய்தால் சட்டப்படி செல்லாது. மேலும், உயில்செய்தவன் இறந்தபிறகு கர்ப்பமுண்டாகிப் பிறந்தவனுக்கும், அந்த உயிலால்கொடுத்தசொத்து கிடைக்குமென்று இப்போது சில சட்டங்களால் ஏர்ப்பட்டிருக்கிறது. ஆனால், உயில்செய்தவன் எழுதிவைக்கிற ஷரத்துகளுக்கு உட்பட்டு அதுசெலாவணியாகும். அந்த சட்டங்களாவன :—

271. பிறக்கப்போகிற நபருக்கு சொத்து சேரும்படி உயில் எழுதுவது.—ஜீவிதகாலத்திலே எந்தசொத்தையாகிலும் ட்ரான்ஸ்பர்செய்தாலும் உயில் மூலமாய் ஏற்பாடுசெய்தாலும், அது சந்தர்ப்பத்துக்கேற்றபடி, ட்ரான்ஸ்பர் செய்யப்பெற்றவராவது உயில் மூலமாய் ஆஸ்தி ஏற்பாடு செய்யப்பெற்றவராவது ட்ரான்ஸ்பர் செய்யப்பட்ட தேதியிலாகிலும் உயிலேற்படுத்தினவர் இறந்துபோன தேதியிலாகிலும் பிறக்கவில்லை யென்னும் காரணத்தினாலேயே சட்ட சம்மதமற்றதாய்ப் போய்விடமாட்டாது. (சென்னை 1914-ம் வருஷத்து 1-வது ஆக்ட்.)

272. முன் ஏர்ப்பாட்டுக்குட்பட்டு உயில் மூலம் ஆஸ்தி ஏர்ப்பாடு.—ஆஸ்தியானது உயிலில் கண்டிருக்கிற முந்திய ஏற்பாட்டுக்குட்பட்டு, உயிலேற்படுத்தினவர் இறந்துபோகுங்காலத்தில் ஜீவித்திராத ஒரு நபருக்கு ஏற்படுத்தப்பட்டால், பிந்திய ஏற்பாடானது ஏற்படுத்

தப்பட்ட பொருளிலே உயிலேற்படுத்தினவருக்கு மிகுதியாயிருக்கிற சுதந்தர முழுவதும் அதில் அடங்கியிருந்தாலொழிய செலாவணியற்றதாகும். (இந்து தாயபாக ஆக்ட் பிரிவு 100.

உதாரணம்.—ஆயுசுவரையிலே எ-என்பவருக்கும், அவரிறந்தபின்பு ஆயுசுவரையிலே அவருடைய ஜேஷ்ட புத்திரனுக்கும், பின்னவன் இறந்தபின்பு அவனுடைய ஜேஷ்டபுத்திரனுக்கும் சொத்து வைக்கப்படுகிறது. உயிலேற்படுத்தினவர் இறந்துபோகுங்காலத்தில், எ-என்பவருக்குப் புத்திரனில்லை எ - என்பவருடைய ஜேஷ்ட புத்திரனுக்குச்செய்த ஏற்பாடானது உயிலேற்படுத்தினவர் இறந்துபோகையில் ஜீவித்திராத ஒரு நபருக்குச் செய்த ஏற்பாடாயிருக்கிறது. அது உயிலேற்படுத்தினவருக்கு மிகுதியாயிருக்கிற பாத்தியதை முழுவதையுங்குறித்த ஏற்பாடாகவில்லை. ஆயுசுவரையிலே எ - என்பவருடைய ஜேஷ்ட புத்திரனுக்குச்செய்த ஏற்பாடு செல்லாது.

273. உயிலினால் நிரந்தர பிரயோசனம் உண்டாக்கக்கூடாது.—யாதொரு ஆஸ்தி ஏற்பாட்டினால் ஏற்படுத்தப்பட்ட பொருள் சங்கிரமிப்பதானது உயிலேற்படுத்தினவர் இறந்துபோகையில் ஜீவித்திருக்கிற ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட நபர்களுடைய ஜீவிதகாலத்துக்கும், அந்தக்காலத்தின் முடிவில் ஜீவித்திருக்கும் ஒரு மைனர் தமக்கு வயதுவந்ததன்மேல் ஏற்படுத்தப்பட்ட பொருளை அடையவேண்டுமென்று கண்டிருந்தால் அவர் மைனராயிருக்கும் காலத்துக்கும் பிறகு வரையில் தள்ளிவைக்கப்பட்டால் அந்த ஆஸ்தி ஏற்பாடு செல்லாது. (இந்து தாயபாக ஆக்ட் பிரிவு 101).

உதாரணம்.—ஆயுசுவரையிலே எ - என்பவருக்கும், அவரிறந்தபின்பு ஆயுசுவரையிலே பி - என்பவருக்கும், பி - என்பவர் இறந்தபின்பு, பி - என்பவருடைய புத்திரர்களில் எவருக்கு முதலில் இருபத்தைந்துவயசு ஆகிறதோ அவருக்கும் என்று ஒரு நிதி வைக்கப்படுகிறது. எ - என்பவரும் பி - என்பவரும் உயிலேற்படுத்தினவருக்குப் பின்பு ஜீவித்திருக்கிறார்கள். பி - என்பவருடைய புத்திரர்களில் எவருக்கு முதலில் இருபத்தைந்து வயதாகிறதோ அவர் உயிலேற்படுத்தினவர் இறந்தபின்பு பிறந்தவராய், எ, பி- என்கிறவர்களுள் யார் அதிககாலம் ஜீவித்திருக்கிறார்களோ அவருடைய மரண முதற்கொண்டு பதினெட்டு வருஷத்துக் கதிகமாய் காலம்கழிகிறவரையிலே அவருக்கு இருபத்தைந்து வயசாகாதிருக்கலாம்; இவ்விதமாய் ஆஸ்தி சங்கிரமிப்பது எ, பி - என்பவர்களுடைய ஜீவிதகாலத்துக்கும், பி - என்பவருடைய புத்திரர்கள் மைனராயிருக்கும் காலத்துக்கும் அப்பால் ஒற்றிப்போகலாம். பி - என்பவர் இறந்த பின்பு நடப்பதாகச் செய்யப்பட்ட ஏற்பாடு செல்லாது.

ஆனால், சுவீகாரப்பிள்ளை உயிலேற்படுத்தினவனிறந்த பிறகு பிறந்தாலும் அவன் விஷயத்தில்மட்டும் உயில்செல்லும். (4 க. ஐ. 103, 166; 9 க. ஐ. 377, 397, 405.)

உதாரணம்.—சுவீகாராதிகாரம்பெற்ற விதவை வெகுகாலத்திற்கு பிறகு பிறந்த பிள்ளையை சுவீகாரஞ்செய்தாலும் உயில்படி புருஷன்கொடுத்த சொத்தெல்லாம் சுவீகாரப்பிள்ளையைச் சேரத்தடையில்லை. ஒரு கேசில் 72-வருஷம் கழித்து எடுத்துக்கொண்ட ஸ்வீகாரம் செல்லுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (28 அல. 377.)

274. உயில்சேல்லாவிட்டால் சோத்து யாருக்குச் சேருமென்பது —(1) சட்டத்துக்கு விரோதமான ஷரத்துகளை ஏற்படுத்தியாவது சரியான விதமாய் அர்த்தமாகாமலும், மேல் நடத்த வழியில்லாதிருக்கும் விதமாயாவது உயில் எழுதினால் அந்த உயில் ரத்தாகி சொத்து உயில்செய்தவன் வார்சுகளுக்குச்சேரும். உயில்செய்தவன் இறப்பதற்குள் உயிலின்படி சொத்தை யடையவேண்டியவன் முன்னாடி இறந்துபோனால் உயில் ரத்தாகிச்சொத்து உயில்செய்தவனையே சேர்ந்துவிடும். (23 மத. 613.)

(2) ஒருவன் தான்செய்த உயிலின் சங்கதி ஒருவருக்குந் தெரியக்கூடாதென்று எண்ணினால் அதை ஒரு உரைக்குள்போட்டு முத்திரைசெய்து ரெஜிஸ்ட்ராராபீசில் கொடுத்தால், அவர் அந்த உரையை ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 40-வது பிரிவுப்படி பந்தோபஸ்தாக காப்பாற்றிவைத்து, உயில்செய்தவனிறந்த பிறகு அதை ஆபீஸ் புத்தகத்தில் பதிந்துகொண்டு கேட்பவர்களுக்கு நகல்கொடுப்பார். இஷ்டப்பட்டால் உயில்செய்தவனே அந்த லக்கோடாவை தானே திருப்பிவாங்கிக்கொள்ளலாம். (ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 44-வது பிரிவு.)

(3) ஒருவன் இரண்டு மூன்று உயில்செய்திருந்தால் அவைகளுக்குள் வித்தியாசமேற்படும் பட்சத்தில் கடைசி உயில் அமுலுக்குக் கொண்டுவரப்படும். உயில் எழுதியவன் தன்னிஷ்டப்படி உயிலைமாற்றலாம், ரத்துசெய்யலாம். (3 க 526.) எழுதி ரெஜிஸ்டர்செய்த உயிலைக்கூட வாய்மொழியாய் ரத்துசெய்யலாம். ஆனால், அதற்கு ருஜு இருக்கவேண்டும். (4 இ. அ. 228).

(4) உயில் ரத்தாய்விட்டது என்பதற்கு தஸ்தாவேஜு ஏற்படவேண்டியதில்லை. சங்கதிக்குத் தக்கபடி வாய்மொழியாகக்கூட ரத்

னுசெய்யலாம். அதாவது ஒருவன் தன் சொத்தெல்லாம் வேறொரு வனுக்குச் சேரவேண்டுமென்று உயிலெழுதி சொல்பகாலத்திற்குப் பின் சுவீகாரஞ் செய்துகொண்டான். இந்த ஸ்திதியில் உயில் ரத் தாய் விட்டதென்று எண்ணவேண்டியது. (4 இ. அ. 228 ; 25 மத. 678.) ஒருவன் தன் ஆஸ்திகளை இன்னவிதம் செய்கிறதென்று சர்க் காருக்கு மனுமூலம் தெரிவித்திருந்தால் அதே உயிலாக பாவிக்கப்படும். (14 க. ஐ. 226; 26 ஸ. 55; 7 அ. 163, 15 க. 1).

275. உயிலைத் திருத்துவது.—உயிலை தன் ஸ்வாதீனத்தில் வைத்திருப்பவன் அதில் ஏதாவது தித்துபாடுசெய்து மாற்றி னாலும் புதிதாகச் சங்கதியைச் சேர்த்தாலும் உயில் ரத்தாகாது. ஆனால், தித்துபாடுசெய்த புது ஸங்கதிகள் மட்டும் செல்லாது. செய்தவன் போர்ஜரி குற்றத்துக்குள்ளாவான். (இந்தியன் ஜூரிஸ்ட் 190.)

9-வது தர்ம விநியோகங்கள்.

276. ஸத்விநியோகங்கள்—தேவாலயங்களுக்கும், சத்திரங்களுக்கும் வைத்தியசாலை, கல்விசாலை இவைகளுக்கும், இன்னும்அனேகவிதமான தர்மங்களுக்காக ஒருவன் தன்னுடைய பிதுரார்ஜிதசொத்துக்களைக்கூடத் தானமாகவாவது, அல்லது உயில் மூலமாகவாவது கொடுத்தாலும் செல்லுமென்று ஏற்பட்டிருக்கிறது தானஞ் செய்தபோதே சொத்தை விடவேண்டுமென்கிற அவசியமில்லை. அவன் வார்சுகள் சொத்தைவிட கட்டுப்பட்டவர்கள். (37 கல் 128 ; 14 மு. இ. அ. 289.) ஆனால், ஒருவன் தர்மத்துக்காக என்று பொதுவாய் உயில் செய்தால், அதன்படி குறிப்பிட்ட ஒரு தர்மத்தை செய்யமுடியாததலால் அப்படிப்பட்ட தர்மம் பிரயோஜனப்படாது. (30 மத 340; 23 பம் 725.)

277. குடும்பசொத்தில் தர்மம்.—(1) அவிபக்தகுடும்பத்திலுள்ள ஒருவன் குடும்பப்பொதுவான சொத்தில் தனக்குள்ளபங்கை தானமாக விநியோகம்செய்யக்கூடாதென்று முன்சொல்லப்பட்டது. ஆனாலும் தருமத்தின்பொருட்டு நல்ல எண்ணத்தின்பேரில் குடும்பப்பொதுவான சொத்தில்தனக்குள்ள பங்கிலிருந்து கொஞ்சபாகத்தை ஒருவன் விநியோகம்செய்யலாம். குலதேவதையின் பூஜைக்காக குடும்பப்பொதுவானசொத்திலிருந்து கொஞ்சபாகத்தை விநியோகம்செய்ய தகப்

பனுக்கு சுதந்திரமுண்டென்றும், நல்ல எண்ணத்தோடு செய்யப்படு கிற அப்படிப்பட்ட தர்மத்தைப் பிள்ளைகள் ஆக்ஷேபிக்கக்கூடாதென் றும் அலஹாபாத்து ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (8 அல. 76.)

(2) மேலும் தேவதையின் பூஜையின்பொருட்டு செய்யப்படு கிறதருமத்துக்கும் பொதுஜனங்களுடைய நன்மையின்பொருட்டு செய் யப்படுகிற தருமத்துக்கும் வித்தியாசமில்லையென்று பம்பாய் ஹைகோ ர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (9 பம். 169.)

278 தர்மங்களின் மாதிரிகள்.—(a) தர்மங்கள் பொது அல்லது சொந்ததர்மங்கள் என்ற இருவகைப்படும். பொதுதர்மங்களில், யாராவ திருவர் சேர்ந்து ஒருகாரியத்தை ஆட்சேபிக்கலாம், அல்லதுராத்துசெ ய்யலாம். சொந்த தர்மங்களில் அதன் தலைவன் ஸர்வ அதிகாரியாய் இ ருக்கிறான். தர்மசொத்துக்கள் அடியிற்கண்டபடி மூன்றுவகைப்படும்.

(1) ஒருகுறிப்பிட்ட சொத்தில் தனக்குள்ள சகலசுதந்திரங் களையும் கைவிட்டுவிட்டு அதைத் தருமத்துக்கென்றே சாசுவதமாய் முற்றிலும் கொடுத்துவிடுவது.

(2) ஒருகுறிப்பிட்டசொத்தை மேற்சொல்லியவாறு சாசுவத மாய்க் கொடுத்துவிடாமல் அதன்வரும்படியின் ஒருபாகத்தைமட்டும் கொண்டு தர்மத்தை சாசுவதமாய் நடத்திவருவதென்று ஏற்படுத்தி வைப்பது.

(3) ஒரு குறிப்பிட்டசொத்தையாவது அதன்வரும்படியின் ஒருபாகத்தையாவது தர்மத்துக்காக சாசுவதமாய்க் கொடுத்துவிடா மல், தர்மத்தை தன்சொந்தத்திலேயே நடத்திவருவது.

(b) (1) மேற்சொன்னமூவகை தர்மங்களில் முதலாவது இர ண்டாவது வகுப்புகளைச்சேர்ந்த தர்மங்களே சாசுவதமானதாக இருக் கின்றன. மூன்றாவதுவகுப்பைச்சேர்ந்த தருமத்தை நடத்திவருவ தானது அதைச்செய்பவனுடைய இஷ்டத்தைப்பொறுத்ததாக இருக் கிறது. அதைக்கொஞ்சகாலம்வரையில் அவன் நடத்திவந்து பிறகு நிறுத்திவிட்டாலும் நெடுகிலும்தொடர்ச்சியாய் அதைநடத்திக்கொ ண்டு வரவேண்டுமென்று தானம்செய்தவனையாவது அவனுடைய வார்

சுகளையாவது பிறர்கட்டாயப்படுத்த இடமில்லை. (18 கல். 10; 17 இ. அ. 110.)

(2) முதலாவது இரண்டாவது வகுப்புதர்மங்கள் ஏற்படுத்தப் பட்டபின்பு ரத்தாகமாட்டாது. அவ்வித தருமத்தை ஏற்படுத்தினவனுக்காவது அவனுடைய வார்சுகளுக்காவது அதைநிறுத்திவிட அதிகாரமில்லை. (14 மு. இ. அ. 289.)

279. **தர்மசோத்தை எடுத்துக்கோள்வது.**—(1) ஆதியில் ஏற்படுத்தப்பட்ட ஒருதர்மம் நெடுகிலும் நடந்துவர முடியாமல் தர்மகாரியமானது தவறியாவது அழிந்தாவது போய்விட்டாலும் அந்ததர்மத்துக்காக விடப்பட்டசொத்து உடையாளியையாவது அவனுடைய வார்சுகளையாவது திரும்பவும்சேரமாட்டாது. அத்தர்மம்போலொத்த வேறு தர்மத்தின்பொருட்டு அச்சொத்து உபயோகப் படுத்தப்படவேண்டும். (4 மு. இ. அ. 190; 3 இ. அ. 32; 28 மத 319.)

(2) இரண்டாவதுவகுப்பு தர்மமானது ஒருசொத்தின் வரும்படியின் ஒருபாகத்தைக்கொண்டு நடத்தப்படுவதால் உடையாளியும் அவனுடைய வார்சுகளும் அச்சொத்தை இதரகுடும்ப சொத்துக்களொப்பந்தம் பந்தகபஹுதீனம்செய்ய அதிகாரமுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அச்சொத்து அவ்வாறு விநியோகப்படுத்தப் பட்டுப்போனால் தர்மத்தைநடத்திவரும் கடமையானது விநியோகம் பெற்றவனைச் சேர்ந்ததாய்விடுகிறது. (49 இ. அ. 100; 8. மு. இ. அ. 66; 43 அல. 291; 42 கல். 561.)

(3) மேலும் இவ்வகுப்பு தர்மசொத்தை உடையாளியினுடைய வார்சுகள் இதரகுடும்பசொத்துக்களொப்பந்தம் பாகித்துக் கொள்ளவும் உரிமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். அப்போது அவர்கள் தங்கள் பங்குவீதத்துக்குத்தக்கபடி தர்மத்தை நடத்திவரவேண்டும். (4 கல். 56.)

280. **திருப்பியடைய முடியாததர்மசோத்துக்கள்.**—முதலாவது வகுப்பு தர்மத்துக்காக விடப்பட்டசொத்தில் உடையாளி உடைத்தாயிருந்த எல்லாபாத்தியங்களும் அவனைவிட்டு முற்றிலும்விலகிப் போய்விடுகிறபடியால் அவனாவது அவனுடையவார்சுகளாவது பிறகு அச்சொத்தை எவ்வளவும் சொந்தத்துக்கு உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடாது. அச்சொத்தானது தர்மத்தை நடத்துவதற்காக

நியமிக்கப்பட்டவர்களைச் சேர்ந்ததாய்விடுகிறது. தர்மத்துக்காகவிடப்பட்டசொத்தைக்கொண்டு தர்மத்தை நடத்திவரும்படி நியமிக்கப்பட்டவர்கள் தர்மகர்த்தாக்களென்று (இங்கிலீஷில் டிரஸ்டிகளென்று) சொல்லப்படுவார்கள்.

281. தர்மத்துக்குசோத்தை விடுகிறவன் தானே ட்ரஸ்டியாகவிருக்கலாம்.—(1)தர்மத்தை ஏற்படுத்துகிறவன் தன்னையும் தன் வார்சுகளையுமே டிரஸ்டியாகவாவது அல்லது டிரஸ்டிகளிலொருவராகவாவது ஏற்படுத்திவைத்துக்கொள்ளலாம்.

(2) டிரஸ்டிகளுக்கு தர்மசொத்தில் தர்மவிசாரணை பாத்தியத்தைத்தவிர வேறு எவ்விதசுதந்திரமும் இல்லை. அவர்கள் தங்களுடைய சொந்தவிஷயத்துக்காகவாவது குறிப்பிட்ட தர்மத்தைத் தவிர வேறு தர்மத்துக்காகவாவது தர்ம சொத்தை எவ்வளவும் உபயோகப்படுத்தக்கூடாது. (1882-ம் வருத்திய 2-வது ஆக்டின் 51-வதுபிரிவையும் பார்க்க.)

(3) ஒருசொத்தானது எந்ததர்மத்துக்காக விடப்பட்டதோ அந்த தர்மத்தை டிரஸ்டிகள் அச்சொத்தைக்கொண்டு சரியாய் நடத்திவரவேண்டும். தர்மபரிபாலனத்தின் பொருட்டு தர்மசொத்தைச் செலவிடுவதிலும் பந்தகபறுதீனங்கள் செய்வதிலும் டிரஸ்டிக்குள்ள அதிகாரமானது ஒருமைனருடைய கார்டியனுக்குள்ள அதிகாரத்தைப்போன்றதாயிருக்கிறது. (2 கல். 341; 2 இ. அ. 43, 21 அல. 145; 25 அல. 296; 24 கல். 77.)

(4) ஆனாலும் தர்மசொத்தின் வரும்படிகளைமட்டும் டிரஸ்டிகள் செலவுசெய்யலாமேதவிர மூல சொத்தையே விநியோகப்படுத்த அவர்களுக்கு எவ்வளவும் அதிகாரமில்லையென்று பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (5 பம். 393; 15 பம். 625.)

(5) டிரஸ்டியானவன் தர்ம விசாரணையை தானே நேரில் நடத்திவரவேண்டுமேயன்றி அவ்வதிகாரத்தை வேறொருவனிடம் ஒப்புவிக்கவாவது பிறனொருவனுக்கு விற்கவாவது கூடாது. (5 மது. 89; 4 அல. 81; 23 பம். 131. 1882-ம்வருத்திய 2-வது ஆக்ட்டின் 47-வது பிரிவையும் பார்க்க.)

282. தேவாலய ஊழியத்தை பராதீனஞ் செய்யக்கூடாது.—ஒரு தேவாலயத்தின் ஊழியனும் தன் ஊழிய பாத்தியத்தை அன்னி

யனுக்கு பராதீனம் செய்யக்கூடாது. (6 மத். 76.) ஆகிலும் தன் குடும்பத்திலுள்ள தாயாதிகளிலொருவனுக்கு அச்சுதந்திரத்தை விநியோகப்படுத்தலாம். (15 மது. 183.)

283. தர்மத்தை சரியாய் நடத்த கோர்ட்டில் தாவாசெய்வது.—ஒரு தேவாலயத்தின் பூஜையாவது அல்லது வேறெந்தப் பொது தர்மமாவது தர்மகர்த்தாக்கள் அல்லது ஊழியர்களால் சரியாய் நடத்தப்படாமலிருந்தால் அந்த தருமத்தில் அக்கறையுள்ள இரண்டு அல்லது மேற்பட்ட அபிமானிகள் அதைப்பற்றி அட்வோகேட் ஜெனரல் அல்லது ஜில்லா கலெக்டருடைய முன்னடி அனுமதிபெற்றுக் கொண்டு அத்தர்மம் சரியாய் நடத்தப்பட்டு வரவேண்டுமென்று ஜில்லாகோர்ட்டில் வழக்கிடலாம். (6 பம். 202 ; 21 பம். 556. (சீவில் புரொஸீஜர் கோடு 92, 93-வது பிரிவையும் பார்க்க.) வழக்கமாய் நடந்துகொண்டிருந்த தர்மங்களை சரிவரநடத்தாமல் தர்மசொத்துக்களை யபகரித்து வருகிற தர்மகர்த்தாக்களை நீக்கவும், நஷ்டங்களை அவரிடமிருந்து வசூல்செய்து வேறொருவனை நியமிக்கவும் தாவாசெய்யலாம். (22 ம. 223 ; 17 அல. 227 ; 10 ம. 376 ; 31 பு 212.)

284. தர்மசோத்துக்களின் விநியோகம்—ஹிந்துதர்மசாஸ்திரப்படி எவரும் தர்மசொத்துக்களை பந்தகபராதீனம் செய்யக்கூடாது. ஆனால் அப்படிப்பட்ட சொத்தை நிர்வகிக்கிற தர்மகர்த்தாக்கள், அந்ததர்மத்தின் நன்மை அல்லது விருத்தியின் பொருட்டு அதன் சொத்துக்களை குத்தகை, அடமானம், விற்பனை முதலிய பராதீனங்களை செய்யலாம். (44 இ. அ. 147; 13 மு. இ. அ. 270; 38 மத 356; 6 மு. இ. அ. 393.) அப்படி தர்மசொத்தை கிரயத்துக்கு வாங்கியவனே, உண்மையில் சொத்தை விநியோகப்படுத்தவேண்டிய அவசியம் இருந்ததென்றும், சரியானகிரயம் செலுத்தப்பட்டதென்றும், ருஜு செய்ய வேண்டும். நிரந்தரகுத்தகை ஏற்பட்டு வெகுகாலமாய்விட்டால் அதன் பிறகு அதை ஆட்சேபிக்கமுடியாது. (49 இ. அ. 54.) தர்மகர்த்தாக்களின் பேரில் ஏற்பட்ட டிக்ரிக்கும், அவர்களால் செய்யப்பட்ட இராஜிநாமாக்களுக்கும், தர்மசோத்துக்கள் கட்டுப்படும். (29 மத. 553.)

285. தர்மகர்த்தாவை உயில் அல்லது தர்மசாசனப்படியாவது வழக்கத்தின்படியாவது நேமிப்பது.—(1) ஒரு டிரஸ்டி இறந்துபோனல் அடுத்து வரவேண்டியடிரஸ்டியின் நியமனமானது தர்மத்தைப்பற்றிய

சாசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஏற்பாட்டின்படி செய்யப்படவேண்டும். தர்மசாசனத்தில் அப்படிப்பட்ட ஏற்பாடு யாதொன்றுமில்லாமலிருந்தால் அத்தர்மபரிபாலன விஷயமாய் நடந்துவரும் வழக்கத்தை யனுசரித்து புது டிரஸ்டி நியமிக்கப்படவேண்டும். (10 இ. அ. 32; 9 கல். 766.) யாதொரு வழக்கமுமில்லாமலிருந்தால் இறந்துபோன டிரஸ்டியினுடைய அதிகாரம் அவனுடைய வார்சைச்சேரும். (7 மது. 499; 17 கல். 3; 16 இ. அ. 137; 23 மது. 271; 27 இ. அ. 69; 25 கல். 112.)

(2) தர்மபரிபாலனத்துக்காக நியமிக்கப்பட்ட ஒரு டிரஸ்டி அல்லது தர்மகர்த்தா இறந்தாவது வேலையிலிருந்து நீக்கப்பட்டாவது போனதின்மேரில் புது டிரஸ்டி அல்லது தர்மகர்த்தா ஏற்படாமல் அவ்வுத்தியோகமானது காலியாயிருந்தால் அத்தருமத்தில் அக்கரையுள்ள இரண்டு அல்லது மேற்பட்ட அபிமானிகள் ஜில்லாகலெக்டர் அல்லது அட்வோகேட் ஜெனரலுடைய முன்னுடி அனுமதி பெற்றுக்கொண்டு தகுந்த ஒரு டிரஸ்டி அல்லது தர்மகர்த்தா நியமனமாகவேண்டுமென்று ஜில்லா கோர்ட்டில் வழக்கிடலாம். (14 மது. 56.)

(3) டிரஸ்டி அல்லது தர்மகர்த்தா தர்மவிசாரணையை சரியாய் நடத்தி வாராவிட்டாலும் அல்லது அயோக்கியமாய் நடந்துகொண்டாலும். அவன் தன் உத்தியோகத்தினின்றும் நீக்கப்படுவான். (6 கல் 11; 20 கல். 397; 24 கல். 418; 21 அல. 200; 22 மது. 481.)

286. மடத்துசொத்து மடாதிபதியின் பரிபாலனத்திலடங்கியிருப்பது.—ஒரு மடத்துக்குச் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் மடாதிபதியைச் சேர்ந்ததாயிருக்கிறது. அச்சொத்துக்களில் மடாதிபதிக்குள்ள அதிகாரமானது அவிபக்த குடும்ப மானேஜருடைய அதிகாரத்தை ஒத்திருக்கிறது. மடத்தின் பொருட்டாயுள்ள சகல வரவுசெலவு விஷயங்களிலும் மடாதிபதியானவர் பூர்ண அதிகாரமுள்ளவராக இருக்கிறார். மேலும் மடத்துகுறிய சொத்தின் வரும்படிகள் முழுவதிலும் அவருக்குப் பூர்ண அதிகாரமிருக்கிறது. (2 மது. 175; 16 மது. 490; 20 இ. அ. 150; 18 மது. 359; 27 மது. 435.)

287. புதுமடாதிபதியை நியமிப்பது.—ஒரு மடாதிபதியானவர் காலஞ்சென்றுபோனால் அவருக்குப்பின் வரவேண்டிய புதுமடாதிபதியின் நியமனத்தைப்பற்றி அந்தந்த மடங்களில் ஏற்பட்டுவரும் வழ

க்கங்களே அந்தந்த மடங்களின் விதியாகும். மடாதிபதிகள் தங்களுக்கடுத்தாப்போல் வரவேண்டிய மடாதிபதியை தங்கள்காலஞ்செல்லுவதற்கு முந்தியே நியமித்து வைத்துக்கொள்ளுவது அநேகமடங்களின் வழக்கமாக இருக்கிறது. அந்த அதிகாரத்தை மற்றொருவருக்கும் கொடுக்ககூடாது. (11 பம். 514; 27 மத. 435; 20 இ. அ. 150) மடாதிபதிகளை கோர்ட்டில் ஆஜராகும்படி செய்யலாம். (31. ம. 60.)

288. விதவைசொத்தை தர்மத்துக்கு விடுவது.—(1) சொத்துக்களில் பூர்ணசுதந்திரமில்லாத விதவைகளுங்கூட புருஷனிடமிருந்து வார்சுபாத்தியப்படி யடைந்தசொத்தில் சொல்பபாகத்தை தர்மங்களின்பொருட்டு செலவிடலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(2) பூர்ணசுதந்திரத்தோடு பாத்தியப்பட்டதாயிருக்கிற ஒரு சொத்தை ஸ்திரீயானவள் தன்னிஷ்டப்படி தர்மவிஷயத்துக்காகவும் விநியோகம்செய்துவிட அதிகாரமுள்ளவளாக இருக்கிறாள். (2 மது. 333.)

(3) இந்துலாப்படிக்கு தர்மவிசாரணை செய்யும் அதிகாரத்தை ஸ்திரீகள் சாதாரணமாய் பெறத்தக்கவர்களல்ல. ஆகிலும் அவ்வதிகாரத்வத ஸ்திரீகளும் அடையும் வழக்கமுண்டென்று எந்தகேசிலாவது ரூபிக்கப்பட்டால் அப்போது அந்தகேசில் ஸ்திரீகளுக்கும் அப்பாத்தியம் ஏற்படும். (9 மூ. இ. அ. 446; 9 கல் 796 ; 41 மத 886.)

288. தேவாலயத்துக்கு தர்மஞ்செய்யும்போது விக்கிரகம் பிரதிஷ்டையா யிருக்கவேண்டியதில்லை.—தேவாலயத்தின் பொருட்டு ஒரு சொத்தை தானம் செய்வதாயிருந்தால் அத்தேவாலயத்துக்குறிய சிலை அல்லது விக்கிரகம் தான காலத்திலாவது அதற்கு முந்தியாவது பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கவேண்டு மென்பதில்லை. பிற்பாடு பிரதிஷ்டைசெய்யப்படப்போகிற ஒரு தேவாலயத்தின் பொருட்டு செய்யப்படும் தானம் செல்லுமென்று இப்பொழுது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. உயில் மூலமாக சொத்து கொடுக்கப்பட்டாலும் உயில் செய்தவனுடைய மரணகாலத்தில் அத்தேவாலயத்துக்குறிய விக்கிரகம் பிரதிஷ்டையா யிருக்கவேண்டியதில்லை. ஆனால், குறிப்பிட்டு ஒரு விக்கிரகம்செய்து பிரதிஷ்டைசெய்யப்பட வேண்டுமென்று குறிப்பிடலாம். இருக்கப்பட்ட விக்கிரகம் அழிந்துபோனாலும் கூடவேறு விக்கிரகம் செய்து தர்மத்தை நடத்தவேண்டும். (41 கல். 57; 33 அல. 793; 46 கல். 951.)

289. நிரந்தரமாய் சொத்தைவிடுவது.—தர்மகாரியங்களுக்கு சாசுவதமாக சொத்தைக்கொடுத்தால் செல்லும். (4 க. ஐ. 103; 9 க. ஐ. 377; 15 க. ஐ. 176.) தர்மகாரியங்களுக்காக சொத்தைவிட்டாலும் தகுந்தகாரிய நிர்வாக ஏற்பாடு செய்யாமல் அந்தச்சொத்தை தாங்களே வார்சு பாத்தியமாக அனுபவித்தால் அந்த சொத்து வார்சுதாரர்களுக்கே பாத்தியமாய்விடும். (4 ம. 200.)

290. தர்மபரிபாலர்களை ஏற்படுத்துவது.—தர்ம காரியங்களைப் பார்த்துவருவதற்காக தர்ம கர்த்தாக்களை நேமித்து காரியத்தை நடத்தலாம். அல்லது தானங்கொடுத்தவன் தானே நேரில் தர்மகாரியங்களை நடத்தலாம். ஒருவேளை தர்மஞ்செய்தவனே தர்மத்தை நிறுத்திவிட்டால் அவனைக் கட்டாயப்படுத்தி நடத்தும்படிசெய்ய சட்டமில்லை. (15 க. ஐ. 176, 167; 3 க 324; 11 அ. 22, 37.) ஆனால், தர்மகாரியங்களுக்காக சிலசொத்தை பிரத்தியேகமாய் ஏற்படுத்தி, அவைகளைக் கிரமமாய் நடத்த தர்மகர்த்தாக்களை ஏற்படுத்தாமல் தானாவது தன் வார்சுகளாவது பார்த்துவந்தால், அப்படிப்பட்ட தர்மகாரியத்தை நிறுத்தவழியில்லை. (4 க. 56; 12 ம. 391; 5 பம். ஸ. தீ. 268; 15 க. ஐ. 178; 10 ஸ. 299; 13 ஸ. 200; 8 மூ. இ. அ. 66; 17 க. 498.)

291. தர்மகர்த்தாக்களின் அதிகாரம்.—தேவஸ்தானம் முதலிய தர்மங்களை நடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒருவன் தன் சுயநன்மைக்காக சொத்துக்களைத்தொடாமல் தர்மவிஷயமாய் எவ்வளவு அதிகாரங்களையும் செலுத்தலாம். வீண்செலவுகளாவது, துர்விநியோகமாவது செய்யக்கூடாது. மைனர்களின் சொத்துவிஷயத்தில் கார்டியனுக்கு எவ்வளவுபாத்தியமோ தர்மகர்த்தாக்களுக்கு தர்ம சொத்தில் அவ்வளவுபாத்தியந்தானுண்டு. (14 க. ஐ. 450; 2 க. 341; 15 க. 339; 15 பம். 625; 13 மூ. இ. அ. 270; 20 ஸ. 471; 21 ஸ. 41; 13 ம. 402.) தர்மசொத்துக்களை நீண்டகாலம் குத்தகைக்குவிட டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரிடம் அனுமதி பெறவேண்டும். அதிக வரும்படியை உத்தேசித்தும் நீண்டகாலத்துக்கு தர்மசொத்துக்களை குத்தகைக்குவிடலாம். (31 கல் 21.)

292. தர்ம பரிபாலனர்மீது தாவா.—1863-ஞூத்து 23-வது ஆக்டாகிய தேவஸ்தானம் ஆக்ட் 23-வது பிரிவுப்படி யாதொரு தர்ம

கர்த்தா கெட்ட நடவடிக்கையுள்ளவனுயிருந்தாலும் அயோக்கியமான காரியங்களைச் செய்கிறவனுயிருந்தாலும் அவனைத்தள்ளிவிட தாவா செய்யலாம். (6 க. 11) தேவஸ்தான முதலிய தர்மகாரியங்களுக்கு விடப்பட்ட சொத்தை துர்வினியோகஞ்செய்து தர்மகாரியங்களைச் சரிவரநடத்தாமல் அக்கிரமஞ்செய்தாலும் அப்படிப்பட்ட தர்மகர்த்தாவை நீக்கக்கோர்ட்டில் அந்த தேவஸ்தான முதலிய தர்மவிஷயமாய் சம்பந்தப்பட்டவர் பிராது செய்யலாம். (26 ஸ. 1; 4 மூ.இ. அ. 190; 8 க 788; 3 பம். 27. 6 பம். 122; ஸீவில்புரோசிஜர் கோட் 92, 93 பிரிவுகள்.) கோவில்ஸ்தானிகமுதலிய பரம்பரையாயுள்ள ஒருஉத்தியோகத்தைபிரதிவாதி ஏற்றுக்கொண்டது முதலாகவும், தர்மசொத்து துர்வினியோகஞ் செய்யப்பட்டு கிரயதாரன் சொத்தின் ஸ்வாதீனமடைந்த தேதியிலிருந்தும் பனிரெண்டு வருஷத்துக்குள் அவைகளை ரத்து செய்ய தாவாசெய்யவேண்டும்.

கோவில் ட்ரஸ்டிகள் தர்மசொத்தை வசப்படுத்த மூன்றுவது நபர்பேரில் தாவாசெய்தால், பக்தர்களும் வாதிகளாகச்சேர பாத்தியமுண்டு. (29 ம. 106.)

10-வது ஜீவனும்சம்.

293. ஜீவனும்சமென்பது.—பொதுக்குடும்பத்தில் சாஸ்திரப்படி பாகங்கிடைக்காதவர்களாயிருக்கிறவர்களுக்கு ஜீவனும்சம் அதாவது போஜனம் வஸ்திரம், கல்யாணம், சடங்கு முதலியவைகளுக்கு வேண்டிய திரவியங்கிடைக்கும்.

294. சேர்ந்தகுடும்பத்தில் ஜீவனும்சத்துக்கு யோக்கியமுள்ளவர்கள்.—பொதுக்குடும்பங்களின் குடும்பத்தின் எஜமானன் மற்றபாகஸ்தர்களுக்கும், அவர்களின் பெண்ஜாதி குழந்தைகளுக்கும் அன்னபானுதிவஸ்திரம் கல்யாணம் முதலானவைகளுக்காக வேண்டிய செலவுகளைக்கொடுக்கவேண்டும். மேலும் குஷ்டரோகி பிறவிக்குருடு செவிடு பைத்தியம் ஊமைமுதலான வியாதியுள்ளவர்களுக்கும் இவர்களால் எடுத்துக்கொண்ட தத்துபிள்ளைகளுக்கும் பாகஸ்தர்களாயில்லாத வித

வைகள், குழந்தைகள், விவாகமாகாத சகோதரிகள் முதலானவர்களு க்கும் பொதுக்குடும்பத்தில் ஜீவனும்ச பாத்தியமுண்டு (8 ம. 325. 23 மத 512)

295. பிரிக்கக்கூடாத ஜமீனில் ஜீவனும்சபாத்தியமுள்ளவர்கள்.—பிரிக்கக்கூடாதஜமீனில் ஜேஷ்டசகோதரன் ஜமீன்தாரனுகி குடும்பத்தைச்சேர்ந்த தம்பிகள் சிற்றப்பன் முதலிய மற்றதாயாதிகள் அவர்கள் பத்தினிகள் குழந்தைகள் முதலியவர்களுக்கு ஜமீன்சொத்தி லிருந்து ஜீவனும்சம் கொடுக்கவேண்டும் (7 மூ. இ. அ. 18; 9 மூ. இ. அ. 66; 12 மு. இ. அ. 203; 24 மத 147; 2 பம் 346.)

296. விதவைகளுக்கு ஜீவனும்சம்.—பொதுக் குடும்பத்தில் ஒருவனிறந்தால் அவன்பெண்சாதி மைனராயிருந்தாலும் பெரியவளாயிருந்தாலும் அவளுக்குக்குடும்பத்தலைவன் ஜீவனும்சம்கொடுக்கவேண்டும். ஜீவனும்சம்வாங்கிக்கொண்ட விதவைதனியாக இருக்கலாம். (12 க.ஐ. 238; 5 ம.ஐ. 150; 3 பம். 372. 6 ம. 85; 14 பம். 490; 7 பம். 198.) விதவைதான் சுயார்ஜிதமாய் சொத்துசேகரித்து தன் ஜீவனத்திற்கு வைத்திருந்தாலும்கூட, தன் புருஷன் குடும்பத்திலிருந்து ஜீவனும்சம் பெறபாத்தியமுண்டு (38 மத. 153.) ஆனல், பொதுசொத்தின் வரும்படி மிகச்சொல்பமாய் பிரிந்துக்கொடுக்கக்கூடாத ஸ்திதியிலிருந்தாலும் புருஷன் இறந்துபோகும்போது ஜீவனும்சத்துக்காகச்சொத்து ஏற்படுத்திப் பொதுக்குடும்பத்திலேயே வசிக்கவேண்டுமென்று உயில் செய்துவிட்டுப் போயிருந்தாலும், அப்படிப்பட்ட ஸ்திதியில் விதவை குடும்பத்தைவிட்டுத் தனியாகப்போயிருந்தால் ஜீவனும்சங் கிடைக்காது. (3 பம். 44; 4 பம். 261; 1869-ம்வரு ம.தீ. 59; 1859-ம்வரு பம். தீ. 457; எப். மேக். 62; 12 க. ஐ. 247; 13 பம். 218; 15 பம். 236) அவளுக்காக பொதுக்குடும்பத்தில் ஏற்படுத்திவிட்ட இடத்தில்வாசஞ் செய்யவேண்டியதே தவிர இன்ன இடம் அல்லது இன்ன வீடுதான் வேண்டுமென்று கேட்க விதவைக்கு பாத்தியமில்லை. (4. அ. ஐ. 103.)

297. விபசாரியான விதவைக்கு ஜீவனும்சமில்லை.—விதவைகள் விபசாரியாயிருந்தாலும் ஜீவனும்சங்கிடையாது. (1 ம. ஐ. 373; 2 ம. ஐ. 337; 5 ம. ஐ. 160; 4 ம. ஐ. 185; 13 க. ஐ 72; 9 பம். ஐ. 108.) கோர்ட்டு மூலியமாய் ஜீவனும்சம் கிடைத்தபிறகு விபசாரியாயி

ருந்தாலும் அந்த ஜீவனும்சத்தீர்ப்பை ரத்துசெய்யலாம், நிறைவேற்றக் கூடாதென்று ஆட்சேபனைசெய்யலாம். (9 பம். 108; 7 பம். 84; 5 க. 776; 7 இ.அ. 151; 17 ம. 392; 19 ம. 6; 15 அல 382; 26 பம். 707.) ஆனால், மிக அல்பமான ஜீவனும்சத்தைக் கோர்ட்டார் ரத்து செய்யமாட்டார்கள் (1 பம். 559; 17 க. 674.) ஆனால் உயில்மூலமாய் ஜீவனும்சம் ஏற்படுத்தப்பட்டு பிறகு விபசாரியானால், அப்போது ஜீவனும்சம் கிடைக்கக்கூடாதென்று நிபந்தனை இருந்தாலன்றி மற்றப் படி ஜீவனும்சம் கிடைக்கும். (34 பம் 278.)

298. மைத்துனன்மாமனர் இவர்களை ஜீவனும்சம்கேட்பது.—பிதுரார்ஜித சொத்தாவது, சுவயார்ஜித சொத்தாவது கொஞ்சங்கூட இல்லாமலிருந்து இறந்துபோனவனுடைய விதவைக்கும் பிரித்துக் கொண்டு தனியாயிருந்தவனுடைய விதவைக்கும் ஜீவனும்சம்கொடுக்க மைத்துனன் மாமனர் முதலியவர்கள் கட்டுப்பட்டவர்களல்ல. (11 ம. 191; 9 பம். ஐ. 283; 24 ஸ. 274; 6 க. 36; 2 பம். 573, 632; 7 பம். 127; 8 பம். 15; 11 பம். 199; 17 க. 373; 1 அல. 170; 37 மத. 396.)

299. மாமனர் சொத்தில் ஜீவனும்சம்.—ஆனல், அவளுடைய மாமனர் சுவயார்ஜித சொத்திலிருந்து அவருயிரோடிருக்கும்போது விதவைக்கு ஜீவனும்சங்கேட்க பாத்தியமில்லாமற் போனபோதிலும், அவரிறந்தபிறகு அவருடைய மற்றப்பிள்ளைகள் அவர் சொத்தை பாகஞ்செய்து கொள்வதுபோல இவளும் ஜீவனும்சம்கேட்க பாத்தியமுண்டு. (11 அ. 294; 17 க. 373; 22 ம. 325; 22 க. 410; 23 பம். 608.)

300. பெற்றோர்கள் குழந்தைகள் இவர்களைப் பாதுகாப்பது.—சொத்திருந்தாலும் இல்லாவிட்டாலும் விருத்தாப்பியமான பெற்றோர்களையும், பெண்சாதியையும், குழந்தைகளான பெண்களையும் பிள்ளைகளையும் காப்பாற்ற ஒவ்வொருவனுங் கடமைப்பட்டிருக்கிறான். அப்படி காப்பாற்றாவிடில் பெற்றோரும் பெண்டாட்டியும் பிராதுசெய்து ஜீவனும்சம்பெறலாம். (2 க. ஐ. 15; 1855-ம் ௵ ம. தீ. 238; 11 ம. 89; 8 ம. 361; 2 பம். 597; 23 பம். 608.) தக்க வயது வந்த பிள்ளைகளைத் தகப்பன் இரட்சிக்கக் கடமைப்பட்டவனல்ல. ஆனால், பிதுரார்ஜித சொத்தில் அவர்களுக்கு பாத்தியமிருப்பதால் பிள்ளைகளு

டைய அவசியமான செலவுகளைக் குடும்பத்தின் சக்திக்குத்தக்கபடி கொடுக்கவேண்டும். விவாகம் வரையில் பெண்களைத் தகப்பனும், அதற்குப்பிறகு புருஷனும் ரட்சிக்கவேண்டும். ஆனால், ரஜஸ்வலை யாகும் வரையில் தாய்வீட்டிலிருப்பது சில விடங்களில் வழக்கமாயி ருப்பதால் அந்த வழக்கப்படி பெற்றோர் வீட்டிலிருக்கிற பெண்சா திக்கு புருஷன் ஜீவனும்சம் கொடுக்கவேண்டும். (858-ம்ஷ ப. தீ. 154.) பிரிக்கக்கூடாத ஜமீன்களில் குடும்ப எஜமானனைத் தவிற மற்ற வர்களுக்கு ஜீவனும்ச பாத்தியமட்டுமுண்டு. (12 பம். ஐ. 94; 2 பம். 346; 22 மு இ அ. 203, 495).

301. சகோதரிகளை யிரட்சிப்பது.—( ) பெண்களைக் காப்பாற்ற வும் விவாகஞ்செய்து கொடுக்கவும் கிரகப்பிரவேசம், சாந்தி முதலிய வைகளுக்குச் செய்யவேண்டிய செலவுகளையும் குடும்பத்திலிருந்து கொடுக்கவேண்டும். (23 ம. 5 2; 26 ம. 497; 35 மத. 728; 38 மத. 236). சாந்திக்குப்பிறகு புருஷனும் புருஷன் குடும்பத்தாரும் பெண் ணை ரட்சிக்கவேண்டும். (28 க. 279; 23 பம். 291.) பிறகு புருஷன் வீட்டில் ஜீவனத்துக்கு வழியில்லாமலிருந்தால் சகோதரிகளைக்காப்பா ற்றவேண்டியது சகோதரனுடைய கடமையென்று தர்மசாஸ்திரங்களி லிருந்தபோதிலும், பம்பாய் ஐக்கோர்ட்டார் சகோதரன் கடமைப்பட் டவனல்ல என்றும், பிதுரார்ஜித சொத்திருந்தால் அப்படிப்பட்டவன் சகோதரிகளைக் காப்பாற்றக் கடமைப்பட்டவனென்று கல்கத்தா ஐக் கோர்ட்டாரும் தீர்மானித்திருக்கிறார்கள். (3 பம். 29 ; 28 கல். 278.)

(2) சகோதரர்கள் பாகஞ்செய்துகொண்டு தனியாய் சம்சாரஞ் செய்தாலும் தாய்க்கு ஜீவனத்துக்குவேண்டியதை வைப்பதுடன், சகோதரியினுடைய விவாகாதி சுபசோபனங்களுக்கு வேண்டியசெல வையும் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

302. ஸபத்னி மாதாவை இரட்சிப்பது.—பிதுரார்ஜித சொத் தில்லாதவன் ஸபத்னீ மாதாவையும் அவளுடைய குழந்தைகளையும் ரட்சிக்கக்கடமைப்பட்டவனல்ல. (9 பம் 279; 13 கல் 336.) மனுதர்ம சாஸ்திரத்தில் ஸபத்னீ மாதாவையும், மாமியாரையும் சொந்தத்தாயா ருக்குச் சமானமாகக் காப்பற்றச்சொல்லி யிருக்கிறது. (2 டப்ளியூ மெக். 113; 118; வெ. பு 234, 235, 437; 5 ம. ஐ. கோ. 377.)

303. வைப்பாட்டிக்கு ஜீவனாம்சம்.—விபசாரியாயில்லாத ஒருவளை வெகுகாலமாக ஒருவனே வைப்பாக வைத்துக்கொண்டிருந்தாலும் அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவனல்ல. (3 மத. 28) ஆனால் அவள் சாகிறவரைக்கும் அவன் அவளை வைத்திருந்தால் அவனிறந்த பிறகு அவன் சொத்தையடைந்தவர்கள் அவ்வைப்பாட்டிக்கு ஜீவனாம்சம் கொடுத்து ரக்ஷிக்கவேண்டும். (26 பம். 63;) ஆனால், விபசாரத்தொழிலை அவனிறந்தபிறகும் ஒழித்துவிட்டவளாயிருக்கவேண்டும். அவ்வைப்பாட்டியிடமாகப் பிறந்த பிள்ளையையும் அவன் காப்பாற்றவேண்டும். ஆனால் அவன் ஹிந்து மதஸ்தனாயும், வேறு கிறிஸ்து முதலிய அன்னிய மதஸ்தனாயிருக்கக் கூடாது. (27 ம. 13; 12 பம். ஐ 229; 8 ம. ஐ. 144; 2 ம. ஐ 203; 12 மூ. இ. அ. 203, 32 க. ஐ. 479; 7 மூ இ. அ. 18; 1 பம். 97; 8 ம. 325; 6 அ. 329; 12 பம். 26.)

304. பெண்சாதியை இரட்சிப்பது.—விவாகத்துக்குப் பிறகு பெண்டாட்டியை யிரட்சிப்பது புருஷன் கடமை. அவள் பெரியவளாகிற வரையில் தகப்பன் வீட்டிலிருந்தாலும் அவளுக்குப்புருஷன் ஜீவனாம்சங் கொடுக்கவேண்டும். (1858-ம் வரு ம. தீ. 154.) ருதுவானபின் அவள் புருஷனுடன்சேர்ந்து ஸம்ஸாரஞ்செய்யவேண்டும். தகுந்தகாரணமில்லாமல் புருஷன் வீட்டைவிட்டு நீங்கியிருந்தாலும், புருஷன் வைதானென்றாவது, அடித்தானென்றாவது, புனர் விவாகஞ் செய்துகொண்டானென்றாவது, தாசியை வைத்துக்கொண்டானென்றாவது அல்லது தன்னிடம் அன்பாய் இல்லை என்றாவது, வேறு மற்றகாரணங்களினாலாவது பெண்சாதி புருஷன் அனுமதியின்றி தனியாய் வீட்டைவிட்டிருந்தால் ஜீவனாம்சம் கிடைக்காது. (2 பம். 634; 4 அ. 374; 1 ம. ஐ. 375; 45 மத. 812.) ஆனால், வீட்டிலேயே தாசியை வைத்துகொண்டிருந்தால், அப்பொழுது பெண்சாதி அவன் வீட்டிலிருந்து தனியாய்ப்போனால் ஜீவனாம்சம் கிடைக்கும். (14 ஸ. 451; 32 கல். 234.) விபசாரியாயிருந்தாலும் ஜீவனாம்சங் கொடுக்கப்படமாட்டாது. (1 ம. ஐ. 372.) ஆனால், பிறகு விபசாரத்தொழிலை விட்டவளுக்குப் புருஷன் ஏதாவது சொல்பம் கஞ்சிக்குக் கொடுக்கவேண்டுமென்று தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. (1 பம். ஐ. 560; 7 பம். 84; 17 க. 679; 17 மத. 392; 39 மத. 658.) பெண்ஜாதி ஜாதிப்ரஷ்டையானாலுங்கூட ஜீவ

னும்ச பாத்தியம் போகமாட்டாது. (4 மத. 243; 1850-ம் ஞ 21-வது ஆக்ட்.) புருஷன் மதப்பிரஷ்டனைப் போனால் தன் ஹிந்து பெண்சாதிக்கு ஜீவனும்சம்கொடுக்க கடமைப்பட்டவன். (6 அல. 617.)

305. ஜீவனும்சப்பிராது.—(1) பெண்சாதிகளையும் குழந்தைகளையும் காப்பாற்றுமல் விட்டிருந்தால் அப்படியிருப்பவன்பேரில் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டார் அவர்களிடம் மனுக்கொடுத்து அவரவர்கள் ஸ்திதிக்குத் தகுந்தபடி மாதம் 1-க்கு ரூபா 50-க்கு மேற்படாமல் ஜீவனும்சம் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், புருஷனிடம் காரணமன்னியில் இருக்கமாட்டேனென்ற பெண்சாதிக்கு ஜீவனும்சங் கிடைக்காது. மாஜிஸ்ட்ரேட்டார் உத்திரவ என்னமாயிருந்தபோதிலும் சீவில் கோர்ட்டில் தாவாசெய்து ஜீவனும்சத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். மேலேகண்ட தாவாவுக்குப் பிறகு வியபசாரியாயிருப்பவளுடைய ஜீவனும்சத்தை ரத்துசெய்யலாம். (கிரிமினல் புரோசீஜர் கோட் 488, 489 பிரிவுகள்.) சொத்துள்ள விதந்துகள் ஜீவனும்சபிராது செய்யக்கூடாது. (33 பம். 50.)

(2) வெகு நாளாக வைப்பாக வைத்திருந்த தாஸீகள்கூட மாஜிஸ்ட்ரேட்டாரிடம் மனுக்கொடுத்து ஜீவனும்சம் அடையலாம். ஆனால், அவள் வியபசாரியாயிருக்கக்கூடாது.

306. சொத்தை ஜீவனும்சத்துக்கு வைக்காமல் தானஞ்செய்வது.—புருஷன் பெண்சாதியின் ஜீவனும்சத்துக்குக்கூட வழியில்லா எல்லாசொத்தையும் தானஞ்செய்தாலும், உயில்செய்தாலும் வேறே விதமாய் பராதீனஞ்செய்தாலும் அவளுடைய ஜீவனும்ச பாத்தியத்துக்கு உட்பட்டே அந்தசொத்துப் பராதீனமாகும், (8. க. ஐ. 225; 8 மூ. இ. அ. 66; 8 பம். 98; 12 ம. 267; 10 க. 638; எப். மேக். 9; 2 அ. 315; 5 பம். 991; 18 பம். 452.)

307. குடும்பசொத்து விஷயமாய் ஜீவனும்சம்.—(1) ஜீவனும்சம் குடும்பசொத்தைப் பொருத்ததாயிருந்தாலும் உடன்படிக்கை, தீர்ப்பு இதுகளினால் அந்தபாத்தியம் குடும்பசொத்தின்பேரில் ஏற்படுத்தாவிட்டால், அதைக்கிரயம் ஒத்திமுதலிய மாதிரியாக வினியோகஞ் செய்தாலும் அப்படிப்பட்டசொத்தைப் பெற்றவர்கள் ஜீவனும்சங் கொடுக்க பாத்தியப்பட்டவர்களல்ல. (8. க. ஐ. 225; 1 க. 365; 12

பம். ஐ. 69; 2 பம். 494, 524; 12 ம. 260; 11 க. 102: 4 அ. 296) மேலே சொன்னபடி உடன்படிக்கை தீர்ப்பு முதலியவைகளால் குடும்பத்தின்பேரில் ஜீவனும்சபாத்தியம் ஏற்பட்டிருந்தால் அந்தசொத்து ஜீவனும்சத்துக்குக் கட்டுப்பட்டதாயிருக்கும். (6 ஸ. 253; 2 அ. 162; 4 பம். ஐ. 73; 43 மத 801.)

(2) ஜீவனும்சத்துக்குமுந்தி குடும்பக்கடன்களைத் தீர்ப்பது அவசியமாதலால் அவைகளுக்காக விற்கப்பட்ட குடும்பசொத்து ஜீவனும்சத்துக்குக் கட்டுப்படமாட்டாது. (1 கல் 470; 5 அ. 367; 11 க. 102; 2 பம். 494; 4 ம. 126; 12 ம. 260; 27 ம. 45.)

308. ஜீவனும்சத்தை மோசஞ்செய்ய ஏற்பாடுசெய்வது.—ஜீவனும்சத்தைக் கொடுக்காமல் மோசஞ்செய்ய நினைத்து குடும்பசொத்தை விற்றாலும் தானமாகக்கொடுத்தாலும் அதுதெரிந்திருந்து அந்த சொத்தை வாங்குகிறவன் ஜீவனும்சத்தைக் கொடுக்கும்படியாகும். தெரியாமல் விற்பனையில்வாங்கினால் கொடுக்கவேண்டியதில்லை. (2 பம். 494; 24 அல. 160; 27 மத 45; 11 கல் 102; 3. லாகூ. 55; 1882-ஆத்து 4-வது டிரான்ஸ்பர் ஆப்பிராபர்டி ஆக்ட் 39-வது பிரிவு.)

309. ஜீவனும்ச விதவைக்கு இடங்கொடுப்பது.—(1) இறந்து போன பாகஸ்தனுடைய விதவைக்கு ஜீவனும்சம் கொடுப்பதுபோலவே குடியிருக்க இடமுங்கொடுக்கவேண்டியது. குடும்பப்பொதுக் கடனுக்கல்லாமல் வேறு கடன்களுக்கு வீடு விற்கப்பட்டாலும் ஏலம்போடப்பட்டாலும் அதை வாங்கினவன் அதில்குடியிருக்கும் விதவையை வெளியே போகச்சொல்ல அதிகாரமில்லை. (12 பம். 101; 1 அ. 268; 3 அ: 353; 6 ம. 230; 12 ம. 160; 7 பம். 282.)

(2) ஆனால் குடும்பார்த்தமான கடன்களுக்காவது அவைகளின்பேரில் ஏற்பட்ட டிக்ரிகளுக்காவது குடும்ப வீடானது பராதீனப்பட்டுப்போனால் விதவையானவள் குடியிருப்பு பாத்தியத்தை கொண்டாட முடியாது. (12 மது. 260; 17 பம். 398.)

(3) விதவையினுடைய புருஷனால் வாங்கப்பட்டிருந்த கடன்களுக்காக குடும்ப வீடானது பராதீனப்பட்டுப்போனால் அக்கடன்கள் எவ்விதமாய் ஏற்பட்டனவாக இருந்தாலும் விதவை அப்பராதீனங்களுக்கு முற்றிலும் கட்டுப்பட்டவளாகிறாள்.

(4) ஆனால் மகனால் வாங்கப்பட்ட குடும்பார்த்தமில்லாத கடன்களுக்கு தாயார் கட்டுப்படவேண்டிய அவசியமில்லை. குடும்பார்த்தமான செலவுகளுக்கல்லாமல் மகனானவன் தன்சொந்தத்தில் கடன்பட்ட அக்கடன்களின் நிமித்தம் குடும்ப வீடு கிரயம்செய்யப்பட்டால், கிரயம் பெற்றவன் கடன்பட்டவனுடைய தாயாரை அவ்வீட்டிலிருந்தும் அப்புறப்படுத்த முடியாது. (6 மத. 130: 7 பம். 23.)

310. சிறுவயதில்விதவை பெற்றோர் வீட்டிலிருப்பது.—ஜீவனாம்சபாத்தியத்தையுடைய ஒருவிதவை தன்புருஷன்வீட்டிலேயே அக்குடும்பத்தாரோடு சேர்ந்து வசிக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை. பால்யத்தில் புருஷனையிழக்கிற இளம்விதவைகளுக்கு புருஷன் வீட்டிலிருப்பதைவிட பிறந்த வீட்டிலிருப்பதே மிக்க சௌகரியமாக இருக்கும். புருஷன் இறந்தபின் அவனுடைய பாகஸ்தர்களுடன் வசிப்பது சங்கோஜமாயும் நிர்பந்தமாயுமிருக்கும். ஆனதுபற்றி அவ்விதவைகள் புருஷன் வீட்டிலேயே வசிக்காமல் பெற்றோர் முதலிய வேறு இடங்களில் வசித்தாலும், ஜீவனாம்சம்பெறும் பாத்தியத்தை அவர்கள் அதனால் இழக்கமாட்டார்கள். (29 கல் 557.)

311. விபசாரித்தனத்துக்காக வேறிடத்தில் வசிப்பது.—ஆனால் விபசாரித்தனம் முதலியகெட்ட நடக்கைகளின்பொருட்டு புருஷனின் குடும்ப வீட்டைவிட்டு தன்னிஷ்டம்போல் அன்னிய இடங்களில் குடியிருக்கிற விதவைக்கு யாதொரு ஜீவனாம்சமும் கிடைக்கமாட்டாது. (14 பம். 490.)

312. புருஷனிறந்துபோகும்போது பெண்சாதி தன் வீட்டிலேயே வசிக்கவேண்டுமென்று சொல்லிப்போவது.—மேலும் தன் பெண்சாதியானவள் குடும்பவீட்டில் வசித்தால் மட்டும் ஜீவனாம்சத்தைப் பெறுவாளென்ற நிபந்தனையை ஒருபுருஷன் இறந்துபோவதற்குமுன் உயில் முதலிய சாசனங்களில் ஏற்படுத்திவைத்திருந்தால், அப்போது அவனுடைய விதவை அந்நிபந்தனைப்படி நடக்கவேண்டியவளாகிறாள். அதை மீறி வேறு இடங்களில் குடியிருந்தால் அவளுக்கு யாதொரு ஜீவனாம்சமும் கொடுக்கவேண்டிய நியாயமில்லை. (15 பம். 236.)

313. ஜீவனாம்ச தாவா.—(1) ஜீவனாம்சம் கொடாதவர்கள் மேரில் காலாவதியால் பாதிக்கப்படாத ஜீவனாம்சபாக்கித் தொகையைக்கூட்டிச் சேர்த்து தாவாசெய்து தீர்ப்புப்பெறலாம். (1 பம். ஜ. 194; 2 ம. ஜ.

36; 12 க. ஐ. 238; 3 பம். 44; 5 பம். 99.) அவனுடைய சுவாதீனத்திலிருக்கிற எல்லா அசையாப்பொருளையும் ஜீவனாம்சபாத்தியத்திற்கு உட்படுத்தலாம். தீர்ப்பின் பிறகு அந்த சொத்துக்கள் விற்கப்பட்டாலும் அவைகளின்பேரிலுள்ள ஜீவனாம்சபாத்தியம் போகமாட்டாது. (? பம். 524; 1 க. 365; 12 ம. 285; 10 ம. 283.)

(2) மாதம் அல்லது வருஷம் ஒன்றுக்கு இவ்வளவு தொகைகொடுக்கவேண்டுமென்று ஜீவனாம்சத்துக்கு தாவாசெய்து தீர்ப்புப்பெற்றால் பிறகு அசையாப்பொருளைக் கட்டுப்படுத்துவதற்காகக் கொடுக்கும் தாவாசெல்லாது. (10 ம. 347.)

(3) விதவை ஜீவனாம்சத்திற்கு பிராது செய்யும்போது குழந்தைகளுடைய ஜீவனத்திற்கும் அவர்களுடைய கல்யாணங்களுக்கும் வேண்டிய தொகைகளுக்குஞ் சேர்த்து தாவா செய்யலாம். (6 அ. 243.)

(4) தீர்ப்புப் பெற்றபிறகு ஜீவனாம்சத்தொகை அப்போதைக்கப்போது பாக்கி நின்றால் கோர்ட்டு மூலமாய் வசூல் செய்யலாம்.

314. மருமகள், சகோதரன் பெண்சாதி முதலியவருக்கு ஜீவனாம்சம்.—யாதொரு ஆதரவுமின்றி நிர்க்கதியாய் இருக்கும் பிள்ளைகளுடைய விதவைகளான மருமகள், சகோதரர்களுடைய விதவைகளையும், ஒருவன்தன் சுயார்ஜித சொத்தைக் கொண்டும் சம்ரக்ஷிக்கவேண்டுமென்று வெகு வருஷங்களுக்கு முன் பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருந்தார்கள். ஆனால் அத்தீர்ப்பு சட்டப்படி சரியானதல்லவென்று ஷை கோர்ட்டார் பின்னிட்டு ஆலோசனைசெய்து அதை மாற்றி, பிதுரார்ஜிதமான சொத்திருந்தாலொழிய அப்படிப்பட்ட விதவைகளை ஒருவன் சம்ரக்ஷிக்க சட்டப்படி கடமைப்பட்டவனல்லவென்றே மற்ற ஹைகோர்ட்டுகளுடைய தீர்மானம்போல் தீர்மானித்திருக்கிறார்கள். (2 பம். 573, 632; 7 பம். 127; 8 பம். 15; 11 பம். 199; 37 மத. 396.)

315. சுயார்ஜிதத்தால் மீட்ட பிதுரார்ஜித சொத்தில் ஜீவனாம்சம்.—முன்னோர்களால் செய்யப்பட்ட அடமானம் போக்கியம் முதலான வில்லங்கங்களுக்கு உட்பட்டிருந்த பிதுரார்ஜிதமான சொத்தை ஒருவன் தன் சுயார்ஜிதத்தைக்கொண்டு மீட்டுக்கொண்டிருந்தால் அதுவும் சட்டப்படி பிதுரார்ஜித சொத்தாகவே பாவிக்கப்படுமாகையால்

அப்படிப்பட்ட சொத்தை யடைந்திருக்கும் ஒரு மாமனார் தன் மருமகளுக்கு அதிலிருந்தும் ஜீவனாம்சம் கொடுக்கவேண்டியவனாயிருப்பனென்று மதராஸ் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (5 ம. ஹைகோ. தீ 150.)

316. ஜீவனாம்சங் கொடுக்கவேண்டிய சொத்து.—ஜீவனாம்சம் சம்பத்துக்குத் தக்கபடி கிடைக்கிறது. அதாவது:—ஒருவனிறந்துபோகும்போது அவனுடைய இரண்டு பெண்சாதிகளும் ஆளுக்கொரு பிள்ளையைப் பெற்றிருந்தார்கள்; பிறகு பிள்ளைகள் பாகஞ்செய்து கொண்டார்கள். இந்தஸ்திதியில் அவர்களின் தாய்களுக்கு அவரவருடைய பிள்ளையின் ஆஸ்திக்குத் தக்கபடி ஜீவனாம்சம் கிடைக்குமே யொழிய புருஷன் சொத்தின்பேரில் ஜீவனாம்சம் கணக்கிடக்கூடாது. (16 க 758)

317. சுவயார்ஜித சொத்தில் ஜீவனாம்சம்.—மிதாட்சரப்படி ஒருவன் வைத்துவிட்டுப்போன சுவயார்ஜித சொத்து அவன் விதவையின் ஜீவனாம்சத்துக்குப் போதுமானதாயிருந்தால் அதை வைத்துக்கொண்டு பிதுரார்ஜித சொத்தில் ஜீவனாம்சங்கேட்டால் செல்லாது. (4. அ. ஐ. 63)

318. ஜீவனாம்சத்தொகையை நிஷ்கரிஷைசெய்வது.—(1) ஜீவனாம்சத்துக்கு இவ்வளவு தொகை கொடுப்பதென்று நிச்சயிக்க, அவரவர் போக்கியதை சொத்தின் வரும்படி, குடும்பத்தின் செலவு இன்னும் மற்ற விஷயங்கள் இவைகளையெல்லாம் யோசிக்கவேண்டும். காரணமின்றி தள்ளப்பட்ட குற்றமற்ற பெண்சாதிக்கு புருஷன் சொத்தில் மூன்றிலொருபாகமும், அதுவும் போதாத பட்சத்தில் அதிகமும் கொடுக்கவேண்டுமென்று விவகார மயூகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. (1 பாரோ. 63; 9 பம். ஐ. 283) ஜீவனாம்ச பாத்தியம் புருஷனின் பாகபாத்தியத்துக்குட்பட்டிருப்பதால், அதை யனுசரித்து விதவையின் அந்தஸ்து முதலியதுக்குத் தக்கபடி ஜீவனாம்சம் கொடுக்கவேண்டும். (12 அல. 558; 21 அல. 232; 22 கல். 410; 27 மத. 45.) எவ்விதத்திலும் குடும்பத்தில் அவள் புருஷனுயிரோடிருந்தால் அவனுக்கு சொத்தில் என்ன ஆதாயம் கிடைக்கக்கூடியதோ அதற்கு மேற்படக்கூடாது. (2 பம். 639; 11 பம். 199.) மேலும் அவள்செய்கிற வைதீக சடங்குகளை உத்தேசித்தும் ஜீவனாம்சத்தொகை ஏற்படவேண்டும் (25 அ. 266; 5 இ. அ. 559.)

(2) ஆசையால் ஒருவிதவையின் ஜீவனும்சத்துக்காக வருஷத்துக்கு அல்லது மாதத்துக்கு இவ்வளவென்று ஏற்படுத்தப்படும் தொகையானது அவளுடைய புருஷன் உயிரோடிருந்தால் அவளுக்கு என்ன பாகம் கிடைத்திருக்குமோ அப்பாக சொத்தின் வருஷம் அல்லது மாசவரும்படிக்கு மேற்பட முடியாதென்றும், அவ்விதம் தீர்மானிக்கப்படும் தொகையானது அவளுடைய காலக்ஷேபாதிகளுக்குப் போதாததாயிருந்தாலும் அதற்குமேல், அவளுக்கு யாதொன்றும் கிடைக்க சட்டப்படி நியாயமில்லையென்றும், தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (2 பம். 639; 11 பம். 199.)

(3) மேலும் ஜீவனும்சங் கொடுக்க வேண்டியவனுடைய குடும்ப சொத்தானது சொல்பமாயும் அச்சொத்தின் வரும்படி நிரம்ப அல்பமாயுமிருந்தால், விதவைக்கு தனியான ஜீவனும்சம்கொடுப்பிக்க சாத்தியப்படமாட்டாதென்றும், அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் விதவையானவள் குடும்பத்தாரோடு சேர்ந்திருந்தே காலக்ஷேபத்தை நடத்திக்கொள்ள வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (2 பம். 573; 4 பம். 261; 22 பம். 52.)

(4) வரும்படியைக் கொடுக்காத ஆடையாபரணம் ஸ்திரீதனம் முதலியவைகளை கவனிக்கக்கூடாது; வரும்படி வரக்கூடிய நிலம் முதலிய ஸ்திரீதன சொத்துக்களிருந்தால் அந்த நிலங்களின் வரும்படியைக் கழித்துத்தான் ஜீவனும்சம் கிடைக்கும். (4 அ. ஐ. 63; 2 பம். ஐ. 341; 2 பம். ஐ. 584; 2 பம் 573; 14 பம். 490.) ஜீவனத்துக்கு வேண்டிய பென்ஷன் சர்க்காரால் ஒருவிதவைக்குக்கிடைத்தால் அவள் ஜீவனும்சம்சேட்க பாத்தியமில்லை. (1857-ம௵ ம. தீ. 69.) ஜீவனும்சத்தொகை ஏற்படுத்தினபிறகு சொத்தின் வரும்படி அதிகமானாலும் சொந்தக்காரனுடைய பிசகில்லாமல் குறைந்தாலும் கோர்ட்டில் மனுக்கொடுத்து ஜீவனும்சத்தை சமயத்துக்குத் தக்கபடி அதிகப்படுத்தலாம் அல்லது குறைக்கலாம். (1 அ. 594; 8 ம. 94; 2 பம். 63); 7 பம். 151; 22 ம. 175.) அக்கிரமமாய் சொத்தை யழித்தால் ஜீவனும்சத்தொகை குறையாது. (24 பம். 386.)

319. ஒரேதடவையில் மொத்தமாய் ஜீவனும்சம் பெறுதல்.—பிரதிவருஷமும் ஜீவனும்சங் கொடுப்பதற்குப் பதிலாக மொத்தமாய் கொஞ்சம் தொகையைக் கொடுத்து அதற்குமேல் ஜீவனும்சம்

கேட்காதிருக்கும்படியாய் ஜீவனும்சக்காரியிடம் உடன்படிக்கைசெய்து கொள்ளலாம். (2 பம். 573). அல்லது ஜீவனும்சத்துக்கு வரும்படியை மட்டும் எடுத்துக்கொள்ளும்படி யாதொரு சொத்தை விட்டால், அவளுக்குப் பிறகந்தசொத்து விட்டவனையாவது அவன் வார்சுகளையாவது சேரும். (22 ஸ. 225; 4 ம. 193; 5 க. 113; 10 அ. 462; 10 மூ இ. அ. 490.) ஆனல், சகல பாத்தியதையுடன் யாதொரு சொத்தை ஜீவனும்சத்துக்காக விட்டால் அதை அந்த ஜீவனும்சக்காரி சுவயேச்சையாய் விற்கவும் மற்றபடி வினியோகஞ் செய்யவும் பாத்தியமுண்டு (9 மூ. இ. அ. 55; 4 ம. 371; 14 ம. 462; 26 இ. அ. 216; 27 க. 156.)

320. குறிப்பிட்ட சொத்தை ஜீவனும்சத்துக்கு பொறுப்புக்கட்ட கேட்கலாம்.—(1) ஜீவனும்சமானது குடும்ப சொத்தின் பேரிலுள்ள ஒரு பொறுப்பாக இருக்கிறபடியால், ஜீவனும்சக் காரியானவள் தனக்கு நெடுகிலும் கிடைத்துவரவேண்டிய ஜீவனும்சத்தின் ஆதரவுக்காக ஒரு குறிப்பிட்ட சொத்தை பொறுப்பாக ஏற்படுத்திக் கொடுக்கும்படி கேட்கலாம். (12 ம. 260; 16 ம. 268.)

(2) ஆனல் ஜீவனும்சத்துக்காக அவ்வாறு யாதொரு சொத்தும் குறிப்பிட்டு பொறுப்பாக ஏற்படுத்தப்படாமலிருக்கும்போது ஒரு குடும்பசொத்தை அன்னியனொருவன் நல்ல எண்ணத்தோடு கிரயம்பெற்ருல், அது ஜீவனும்சத்துக்கு உட்படமாட்டாது. (6 ம. 83; 2 பம். 494; 22 அல. 326; 24 அல. 160.)

321. ஜீவனும்ச தாவாவுக்குக் காலமும் ஸ்டாம்பும்.—(1) ஜீவனும்சத்துக்குப் பிராது அந்த ஜீவனும்சங்கொடுக்கவேண்டியவன் மறுத்துவிட்ட நாள் முதல் பனிரெண்டு வருஷத்துக்குள் கொண்டுவரவேண்டும். (கால நிர்ணயசட்டம் முதல் ஷெடியூல் 129-வது ஆர்டிகள்.)

(2) ஜீவனும்சத்துக்குப் பிராதுசெய்தால் பனிரெண்டு வருஷத்துக் குட்பட்ட காலத்தில் கிடைக்கவேண்டிய ஜீவனும்சத் தொகையை அல்லது பாக்கியைமட்டும் சேர்க்கலாம். (மேற்படி ஆக்டின் 128-வது ஆர்டிகள்; 27 ம. 3 ; 17 ம. 268) ஆனல், கோர்ட்டார் சமயத்துக்குத் தக்கபடியும் நியாயமாயும் ஜீவனும்சபாக்கியில் ஒரு பாகத்தையாவது, பூராவையுமாவது மறுதளிக்கலாம். (21 அல. 183; 18 ம. 403;

3 பம். 44; 17 பம். 45.) ஜீவனம்ச விஷயமாய்ச்செய்யும் தாவாவுக்குப் பத்திரம் பத்து வருஷத்து ஜீவனம்சத்தொகையின் பேரில் சட்ட வேண்டியது. (கோர்ட்டுக் கட்டணச்சட்டம் 72-வது பிரிவு.)

322 ஜீவனம்ச பாத்தியத்தை வினியோகிக்கக்கூடாது.—ஜீவனம்சம் சரீரசம்ரட்சணார்த்தம் ஏற்பட்டபடியால் அதை விற்பனை, ஒத்தி பந்தக முதலிய பாத்தியங்களுக்கு விடக்கூடாது. மேலும் ஒரு கடன்காரன் தீர்ப்புப்பெற்று நிறைவேற்றுஞ்சமயத்தில் ஜீவனம்சபாத்தியத்தை ஜப்திசெய்யக்கூடாது. (5 ம. 111; 8 ம. 41) கோர்ட்டுமூலமாய் ஜீவனம்சத்துக்காக கிடைக்கத்தக்கசொத்தை கடன்காரன் ஜப்தி செய்யக்கூடாது. (சிவில் புரோசிடர் கோட் பிரிவு 6 (N) பிரிவு ஆனால், பாக்கியாய் நின்றிருக்கும் ஜீவனம்சத்தொகையை ஜப்திசெய்யலாம் அல்லது அவள் அதை வினியோகிக்கலாம். (27 கல் 38; 34 மத. 7, 9; 38 கல் 13.)

11-வது பாகம்.

(a) பாகத்துக்கு யோக்கியமான சொத்துக்கள்.

323. பாகத்துக்குயோக்கியமான சொத்துக்கள்.—(1) தகப்பன் பாட்டன் முப்பாட்டன் இவர்களிடமிருந்து வார்சுபாத்தியத்தாலாவது, உயில்மூலமாயாவது, தானமாகவாவது கிடைத்தசொத்தும், பொதுக்குடும்பத்தில் எல்லா பாகஸ்தர்களுக்கும் சமமாய் பாத்தியபட்ட மற்ற ஸ்தாவரஜங்கம சொத்துக்களும் பிரிக்கத்தக்கவைகள். (10 பம். 528; 6 இ அ. 88.)

(2) சில சொத்துக்கள் பிதுரார்ஜிதமானதாக இருந்தாலும் அவைகள் தங்கள் தன்மையினாலாவது வழக்கத்தினாலாவது பாகிக்கத்தகாதவைகளாக இருக்கின்றன. அப்படிப்பட்ட சொத்துக்கள் குடும்பத்தில் ஜேஷ்டனாயிருப்பவனுக்கே சேர்ந்ததாயிருக்கின்றன. இச்சொத்துக்களைப்பற்றி பின்னால் விரிவாய் கூறப்பட்டிருக்கிறதைப் பார்க்க.

(b) பாகார்கமில்லாத சொத்துக்கள்.

324. பாகிக்கக்கூடாத சொத்துக்கள்.—(1) தானே சுவயமாய் சம்பாதித்த சொத்தும், பிதுரார்ஜித சொத்தில்லாமல் தாயார், தாயின்

தாய், அண்ணந்தம்பிகள், சிற்றப்பன், பெரியப்பன், இவர்கள் பிள்ளைகள் முதலியவர்களிடமிருந்து கிடைத்த சொத்துக்களும் பிரிக்கக்கூடாதவைகள். ஜமீன்கள் பிரிக்கப்படாமல் குடும்பத்தின் மூத்தபிள்ளையைச்சேரும். ஆனால் ஜமீன் ஆதாயத்தைக்கொண்டு ஜமீன்தார் சேர்த்துவைத்த சொத்து அவனுக்குப்பிறகு அவனுடைய வார்சுகள் பிதுரார்ஜித சொத்துப்போலப் பிரித்துக்கொள்ளவேண்டியது. (5 ம ஐ. 31; 7 மூ. இ. அ. 476.)

( ) பாகிக்க முடியாததாயும் விலைமதிப்புக்கடங்காததாயுமிருக்கிற பூஜார்ஹமான குடும்ப விக்கிரகங்களும் அவைகளைச்சேர்ந்த பூஜை சாமான்களும் குடும்பத்தில் மூத்தவனாக இருப்பவனுடைய சுவாதீனத்திலேயே இருக்கத்தக்கதென்றும், விக்கிரகங்களை வைத்துப் பூஜை செய்யுமிடத்துக்கு மற்றவர்கள் பூஜாகாலங்களில் சேவிக்கப் போகலாமென்றும் பம்பாய் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (17 பம். 271.)

(3) பாகிக்க முயல்வதில் எவைகள் சேதத்தையடைந்து உபயோகமற்றதாய் விடுகிறதோ அப்படிப்பட்ட சொத்துக்களை ஒரு பாகஸ்தனுடைய பங்குக்கே தள்ளிவிட்டு மற்ற பாகஸ்தர்கள் அச்சொத்துக்களின் விலைமதிப்பில் தங்கள் தங்களுக்குள்ள பங்கை அவனிடமிருந்து அடையவேண்டும். (0 கல். 675.)

(4) சர்க்காரால், கர்ணம் முதலிய கிராம உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்பட்ட உத்தியோக விஷயமான மானியம் முதலியவைகள் பிரிக்கக்கூடாதவைகள். (6 பம். ஸ. தீ. 69; 6 மூ. இ. அ. 1 5; 2 ம. தீ. 85; 7 ம. 36) ஆனால், பம்பாயிராச்சியத்தில் பாடில், தசமுக் தேசபாண்டிய முதலிய கிராம உத்தியோகஸ்தருக்கு சர்க்காரால் கொடுக்கப்பட்ட மானியங்கள் பிரிக்கத்தக்கவையென்று தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. (10 பம். ஐ. 2 8; 4 பம். 494; 10 பம். 3 7, 598.)

(5) சர்க்கார் அல்லது இராஜாக்களால் சம்மானமாகக் கொடுக்கப்பட்ட பிருதுகள் முதலியவைகளைப் பிரிக்கக்கூடாது. (6 மூ. இ. அ. 4 6; 7. ம 19 .)

(6) அநந்தரவார்சு பாத்தியமாய் கிடைத்தசொத்து சுவயார்ஜிதமாக பாவிக்கப்படுவதால் அந்த சொத்தையும் தகப்பனுள்ளவரை

யில் பாகங்கேட்க கூடாது. (1 அல. 651; 22 ம. 305.) ஆனல் கௌகித்திரபாத்தியமாயடையும் சொத்துமட்டும் பிதுரார்ஜிதமாகுமென்றும் அதில் பிள்ளைகளுக்கு பாகமுண்டென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (25 ம. 687; 27 ம. 300, 332.)

325. பாகஸ்தர்கள் பாகங்கேட்க பாத்தியம்.—(1) தகப்பனுடைய சுவயார்ஜிதசொத்தைப் பாகங்கேட்க பிள்ளைகளுக்குப் பாத்தியமில்லாமற் போனபோதிலும், பிதுரார்ஜித சொத்தைப் பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று பிள்ளைகள் கேட்டால் தகப்பன் உடனே பிரித்துக்கொடுக்கவேண்டும். (1 அல. 431; 17 பம். 271; 18 ம. 179.) பிள்ளைகளில்லாவிட்டால் பேரன்களும், பேரனுமில்லாவிட்டால் கொள்பேரன்களும் பிதுரார்ஜிதசொத்தில் பாகம்கேட்கலாம் (12 க. ஐ 373; 5 அ. 430; வெ. பூ. 335, 370, 373; 10 பம். ஐ 463, 529, 578; 12 பம். 280, 294; 1 ம. 76: 5 க. 148; 6 இ. அ. 88.)

(2) பிதுரார்ஜிதசொத்தை பாகஞ்செய்கிற விஷயத்தில் பிள்ளைகளுக்கிஷ்டமிருந்தாலுமில்லாவிட்டாலும் சொத்தை பாகஞ்செய்யத் தகப்பன் அவர்களைக் கட்டாயப்படுத்தலாம் அல்லது பாகஞ்செய்து வைக்கலாம். (1 ம. 317, 331.) ஒருவன் கனியாயிருந்ததினலே பாகம் பிரிந்ததாக பாவிக்கக்கூடாது. (5 க. 474)

(3) பாகபாத்தியம் பிள்ளை, பேரன், கொள்பேரன் இவர்கள் வரையில மட்டும் செல்லும். மூன்று தலைமுறை தாண்டின கொள்பேரன் மகனுக்கு அந்தப்பாத்தியமில்லை. மேலும் பிள்ளை ஜீவித்திருக்கிற வரையில் பேரனுவது பேரன் ஜீவித்திருக்கையில் கொள்பேரனுவது அவன் தகப்பனிஷ்டத்திற்கு விரோதமாகபாகங்கேட்க அல்லது அவனை பாகவிஷயமாய் பலவந்தந்தப்படுத்த பாத்தியமில்லை (6 அ. 574; 16 பம். 29; 5 அ. 430.)

326. பங்காளதேச சம்பிரதாயம்—தாயபாகப்படி பங்காளதேசத்தில் தகப்பன் உயிரோடிருக்கையில் அவனுடைய சுவயார்ஜித. பிதுரார்ஜித சொத்துவிஷயமாய் பாகங்கேட்கப் பிள்ளைகளுக்கு எவ்வளவும் பாத்தியமில்லை. ஆனல், தகப்பனிறந்தபிறகு பிள்ளை, சிற்றப்பன், பெரியப்பன் இவர்களை பாகங்கேட்கலாம்.

327. ஸ்வீகாரப்பிள்ளையின் பாகம்.—இதைப்பற்றி முன்னே 86, 87, 88, 89-வது பிரிவுகளில் விவரமாய் சொல்லப்பட்டிருக்கின்றன.

328. தாசிமகன்களின் பாத்தியம்.—(1) பிராமண, க்ஷத்திரிய வைசிய ஜாதிகளில் வைப்பாட்டிக்குப் பிறந்த பிள்ளைகளுக்கு பாகபாத்தியமே கிடையாது. (7 மு. இ. அ. 18; 8 ம. ஐ. 369; 13 மு. இ. அ. 57) ஆனால், சூத்திரஜாதிகளில் வைப்பாட்டி மகன் தன் தகப்பனையாவது, சிறியதகப்பன், பெரியதகப்பன் அவர்கள் பிள்ளைகள் இவர்களையாவது பாகங்கேட்க அதிகாரமில்லையானாலும், ஔரஸசகோதரனை மட்டும் பாகங்கேட்கலாம் (4 பம் 44, 45; 11 க. 714; 12 ம. 401; 7 ம. 407; 8 ம. 557; 27 மத 334) தகப்பன் சம்மதித்து பாகஞ்செய்து கொடுத்தால் வைப்பாட்டி பிள்ளைக்கு ஔரஸபுத்திரன் பாகத்தைக்காட்டிலும் அதிகமில்லாமல் பாகங்கொடுக்கலாம். (23 மத 16.)

(2) தகப்பனிறந்தபிறகு வைப்பாட்டி பிள்ளைகளு ஔரஸபுத்திரன் பாகத்தில் பாதியும், ஔரஸனில்லாவிட்டால் சரியான பாகமும் கிடைக்குமென்று தர்ம சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. மதராஸ் பம்பாய், அலகாபாத் ஹைக்கோர்ட்டார்கள் ஔரஸனுக்கு மூன்றில் இரண்டு பங்கும் வைப்பாட்டியின் பிள்ளைக்கு மூன்றில் ஒரு பங்கும் பாகமுண்டு என்று தீர்மானித்திருக்கிறார்கள். (34 மத. 277; 40 பம். 36.) ஆனால், சமீபத்தில் பிரிவி கவுன்சில் தீர்மானப்படி சரிபாகமும் கிடைக்கும். (50 இ. அ. 32; 14 பம். 282.) ஔரஸன்பேரில் வைப்பாட்டி மகன் பாகத்துக்கு வியாச்சியம் செய்யலாம். (12 ம. 401; 17 இ. அ. 128; 18 கல். 151.)

(3) தகப்பனுடைய சொந்த பிள்ளைகளுடன் மட்டும் வைப்பாட்டிபிள்ளை பங்காளியாக இருக்கிறானேயல்லாது, தகப்பனுடைய தகப்பன், தகப்பனுடைய சகோதரர், அச்சகோதரர்களின் பிள்ளை முதலான மற்ற தாயாதிகளோடு அவன் பங்காளியாகமாட்டான். ஆனால் வைப்பாட்டி பிள்ளையின் தகப்பன் அவிபக்த குடும்ப நிலைமையிலேயே இறந்துபோயிருந்தால் வைப்பாட்டி பிள்ளைக்கு குடும்பசொத்தில் யாதொரு பாகமும் கிடைக்கமாட்டாது. இறந்துபோன அத்தகப்பனுக்கு சொந்த பிள்ளை இருந்தாலும் அச்சொந்தப் பிள்ளையே

பாகத்தில் பிரதிநிதியாக நின்று தன் தகப்பன் பங்கு முழுவதையும் அடைவானேயன்றி வைப்பாட்டி பிள்ளைக்கு யாதொரு பாகமும் கிடைக்கமாட்டாது. ஜீவனும்சமட்டுமே அவனுக்குக் கிடைப்பதாகும். (7 ம. 407; 8 ம. 557; 10 ம. 334; 21 அல. 99; 25 ம. 4-9.)

(4) தகப்பனுக்கு ஏதேனும் தனியானசொத்து இருந்தால் அதில்மட்டும்வைப்பாட்டிபிள்ளை சொந்தப்பிள்ளையோடு பாகபாத்தியஸ்தனாக ஏற்படுகிறான். (27 ம. 32; 17 இ. அ. 128; 18 கல். 151; 25 ம. 429.)

(5) ஒருஹிந்துபுருஷன் வைத்துக்கொண்டிருந்த வைப்பாட்டியானவள் ஹிந்துமதத்தைச்சேர்ந்தஸ்திரீயாகவே யிருந்தால்மட்டும் அவளிடமாகப்பிறந்த பிள்ளைகளுக்கு அந்ததகப்பனுடையசொத்தில் பாத்தியம் ஏற்படும். ஹிந்துவல்லாத மகம்மதிய கிறிஸ்தவ முதலான அன்னிய மதத்தைச்சேர்ந்த ஒருவைப்பாட்டியிடமாகப்பிறந்தபிள்ளைக்கு ஹிந்துதகப்பனுடைய சொத்தில் பாகபாத்தியமாவது ஜீவனும்சபாத்தியமாவது ஏற்படமாட்டாது. (27 ம. 13.)

329. ஜாதி பிரஷ்டனுக்கு பாகம்.—ஜாதிபிரஷ்டனுக்குப் போனவன் இறந்தவனுக்குச் சமானமாதலால் அவனுக்கு பாகங் கிடையாதென்று தர்மசாஸ்திரம் முறையிடுகிறது. ஆனால், 1850-ஆம் த்து 21-வது ஆக்ட்படி மதப்பிரஷ்டனுக்கு சொத்து பாத்திய மிருப்பதால் அவன் பாகங் கேட்கலாம். (33 அல. 356; 23 மத. 171.)

330 பாகமானபிறகு பிள்ளைபிறந்தால் அவன் பாகம்.—(1) தகப்பனும் பிள்ளைகளும் பாகஞ்செய்யுங்காலத்தில் தாய் கர்ப்பமாயிருந்தால் அவள் பிரசவிக்கிறவரையில் பாகஞ்செய்யக்கூடாது. கர்ப்பமாயிருப்பது தெரியாமலிருந்து பாகஞ்செய்துகொண்ட பிறகு ஆண்பிள்ளைபிறந்தால் மறுபடியும் புதிதாய் பாகஞ்செய்து கொள்ளவேண்டும். (4 ம. ஐ. 307; 1 க. ஐ. 118, 121; 2 பம். 105.) தகப்பனும் பிள்ளைகளும் பாகஞ்செய்துகொண்ட பிறகு கர்ப்பமுண்டாகி பிள்ளைபிறந்தால், அந்தப்பிள்ளை தகப்பன் பாகத்தையும் தகப்பன்சுயார்ஜிதத்தையு மடையவேண்டும் (32 மத. 377; 4 அ. 427.) தகப்பன் பாகம் வைத்துக்கொள்ளாமல் சொத்தெல்லாவற்றையும் பிள்ளைகளுக்கே கொடுத்திருந்தால் அவர்களெல்லோரும் தங்கள் பாகத்தில் கொஞ்

சங் கொஞ்சம் கொடுத்து அத்தப்பிள்ளைக்குசரியான பாகம் ஏற்படுத்தவேண்டும். (I. W. மேக் 47; 20 ம. 75.)

(2) அவிபக்தகுடும்ப பாகஸ்தன் ஒருவனிறந்துபோகும்போது அவன் பெண்சாதி கர்ப்பமாயிருக்கையில் மற்ற சகோதரர்கள் பாகஞ்செய்துகொண்டாலும் இறந்தசகோதரன் விதவைக்கு பிள்ளை பிறந்தால் அந்த பிள்ளைக்கு தகப்பனுக்கு கிடைக்கவேண்டிய பாகமுண்டு. பெண்பிறந்தால் பாகங்கிடைக்காது.

331. மைனர்கள் பாங்கேட்பது.—யாதொரு மைனராவது, மைனருக்காக வேறொருவராவது பாகங்கேட்கநியாயமில்லை. ஆனல் மைனருக்கு பொதுசொத்தில்கிடைக்கவேண்டிய பாகத்துக்கு கெடுதிநேரிடக் கூடியதாயிருந்தால், அந்த மைனருக்குக் கார்டியனுக இருப்பவர்கள் பாகங்கேட்கலாம். தகப்பனே சொத்தை துர்வினியோகஞ் செய்துகொண்டிருந்தாலும் மைனரின் தாயாவது அல்லது அடுத்த பந்துவாது சிநேகிதனுவது பாகவியாச்சியம் செய்யலாம் (29 அல. 373; 3 ம.ஐ. 69, 94; 8 க. 537; 12 ம. 101; 19 பம். 99.) யாதொரு குடும்பத்தில் மைனர் இருக்கும்போது மற்றவர்கள் சரியான மைனர்பாகத்தை ஒதுக்கிவிட்டு மற்றதை பாகஞ்செய்து கொள்ளத் தடையில்லை. (2 ம.ஐ. 182) ஆனுல், பாகஞ்செய்யும்போது மோசமாகவாவது, அனியாயமாகவாவது பாகஞ்செய்தாலும், அதைப்பற்றிய கணக்குகள் யாதொன்று மில்லாவிட்டாலும், மைனர் மேஜரானவுடன் பாகத்தை ரத்து செய்து மறுபடி பாகஞ்செய்துகொள்ளலாம். (30 கல். 738; 19 பம். 593; 29 அல. 37. 18 பம். 19; 14 அல. 498.) பாகம் சரியாயும் நியாயமாயு மிருப்பதாகத்தெரிந்தால் பாகத்தை ரத்து செய்ய முடியாது. (2 ம. ஐ. கோ. 847.)

332. தேசாந்திரம் போனவன் பாகம்.—பொதுக்குடும்பத்தில் ஒருவன் தேசாந்திரம் போய்விட்டால் அவனுடைய பாத்தியம் அவனுடைய சந்ததிகளில் ஏழுதலைமுறைவரையில் செல்லுமென்று தர்மசாஸ்திரங்களி லிருக்கின்றன. ஆனல் லிமிடேஷன் ஆக்ட்படி பாகஞ்செய்த 12-வருஷத்துக்குள் தேசாந்திரம் போனவனுவது, அவனுடைய நியாயமான ஆண்சந்ததியாவது திரும்பிவந்து பாகங்கேட்காவிட்டால் அவனுக்காக வைத்திருந்த அவன்பாகத்தை மற்றவர்கள் சரியாகபாகஞ் செய்துகொள்ளவேண்டும். பாகஞ்செய்த 12-வருஷத்

தாக்குள் தேசாந்திரம் போனவன் அல்லது அவன் ஆண்வார்சு பாகம் கேட்டு மறுத்தால் உடனே பிராது செய்யவேண்டும். (3 க. 228; லிமிடேஷன் ஆக்ட் 1-வது ஷிட்யூல் 123, 127, 144. ஆர்டிகல்கள்.)

333. ரோகிகளுக்கு பாகம்.—குஷ்டரோகி, நபும்ஸகர்கள், பித்தர்கள், பிறவிக்குருடு, செவிடு, ஊமைகள், அங்கவீனர்கள், இகலோக வியாபாரத்தைவிட்ட சன்னியாசிகள் இவர்களுக்கு பாகமே கிடையாது. ஆனால், ஜீவனாம்ச பாத்தியமட்டும் உண்டு. (3 க. 149) மேலே சொன்ன வியாதியஸ்தர்களுக்கு பிள்ளை பேரன் கொள்பேரன்களிருந்தால் அந்தப் பிள்ளைகளுக்கும், பேரன்களுக்கும், சொள்பேரன்களுக்கும் பாகபாத்தியமுண்டு. (13 மூ. இ. அ. 519; 2 க.ஐ. 113; 9 ம. 64.) ஆனால் பொதுக்குடும்பத்து பாகஸ்தர்களெல்லோரும் இறந்தால், அப்பொழுது சொத்தெல்லாம் அந்த வியாதியஸ்தனைசேரும். (43 மத 464) அப்படிப்பட்ட வியாதியஸ்தர்கள் பிள்ளையில்லாமல் தத்தெடுத்துக்கொண்டால் அந்த தத்துப்பிள்ளைக்கு தகப்பனுக்குக் கிடைத்தஜீவனாம்சமட்டும் கிடைக்குமேயொழிய ஔரஸபுத்திரனைப்போல் பாகங்கிடைக்காது. சுவீகாரமெடுத்துகொண்டபிறகு தகப்பன் குஷ்டரோகியானால் அவன் பாகத்துக்குக் கெடுதியுண்டாகமாட்டாது. (1859-ம் ஷு ம. தீ. 270.)

334. பாகத்துக்குப்பிறகு வியாதி நீங்கினவனுக்கு பாகம்.—பாகஞ்செய்துகொண்ட பிறகு வியாதியாயிருப்பவன் அதிலிருந்து சொஸ்தப்பட்டால் இதனடியில் கண்டவிதமாக சொத்தை யடையவேண்டும்.

(1) தகப்பன் பிள்ளைகள் பாகஞ்செய்து கொண்டபோது வியாதியாயிருந்த பிள்ளையை நீக்கியிருந்தார்கள். பிறகு அவனுக்கு வியாதி நீங்கினால் தகப்பன் பாகத்தை அவன் அடையவேண்டும்.

(2) வியாதியாயிருந்தவனுக்குப் பாகங்கொடாமல் மற்றசகோதரர்கள் பாகஞ்செய்து கொண்டார்கள். பிறகு அவனுக்கு வியாதி நீங்கினால் முன்செய்த பாகம் ரத்தாகி மறுபடி ரோகம் நீங்கினவனையுஞ்சேர்த்து எல்லாரும் பாகஞ்செய்து கொள்ளவேண்டும்.

(3) பிள்ளைகளும் தகப்பனும் பாகஞ்செய்து கொண்டபோது வியாதியாயிருந்த பிள்ளைக்கு பாகங்கொடுக்கவில்லை. பிறகு அவனுக்குப் பிள்ளைபிறந்தால் அந்தப்பிள்ளைக்கு பாட்டன் பாகங்கிடைக்கும்

குறிப்பு:—பாகத்துக்குப்பிறகு மேற்கண்ட வியாதிகள் ஒருவனுக்குண்டானாலும் அவனுக்குக்கிடைத்த சொத்து அவனை விட்டு நீங்காது.

(4) அண்ணன் தம்பிகள் பாகஞ்செய்து கொள்ளும்போது வியாதியாயிருந்த சகோதரனுக்கு பாகஞ்கொடுக்கவில்லை. பிறகு அவனுக்குப்பிள்ளை பிறந்தது. அந்தப்பிள்ளைக்கு பாகங்கிடைக்காது. (2 க. ஐ. 118, 121; 9 ம. 64.)

335. பாகங்களை அன்னியர் கேட்பது.—பொதுக்குடும்பத்தின் பாகஸ்தனொருவனால் அவன் பாகத்தை சாசனம் அடமானம் முதலியவைகளாலாவது கோர்ட்டு ஏலத்திலாவது டிரான்ஸ்பர் பெற்றவன் பாகத்தைக்கேட்கலாம், அல்லது அதற்கு தாவாசெய்யலாம். ஆனால், அந்த தாவா குடும்பசொத்து முழுவதையும் பிரித்துத்தனக்கு வரத்தகுந்த பாகத்தைக் கொடுக்கும்படி செய்யலாமே யொழிய, தனக்கு வரக்கூடிய பாகத்தைமட்டில் பிரித்துக்கொடுக்கும்படி தாவா செய்யக்கூடாது. (6 மு. இ. அ. 539; 3 க. 198; 7 ம. 588; 13 ம 275; 20 ம 243; 38 மத 243; 10 க. 626; 45 மத 449.)

ஆனால் அவிபக்தகுடும்பத்தில் ஒரு பாகஸ்தன் தனக்கு வரவேண்டிய பாகத்தில் சிலதை விற்றால், வாங்கியவன் அந்த பாகத்தில்மட்டும் தனக்குச்சேரவேண்டியதை வசப்படுத்த தாவா செய்தால் செல்லும். (28 அல. 39; 25 மத 690; 46 பம். 28.) அதுபோலவே அவிபக்த குடும்பசொத்தில் சிலதை ஒரு பாகஸ்தன் விற்றுவிட்டால் அந்த சொத்தைப்பற்றியமட்டில் தன் பாகத்தை பிரித்துவிட தாவா செய்ய மற்றொரு பாகஸ்தனுக்கு பாத்தியமுண்டு. குடும்பசொத்து முழுவதையும் தாவாவில் சேர்க்கவேண்டியதில்லை. (28. அல. 50; 5 மத 196; 34 மத 269; 19 மத 267.)

பொதுக்குடும்பத்திலுள்ள ஒரு பாகஸ்தனுடைய பாத்தியதையை உயில்மூலமாகவாவது அல்லது இனாமாகவாவது பெற்றுக்கொண்டால் அப்படிப்பெற்றுக்கொண்டவன் பாகத்துக்காகக் கொண்டுவரும் தாவா செல்லாது.

336. ஸ்திரீகளுக்கு பாகம்.—(1) மிதாட்சர சம்பிரதாயப்படி ஸ்திரீகளுக்கு ஜீவனாம்சபாத்தியமேயொழிய பாகபாத்தியம் என்னிலைமையிலுங் கிடையாது. தகப்பனிறந்த பிறகு பிள்ளைகள் பாகஞ்

செய்துகொண்ட காலத்தில் கல்யாணமாகாத பெண்களிருந்தால் அவர்களுக்கு ஜீவனும்சங்கொடுப்பதோடு கல்யாணச் செலவுக்காக வேண்டிய பணமும் வைக்கவேண்டும். பாககாலத்தில் சகோதரனின் விதவையாவது, வெகுகாலம் தேசாந்திரம்போனவன், சன்னியாசியானவன் இவர்களின் பெண்சாதிகளாவதிருந்தால் இவர்களுக்கெல்லாம் ஜீவனும்சமட்டுங்கிடைக்கும்.

(2) தாயபாக சம்பிரதாயப்படி பிள்ளைகள். பிரித்துக்கொள்ளும்போது தாயின் ஜீவனும்சத்திற்காக ஒரு பாகங் கொடுக்கவேண்டியதென்றும், பேரன்கள் பிரித்துக்கொள்ளுகிறதா யிருந்தால் தகப்பனைப் பெற்ற பாட்டிக்குத் தங்களைப்போல ஒரு பாகங்கொடுக்க வேண்டுமென்று மேற்பட்டிருக்கிறது. (12 கல் 65; 31 கல். 1065.)

(3) பங்காளதேசத்தில் பொதுக்குடும்பத்தின் பாகஸ்தன் பிள்ளையில்லாமலிறந்தால் அவன் விதவை அவனுடைய பாகத்துக்கு பாத்யமுள்ளவளாகி அவள் பாகங்கேட்கலாம். மேலும், அவளால் அந்த பாகத்தை டிரான்ஸ்பர் பெற்றவனும் பாகங்கேட்கலாம். (36 கல். 75)

337. பாகிக்கக்கூடாதேன்று ஏற்பாடு செய்வது.—பிள்ளைகள் எப்போதுமாவது கொஞ்சகாலத்திற்காவது பாகஞ்செய்து கொள்ளக் கூடாதென்று தகப்பன் உயில் முதலியவைகளால் ஏற்பாடுசெய்துபோனால் அதற்குப்பிள்ளைகள் கட்டுப்பட்டவர்களல்ல. (1 க. 104; 23 ஸ. 297; 15 இ. அ. 37 ; டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட் 10, 11-பிரிவுகள்) பொதுக்குடும்பத்தின் பாகஸ்தர்கள் தங்களுக்குள் அப்படிப்பட்ட யேற்பாடு செய்துகொண்டால் அந்த ஏற்பாடு செல்லும். ஆனால், அவர்கள் செய்துகொண்ட ஏற்பாட்டுக்கு அவர்களுடைய வார்சுதாரார்கள் அல்லது ட்ரான்ஸ்பர்தாரர்கள் கட்டுப்பட்டவர்களல்ல. (4 ம,ஐ. 345; 7 பம். 538.)

338. பிதுரார்ஜித சொத்தை சமமாகபங்கிடுவது.—(1) தகப்பன் பிள்ளைகள் பிதுரார்ஜித சொத்தை பாகஞ் செய்துகொண்டால் சமமாக பாகித்துக்கொள்ளவேண்டும். (1 பம். ஸ. தீ. 28, 58; 3 பம். ஸ. தீ. 30 ; 1 பம். 56 ; 5 அல. 430; 5 கல். 148.) தர்மசாஸ்திரங்களில் தகப்பனுக்கும், மூத்தகுமாரனுக்கும் அதிக பாகங்கொடுக்கும்படியாய் ஏற்பட்டிருந்தாலும் இக்காலத்தில் அப்படிப்பட்ட வழக்

கும் அனுஷ்டானத்திலிருக்கிற விடங்களில்மட்டும் அந்த ஏற்பாடுசெல்லும். மற்ற விடங்களில் செல்லாது. (2 பம். ஸ. தீ. 266.) அப்படி ஜேஷ்ட பாகங்கொடுக்கிற விடங்களில் கூட பாகத்திற்கு முந்தி ஜேஷ்ட குமாரனிறந்தால் அவன் சந்ததியாருக்கு அதிகபாகங்கிடைக்காது.

(2) தகப்பனுக்கு இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட பெண்சாதிகளிருக்கும்போது கூட அவர்களின் பிள்ளைகள் எல்லாரும் சமமாக பாகஞ்செய்து கொள்ளவேண்டுமேயொழிய தாலயக்கணக்கிட்டு பாகஞ்செய்து கொள்ளக்கூடாது. ஆனால், அயோத்தி நாட்டில் தாரத்தின் கணக்கின்பேரில் பாகம் ஏற்படுகிறபடியால் அவளவள் பாகத்தை பிள்ளைகள் சமமாக பாகித்துக்கொள்ளவேண்டியது. (2 பம். ஸ. தீ. 116.)

(3) ஒருபாகத்தில் தகப்பனும் பிள்ளைகளுமன்றி பேரன்களும் கொள்பேரன்களும் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்கள் தங்கள் தங்கள் தகப்பனுக்குக்கிடைத்த பங்கை சரிபாகமாக தகப்பனுடன் பங்கிட்டுக்கொள்ளவேண்டும். தகப்பனில்லாவிட்டால் தகப்பன் பாகத்தை சகோதரர்கள் சமமாக பங்கிட்டுக்கொள்ளலாம். (15 அல. 430).

(4) குடும்பத்தலைவன் தன்முயற்சியாலும் புத்தியாலும் உழைப்பினாலும் குடும்பசொத்தை விருத்திசெய்தாலும் அதற்காக அவனுக்கு அதிகமாக பாகம் யாதொன்றும் கிடைக்காது. (18 ம. 73.) ஆனால், குடும்ப திரவியத்தைக்கொண்டு மேலான படிப்புபடித்து அதனால் விசேஷ திரவியம் தனியாய் சம்பாதித்திருந்தாலும், குடும்ப உதவியால் வியாபாரம்செய்து தனியாக ஏராளமானசொத்து சேர்த்திருந்தாலும் அப்படி சம்பாதித்த அல்லது சேர்த்தவனுக்கு ஒரு பங்கு அதிகம் கிடைக்குமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (6 மூ. இ. அ. 526.)

339. மிதாட்சரப்படி ஸ்வயார்ஜித சொத்தை பாகித்தல்.—தகப்பன் சுவயார்ஜிதமாக சம்பாதித்த சொத்தை தன்னிஷ்டப்படி பிள்ளைகளுக்காவது மற்றவருக்காவது இனமாகக் கொடுக்கலாம். ஆனால், இனங்கொடுக்கும் விஷயத்தில் சொத்தை சுவாதீனப்படுத்தவேண்டிய தவசியம். இனம் விஷயத்தில் தகப்பனுக்கு ஸ்வயார்

ஜித சொத்தில் ஸகல அதிகாரமிருந்தபோதிலும், பாகவிஷயத்தில் தன்னிஷ்டப்படி பாகஞ்செய்ய அதிகாரமில்லை. ஒரு மதராஸ் கேஸில் ஒருவன் தன் ஸ்வயார்ஜித சொத்தை 10-பாகம்போட்டு ஒரு பாகத்தைப் பிள்ளைக்கும் மற்றப்பாகங்களைப் பெண்சாதிக்கும் பெண்ணுக்கும் சேரும்படியாய் ஏற்பாடுசெய்தான். அப்படிப்பட்ட பாகம் ஜங்கம சொத்துவிஷயமாய் செல்லுமேயாகிலும் ஸ்தாவர சொத்துவிஷயத்தில் செல்லாதென்று ஸதர்கோர்ட்டு முன்காலத்து பண்டிதர்கள் ஜட்ஜிகளுக்குத் தெரிவித்தார்கள். (18[illegible]2ளு ம. தீ. 61)

340. பங்காளத்தில் அதிக பாகம்.—பங்காளத்தில் தகப்பனுக்கு ஸ்வயார்ஜித பிதுரார்ஜித சொத்துக்களை இஷ்டம் வந்தபடி விநியோகஞ் செய்ய பாத்தியமிருந்தாலும் பாக விஷயத்தில் பிள்ளைகளுக்கு ஏற்றத்தாழ்ச்சியாய் பாகஞ் செய்துகொடுக்க அதிகாரமில்லை. ஜேஷ்டகுமாரனென்றும், வித்வானென்றும், நற்குணனென்றும், குடும்பியென்றும், குழந்தையென்றும் இப்படிப்பட்ட சாஸ்திரோக்தமான காரணங்களிருந்தாலொழிய பிள்ளைகளில் எவனுக்காவது அதிக பாகங்கொடுக்கக்கூடாது. ஜேஷ்ட குமாரனுக்கு பிதுரார்ஜித சொத்திலும் அதிக பாகங்கொடுக்கலாமே யொழிய மற்றசொத்துக்களில் கொடுக்கக்கூடாதென்று தாயக்கிரமத்தில் தெரிவித்திருக்கிறது. (2 பம். ஸ. தீ. 20[illegible]. 2 W. மேக். 2, 16.)

341. பாகஞ் செய்துகொள்ளுகிறவிதம்.—(1) பாகஞ்செய்துகொள்ளவேண்டியவர்களையும், பாகத்துக்காக இன்னின்ன பொதுசொத்துக்களிருக்கின்றன வென்பதையும் முதலில் கணக்கிடவேண்டியது, ஜீவனாம்சக்காரர்களுக்கும், கடன்காரர்களுக்கும், மற்றவர்களுக்கும், குழந்தைகளின் கல்யாணங்களுக்கும் மரணசிலவிற்குவேண்டிய தொகையைக் கழித்து விடவேண்டியது. (10 பம். 529; 7 பம். 272; 32 மத 19.) பிறகு நியாயமில்லாமல் எவனெவன் அதிகச்செலவு செய்திருக்கிறானோ அதை அவனவன்பாகத்தில் கழித்துவிடவேண்டியது. (1 பம். 561; 5 பம். 589; 11 ம. 248) குடும்பத்துக்கு எவனெவனுடைய ஸ்வயார்ஜித சொத்து செலவிடப்பட்டிருக்கிறதோ அதை குடும்பசொத்திலிருந்து அவனுக்குத் திருப்பக்கொடுக்கவேண்டும். (1 ம, ஜ. 3'09) இன்னுமற்ற விஷயங்களையும் யோசித்துச் சேர்க்கவேண்டியதைச் சேர்த்தும் கழிக்கவேண்டியதைக் கழித்தபின் பாக்கியை எல்லாப்பிர

ளைகளும் சமமாக பாகித்துக்கொள்ளவேண்டியது. ஆனால், ஒருவனுக்கு அதிகக் குழந்தைகளிருந்த நிமித்தம் அவர்களின் சுபசோபனாதிகளுக்கு அதிகச்செலவானால் அதை யவன்பாகத்தில் கழிக்கக்கூடாது. (3 ம. ஐ. ரி. 177; 23 பம். 144.)

(2) ஹிந்தூக்களில் பிள்ளைகளுக்கு உபநயனம் பிரதானமான கர்மம். விவாகம் பிரதானமானதல்லாததால், அதை குடும்ப பொதுவிலிருந்து செய்திருந்தாலும் அதற்கு நேரிட்ட செலவை சம்பந்தப்பட்ட பாகஸ்தன் பங்கில்கழிக்கலார். (4 ம. 1; 27 ம. 206.)

342. பிரிக்கக்கூடாததைப்பிரிப்பது.—(1) விக்கிரகங்கள், கிணறு, வீடு, மிருகங்கள், வழிநடைமுதலியவைகளை எல்லோரும் சம்மதித்து ஒருவருக்குக் கொடுக்கலாம்; முறைபாக ஒருவர்பின்னொருவர் அனுபவிக்க நிபந்தனை ஏற்படுத்திக்கொள்ளலாம் அல்லது அதற்கு விலை ஏற்படுத்தி அதை யார் வைத்துக்கொள்கிறானோ அவனிடம் கிரயத்தை வாங்கி பங்கிட்டுக்கொள்ளலாம். (36 பம் 275; 10 க. 675; 3. க 51.)

(2) யாதொரு பொது குடும்பத்தில் சிலர் சேர்ந்தேயிருந்தாலும் சிலர் தனிபாகப்போக இஷ்டமிருந்தால் தடையில்லை. சில சொத்துக்களை மட்டும் பாகஞ்செய்து, மற்றவைகளை பாகஞ்செய்யாமல்பொதுவாய் அனுபவிக்கலாம். (4 மு. இ. அ. 137; 11 மு. இ. அ. 75; 18 மத 418) அப்படி பொதுவாக அனுபவித்ததாக தாவாநடந்தால் அதைக்கோர்ட்டில் ருசுப்படுத்துவது மேலேகண்டசங்கதிகளை வாதிப்பவனுடையதாகும். (7 பம். ஐ. 153.)

343. பாகஸ்தன் பாகத்தை விட்டுவிடுவது.—பொதுக்குடும்பத்தில் ஒருவன் தன்பாகத்தை மற்றபங்குக்காரர்களுக்கு விட்டுவிடலாம். அதற்கு அவன் வார்சுகளும் கட்டுப்பட்டவர்களாவார்கள். (11 மத 406; 25 மத 149) பொதுக்குடும்பத்தில் ஒரு பாகஸ்தன் தன்னுடைய பாகத்தை விட்டுவிடுவதாக மற்ற பாகஸ்தர்களுடன் உடன்படிக்கை செய்துகொண்டால், பிரதி பிரயோசனமில்லாமல் அந்த உடன்படிக்கை செய்தால் அது ரத்தாய்விடும். (6 மத. 71.)

344. பாகத்தை ரத்துசெய்வது.—பாககாலத்தில் மோசடியாகவாவது சட்டத்துக்கு விரோதமாகவாவது ஒருவனுக்கு நஷ்டம் உண்டாகும்படியாய் பாகஞ் செய்திருந்தால் நஷ்டமடைந்த பாகஸ்தன்

கோர்ட்டில் மனுக்கொடுத்து பாகத்தை ரத்துசெய்து மறுபடியும் பாகஞ் செய்துகொள்ளலாம். (23 பம். 385; 10 பம். ஐ. 444.) ஆனால், சில சொத்துக்கள் மட்டும் பாககாலத்தில் விட்டுப்போயிருந்தாலும் அல்லது மோசடியாய் மறைத்துவைக்கப்பட்டிருந்தாலும் அப்படிப்பட்ட சொத்தைமட்டும் பாகஞ்செய்துகொள்ளவேண்டியது. 7 அ. 543; 40 அல. 374.)

345. சோத்தில்லாத பாகம்:—பாகஞ்செய்துகொள்ள சொத்தில்லாதிருந்தபோதிலும் அவரவர்கள் சுவயார்ஜித சொத்துக்கு மற்றவர்கள் பாகங்கேட்கக்கூடாதென்று பேருக்குமட்டும் பாகஞ்செய்துகொள்வதுண்டு. (13 மூ. இ. அ. 113)

346 பாகவிஷயமான ருசு.—(1) பாகத்துக்கு பாகபாத்தியம் முதலான தஸ்தாவேஜுகள் வேண்டியதில்லை. (4 மூ. இ. அ. 168.) பாகஸ்தர்கள் தனித்தனியாகப் போகவேண்டுமென்கிற எண்ணத்துடன் பொது சொத்தை பாகித்துக்கொண்டு தனித்தனியாக அனுபோகித்துக்கொண்டுவந்தாலதுவே போதுமானது. (14 ஸ. 31; 8 க. ஐ. 396.) பாகங்களை வெவ்வேறாக அளந்துகட்டி அடையாளஞ்செய்ய வேண்டியதும் அவசியமில்லை. இஷ்டப்பட்டபோது அந்த அடையாளத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம். (11 மூ. இ. அ. 75; 13 மூ. இ. அ. 113; 3 ம. ஐ. 40, 287; 4 பம். 157; 12 க. 96; 5 அ 532; 13 பம். 25.) பிரிவினைக்குப் பிறகும் நிலத்துக்கு அடையாளம் ஏற்படுத்துவதற்கு முந்தி ஒரு பாகஸ்தனிறந்தால் அவன் பாகம் அவன் விதவைக்குச் சேருமேயொழிய மற்ற பாகஸ்தர்களுக்குச் சேரமாட்டாது.) 13 மூ. இ. அ. 497; 14 ஸ. 33.) சொத்தை துண்டு துண்டாகப் பிரிக்காமல் வரும்படியைமட்டும் பங்கிட்டுக்கொள்ளலாம். (11 மூ. இ. அ. 75; 13 மூ. இ. அ. 113; 3 ம. ஐ. கோ. ரி. 279; 1 இ. அ. 55; 5 அல. 532; 3 பம். 25; 12 கல். 93.)

(2) பிரிவினை எண்ணமில்லாமலே குடும்பத்தின் பாகஸ்தர்கள் தூரதேசங்களில் வியாபாரம் உத்தியோகம் முதலியவை செய்தாலும், தனியாக வாசஞ்செய்து கொண்டுவந்தாலும், தனித்தனியாக சிலசொத்துக்களை அனுபவித்து வந்தாலும் ஒருவருக்கொருவர் லேவாதேவி செய்துகொண்டு வந்தாலும், பாகஞ்செய்துகொண்டவர்களாக எண்ணப்படமாட்டார்கள். (4 மூ. இ. அ. 158; 12 மூ. இ.

அ. 540; 14 மூ. இ. அ. 412; 3 பம். ஜ. 87; 1857-ம்௵ ம. தி. 230; 1861-ம்௵ ம. தீ. 101; 8 ம. ஜ. 25; 8 மூ. இ. அ. 66; 1 அ. 437; 22 ஸ. 412; 24 இ. அ. 118; 20 ம. 256.)

(3) சாதாரணமாய் இந்து குடும்பங்கள் பொதுவானவைகளென்று நம்பப்படுவதால், குடும்பம் பிரிந்ததென்று வாதாடுகிறவர்கள் அவ்விஷயத்தை ருஜுச்செய்யவேண்டும். (9 மூ. இ. அ. 66; 12 மூ. இ. அ. 523.) பொதுக்குடும்பத்தில் ஒருவன்மட்டும் பாகம் பிரித்துக்கொண்டுபோன காரணத்தைக்கொண்டு மற்றவர்களும் பாகஞ்செய்து கொண்டதாக எண்ணக்கூடாது. (9 க. 817) பொதுக்குடும்பத்தில் சர்க்கார் கணக்குகள் ஒருவன்பேரில்மட்டும் ஏற்பட்டிருக்கிறதென்பதைக் கொண்டாவது குடும்பம் பிரிவினையாய் விட்டதென்று நினைக்க நியாயமில்லை. (1 அ. 347.)

347. விபாக தஸ்தாவேஜு.--பாகத்துக்குப் பத்திரம் அவசியமில்லாமற்போனபோதிலும், பத்திரம் எழுதினால் மறுபடி தகரார் ஏற்படாதபடி நிதானித்தெழுதவேண்டும். பாக பத்திரம் பாகிக்கவேண்டிய சொத்தின் மொத்தக்கிரயத்துக்கு ஏற்படும் ஸ்டாம்பில் எழுதவேண்டும். (ஸ்டாம்பாக்ட் 1-வது ஷிடியூல் 45 கிளாஸ்) 100 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட விலையுள்ள ஸ்தாவரசொத்து விஷயமாய் ஏற்படும் பாகபாத்திரத்தை எழுதினால் அவசியம் ரெஜிஸ்டர்செய்யவேண்டும். (46 மத. 373; ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 17 பிரிவு) ரெஜிஸ்டர் செய்யாவிட்டால் அதை சாட்சியமாகக் கோர்ட்டில் தாக்கல்செய்யக்கூடாது. (5 பம். 232.) பஞ்சாயத்கார்களால் பாகஞ்செய்விக்கப்பட்டால், அதை எல்லா பாகஸ்தர்களும் ஒப்புக்கொண்டு அவர்கள் தீர்ப்பில் கையெழுத்துச்செய்தால் அதே பாகபத்திரமாக எண்ணப்படும். (9 பம். 50; 19 மத. 290; 20 மத. 490).

348. பாகவிஷயமான தாவா.—(1) பொதுக்குடும்பத்தில் பாகஸ்தர்கள் பாகவிஷயத்தில் ஒத்துமைப்படாமலிருந்தால் தாவா செய்யவேண்டும். தாவாகொண்டுவருகிறவர்கள் மற்ற பாகஸ்தர்களையும் ட்ரானசுபர்தாரர்களையும், ஜீவனும்சக்காரர்களையும் பிரதிவாதிகளாகச்சேர்க்கவேண்டும். (2 க. 149) பாக வியாச்சியத்தில் எல்லாப் பொதுச்சொத்தையும் சேர்க்கவேண்டும். (7 பம். ஜ. 46; 11 பம், ஜ. 1; 12 க. 566; 14 க. 122) சொத்துக்கள் வெவ்வேறு கோர்ட்டுக

ளின் அதிகார எல்லைக்குள்ளிருந்தால் வெவ்வேறு பிராது செய்யவேண்டும். (3 ம. ஐ 376; 14 க. 835; 28 மத 216.) பொது சொத்தின் சில பாகத்தை ஒரு பாகஸ்தன்மட்டும் பராதீனஞ் செய்திருந்தால், மற்ற பாகஸ்தர்கள் அந்தப்பராதீனமான சொத்தில் தங்களுக்கு வரவேண்டிய பாகத்துமட்டும் தாவாசெய்யலாமென்று மதராஸ் ஹைகோர்ட்டாரும், குடும்ப சொத்து முழுவதையும் சேர்த்து தாவா செய்ய வேண்டுமென்று கல்கத்தா ஹைகோர்ட்டாருந் தீர்மானித்திருக்கிறார்கள். (5 ம. 196; 11 க. 396) பாகத்தீர்ப்போடு ஜீவனும்சமும் கொடுக்கத் தீர்ப்பாகும். (3 கல். 551; 9 கல். 568.)

(2) சில சொத்துக்கள் பாத்தியம் அல்லது குத்தகை இவைகளுக்குட்பட்டு மற்றவர்களனுபோகத்திலிருந்து அதைப்பிரிவினை செய்வது அசாத்தியமாயிருந்தால் அதைப்பிராதில் சேர்க்கவேண்டியதில்லை. (5 ம. ஐ. 419; 12 பம். ஐ. 148) ஒரு பாகஸ்தன் தன் பாகத்துக்காக தாவாசெய்யும்போது தன் சுவாதீனத்திலிருக்கும் எல்லாப் பொது சொத்துக்களையும், தன் பிராதில் சேர்க்கவேண்டியது. அவைகள்வேறு கோர்ட்டின் எல்லைக்குட்பட்டிருந்தாலும் தாவாவில் சேர்ப்பது அவசியம். (15 ஸ. 111; 25 ஸ. 353; 7 பம். 272; 23 ம. 608; 13 ம. 275; 24 பம். 128; 12 கல் 566; 14 கல் 122.) கோர்ட்டாரால் நேமிக்கப்பட்ட கமீஷனரால் கிரமப்படிபிரித்து கொடுத்த பாகத்தை திருத்த ஜட்ஜிக்கு அதிகாரமில்லை. (28 அல. 75.)

(3) பாகவிஷயத்துக்கு காலாவதியே கிடையாது. ஆனால் ஒரு பாகஸ்தனை மற்றவர்கள் பொதுசொத்தில் அவனுக்கு பாத்தியமில்லையென்று அவனை அனுபோகத்திலிருந்து நீக்கிவிட்டால் அப்படி நீக்கின காலமுதல் 12-வருஷத்திற்குள் தாவாசெய்யவேண்டும். (கால நிர்ணயச்சட்டம் 1 ஷிடியூல் 127 ஆர்டிகள்.)

349. முன் வரும்படி.—பாகவிஷயத்தில் முந்தின வரும்படியைக் கேட்க நியாயமில்லை. ஆனால், பாகஸ்தன் பொதுசொத்தின் அனுபோகத்திலிருந்து நீக்கப்பட்டாலும், பிரிக்கக்கூடாதென்கிற வியாஜ்ஜியத்தால் பொதுசொத்தை ஒருவனே அனுபவித்துக்கொண்டு வந்தாலும் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பாகத்தோடு முந்திய வரும்படியையும் பாகித்துக்கொடுக்க தீர்மானிப்பார்கள். (5 பம். 595 ; 2 ம. 128; 5 ம 236; 16 க. 397.)

350. **பாகடிகிரி.**—பாகத்திற்காக வியாஜ்ஜியம் தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்தே பாகம் பிரிக்கப்பட்டதாய் ஏற்படும். பாக விபாச்சியத்தின் அசல் அல்லது அப்பீலில் தீர்ப்புசெய்வதற்குமுன் பாகஸ்தர்களில் எவராயினும் இறந்தால் அவன் பிரிந்த நிலைமையில் இறந்ததுபோல எண்ணப்படுவான். (48 இ. அ. 358) தீர்ப்புச்சொன்ன நிமிஷமுதல் குடும்பம் பிரிக்கப்பட்டதாகவே எண்ணப்படும். பாகத்தீர்ப்பு ஆனவுடன் வாதிகளாவது, பிரதிவாதிகளாவது நிறைவேற்ற நடவடிக்கை நடத்தி அவரவர்கள் பாகங்களைப் பிரித்துக்கொள்ளலாம் (3 க. 551; 9 க. 568.)

அவிபக்த குடும்பத்திலொருவன் பாகவிபாச்சியஞ்செய்து தீர்ப்புப்பெறுவதற்குள் இறந்துபோனுல், அவன் பெண்சாதி தாவாவை மேலே நடத்த பாத்தியமுண்டு. (45 இ. அ. 151.)

351. **சம்சிருஷ்டி குடும்பம்.**—சேர்ந்த குடும்பத்தின்பாகஸ்தர்கள் பிரிவினைசெய்துகொண்டு பிறகு அவர்கள் எல்லோருமாவது, சில பாகஸ்தர்களாவது மறுபடி சேர்ந்துகொள்வது "சம்சிருஷ்டி" என்று பிருகஸ்பதி வாக்கியத்தில் ஆதாரமிருக்கிறது. அதெப்படியேனில் பாகஞ் செய்துகொண்ட தகப்பன், பிள்ளை, சகோதரர்கள், பெரியப்பன், சிற்றப்பன் முதலியவர்கள் யாராவது பிரியத்தால் மறுபடி சேர்ந்து ஒரே குடும்பமாய் வசித்தால் அவனுக்கு சம்சிருஷ்டன் என்று பெயர்.

352. **சம்சிருஷ்டியை ருசுச்செய்வது.**—ஒருதரம் பாகம் செய்துகொண்டபிறகு சமசிருஷ்டி நடந்ததென்று யார்வாதிக்கிறுர்களோ அவர்களே அதை ருசுச்செய்யவேண்டும். பாகத்திற்குப்பிறகு ஒரு வீட்டிலேயே எல்லாருஞ் சேர்ந்திருப்பது, போசனஞ்செய்வது, சேர்ந்து வியாபாரஞ்செய்வது, பொதுவாய் சொத்தை அனுபவிப்பது முதலிய காரணங்களால் சம்சிருஷ்டி ஏற்பட்டதாக எண்ண முடியாது. (2 ம. ஐ. 235.) சம்சிருஷ்டியாக யிருக்கவேணுமென்கிற எண்ணத்தோடு சேர்ந்திருந்ததாக ருசு ஏற்படவேண்டும். (11 மு. அ 403; 7 க. ஐ. 326.)

353. **சம்சிருஷ்டியின் பயன்.**—நியாயமான சம்சிருஷ்டி ஏற்பட்டால் அவ்விதம் சேர்ந்தவர்களுக்கும் அவர்களுடைய வார்சுகளுக்கும் பாகமாகாத பொதுக்குடும்பத்தில் வசிப்பதுபோலவே

எண்ணப்படுவார்கள். ஆனால், சரியான பொது குடும்பத்துக்கும், சம்சிருஷ்டி குடும்பத்துக்கும் பாகவிஷயமாய் சில வித்தியாசமிருக்கிறது. பொதுக்குடும்பத்தில் சேர்ந்தவன் பின்னேதானகவும், சேராதவன் சகோதரனுமிருந்தால் பொதுகுடும்பத்தில் இறந்தவன் சொத்தை அவர்கள் சமபாகமாய் பங்கிட்டுக்கொள்ளவேண்டும். (16 ம. 440.) அதைப்பின்னல் வார்சுபாத்தியத்தில் விவரிப்போம்.

மிதாட்சா சம்பிரதாயம்.—A B C என்ற மூவரும் முறையே X Y Z என்ற அவிபக்த இந்து சகோதரர்களின் பிள்ளைகள். இந்த A B C மூவரும் தங்கள் குடும்பசொத்துக்களை பாகப்பிரிவினை செய்துகொண்டு அனுபவித்து வந்தார்கள். B-க்கு D என்ற பிள்ளையும் C க்கு E என்ற பிள்ளையுமிருந்தார்கள். A-க்கு சந்ததியில்லை B C இருவரும் இறந்தபின் A இறந்தார். A C இருவரும் ஒரே குடும்பமாயிருந்து வந்தபடியால் A யுடைய சொத்துக்களை E கைப்பற்றிவிட்டார். A யுடைய சொத்துக்களில் பாதி வார்சுக்கிரமப்படி தனக்குக் கிடைக்கவேணுமென்று E பேரில் D வழக்கிட்டார். மேற்கண்டபாகப்பிரிவினைக்குப் பிறகு A C இருவரும் ஒரேகுடும்பமாய் இருந்து சொத்துக்களை யனுபவித்து வந்தார்களென்றும் அதனல் E-க்கு அச்சொத்துக்கள் பாத்தியமேயன்றி D-க்கு எவ்வித பாத்தியமுமில்லையென்றும் E கக்ஷியாடினர்.

மிதாக்ஷரஸ்மிருதிபடி (1) தகப்பன். பிள்ளைகள் (2) சகோதரர்கள் (3) சகோதரர்கள் சகோதரர்களின் பிள்ளைகள் இந்த மூன்று வகுப்பு பாகஸ்தர்கள் பாகப்பிரிவினை செய்துகொண்டு பிறகு சேர்ந்து ஒரே குடும்பமா யிருந்தால் அவர்களுக்கு மட்டில் ஒருவருக்கொருவர் சமீபவார்சென்று இந்து லா ஏற்பட்டிருக்கிறதேயன்றி பாகப்பிரிவினை செய்துகொண்ட சகோதரர் பிள்ளைகள் மறுபடியுஞ் சேர்ந்து ஒரேகுடும்பமாக இருப்பதைக்கொண்டு ஜாஸ்தியான பாத்தியமில்லையென்றும் D யின் பிராதுப்படி A யுடைய சொத்தில் பாதி கிடைக்கவேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (33 கல். 371)

12-வது ஸ்திரீதனம்.

354. ஸ்திரீதனமென்பது.—தானமாகவும், பாககாலத்தில்கிடைத்த சொத்தும், ஜீவனம்சமும், வார்சுபாத்தியமாயும், வேலை செய்து கிடைத்தசம்பாத்தியமும், ராஜியாய்போனதினலும், யதேச்சையாயும் உயில் மூலமாயும் மற்றப்படி கிரமமாய் கிடைத்தசொத்தும் ஸ்திரீதன

மென்று சொல்லப்படும். இப்படிக்கிடைத்த சொத்துக்களை ஸ்திரிகள் ஸர்வசுதந்திரமாய் தங்களிஷ்டப்படி அனுபவிக்கவும், பந்தகபாரதீனஞ் செய்யவும் சுதந்திரமிருந்தாலும், அச்சொத்துக்கள் கிடைத்து முறைப்படி அதில் அவர்களுக்கு சுதந்திரம் ஏற்படும். (14 க. ஐ. 226; 11 பம். 69, 573; 11 அ. 296; 14 ம. 274) அவைகளாவன :—

(1) சுல்கம்.—ஆசுரவிவாகத்தினுலுண்டானது. தகப்பன் கன்னிகைக்காக ஏதாவது பணம் வாங்கிக்கொள்வது மிகவும் நிந்திக்கப்படத்தக்கதானதால் அதைமாற்றி பிராம்ஹவிவாகமாகத் தொடங்கி, பெண்ணுக்குவேண்டியநகை வீட்டுப்பாத்திரம் முதலிய சாமான்களுக்காக வரனிடத்திலிருந்து பணம் நிச்சயஞ்செய்து வாங்கி அந்தப் பணத்தைக்கொண்டு நகைமுதலியவைசெய்து பெண்ணுக்குப்போடுவதும், விவாகச்செலவைச்செய்வதும்.

(2) அத்தியக்னிகம்.—வரனுலாவது, வரன் அல்லது கன்னிகை இவர்களுடையபந்துக்களாலாவது, சிநேகிதர்களாலாவது; மற்ற எவர்களாலாவது விவாகதினத்தில் அக்னி சன்னிதானத்தில் பெண்ணுக்குக் கொடுக்கும் நகைபணம் முதலியவைகளை அத்தியக்னிக மென்னப்படும். (16. ஸ. 115.)

(3) அத்தியாவாகநிகம்.—தகப்பன் வீட்டிலிருந்து புருஷன் வீட்டுக்குப்போகும்போது பெண்ணுக்குப் பெற்ரேரால் இனமாகக் கொடுக்கப்படும் நகை, பணம்முதலிய சொத்துக்கு அத்தியாவாக நிகமென்றுபெயர்.

(4) அன்வாதேயகம்.—கல்யாணத்துக்குப் பிறகு பிறந்தவீட்டு பந்துக்களாலாவது, புக்ககத்து விட்டுபந்துக்களாவது, பெண்ணுக்குக் கொடுக்கும்சொத்து அன்வாதேயகமென்னப்படும்.

(5) பிரீதிதத்தம்.—புருஷன் பிரீதியாய் பெண்சாதிக்குக் கொடுத்த சொத்துக்கு பிரீதிதத்தம் என்று பெயர்.

(6) அதிவேதனிகம்.—வேறொரு பெண்ணை விவாகஞ் செய்வதற்காக முதல் பெண்சாதிக்கு திருப்தியுண்டாகும்படி புருஷன் கொடுக்கும் சொத்துக்கு அதிவேதனிகம் என்று பெயர்.

மேலே சொல்லப்பட்ட ஆறுவிதமும் இரண்டு பாகமாகப்பிரிக்கப்பட்டிருக்கின்றன (1) ஒரு பெண்ணுக்கு அவளுடைய புருஷனு

லாவது, பிறந்த வீடு பக்ஷம் வழி பந்துக்களாலாவது, சிநேகிதர் மைத்துனர் முதலியவர்களாலாவது விவாககாலத்தில் இனுமாகக் கொடுக்கும் சொத்துக்கு யௌதகம் என்றும் (2) மற்றப்படி அவளுக்குக்கிடைத்த சொத்துக்களுக் கெல்லாம் அயௌதக மென்றும் பெயர்.

(7) சௌதாயகம்.—விவாகத்திற்குமுந்தியாவது, விவாககாலத்திலாவது, விவாகத்திற்குப் பிந்தியாவது ஒரு பெண்ணுக்கு அவள் தகப்பன், தாய், புருஷன், சகோதரர்கள், பந்துக்கள் முதலியவர்களால் கொடுத்த ஆடையாபரணங்கள் நிலம் வகைரா முதலியுவைகளுக்கு "சௌதாயகம்" என்றுபெயர். (6 பம். ஸ. தீ. 77; 5 ம. ஐ. 111 ; 1 அ. ஐ. 66 ; 16 ஸ 139 ; 7 அ. ஐ. 279; 1 க. 275; 3 ம. ஐ. 272) மேலேகண்ட சொத்துக்கள் உயில்மூலமாய்க் கிடைத்தாலும் ஸ்திரீதனமென்றே பாவிக்கப்படும். (11 க. ஐ. 295; 2 மார்லி. 65) விசேஷகாலங்களில்மட்டும் தரித்துகொள்வதற்காகப் புருஷன் கொடுக்கிற ஆடையாபரணங்கள் ஸ்திரீதனமாகமாட்டாது. மேலும் புருஷன் தகப்பன் தவிர மற்றவர்களால் தானமாயாவது உயில்மூலமாயாவது ஒரு ஸ்திரீக்கு கொடுத்த சொத்தும் ஸ்திரீதனமாகும். (7 ம. 387; 5 கல். 481)

355. ஜீவனும்சம்.—(1) தானவிக்கிரயம் முதலிய சகல பாத்தியத்தோடு ஜீவனும்சத்துக்காக ஒரு ஸ்திரீக்குக் கிடைத்த சொத்தும் அல்லது கிடைக்கவேண்டிய சொத்தும் ஸ்திரீதனமாகவே எண்ணப்படும். (1 ம. 166; 28 மத. 1; 17 பம். 758; 11 அல. 296; 39 இ. அ. 121.) ஜீவனும்சத்திற்காகக் கிடைக்கவேண்டிய பாக்கிப் பணமும் ஸ்திரீதனமாக பாவிக்கப்படும். (16 ஸ. 76.)

(2) ஸ்திரீதனத்தைக்கொண்டு விருத்திசெய்யப்பட்ட சொத்தும் அதிலிருந்துவரப்பட்ட வரும்படியும் ஸ்திரீதனமாக எண்ணப்படும். (1 அ. 762; 1 ம. 166, 281; 19 ஸ. 292; 2 ம. 333; 28 ம. 1.) அசல் ஸ்திரீதனத்தைப்போல அதன் ஆதாயத்தையும் மீதத்தையும் பாதீனஞ் செய்யவும், வார்சுபாத்தியமாய் அடையவும் பாத்தியமுண்டு.

(3) விவாககாலத்திலும் தவிர மற்றகாலங்களிலும் பந்துக்கள் முதலியவர்களால் ஸ்திரீகளுக்குக்கிடைத்த சொத்தும் வேலைசெய்து

அவர்கள் சம்பாதித்த சொத்துக்களும் வார்சுபாத்தியமாகக் கிடைத்த சொத்தும் ஸ்திரீதனமாகும்.

356. ஸ்திரீகளுக்கு ஸ்திரீதனபாத்தியம்.—(1) ஸ்திரீதனங்களிலெல்லாம் ஸ்திரீகளுக்கு ஒரேவிதமான பாத்தியமில்லை. சில சொத்தில் சகல பாத்தியமும், சில சொத்தில் புருஷனுடைய அதிகாரத்துக்குட்பட்டு சகல பாத்தியமும், சில சொத்தில் சாகிறவரையில் அனுபோகபாத்தியமும், இவ்விதமாக பாத்தியம் ஏற்பட்டிருக்கிறது.

(2) புருஷனிடமிருந்து கிடைத்த ஜங்கமசொத்திலும், மற்ற பந்துக்களிடமிருந்து கிடைத்த ஸ்தாவரஜங்கம சொத்துக்களிலும், மேற்சொன்ன சொத்துக்களை விருத்திசெய்து அதினால் அடைந்த சொத்துக்களிலும் ஸ்திரீகளுக்கு சகல பாத்தியமுமுண்டு. அவைகளை அவர்கள் தங்களிஷ்டப்படி உயில், தானவிக்கிரயம் முதலிய வினியோகஞ்செய்யலாம். (1 ம. ஐ. 85; 5 ம. ஐ. 111; 19 ஸ. 292; 7 பம். 155; 5 அ. 310; 2 ம. 333) புருஷன் அந்த சொத்துக்களை உபயோகிக்கக்கூடாது. உபயோகித்தால் வட்டியுடன் அவனிடம் வசூல்செய்யலாம். புருஷன் பஞ்சம், வியாதி, அதிகக்கடன் இவைகளால் நிரம்பசஷ்ட திசையிலிருந்தால் சௌதாயக ஸ்திரீதனத்தை உபயோகிக்கலாம். ஆனால், அவன் பிறகு நல்ல ஸ்திதியிலிருந்தால் அதைத் திருப்பிக்கொடுக்கவேண்டுமென்று தர்மசாஸ்திரத்தில் ஏற்பட்டிருக்கிறது. புருஷன்பட்ட கடனுக்காக ஸ்திரீதன சொத்துக்களை ஜப்திசெய்ய கடன்காரர்களுக்கு அதிகாரமில்லை. (3 பம். ஐ. 129; 6 அ. ஐ 279.)

357. புருஷன் இனமாக கொடுத்த சொத்து.—(1) புருஷனால் இனமாக கொடுக்கப்பட்ட ஸ்தாவர சொத்தின்பேரில், புருஷனுயிரோடிருந்தாலுமில்லாவிட்டாலும் பெண்சாதிக்கு உயிருள்ளவரையில் அனுபவிக்கலாமே யொழிய வேறேவிதமாய் வினியோகஞ்செய்ய அதிகாரமில்லை. புருஷனிடமிருந்து வார்சுபாத்தியமாய்க் கிடைத்த சொத்து விஷயமாய் என்ன நடவடிக்கைசெய்ய பாத்திய மிருக்கிறதோ அதை மட்டும் இந்த ஸ்திரீதனத்தில் செய்யலாம். (7 ம. 387; 1 அ. 734; 11 பம். ஐ. 403; 5 ம. ஐ. 111.) புருஷனால் சர்வபாத்தியமும் கொடுக்கப்பட்டிருந்தால் மட்டும் அதை அவளிஷ்டம்வந்தபடி செலவுசெய்யவும் வினியோகஞ் செய்யவும் கூடும். அவளிறந்தபிறகு அந்த சொத்து

அவள் வார்சுக்குச் சேருமேயல்லாமல் புருஷனுடைய வார்சுக்குச் சேராது. (19 அ. 233.)

(2) வார்சு பாத்தியப்படி கிடைக்கவேண்டிய சொத்து தானமாயாவது உயில் மூலமாயாவது கிடைத்தாலும் அந்த சொத்தில் ஸ்திரீகளுக்கு பூர்ணசுதந்தரமில்லை. (2 இ. அ. 7; 14 ம. 474; 16 ம. 201; 26 இ. அ. 66; 22 ம. 431.) பூர்ண சுதந்தரமாய் அனுபவிக்கவேண்டுமென்று தகப்பன் முதலியவர்களால் கொடுக்கப்பட்டால் அப்போது ஸ்திரீ வார்சுகள் அந்த சொத்தை சர்வ சுதந்தரத்துடன் அனுபவிக்கலாம். (23 இ. அ. 37; 23 கல். 670; 26 கல். 406.)

358. ஸ்திரீகள் கஷ்டப்பட்டு சம்பாதித்த சொத்து.—ஸ்திரீகள் திரேக சிரமப்பட்டாவது, சாமர்த்தியத்தாலாவது சம்பாதிக்கப்பட்ட சொத்தும், பந்துகள் முதலியவர்களால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சொத்தும் முதலில் புருஷனுக்கே சேரும். அவைகளைப் புருஷன் தன்னிஷ்டப்படி செலவு செய்யலாம். ஆனால் புருஷன் அனுமதியின்றி அந்த சொத்துக்களைப் பெண்சாதி செலவு செய்யக்கூடாது. புருஷனுக்குமுன்பெண்சாதியிறந்தால்சொத்து முதலில் புருஷனுக்கும் பிறகு அவன் வார்சுகளுக்குஞ்சேரும். புருஷன் முதலிலிறந்தால் அந்த சொத்தைப்பெண்சாதி சர்வபாத்தியத்துடன் அடைந்து, பிறகு அவளுடைய சொந்த வார்சுகளுக்குச் சேர்ந்துவிடும். (1 ம. 307; 21 மத 100.) ஆனால், இவ்விதமான சொத்து ஆண்வார்சுகளுக்குத்தான் சேருமென்று மயூககிரந்தத்தில் ஏற்பட்டிருக்கிறது. (12 பம். 505.)

359. ஸ்திரீதன வார்சுகள்.—(1) ஸ்திரீகள் ஸ்திரீதனத்தை முழு சுதந்தரத்தோடு அனுபவித்தாலும் அவர்களுடைய பெண்வார்சுகள் தங்கள் புருஷன் சொத்தை வார்சு பாத்தியத்தால் அடைந்தால் அந்த சொத்து விஷயமாய் என்ன நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ அவைகளே, ஒரு ஸ்திரீயிடமிருந்து மற்றொரு ஸ்திரீ வார்சு பாத்தியமாய் அடைகிற சொத்துவிஷயமாய் ஏற்பட்டிருக்கின்றன. இரண்டாந்தரம் சொத்தையடைந்தவள் இறந்தபிறகு அந்த சொத்து மூலஸ்திரீயின் வார்சுக்குப்போய்ச் சேருகிறது. 362-வது பிரிவை பார்க்கவும். (17 க. 911, 917; 43 க. 64; 19 ம. 107, 110; 29 மத 358; 25 அல. 468, 476.)

(2) விவாகமாகாதபெண் ஒரு ஸ்திரீதனசொத்தை வார்சுபாத்தியமாயடைந்தால் அவள் அந்தை சர்வசுதந்திரமாய் அனுபவிக்கலாமென்றும், அவளுக்குப்பிறகு அது அவள் வார்சுக்கேசேருமென்றுந் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (19 ம. 107; 21 ம. 100.) ஆண்வார்சுக்கு அந்த சொத்து கிடைத்தால் அவனுக்கு அதில் பூர்ணசுதந்திரமுண்டாகிறது.

360. கன்னியா தனத்தின் வார்சு.—கல்யாணமாகாத பெண் இறந்தால் அவளுடைய தகப்பன், தாய், பந்துக்கள் முதலியவர்களால் கொடுத்த சொத்துக்கள் அடையாபரணங்கள் சாதாரணமாய் முதலில் பெண்ணின் அண்ணன்தம்பிகள், பிறகு தாய் தகப்பன், சமீபபந்துக்கள் இவ்விதவரிசையாகச் சேரும்.

361. சுல்கத்துக்குவார்சு.—நிச்சிபதார்த்தமாகி விவாகத்திற்கு முந்தி கன்னிகை யிறந்தால், விவாகநிமித்தம் வரனால் கொடுக்கப்பட்ட சுல்கத்தில் செலவுபோக மீதியைத் திரும்ப வரனுக்கேகொடுக்கவேண்டுமென்று தர்மசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. விவாகத்திற்குப் பின்னுவிறந்தால் அந்த சுல்கம் அவளுடைய பெண் முதலானவர்களுக்குச் சேராமல் முதலில் அவள் அண்ணன் தம்பி, தாய், இவர்களுக்கு வரிசைக்கிரமமாகச் சேருமென்று மிதாட்சரம், மயூகம், வீரமித்திரோதயம், ஸ்மிருதி சந்திரிகை முதலிய தர்மசாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

362. யௌதக அயௌதக ஸ்திரீதனங்களுக்கு வார்சு பாத்தியம்—.விவாககாலத்தில் சபையோரால் வெகுமதியாய் கொடுக்கப்பட்ட ஸ்திரீதனத்திற்கு யௌதம் என்பார்கள். மிதாட்சரப்படி இறந்துபோன ஸ்திரீயினுடைய யௌதக அயௌதக சொத்தை இதனடியில் கண்ட வரிசைக்கிரமமாக அவள் வார்சுகள் அனுபவிக்கவேண்டியது. அவர்களாவன:—

(1) பெண்கள்.—இவர்களில் முதலில் கல்யாணமாகாத பெண்கள், பிறகு விவாகமான ஏழைப்பெண், அதன்பிறகு விவாகமான பணக்காரப்பெண். பெண்களுக்குப்பின் பேத்திகள் சொத்தையடையும்போது இந்த நிர்ப்பந்தம் கிடையது.

(2) பெண்களின் பெண்கள்.—இவர்கள் அவளவள் தாயார் பாகத்தைச் சரியாகப் பங்கிட்டுக்கொள்ளவேண்டியது. மூலஸ்திரீ

யின் பெண்களில் யாராவது ஒருத்தி உயிரோடிருந்தால் அவளுக்குச் சொத்துமுழுவதும் சேருமேயொழிய இறந்துபோன பெண்ணின் பெண்களுக்குச் சேரமாட்டாது.

(3) பெண்களின் பிள்ளைகள்.—இவர்களும் அவனவன் தாய்களின் பாகத்தைமட்டும் சேர்ந்த சகோதரர்களுக்குள் சரியாக பங்கிட்டுக்கொள்ளவேண்டியது.

(4) பிள்ளைகள்.—தாயின் ஸ்திரீதனசொத்து பிள்ளைகளுக்கு கிடைத்தால் அது ஸ்வயார்ஜிதம்போலாய்விடும். (27 ம. 300.)

(5) பிள்ளைகளின் பிள்ளைகள்—இவர்களுக்கு தகப்பன் பாகத்தை அனுசரித்தே பாகங் கிடைக்கும். மூலஸ்திரீக்கும் முந்தி அவள் பிள்ளைகளில் ஒருவனிறந்தால் இறந்தவனுடைய பிள்ளைக்கு பாகங் கிடைக்கமாட்டாது.

(6) பிள்ளையின்பேரன்.—(கொள்பேரன்.) 21 ம 58; 27 ம.300.)

மேலே சொல்லப்பட்ட 6 வரிசைக் கிரமமான வார்சுகளில்லாத பட்சத்தில் இதனடியில்கண்ட வரிசைப்படிக்குள்ளவர்களுக்குக் கிரமமாக சொத்துச் சேருமென்று நிர்ணயசிந்து என்கிற கிரந்தத்தில் விவரமாகச் சொல்லப்படிருக்கிறது. அதாவது:—

(a) கன்னிகாதான விவாகமாயிருந்தால்		(b) கன்னியாவிக்கிரய விவாகமாயிருந்தால்	
7	புருஷன்.	7	தாய்.
8	ஸபத்நீ பிள்ளைகள். (13 ம. 348)	8	தகப்பன்.
9	ஸபத்நீ பிள்ளைகளின் பிள்ளைகள்.	9	அண்ணன் தம்பிகள்.
10	ஸபத்நீ.	10	அண்ணன் தம்பி பிள்ளைகள்.
11	ஸபத்நீபெண்	11	ஸபத்நீமாமா
12	ஸபத்நீபெண்ணின்பிள்ளைகள்.	12	தங்கை தமக்கைகள்.
13	புருஷன் தாயார்.	13	தங்கை தமக்கைபிள்ளைகள்.
14	புருஷன் தகப்பன்.	14	தகப்பனின் தாயார்.
15	புருஷன் அண்ணன் தம்பிகள்.	15	தகப்பனின் தகப்பன்.
16	புருஷன் அண்ணன் தம்பிகளின் பிள்ளைகள்.	16	சிறியதகப்பன் பெரியதகப்பன்.
17	மாமனாரின் தாய்.	17	சிறியதகப்பன். பெரியதகப்பன் பிள்ளைகள்.
18	மாமனாரின் தகப்பன்.	18	புருஷன்.
19	சிறியமாமனார் பெரியமாமனார்.	19	புருஷன்வார்சுகளான சபிண்டகள்.
20	சிறியமாமனார் பெரிய மாமனார். பிள்ளைகள்.		

363. மயூககிரந்தப்படி வார்சுபாத்தியம்.—அன்வாதேயகம், பிரீதிதத்தம் இந்த இரண்டுவிதமான ஸ்திரீதனங்களுக்கு வார்சுபாத்திய ஸ்தர்களை வரிசையாக இதனடியில் காட்டியிருக்கின்றன. எப்படியெனில்:—

(1) யாதொரு ஸ்திரீயின் பிள்ளைகளும், விவாகமாகாத பெண்களும் சேர்ந்து முதலில் சரிபாகத்துக்கு வார்சாகிறார்கள். (34 பம். 385) பிள்ளையில்லாவிட்டால் விவாகமாகாதபெண்ணுக்கே சொத்தெல்லாம் சேர்ந்துவிடும். விவாகமான பெண்ணுக்கும்; பெண்ணின் பெண்ணுக்கும் மரியாதையாக ஏதாவது கொஞ்சம் கொடுக்கவேண்டும். விதவைகளாயிருக்கும் பெண்களுக்குச் சொத்து கொஞ்சமேனும் கிடைக்கமாட்டாது.

(2) விவாகமாகாத பெண்களில்லாவிட்டால், விவாகமாய் சுமங்கலியாயிருக்கிற பெண்களும், பிள்ளைகளும் சேர்ந்து சமமாக பாகித்துக்கொள்ளவேண்டும். (9 பம். 115) பிள்ளைகளில்லாவிட்டால் பெண்களுக்கும், பெண்களில்லாவிட்டால் பிள்ளைகளுக்கும் சொத்து முழுவதும் சேர்ந்துவிடும்.

(3) மேலே சொன்ன வார்சுகளில்லாவிட்டால் பெண்களின் பெண்களும், பெண்களின் பிள்ளைகளும் வார்சாகிறார்கள். இவர்களின் பாகம் தாயாரின் பாகத்தை யனுசரித்ததேயொழிய எல்லாருக்கும் சமபாகமல்ல.

(4) அதற்குமேல் பிள்ளையின் பிள்ளைகளுக்கு வார்சுபாத்தியம் ஏற்படுகிறது. இவர்களுக்கும் அவனவன் தகப்பனுக்குக் கிடைக்கவேண்டிய பாகத்தை தங்கள் சகோதரர்களுக்குள் பிரித்துக்கொள்ளவேண்டுமேயொழிய எல்லாருக்கும் சமபாகமல்ல.

(5) பிறகு இறந்துபோன ஸ்திரீயின் விவாகம் கன்னிகாதானமாயிருந்தால் அவள் புருஷனும் அவன் வார்சும் சொத்தை யடைகிறார்கள். கன்னியா விக்கிரயமானால் அவள் தாயும் தகப்பனும் அவனுடைய வார்சும் வார்சாகிறார்கள்.

(6) மேலேசொன்ன ஸ்திரீதனங்களல்லாமல் மற்ற அத்யக்னிகம் அத்தியாவாகனிக முதலிய ஸ்திரீதனங்களுக்கு மயூககிரந்தத்தில் தெரிவித்திருக்கிறபடி வார்சு யாரென்றால்:—

(1) விவாகமாகாத பெண்கள்.
(2) விவாகமானவர்களில் ஏழைப்பெண்கள்.
(3) விவாகமானவர்களில் பணக்காரப் பெண்கள்.
(4) பெண்ணின் பெண்கள், பெண்ணின் பிள்ளைகள்.
(5) பிள்ளைகள்.
(6) பிள்ளையின் பிள்ளைகள்.

(7) அதன்பிறகு, கன்னியாதானமாயிருந்தால் புருஷனும் அவனுடைய வார்சுகளும், கன்னியா விக்கிரயமாயிருந்தால் தாய் தகப்பனும் அவனுடைய வார்சுகளும்.

மேற்சொன்ன வார்சுகளில்லாவிட்டால், இன்னார் அவளுடைய ஸ்திரீதனத்துக்கு வார்சாவார்களென்று மயூககிரந்தத்தில் விவரமாகக் காணப்படவில்லை. ஆனால், அதில் வரையப்பட்டிருக்கிற பிருகஸ்பதி வாக்கியத்தின் ஆதாரத்தினால், யாதொரு ஸ்திரீ எவர்களுக்கு தாய்க்குச் சமானமாயிருக்கிறாளோ அவர்கள் அவளுடைய ஸ்திரீதனத்துக்கு வார்சாகிறார்கள். அவர்கள் யாரென்றால்:—(1) அக்கா தங்கைகளின் பிள்ளைகள், (2) புருஷனுடைய அக்கா தங்கைகளின் பிள்ளைகள், (3) புருஷனுடைய அண்ணன் தம்பிகளின் பிள்ளைகள் (4) தன் சொந்த அண்ணன் தம்பிகளின் பிள்ளைகள், (5) மாப்பிள்ளை, (6) புருஷனுடைய தம்பி, மேற்சொன்னவர்களில், புருஷனுக்குப் பிறகு புருஷன் வழிபந்துக்களும், தகப்பனுக்குப் பிறகு தகப்பன் வழிபந்துக்களும் முதலில் வார்சாவதாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

364. தாயபாகப்படி யௌதக, அயௌதக ஸ்திரீதனங்களுக்கு வார்சு கிரமங்கள்.—(a) தாயக்கிரமம் தாயபாகம் முதலிய தர்ம சாஸ்திரங்களில் சொல்லியபடி யௌதக சொத்துக்கு வார்சுக்கிரமம் எப்படியென்றால்:—(1) நிச்சியதார்த்தமாகாத பெண்கள், (2) நிச்சியதார்த்தமாய் விவாகமாகாத பெண்கள், (3) விவாகமான பெண்களில் புத்திரசந்ததியுள்ள அல்லது பெறக்தக்க பெண்கள்; (4) மலடியாயிருக்கிற பெண்கள் அல்லது விதவையான பெண்கள், (5) பிள்ளைகள் (6) பெண்ணினுடைய பிள்ளைகள், (7) பிள்ளையுடைய பிள்ளைகள், (8) பிள்ளையுடைய பேரன்கள், (9) சக்களத்தி பிள்ளைகள், (10) சக்களத்தி பேரன்கள், (11) சக்களத்தி கொள்பேரன்கள், இதற்குமேல் அந்த ஸ்திரீயின் விவாகத்தை அனுசரித்ததாயிருக்கிறது

கன்னிகாதானமாயிருந்தால்.	கன்னியாவிக்கிரயமாயிருந்தால்.
12 புருஷன்.	12 தாய்.
13 அண்ணன் தம்பிகள்	13 தகப்பன்
14 தாய்	14 அண்ணன் தம்பிகள்,
15 தகப்பன்.	15 புருஷன்.

பிறகு எட்டின வார்சுகள்.—(16) புருஷனுடைய தம்பிகள் (17) புருஷனுடைய அண்ணன் தம்பிகளின் பிள்ளைகள், (18) ஸ்திரீயின் அக்கா தங்கைகளின் பிள்ளைகள், (19) புருஷனுடைய அக்கா தங்கைகளின் பிள்ளைகள். (20) ஸ்திரீயின் அண்ணன் தம்பிகளின் பிள்ளைகள், (21) மாப்பிள்ளை, (22) மாமனார், (23) புருஷனுடைய தமயன், (24) சதுல்யர்கள், (25) சமானோதகர்கள் இவைகளை பின்னால வார்சுபாத்தியத்தில் விவரிக்கப்படும்.

(b) அயௌதக சொத்துக்கு வார்சுபாத்தியம்.—(1) பிள்ளைகளும் நிச்சியதார்த்தமாகாத பெண்களும்சேர்ந்து சமவார்சாகிறார்கள். (2 க. ஐ. 144) பிள்ளைகள் அல்லது பெண்களில் யாராவதொருவர்மட்டுமிருந்தால் அவர்களுக்கே சொத்துமுழுவதும் சேர்ந்துவிடும். (2) நிச்சியதார்த்தமாய் விவாகமாகாதபெண். (3) புத்திரசந்ததியுள்ள அல்லது பெறத்தக்க விவாகமான பெண். (4) பிள்ளைகளின் பிள்ளைகள். (5) பெண்களின் பிள்ளைகள். (6) கொள்பேரன்கள். (7) சக்களத்தி பிள்ளைகள். (8) சக்களத்தி பேரன்கள். (9) சக்களத்தி கொள்பேரன்கள். (10) விதவை அல்லது மலடிப்பெண்கள்.

அதன்மேல் விவாக விஷயத்தை யனுசரிக்காமல், அயௌதக சொத்துக்கு தாயபாகப்படி வார்சுகள் யாரென்றால் (11) ஸ்திரீயின் அண்ணன் தம்பிகள், (12) தயார, (13) தகப்பன், (14) புருஷன், (15) மேற்சொல்லிய வரிசையில் புருஷனுடைய தம்பி வகையராப் பேர்கள் தூரவார்சுகள். (11 க. ஐ. 286; 1 க. 275) ஆனால், தாயக்கிரமசங்கிரகம் விவாகத்தின்படி வார்சேர்ப்படவேண்டுமென்று சொல்லப்பட்டிருந்த போதிலும், தற்காலத்தில் கோர்ட்டுகளில் அது ஒப்புக்கொள்ளப்படவில்லை.

உதாரணம்.—A என்ற இந்து ஒருவன் தன்னுடைய சில ஸ்தாவர சொத்துக்களை Bஎன்ற தன்னுடைய விவாகமாகாத தங்கைக்கு இனு

ம்பத்திர மூலமாய்க் கொடுத்துவிட்டான். அதில் அச்சொத்துக்களை அவள் ஆயுள் பரியந்தம் அநுபவித்துக்கொள்ளுகிறதென்றும் அவள் ஜீவதிசைக்குப்பிறகு அச்சொத்துக்களை அவள் புருஷன் பிள்ளை பெண்கள் பேரன் பேத்திகள் அடைகிறதென்றுங் கண்டிருந்தது. அந்தப்படி B அச்சொத்துக்களை யடைந்து அநுபவித்து சிலகாலஞ்சென்று இறந்தாள். அக்காலத்தில் அவளுக்கு C என்ற ஓரே மைனர் பெண்ணிருந்தது. அச்சொத்துக்களை B யின் புருஷன் D அடைந்து அவன் பேரில் பட்டாமுதலானதும் ஆய்விட்டது. பின்பு D யும் இறந்தான் அவனுக்கு இரண்டாவது மனைவி E அச்சொத்துக்களை கைப்பற்றிவிட்டாள். C தான் மேஜரானவுடன் தன் தாயார் Bக்குகிடைத்த ஷை சொத்துக்கு தான் நேரான வார்சென்றும் அவைகள் E யிடமிருந்து தனக்குஸ்வாதீனப்படுத்திக் கொடுக்கப்படவேண்டுமென்றும் வழக்கிட்டாள்.

எதிர்வாதம் :—தாவா சொத்துக்களை B யின் ஜீவதிசைக்கும் பிறகு அவள் புருடன் D சர்வசுதந்திரபாத்தியமாயநுபவிக்கும்படி ஏற்பட்டிருக்கிறபடியால் அந்தப்படி அநுபவித்துவந்ததாகவும் அவருக்குத் தான் நேரான வார்சாகையால் அந்த வார்சு கிரமத்தில் தானநுபவிப்பதாகவும் வாதிக்கு தற்காலம் தாவா சொத்தில் எவ்வித பாத்தியமுமில்லையேன்றும் E கக்ஷியாடினாள்.

தீர்ப்பு:—Bக்கு Aயால்கொடுபெட்டதானது இந்துலாப்படி அயௌதக ஸ்திரீதன சொத்தென்றும் பத்திரவாசகத்தில் வரிசைக்கிரம மேற்பட்டிருப்பதைக்கொண்டு C யின் பாத்தியம் இழந்துபோக நியாயமில்லையென்றும் அவ்வித ஸ்திரீதன சொத்துக்கு C தான் நேரான வார்சென்றும் வாதியின் தாவாப்படி பிரிவிகவுன்சிலரார் தீர்ப்புச் செய்தார்கள். (33 கல். 23).

(c) தாயபாகப்படி பித்ருதத்தத்துக்கு வார்சு.—தகப்பனால் பெண்ணுக்குக் கொடுத்த "பித்ருதத்தம்" என்கிற ஸ்திரீதனத்துக்கு வார்சுகளை விவரமாய் அடியில் காட்டியிருக்கிறோம். 1 முதல் 11 வரையில் மேலே சொல்லப்பட்ட யௌதகஸ்திரீனத்துக்கு ஏற்பட்டது போலவே வார்சு பாத்தியம் ஏற்படும். அதன்பிறகு அயௌதக ஸ்திரீதனபோல (12)ஸ்திரீயின்சகோதரர்கள், (13)தாய், (14) தகப்பன், (15)புருஷன், (16) புருஷனுடைய தம்பி வகையாரப் பேர்களான தூரவார்சுகள்.

இந்த தாயபாக கிரந்தந்தான் கோர்ட்டில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. (11 க. ஐ. 286, 300.)

365. வார்சுக்கிரமம் தப்பினல் மறுபடி வார்சு.—ஒரு ஸ்திரீ தனக்கு பாத்தியமாயுள்ள ஸ்திரீதனத்தை மற்றொருவளுக்கு தானமாகவாவது, உயில்மூலமாகவாவது கொடுத்தால் அந்த சொத்து அதைப் பெற்றுக்கொண்டவளுடைய ஸ்திரீதனமாகவே எண்ணப்பட்டு அவளுடைய வார்சுகளுக்குச் சேரும். (11 க. ஐ. 295) ஆனால் வார்சாக சொத்தையடைந்த ஒரு ஸ்திரீ வார்சில்லாமல் இறந்தால் மூல ஸ்திரீயின் வார்சுக்கே அந்த சொத்து சேர்ந்துவிடும். (5 க. 222; 17 க. 91; 917.) ஒருஸ்திரீயினிடமிருந்து மற்றொருஸ்திரீக்கு தானமாகவாவது, உயில் மூலமாகவாவதில்லாமல் வார்சு பாத்தியமாக சொத்துக்கிடைத்தால் அது ஸ்திரீதனமாக மாட்டாது. (2 க. ஐ. 144; 3 ம. ஐ. 314; 6 பம். ஐ. 18; 14 க. ஐ. 237; 5 க. 225) ஸ்திரீதனம் ஒருதரம் ஆண் வார்சுகளுக்குச் சேர்ந்துவிட்டால் பிறகு மறுபடி மூல ஸ்திரீயின் வார்சுகளுக்குச் சேரமாட்டாது.

உதாரணம்.—(1) ஒருஸ்திரீக்கு "ஏ" "பீ" என்கிற இரண்டு பெண்களில் "ஏ" கல்யாணமானவள். "பீ" விவாகமாகாத பெண்ணானதால் தாயாரின் ஸ்திரீதனம் அவளுக்குச் சேர்ந்தது. பிறகு "பீ" கன்னிகாதானமாக கல்யாணம் செய்யப்பட்டு சந்ததியின்றி யிறந்துபோனாள். "பீ" க்கு வார்சுபாத்தியமாகக் கிடைத்த சொத்து அவள் புருஷனுக்குச் சேராமல் "ஏ" யின் வார்சாகிய "ஸி" க்கு போய்ச் சேர்ந்துவிடும். ஸ்திரீ தனமாயிருந்தால் புருஷனுக்குசேரும்.

(2) பங்காளத்தில் 'க' என்கிற தாயிடமிருந்து 'த' என்கிற பெண் வார்சு பாத்தியமாக சில சொத்தையடைந்து 'ச' என்கிற பெண்ணையும், 'ந' என்கிற தாயின் சகோதரனையும் விட்டிறந்தாள். அவளுக்குத் தாயிடமிருந்து வார்சுபாத்தியத்தால் கிடைத்த சொத்துக்கு, 'ச' என்கிற பெண்ணைக்காட்டிலும் மாமனே தாய்க்கு சமீப வார்சாவான். (1 பம். ஸ. தீ. 3; 17 க. 611.)

366. துஷ்கிருத்தியங்களால் ஸ்திரீதன சொத்துப் போகாது.—(1). ஸ்திரீதன சொத்துக்கு வார்சாக ஏற்பட்டவள் வியபசாரியாயிருந்தாலும், ஜாதி பிரஷ்டையானாலும் அவளுடைய பாத்தியத்திற்கு பாதகமுண்டாகமாட்டாது. (1 அ. 46; 26 ம. 509; 30 கல் 521) புனர் விவாகஞ்செய்துகொண்டாற்கூட அவளுக்கு வேறொரு ஸ்திரீயினுடைய ஸ்திரீதன சொத்திலுள்ள வார்சுபாத்தியம் போகமாட்டாது. (1856-ஹுத்து 15-வது ஆக்ட்.) விபசாரிதனத்தில் பிறந்த பிள்ளைக்

(2) கொள்பாட்டன் தகப்பன், கொள்பாட்டன் பாட்டன், கொள்பாட்டன் கொள்பாட்டன் இவர்களுடைய பெண்சாதிகள் மிதாக்ஷரத்தின் படி தூரசபிண்டர்களாகிறார்கள்.


(3) பம்பாய் ராச்சியங்களில் வழக்கமாய் அனுஷ்டிக்கப்படுகிற மயூககிரந்தப்படி பெண், தமக்கை, தங்கை அண்ணன் தம்பிகளின் பெண்சாதிகள் இவர்கள் கூட சகோதர சபிண்டர்களாக எண்ணப்படுகிறார்கள்.

372. பந்துக்களின் விவரம்.—சபிண்டர்கள், சமானோதகர்கள் பந்துக்கள் இம்மூன்று வகுப்பினரும் தாயபாகப்படி பிண்டப்பிரதானம் முதலிய கர்மங்களைச்செய்வதினாலும், மிதாட்சரப்படி ரக்தசம்பந்தத்தினாலும் கிருஹஸ்தனுக்கு பந்துக்களாகிறார்கள். அதில் முதல் 3 தலைமுறைவரையிலுள்ளவர்களுக்கு சமீபசபிண்டர்களென்றும், 4, 5, 6, தலைமுறைவரையில் தூரசபிண்டர்கள் அல்லது சகுல்யர்களென்றும், அதற்கு கீழ் ஏழு தலைமுறைவரையிலுள்ளவர்கள் சமானோதகர்களென்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறார்கள்.

373. தாயபாக அனுஷ்டானப்படி பந்துக்களின் வம்சாவளி —(1)யாதொரு கிருஹஸ்தனுக்கு சபிண்டர்கள் சமானோதகர்கள் சகோத்திரர்களாயிருக்கிறார்கள். வேறு கோத்திரத்திலிருப்பவர்கள் கூட சபிண்டர்களாக விருப்பதுண்டு. இவர்களுடைய சபிண்ட சம்பந்தம், பார்வணசிரார்த்தகாலத்தில் தகப்பன் பாட்டன் கொள் பாட்டன் இவர்களுக்குப் பிண்டங்கொடுப்பதுபோல, தாயின் தகப்பன், தாயின் பாட்டன், தாயின் கொள்பாட்டன் இவர்களுக்கும் பிண்டங்கொடுப்பதால் கிருஹஸ்தனுக்கு பந்துத்வ முண்டாகிறது. வெவ்வேறு கோத்திரத்திற் பிறந்தவர்கள் ஒரே பெரியவருக்குப் பிண்டப்பிரதானஞ் செய்தால் அவர்கள் ஒருவருக்கொருவர் சபிண்டர்களாகிறார்கள்.

(3) வேறுகோத்திர சபிண்டர்களுக்கு பந்துக்களென்று பெயர் அவர்கள் இரண்டுவிதம். அதாவது (1) தகப்பன்வழி பந்துக்கள். (2) தாய்வழி பந்துக்கள். இதனடியில் காட்டியிருக்கிற வம்சவிருட்சங்களில் மேலே சொன்ன தகப்பன்வழி, தாய்வழி பந்துக்களை விவரமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

(1) தகப்பனைச்சேர்ந்த பந்துக்கள்.



பெற்றுக்கொள்கிற ஒவ்வொருவருக்கும நெருங்கிய சபிண்டர்களெ ன்றும், லேபப்பிரதானங்கொடுக்கிற ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு தூர சபிண்டர்களென்றும் சொல்லப்படுவார் கள். தூரசபிண்டர்களுக்கு **சகுல்யர்க**ளென்றும் பெயர். உதகதான மட்டுங் கொடுப்பவர்கள் பெற்றுக்கொள்ளுகிற ஒவ்வொருவருக்கும் **சமானோதகர்கள்** என்றுசொல்லப்படுவார்கள்.

இப்படிப்பட்ட பிண்டப்பிதானங் கொடுக்கிறது பெற்றுக் கொள்ளுகிறது இதனால் மட்டுமில்லாமல், ஒரேபெரியவருக்கு பக்க தாயாதிகளாயிருப்பவர் பிண்டப்பிரதானஞ் செய்யவேண்டியதாகவேற் பட்டால் இவ்விதஞ் செய்கிறவர்களுக்குஞ் சபிண்ட சம்பந்த முண்டா கிறது. (2 ச. ஐ. 34; 5 ச. ஐ 39.)

370. சபிண்டர்களின் வம்சவிருக்ஷம். — இதனடியில் விவரித் திருக்கும் வம்சவிருட்சத்தில் ஒரு கிருஹஸ்தனுக்கு நெருங்கிய சபிண் டர்களைக் காட்டியிருக்கிறது. அவர்களாவன: —

(1) பிள்ளை, பேரன், கொள்பேரன் இம்மூன்று பேர்களும் கிருகஸ்தனுக்கு பிண்டப்பிரதானஞ் செய்வதாலும, தகப்பன், பாட் டன், கொள்பாட்டன், இம்மூவருங் கிருஹஸ்தனால் பிண்டப்பிரதானம் பெற்றுக்கொள்வதாலும், இவ்வாறுபேர்களும் கிருஹஸ்தனுக்கு நெரு ங்கிய (சமீப) சபிண்டர்களாகிறார்கள்.

(2) ஆஸ்திதாரன் பிண்டப்பிரதானஞ் செய்யவேண்டிய தகப் பன், பாட்டன், கொள்பாட்டன், இவர்களில் மூன்றுபேர்களுக்காவது, இருவர்களுக்காவது, ஒருவருக்காவது, பக்கதாயாதிகளான அண் ணன், தமபி, சிறியதகப்பன், பெரியதகப்பன், சிறியபாட்டன், பெரிய பாட்டன், இவர்களின் பிள்ளை பேரன் இவர்கள்கூட பிண்டப்பிரதா னஞ் செய்வதால் இவர்களெல்லோருங் கிருஹஸ்தனுக்கு சமீப சபிண் டாகளாகிறார்கள்.

(3) கொள்பேரனுக்கீழ் மூன்று தலைமுறைவரையிலுள்ளவர்க ளும், கொள்பாட்டனுக்குமேல் மூன்றுதலை முறைவரையிலுள்ளவர்க ளும், அண்ணன் தம்பிகளின் பேரனுக்குக்கீழ் 3 தலைமுறைவரையிலு ளுள்ளவர்களும், சிறியதகப்பன் பெரியதகப்பன் பேரனுக்குக் கீழ் 3 தலை முறைவரையிலுள்ளவர்களும், சிறியபாட்டன் பெரியபாட்டன் பேரனுக்குச் கீழ் 3 தலைமுறைவரையிலுள்ளவர்களும், இவர்களுக்கும் கிருஹஸ்தனுக்கும் லேபப்பிரதானம் மட்டுங் கொடுக்கவும் வாங்கவுஞ் சப்பந்தமிருப்பதால் இவர்களெல்லோரும் கிருஹஸ்தனுக்கு தூரசபிண் டர்கள் அதாவது **சகுல்யர்கள்** ஆகிறார்கள்.

சபிண்டர்களின் வம்சாவளி.

கொள்பாட்டன்.

பெரியபாட்டன்.	பாட்டன்.	சிறியபாட்டன்.
பிள்ளை		பிள்ளை
பேரன்		பேரன்
பெரியப்பன்	தகப்பன்	சிற்றப்பன்
பிள்ளை		பிள்ளை
பேரன்		பேரன்
	கிருகஸ்தன்.	
அண்ணன்		தம்பி
பிள்ளை	பிள்ளை	பிள்ளை
பேரன்	பேரன்	பேரன்
	கொள்பேரன்	

371. ஸ்திரீசபிண்டர்கள்.—(1) தகப்பன், பாட்டன், கொள் பாட்டன் இவர்களுக்குக் கொடுக்கப்படும் பிண்டங்களை இவர்கள் பெண்சாதிகள் கூட அடைவதால் ஒவ்வொரு புருஷனுக்கு தாய், பாட்டனுடைய பெண்சாதி, கொள்பாட்டனுடைய பெண்சாதி இவர்கள் கூட சபிண்டர்களாகிறார்கள். (2 பம். 420, 430, 445) மேலும் புருஷன் தேகத்தில் பாதி ஸ்திரீ பாகமாக யெண்ணப்படுகிற காரணத்தைக் கொண்டும், பிள்ளையன்றியிறந்துபோன புருஷனுக்குக் கர்மத்தை நடத்தும் காரணத்தைக்கொண்டும் பெண்சாதி புருஷனுக்கு சபிண்டையாகிறாள்.

கும் சீதனசொத்தில் பாத்தியமுண்டு. (21 மத 40.) விபசாரியாய்ப் போனவளுடைய சீதனத்தை சகோதரன் முதலிய ரக்தபந்தமுள்ளவர்கள், ஸபத்நீபிள்ளை, புருஷன் முதலானவர்கள் அடைவார்கள் (12 மத 277; 23 மத 17; 29 அல 4; 49 கல் 650; 38 மத 1144.)

(2) அநேகர் தங்களுடைய முதல்தாரமிறந்துபோனவுடன் அவளுடைய ஆடையாபரணங்களைப் பெண்கள் முதலான வார்சுகளுக்குக் கொடாமல் தங்களுடைய இரண்டாவது தாரத்துக்குப்போட்டு அழகு பார்க்கிறார்கள். இது சட்டப்படி அனியாயமானது. அந்த நகைகளுக்கு வார்சாயுள்ள பெண்கள் தாயாரிறந்த 3 வருஷங்களுக்குள் தகப்பன்பேரிலும், அந்த நகைகளைத் தரித்துக்கொண்டிருக்கிற சிறிய தாயார்பேரிலும் தாவாசெய்து நகைகளையாவது அல்லது அவைகளின் கிரயத்தையாவது வாங்கலாம். பெண்கள் மைனராயிருந்தால் மைனரிடி நீங்கினது முதல் 3 வருஷத்திற்குள் தாவா செய்ய வேண்டும்.

13-வது வார்சுபாத்தியம்.

(a) வார்சுபாத்தியத்தின் மாதிரி.

367. அனுமத்தாக சோத்து நிற்காது.—யாதொரு சொத்தின் சுவான்தாரன் மரணமடைந்தால் அவனுடைய சமீபவார்சுக்கு அந்த க்ஷணமே சொத்துச் சேர்ந்துவிடும். பிறகு அவனைவிட சமீபவார்சு உண்டாகலாம் என்கிற காரணத்தால் அந்த சொத்து அவனைச்சேராமல் அனுமத்தாய் நிற்கமாட்டாது. ஆனால் அவ்விதம் சகலபாத்தியமுள்ள ஆண்வார்சுக்கு ஒருதரம் சொத்துச் சேர்ந்தபிறகு அவனைப் பார்க்கச் சமீபவார்சுகள் பிறந்தாலும் அவர்களுக்கு அந்த சொத்தில் எவ்விதமான பாத்தியமும் உண்டாகமாட்டாது. (2 க. ஐ. 103; 6 பம். ஸ. தீ. 224; 1 ஸ. 353; 9 ம. 64; 6 பம். 616; 2 கல் 195; 7 கல். 178.) ஆனால், கர்ப்பத்திலிருக்கிற சிசு விஷயத்தில் மட்டும் இந்த ஏற்பாடு செல்லாது. எப்படியென்றால்:—

(1) ஒரு சுவான்தாரனிறந்தபோது அவனுக்கு ஒரு பிறவிக் குருடனான பிள்ளையும், பிரித்துக்கொண்டுபோன சகோதரன் பிள்ளை

யும் தவிர மற்ற பேரன். கொள்பேரன், பெண்சாதி, பெண், தௌஹித்திரன் முதலிய வார்சுதாரர்கள் ஒருவருமில்லாதிருந்தால் பிறவிக்குருடனுக்கு சொத்துச் சேராமல் பிரிந்துபோன சகோதரன் பிள்ளைக்குச் சொத்தெல்லாம் சேர்ந்துவிடும். குருடனுக்குப்பிள்ளை பிறப்பானென்று சொத்து அனாமத்தாய் நிற்காது. பிறகு அந்தக் குருடனுக்குப்பிள்ளை பிறந்தாலும் அந்தப்பிள்ளைக்குப் பாட்டன் சொத்தையடைய பாத்தியமில்லை. சுவான்தாரனிறக்குஞ் சமயத்தில் குருடன் பெண்சாதி கர்ப்பமாயிருந்து பிள்ளையைப் பெற்றிருந்தால் அந்தப்பிள்ளைக்குச் சொத்துச்சேரும். (9 க. ஐ. 397; 5 பம். ஸ. தீ. 315.)

(2) சுவான்தாரன் இறந்தபிறகு அவனுடைய விதவையால் எடுத்துக்கொண்ட சுவீகாரப்பிள்ளைக்குச் சொத்துசேரும் என்கிற விஷயம் முன்னமேயே 92-வது பிரிவில் தெரிவித்திருக்கிறோம்.

(b) வார்சுகளின் சம்பந்தம்.

368. வார்சுகள் மூன்றுவிதம்.—ஒவ்வொரு புருஷனுக்கும் கோத்திரஜாள் அல்லது தாயாதிகளான **ஸபிண்டர்கள், சமானோதகர்கள்,** அன்னிய கோத்திரர்களான **பந்துக்க**ளென்று மூன்றுவித வார்சுகளிருக்கிறார்கள். இந்த வார்சுகள் **மிதாட்சரப்படி** நெருங்கிய **ரக்த** சம்பந்தத்தைப் பற்றியும், **தாயபாகப்படி** பிண்டப் பிரதானம் முதலிய கர்மங்களைச் செய்வதைப்பற்றியும் ஏற்படுகிறார்கள். (7 க. 119; 9 க. 318; 2 க. ஐ. 33; 2 பம். 425; 5 பம். 110.)

369. சபிண்டர்கள் சமானோதகர்கள்—ஒவ்வொருவனும் (1) தகப்பன். (2) பாட்டன், (3) கொள்பாட்டன் இவர்களுக்குப் **பிண்டப்பிரதானம்** செய்யவும் (4) கொள்பாட்டன் தகப்பன், (5) கொள்பாட்டன்பாட்டன், (6) கொள்பாட்டன்கொள்பாட்டன் இவர்களுக்கு **லேபப்பிரதானம்** செய்யவும், கொள்பாட்டன் கொள்பாட்டனுக்கு மேல் 7 தலைமுறைவரையிலுள்ளவர்களுக்கு **உதகதானஞ்** செய்யவும் கட்டுப்பட்டவனென்று தர்மசாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இதனால் ஒவ்வொரு மனிதனும் (1) பிள்ளை (2) பேரன், (3) கொள்பேரன் இவர்களால் **பிண்டப்பிரதானம்** பெற்றுக்கொள்ளவும், (4) கொள்பேரன்மகன் (5) கொள்பேரன் பேரன் (6) கொள்பேரன் கொள்பேரன் இவர்களால் **லேபப்பிரதானம்** பெற்றுக்கொள்ளவும், கொள்பேரன் கொள்பேரனுக்குக் கீழ் ஏழு தலைமுறை வரையிலுள்ளவர்களால் **உதகதான** மட்டும் பெற்றுக்கொள்ளவும் அதிகாரமுள்ளவனென்று ஏற்படுகிறது. மேற்சொல்லப்பட்ட தானபரிக்கிரகங்களே சபிண்ட சமானோதக சம்பந்தங்களுக்கு காரணங்களாயிருக்கின்றன. எப்படியெனில்—பிண்டப் பிரதானங் கொடுக்கிறவர்கள்

199-வது பக்கத்திற்கண்ட வம்சவிருட்சத்தில் நக்ஷத்திர அடையாளம் போடப்பட்டவர்களெல்லாரும் கிருகஸ்தனுக்கு வேறு கோத்திர சபிண்டரான தகப்பனைச்சேர்ந்த பந்துக்களாகிறார்கள். இவர்கள் கிருகஸ்தனுக்காவது, கிருகஸ்தனுடைய தகப்பன், பாட்டன், கொள்பாட்டன் இவர்களில் யாருக்காவது பிண்டங்கொடுக்கத்தக்கவர்கள்.

(2) தாயைச்சேர்ந்த பந்துக்கள்.

தாயின் கொள்பாட்டன். **

தாயின் பெரியபாட்டன். — பிள்ளை. * — பேரன். *

தாயின் பாட்டன். * *

தாயின் பாட்டனின் சகோதரிகள். — பிள்ளை *

தாயின் பெரிய தகப்பன். — பிள்ளை. * — பேரன் *

தாயின் தகப்பன். * *

தாயின் அத்தை. — பிள்ளை. *

மாமன். * — மாமன் பிள்ளைகள். * — மாமன் பேரன். *

தாய்

தாயின் சகோதரி — பிள்ளை. *

கிருகஸ்தன்.

மேலே காட்டியிருக்கிற வம்சவிருட்சத்திள்ள புருஷர்களெல்லாம் கிருகஸ்தனுக்கு வேறு கோத்திர சபிண்டர்களாகிறார்கள். இரண்டு நட்சத்திர அடையாளமுள்ள பெரியோர்கள் கிருகஸ்தனாலாவது ஒரு நட்சத்திர அடையாளமிட்ட புருஷர்களாலாவது கொடுக்கும் பிண்டங்களைப் பெற்றுக்கொள்வதால், கிருகஸ்தனும் ஒரு நக்ஷத்திர அடையாளமிட்ட புருஷர்களும் அன்னியகோத்திர தாய்வழி சபிண்டர்களாகிறார்கள்.

தாய்வழி தகப்பன்வழி பந்துக்களைக் காட்டியிருக்கிறவம்சவிருட்சத்தில் சிலமாத்திரம் தாயபாக தாயக்கிரமசங்கிரகம் முதலிய சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகள் உதாரணமாகச் சொல்லப்பட்டிருப்பதால், இதில் சொல்லியிராத மற்றவேறு கோத்திர சபிண்டர்களும் பந்துக்களென்றே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். (2 க. ஐ. 28; 5 க. ஐ. 15; 12 மூ. இ. அ. 448.)

374. மிதாட்சரப்படி பந்துக்களின் விவரம்.—மிதாட்சரப்படி (1) ஆத்ம பந்துக்கள், (2) பிதுருபந்து அல்லது தகப்பன்வழி பந்துக்கள் (3) மாதுருபந்து அல்லது தாய்வழி பந்துக்கள் என்று மூன்று விதம். ஒருவனுடைய அத்தை, சிறியதாயார் பெரியதாயார், மாமன் இவர்களுடைய பிள்ளைபேரன்களை ஆத்மபந்துக்களென்றும், தகப்பனுடைய அத்தை சிறியதாயார் பெரியதாயார் மாமன் இவர்களுடைய பிள்ளைகளை பிதுருபந்துக்களென்றும், தாயின் தகப்பனுடைய சகோதரி, தாயின்தாயின் சகோதரி, சகோதரனுடையபிள்ளைகளையும் மாதுருபந்துக்களென்றும் சொல்லப்படுகிறார்கள். தாயபாக அனுஷ்டானப்படி மேற்சொன்ன ஆத்மபந்துக்களும் தகப்பனுடைய அத்தை பிள்ளைகளும், தாயினுடைய அத்தை பிள்ளைகளும், அத்தை பிள்ளைகளும், பந்துக்களாவார்கள். மேற்சொன்ன மற்றவர்கள் பந்துக்களல்ல. ஏனெனில், அவர்கள் கிருஹஸ்தனுக்காவது அவளுடைய முன்னோர்களுக்காவது பிண்டப்பிரதானங் கொடுக்க யோக்கியதையில்லாதவர்கள் மேற்சொன்னமூன்று வகுப்பு பந்துக்கள் உதாரணத்துக்காகச் சொல்லியிருப்பதால், அதில் சொல்லியிராத ஒருவனுடைய தங்கை தமக்கைபிள்ளைகளும் மிதாட்சரப்படி பந்துக்கள்தானென்று தீர்ப்புகள்செய்யப்பட்டிருக்கின்றன. (2 க. ஐ. 28; 5 க. ஐ. 15; 6 ம. ஐ. 278; 12 மூ. இ. அ. 448.)

பம்பாயிராஜ்யத்தில் மயூக கிரந்தப்படி தமக்கை தங்கைகள், சகோதரியின் பெண்கள், சகோதரன் பெண்கள், பெண்ணினுடைய பெண் இவர்கள் முதலிய ஸ்திரீவர்க்கமெல்லாம் பந்துக்களாக ஏற்பட்டிருக்கிறார்கள்.

(c) வார்சுகளின் வரிசைக்கிரமம்.

375. மிதாட்சர தாயபாக சித்தாந்தங்கள்.—(1). மிதாட்சரசித்தாந்தப்படி ரக்த சம்பந்தத்தைக்கொண்டும், தாயபாகப்படி இறந்தவ

னுக்குப்பிண்டப்பிரதானங்கொடுக்கிற சம்பந்தத்தைக்கொண்டும் வார்சுக்கிரமம் ஏற்படுவதால், மிதாட்சர தாயபாக சித்தாந்தங்களுக்கு வித்தியாசம் ஏற்படுகிறது.

(2) தாயபாகப்படி பிண்டத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவனைக் காட்டிலும் கொடுப்பவன் சமீபவார்சாகிறான். உதகதானத்தைக்காட்டிலும் லேபதானமும், லேபதானத்தைக்காட்டிலும் பிண்டப்பிரதானமும் உயர்ந்ததாக எண்ணப்படுவதால், சமானோதகர்களைக்காட்டிலும் சகுல்யர்களும், சகுல்யர்களைக்காட்டிலும் சபிண்டர்களும் நெருங்கின வார்சுகளாகிறார்கள். மேலும், தகப்பன் வழியில்மட்டும் பிண்டப்பிரதானஞ் செய்கிறவர்களைக் காட்டிலும், தாய்தகப்பனிருவர் வழிகளிலும் பிண்டப்பிரதானஞ் செய்கிறவர்கள் நெருங்கின வார்சாகிறார்கள். இந்த நியாயங்களையனுசரித்து தாயபாகத்தில் வார்சுகளின் வரிசை யேற்படுத்தியிருப்பதால், வேறு கோத்திரக்காரர்களாயினும் பிண்டங் கொடுக்கயோக்கியதை யுடையவர்களாதலால், பந்துவரிசையிலுள்ள எல்லோரும் லேபப்பிரதானம் செய்கிற சகுல்யர்களைக்காட்டிலும், உதகதானஞ்செய்கிற சமானோதகர்களைக்காட்டிலும் நெருங்கிய வார்சாகிறார்கள். மிதாட்சரத்தில் பிண்டங்கொடுப்பது பிரதானமில்லாததால் பந்து வரிசையிலுள்ளவர்கள் வேறுகோத்திரத்தார்களாயிருந்தால் அவர்கள், ஒரு கோத்திரத்தானாகிய சமானோதகர்கள் சகுல்யர்கள் இவர்களுக்குப்பிற்பாடு வார்சாகிறார்கள்.

(3) பொதுவாய் முதலில் ஆண் சந்ததிகள், பிறகு இறந்தவன் விதவை, பெண், தௌஹித்திரன் (பெண்ணின்பிள்ளை) தாய், தகப்பன் அண்ணன் தம்பி, அண்ணன்தம்பி பிள்ளைகள், இவ்விதம் எல்லா அனுஷ்டானங்களிலும் கொஞ்சதூரவரையில் வரிசையாக வார்சுகளேற்பட்டுப் பிறகு வித்தியாசப்படுகின்றன. அதை போகப்போக பின்னவ் விளக்கிக்காட்டுவோம்.

ஒரு கேசில் A என்பவனுக்கு பாட்டன் சகோதரி குமாரனும், அத்தையின் பேரனுமிருந்தார்கள். சமீப பந்துவாகிய அத்தையின் பேரனாகிய சமீப ஆத்மபந்துவுக்கு A யின் சொத்துக்கிடைத்தது. (29 ம. 115).

376. புத்திர சந்ததியின் பாத்தியம்.—(1) ஒருவனிறந்தபிறகு அவன் சொத்துக்கு முந்தி பிள்ளைகள், பேரன்கள், கொள்பேரன்கள் வார்சுகளாகிறார்கள். தாயபாகப்படி பாகஸ்தர்களுக்கு தனித்தனி வார்சு பாத்தியமுண்டேயன்றி மிதாட்சரப்படி பொது பாத்தியமில்லை. அதுபோல, மிதாட்சர சம்பிரதாயப்படி பாகஸ்தர்களுக்கு தனித்தனி வார்சுபாத்தியம் கிடையாது, பொது பாத்தியமட்டுமுண்டு.

(2) தகப்பனும் பிள்ளைகளும் பிரித்துக்கொண்ட பிறகு வேறு சில பிள்ளைகள் பிறந்தால், மிதாட்சரப்படி இவர்கள் தகப்பனுடைய கூட்டு பாகஸ்தர்களாகிறார்கள். (4 அல 427.) ஆகையால் அவனுடைய முழுசொத்தும் இவர்களுக்கே சேரும். அப்படிப் பிரிந்து போனபின் பிள்ளை பேரன் கொள்பேரன் ஒருவருமில்லாவிட்டால் மிதாட்சரப்படி தகப்பன் சொத்துக்குப் பிரிந்துபோன பிள்ளையும் அவன் வார்சுகளும் பாத்தியஸ்தர்களாகிறார்கள். பிள்ளை, பேரன், கொள்பேரன் இவர்களிருக்கிறவரையில் சுவான்தாரன் பெண்சாதிக்கு ஜீவனாம்சமட்டுங் கிடைக்குமேயொழிய சொத்து பாத்தியமில்லை. (2 ம. 182; 3 பம். 54; 21 ம. 425; 25 ம. 385; 23 கல். 670.)

(3) ஒருவன் தன்னுடன் பிரிந்து தனியாயிருக்கிற பிள்ளையையும், சேர்ந்திருந்த பெண்சாதியையும் வைத்து விட்டிறந்தால், அவன் சொத்து பிரிந்த பிள்ளையைச்சேரும். (3 பம். 54; 2 ம. 182.)

(4) பிள்ளைகளுடன் பாகஞ்செய்துகொண்ட ஒருவன் தன் பங்கு தனக்கும் தன் பெண்சாதிக்கும் சர்வ சுதந்தரமாயிருக்கவேண்டுமென்று பாக பத்திரத்தில் கண்டிருந்தான். தகப்பன் இறந்த பிறகு பிள்ளைகள் தாவா செய்தார்கள், தஸ்தாவேஜின் வாசகப்படி சொத்து தகப்பனுக்கும் தாய்க்கும் கூட்டாயிருப்பதால் தகப்பன் பாகம் பிள்ளைக்குச் சேரவேண்டியதென்று தீர்ப்புச்செய்யப்பட்டது. (27 ம. 498.)

377. ஒரேமாதிரியான வார்சுபாத்தியம்.—வார்சுபாத்திய விஷயத்தில் பிள்ளை, பேரன், கொள்பேரன்கள் இம்மூன்று பேர்களும்

மூலபுருஷனுக்கு உத்தர கிரியை சிரார்த்தம் முதலியவை செய்யபாத்தியமுள்ளவர்களாயிருப்பதால் இவர்கள் ஒருவருக்குப்பின், ஒருவர் வார்சாகாமல் சமமான ஓரேவிதமான பாத்தியதையையுடையவர்களாதலால் ஓரேவரிசையிலிருப்பவர்களாக எண்ணப்படுகிறார்கள். கொள்பேரனும் சுவான்தாரனுடைய ஜீவித்திருக்கும் பிள்ளைகளோடு சரியான பாத்தியமுள்ளவனாகிறான். (16 ம. 14.) கொள்பேரன்பிள்ளை வார்சு கிரமத்தில் மிகவும் தாழ்ந்திருக்கிறான்.

உதாரணம்—(1) ஒரு கிருகஸ்தன் இறந்துபோகையில் "இராமன்" "கிருஷ்ணன்" என்கிற இரண்டு பிள்ளைகளும், இராமனால் "சுந்தரம்" "வாசுதேவன்" என்கிற இரண்டு பேரன்களும், கிருஷ்ணனால் "கல்யாணன்" என்கிற பேரனும் இருந்தார்கள் சொத்துக்கு "இராமன்" "கிருஷ்ணன்" என்கிற இருவர்கள் மட்டும் வார்சாகிறார்கள். "சுந்தரம், வாசுதேவன் கல்யாணன்" இவர்கள் தங்களுடைய தகப்பன் பாகத்துக்குமட்டும் வார்சாகி அதை அவரவர்கள் தங்களுக்குள் பாகித்துக்கொள்ளவேண்டும்.

உதாரணம்.—(2) ஒரு கிருஹஸ்தனுக்கு மூன்றுபிள்ளைகளிருந்தார்கள் அவனிறந்து போகும்போது முதல் பிள்ளையும், இரண்டாவது பிள்ளையால் இரண்டு பேரன்களும், மூன்றாவது பிள்ளையால் ஒரு கொள்பேரனுமட்டும் உயிருடனிருந்தார்கள். அந்த கிருஹஸ்தனிறந்தபிறகு சொத்தை மூன்று பாகமாகப் போட்டு முதல் பிள்ளை ஒருபாகமும் இரண்டாவது பிள்ளையின் பிள்ளைகள் ஒரு பாகமும், மூன்றாவது பிள்ளையாலேற்பட்ட கொள்பேரன் ஒரு பாகமும் எடுத்துக்கொள்ளவேண்டியது.

குறிப்பு.—இறந்துபோனவனுடையசொத்து அவனுடைய புத்திரர்கள் எல்லோருக்கும் சமபாகமாகச் சேருமேயல்லாமல் அவனுடைய எல்லா பிள்ளைக்குமாவது பெண்சாதிகளின் எண்ணிக்கைப்படியாவது சேரமாட்டாது.

378. பிரிக்கத்தகாத ஜமீனில் வார்சு பாத்தியம்.—(1) பிரிவினையாகக்கூடாத ஜமீன், மிட்டா, அல்லது ஜாகீர் விஷயத்தில், காலஞ்சென்றுபோன ஜமீன்தார், மிட்டாதார் அல்லது ஜாகீர்தாருடைய மூத்த மகன் மட்டும் வார்சுதாரனாகி மற்றவர்கள் ஜீவனாம்சத்திற்கு மட்டும் பாத்தியஸ்தர்களாவார்கள், (4 ம. 250; 5 அ. 542; 21 அல. 232.) ஜமீன்தாருக்கு அனேகம் பெண்சாதிகளால் பிள்ளைகள் உண்டாயிருந்தால், எந்தப் பெண்சாதியினாலானாலுஞ்சரி, முதலில் பிறந்தவனே மூத்த பிள்ளையாக எண்ணப்படுவானே யொழிய, முதலில் கல்யாணஞ்செய்துகொண்ட பெண்சாதிக்கு

பிறந்த பிள்ளைகளில் மூத்தவன் ஜமீனுக்கு மூத்த பிள்ளையாக எண்ணப்படமாட்டான். (14 மூ. இ. அ. 570; 8 இ. அ. 1; 2 ம. 286; 23 அல. 369.)

(2) ஆனல், பெரிய பிள்ளையையுடைய பெண்சாதி தாழ்ந்தவகுப்பைச் சேர்ந்தவளாயிருந்தால் மூத்த பெண்சாதியின் பிள்ளை சிறியவனுயிருந்தாலும் அவனுக்கு ஜமீன் கிடைக்கும். (17 ம. 422.) ஜாதியை கவனிக்காமல் மூத்த பெண்சாதியின் ஜேஷ்ட மகனுக்குத்தான் பட்டம் உரியதென்கிற வழக்கமிருந்தால் செல்லும். (22 ம. 515; 26 இ. அ. 55.) மேலும், தகப்பனுக்கு முதலில் உண்டான ஜேஷ்ட புத்திரனுடைய வம்சமுள்ள வரையில் மற்ற பிள்ளைகளுக்கு வார்சுபாத்தியம் உண்டாகமாட்டாது. (4 மத. 250; 38 மத. 501; 48 இ. அ. 195.) ஜேஷ்ட புத்திரனிறந்தால் அவனுக்குப்பிறகு அவன் ஜேஷ்ட புத்திரனும், அவனுமிறந்தால் அவன் பிள்ளைகளில் பெரியவனும் இம்மாதிரியாகவே மூத்த பிள்ளை பட்டத்துக்கு வருவார்கள். ஒரு ஜமீன்தாருக்கு மூன்று நான்கு பிள்ளைகளிருந்து அவர்களில் மூத்தவனிறந்துபோனல், அப்படி யிறந்துபோன மூத்தவனுடைய ஜேஷ்ட புத்திரனே வார்சாக பட்டத்துக்கு வருவானே யொழிய, ஜமீன்தாருடைய மற்ற குமாரர்களில் பெரியவன் பட்டத்துக்கு வரமாட்டான். குடும்பத்தில் புருஷர்களிருக்கையில் ஸ்திரீகளுக்கு வார்சுபாத்திய முண்டாகாது. மேலும், பிரிவினை செய்யக்கூடாத ஜமீனிலுள்ள ஜமீன்தார்பிள்ளை பேரன் முதலிய ஆண்வார்சில்லாமல் இறந்தால் அவன் சகோதரர் முதலிய தாயாதிகளில் அவனுக்கு எவர் நெருங்கின வார்சாக இருக்கிறார்களோ அவர்களில் அதிகவயதானவன் ஜமீனுக்கு பாத்தியஸ்தனுகிறுன். (3 க. ஐ. 13; 12 மூ. இ. அ. 523, 540; 9 மூ. இ. அ. 263; 1 ம. 312.) ஜமீன் பாத்தியம் ஜேஷ்டவம்ச பாம்பராபாத்திய மிருப்பதாக ருசுசெய்தாலொழிய இறந்தவனின் சமீபவார்சை நீக்கி அந்த வம்சஸ்தனுக்கே ஜமீன் கிடைக்காது. (11 இ. அ. 51.) எந்தெந்த வழக்கம் ஒரு ஜமீனில் வெகுகாலமாய் நடந்து வருகிறதோ அந்தந்த வழக்கப்படிக்கும் வார்சுபாத்திய மேற்படும். (11 இ. அ. 135.)

379. பூர்வீகமான ஜமீனை பாகிக்கக்கூடாது.—(1) வெகுகாலமாயிருந்துவந்திருக்கிற ஜமீன் முதலியவைகள் பாகிக்கக் கூடா

தென்று கவர்ன்மெண்டாரால் விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன்படியே தீர்ப்புகளும் செய்யப்பட்டிருக்கின்றன. (9 மு. இ. அ. 66; 12 மு. இ. அ. 523.)

(2) பூர்வீகமில்லாத ஜமீன் பாக யோக்கியமுள்ளதா யிருந்த போதிலும் வெகு காலத்துக்குமுன ஏற்பட்ட ஜமீனைப்போல் மூத்தவனுக்கே பட்டம் சேர்ந்துவந்ததாக வழக்கமாய்விட்டால் அதுவும்பாகிக்கக்தகாத ஜமீனாய்விடுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (5 மு இ. அ. 263; 17 இ. அ. 134; 13 ம. 406.) ஆகையால் பாகார்ஹமுள்ளது அல்லது பாகார்ஹமில்லாத ஜமீன் என்பது அந்தந்த ஜமீனின் வழக்கத்தைத யனுசரித்ததாயிருக்கிறது. (16 ம. 54.)

(3) பாகிக்கக்கூடாத ஒரு ஜமீனை ஏதோ ஒரு குற்றத்துக்காக ஜமீன்தாரனிடமிருந்து பிடுங்கி வேறொருவனுக்காவது அல்லது அவன் குடும்பத்திலேயவனுக்காவது கவர்ன்மெண்டார் கொடுத்தாலும் அது பாகிக்கக்கூடாத ஜமீனாகும். (12 மு இ. அ. 1; 8 இ. அ. 99; 3 ம. 290.) ஆனல், கவர்ன்மெண்டாரே பாகிக்கக்கூடாத சுதந்தரத்துடனேயே அனுபவிக்கும்படி நிர்ப்பந்தப்படுத்தாமலிருந்தால் அப்போது பாகிக்கக் கூடியதாகும். (7 இ. அ. 38; 2 ம 128; 18 இ. அ. 45; 4 ம. 237.)

(4) மிதாட்சரப்படி இறந்தவனுக்கு பின்னேதர சகோதரனிருக்கும்போது அவன் பெண்சாதிக்கு ஜீவனம்சபாத்தியத்தை தவிர ஜமீன் கிடைக்காது. (25 கல். 433.) இறந்தவனுக்கு தனியான சொத்திருந்தால் அது அவன் பெண்சாதிக்குச் சேரும். (5 ம. ஐ. 41.)

380. **ஊழிய இனங்கள்.**—சர்க்காரால் கிராம ஊழியத்துக்காக விடப்பட்ட மானியங்கள் சொந்தப்பட்டா ஏற்படாதிருந்தால் அது பாகார்ஹமில்லாத குடும்ப பொதுசொத்தாயிருக்கிறது. (7 ம. 236.) தேவஸ்தான முதலிய தர்மபரிபாலனமும் குடும்ப பொதுவாய் எண்ணப்பட்டு ஜேஷ்ட குமாரனே அதைப் பார்க்கவேண்டும். (1 ம. ஐ. கோ. ரி. 415.)

381. **ஜமீன்தாரரின் விநியோகம்.**—ஜமீன்தார் ஜமீன்சொத்தை விநியோகஞ் செய்யக்கூடாதென்கிற வழக்க மிருந்தாலொழிய முழு சுதந்திரமுள்ள ஜமீன்தார் ஜமீன் சொத்தை தன்னிஷ்டப்படி

விநியோகஞ்செய்யலாம். (15 இ. அ. 51; 26. இ. அ. 83.) அந்த விநியோகங்களை பிள்ளைமுதலிய பின் ஜமீன்தார்கள் ஆக்ஷேபிக்க முடியாது. (13 ம. 197; 20 அ. 537; 22 ம. 383; 20 ம. 167·) ஜமீன் வரும்படியை மீதமாக்கி சேர்த்துவைத்த சொத்து ஜமீன்தாராருடைய சொந்த சொத்தாகி அவன் விதவைக்கும், கனிஷ்டபிள்ளைக்கும் பிதுரார்ஜித சொத்தாய்கிடைக்கும். (5 ம. ஐ. கோ. ரி. 41; 12 மூ. இ. அ. 540; 29 க. 433.)

382. சமமான இருபாத்தியஸ்தர்கள்.—ஒரு ஜமீனுக்கு இருவர் சமமான வார்சுபாத்திய வரிசையிலிருந்தால் எவன் ஜேஷ்ட வம்சத்தைச் சேர்ந்தவனோ அவனுக்கு ஜமீன்கிடைக்கும். (20 இ. அ. 77; 20 கல். 649.) அவிபக்தமாயிருந்த குடும்பத்தாருக்கு ஜமீன்பாத்தியம் கிடைத்தபோது ரக்தசம்பந்தத்தில் சமீபமாயிருப்பவனுக்கு ஜமீன் கிடைக்காமல் ஜேஷ்டவம்சத்தில் சமீபவார்சுயாரோ அவனுக்குத்தான் கிடைக்குமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (17 மத 316; 19 மத 451; 24 மத 562.)

383. ஜமீனுக்கு பெண்வார்சுகள்.—எந்த ஜமீன்களில் பெண்கள் பட்டத்துக்கு வருகிற வழக்கமில்லையோ அந்த ஜமீன்கள் தவிர மற்றவைகளில் ஸ்திரீகளும் ஜமீனுக்கு வார்சுகளாகிறார்கள் (29 கல். 828.) ஆண்சந்ததியில்லாமல் இறந்துபோன ஜமீன்தாருக்குப் பல பெண்சாதியாவது பல பெண்களாவதிருந்தால் அவர்களில் மூத்த பெண்சாதியாவது ஜேஷ்டபெண்ணாவது ஜமீனையடைவாள், அவர்களிறந்தால் அவர்களுக்கடுத்த பெண்சாதியாவது பெண்ணாவது ஜமீனையடைவாள். (6 ம. ஐ. கோ. 310.)

384. ஜமீனுக்கு தௌகித்திரன் வார்சாவது.—தௌகித்திரர்களில் எவன் வயதில் மூத்தவனோ அவனே ஜமீன்தாரனாவான். மூத்த பெண்ணின் பிள்ளைகளில் ஜேஷ்டனாயிருக்கவேண்டிய தவசியமில்லை. மேற்பிரிவில்கண்டபடி கடைசியில் பட்டமடைந்த கனிஷ்டபுத்திரியின் ஜேஷ்டபுத்திரனுக்கும் விசேஷபாத்தியமில்லை. (6 ம ஐ. 310; 8 இ. அ. 99; 3 ம 290.)

385. ஔரஸ புத்திரனுக்கு மேலான பாத்தியம்.—தத்துக்குப் பிறகு ஔரஸன் பிறந்தால் சொந்தப்பிள்ளை ஜமீனுக்கு வார்சாகி

ரூன். தத்துப்பிள்ளைக்கு ஜீவனும்சமட்டுங்கிடைக்கும். (17 ம. 435.)

386. ஜமீன் கடன்கள்.—ஒரு ஜமீன்தார் அக்கிரம்மானதும் துன்மார்க்கமானதுமான கடன்களை வாங்கியிருந்தானென்று அவன் வார்சுகள் சரியான ருசுச்செய்தாலொழிய இறந்துபோன ஜமீன்தார் பட்டகடன்களை பிள்ளை முதலிய வார்சுகள் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். கடன்கள் அனுவசியமானதும் உதாரித்தனமான செலவுக்காக ஏற்பட்டிருந்தாலும் பாதகமில்லை. (6 ம. 1; மூ. இ. அ. 128.)

387. வைப்பாட்டி பிள்ளை —(1) பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய ஜாதிகளில் வைப்பாட்டி பிள்ளைகளுக்கு வார்சுபாத்தியங் கிடையாது. (2 ம. ஐ. 369; 7 மூ. இ. அ. 28; 13 மூ. இ. அ. 479; 1 பம் 97; 22 அல. 191.) ஆனால், சூத்திர ஜாதிகளில் நிரந்திரமாய் வைத்துக் கொண்ட வைப்பாட்டியின் மகன்களுக்குக் கொஞ்சம் வார்சுபாத்திய முண்டென்று தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிற அபிப்பிராயங்களின்படி தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. (13 மூ. இ. அ. 159; 1 ம. ஐ. 478; 7 ம. 407. 40 பம் 369; 48 கல். 643.) வைப்பாட்டிமகன் தன் தகப்பன் சொத்துக்கு மட்டும் வார்சேயொழிய தகப்பனின் தாயாதிகளுக்கு வார்சல்ல. (21 அல. 99.)

388. வைப்பாட்டி என்பவள் யாரேன்பது.—தர்மசாஸ்திரங்களில் வைப்பாட்டி என்கிற வார்த்தைக்கு "தாஸி" என்று வடமொழியிலிருக்கிற வார்த்தைக்கு வெவ்வேறு அர்த்தஞ் செய்திருப்பதால் அவளுக்குப் பிறந்த பிள்ளைகளின் வார்சுபாத்தியத்தைப்பற்றியும் வெவ்வேறு அபிப்பிராயப்படுகிறார்கள். விலைக்குவாங்கியாவது விலைக்கு ஊழியமாகவைத்துக்கொள்ளப்பட்ட ஸ்திரீயுடனாவது, சேர்ந்து அதினால் பிறந்த பிள்ளை தாசீபுத்திரனாவானே யொழிய, தேவதாசியினிடத்தில் பிறந்த பிள்ளை தாசீபுத்திரனாக மாட்டானென்று முன்கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருந்ததை இப்பால் மாற்றி, சாசுவதமாய் ஒரு ஸ்திரீயை வைப்பாய் வைத்திருந்து, அவளிடமாய் பிறக்கும் பிள்ளைகளுக்கு சிலவார்சு பாத்தியம், உண்டென்று தீர்மானித்திருக்கிறார்கள் (48 கல் 643.)

பம்பாய், மதராஸ், அலகாபாத் ஹைகோர்ட்டுகளில் "தாசிபுத்திரன்" என்கிற சொல்லுக்கு "வைப்பாட்டி மகனென்று" அர்த்தஞ்செய்திருக்கிறார்கள். (7 ம. 407; 12 ம. 86; 39 மத. 136; 1 பம். 110 4 பம். 37; 2 அ. 134; 6 அ. 329.) முக்கியமாய் "தாசி" என்கிற சொல் மதராஸ் ராஜதானியில் தேவாடியாள் என்று வழக்கமாய் சொல்வதால் அதன் பிரகாரமே தீர்மானித்திருக்கிறார்கள் (1 ம. ஐ. 478; 13 மு. இ. அ. 41; 2 ம. ஐ. 293; 12 மு. இ. அ. 303; 4 ம. ஐ. 204) ஆகையால் பம்பாய், மதராஸ், கல்கத்தா, அலகாபாத், இராஜதானிகளில் சூத்திர ஜாதிகளில் எவரையாயினும், தேவாடியாள் முதலான ஸ்திரீகளையும் சாசுவதமாய் வைப்பாட்டியாக வைத்துக்கொண்டால் அவர்களுக்குப் பிறந்தபிள்ளைகளுக்கு வார்சுபாத்திய முண்டென்று அறியவேண்டியது.

389. **விபசாரியின் பிள்ளைகள் வைப்பாட்டி பிள்ளை யாகார்கள்.**—வைப்பாட்டியாக வைத்துக்கொள்ளாமல் அப்போதைக்கப்போது விபசாரஞ்செய்து அப்படி விபசாரஞ்செய்த காரணத்தினாலுண்டாகும் பிள்ளைகள் தாசி புத்திரர்களாக எண்ணப்படமாட்டார்கள். மேலும் உரவினால் புணரத்தகாத ஸ்திரீகளை வைப்பாக வைத்துக்கொண்டால், அந்த ஸ்திரீகளிடத்திலுண்டாகும் பிள்ளைகள் தாசிபுத்திரர்களாக எண்ணப்படமாட்டார்கள். ஆகையால், அப்படிப்பட்ட பிள்ளைகளுக்குக் கொஞ்சமேனும் வார்சு பாத்தியம் உண்டாகமாட்டாது.

390. **சூத்திரஜாதிகளில் தாசி புத்திரனுக்கு வார்சு பாத்தியம்.**—வைப்பாட்டி பிள்ளைக்கு சூத்திர ஜாதியர்களில் மட்டும் வார்சுபாத்தியமுண்டு. அவர்கள் தன் தகப்பனுடைய சொத்துக்கு மாத்திரம் வார்சே யொழிய, அவர்களின் சிறிய தகப்பன் பெரிய தகப்பன் சொத்துக்களுக்கு வார்சாக பாத்தியமில்லை. (7 ம. 407; 8 ம. 557; 12 ம. 402; 25 ம. 429.)

391. **தாசி புத்திரனுக்கு வார்சு விஷயமான விதி.**—(1) சூத்திரர்களில் வைப்பாட்டி பிள்ளைக்குள்ள வார்சு பாத்திய விஷயமாய் தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிற தென்னவென்றால் :—

"ஔரஸ புத்திரர்களுடைய பாகத்தில் பாதி பாகத்திற்குமட்டும் வைப்பாட்டி பிள்ளை பாத்தியஸ்தனாகிறான். (14 பம். 282) கிருகஸ்தனுக்கு பிள்ளையாவது பெண்ணாவது பெண்ணினுடைய பிள்ளையாவது இல்லாவிட்டால், அவனுடைய முழுசொத்துக்கும் வைப்பாட்டி பிள்ளை பாத்தியஸ்தனாவான்" என்றிருக்கிறது.

(2) இந்த தர்மசாஸ்திர வாக்கியத்தைக்கொண்டு இப்பொழுது ஐகோர்ட்டு தீர்ப்புகளால் ஸ்திரப்பட்டிருக்கிறதென்னவென்றால்:—கிருஹஸ்தனுக்கு ஒரு ஔரஸ புத்திரனும் ஒரு வைப்பாட்டி பிள்ளையுமிருந்தார்கள். இந்த வைப்பாட்டி பிள்ளையே ஔரஸ புத்திரனாயிருந்தால் சொத்தில் பாதி பாகத்திற்குப் பாத்தியஸ்தனாவானாகையால், அதில் பாதி பாகம், அதாவது - முழுசொத்தில் நாலில் ஒரு பாகம் அவனுக்குச்சேரும். ஔரஸ புத்திரனாவது பேரனாவது கொள்ளுபேரனாவது இல்லாமல் கிருஹஸ்தனுடைய பெண்சாதி பெண் அல்லது பெண்ணினுடைய பிள்ளை இவர்களிருந்தால், ஔரஸபுத்திரன் பேரன் கொள்பேரன் இவர்களிருக்கும்போது மேற்படி பெண்சாதி முதலியவர்கள் ஒருவரும்பாத்தியஸ்தர்களாக மாட்டார்களாயினும், வைப்பாட்டிமகன் மட்டுமிருந்தால் பாத்தியஸ்தர்களாவார்கள். இது எப்படியெனில், வைப்பாட்டி புத்திரனே ஔரஸபுத்திரனாயிருந்தால் எல்லாசொத்துக்கும் அவனே பாத்தியஸ்தனாதலால், அதில் பாதிமட்டும் அவனுக்குச்சேர்ந்து மிகுந்தபாதி கிருஹஸ்தனுடைய பெண்சாதிக்கு அல்லது பெண்ணுக்கு அல்லது பெண்ணினுடைய பிள்ளைக்குச் சேரும். (14 பம். 282; 33 மத. 226, 336; 50 இ. அ. 32.) இவர்களில் எவரும இல்லாவிட்டால் வைப்பாட்டியின்பிள்ளை எல்லாச்சொத்தையும் எடுத்துக்கொள்ளுவான். (2 அல. 134.)

(3) வைப்பாட்டி மகனுடைய பாத்திய விஷயமாக மேற்சொல்லப்பட்ட தர்மசாஸ்திர வசனத்தில் கிருஹஸ்தனுடைய பிள்ளை, பெண், பெண்ணினுடைய பிள்ளை இவர்கள் வார்சு விஷயமட்டுஞ் சொல்லப்பட்டு கிருஹஸ்தனுடைய பெண்சாதி வார்சாக ஏற்படலாமா என்கிறவிஷயத்தைப்பற்றியாதொன்றும் தெளிவாய்ச்சொல்லவில்லை. இக்காரணத்தால் வைப்பாட்டி மகனிருக்கும்போது கிருஹஸ்தனுடைய பெண்சாதிக்கு ஜீவனம்ச பாத்தியமட்டுந்தான் உண்டென்று அர்த்தஞ்செய்து அவ்விதமே இரண்டுகேசுகளில் பம்பாய்ஹைகோர்ட்டார் தீர்மானஞ்செய்திருக்கிறார்கள். (1 பம் 97,104; 4 பம 37,52) பிறகு வேறொரு

னேகில், கிருகஸ்தனுக்கு பெண்ணின் பிள்ளைவரையில் யாதொரு வார்சுகளுமில்லாதிருந்தால், ஔரஸன் பாகத்தில் பாதிமட்டும் வைப்பாட்டிமகனுக்குச்சேர்ந்து, மற்றப்பாதி இதர வார்சுகளுக்கு சேருமென்று தீர்மானிக்கப்பட்டது. (14 பம். 282.) மதராஸ் ஹைகோர்ட்டார் சூத்திர ஜாதியில் ஒருவைப்பாட்டி பிள்ளையும் சொந்த பெண்ணும் தௌஹித்திரனுமிருந்தபோது வைப்பாட்டிபிள்ளைக்கு பாதிஆஸ்தியும், மற்றபாதி பெண்ணுக்கும் தௌஹித்திரனுக்குஞ் சேருமென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் அந்த சொத்து பெண்சாதிக்குக்கிடைத்து பிறகு பெண் தௌஹித்திரன் இவர்களுக்கு வரிசைக்கிரமமாய் வந்திருக்கவேண்டும். (15 ம. 307; 45 மத 167.)

ஆனால் பிரிக்கத்தகாத ஜமீன்களில் ஜமீன்தாரனுடைய வைப்பாட்டி மகனுக்கு முந்திய அவன் விதவை வார்சாவாளென்று மதராஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (10 ம. 334.)

392. வைப்பாட்டி மகனின் சேர்ந்தபாத்தியம்.—(1) சூத்திர ஜாதிகளில் வைப்பாட்டி மகன் ஔரஸனுடன் சேர்ந்து ஏககுடும்பமாயிருந்தால், ஔரஸபுத்திரன் ஆண் சந்ததியில்லாமலிறந்துபோனால் எல்லா சொத்துக்களும் வைப்பாட்டிமகனுக்குச் சேருமேயல்லாமல் முதலில் கிருஹஸ்தனுடைய ஔரஸபெண் முதலியவர்களுக்குக்கொஞ்சங்கூடச் சேரமாட்டாது. (18 க. 151; 4 பம். 37.) விபக்தநிலைமையிலும் ஔரஸனும் தாசிபுத்திரனும் ஒருவருக்கொருவர் வார்சாகிறார்கள். (17 இ. அ. 123; 4 பம். 37; 11 கல். 702; 34 மத 277; 40 பம் 369; 41 மத 44.)

(2) பம்பாய் இராச்சியத்தில் ஒரு சூத்திரன் இறந்துபோகையில் அவனுக்கு ஒரு ஔரஸபுத்திரன், ஒரு வைப்பாட்டிமகன், இரண்டு பெண்சாதிகள், ஒரு பெண், ஆக இவ்வைந்து பேர்களிருந்தார்கள். குடும்பத்தின் முழுசொத்துக்கும் ஔரஸ புத்திரனும் வைப்பாட்டி மகனும் கூட்டாய் பாத்தியஸ்தர்களாகி பொதுகுடும்பம் ஏற்படுத்தி பெண்சாதிகளுக்கு ஜீவனாம்சங்கொடுக்கும் பாரமும், பெண்ணுக்கு கல்யாணஞ்செய்யும் பாரமும் சொத்தைப்பொருத்ததாயிருந்தது. பிறகு ஔரஸபுத்திரன் ஆண்சந்ததியின்றியிறந்துபோனபோது

எல்லாசொத்தும் வைப்பாட்டிமகனுக்குச் சேர்ந்து. முன்போலவே பெண்சாதிகளுடையவும் பெண்ணினுடையவும் ஜீவனாம்சம் முதலியவை கொடுக்கும் பாரம் அவனையே சேர்ந்ததென்று பம்பாய் ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (4 பம். 37, 42; 11 க. 702) தகப்பனுயிருடன் இருக்கையில் ஔரஸபுத்திரன் சந்ததி யில்லாமலிருந்தால் வைப்பாட்டி பிள்ளைக்கு முழுசொத்தில் பாதிபாகம் மட்டுஞ்சேர்ந்து மிகுந்த பாதி கிருஹஸ்தனுடைய பெண்சாதிக்குச்சேரும்

393. பெண்சாதிவார்சு.—(1) பிள்ளை, பேரன், கொள்பேரன் இவரொருவருமில்லாதிருந்தால் இறந்துபோன கிருகஸ்தனுடைய பெண்சாதி அவன் சொத்துக்கு வார்சாகிறாள். (2 ஸ. 49; 1 ம. ஐ. 223; 3 பம். 54; 2 ம. 182) பெண்சாதியினிடத்தில் பிள்ளையாகப் புருஷன் பிறக்கிறானென்கிற காரணத்தால் புருஷனிறந்தாலும் அவன் பெண்சாதியிருக்கையில் புருஷனுடைய பாதிதேகம் இருக்கிறதென்றே தர்மசாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இக்காரணத்தாலும், பிள்ளையின்றி யிறந்த புருஷனுக்குக் கர்மம் நடத்துகிற காரணத்தைக் கொண்டும் புருஷனுடைய சபிண்டையாக எண்ணப்பட்டு பெண்சாதி ஆண் சந்ததிக்குப் பிறகு வார்சாகிறாள். (1 ம. 28; 9 மூ. இ. அ. 610.)

(2) மிதாட்சரத்தின்படி பொதுக்குடும்பத்தின் பாகஸ்தன் ஆண் சந்ததியில்லாமலிறந்தால் அவன் பெண்சாதிக்கு ஜீவனாம்சமட்டும் கிடைக்குமேயொழிய அவளுக்குவார்சுபாத்திய முண்டாகமாட்டாது. புருஷனுடைய சுவயார்ஜித சொத்திற்குமட்டும் அவள் வார்சாகிறாள். (1 ம. 312; 4 க. 190; 1 மூ. இ. அ. 490; 9 மூ. இ. அ. 539) தாயபாகப்படி சேர்ந்த குடும்பத்தின் பாகஸ்தர்களுக்குத் தனிபாத்தியம் உண்டாயிருப்பதாக எண்ணப்படுவதால் அவர்களில் ஒருவன் ஆண்சந்ததியில்லாமலிறந்துபோனால் அவன்பாகத்திற்கு அவன்பெண்சாதி வார்சாகிறாள்.

394. அனேகபெண்சாதிகளின் வார்சுபாத்தியம்.—ஒருகிருகஸ்தனுக்கு இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட பெண்சாதிகளிருக்கும்போது அவனுடையசொத்தெல்லாம் அவர்களுக்குப் பொதுவாய்

ச்சேருர். பிரிக்கக்கூடாத ஜமீன்விஷயத்தில் மூத்த பெண்சாதி பட்டத்துராணியாக ஏற்பட்டு மற்றப்பெண்சாதிகளெல்லாம் ஜீவனும்சத்திற்குமட்டும் பாத்தியமுள்ளவர்களாவார்கள். (1 ம. தீ. 453; 2 ம. தீ. 447) பிரிக்கக்கூடியசொத்து விஷயத்தில் எல்லாப்பெண்சாதிகளும் சரியானபாத்தியமுள்ளவர்களாயிருப்பதால் அவர்கள் சேர்ந்திருப்பின், மூத்தபெண்சாதி எல்லாசொத்துக்கும் மானேஜராவாள். அவர்களில் ஒருவருக்கொருவர் சரிப்படாமற்போனல் கரூர்நாமாமூலமாகவாவது, தீர்ப்புமூலமாகவாவது சொத்துக்களைப்பிரித்துக்கொண்டு அவரவர்கள் தங்கள் பாகங்களைத் தனிமையாக அனுபவிக்கலாம். (3 ம. ஐ. 51; 24 ம. 441; 4. இ. அ. 212; 16 இ. அ. 196.) அப்படிப் பிரித்துக்கொண்டபிறகு அவர்களில் ஒருத்தியிறந்தால் அவளுடைய பாகம்மற்றப்பெண்சாதிகளுக்குச் சேருமேயன்றி அனந்தரவார்சுகளுக்குச் சேரமாட்டாது. (16 ம. 1; 23 ம. 504.) சுவான்தாரான் பெண்சாதிகளெல்லோரு மிறந்த பிறகுதான் அந்தசொத்து அனந்தரவார்சுகளுக்குச் சேருமேயன்றி ஒரு பெண்சாதியாவது உயிருடனிருக்குமளவில் சேரமாட்டாது. (1 ம. 297; 3 ம. ஐ. 268; 1 பம். ஐ. 66; 6 பம். 85; 11 மூ. இ. அ. 487; 7 அ. 114)

395. ஸ்திரீகளுக்கு சொல்ப பாத்தியம்.—பெண்சாதிமுதலிய பெண்வார்சுகள் இறந்தவனுக்கு எவ்வளவு சமீபபந்துவாயிருந்தாலும் தூரமான ஆண்வார்சுகளுக்குப்பிறகுதான் வார்சுபாத்தியமுண்டாகிறது. (18 ம. 93.) அவர்களுக்கு வார்சுபாத்தியத்தால் ஆண்களுடையசொத்துக் கிடைக்கும்பொழுது, அதிலவர்களுக்கு சகலசுதந்திரமுமுண்டாகாமல் உயிருடனிருக்கும்வரையில் அனுபவிக்கவும், அவசியமானகாரியங்களுக்காகச் செலவுசெய்யவுமட்டும் பாத்தியமுண்டாகிறது. ஆகையால், மேற்சொல்லியபடி பெண்சாதிகள் எல்லாரும் சொத்தைப்பிரித்துக்கொண்டு அனுபவித்தாலும் அவர்களிலெவராவது தன்னுடையபாகத்தை விநியோகஞ்செய்ய அதிகாரமுள்ளவளல்ல. ஒருசமயம் விநியோகஞ் செய்தாலும் அந்தவினியோகம் அவளுயிரிருக்கும்வரையில் செல்லுமேயொழிய, அவளிறந்தபிறகு அவளுடைய பாகமுழுவதும் சக்களத்திகளுக்குச் சேரும். இறந்துபோனவள் சொத்து அவளுடையபெண் அல்லது பிள்ளைக்குச் சேராமல் உயிருடனிருக்கிற சக்களத்திக்குச் சேர்ந்து கடைசியில்

அவளுமிறந்தபிறகுதான் தௌஹித்திரர்களுக்குக் கிடைக்கும் (3 ம. ஐ. 424; 1 ம. 290; 2 ம. 194; 7 ம. 92; 12 அ 51.) சொத்தைப் பிரித்துக்கொள்ளாவிட்டாலும் கிருகஸ்தன் பெண்சாதிகளிலெவளாவது தன்பாகத்தை உயிருள்ளவரையில் பராதீனஞ்செய்யலாம். மேலும், அந்தப்பராதீனத்தால் சொத்தை யடைந்தவன் மற்றபெண்சாதிகள்மேரில் பாகத்துக்காக தாவாசெய்யலாம். ஆனல் அப்படி சொத்தை எவள் செலவுசெய்தாளோ அவளிறந்துபோன பிறகு அந்தப்பராதீனஞ் செல்லமாட்டாது. (11 ம. 304; 9 க. 580) ஸ்திரீவார்சுகளின் ஜீவதசைக்குப்பிறகு சொத்துக்கள் மூலபுருஷனின் வார்சுகளைச் சேருகின்றன. (2 ம. ஐ. 402; 1 பம். ஐ. 117.)

396. விபசாரிக்கு புருஷன்சொத்துக்கிடைக்காது.—(1) புருஷனுயிரோடிருக்கையில் விபசாரியாக வசித்துவந்தபெண்சாதிக்கு வார்சுபாத்தியத்தால் புருஷன் சொத்துக்கிடைக்கமாட்டாது. (13 க ஐ. 1; 5 ம. 149.) விபசாரியாயிருப்பதாக புருஷனல் தள்ளிவைக்கப்பட்ட பெண்சாதியின் விஷயத்தில்மட்டும் இந்தவிதி உபயோகப்படுமேயொழிய புருஷன் சம்மதித்து வைத்துவந்த பெண்சாதிக்கு இதுசெல்லமாட்டாதென்று சொல்லத்தக்கதாயிருக்கிறது.

(2) புருஷனிறந்தபிறகு பெண்சாதி விபசாரியாயிருந்தால் அவனுடைய ஆத்மாவின் நன்மைக்குவேண்டிய வைதீககர்மங்களைச் செய்ய அவள்யோக்கியதை யற்றவளாயிருப்பதால் வார்சுபாத்தியத்தால் அவளுக்குக்கிடைத்திருந்த புருஷனுடைய சொத்து அவளைவிட்டுப்போய்விடுமென்று முன்காலத்தில் சிலர் அபிப்பிராயப்பட்டார்கள். ஆனல், அதன்பிறகு இவ்விஷயம் செவ்வையாக வாதிக்கப்பட்டு புருஷனிறந்தபிறகு அவன் பெண்சாதி வியபசாரியாயிருந்தாலும் அவளுக்குக்கிடைத்திருந்த புருஷன்சொத்து போகமாட்டாதேன்று ஐகோர்ட்டாரும் பிரிவீகௌன்சிலாருங்கூடத் தீர்மானித்திருக்கிறார்கள். (13 க. ஐ. 1; 5 க. 776; 4 பம். ஐ. 25; 2 அ. 150, 171; 7 இ. அ. 115; 24 ம. 441; 36 பம். 138.)

397. புனர்விவாகம் செய்துகொண்டவளுக்கு வார்சுபாத்தியமில்லை.—ஒரு கிருஹஸ்தனிறந்தபிறகு அவன்சொத்துக்கு வார்சாக

ஏற்பட்ட பெண்சாதி புனர் விவாகஞ்செய்துகொண்டால், அவளிறந்து போனதாக எண்ணப்படுவதால், புருஷன் சொத்தில் அவளுக்கிருந்த எல்லா பாத்தியமும் போய் அவளுக்குப் பிறகுவரும் வார்சுகளுக்கு அந்தச் சொத்துச்சேர்ந்துவிடும். (22 க. 589.) மறுபடி விவாகஞ் செய்துகொள்ளும்படி புருஷன் அனுமதிகொடுத்திருந்தால் அந்த சொத்தில் அவள் பாத்தியம் போகமாட்டாது. (1856-ம்வூத்து, 15-வது, ஹிந்து விதவா ஆக்ட் 2-வது பிரிவு, 13 க. ஐ. 75; 19 க. 289, 292; 1 பாரோ, 431; 1 ம. 236; 7 ம. 321; 11 அ. 330.) புருஷனாவது பெண்சாதியாவது ஜாதிப்பிரஷ்டர்களாயிருந்து அவர்களின் பரஸ்பர சம்பந்தம் விலக்கப்பட்டிருந்தாலும், கோர்ட் மூலமாய் விவாகபந்தம் ரத்துசெய்யப்பட்டிருந்தாலும் புருஷன் சொத்து பெண்சாதிக்குக் கிடைக்காது. (8 ம. 169.)

398. பெண் வார்சு.—யாதொரு கிருகஸ்தனுக்குப் பிள்ளை, பேரன், கொள்ளுபேரன், பெண்சாதி முதலிய வார்சுகளில்லாவிட்டால் பெண் அவன் சொத்துக்கு வார்சாவாள். மேலும், அந்த கிரகஸ்தனுடைய பெண்சாதி வார்சாக ஏற்பட்டாலும் அவளுக்குத் தன் ஆயிசுவரையிலும் சொத்தை யனுபவிக்கும் பாத்தியமட்டுமிருப்பதால் அவளிறந்துபோனால் திரும்ப மேற்சொல்லிய சுவான்தாரனுக்கு யார் சமீபவார்சோ அவனுக்கே சொத்துச்சேர்ந்துவிடும். ஆகையால், பெண்சாதிக்குப் பிறகு பெண்வார்சாகிறாள். சபிண்டர்கள் வரிசையில் பெண்சேராவிட்டாலும், இப்படி பெண்சாதிக்குப்பிறகு அனேக சபிண்டர்களுக்கு முன்னமே பெண் வார்சாக ஏற்படுத்தப்பட்டிருப்பதற்கு இரண்டு காரணங்கள் ஊகிக்கத்தக்கதாயிருக்கின்றன முதலாவது தகப்பனுடன் நெருங்கிய ரக்த சம்பந்தம். இரண்டாவது பிண்டப்பிரதானஞ் செய்வதற்கு யோக்கியதையான பிள்ளையை (தௌஹித்திரனைப்) பெறும்படியான சுவபாவம்.

399. பெண் விபசாரியாயிருப்பது.—(1) வார்சு பாத்திய விஷயத்தில் பெண்சாதியைப் போலவே பெண்ணுக்குங்கூட விபசார தோஷத்தால் பாதகமுண்டென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். அதாவது விபசாரியாயிருந்த பெண்ணுக்கு வார்சுபாத்தியத்தால் சொத்துக் கிடைக்கமாட்டாதே யொழிய, சொ

த்துக்கு பாத்தியமுண்டானபிறகு அந்த பெண் விபசாரியாயிருந்தால் அந்த சொத்துபாத்தியம் போகமாட்டாது. (13 க. ஐ. 48; 4 க. 550.)

(2) பம்பாய் ஐகோர்ட்டார் விபசாரதோஷத்தைப்பற்றிய ஸ்மிருதிவாக்கியங்களைச் செவ்வையாய்ப் பரிசோதித்து வார்சுபாத்தியத்திற்கு வியபசார தோஷத்தாலுண்டாகும் கெடுதி பெண்சாதியைத் தவிர மற்ற பெண்வார்சுகள் விஷயத்தில்லையென்றும், விபசாரியாயிருந்த பெண்வார்சாவதற்கு ஆட்சேபணையில்லையென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். மதராஸ், அலகாபாத் ஐகோர்ட்டார்களும் இந்த அபிப்பிராயப்படியே தீர்ப்புச்செய்திருக்கிறார்கள். (4 பம். 104; 5 ம. 149; 26 ம. 509; 2 அ. ஐ. 363; 1 அ. 46.)

(3) யாதொரு விதவையான பெண் புனர்விவாகஞ்செய்து கொண்டால் அவள் தன்னுடைய தகப்பன் சொத்தையடைய, 1856-ஆக்டின் 15-வது ஆக்ட்படி, யாதொரு தடையுமிராது.

400. அனேக பெண்கள் வார்சு.—(1) இறந்துபோன யாதொரு கிருகஸ்தனுக்கு ஒரு பெண்சாதியாலாவது பல பெண்சாதிகளாலாவது பல பெண்களிருந்தால் அவர்களில் விவாகமாகாத பெண்கள் எல்லா விதவைகளும் இறந்தபின் முந்திய வார்சுகளாகிறார்கள். விவாகமாகாத பெண்களில்லாவிட்டாலும் அவர்களெல்லாரும் இறந்துபோய்விட்டாலும் மற்ற எந்தப்பெண்கள் வார்சுகளாவார்கள் என்கிற விஷயத்தைப்பற்றி அந்தந்த இடங்களில்கொஞ்சம் கொஞ்சம் வித்தியாசங்களிருக்கின்றன.

(2) தாயபாக சம்பிரதாயப்படி.—(1) விவாகமாகாத பெண்கள் முதலில் வார்சாவார்கள். (2) இவர்களில்லாவிட்டாலும் இவர்களெல்லோரும் இறந்தபிறகும், ஆண் சந்ததியையுடைய விதவையான பெண்கள்கூட வார்சுகளாகிறார்கள். (18 க. 327.) ஆண் சந்ததிகளில்லாத விதவைப் பெண்களும் மலடான பெண்களும் பெண் சந்ததிமட்டுமுள்ள பெண்களும் இவர்கள் எந்நிலைமையிலும் வார்சுகளாக மாட்டார்களென்று தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. (3 பம். ஸ. தீ. 362; 2 ஸ. 176) சொத்துக் கிடைத்த பிறகு

மலட்டுத்தனம் ஏற்பட்டால் அந்த சொத்திலுள்ள பாத்தியம் போகமாட்டாது. (15 க. ஐ. 10.) மேலும், இப்பொழுது 1856-ம் வருஷத்திய 15-வது ஆக்ட்படி விதவைகள் விவாகஞ்செய்துகொண்டு ஆண் சந்ததி பெறலாமாதலால், விதவையாயிருக்கும் காரணத்தைக்கொண்டுமட்டில் பங்காள தேசானுஷ்டானப்படி பெண்ணுக்கு வார்சுபாத்தியமில்லையென்று சொல்ல நியாயமில்லை. (15 ஸ. 189.)

(3) மிதாட்சர சம்பிரதாயப்படி (1) விவாகமாகாத பெண்கள் முதலில் வார்சாகிறார்கள். (2) இவர்களில்லாவிட்டாலும் இவர்களெல்லோரும் இறந்துபோன பிறகும் விவாகமான பெண்களில் ஏழையாயிருப்பவர்கள் எல்லோரும் வார்சாகிறார்கள். இவர்கள் விதவைகளா யிருந்தாலுஞ்சரி, சுமங்கலிகளா யிருந்தாலுஞ்சரி, சமமான பாத்தியமுடையவர்கள். (3) இவர்களில்லாவிட்டாலும் இவர்களுக்குப் பிறகும் விவாகமான பெண்களில் பணமுள்ளவர்கள் வார்சுகளாகிறார்கள். இவர்களிற்கூட விதவை சுமங்கிலி யென்கிற பேதமில்லை. இந்தக் கட்டுப்பாட்டின்படி பெண்களுடைய வார்சு பாத்தியம் அவர்களுக்கு ஆண் சந்ததியிருப்பதைப் பொருத்ததல்ல. காசி தேசத்திலும், பம்பாய், மதராஸ் பிரெஸிடென்ஸிகளிலும் இந்த மிதாட்சர சித்தாந்தம் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. (3 ம. 265; 3 க 587; 2 அல 561.)

(4) மிதில தேசத்திய வழக்கத்தின்படி (a) விவாகமாகாத பெண்கள் முதலில் வார்சாகிறார்கள். (b) இவர்களில்லா விட்டாலும் இவர்களுக்குப் பிறகும் விவாகமான பெண்கள்வார்சாகிறார்கள். இவர்களுக்குள் விதவை சுமங்கிலி என்கிற பேதம்கிடையாது. ஆண் சந்ததியைப் பற்றியாவது, ஏழைத்தனத்தைப் பற்றியாவது பேதம் கிடையாது. (5 க. 587; 2 ஸ. 176: 2 பம். ஐ. 5; 6 பம். ஐ. 183; 14 பம். 4, 12; 3 ம. 265; 4 அ. 243; 2 அ. 561.)

(5) அனேகம் பெண்களிருந்தால், புருஷன்சொத்தை பெண்சாதிகள் பாகஞ்செய்துகொள்வதுபோல பெண்களும் தங்கள் தகப்பன் சொத்தை பிரித்துக்கொண்டனுபவிக்கலாம். அவர்களில் ஒருத்தி யிறந்தால் அவள்சொத்தை மற்ற பெண்கள் சமமாக பாகித்துக் கொள்ளவேண்டும். இவ்விதம் ஒவ்வொருவராக இறந்துகொண்டு வந்தால் உயிருடனிருக்கிற சகோதரிக்கு எல்லா சொத்துஞ்சேரும். (3 ம ஐ. 3 7; 24 கல். 339; 2 இ. அ. 113.) 395-வது பிரிவைப்

பார்க்க. ஆனல், பம்பாய் இராஜ்ஜியத்தில் தகப்பனுக்கு வார்சாகிற பெண்கள், அச்சொத்தைஸ்திரீதனத்தைப்போல் ஸர்வசுதந்திரத்துடன் அடைந்து பிறகு அச்சொத்து அவளுடைய வார்சுகளுக்கு சேருகிறது. (11 பம். 285; 31 பம். 455; 34 பம். 510.)

401. பெண்களுக்கு சமமான வார்சு பாத்தியம்.—(1) மேற்பிரிவில் சொல்லப்பட்ட வரிசைகளில் எந்தவரிசைப் பெண்களுக்காவது வார்சு பாத்தியத்தால் தகப்பனுடைய சொத்துக்கிடைத்தால், அவர்களெல்லோரும் அந்த சொத்துக்குச்சேர்ந்த சமபாத்தியமுள்ளவர்களாவார்கள். இதற்கு முந்தி பல பெண்சாதிகள் விஷயமாக 394-வது பிரிவில் சொல்லப்பட்ட நிபந்தனைகளெல்லாம் கூட்டாக பாத்தியமுள்ள பெண்கள் விஷயத்திற்கூட செல்லும். ஒருவருக்கொருவர் சரிப்படாவிட்டால் அவரவர்கள் சொத்தைப்பிரித்துக்கொண்டு அனுபவிக்கலாமேயொழிய செலவுசெய்யக்கூடாது. அவர்களிலொருத்தி யிறந்தால் அவளுடைய பாகம் அந்த வகுப்பிலுள்ள பெண்களில் மற்றவர்களுக்குச் சேருமேயன்றி அவளுடைய பிள்ளைகளுக்குச் சேரமாட்டாது. ஒரு வகுப்பிலுள்ள பெண்களெல்லாரு மிறந்துபோனல் பின்னல் வரத்தக்க மற்றொரு வகுப்புப் பெண்கள் வார்சாவார்கள். பிரிக்கத்தகாத ஜமீன் விஷயத்தில் எந்த வகுப்புப் பெண்கள் வார்சுகளாயிருக்கிறார்களோ அவர்களில் மூத்தவள் ஜமீனுக்கு பாத்தியமுள்ளவளாகிறாள். (14 க. ஐ. 246; 3 ம. ஐ. 317; 6 ம. ஐ. 310.)

(2) பம்பாய் இராஜ்ஜியத்தில் மட்டும் பெண்களுக்கு வார்சு பாத்தியத்தால் சொத்துக்கிடைத்தால் அதில் அவர்கள் புருஷர்களைப்போலவே சகல சுதந்திரமுடையவர்களாவார்கள். ஆகையால் அவர்களுக்கு ஆண்சந்ததி யில்லாமலிருந்தால் அவர்கள் அதை விக்கிரயம் முதலான வினியோகஞ்செய்ய அட்டியில்லை. (6 பம். 85.)

402. பெண்ணின் பிள்ளையின் பாத்தியம்.—தௌகித்திரன் (பெண்ணின் பிள்ளை) ஒருவன் ஆஸ்திக்கு வார்சாக வரவேண்டியதாயிருந்தால், அந்த ஆஸ்திதாரனுக்குப் பிள்ளை, பேரன், கொள்பேரன், பெண்சாதி, பெண், இவர்களில் ஒருவரும் இல்லாமல் போனல் கடைசியாக தௌகித்திரன் வார்சாகிறான் தௌகித்திரன் வேறு கோத்திர முள்ளவனாயினும் பந்து வரிசையில் சேர்ந்தவனாதலால்

பாட்டனுக்குப் பிண்டப்பிரதானஞ்செய்ய யோக்கியமுள்ளவனாயிருக்கிறான். ஆகையால், பிள்ளையில்லாதவன் தன்பெண்ணின் பிள்ளையைத் தன் பிள்ளையாக ஏற்படுத்திக்கொள்ளும் வழக்கம் முற்காலத்திலிருந்ததால் ஒரே கோத்திரமான பிள்ளை, பேரன், கொள்ளுப்பேரன் இவர்கள் தவிர மற்ற சபிண்டர்களுக்கு முந்தியே தௌகித்திரன் வார்சாகும்படி ஏற்பட்டதென்று சொல்லத்தக்கதாயிருக்கிறது. (16 ம. 167; 27 ம, 3 1.) பெண்களுக்குப் பிறகு தௌகித்திரன் வார்சாகிற விஷயத்தில் மிதிலதேச வழக்கப்படி முற்காலத்தில் சந்தேகமிருந்ததேயொழிய இப்போது சந்தேகமறத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (6 பம். ஸ. தீ. 140.) தௌகித்திரன் தன் தாய்க்குப் பிறகு, பாட்டனுடைய சொத்திற்கு, தாயின்வார்சாயில்லாமல், பாட்டனின் நேரான வார்சாக அடைகிறான்.

பெண்ணினுடைய ஸ்வீகாரப்புத்திரன் கூட ஔரஸ புத்திரன் போலவே மாதா மகன்சொத்துக்கு வார்சு பாத்திய முடையவனாகிறான்.

403. தௌகித்திரர்களுக்கு சமமான பாத்தியம்.—(1) இறந்துபோன யாதொரு கிருகஸ்தனுக்குப் பெண்சாதியாவது, எவ்வகுப்பைச்சேர்ந்த ஒரு பெண்ணாவது, உயிருடனிருக்கையில் தௌகித்திரர்களுக்கு வார்சு பாத்திய முண்டாகமாட்டாது. கிருஹஸ்தனுடைய பெண்சாதியும் எல்லாவகுப்புப் பெண்களுமிறந்த பிறகே தௌகித்திரன் வார்சாவான். (15 க. ஐ. 10; 1 W, மெக் 44; 2 W. மெக் 44, 57; 1 அ. 608; 5 பம். ஐ. 139; 8 அ. 365.) மேலும் தௌகித்திரர்களுடைய வார்சு பாத்தியம் தங்களுடைய தாயாருடைய சம்பந்தத்தாலுண்டாகாமல் தாயைப்பெற்ற பாட்டனுடைய சம்பந்தத்தாலுண்டாவதால், பல பெண்களால் பல தௌகித்திரர்களிருக்கும்பொழுது அவர்களெல்லோருக்கும் சொத்து சரிபாகமாகச் சேருமேயன்றி தாய்களுடைய எண்ணிக்கையைப் பொருத்ததல்ல. அதாவது:—இறந்துபோன ஒரு பெண்ணினால் இரண்டுபேரன்களும் மற்றொரு பெண்ணினால் மூன்றுபேரன்களும், வேறொரு பெண்ணினால் ஒரு பேரனுமிருந்தால் பாட்டன்சொத்தை ஆறுபாகமாகப் பிரித்து அந்த தௌகித்திரர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாகத்தை அடையவேண்டியது. (8 பம். ஸ. தீ. 100; 6 ம. ஐ. 310; 1 அ. 608; 2 இ. அ. 113.)

(2) பிரிவினை செய்யக்கூடாதஜமீன்சொத்துக்கு தௌகித்திரர்கள் வார்சுகளாக ஏற்பட்டால் அவர்களில் மூத்தவன்பட்டத்துக்கு பாத்தியஸ்தனாகிறான். ஆனால் அந்த ஜமீனைக் கடைசியாக அனுபவித்த பெண்ணின்பிள்ளை சிறியவனாயிருந்தால் அவனுக்குச் சேரமாட்டாது. (6 ம. ஐ. 310 ; 3 ம. 290) 384 - வது பிரிவைப் பார்க்கவும்.

404. தௌகித்திரனுக்குமுழுவாரசுபாத்தியம்.—தௌகித்திரனைக் காட்டிலும் நெருங்கிய வார்சுகளாகிய பெண்சாதி பெண் இவர்களிறந்தகாலத்தில், ஆதி மூலபுருஷனே இறந்ததுபோல நினைக்கப்பட்டு அவன் சொத்து தௌகித்திரர்களுக்குச் சரிபாகமாகச் சேருகிறது. ஆகையால் தௌகித்திரர்களுக்கு வார்சுபாத்திய முண்டாவதற்கு முந்தியாவது அல்லது அவிபக்தமாயிருந்தபோதாவது அவர்களில் ஒருவன் இறந்தால் சொத்து முழுவதும் உயிருடனிருக்கிற தௌகித்திரர்களுக்குச் சேருமேயன்றி இறந்துபோன தௌகித்திரனுடைய பிள்ளைகளுக்குக் கொஞ்சங்கூடச் சேரமாட்டாது. (11 ம. 287.) தௌகித்திரி பந்துக்களுக்குக் கீழ் தூரவார்சாகிறாள். (17 ம. 182.) தௌகித்திரர்களுக்கு வார்சு பாத்திய முண்டான பிறகும் விபக்தமான பிறகும் அவர்களில் எவனாவதிறந்தால் சொத்திலவனுடைய பாகம் அவனுடைய பிள்ளைகள் முதலிய வார்சுகளுக்குச் சேருமேயன்றி மற்ற தௌகித்திரர்களுக்குச் சேரமாட்டாது. (7 ம. 458 ; 17 க. 33.) பெண்சாதியைப்போலும் பெண்ணைப்போலுமில்லாமல் தௌகித்திரன் சர்வ சுதந்திரமுள்ள வார்சாயிருப்பதால் அவனுக்குப் பிறகு அவன் வார்சுகளுக்கே மாதாமகர்சொத்துச் சேருமே யல்லாமல், பெண்சாதிக்குப் பிறகும் பெண்ணுக்குப் பிறகும் போல மூலபுருஷனுடைய வார்சுகளுக்குச் சேருவதுபோல் சேரமாட்டாது. (3 அ. 134.) அவிபக்த குடும்பசகோதரர்கள் மாதாமகர் ஆஸ்தியை, பிதுரார்ஜித சொத்தைப்போல் அடைகிறார்கள். (25 ம. 687; 27 ம. 300.)

405. தாய் தகப்பன் வார்சாவது.—தௌகித்திரனில்லாவிட்டால் கிருகஸ்தனுடைய தாய் தகப்பன் வார்சாவார்களேயன்றி தௌகித்திரனுடைய பிள்ளை வார்சாகமாட்டான். மிதாட்சர சம்பிரதாயப்படி முதலில் தாயும் பிறகு தகப்பனும் வார்சாகிறார்கள். இவ்

வழக்கம் பிகிலே, காசி இந்த தேசங்களிலும், மதிராஸ், பம்பாய் இந்த இராச்சியங்களிலும் அனுஷ்டிக்கப்படுகிறது. (14 பம். 405; வே பூ 110 448; 2 W. மேக். 55) மயூகசாஸ்திர அனுஷ்டானமுள்ள பெங்காளம், குஜராத் தேசங்களில் முதலில் தகப்பனும், பிறகு தாயும் வார்சாகிறார்கள். (6 பம். 541; 2 W. மெக் 54: 7 பம். ஸ. தீ. 108) தாய் என்பது பெற்றதாயைக்குறிக்கிறது. ஸ்வீகாரவிஷயத்தில் புருஷனுடன் கூடவிருந்து ஸ்வீகாரம்வாங்கிக்கொண்ட தாயும் எனப்படுவாள். (18 ம. 283.)

406. தாயின் சுதந்திரமின்மை.—(1) பிள்ளையின் சொத்து தாயாருக்கு வார்சுபாத்தியத்தால் கிடைத்தபோது அவளுக்கு அந்த சொத்தில் சர்வபாத்திய முண்டாகாமல் உயிருள்ளவரையில் அனுபவிக்கலாமே யொழிய வேறேவிதமாய் விநியோகம் முதலியவை செய்ய பாத்தியமில்லை. (2 ம. ஐ. 402 ; 8 ம. ஐ. 91 ; 8 மூ. இ. அ. 500.)

(2) பெண்சாதியைப்போலவே தாயும் விபசாரியாயிருந்தால் பிள்ளையின் சொத்து அவளுக்குக் கிடைக்காதென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். அதாவது விபசாரியாயிருக்கிற தாய்க்கு பிள்ளையின் சொத்தில் வார்சுபாத்தியமில்லை. ஆனால், வார்சுபாத்திய முண்டான பிறகு வியபசாரியாயிருந்தால் பாதகமில்லை. (4 க. 550.) பம்பாய், மதராஸ், அலகாபத், இந்த ஹைகோர்ட்டார்களுடைய அபிப்பிராயப்படி வியபசார தோஷமானது பெண்சாதியின் வார்சு பாத்தியத்தைமட்டும் கெடுக்குமேயொழிய, பெண், தாய் முதலிய பெண்வார்சுகளின் பாத்தியத்தைக் கெடுக்கமாட்டாது. (5. ம. 149; 31. ம. 100.) 33 அல 702; 29 பம் 91.)

(3) வார்சுபாத்தியமடைந்த தாயானவள் புனர்விவாகஞ்செய்து கொண்டாலும் அவளுக்குப்பிள்ளையின் சொத்துக்கிடைக்காமல் போகமாட்டாதென்று 1856ளுத்து 15-வது ஆக்டினால் ஊர்ஜிதப்பட்டிருக்கிறது. (2 க. ஐ. 199. 29 பம். 91.)

உதாரணம்.—யாதொரு விதவை புனர்விவாகஞ்செய்துகொண்ட பிறகு அவளுடைய முதல் புருஷனால் பிறந்த 'த' என்னும்பிள்ளை, ஆண்சந்ததியாவது பெண்சந்ததியாவது தௌகித்திரனாவது இல்லாமலிறந்தால் 'த' என்ப

வன் சொத்துக்கு மேற்படிவிதவை வார்சாவதற்கு யாதொரு தடையுமில்லை.

40.. சகோதரி முதலியவர்களின் வார்சு பாத்தியம்.—தர்மசாஸ்திரத்தில் சகோதரிகளின் வார்சுபாத்தியம் சொல்லப்படவில்லை. சமீப இரத்த சம்பந்தத்தையுத்தேசித்து அவர்களுக்கு வார்சுபாத்தியமுண்டென்று மதராஸ் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (8 ம. ஐ. 88; 5 ம. 241.) சொந்தசகோதரிதவிர தகப்பன் சகோதரி, பிள்ளையின் பெண், பெண்ணின் பெண், சகோதரி பெண் இவர்களும் வார்சுகளென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (13 ம. 10; 14 ம. 149: 15 ம 421; 17 ம. 182; 18 ம. 198; 21 ம. 263.) ஆனால் தாயாதிகளின் விதவைக்கு வார்சுபாத்தியமில்லை. (4 ம. ஐ. 18); 18 ம. 68.) மேலும் ஒரேதாய்வயிற்று சகோதரி தவிர தாயின் சக்களத்தி மகளான சகோதரிக்கு வார்சுபாத்தியமில்லை. (5 ம. 29.)

408 சபத்னிமாதாவின் பாத்தியம்—( ) தாயபாகமிதாட்சர இந்த சாஸ்திரங்களின்படிக்கு சபத்னிமாதாவுக்கு வார்சுபாத்தியங்கிடையாது. (5 ம. 29; 8 ம. 133; 37 மத 286; 16 அ. 221.)

(2) பம்பாய் இராச்சியத்தில் மட்டும் சபத்னீமாதாவுக்கு வார்சுபாத்தியமுண்டென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இன்னருக்குப்பிறகு அவள்வார்சாகிறாளென்பது நிச்சயஞ் செய்யப்படவில்லை. அப்பொழுதுகூட தாயென்கிற காரணத்தால் வார்சாகாமல் ஒரே கோத்திரமான சபிண்டனுடைய பெண்சாதி என்கிற காரணத்தால் வார்சாகிறாள் (4 பம். 188; 11 பம் 47; 19 பம் 707.)

409. அண்ணன்தம்பிகளின் வார்சுபாத்தியம்.—(2) தாய்தகப்பனுக்குப்பிறகு யாதொரு கிருகஸ்தனின் சொத்துக்கு அண்ணன் தம்பிகள் வார்சாகிறார்கள். ஒரு தாய்வயிற்றிற் பிறந்தவர்களும் மற்றொருதாய் வயிற்றிற்பிறந்த பிள்ளைகளுமிருந்தால் ஒரே தாயிடத்தில் பிறந்தவர்கள் மட்டும் ஒருவருக்கொருவர் வார்சாகிறார்கள். (1 க. 27; 19. அல. 215.) வேறுதாய்வயிற்றிற் பிறந்தவர்களுக்கு சொத்தில் யாதொரு பாகமுங் கிடையாது. ஒரேவயிற்றிற்பிறந்த அண்ணன் தம்பிகள் ஒருவருமில்லாவிட்டால், சொத்துக்கு வேறு தாய்வயிற்றிற்பிறந்த அண்ணன் தம்பிகள் வார்சா

வார்கள். குஜராத்தி தேசத்திலும் பம்பாய் பட்டணத்திலும், அங்கே முக்கியமாய் மயூக கிரந்தத்தின் அபிப்பிராயத்தை அனுஷ்டிப்பதால் அவ்விடங்களில் ஒரேதாய் வயிற்றிற்பிறந்த அண்ணன் தம்பிகள் ஒருவருமில்லாவிட்டாலும் அவர்கள் பிள்ளைகளிருந்தால் எல்லாசொத்தும் அவர்களுக்கே சேருமேயன்றி வேறுதாய்வயிற்றிற்பிறந்த அண்ணன் தம்பிகளுக்குச் சேரமாட்டாது. (12 மூ. இ. அ. 523; 3 க. ஜ. 13; 12 பம். ஜ. 65.)

அண்ணன் தம்பிகளிற் சிலர் சேர்ந்தவர்களாயும், சிலர் பிரிந்தவர்களாயுமிருக்கையில், சேர்ந்தவர்களிலொருவனிறந்தால் அவனுடைய சொத்து முழுவதும் சேர்ந்திருந்த சகோதரர்களுக்குச்சேருமேயன்றி, பிரிந்த சகோதரர்களுக்குச் சேரமாட்டாது. (3 க. ஜ. 7,)

(3) மரணமடைந்த கிரகஸ்தனும் அவனுடைய சபத்னீக மாதாவயிற்று அண்ணன் தம்பிகளும் பிரிந்திருந்தால், தாயபாகத்தின்படி இவ்விரண்டுபேர்களும் சொத்துக்கு சமபாகஸ்தர்களாயிருக்கிறார்கள். (1 க. 27) இந்த ஸ்திதியில் மிதாட்சரத்தின்படி முழுசொத்துக்கும் வேறு தாய்வயிற்று அண்ணன் தம்பிகளே பாத்தியஸ்தர்களாகிறார்கள்.

(4) ஒரே தாய்வயிற்றிற் பிறந்தவர்கள் வேறு தாய்வயிற்றிற் பிறந்தவர்களென்கிற வித்தியாசம் அண்ணன் தம்பிகளுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்குமட்டும் உபயோகப்படுமேயொழிய, சிறிய தகப்பன் பெரிய தகப்பன் முதலிய மூந்திய வரிசை வார்சுகள் விஷயத்திற் பிரயோசனப்படமாட்டாது. (6 பம். 394.)

410. அண்ணன் தம்பிகளின் பிள்ளைகள் வார்சாவது.—(1) ஒரே தாய்வயிற்று அண்ணன் தம்பிகளாவது வேறு தாய்வயிற்று அண்ணன் தம்பிகளாவதில்லாமற்போனால் அண்ணன் தம்பிகளின் பிள்ளைகள் முதலிலும் பின்னேதாரனுடைய பிள்ளைகள் பிந்தியும் வார்சாகிறார்கள். கிருகஸ்தனிறந்துபோகும்பொது அவனுக்குச்சொந்த அல்லது வேறு தாய்வயிற்று அண்ணன் தம்பிகளிலொருவராவது உயிருடனிருந்தால் எல்லா சொத்துமவனுக்குச் சேருமேயொழிய அண்ணன் தம்பி பிள்ளைகளுக்குச்சேரமாட்டாது. (3 பம். ஸ. தீ. 106, 289; 23 ஸ. 272.)

(2) குஜராத்தி தேசத்திலும் பம்பாய் பட்டணத்திலும் அங்கு அனுஷ்டிக்கப்படுகிற மயூககிரந்தத்தின்படி சொந்த அண்ணன் தம்பிகளின் பிள்ளைகளிருந்தால் அவர்களே வார்சாவார்களேயன்றி, வேறு தாய்வயிற்றிற் பிறந்த அண்ணந்தம்பிகள் வார்சாகமாட்டார்கள். (12 மூ. இ. அ. 5. 3, 3 க. ஐ 13; 12 பம். ஐ. 65) மேலும், அந்த மயூக கிரந்தத்தின்படி கிருகஸ்தனிறந்து போகுங்காலத்தில் அண்ணன் தம்பிகளின் பிள்ளைகள் சிலருமிருந்தால், அந்தப்பிள்ளைகள் அண்ணன் தம்பிகளோடுகூட சமபாகத்திற்கு பாத்தியஸ்தர்களாகிறார்கள்.

(3) கிருஸ்தனிறந்த காலத்தில் சொத்துக்கு வார்சுகளாயிருந்த அண்ணன் தம்பிகளிலொருவன் சொத்தைப் பிரித்துக்கொள்ளுவதற்கு முந்தியே இறந்துபோனால், அவனுடைய பாகம் அவனுடைய பிள்ளைகளுக்குச் சேருமேயல்லாமல் அண்ணன் தம்பிகளுக்குச் சேரமாட்டாது. (2 ஸ. 123.)

(4) இறந்துபோன கிருகஸ்தனுடைய சொந்த அண்ணன் தம்பிகளுடைய பிள்ளைகளும் வேறு தாய்வயிற்று அண்ணன் தம்பிகளும் இருந்தால், சொந்த அண்ணன் தம்பி பிள்ளைகளே வார்சாவார்கள். மேலும், அண்ணன் தம்பிகள் பிள்ளைகளிற் சிலர் இறந்துபோன கிருகஸ்தனோடு கூடவிருந்தும், சிலர் பிரிந்துமிருந்தால் சொத்து முழுவதும் சேர்ந்திருந்தவர்களுக்கே சேரும். சொந்த அண்ணன் தம்பிகள் பிள்ளைகள் பிரிந்திருந்தும் வேறுதாய்வயிற்று அண்ணன் தம்பி பிள்ளைகள் கிருகஸ்தனோடு சேர்ந்துமிருந்தால் தாயபாகப்படி அவ்விருவர்களும் சமபாகஸ்தர்களாவார்கள். (3 ஸ. 43; 6 ஸ. 93; 3 க. ஐ. 7; 1 க. 27.)

(5) அண்ணன் தம்பிகள் குமாரர்கள் தௌஹித்திரனைப்போலவே சமபாகஸ்தராவார்களே யொழிய தகப்பன்களுடைய எண்ணிக்கையைக்குறித்து பாகத்தையடையமாட்டார்கள். அதாவது:—ஒரு கிருகஸ்தனிறந்துபோகுங்காலத்தில் "க" என்னும் அண்ணனுடைய மூன்று குமாரர்களும் 'த' என்னும் அண்ணனுடைய இரண்டு குமாரர்களும் வார்சுகளாக ஏற்பட்டார்கள். இந்த ஐந்துபேர்களும் அவர்களுடைய சிறிய தகப்பன் சொத்தில் சமபாகங்களையடைவார்கள். (6 ஸ. 93; 9 ஸ. 463; 15 ஸ. 70; 17 பம். 303.)

(6) அண்ணன் தம்பிகளுடைய சுவீகாரப்பிள்ளைகளும் ஔரஸ புத்திரர்களைப்போலவே வார்சுபாத்தியமுடையவர்கள். (2 மெக் 74.)

411. அண்ணன் தம்பிகளின் பேரன்களுடைய வார்சுபாத்தியம்—தாயபாகப்படி அண்ணன் தம்பிகள் பிள்ளைகளுக்குப்பிறகு அண்ணன் தம்பிகள் பேரன்கள் வார்சாகிறார்கள். இவர்களில் ஒரே வயிற்று அண்ணன் தம்பிகளுடைய பேரன்களிருக்கையில் வேறுவயிற்று அண்ணன் தம்பிகள் பேரன்கள் வார்சாகமாட்டார்கள். (9 க. 563.) மிதாட்சா சம்பிரதாயப்படிக்குக்கூட அண்ணன் தம்பி பிள்ளைகளுக்குப் பிறகு அண்ணன் தம்பிகள் பேரன்கள் வார்சாகிறார்களென்று மிதிலதேசத்திலிருந்து வந்த ஒரு கேசில் பங்காளா சதர்கோர்ட்டார் தீர்மானித்தார்கள். (1855-ஞு பங். ஸ. தீ. 382) ஆனால் மதராஸ் ஐகோர்ட்டார் இந்த விஷயத்தைச் செவ்வையாக வாதித்து மிதாட்சரபடி அண்ணன் தம்பிகள் பேரன்கள் வார்சாகச் சொல்லவில்லையென்று முன்தீர்மானித்தார்கள். (9 ம. 291.) தர்மசாஸ்திரத்தில் அண்ணன் தம்பிபிள்ளையைச் சொன்னபோதே பேரனுமென்று அர்த்தம் பண்ணிசகோதரர்களுடைய பேரன்களுக்கும் வார்சுபத்தியமுண்டென்று அலகாபாத் ஐகோர்ட்டார் தீர்மானித்தார்கள். (24 அல. 128.)

412. பிதாமகிமுதலியவர்கள் வார்சாவது.—(1) இறந்தவனுக்கு மேலேசொன்ன அண்ணன் தம்பிகளின் பேரனீறாகவுள்ள தகப்பன் வார்சுவர்க்கத்தார் யாருமில்லாவிட்டால், தகப்பனின் தாயும் (பிதாமகி) அவளுக்குப்பின் பாட்டன் (பிதாமகனும்) வார்சாவார்கள். பாட்டனுமில்லாவிட்டால், பெரியப்பன் சிற்றப்பன்களும், அவர்களுக்குப்பின் அவர்களுடைய பிள்ளைகளும், அதன் பிறகு அவர்களுடைய பேரன்களும் வார்சாகிறார்கள்.

குறிப்பு.—தகப்பனுடைய சொந்த சகோதரவர்க்கத்துக்கும் பின்னோதரவர்க்கத்துக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை.

(2) பாட்டன்வர்க்கத்தார் அற்றுப்போயிருந்தால் பாட்டனுடையதாய், பாட்டனுடைய தகப்பன் (கொள்பாட்டன்) அவன் பிள்ளைகள் பேரன்கள் இவர்கள் ஒருவருக்குப்பின்னொருவர் வார்சாவார்கள்.

(3) இவர்களுக்குப்பிறகு சகுல்யர்களும் சமானோதகர்களும் வார்சாகிறார்கள். சமானோதகர்களுக்குப்பிறகு பந்துவர்க்கத்தார் வார்சுகளாகிறார்கள்.

413. மிதாக்ஷர தாயபாகங்களின்படி வார்சுகளின் வித்தியாசம்.—வார்சுவரிசையில் அண்ணன் தம்பிகள் பேரன்களுக்குப் பிறகு வார்சுபாத்தியம் மிதாட்சர தாயபாகங்களின்படி அதிக வித்தியாசமேற்படுகிறது. தாயபாகத்தில் பிண்டப்பிரதானஞ்செய்கிற பாத்தியத்தின்பேரில் வார்சுபாத்தியம் நிர்ணயிக்கப்படுவதால், ஒரே கோத்திர சபிண்டர்களோடு சேர்ந்து வேறு கோத்திர சபிண்டர்கள் அதாவது பந்துக்கள் வார்சுகளாக ஏற்பட்டு, பிறகு சகுல்யர்களும் சமானோதகர்களும் வார்சாகிறார்கள். மிதாட்சரத்தில் நெருங்கிய ரக்தசம்பந்தத்தைக்கொண்டு வார்சுபாத்தியம் நிர்ணயிக்கப்படுவதால், ஒரே கோத்திர தாயாதிகள் எல்லாரும், அதாவது, சபிண்டர்கள், சகுல்யர்கள், சமானோதகர்களெல்லாரையும் தாண்டினாலொழிய, வேறு கோத்திர தாயாதிகள், அதாவது, பந்துக்கள் வார்சுகளாக ஏற்படமாட்டார்கள். மிதாட்சரதாயபாக சித்தாந்தங்களின்படி வார்சுகளின் வரிசைகளை 417-419 இந்தபிரிவுகளில் விவரமாய் தெரிவித்திருக்கிறோம்.

414. பந்துக்களின் வார்சுபாத்தியம்.—முதலில் சமீபபந்துக்களும் பிறகு தூரபந்துக்களும் வார்சாகிறார்கள். அவர்களிலும் தன் வழி பந்துக்கள் முதலிலும், தகப்பன் வழி பந்துக்கள் பிந்தியும், தாய் வழிபந்துக்கள் அதன்பிறகும் வார்சாகிறார்கள். (16 ம. 30.) தாயபாகத்திலும் மிதாட்சரத்திலும் விவாமாகச் சொல்லப்பட்டிருக்கிற பந்துக்களைத்தவிர இன்னும் அனேகம் பெயர்கள் பந்துவர்க்கத்தில் சேருவார்களென்று மேலே சொல்லியிருக்கிறோம். அவர்களில் தமக்கை, தங்கை, இவர்கள் குமாரர்கள் முதலியவர்களுடைய பாத்தியம் அநேகந் தடவைகளில் விவாதப்பட்டு, இதன்கீழ் வரும் 415-வதுபிரிவில் வார்சுகளாக வருபவர்களைச் சொல்லியிருக்கின்றன.

415. அக்காதங்கைகளின் வார்சுபாத்தியம்.—பங்காள அனுஷ்டானப்படி தமக்கை தங்கைகளுக்கு வார்சுபாத்தியங்கிடையாது. தாயபாகத்தில் அவர்கள் பந்துக்களாகச் சொல்லப்பட்டிருப்பதுடன் அவர்களுக்குப் பிண்டப்பிரதானஞ் செய்யும்படியான யோக்கியதை

கொஞ்சமேனுங்கிடையாது. (7 பம். ஸ. ரி. 192; 2 ஸ. 180; 5 ஸ. 215.) காசி இராஜ்ஜிய அனுஷ்டானப்படிக்குக்கூட அக்கா தங்கைகள் வார்சுகளல்ல. (5 அ. 311.) அக்கா தங்கைகள் வேறு கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாயினும் அண்ணன் தம்பிகளோடு ரக்த சம்பந்தமுள்ளவர்களாயிருப்பதால் மிதாட்சா சித்தாந்தப்படி பந்துக்களாவார்களென்று நிச்சயஞ்செய்து அவர்களுக்கு வார்சு பாத்தியமுண்டென்று மதராஸ் ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். (5 ம. 241.) மதராஸ் இராஜதானியில் வேறு தாய் வயிற்றிற் பிறந்த அக்கா தங்கைக்கு வார்சு பாத்தியமில்லை. (5 ம. 29.) பம்பாய் இராஜதானியில் அக்கா தங்கைகளுடைய வார்சு பாத்தியம் முற்றிலும் உறுதிப்பட்டிருக்கின்றது. அண்ணன் தம்பிகளோடு சேர்ந்துகூட ஒரே குடும்பத்திலுண்டானவர்களானதால் அவர்கள் சகோத்திர சபிண்டர்களாவார்களென்றும், வேறு கோத்திரத்தில் கல்யாணஞ்செய்துகொள்ளுங் காரணத்தால் ஒரே கோத்திரத்தில் பிறந்த தன்மை கெட்டுப்போகாதென்றும் மயூககிரந்தஞ் சொல்லுகின்றது. இந்த சாஸ்திரத்தின்படி தகப்பன் தாயார்களுக்குப் பிறகு தமக்கை தங்கைகள் வார்சாகிறார்கள். (2 பம். 445.) மேலும், சொந்த அக்கா தங்கைகளில்லாவிட்டால் வேறு தாய் வயிற்றிற் பிறந்த அக்கா தங்கைகள் வார்சுகளாவார்கள். (1 பம். ஐ. 118; 9 மு இ. அ. 516; 3 பம். 353, 369; 4 பம். 188, 198.)

416. சகோதரி பிள்ளைகளின் வார்சு பாத்தியம். (1) தாயபாகத்தில் தங்கை தமக்கை பிள்ளைகளின் வார்சு பாத்தியம் பந்து வரிசையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதால் பங்காள தேசத்தில் அவர்களுடைய பாத்தியம் ஆதிமுதல் ஸ்திரப்பட்டிருக்கிறது. மேலும், பங்காள சம்பிரதாயப்படி சொந்த அக்கா தங்கைகளுக்கும் வேறு தாய் வயிற்றிற் பிறந்த அக்கா தங்கைகளுக்கும் வார்சு பாத்தியத்தில் பேதமில்லாததால் அவர்களுடைய வார்சுகள் சேர்ந்து பொது வார்சுகளாகிறார்கள். (2 W. மேக். 86; 11 க. 69.) மிதாட்சரத்தில் தங்கை தமக்கைகள் பிள்ளைகளின் வார்சு பாத்தியம் பந்து வரிசையில் தெளிவாய் சொல்லப்படவில்லை. முற்காலத்தில் அவர்களுக்கு வார்சுபாத்தியமில்லையென்றே தீர்மானிக்கப்பட்டுவந்தது. ஆனால், அவர்களுடைய வார்சு பாத்தியம் இப்பொழுது உண்டென்று உறுதிப்பட்டு தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. (6 ம. ஐ. 278; 2 ம. 304; 20 அல.

191.) மேலும், தங்கை தமக்கைகளைக் காட்டிலும் முந்தியே அவர்கள் பிள்ளைகள் வார்சாகிறார்கள். (5 ம. 241.) சகோதரி பிள்ளையைப்போல பின்னோதரி பிள்ளையும் வார்சாகிறான். (15 ம. 300.) பம்பாய் தேசத்தில் தங்கை தமக்கைகளுடைய பிள்ளைகளின் வார்சு பாத்தியம் ஆதிமுதல் ஸ்திரப்பட்டிருக்கிறது. சொந்தத்தங்கை தமக்கை பிள்ளைகளில்லாவிட்டால் வேறு தாய்வயிற்று தங்கை தமக்கை பிள்ளைகள் வார்சாகிறார்கள். (வே பூ. 493, 495.)

(2) சகோதரிபிள்ளைக்குப்பிறகு அம்மான்வார்சானாலும், அம்மானுக்குப்பிறகுதான் சகோதரியின்பிள்ளையின்பிள்ளை (சகோதரி பேரன்) வார்சாகிறான். இவனுக்குப்பிறகு அம்மான்பிள்ளை வார்சாகிறான். (20. ம. 342.)

417. மிதாட்சர சம்பிரதாயப்படி வார்சுகளின் வரிசைக்கிரமம்.—மிதாட்சரப்படி வார்சுகளின் வரிசைக்கிரமம் இதன்கீழ் காட்டப்பட்டிருக்கிறது சமானோதகர்கள் வரையிலுள்ள வார்சுகளுடைய வரிசை இதன்கீழ் எழுதப்பட்டிருக்கிற வம்சாவளியால் தெரியவரும். முதல்மூன்று தலைமுறை சபிண்டர்களுடைய வார்சு வரிசையை யனுசரித்துப் பிறகு வருகிறவர்களின் வரிசைகளேர்ப்படுத்தப் பட்டிருக்கின்றன. பந்துவரிசையிலுள்ள வார்சுகளுடைய வரிசைக்கிரமம் அனேகம்பெரிய கிரந்தகர்த்தாக்கள் செய்திருக்கிற கிரந்தங்களை யனுசரித்து எழுதப்பட்டிருக்கின்றன.

மிதாட்சரப்படி வார்சுகளின் வரிசைக்கிரமம்.

(1) சபிண்டர்கள்.

1. பிள்ளை.
2. பேரன்.
3. கொள்பேரன்.
4. பெண்சாதி. (பிள்ளை, பேரன், கொள்பேரனில்லாதபோது.)
5. பெண். (1) விவாகமாகாதவள்.
   (2) விவாகமான ஏழைப்பெண்.
   (3) விவாகமான பணக்காரப்பெண்.
6. தௌகித்திரன் (பெண்ணின் பிள்ளை)
7. தாய்.
8. தகப்பன்.

9. (1) ஒரே தாய்வயிற்று அண்ணன் தம்பிகள்.
(2) வேறு தாய்வயிற்று அண்ணன் தம்பிகள்.
10. (1) (சொந்த) அண்ணன் தம்பிகள் பிள்ளைகள்.
(2) வேறு தாய்வயிற்று அண்ணன் தம்பி பிள்ளைகள்
11. (1) சொந்த அண்ணன் தம்பிகளின் பேரன்கள்.
(2) பின்னேதா அண்ணன் தம்பிகளின் பேரன்கள்.
12. தகப்பனுடைய தாயார் (பாட்டி)
13. பிதாமகன் (தகப்பனுடைய தகப்பன்)
14. சிற்றப்பன்-பெரியப்பன்.
15. சிற்றப்பன் பெரியப்பன் பிள்ளைகள்.
16. சிற்றப்பன் பெரியப்பன் பேரன்கள்.
17. பிதாமகன் தாயார். (கொள்பட்டி)
18. பிரபிதாமகன் (பிதாமகன் தகப்பன்.)
19. சிறியபாட்டன் பெரியபாட்டன்.
20. சிறியபாட்டன் பெரிய பாட்டன் பிள்ளைகள்,
21. சிறியபாட்டன் பெரியபாட்டன் பேரன்கள்.
22. கொள்பேரன் பிள்ளை.
23. கொள்பேரனின் பேரன்.
24. கொள்பேரனின் கொள்பேரன்.
25. அண்ணன் தம்பிகளின் கொள்பேரன்கள்.
26. ,, கொள்பேரனின் பிள்ளைகள்
27. ,, கொள்பேரனின் பேரன்கள்.
28. சிறிய தகப்பன் பெரியதகப்பன் கொள்பேரன்கள்.
29. ,, கொள்பேரனின் பிள்ளைகள்.
30. ,, கொள்பேரனின் பேரன்கள்.
31. சிறிய பாட்டன் பெரியபாட்டன் கொள்பேரன்கள்.
32. ,, கொள்பேரனின் பிள்ளைகள்.
33. ,, கொள்பேரனின் பேரன்கள்.
34. பிர பிதா மகனுடைய தாயார்.
35. ,, தகப்பன்.
36. ,, அண்ணன் தம்பிகள்.
37. ,, அண்ணன் தம்பிகள் பிள்ளைகள்.
38. ,, தகப்பனுடைய தாயார்.
39. ,, தகப்பனுடைய தகப்பன்.
40. ,, சிறிய தகப்பன் பெரிய தகப்பன்.
41. பிரபிதா மகனுடைய சிறிய தகப்பன் பெரிய தகப்பன் பிள்ளைகள்.
42. ,, பூட்டனுடைய தாயார்.

43. ,, பிரபிதாமகன்.
44. ,, பிதாமகனுடைய அண்ணன் தம்பிகள்
45. ,, ,, பிள்ளைகள்.
46. பிரபிதாமகனுடைய அண்ணன் தம்பிகளின் பேரன்கள்.
47. ,, ,, கொள்பேரன்கள்.
48. ,, ,, கொள்பேரனின் பிள்ளைகள்.
49. ,, ,, கொள்பேரனின் பேரன்கள்.
50. பிரபிதாமகனுடைய சிறியதகப்பன் பெரியதகப்பனுடையபேரன்கள்.
51. பிரபிதாமகனின் சிறிய தகப்பன் பெரிய தகப்பனுடைய கொள்பேரன்கள்.
52. ,, ,, கொள்பேரனின் பிள்ளைகள்.
53. ,, ,, கொள்பேரனின் பேரன்கள்.
51. பிரபிதாமகனுடைய சிறியபாட்டன் பெரிய பாட்டன்களுடைய பேரன்கள்.
55. ,, ,, கொள்பேரன்கள்.
56. ,, ,, கொள்பேரனின் பிள்ளைகள்.
57. ,, ,, கொள்பேரனின் பேரன்கள்.

(2) சமானோதகர்கள்.

58. கொள்பேரனின் கொள்பேரன் முதல் 7-தலைமுறை வரையில்.
59. மேலே 27 - வதில் சொன்னவர்களுக்குக் கீழ் 7 தலைமுறை வரையில்.
60. ,, 30 ,, 7 தலைமுறை வரையில்.
61. ,, 33 ,, ,,
62. ,, 49 ,, ,,
63. ,, 53 ,, ,,
64. ,, 57 ,, ,,
65. ,, 43-ல் சொன்னவருடைய தாயார்.
66. ,, 43-ல் ,, தகப்பன்.
67. ,, 43-ல் ,, சிறிய தகப்பன் பெரியதகப்பன், அவர்களுடைய புத்திர சந்ததி 13 தலைமுறை வரைக்கும்.
68. ,, 66 ,, தாயார்.
69. ,, 66 ,, தகப்பன்.
70. ,, 66 ,, சிறிய தகப்பன் பெரிய தகப்பனும் அவர்களுக்குப் பிறகு 13 தலை முறை வரையில்

71. சமானோதகர்கள் இவ்விதம் பதிமூன்று தலைமுறைவரையில் வார்சுகளாகி, பிறகு பந்துக்கள் வார்சாவார்கள்.

(3) பந்துக்கள்.

1. பிள்ளையின் தௌகித்திரன்.
2. பேரனின் தௌகித்திரன்.
3. தகப்பனின் தௌகித்திரன். (சகோதரி புத்திரர்கள்.)
4 அண்ணன் தம்பிகளின் தௌகித்திரன்.
5. ,, பிள்ளையின் தௌகித்திரன்.
6. பாட்டனின் தௌகித்திரன். (அத்தை பிள்ளை)
7. பெரியதகப்பன் சிறியதகப்பன் தௌகித்திரன்.
8. ,, பிள்ளையின் தௌகித்திரன்.
9. தாயின் தாய்
10. தாயின் தகப்பன். (15 ம. 421.)
11. மாமன்
12 தௌகித்திரன் பிள்ளை (11 ம. 287.)
13. மருமான் பிள்ளை. (20. ம. 342)
14. மாமன் பிள்ளை.
15. சிறியதாயார் பெரியதாயர் பிள்ளைகள்.
16. மாமன் பேரன்.
17. தகப்பனுடைய அத்தை பிள்ளைகள்.
18. சிறியபாட்டன் பெரியபாட்டன் தௌகித்திரன்.
19. தகப்பனின் மாமன்.
20. தகப்பனின் மாமன்பிள்ளை.
21. தகப்பனின் சிறியதாயார் பெரியதாயார் பிள்ளைகள்.
22. தகப்பனின் மாமன் பேரன்.
23. தாயின் தகப்பன்.
24. தாயின் சிறிய தகப்பன் பெரிய தகப்பன்.
25. ,, ,, பிள்ளைகள்.
26. தாயின் அத்தை மகன்.
27. தாயின் மாமன்.
28. தாயின் மாமன் பிள்ளை.
29. தாயின் சிறிய தாயார் பெரிய தாயார் பிள்ளைகள்
30. தாயின் மாமன் பேரன். (5 ம 69).
31. தாயின் பாட்டன்.
32. தாயின் சிறிய பாட்டன் பெரிய பாட்டன்.
33. ,, பிள்ளைகள்.
34. தாயின் சிறிய பாட்டன் பெரிய பாட்டன் பேரன்கள்,

35. தாயின் கொள்பாட்டன்.
36. பிள்ளையின் பெண். (14 ம. 149)
37. அக்கா தங்கைகள். (8 ம. ஐ. 88; 5 ம. 241)
38. பெண்ணின் பெண் (17 ம. 182)
39. அத்தை. (13 ம. 10)
40 அத்தையின் பெண்.

418. பம்பாய் தேசாசாரங்கள்.—(1) பம்பாயிராச்சியத்தில் முக்கியமாய் குஜராத்தி தேசத்திலும் பம்பாய் பட்டணத்திலும் ஆதாரமாக வழக்கத்திலிருந்து வருகிற மயூககிரந்தத்தின்படி ஒரே கோத்திரமுள்ள சபிண்டர்களுடைய பெண்சாதிகள்கூட சபிண்டர்களாக எண்ணப்பட்டு, புருஷர்களிறந்துபோயிருந்தால் அவர்கள் ஸ்தானத்தில் வார்சுகளாக ஏற்படுகிறார்கள். (6 பம். ஐ. 152; 5 பம். 110; 9 பம். 31.) இவ்விதம் ஆஸ்திதாரனுடைய பிள்ளையின்பெண்சாதி, பேரனின்பெண்சாதி, கொள்பேரனின் பெண்சாதி, தௌகித்திரன் பெண்சாதி, அண்ணன்தம்பிகளின் பெண்சாதி, சிறியதகப்பன்பெரியதகப்பன் பெண்சாதி இவர்கள் முதலியவிதவைகள் தங்கள் புருஷனுக்குப்பிறகு மயூககிரந்தப்படி வார்சுகளாகிறார்கள்.

(2) மேலும், ஒரேகுடும்பத்திற்பிறந்தகாரணத்தால், அதிலுள்ள பெண்களும் புருஷர்களும் ஒரேகோத்திரத்தாராய் பாவிக்கப்பட்டு பெண்களுக்கு வேறுகோத்திரத்தில் கல்யாணமானாலும் ஒரே கோத்திரத்தில் பிறந்தநிலைமை தப்பிப்போகாதென்று மயூககிரந்தம் சொல்லுகிறது. இந்த அபிப்பிராயத்தின்படி தங்கைதமக்கைகள், அவர்கள் பெண்கள், அண்ணன்தம்பிகளின் பெண்கள், பிள்ளையின்பெண்கள், பெண்ணின்பெண்கள், இவர்கள் முதலிய பெண்வரிசை வார்சுகள் ஏற்பட்டிருக்கிறார்கள். அத்தை ஒரு கோத்திரத்திற் பிறந்த சபிண்டையாகபாவிக்கப்பட்டு தாயுடன்பிறந்த மாமனுக்கு முந்தி வார்சாகிறாள். (8 பம். ஐ. 244)

419 தாயபாக அனுஷ்டானப்படி வார்சுக்கிரமங்கள்.—தாயபாகப்படி முதல் மூன்றுதலைமுறை சகோத்திர சபிண்டர்களுடன் கலந்து வேறுகோத்திர சபிண்டர்களான பிதாவின்பந்துக்களும் மாதாவின் பந்துக்களும் வார்சுகளாகிறார்கள். அதன்பிறகு சகுல்யர்கள், அதாவது, 4, 5, 6 தலைமுறையுள்ள சகோத்திர சபிண்டர்

களும், அவர்களுக்குப்பிறகு சமானோதகர்களும் வார்சுகளாகிறார்கள். இதன்கீழ் காட்டப்பட்டிருக்கிற வார்சுகிரமத்தை, தற்காலம் அனேகத்தீர்ப்புகளின் ஆதாரத்தைக் கொண்டுஏற்படுத்தப்பட்டிருக்கிறது. (15 க. ஐ. 35; 4 க. 411; 9 க. 563, 565; 15 க. 78).) வங்காளராச்சிய அனுஷ்டானப்படி ஸ்திரீகளுக்கு வார்சுபாத்தியங்கிடையாது. ஆனால், பெண்சாதி, பெண், தாயார், தகப்பனுடையதாயார், பாட்டனுடையதாயார், இந்த ஐந்து பேர்கள்மட்டும்வார்சுகளாக ஏற்படலாமென்று சுருதிவாக்கியங்கள் ஏற்பட்டிருப்பதால் அவர்கள் மட்டும் வார்சுகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தாயபாக அனுஷ்டானப்படி வார்சுகளின் வரிசைக்கிரமம்.

(1) சபிண்டர்கள்.

1. பிள்ளை.
2. பேரன்
3. கொள்பேரன்.
4. பெண்சாதி.
5. பெண்.
6. தௌகித்திரன்.
7. தகப்பன்.
8. தாய்.
9. சகோதரர்கள்.
10. ,, பிள்ளைகள்.
11. ,, பேரன்கள்.
12. சகோதரிகளின் பிள்ளைகள்.
13. தகப்பனுடைய தகப்பன் (பாட்டன்).
14. தகப்பனுடைய தாய்
15. சிறிய தகப்பன் பெரிய தகப்பன்.
16. ,, ,, பிள்ளைகள்.
17. ,, ,, பேரன்கள்.
18. பாட்டனுடைய தௌகித்திரன்.
19. ,, தகப்பன் (கொள்பாட்டன்).
20. ,, தாயார் (கொள்பாட்டி).
21. சிறியபாட்டன் பெரியபாட்டன்.

22. சிறிய பாட்டன் பெரிய பாட்டன் பிள்ளைகள்.
23. ,, ,, பேரன்கள்.
24. கொள்பாட்டனுடைய தௌகித்திரன்.
25. பிள்ளையின் தௌகித்திரன்.
26. பேரனுடைய தௌகித்திரன்.
27. அண்ணன் தம்பிகள் தௌகித்திரன்.
28. ,, பிள்ளைகளின் தௌகித்திரன்.
29. சிறிய தகப்பன் பெரிய தகப்பன் தௌகித்திரன்.
30. ,, ,, பிள்ளையின் தௌகித்திரன்.
31. சிறிய பாட்டன் பெரிய பாட்டன் தௌகித்திரன்.
32. ,, ,, பிள்ளையின் தௌகித்திரன்.
33. தாயின் தகப்பன்.
34. மாமன்.
35. ,, பிள்ளை.
36. ,, பேரன்.
37. சிறிய தாயார் பெரிய தாயார் பிள்ளை.
38. தாயின் பாட்டன்.
39. தாயின் சிறிய தகப்பன் பெரிய தகப்பன்.
40. ,, ,, பிள்ளை.
41. ,, ,, பேரன்.
42. தாயின் பாட்டனுடைய தௌகித்திரன்.
43. தாயின் கொள்பாட்டன்.
44. தாயின் சிறிய பாட்டன் பெரிய பாட்டன்.
45. ,, ,, பிள்ளை.
46. ,, ,, பேரன்.
47. தாயின் கொள்பாட்டனுடைய தௌகித்திரன்.
48. மாமனுடைய தௌகித்திரன்.
49. ,, பிள்ளையின் தௌகித்திரன்.
50. தாயின் சிற்றப்பன் பெரியப்பனுடைய தௌகித்திரன்.
51. ,, ,, பிள்ளையின் தௌகித்திரன்.
52. தாயின் சிறிய பாட்டன் பெரிய பாட்டனின் தௌகித்திரன்.
53. ,, ,, பிள்ளையின் தௌகித்திரன்.

(2) சகுல்யர்கள்.

54. கொள்பேரனுடைய பிள்ளை.
55. ,, பேரன்.
56. ,, கொள்பேரன.
57. சகோதரர்களின் கொள்பேரன்

58. சகோதரர்களின் கொள்பேரனுடைய மகன்.
59. ,, ,, பேரன்.
60. சிற்றப்பன் பெரியப்பன் கொள்பேரன்.
61. ,, ,, ,, பிள்ளை.
62. ,, ,, ,, பேரன்.
63. சிறியபாட்டன் பெரியபாட்டன் கொள்பேரன்.
64. ,, ,, ,, மகன்.
65 ,, ,, ,, பேரன்.
66. கொள்பாட்டனின் தகப்பன்.
67. ,, சகோதரர்கள்.
68. ,, ,, பிள்ளை.
69. ,, ,, பேரன்.
70. ,, சகோதரிகள் பிள்ளை.
71. ,, பாட்டன்.
72. ,, சிற்றப்பன் பெரியப்பன்.
73. ,, ,, ,, பிள்ளை.
74. ,, ,, ,, பேரன்.
75. ,, பாட்டனுடைய தௌகித்திரன்.
76. ,, கொள்பாட்டன்.
77. ,, பாட்டனுடைய சகோதரர்கள்.
78. ,, ,, பிள்ளை.
79. ,, ,, பேரன்.
80. ,, கொள்பாட்டனுடைய தௌகித்திரன்.
81. ,, சகோதரர்களின் தௌகித்திரன்.
82. ,, ,, பிள்ளையின் தௌகித்திரன்.
83. ,, சிறியதகப்பன் பெரிய தகப்பனுடைய தௌகித்திரன்.
84. ,, பிள்ளையினுடைய தௌகித்திரன்.
85. ,, சிறியபாட்டன் பெரியபாட்டனுடைய தௌகித்திரன்.
86. ,, ,, ,, பிள்ளையின் தௌகித்திரன்.
87. ,, அண்ணன் தம்பிகள் கொள்பேரன்.
88. ,, ,, ,, பிள்ளை.
89. ,, ,, ,, பேரன்.
90. ,, சிறியதகப்பன் பெரியதகப்பன் கொள்பேரன்.
91. ,, ,, ,, ,, கொள்பேரன் பிள்ளை.

92. கொள்பாட்டனின் சிற்றப்பன் பெரியப்பனின் கொள்ளுப்பேரன்.
93. ,, பாட்டனுடைய சகோதரர்களின் கொள்பேரன்.
94. ,, ,, ,, கொள்பேரன்பிள்ளை
95. ,, ,, ,, கொள்ளுப்பேரன் பேரன்.

(3) ஸமானோதகர்கள்.

96. மேலேகுறித்த 56 வதிலுள்ள வருக்குங்கீழ் 7-தலைமுறைவரைக்கும்
97. ,, 59 ,,
98. ,, 62 ,,
99. ,, 65 ,,
100. ,, 89 ,,
101. ,, 92 ,,
102. ,, 95 ,,
103. ,, 76 ன்-தகப்பன் ,,
104. ,, 76 ன்-தகப்பன் பெரியப்பன்களுடைய ஆண்சந்திக்குக்கீழ் 13 தலைமுறைவரைக்கும்.
105. ,, 103 ன்-தகப்பன்.
106. ,, 103 ன்-சிறியதகப்பன் பெரியதகப்பன். இவர்களின் ஆண்சந்ததி 13 தலைமுறைவரைக்கும்.
107. இவ்விதமே சமானோதகர்கள் 13 தலைமுறைவரைக்கும் வார்சுகளாவார்கள்.

420. **வார்சுகளில்லாத சொத்து சர்க்காரைச் சேருவது.**--மேலே சொல்லப்பட்ட சபிண்டர்கள், சமானோதகர்கள், பந்துக்கள் இவர்களில் ஒருவருமில்லாவிட்டால், பிராமணனுடைய சொத்து அவனுடைய குருவுக்கும், குருவில்லாவிட்டால் சிஷியனுக்கும், சிஷியனில்லாவிட்டால் கூடப்படித்தவனுக்கும், அவனுமில்லாவிட்டால் படித்தறிந்த வித்வானுக்கும், அவனுமில்லாவிட்டால் எந்த பிராமணனுக்காவது சேருமென்றும், பிராமணனைத்தவிர மற்ற ஜாதியாருடைய சொத்து விஷயத்தில் பாத்தியஸ்தர்களில்லாவிட்டால் சர்க்காருக்குச் சேருமென்றும் தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், குரு சிஷியன் முதலியவர்கள் எவராவது பிராமணனுடைய சொத்துக்கு வார்சாக ஏற்பட்ட கேசுகள் இதுவரையில் காணப்படவில்லை. மேலும் பிராமணனுடைய சொத்தாயிருந்தாலும் வார்சுதா

யில்லாவிட்டால் சர்க்காருக்குச் சேருமென்றே தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. (8 மூ. இ. அ. 577; 11 இ. அ. 619.) பாத்தியஸ்தர்கள் ஒருவருமில்லையென்று தெளிவாக ருசுவில்லாவிட்டால் நான் சொத்து சர்க்காருக்குச் சேருமேயொழிய இல்லாவிட்டால் சேரமாட்டாது. (12 மூ. இ. அ 448) சர்க்காருக்குச் சொத்துச் சேர்ந்தால் அதற்கு முந்தின பாத்தியஸ்தனால் ஒத்திபந்தகம் முதலிய பராதீனங்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்தால் அந்த பராதீனங்களாலும், அவனுடைய கடன்களாலும் அவர்கள் கட்டுப்படுவார்கள். மேலும் கடைசி வார்சு விதவை முதலிய சொல்ப பாத்தியமுடையவர்களாயிருந்தால் அவளுடைய அதிகாரத்தைமீறி அவசியமன்றியில் செய்திருந்த பராதீனங்களை சர்க்காரில் ஆட்சேபித்து ரத்து செய்துகொள்ளலாம். (8 மூ. இ. அ. 529) சன்னியாசி சொத்துக் கூடவிருந்தவரைச்சேரும். (10 ம. 384.) சூத்திரர்களுக்குச் சன்னியாசி யாசிரமங்கிடையாது. அவ்வித வழக்கமிருப்பதாக ருசு செய்யப்பட்டாலன்றி மற்றபடி சூத்திர சன்னியாசி சொத்து அவன் பிள்ளை முதலிய வார்சுக்கேசேரும். (22 ம. 302.)

421. சேர்ந்திருந்தவர்களுக்குண்டான வார்சு பாத்தியம்.—ஒருதரம் பிரித்துக்கொண்டு மறுபடி சேர்ந்திருந்தவர்கள் மிதாட்சர குடும்பத்திற்போல பொது.பாத்தியமுள்ளவர்களாகாமல் கொஞ்ச மேற்றத்தாழ்ச்சியாக தாயபாகக் குடும்பத்தின்பிரகாரம் தனி பாத்தியமுள்ளவர்களாக ஆகிறார்களென்று காணப்படுகிறது. சேர்ந்த பாகஸ்தர்களிலொருவனிறந்தால், தர்மசாஸ்திரப்படி அவனுடைய சொத்துக்கு முதலில் (1) ஆண் சந்ததிகள் வார்சாகிறார்கள். அவர்களில்லாவிட்டால் (2) சேர்ந்த சகோதரர்களில் ஒரு தாய்வயிற்றிற் பிறந்தவர்கள் வார்சாகிறார்கள். இவர்களில்லாவிட்டால், (3) சேர்ந்த வேறு தாய்வயிற்றுச் சகோதரர்களுடன் பிரிந்த ஒரே தாய்வயிற்றுச் சகோதரர்கள் சேர்ந்து பொதுவில் வார்சாகிறார்கள். பிறகு (4) பிரிந்த ஒரே தாய்வயிற்று சகோதரர்களும் பிறகு (5) சேர்ந்த தகப்பன், இவனில்லாவிட்டால் (6) சிறியதகப்பன், பெரியதகப்பன், (6) பிரிந்த வேறு தாய்வயிற்று தகப்பன் சகோதரர்கள் (8) தாய், (9) பெண் சாதி, (10) அக்கா தங்கைகள், இவர்களொருவருமில்லாவிட்டால் கிருகஸ்தனுடைய மற்ற சபிண்டர்களும் சமானோதகர்களும் வார்சாகிறார்கள். (5 ஸ. 249; 7 ஸ. 35; 20 ஸ. 197; 1 க. 27.)

(d) வார்சுபாத்தியத்தைக் கெடுப்பவைகள்.

422. வார்சுபாத்தியத்தைக் கெடுக்கும் காரியங்கள்.—மதத்துக்கும் ஜாதிக்குந்தக்கபடி சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கிற கர்மங்களைச்செய்யச் சொத்து ஏற்பட்டிருக்கிறதென்றும், சொத்துக்குவார்சாகிறவர்கள் கிருஹஸ்தனுடைய ஆத்மா நற்கதியையடையவேண்டுவதற்கு வேண்டியகர்மங்களை நடத்தயோக்கியதையுள்ளவரா யிருக்கவேண்டுமென்று, அந்த யோக்கியதையில்லாதவர்கள் வார்சாகமாட்டார்களென்றும் தர்மசாஸ்திரங்கள் சொல்லுகின்றன. வார்சுபாத்தியத்தைக்கெடுக்கும் தோஷங்கள் அனேகஞ்சொல்லப்பட்டிருந்தாலும் அவைகளில் சிலவற்றிற்கு அதவாது:—பொய்சொல்லுவது, மோசஞ்செய்வது, லோபித்தனம், துர்நடத்தை, தகப்பனுக்குக்கீழ்ப்படியாமை, சூதாடுதல், குடிமுதலியவைகளுக்குப் பிராயச்சித்த மேற்பட்டிருப்பதால், அவைகள் இந்தக்காலத்தில் கோர்ட்டுகளிலெடுத்துச் சொல்லத்தக்கினவைகளல்ல. ஆகையால், பிராயச்சித்தத்தால் நிவர்த்திசெய்பக்கூடாத தோஷங்கள்மட்டுந்தான் முக்கியமானவைகள். அவைகளாவன:—ஜாதிப்பிரஷ்டனாய் வேறுமதத்திற்சேருவது, நபும்ஸகனாயிருப்பது, பிறவிகுருட்டுத்தனம், செவிடு, ஊமை, சைத்தியம், அங்கயீனம், நிவர்த்திசெய்யக்கூடாத வியாதிகள்முதலான தோஷமுள்ளவர்கள் வார்சுபாத்தியத்தால் சொத்தை யடையமாட்டார்களென்று மனுஸ்மிருதி முதலிய தர்மசாஸ்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன.

423 ஜாதிப்பிரஷ்டம்.—வேறுமதத்தைச் சேருவதாலாவது பைகிஷ்காரம் முதலிய வேறு எந்தக்காரணத்தாலாவது ஜாதியை விட்டு விலகினவனுக்கு சொத்துபாத்தியங்களாவது வார்சுபாத்தியங்களாவது போகமாட்டாதென்று 1850-ளுத்து 21-வது ஆக்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால், எவராவது கிறிஸ்து முதலிய பிறமதங்களைச்சேர்ந்தால் அவர்களுக்கு சொத்தின்வார்சுபாத்தியம் போகமாட்டாது. ஆனல், வேறுகாரணங்களால் அப்படிப்பட்ட பாத்தியம் போய்விடும். இவைகளாவன:—

(1) ஒரு கிருகஸ்தனிறந்துபோகும்போது அவனுடையவிதவையும், அதற்குமுந்தி ஜாதியைவிட்டு விலகினபிள்ளையுமிருந்தார்கள். சொத்துமுழுவதும் பிள்ளைக்குச்சேரும்.

(2) ஒரு கிருகஸ்தனிறந்துபோகும்பொழுது அவனுக்கு ஆண் சந்ததியிலொருவருமில்லை. விதவாவிவாகத்தில் சேர்ந்தவர்களுடன் போஜனஞ்செய்ததால் ஜாதியைவிட்டு நீக்கப்பட்ட அவன்பெண்சாதியும், ஜாதியிலிருந்து விலகின தாயாதிகளுமிருந்தார்கள். பெண்சாதியே அவன்சொத்துக்கு வார்சாவாள்.

(3) ஒருகிருகஸ்தனிறந்துபோகும்பொழுது அவனுக்கு ஆண் சந்ததியிலொருவருமில்லை. விலக்கப்பட்டு விபசாரியாயிருந்துவந்த விதவையும், தூரஞாதிகள்மட்டுமிருந்தார்கள். விதவை வார்சாகமாட்டாள். ஏனென்றால் 1850-௵த்து 21-வது ஆக்ட்படி விலக்கப்பட்டிருந்த தோஷம் பாத்தியத்தைக் கெடுக்காவிட்டாலும், விபசாரியாயிருந்த காரணத்தால் வார்சுபாத்தியம் நீங்கிவிடும். (5 க. ஐ. 466; 13 க. ஐ. 1, 25, 75; 5 க. 776.)

(4) அலகாபாத் இராச்சியத்தில் "த" என்றபிதாவும், "ம" என்றமகனும் இந்துமதத்தைவிட்டு கிறிஸ்துமதத்தைச்சேர்ந்தார்கள். பிறகு "த" என்பவனிறந்தான். "ம" என்பவன் இந்துமதத்திலிருந்த அவனுடைய சிறியதகப்பன் சொத்துக்கு வார்சாவாமென்று தீர்மானிக்கப்பட்டது (11 அ. 100)

(5) மைசூர் முதலான சில சுதேசராஜ்ஜியங்களில் மேற்சொல்லிய 1850-௵த்து 21-வது ஆக்ட் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரப்படாததால் அந்த தேசங்களில் ஜாதியைவிட்டு விலகினவனுக்கு வார்சுபாத்தியம் போய்விடுமென்றே சொல்லத்தக்கதாயிருக்கிறது.

424. **குருடு, செவிடு, முதலியவை.**—நபும்ஸகர்களுக்கும், பிறவிக்குருடு, செவிடு, ஊமை, முதலியவியாதிகளால் நிவர்த்தியில்லாமலிருப்பவர்களுக்கும் வார்சுபாத்தியங்கிடையாது. ஆனால், மேற்கண்ட தோஷங்கள் நடுவில்வந்திருந்தாலும், நிவர்த்திசெய்யக்கூடியதாயிருந்தாலும் வார்சுபாத்தியம் போகமாட்டாது. (1 ம. ஐ. 117; 14 க. ஐ. 273; 18 க. 327, 111; 1 பம். 177, 557; 4 பம். ஐ. 135; 1870 பம். ஸ. தீ. 661; 6 அ. 332; 26 ம. 133; 19 ம. 74; 22 கல். 864; 27 ம. 45 132; 456; மத 949.)

425. பைத்தியம்.—பைத்தியம் பிடித்தவர்கள் வார்சுபாத்திய த்திற்கு யோக்கியமுள்ளவர்களல்ல. பைத்தியமென்றால் முழுவதும் புத்தி கெட்டுப்போய் கெட்ட காரியங்களைச்செய்து பிறருக்குக் கெடுதி யுண்டாகும்படியான நிலைமையென்று எண்ணக்கூடாது. தான் செய் கிறது சரியானதில்லையென்று அறிந்துகொள்ளப்போதுமான அறிவில் லாமை பைத்தியமென்றெண்ணப்படும். (12 அ. 530; 1 ம. ஐ 214) பைத்தியத்தால் வார்சுபாத்தியம் போவதற்கு, அது பிறவிமுதலாயிரு க்கவேண்டியதா, அல்லது பிறகு உண்டாயிருந்தால் போதுமானதா வென்கிற விஷயத்தில் ஐகோர்ட்டார்கள் வெவ்வேறு அபிப்பிராயமுள் ளவர்களாயிருக்கிறார்கள். பிறவிமுதல் பைத்தியமாயிருந்தால் மட்டும் வார்சுபாத்தியம் போகுமென்று பம்பாய் ஐகோர்ட்டார் தீர்மானித்தி ருக்கிறார்கள். (1 பம். 177, 182; 544; 13 மூ. இ. அ. 5 9; 14 மூ. இ. அ. 1 6.) ஆனால், பிறவிமுதல் பைத்தியமில்லாவிட்டாலும் வார்சுபாத்தியமுண்டாகுங்காலத்திலிருந்தால் வார்சுபாத்தியம் போய் விடுமென்றும், அந்தப் பைத்தியம் எப்பொழுதும் நிவர்த்திசெய்யத் தக்கதாயிருப்பது அவசியமில்லையென்றும் கல்கத்தா, அலகாபாத் ஹைகோர்ட்டார்கள் தீர்மானித்திருக்கிறார்கள். (5 அ. 509; 9 க. ஐ. 198, 204; 8 க. 149; 10 க 63.) ஆனால் ஒருகேசில் அலகாபாத் ஹைகோர்ட்டார் பிறவிமுதல் பைத்தியமில்லாமல் நடுவில் பைத்தியம் பிடித்த ஒருவனுக்கு வார்சு பாத்தியமுண்டென்று தீர்ப்புசெய்திருக்கி றார்கள். (28 அல. 247.)

426. அங்கஹீனர்கள்.—கை கால்கள் இல்லாமல் வேலை செய்ய முடியாத அங்கஹீனர்கள் வார்சுபாத்தி மற்றவர்களென்று சொல்லப்பட்டிருக்கின்றது. பிறவிமுதல் அங்கஹீனர்களாக வில் லாமல், மத்தியகாலத்தில் வியாதியினாலாவது, வேறு எந்தக் கார ணத்தினாலாவது கால் கைகள் போய் அசையமாட்டாமலிருக்கும் நொண்டிகளும் முடங்களும் வார்சுபாத்திய மற்றவர்களென்று சொல் லத்தக்கதாயிருக்கின்றது. (1 பம். 185; பம். வி. ரி 151; வெ. பூ. 578.)

427. நீங்காத வியாதி.—நீங்காத குஷ்டரோகம் முதலிய வியா திகளால் பாதிக்கப்பட்டவர்கள். வார்சுபாத்திய மற்றவர்களென்று

சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த வியாதிகள் பிறந்தது முதலிருக்க வேண்டியதனவசியம். மத்திய காலத்திலுண்டாயிருந்தாலும் அவைகள் மிகவும் கெட்டவைகளாகவும், நீக்குந்தகாதவைகளாகவுமிருந்தால் வார்சுபாத்தியம் போய்விடும். தேகமெல்லாம் புண்ணும் அவைகளை யாற்றி நிவிர்த்திசெய்ய முடியாமலிருந்தாற்றான் குஷ்டரோகத்தால்வார்சுபாத்தியம் போகும். (1 பம் 554; 5பம். 145; 19 மத. 74; 38 மத 250.) க்ஷயரோகம், ராஜபிளவை, இவைகள்கூட நிவர்த்திசெய்ய முடியாத ஸ்திதியிலிருந்தால் வார்சுபாத்தியம் போய்விடுமென்று சொல்லப்படுகின்றன. (2 ஸ. 125; 40 அல 77.)

428. வியபசாரம்.—இறந்துபோன கிருகஸ்தனுக்கு ஆண்சந்ததியொருவருமில்லாமல் அவனுடைய பெண்சாதிவார்சாகயேற்படுங்காலத்தில், அதற்கு முந்திய அவளுக்கு விபசாரதோஷமுண்டாயிருந்தால், வார்சுபாத்தியமுண்டாகமாட்டாது. பெண், தாயார் பாட்டி முதலிய பெண்வார்சுகளுடைய வார்சுபாத்தியத்திற்கு பங்காளா தேசத்தில் மட்டும் வியபசாரதோஷத்தால் கெடுதலுண்டே யொழிய மற்ற விடங்களில பாதகமில்லையென்று இதற்கு முந்தியே தெரிவித்திருக்கிறோம். (32 கல் 871; 4 கல் 550.) ஆனால் ஸ்திரீதன வார்சுக்கு எவ்விடத்திலும் வியபசாரத்தினால் தோஷமில்லை. (30 கல் 521 ; 26 மத 509.)

429. புனர்விவாகம்.—புருஷனிறந்தபிறகு பெண்சாதி புனர்விவாகஞ் செய்துகொண்டால், புருஷனுடைய சொத்திலுள்ள பாத்தியமெல்லாம் போய் அநந்தர வார்சுகள் அந்த சொத்துக்கு பாத்தியஸ்தர்களாவார்கள். அந்த சொத்து அவளுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டிருந்தாலும், புனர்விவாகஞ் செய்துகொள்ளும்படி புருஷன் அனுமதிகொடுத்துப் போயிருந்தாலும், பெண்சாதியின் பாத்தியம் போகமாட்டாது. பெண், தாயார், தகப்பனுடைய தாயார் முதலிய பெண் வார்சுபாத்தியத்திற்குக் கெடுதியுண்டாகமாட்டாது

430. துறவி.—சன்னியாசம், வானப்பிரஸ்தம், நித்யபிரம்மசர்யம் முதலிய விஷயங்களில் எதிலாவது புகுந்து, மிகுந்த வைராக்கியமடைந்து, இவ்வுலக நடவடிக்கைகளை முற்றிலும் விட்டு விட்டவர்களுக்கு வார்சுபாத்தியம் நிற்கமாட்டாது. அப்படிப்பட்டவர்கள் இறந்தவர்களாக எண்ணப்பட்டு, அவர்களுக்குப்பிந்திய வார்சுகள் பாத்திய

ஸ்தர்களாவார்கள். ஒன்றையும் மேற்போட்டுக்கொள்ளாமல் விரக்தியாயிருந்தால் மட்டும் வார்சுபாத்தியம் போய்விடுமென்று எண்ணக்கூடாது. (1 ஸ. 299; 22 ம. 302.) வழக்கமிருந்தாலொழிய சூத்திர சன்னியாசிக்கு வார்சுபாத்தியம் போகாது.

(1) ஒரு துறவியினுடைய சொத்திற்கு பாத்தியப்பட்ட பந்துகள் முற்றிலும் அற்றுப்போனபிறகு சொத்தானது இறந்தவனுடைய குருவையும், பிறகு சிஷ்யனையும், சிநேகிதனையும் சேரும். (22 மத 302; 44 மத 704) ஆனால், பிள்ளை முதலிய நேரானவார்சுகளிருந்தாலும், பிராம்மனர்முதலிய இருபிறப்பாளர்கள் வானப்பிரஸ்தாசிரமத்திலிருந்தால் தன்கூட உள்ள சகாதுறவிகளுக்கும், சன்னியாசியாய் இருந்தால், தன் உண்மையான சிஷ்யனுக்கும், பிரம்மசாரியாய் இருந்தால் குருவுக்கும் அவனுடைய சொத்துசேரும். (39 பம். 168; 28 கல் 608; 40 கல் 545; 40 மத 846.)

431. ஔரஸ தத்வம்.—எந்த வார்சுகளாயினும் அவர்களுடைய தாய் தகப்பனுக்குக் கிரமமாகப் பிறந்த பிள்ளைகளல்லது பெண்களல்லவென்று தெளிவாக ருசுக் காணப்பட்டால் அவர்களுக்கு வார்சுபாத்திய முண்டாகமாட்டாது. 1872-ஹுத்து 1-வது ஆக்டாகிய சாட்சிய ஆக்ட் 112-வது பிரிவின்படி ஸ்திரீ புருஷர்கள் சேர்ந்திருக்கும் பொழுதாவது, அவர்கள் பிரிந்திருந்த விஷயத்தில் பிரிந்ததேதி முதல் 280 தினங்களுக்குள்ளேயாவது பிறந்த குழந்தை அவர்களுக்குப் பிறந்ததாகவே எண்ணப்படும். ஆனால், கர்ப்பமுண்டாகக்கூடிய எக்காலத்திலாவது அந்த ஸ்திரீ புருஷர்கள் சேர்ந்திருக்கவில்லையென்று தெளிவாக ருசுக்காணப்பட்டால், அவர்களுக்குப் பிறந்ததாக ஊகிக்க முடியாது.

உதாரணம்.—(1) ஸ்திரீ புருஷர்களிரண்டு பேரும் சேர்ந்திருக்கையில் பிள்ளை பிறந்தது. ஆனால், பிறந்துமுதல் புருஷன் நபும்ஸகன் என்றும் அது நிவர்த்தியாகத் தக்கதில்லையென்றும், அவன் ஸ்திரீகளுடன் புணர அசக்தனென்றும், அவனால் கருஉற்பத்தி யுண்டாக்குவது முடியாதென்றும் அவனைப் பலவாறு செவ்வையாய்ப் பரீக்ஷித்த டாக்டர் முதலியவர்களுடைய ருசு ஏற்பட்டது. அந்தப்பிள்ளை அவனுக்குப் பிறந்ததாக, எண்ணப்படமாட்டாது.

(2) பெண்சாதி புருஷனைவிட்டுப் பிறந்த வீட்டுக்குப் போயிருந்தாள். பிறகு ஒரு வருஷத்தில் அவளுக்குக் குழந்தை பிறந்தது. பெண்சாதி புருஷனை

விட்டுப் போனதன்பிறகு அந்த ஸ்திரீ தன் புருஷனுடன் சேரவில்லை யென்று ஏற்பட்டால் அந்தக்குழந்தை அவனுக்குப் பிறந்ததாக எண்ணப்படமாட்டாது.

(3) புருஷன் தேசாந்திரம்போய் சிலவருஷம் அங்குமிங்கும் திரிந்து விட்டுப்பிறகு பெண்சாதியிடஞ் சேர்ந்தான். அப்படிச்சேர்ந்த நாலைந்து மாதங்களுக்குள் அவர்களுக்குச் சந்ததியுண்டாயிற்று. அது அவனுக்குப்பிறந்த சந்ததியாகமாட்டாது.

(4) புருஷனிறந்து போகுங்காலத்தில் பெண்சாதி கர்ப்பமாயிருந்து பிறகு சந்ததியுண்டானல், அந்தச் சந்ததியவர்களுக்குப் பிறந்தாக எண்ணப் படும். மேலும் வார்சுபாத்தியம் ஏற்படும் காலத்திற்கு முந்தியே பிறந்திருந்த பெண்கள் அல்லது பிள்ளைகளுக்கும் எவ்விதமான பாத்தியங்களுண்டோ தகப்பனிறந்த காலத்தில் கர்ப்பத்திலிருந்து றகு பிறந்தவர்களுக்கும் அதே பாத்தியங்களுண்டு. (5 பம். ஸ தீ- 315; 9 க. ஐ. 397.)

(5) புருஷனிறந்த காலத்தில் பெண்சாதி கர்ப்பமாயிருந்தாளென்று சொல்லப்பட்டது. ஆனல், புருஷனிறந்த ஒரு வருஷத்திற்குப் பிறகு அவளுக்குச் சந்ததியுண்டாயிற்று. இந்தச் சந்ததி ஔரஸப் பிள்ளையாக நினைக்கப்படமாட்டான். சில ஸ்திரீகள் 4, 5 வருஷங்கள் வரையில் கர்ப்பமென்று சொல்வதுண்டு. அதைக்கோர்ட்டார் நம்பமாட்டார்கள்.

432. மேற்பிரிவுகளில் சோன்ன தோஷங்களின்காலம்.—(1) மேலே 422 முதல் 431-வது வரையில் சொன்ன தோஷங்கள் வார்சுபாத்திய முண்டாவதற்குமுந்தி ஏற்பட்டால் கெடுக்குமே யொழிய வார்சுபாத்திய முண்டானபிறகு உண்டானல் பாதகமில்லை. (1854-ஹு பம். ஸ. தீ. 244; 5 அ 509; 5 க. 776; 22 க. 864; 7 இ. அ 115; 14 ம. 294.) மேலுமந்ததோஷங்களை யுடையவர்களுக்கு குற்றங்குறையில்லாத ஆண்சந்ததியிருந்தால் அந்த சந்ததிக்குச் சொத்துச்சேரும். (2 பங்கால் லா ரிபோர்ட் 103.) மேலேசொன்ன தோஷங்கள் ஸ்திரீ புருஷர்களுடைய வார்சுபாத்தியங்களைக் கெடுத்தாலும், வார்சு பாத்தியமாயில்லாமல், உயில்மூலமாயாவது தானமூலமாயாவது சொத்துக்கிடைத்தால் அந்த சொத்தை அவர்களுடையத் தடையில்லை. (18 க. 341; 2 அ. 809).

(2) எந்த தோஷத்தாலாவது புருஷர்களுக்கு வார்சுபாத்தியம் கெட்டுப்போய்விட்டால் அவர்களுக்கும் அவர்கள் பெண்சாதி, சுவீகாரப்பிள்ளை முதலியவர்களுக்கும் ஜீவனும்ச ப்ாத்தியுமட்டு முண்டு. அப்படி வார்சுபாத்தியமிழந்தவர்களுக்கு யேதேனும் சுயார்ஜிதசொத்திருந்தால் அது அவர்களுடைய பெண்சாதிகளுக்கும், சுவீகார

ப்பிள்ளைக்குஞ் சேரும். (1857ஞு ம. தீ. 210.) ஆனால், அப்படி பாத்திய மிழந்தவர்களுக்கு தோஷமற்ற அவுரஸப் புத்திரனாவது பேரனாவதிருந்தால் அவர்களுக்கு வார்சுபாத்திய முண்டாகும்.

433. அநந்தர வார்சுகள்.—மேலே சொல்லியபடி பாத்தியமிழந்தவர்கள் வார்சுகளாக ஏற்படும்பொழுது, அவர்களில்லாதது போலவே, அதாவது இறந்ததுபோலவே எண்ணப்பட்டு அவர்களுக்குப்பிந்திய அநந்தாவார்சுகளுக்குச் சொத்துச்சேரும். (13 மூ. இ. அ. 519.)

உதாரணம்—(1) இறந்த கிரகஸ்தனுக்கு பைத்தியம்பிடித்த பிள்ளையும், நல்ல ஸ்திதியிலிருக்கிற பெண்ணுமிருந்தால், பெண் வார்சாவாள். (2 W மேக் 42.) பைத்தியமுள்ள பிள்ளை வார்சாகமாட்டான்.

(2) இறந்தவனுக்கு பைத்தியமுள்ளபெண்ணும், அவள் வயிற்றிற்பிறந்த பிள்ளையுமிருந்தால், அவள்பிள்ளை (தௌகித்திரன்) வார்சாவான்.

(3) இறந்தவனுக்கு குருடனான ஒரு பிள்ளையும், நல்ல ஸ்திதியிலுள்ள ஒரு பெண்ணுமிருந்தார்கள் ஆனால், கிருகஸ்தனிறந்துபோகும்போது குருடன் பெண்சாதி கர்ப்பமாயிருந்து நல்ல ஆண்குழந்தையைப்பெற்றாள். அந்த ஆண்பிள்ளை (பிள்ளைவயிற்றுபேரன்) வார்சாவான். கிருகஸ்தனிறந்த பிறகு குருடன் பெண்ஜாதி கர்ப்பமாகி பிள்ளைபெற்றால் அந்தப்பேரன் பெண்ணுக்குப் பிறகுதான் வார்சாவான்.

(4) இறந்தவனுக்கு பிரிந்த நல்ல ஸ்திதியிலிருக்கிற சகோதரனும், குஷ்டரோகியான பிரிந்த வேறொரு சகோதரனும், அந்த ரோகிக்குப்பிறந்த நல்ல ஸ்திதியிலிருக்கிற பிள்ளையுமிருந்தால் நல்ல ஸ்திதியிலிருக்கிற பிரிதம் சகோதரன் சொத்துமுழுவதையு மடைவான். இறந்தவனுக்கு குருடனான தங்கை பிள்ளையும், நல்ல ஸ்திதியிலுள்ள தங்கை பேரனுமிருந்தால், தங்கை பேரனுக்கு ஒருக்காலும் வார்சுபாத்தியமில்லை. (2 க. ஐ. 115; 9 க ஐ. 19, 203.)

(5) கிருகஸ்தனிறந்துபோகும்போது அவன்சொத்து அவன் மகனுக்கு எந்த தோஷத்தாலாவது சேராமல், வேறு ஆண்சந்ததிக்குச் சேர்ந்தபிறகு அந்தமகனின் பெண்சாதி கர்ப்பந்தரித்து நல்ல ஸ்திதியிலுள்ள பிள்ளையைப் பெற்றாலும், அந்தபிள்ளைக்கு வார்சுபாத்தியமுண்டாக மாட்டாதென்று பம்பாய் கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால், மதராஸ் ஐகோர்ட்டார், வார்சுபாத்தியமிழந்த பிள்ளையின் பெண்சாதி கிருகஸ்தனிறந்த பிறகு கர்ப்பந்தரித்து நல்ல பிள்ளையைப்பெற்றால் அந்தப்பிள்ளைக்கு கிருகஸ்தனுடைய சொத்தில் சரியான பாகமடையலாமென்றே தீர்மானித்திருக்கிறார்கள். (9 ம. 64; 6 பம். 616; 5 அ. 509; 1 க. ஐ. 117; 2 க. ஐ. 160.)

434. வியாதிநிவர்த்திக்குப் பிறகு சோத்துபாத்தியம்.—வார்சுபாத்தியத்தைத் கெடுத்த தோஷங்கள், பிறகு நிவர்த்தியானால், பாகத்திற்குப் பிறகு பிறந்த பிள்ளைகளின் விஷயத்தைப்போல, வார்சுபாத்தியம் திரும்பவுண்டாகுமென்று தர்மசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால், தோஷம் நிவர்த்தியாவதற்கு முந்தியேசொத்து வேறொருவருக்குச் சேர்ந்துபோகிற பட்சத்தில், அது திரும்பவரமாட்டாது.

உதாரணம்.—(1) ஒரு கிருகஸ்தனிறந்துபோகுங்காலத்தில், அவனுடைய பெண்சாதியும், பிறவிக்குருடனான ஒரு பிள்ளையுமிருந்தால் பெண்சாதி வார்சாவாள். பிறகு அந்தப் பிள்ளைக்குக் கண்ரோகம் நிவர்த்தியானாலும் விதவையின் சுவாதீனத்திலிருந்து சொத்து அவனுக்குச் சேரமாட்டாது. ஆனால், அவளுக்குப்பிறகு பிள்ளையே நெருங்கின வார்சானதால் அவனுக்குச்சொத்து சேரும்.

(2) ஒரு கிருகஸ்தனிறந்துபோருங்காலத்தில் அவனுக்கொரு பிறவிக்குருடனான பிள்ளையும், பிரிந்த சகோதரனுமிருந்தால், சொத்து சகோதரக்குச் சேரும். பிறகு அந்தப் பிறவிக்குருடனுக்குக் கண்ரோகந் தீர்ந்தாலும் அவனுக்குச் சொத்துகிடைக்கமாட்டாது. ஏனென்றால், அந்தப்பிரிந்த சகோதரன் முழு வார்சுபாத்தியமுடையவனானதால் அவனுக்குப்பிறகு அவனுடைய பிள்ளைகளே வார்சாவார்கள். அந்தப் பிரிந்த சகோதரனுக்குப்பிள்ளை முதலிய வார்சுகளொருவருமில்லாவிட்டால், கண்ரோகந்தீர்ந்த அண்ணன் மகனே நெருங்கிய வார்சானதால் அவனுக்குச் சொத்துச்சேரும்.

(e) பெண்வார்சுகள் விஷயமாய் விதிகள்.

435. பெண்களுக்கு சோத்தில் முழுசுதந்திரமில்லை.—ஒருவனிறந்தபிறகு அவனுடைய சொத்து அவனுடைய வம்சஸ்தர்களுடைய அநுபவத்திலேயே யிருக்கவேண்டுமேயொழிய, மற்றவம்சஸ்தர்களுக்குச் சேர்ந்துபோகக்கூடாதென்கிற கருத்து இந்துக்களில் ஸ்திரப்பட்டிருக்கிறது. இக்கருத்தால் ஆண்வார்சுகளுக்கும் பெண்வார்சுகளுக்கும் சிலவித்தியாச மேற்பட்டிருக்கிறது. புருஷவார்சுக்குச் சொத்துகிடைத்தால், அதில் அவனுக்குச்சகல சுவதந்திரமுண்டாகிறது. அந்த சொத்தை அவனிஷ்டம்வந்தபடி செலவுசெய்யவும், மற்றப்படி விநியோகஞ்செய்யவும் பாத்தியமுண்டு. மேலும் அவனிறந்தபிறகு அவனுடைய பிள்ளைமுதலிய வார்சுகளுக்குச் சொத்துச்சேருமேயொழிய, ஆதிகிருகஸ்தனுடைய . வார்சுக்குச் சேரமாட்டாது. பெண்சாதி முதலியவர்களுக்கு வார்சுபாத்தியத்தால் புரு

ஷனுடைய சொத்துக்கிடைத்தால், அதில் அவர்களுக்கு முழுபாத்தியமுண்டாகாமல், ஆயிசுவரையிலனுபவிக்கவும், அவசியமான காரியங்களுக்குச் செலவுசெய்யவுமட்டும் பாத்தியமுண்டாகிறது. அதுவுமல்லாமல் அவர்களிறந்த பிறகு இறந்துபோன மூலபுருஷனுக்கு எவர் நெருங்கியவார்சாயிருப்பார்களோ அவருக்கே அந்தக் சொத்துசேருமேயொழிய அந்த ஸ்திரீகளுடைய வார்சுகளுக்குச் சேரமாட்டாது. (9 கல். 725; 8 மூ. இ. அ. 529; 11 மூ. இ. அ. 487; 4 க. 744; 6 இ. அ. 15; 3 ம. 290; 8 ம. ஐ. 83; 5 பம். 670; 6 ம. 310.) பம்பாய் பிரெசிடென்சியைத்தவிர மற்றயிடங்களில் எல்லாப்பெண்வார்சுகளும், அதாவது பெண்சாதி பெண், தாயார், தகப்பனுடைய தாயார், பாட்டனுடைய தாயார், தமக்கை முதலிய பெண்வார்சுகளுக்கும் மேலே சொல்லப்பட்ட குறைவான பாத்தியந்தான் ஏற்பட்டிருக்கிறது. அந்த சொத்துக்கள் ஸ்தாவரமானதாயிருந்தாலும், ஜங்கமமானதாயிருந்தாலும், ஸ்வயார்ஜிதமாயிருந்தாலும், பிதுரார்ஜிதமாயிருந்தாலும் அதில் பெண்களுக்குக் குறைவான பாத்தியந்தவிர சர்வசுதந்தரமான பாத்தியமில்லை. (2 ம. ஐ. கோ. ரி. 402; 6 அல. 431; 8 ம. 290, 305; 13. மூ இ. அ. 139, 487.) சமண மதஸ்தர்களில் மட்டும் கிருகஸ்தனுடைய ஸ்வயார்ஜித சொத்தின்பேரில் பெண்வார்சுகளுக்கு சகலபாத்தியமுமுண்டென்றும், பிதுரார்ஜித சொத்தில்கூட அவர்களுக்கு அதிக பாத்தியமுண்டென்றும் காணப்படுகிறது (6 அ. ஐ. 382; 1 அ. 688.) மிதிலதேசத்திலும் பம்பாய் தேசத்திலும் மேலே சொன்னபாத்தியம் பெண்களுக்கு ஸ்தாவரஜங்கம சொத்துக்களில் ஏற்படுகின்றன. பாகம்பிரித்துக் கொள்ளுங்காலத்தில் பொதுசொத்தில் ஸ்திரீகளுக்கு பாகம் கொடுக்கப்பட்டால், அதில்கூட அவர்களுக்குக்குறைவான பாத்தியந்தானுண்டாகும் ஆனால், பாகஷாத்தில் முழுபாத்தியம் கொடுத்திருந்தால் செல்லும். (16. க. 758; 11 க. ஐ. 459; 1 அ. ஐ. 10.)

436. பம்பாய் தேசத்தில் சிலவிதிவிலக்குகள்.—பம்பாய் இராச்சியத்தில் பெண், தங்கை தமக்கைகள் முதலிய சில பெண்வார்சுகளுக்கு மட்டில் சம்பூர்ணமான பாத்தியம் உறுதிப்பட்டிருக்கிறது. அங்கே ஆதாரமாகச் செல்லுகிற மயூக கிரந்தத்தின்படியும், அதற்குச் சம்பந்தப்பட்ட மிதாட்சர வசனத்திற்கும் அங்கே செய்

யப்பட்ட அர்த்தத்தைக் கொண்டும், பெண் வார்சுகளிரண்டு வகுப்புகளாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். (1) வேறு கோத்திரத்தில் பிறந்து விவாகத்தால் கிருகஸ்தனுடைய கோத்திரத்தில் சேர்ந்தவர்கள் அவர்களாவன:—பெண்சாதி, தாயார், தகப்பனுடைய தாயார், பாட்டனுடைய தாயார், பிள்ளையின் பெண்சாதி இவர்கள் முதலியவர்கள். (2) கிருகஸ்தனுடைய கோத்திரத்தில் பிறந்து விவாகத்தால் வேறு கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களாவன:—பெண், சகோதரி, பேத்தி, தமயன் பெண், அத்தைமுதலியவர்கள். முதல் வகுப்பு ஸ்திரீகள் புருஷர்களுடைய சொத்துக்கு வார்சாகும்பொழுது அதில் அவர்களுக்கு முழுபாத்தியமும் முண்டாகாமல், அவர்களிறந்த பிறகு, அது மூலபுருஷனுடைய வார்சுகளுக்கே சேரும். (16 பம். 229.) இரண்டாம வகுப்பு ஸ்திரீகள் புருஷர்களுடைய சொத்துக்கு வார்சாகும்பொழுது அதில் அவர்களுக்குப் புருஷர்களைப்போலவே முழுபாத்தியமும் உண்டாகமாட்டாது. மேலுமவர்களிறந்த பிறகு அந்த சொத்து முதல் கிருகஸ்தனுடைய வார்சுகளுக்குச் சேராமல் அந்த ஸ்திரீகளே புருஷர்களாயிருந்தால் அவர்களுக்கு யார் வார்சாவர்களோ அப்படிப்பட்டவர்களுக்கே சேரும். அவர்களாவன:—பிள்ளை, பெண், பெண்ணின் பிள்ளை, தாய் தகப்பன்கள் வகையரா வார்சுகளுக்குச் சேரும். (9 பம். 501; 12 பம். 505.).

437. ஸ்திரீகளின் அனுபவ பாத்தியம்—பம்பாய் தேசத்தில் பெண்சாதி முதலிய ஸ்திரீவார்சுகளுக்கும் மற்ற தேசங்களிலுள்ள எல்லா ஸ்திரீ வார்சுகளுக்கும் புருஷர்களிடமிருந்து கிடைத்த சொத்தில் அவர்களுக்கு முழுபாத்தியமில்லாவிட்டாலும் அவர்கள் அதைத் தங்களாயிசுவரையிலிஷ்டப்படி அனுபவிக்கலாம். அந்த சொத்தின் வரும்படி யெவ்வளவாயிருந்தாலும் அதைக் கொஞ்சங் கூட மீர்க்காமல் செலவுசெய்து கொள்ளலாம். அதைச்சேர்த்து வைக்கவாவது அதைப்பற்றி வேறுயாருக்காவது கணக்கு சொல்லவாவது கடமை கிடையாது. சொத்தின் வரும்படியைக்கொண்டு வாங்குகிற சொத்துக்களை அவளிஷ்டம்போல் விநியோகஞ்செய்யலாம். (6 மூ. இ. அ. 433; 8 ம. 290; 25 ம. 351.) அப்படி வாங்குகிற சொத்து மூலபுருஷன் சொத்தோடு கலக்காமல் தனதாக பா

வித்து நடவடிக்கை நடந்திருந்தால் விநியோகம் செல்லும். (5 கல். 512; 14 கல். 861; 4 ம. 152; 14 இ. அ. 63; 10 பம். 478.) அசல் ஜீவேஜியை வட்டி முதலானதற்கு விட்டு விருத்திசெய்ய வேண்டிய நிர்ப்பந்தமுமில்லை. அதை விரயஞ்செய்யாமல் தங்கள் சுவாதீனத்திற்கு எந்த நிலைமையில் வந்ததோ அந்த நிலைமையில் தங்களுடைய அநந்தர வார்சுகளுக்குச் சேரும்படி காப்பாற்றினால் போதுமானது. மேலும் வரும்படியை எவ்விதமாகவாகிலும் செலவு செய்யலாமேயொழிய சிற்சில அவசியமான சந்தர்ப்பங்களைத் தவிர மற்ற எந்த சமயத்திலும் அசல் சொத்தை செலவு செய்யக்கூடாது (4 ம. 152; 8 ம. 290; 9 க. 244; 8 பம். 190; 21 கல். 190)

மரணபண்டுத் தொகை சுவயார்ஜித சொத்தானதால் அவிபக்த சகோதரனுக்கு பாத்தியப்படாமல் இறந்தவன் பெண்சாதிக்குச்சேரும். (29 ம. 121)

438. பெண்வார்சுகள் சோத்துவைத்த ஆதாயம்.—சொத்தின் வரும்படியைத் தனக்கிஷ்டமானபடி செலவு செய்யவும், தன்னிஷ்டப்பட்டவர்களுக்கு இனாமாகக் கொடுக்கவும் பெண்வார்சுகள் பாத்தியஸ்தர்களாக விருந்தபோதிலும், அவர்களிருந்துபோன காலத்தில் செலவிடாமல் மிகுந்திருந்த ஆதாயம் அசல் சொத்தோடு சேரும். ஆகையால், அதை அந்தப் பெண்வார்சுகள் உயில் மூலமாய்க்கொடுக்க அதிகாரமில்லை. மேலுமசல் சொத்தின் ஆதாயத்தைச் சேர்த்துக்கொஞ்சந்துகை யேற்பாடு செய்யப்பட்டால், அல்லது அதைக் கொண்டு கொஞ்சம் சொத்து சம்பாதிக்கப்பட்டால் அது அசல் சொத்துடன் சேர்ந்ததென்று சாதாரணமாய் எண்ணப்பட்டு அதன் விஷயத்தில் பெண்வார்சுகளுக்கு முழுபாத்தியம் தப்பிப்போய் விடும். (10 க. 334; 5 அ. ஐ. 197, 206) ஆனால் அப்படி ஆதாயத்தைச்சேர்த்து சம்பாதிக்கப்பட்ட சொத்தை அந்தப் பெண்வார்சுகள் மூதன் முதற்கொண்டு தனக்காகவே உபயோகப்படுத்திக் கொள்ளுகிற எண்ணத்துடன் அசலுடன் சேர்க்காமல் தனியாக வைத்திருந்தால், அதையவள் உயிருடனிருக்கையில் மறுபடி விரய செய்யலாம். விநியோகத்தை ஆக்ஷேபிக்கிறவன் மூலசொத்தின் பாகமென்று ருசுசெய்ய வேண்டும். வார்சுபாத்தியத்தா லடைந்த

மூலசொத்தின் வரும்படியைக்கொண்டு தனக்கென்று சேர்த்தசொத்து ஸ்திரீதனமாகாமல் மூலபுருஷன் வார்சுக்கே சேரும். (9 கல். 758; 10 கல். 324 ; 8 ம. 90 ; 16 க. 574 , 10 பம். 478 ; 25 ம. 351.)

439. **வைதீக காரியங்கள் நடத்த சொத்துவினியோகம்.**—வரும்படி போதாத பட்சத்தில் சில அவசியமான காரியங்களுக்காக அசல் சொத்தைக் கூடப் பெண்வார்சுகள் செலவுசெய்யலாம். அந்தக்காரியங்களாவன:—(1) அந்த சொத்து புருஷனிடத்திலிருந்து கிடைத்திருக்கும்பொழுது அவனுடைய உத்தரகிரியைகள், சிரார்த்தம் முதலிய கர்மங்களிவைகளை அசல்சொத்தை விரயஞ்செய்தாவது நடத்தி, அவனுடைய ஆத்மாவுக்கு நற்கதி யுண்டாகும்படி செய்யவேண்டியது. மேலுமவனால் சிரார்த்தம் முதலிய கர்மங்கள் நடத்தப்படத்தக்கவர்களுடைய கர்மங்களைக்கூட நடத்தவேண்டியது. (11 க. ஐ. 418; 8 க. 36.) புருஷனுக்கு நற்கதி கிடைக்கவேண்டுமென்கிற எண்ணத்துடன் தீர்த்தயாத்திரைகள், தானதர்மங்களையும், பிராமணர்களுக்கு தானங்களையும், கோவில், குளம் முதலிய பிரதிஷ்டைகளையும் செய்யலாம். ஆனால், இவைகளுக்காக ஏராளமான ஐவேஜி உள்ளவர்கள் மட்டும் கொஞ்சம் செலவு செய்யலாமேயொழிய அதிகமாய் செலவிடக்கூடாது. சொத்து சொல்பமாயிருந்தால் அவைகளுக்காகக்கொஞ்சங்கூட செலவிடக்கூடாது. (11 ம. 288; 11 க. ஐ. 113 ; 8 ம. 552.) விதவை தன்நற்கதிக்காகச்செய்யும் தீர்த்தயாத்திரை தானதர்மம் முதலியவைகளுக்காக அசல்சொத்தை செலவிடக்கூடாது. (4 அ. 482; 22 க. 506.) சொத்தின்வரும்படியில் செலவுசெய்ய அட்டியில்லை. தர்மவிஷயமாயும், மதவிஷயமாயும் உள்ள செலவுகளுக்காக பெண்சாதியைத்தவிர மற்ற ஸ்திரீவார்சுகள் கொஞ்சங்கூட மூலசொத்தை செலவிடக்கூடாது.

(2) கிருகஸ்தன் வாங்கியிருந்த கடன்களைத் தீர்ப்பதவசியமானதாயிருந்தால், அசல் ஆஸ்தியை விற்கலாம். (13 ம. 189 ; 18 பம். 534; 21 க. 190.) அக்கிரமமான கடன்களைத் தீர்ப்பது அவசியமானதல்ல. (2 பம். 499) காலாவதியால் பாதிக்கப்பட்ட கடன்களைத் தீர்ப்பதற்காக அசல் சொத்தை விரயஞ்செய்யக்கூடாதென்று சில கேசுகளில் தீர்மானிக்கப்பட்டிருந்தன. (14 ஸ. 147; 6 பம். ஐ. 270) ஆனால், பிந்திய தீர்மானங்களில் காலாவதியால் பாதிக்கப்பட்டி

ருக்கிற கடன்களைத் தீர்ப்பதற்காகக்கூட அசல் சொத்தை விரயஞ் செய்யலாமென்றும் ஸ்திரப்பட்டிருக்கிறது. (13 ம 189; 11 பம். 320, 325.) காலாவதியாகாத மற்றக்கடன்களைக்கொடாமல் அப்படிக் காலாவதியான கடன்களைத்தீர்ப்பது மோசக்கருத்துடன் செய்ததாக ஏற்படக்கூடாது. (11 பம். 666.)

(3) பெண்வார்சுகளுக்குக் கிடைத்த சொத்தைக்கொண்டு கொடுக்கவேண்டிய ஜீவனும்சங்களுக்காகவும் (12 க. 52.) செய்ய வேண்டிய விவாக முதலியவைகளுக்காகவும் அவசியமானால் சொத்தை விரயஞ்செய்யலாம். (16 ஸ. 52; 5 பம். 450; 22 ம. 3.) ஆனால், எப்பொழுது அவசியமுண்டாகப் போகிறதென்று முந்தியே சொத்தை விரயஞ்செய்து பணத்தை வாங்கிவைத்துக் கொள்ளக் கூடாது.

(4) மேலே சொன்னவைகளைத் தவிர வேறேதேனும் நீக்கக் கூடாத நிர்ப்பந்தங்களேற்பட்டால் அவைகளுக்காகவும் பெண்வார்சுகள் அசல் சொத்தை விரயஞ்செய்யலாம். சர்க்கார் கிஸ்திபாக்கி, ஏதேனும் டிக்ரிப்படி செலுத்தவேண்டிய துகை, சொத்து விஷயமாகக் கொடுக்கப்பட்ட பிராதில் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டு அதைக் காப்பாற்றுவதற்காகச் செய்யப்பட்ட நியாயமான வியாஜ்ஜிய செலவுகள், அழிந்துபோகும் நிலம் கிணறு, வீடு முதலிய சொத்தைக் காப்பாற்றுவதற்காகச் செய்யப்பட்ட மராமத்துச் செலவுகள் இவைகள் அவசியமான செலவுகளாக எண்ணப்படும். நீக்கக்கூடாத நிர்ப்பந்த முண்டா, இல்லையாவென்பது அந்தந்த சந்தர்ப்பங்களைப் பார்த்து அறிந்துகொள்ளவேண்டியது. சர்க்கார் கிஸ்திபாக்கி முதலிய நிர்ப்பந்தங்கள் பெண்வார்சுகளுடைய அனியாயச்செலவாலுண்டாயிருந்தாலும் பாதகமில்லை. சொத்தை யடைந்தவனுடைய கெட்ட நடத்தையாலாவது தூண்டுதலின் பேரிலாவது அந்த நிர்ப்பந்தமுண்டாயிருக்கக்கூடாது. (11 பம். 609; 12 க. 52; 4. அ. 532; 6 ச. 843; 10 க. 823; 6 மூ. இ. அ. 423.)

440. பெண் வார்சுகளால் விற்பனை.—மேல் பிரிவில் சொல்லப்பட்ட அவசியமான காரியங்கள் நேரிட்டபொழுது அசல் சொத்தைச் செலவுசெய்யாமல் கடன்வாங்கி அந்தக் கடனை சொத்தின் வரும்படியைக்கொண்டு நாளளவில் தீர்க்கவாவது, சொத்தின் ஒரு

பாகத்தைக்கூடக் கிரயஞ் செய்யாமல் ஒத்திவைத்துத் துகைவாங்கி அதனுல் தனக்கு வரும்படியைக் குறைத்துக்கொள்ளவாவது பெண் வார்சுகள் கட்டுப்பட்டவர்களல்ல. சொத்தில் சில பாகத்தை தடையில்லாமல் விற்று அந்த அவசியமான காரியங்களை நடத்தலாம். (31 ம. 153.) பெண்வார்சுகளுக்கு நியாயமாகத் தோன்றுகிறபடி சொத்தை ஒத்திவைத்தாவது, விற்ருவது, (அந்தப் பெண்வார்சும் அவளிடத்தில் சொத்தைப் பெற்றுக்கொள்ளுகிறவனும் கெட்ட எண்ணமில்லாமல்) செலவுக்கு ஏற்பாடு செய்திருந்தால்; விற்பதைக்காட்டிலும் ஒத்திவைப்பது இலாபகரமென்கிற காரணத்தைக்கொண்டு அநந்தர வார்சுகள் ஆட்சேபிக்கவாவது பணத்தைக்கொடுத்துவிட்டு கிரயத்தை ரத்து செய்துகொள்ளவாவது பாத்தியமில்லை. (9 ஸ. 284; 3 க. ஐ. 375.) ஆனுல், மிகவும் குறைவான விலைக்கு மிகுந்த சொத்து அநியாயமாக விற்கப்பட்டிருந்தால், பெண் வார்சுகளுள்ளவரையில் செல்லும். (7 அ. 163; 8 அ. 365, 646; 10 கல். 324.) அவளிறந்தபிறகு அநந்தரவார்சுதாரன் ஆட்சேபிக்கக்கூடும். அப்பொழுது வட்டியுடன் கிரயத்துகையை அந்த அநந்தர வார்சுதாரனைக்கொண்டு கொடுக்கும்படி செய்வித்து கோர்ட்டார் கிரயத்தை ரத்துசெய்யக்கூடும். (9 ஸ. 108; 11 க. ஐ. 416.) எவ்வளவு ஸ்பஷ்டமாக அநியாயம் நடந்ததாக காணப்பட்டாலும் விலைக்கு வாங்கினவன் அந்த அநியாயத்தை யறிந்திருந்தானென்று தெளிவாக நினைக்க வழியில்லாத நிலைமையில் மேற்சொன்ன விதமாகக் கோர்ட்டார் நடத்தமாட்டார்கள். பெண்வார்சுகளுக்குக் கிடைத்த சொத்து ஒத்திக்குள்பட்டிருந்து, அந்த ஒத்தியை மீட்டுக்கொள்ளப் போதுமான துகை அவள் வசத்திலிருந்தும், அசல் சொத்தில் சில பாகத்தை அவள் விற்று ஒத்தியை மீட்டால், அவளிறந்த பிறகு அநந்தர வார்சுதாரன் பிராது மூலமாய் அந்தக்கிரயத்தை ரத்துசெய்துகொள்ளலாம். ஆனுல், கிரயத்துகையை வட்டியுடன் செலுத்திவைக்க அவன் கட்டுப்பட்டவன். (5 பம். 450; 14 க. ஐ. 226.)

ஸ்திரீ வார்சுகளால் அநியாயமாய் விற்கப்பட்ட சொத்தை அவளிறந்த பிறகு அநந்தரவார்சுகளும், அநந்தரவார்சுகளால் அந்தசொத்தில் சிலவற்றை கிறயம் பெற்றவர்களும்சேர்ந்து தாவாசெய்து அந்

படி பெண்வார்சால் விற்கப்பட்ட சொத்தை திருப்பியடையலாம் (33 கல். 367)

பெண்வார்சுகள் செய்த துர்வினியோகத்தை ரத்து செய்ய தாவா அவளிறந்த 12-வருஷங்களுக்குள் கொண்டுவரலாம். வினியோகம் செய்த நாள் முதலல்ல. (33. கல். 257.)

441. கடன் கொடுக்கிறவர்களுக்குச் சம்பந்தமானவைகள்.—(1) பொதுக்குடும்பத்தின் மானேஜருக்குப் பொதுசொத்தில் எவ்விதமான பாத்தியமுண்டோ, அவ்விதமான பாத்தியந்தான் பெண்வார்சுகளுக்குண்டென்று சொல்லலாம். மேலும், மானேஜருக்குக் கடன்கொடுத்து சொத்தைக் கட்டிக்கொள்ளுகிறவனுக்கு என்ன விதி நிஷேதங்களுண்டோ, அவைகள் பெண்வார்சுகளுக்கு முண்டு. சொத்தை வாங்கிக்கொள்ளுகிறவன் விரயஞ்செய்யத் தகுந்த நிர்ப்பந்த மிருந்ததென்று ருசுசெய்யக் கடமைப்பட்டவனாயிருக்கிறான். மேலும் அவன் நன்றாய் விசாரித்து மோசமில்லாமல் நல்ல எண்ணத்தோடு வாங்கவேண்டும். (4 பம். 482; 11 பம். 320; 14 அல. 420; 21 கல். 190.) அவசியமிருந்ததென்று ருசுச்செய்துவிட்டால் விரயஞ்செய்து பெற்றுக்கொண்ட தொகையைக் பெண்வார்சு நியாயமாகச் செலவிட்டாளென்று ருசுச்செய்வது கட்டாயமல்ல. மேலும் தகுந்த ஜாக்கிரதையுடன் விசாரித்து அவசியமிருந்ததாக உறுதியாய் நம்பியெவ்விதமான கெட்ட எண்ணமில்லாமல் பணங்கொடுத்து சொத்தை சுவாதீனம் செய்துகொண்டவனுக்கு, அந்த அவசிய விஷயமாகச் சொல்லப்பட்ட சங்கதிகள் கடைசியில் பொய்யென்றேற்பட்டாலும் கெடுதியில்லை. ஏதோ ஒரு அவசிய மிருந்ததாக தஸ்தாவேஜில் எழுதப்பட்டிருப்பதை கொண்டுமட்டும், அந்த அவசியம் வாஸ்தவத்திலிருந்த தென்றாவது, அதைப்பற்றித் தகுந்தபடி விசாரிக்கப்பட்ட தென்றாவது, எண்ணப்படமாட்டாது.

(2) ஸ்திரீ வார்சுகளால் செய்த விநியோகத்தைப் பெற்றவன் நியாயமான செலவுக்காக விநியோகிக்கப் பட்டதென்றும் தகுந்தபடி விசாரித்துத் தான் விநியோகத்தைப் பெற்றதாகவும் ருசுச்செய்யவேண்டும். (6 கல். 843 ; 4 பம். 462 ; 24 இ. அ. 183; 21 கல். 190 ; டிரான்ஸ்பர் ஆப் பிராபர்டி ஆக்ட் 38-வது பிரிவு.) ஆகையால் ஸ்திரீகளுக்கு கடன்கொடுக்கிறவர்களும், சொத்

தை வாங்குகிறவர்களும் செலவின் அவசியத்தை நன்றாய் விசாரித்து ஜாக்கிரதையாயும் யோக்கியமாயும் நடவடிக்கை நடத்தவேண்டும். (6 கல். 843.)

(3) அவசியமான காரியங்களுக்காக ஒருபெண் வார்சு கடன் வாங்கி அந்தக் கடனுக்காகச் சொத்தைப் பாத்தியப்படுத்தாமல் அவள் பத்திரம்மட்டும் எழுதிக்கொடுத்திருந்தால் அதனால் அனந்தர வார்சுகள் கட்டுப்படமாட்டார்கள். (4 ம. 375) அவசியமான காரியங்களுக்காகக் கடன்வாங்கப்பட்டதாக ருசு ஏற்பட்டால், சொத்தைப் பாத்தியப்படுத்தாமலிருந்தாலும் அந்தக் கடன்களைத் தீர்க்க அநந்தரவார்சு கட்டுப்பட்டவன். (6 க. 36) ஸ்திரீகளின் நியாயமான பந்தகபராதீனங்களுக்கு அநந்தரவார்சு சம்மதி கொடுத்தாலும் கொடாமலிருந்தாலும் அவன் அவைகளுக்கு கட்டுப்பட்டவனுயிருக்கிருன். (18 பம். 534.)

(4) கடன் கொடுத்தவர்கள் பெண்வார்சுகளின்பேரில் செய்யும் பிராதில் பெறப்படும் டிக்கிரியால் அநந்தர வார்சுகள்கூடக் கட்டுப்படவேண்டுமென்று இஷ்டப்பட்டால், அந்தத்தொகை அவசியமான் காரியங்களுக்கு வாங்கப்பட்டதென்று பிராதில் சொல்வதுடன் அநந்தரவார்சுகளையும் பிரதிவாதிகளாகச் சேர்க்கவேண்டுமென்பது கோர்ட்டாருடைய அபிப்பிராயமாக காணப்படுகிறது. (11 மூ இ. அ. 267) மேலே சொன்னபடி பிராதில் சொல்லாமலும், அனந்தர வார்சுகளைச் சேர்க்காமலும் ஒரு பெண்வார்சின் பேரில் டிக்கிரி பெறப்பட்டால் அவளுடைய ஆயுசுவரையில் அனுபவிக்கும் பாத்தியம் அந்த டிக்கிரிக்குக் கட்டுப்படும். (11 மூ. இ. அ. 241; 4 ம. 401.)

பெண்வார்சுகள் நியாயமாய் வழக்கிட்டுதோற்ற வியாஜ்ஜியத்தை அவள் ஜீவதசைக்கு பிறகு அனந்தர வார்சுகள் அதே வியாஜ்ஜியத்தை தொடரக்கூடாது. (28 அல. 231.)

442. பெண்கள்செய்த அனவசியமான வினியோகங்கள்.—தகுந்த அவசியமில்லாமல் பெண்வார்சுகள் செய்யும் வினியோகங்கள் அநந்தர வார்சுகளைக் கட்டுப்படுத்தாமல், அந்தவினியோகங்களை ரத்து செய்யலாம். ஆனல், அவைகள் அவளாயிசுவரையில் செல்லுகிறதற்கு

ஒரு தடையுமில்லை. (1 ம. ஜு 206; 2 ம. ஐ. 393; 8 க. 204; 10 க. 324; 22 ம. 522; 1 அ. 503.) அநந்தர வார்சுகள் ஒருவருமில்லா விட்டாலும் சொத்தை அவசியமின்றியில் வினியோகஞ் செய்ய பாத்தியம் பெண்வார்சுகளுக் குண்டாகமாட்டாது. அன்னிலமையில் சர்க்கார் பாத்தியஸ்தர்களானதால் அந்த வினியோகங்களை அவர்கள் ஆட்சேபிக்கலாம். (8 மூ. இ. அ. 500.)

443. பெண்வார்சுகள் சொத்தை விடுவது.—(1) ஒரு பெண்வார்சுக்குக் கிடைத்த சொத்து விஷயமாயுள்ள எல்லா பாத்தியத்தையும் அவளிஷ்டப்படும்பொழுது விட்டுவிட்டு, அக்காலத்தில் அநந்தர வார்சாயுள்ளவருக்கு சொத்தைக் கொடுத்துவிடலாம். இப்படிச் செய்வதால் சிலருக்கு நஷ்டமுண்டானாலும் பாதகமில்லையென்று முன்தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (8 ஸ. 500.)

உதாரணம்.—(1) புருஷனுக்கு வார்சாக அவனுடைய ஆஸ்தியை அனுபவித்துவரும் விதவை அக்காலத்தில் அடுத்த வார்சாயிருந்த தௌகித்திரனுக்கு எல்லாச் சொத்தையும் கொடுத்துவிட்டாள். அதற்குப்பிறகு அந்த விதவை ஜீவித்திருக்குங்காலத்தில் தௌகித்திரனிறந்தான். விதவை இறந்துபோனகாலத்தில் அவள் மைத்துனன் சமீப வார்சாயிருந்தான். இந்த ஸ்திதியில் விதவை பாத்தியத்தை விட்டுவிடாமலேயிருந்தால் மைத்துனனுக்குச் சொத்து வருமென்பது நிச்சயந்தான். ஆனாலவள் எப்பொழுது தன்னுடைய பாத்தியத்தை விட்டாளோ அப்பொழுதே தௌகித்திரன் சர்வ பாத்தியமுள்ள வார்சாக ஏற்பட்டதால் அவனுக்குப்பிறகு அந்தச்சொத்து அவனுடைய பிள்ளை முதலானவர்களுக்குச்சேரும்.

(2) தற்காலத்தில் அநந்தர வார்சாயுள்ளவன் கிழவனாகவாவது, வியாதிபிடித்துச் சீக்கிரத்தில் இறந்துபோகக் கூடியவனாகவாவதிருந்தால், மேற்சொல்லியபடி வார்சான ஸ்திரீ தன் பாத்தியத்தை விட்டுவிட்டு அவனுக்காவது, அவன் வார்சுகளுக்காவதுச் சொத்துச்சேரும்படி செய்யலாம்.

(2) பிற்காலத்தில் ஸ்திரீகளின் அந்தியகாலத்தில் ஏற்படும் அநந்தர வார்சுக்குத்தான் பாத்தியம் உண்டாகுமென்று சில தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. (19 இ. அ. 30; 19 கல். 236; 21 ம. 128.)

444. அநந்தரவார்சினிஷ்டப்படி சொத்து வினியோகம்.—பெண்வார்சால் செய்யப்பட்ட சொத்து வினியோகங்கள் அநந்தர

வார்சின்சம்மதியுடன் செய்யப்பட்டிருந்தால் அவை யவசியமாயிருந்தாலும் இல்லாவிட்டாலும்செல்லும். (9 ஸ 350; 5 க 49 ; 10 கல் 1102; 5 பம். 553: 3 அ. 362.) அநந்தரவாரசுகள் தஸ்தாவேஜில் கையெழுத்துப்போட்டிருந்தால் அவர்கள் சம்மதித்தார்களென்று ருசுச் செய்ய அனுகூலமாயிருக்கும். (24 ஸ. 127) விபக்த சகோதரனின் பெண்சாதி மைத்துனர்களின் சம்மதியின் பேரில் செய்த விநியோகம் செல்லுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது (12 C. W. N. 74, பிரிவி கவுன்சில்; 22 கல். 354; 13 ம. லா ஜர்னல் 323; 31 ம. 366 புல் பெஞ்சு.) அநந்தர வார்சு முழுபாத்திய மில்லாத ஸ்திரீயாயிருந்தால் அவளுடைய சம்மதியினால், அவளுக்குப்பின், வரும் வார்சுகள் கட்டுப்படமாட்டார்கள். (11 அ. 253; 14 மூ. இ. அ 176) தனக்கு இனிமேல் கிடைக்கக்கூடிய அநந்தரவார்சு சொத்தை விற்றால் செல்லாது. (24 அல. 94; 29 ம. 120.)

445. சம்மதிக்கவேண்டியவர் யார்.—(1) அநந்தரவார்சு சம்மதியைக்கிறபொழுது, தற்காலத்தில் நெருங்கிய அநந்தரவார்சினுடைய சம்மதிபோதுமா, அல்லது பெண்வார்சு இறந்துபோகுங்காலத்தில் ஜீவித்திருப்பவர்களில் எவர் சமீப வார்சோவென்று தெரியாததால் எல்லா அநந்தரவார்சுகளும் சம்மதிக்கவேண்டுமோ, என்கிற விஷயம் கொஞ்சம் கஷ்டமாயிருக்கிறது. அநந்தரவார்சுகளில் நெருங்கினவன் விநியோகத்துக்குக் சம்மதித்திருந்து அவனந்த ஸ்திரீ உயிருடனிருக்கும்பொழுதே இறந்துபோனால் அவனுடைய சம்மதியால் மற்ற அநந்தர வார்சுகள் கட்டுப்படுவார்கள். (5 க. 44 ; 1856-ம் வூ பம். ஸ. தீ. 604.)

(2) அநந்தர வார்சுகள் அனேகரிருந்தால அவர்களில் பெரும்பான்மையோருடைய சம்மதம் வேண்டும். மேலும் சமீபவார்சுகளின் சம்மதம் பெறாமல் தூரவார்சுகளின் சம்மதம் பிரயோசனப்படாது. தூரவார்சை மோசம்பண்ண சமீபவார்சின் சம்மதத்தின் பேரில் ஸ்திரீகள் செய்கிற விநியோகமும் செல்லாது. (13 மூ. இ. அ. 228)

(3) பெண் வார்சு இறந்துபோகுங்காலத்தில் யாரார் வார்சுகளாயிருக்கத் தகுந்தவர்களோ அவர்களெல்லோரும் சம்மதிக்கவேண்

டிய அவசியமென்றும் அநந்தர வார்சுகளில் தற்காலத்தில் நெருங்கின வன் ஒருவன் மட்டில் சம்மதித்தால் போதாதென்றும், பம்பாய் அலகாபாத் ஐகோர்ட்டார்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள் ஒரு பம்பாய் கேஸில் புருஷனுடைய சொத்து விதவையினுடைய அனுபவத்திலிருந்தது. அவளுடைய பெண்ணும், அவள் புருஷனுடைய ஒரு தூர ஞாதியும் அநந்தர வார்சுகளாயிருந்தார்கள். பம்பாய்தேச வழக்கப்படி முழுபாத்தியமுள்ள வார்சாகிய அந்தப் பெண்ணினுடைய சம்மதியுடன் விதவை சொத்தை விநியோகஞ்செய்தாள். அதற்குப்பிறகு முதலில் பெண்ணும் பிறகு விதவையுமிறந்தார்கள். அந்த விநியோகம் தூரஞாதியைக் கட்டுப்படுத்தமாட்டாதென்று சொல்லிச் சொத்தை அவனுக்குச் கொடுக்கும்படி தீர்மானஞ்செய்தார்கள். (5 பம். 563 ; 13 மூ. இ. அ. 228 ; 3 அ. 362; 5 அ. 116, 288; 10 அ. 407.)

(4) ஆனால், கல்கத்தா ஐகோர்ட்டார் தற்காலத்தில், விநியோகஞ்செய்தபோது நெருங்கின வார்சான அநந்தர வார்சு ஒருவன் சம்மதி போதுமென்றும் அவன் பெண்வார்சு உயிருடனிருக்கும் பொழுதே இறந்துபோனாலும் விநியோகம் ரத்தாகமாட்டாதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். (10 க. 1102) விநியோக காலத்தில் ஒரே வரிசையிலிருக்கிற அனேக அநந்தர வார்சுகளிருந்தால், (அவர்களாவன :— தௌகித்திரன், அண்ணன் தம்பிகள் முதலிய இரண்டு மூன்று பேர்களிருந்தால்) அவர்களெல்லோருடைய சம்மதியும் அவசியமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (17 க 896.)

440. அநந்தர வார்சு தாவா.—(1) சரியான அதிகாரமின்றி விதவை ஸ்வீகாரமெடுத்துக்கொண்டால் அது தெரிந்தது முதல் 6-வருஷத்துக்குள் அதை ரத்துசெய்ய தாவா கொண்டுவரவேண்டும். (18 ம. 53 ; ஸ்பெஷிபிக் ரிலீப் ஆக்ட் 4-வது பிரிவு.) தக்க அவசியமில்லாத சமயத்தில் பெண்வார்சுகள் தானம் விற்பனை முதலியவைகள் செய்தால் அந்த விநியோகஞ்செய்த 12-வருஷத்திற்குள் அநந்தர வார்சு பிராதுகொடுத்து, அது அந்தப் பெண்வார்சு ஜீவித்திருக்கும் வரையில்தான் செல்லுமென்றும், அநந்தரவார்சுகளைக் கட்டுப்படுத்தமாட்டாதென்றும் தீர்ப்புப்பெறலாம். (10 ம. 90; 9 க. 934.) மேற்சொல்லியபடி பிராது செய்யாமல் சும்மாவிருந்து விட்டால் அந்தப்

பெண்வார்சிறந்து அநந்தரவார்சுக்கு பாத்தியமுண்டானதற்குப்பிறகு 12-வருஷத்திற்குள் தாவாசெய்து விநியோகசொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ளலாம். (8 க. 442 ; 10 க. 324; 26. இ அ 71.) ஆனால், காலதாமதத்தால் ருசு முதலானது அகப்படாமல் போய்விடுமாதலால் பெண்வார்சு உயிருடனிருக்கும் பொழுதே தாவா செய்வது நலமாயிருக்கும். (8. அ. 365, 946; 14 க. ஐ. 226) ஆனால், சொத்து மட்டும் அவளுக்கு பிற்காலத்தில் தான் அநந்தரவார்சைச்சேரும். (6 கல் 198.)

(2) பெண்வார்சு உயிருடனிருக்கும்பொழுது அநந்தரவார்சு தாவாசெய்து அவளுக்குப்பிறகு அந்தவாஸ்தி தன்னைச் சேரவேண்டியதென்று தீர்ப்புப்பெற அதிகாரமில்லை. ஏனென்றால், அவளிறந்து போகுங்காலத்திலிவன் ஜீவித்திருந்தால் மட்டும் அநந்தரவார்சாகிறான். (15 க. ஐ. 83; 8 க. 12.) அவளாயிசுகாலத்தில் கொண்டுவரப்படும் அநந்தரவார்சு தாவா பிரயோசனமில்லை. (22 அ. 294.)

(3) அநந்தரவார்சுக்கு அதிக நஷ்டமுண்டாகும்படி பெண்வார்சு தன்னுடைய சொத்தை யனுபவித்தால் அக்காலத்தில், அநந்தரவார்சாயிருப்பவன் தாவாசெய்து அப்படி நடத்தாமலிருக்கும்படி கோர்ட்டு மூலமாய் அவளுக்கு இஞ்சங்ஷன் கொடுக்கும்படி செய்யலாம். (4 க. ஐ. 1; 1 ஸ. 125; 6 மூ. இ. அ. 433.) ஆஸ்திமுழுவதும் நஷ்டமாகும்படி செய்புங்காலத்தில் அதை அவள் வசமிருந்து நீக்கி ரிஸீவர் ஏற்படுத்தும்படி கேட்கலாம். (1854-வ பம். ஸ. தீ. 351; 1 க. ஐ. 24.) ரிஸீவரேற்படுத்தப்பட்டால் ஆஸ்தியின் வரும்படியெல்லாம் பெண்வார்சுக்கே அவளாயிசுவரையில் கொடுக்கப்படும். (1 ம. ஐ. கோ. ரி. 236; 2 ம. ஐ. கோ. ரி. 399.) சொத்தை செவ்வையாய்ப் பரிபாலனஞ்செய்ய அநந்தரவார்சே தகுந்தவனாகக் காணப்பட்டால், அவனே ரிஸீவராக நியமிக்கப்படலாம். (1859 பம். ஸ. தீ. 210; 5 அல 555.) பெண்வார்சுமூலமாய் சொத்தையடைந்து யாராவது அக்கிரமமான வழியாய் அனுபவித்து அதை நாசஞ்செய்தால் அவன் பேரில் கூட அநந்தாவார்சு பிராதுசெய்யலாம். (3 ம. ஐ. 119; க. ஐ ஸப்ளிமெண்ட் வாலியூம். 48.)

அநந்தர வார்சு கிரமப்படி சொத்தை யடையவேண்டுமென்று தாவா செய்கிறவர்கள் இறந்தவருடைய அபரக்கிரியைச் செலவுகளை

அந்த சொத்திலிருந்து கொடுக்கக்கடமைப்பட்டவர்கள். (32 மம். 26.)

447. பிராதுசெய்ய வேண்டியவர்கள்.—தற்காலத்தில் அநந்தரவார்சாயிருப்பவன் மாத்திரம் மேற்பிரிவிற் சொல்லப்பட்ட பிராதுகள் செய்யலாமேயொழிய தூரவார்சாவது, அநந்தரவார்சின் சம்மதிபெற்றுக்கொண்டு அவனுக்கடுத்தவார்சாவது செய்யக்கூடாது. (5 அ 532; 6 அ. 428; 14 மூ. இ. அ. 176) அநந்தரவார்சு முழுபாத்தியமில்லாத ஸ்திரியாயிருந்தால், அவளுக்குப் பிந்திய வார்சுதாரன் மேற்சொல்லிய தாவா செய்யலாம். (13 ம. 195; 15 ம. 422; 14 மூ இ. அ 176) மேலும் அநந்தரவார்சு பெண்வார்சுடன் மோசடியாய்ச் சேர்ந்து சொத்து வினியோகஞ்செய்யப்பட்டாலும், அப்படி மோசடியாகச் சேர்ந்து பிராதுசெய்யாமலிருந்தாலும் அவனுக்குப்பிந்தின அநந்தரவார்சு பாராதீனம் பெற்றவன்பேரில் வியாஜ்ஜியஞ்செய்து சொத்தைத் திருப்பியடையலாம். (11 ம 106 ; 9 அ. 441 ; 14 மூ. இ. அ. 176.)

448. அநந்தரவார்சு கிரமத்தில் கிடைத்த சொத்தை ஸ்வேச்சையாய் வினியோகஞ்செய்யலாம்.—ஒருவன் தன் மகன் துஷ்டர்களோடு சேர்ந்து துர்வினியோகஞ் செய்கிறானென்று தன் பிள்ளையின் பெண் சாதிக்கு தனக்கு அநந்தரவார்சு கிரமத்தில் கிடைத்தசொத்தை எழுதிவைத்தான். அநந்தவார்சாய் கிடைத்தசொத்து வியாஜ்ஜிய மூலமாய்கிடைத்ததென்றும் அதற்கு குடும்பபொதுசொத்துசெலவழிக்கப்பட்டிருப்பதால் அதுவும் குடும்ப பொதுச்சொத்தென்றும் அவன்மகன் அது தனக்குச்சேரவேண்டுமென்றும் வழக்காடினன். அவ்வழக்கு செலவு ஒரு கடனுகபாவிக்கவேண்டுமென்றும், அநந்தரவார்சால் கிடைத்த சொத்தை சுவேச்சாவினியோகம் செய்ய பாத்தியமுண்டென்றும் தீர்ப்புச்செய்யப்பட்டது. (28 அல. 347.)

பெரிய ஹிந்துலா விலை ரூ 2—0—0

இதில் ஹிந்துக்கள் செய்கிற விவாகங்கள், சட்ட விரோதமான விவாகங்கள், பெண்சாதியை நீக்குவது, ஜீவனும்சங்கொடுப்பது, ஸ்வீகாரமெடுக்கிற விதம், ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டபிறகு பிள்ளை பிறந்தால் ஸ்வீகாரப்பிள்ளையின் பாகம், மைனர்கள், விதவைகள் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளுவது, பெண்சாதிக்கு ஸ்வீகாரம் செய்து கொள்ள அதிகாரம் கொடுப்பது, தீட்டில் செய்த ஸ்வீகாரமும் விவாகமும் செல்லா தென்பது, மைனர்களை காப்பாற்றுவது, விபசாரியான தாயிடமிருந்து குழந்தைகளைப் பிரிப்பது, பொதுக் குடும்பம், பிதுர்ரார்ஜித சுயார்ஜித சொத்துக்கள், பொதுக்கடன், பொதுச்சிலவு பொது வரும்படி, இவைகள் எல்லோரையும் சேருமென்பது, துர்விநியோகம் பொதுக்குடும்பத்தாரை கட்டுப்படுத்தாதென்பது, உயில் பாகம் - பிறவிக்குருடு - செவிடு-ஊமை-குஷ்டரோகி-முதலியவர்களுக்கு பாகங்கிடையா தென்பது, ஸ்திரீதனம், ஸ்திரீதன பாத்தியஸ்தர்கள், வார்சுகளின் வரிசைக் கிரமம், ஜாதிப்பிரஷ்டனுன பிள்ளைக்கு வார்சு பாத்தியமில்லை யென்பது, பெண்கள் வார்சாவது, முதலிய அனேகவிஷயங்கள் பிரிவி கவுன்சில், எல்லாஹைக்கோர்ட் [illegible] இவைகளின்தீர்ப்புகளை அனுசரித்து எழுதப்பட்டிருக்கின்றன. ரத்தாய்விட்ட பழைய சட்டத்தை சிலர் விற்கிறார்கள். அதைவாங்கி ஏமாராதீர்கள்.

புதிய விவகார சிந்தாமணி விலை ரூ. 2—8—0

(என்கிற தஸ்தாவேஜுகளின் சட்டம்.)

புதிய ஸ்டாம்பாக்ட், புதிய ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் இதிலடங்கி யிருக்கிறது. இதில் ஸ்டாம்பு, ரெஜிஸ்ட்ரேஷன், காலநிர்ணயம், கோர்ட்டுக்கட்டணம், இன்கம்டாக்ஸ், பலவிதப் பத்திரங்களின் மாதிரி, பத்திரங்கள் எழுதவேண்டிய விதமும், அதன் ஷரத்துக்களும், அதற்கு ஒட்டவேண்டிய ஸ்டாம்பு இவ்வளவென்பதும், கடன்பத்திரம், அடமானபத்திரம், வாடகைப்பத்திரம், போக்கியம், உடன்படிக்கை, ஜாமீன், பாகம், பரிவர்த்தனை, ஸ்வீகார அதிகாரம், முச்சலிக்கா, விக்கிரய சாசனம், உடன்படிக்கை, உயில் அல்லது மரண சாஸனம், அதிகாரப்பத்திரம், வக்கீல்த்து,பவர் ஆப் அடர்னி, விடுதலைப்பத்திரம், குத்தகைப் பத்திரம், பொறுப்பு பத்திரம், கோடிஸில் அல்லது உயில் ரத்து, செடில்மெண்ட்பத்திரம் முதலிய சுமார் 50-விதப் பத்திரங்களும்

ஒவ்வொரு பத்திரத்துக்கும் 3, 4-வித மாதிரிப் பத்திரங்கள் எழுதும் விதமும், அந்தந்த ஊர்களில் வழங்குகிற வார்த்தைகள் மாதிரியும், இன்னும் பல உபயோகமுள்ள சகல விவகாரங்களும், இதில் அடங்கி இருக்கின்றன.

க்ரிமினல் ப்ரோசீஜர்கோட் என்கிற க்ரிமினல் லா.

விலை ரூ. 3—0—0. வி. பி. தபால் கூலி அணா 9.

இதில் போலீஸ் மாஜிஸ்ட்ரேட்டுகள், டிப்டி கலெக்டர்கள், சப் அல்லது ஜில்லா கலெக்டர்கள், ஸெஷன் ஜட்ஜிகள், ஹைகோர்ட்டார் இவர்கள் கிரிமினல் கேசு விஷயமாய் இன்னின்ன அதிகாரங்களைச் செலுத்தலாமென்றும், போலீசார் இன்ன கேசுகளை மட்டும் பிடிக்கலாம், இன்னின்ன கேசுகளை விசாரிக்க அதிகாரமில்லை யென்பதும், அப்படிப் பிடிக்கிற கேசுகளில்கூட உடனே ஜாமீன் வாங்கிக்கொண்டு விட்டுவிட வேண்டுமென்றும், ஜாமீனைப் பிடித்த இடத்திலேயே வாங்க வேண்டுமே யொழிய ஸ்டேஷனுக்கு நபரை அழைத்துக்கொண்டு போகக்கூடாதென்பதும், சோதனைபோடுவது, ஜூரர் அஸெஸர் இவர்களுடைய சுதந்திரங்கள், ஐகோர்ட், பிரிவி கவுன்சில் முதலான கோர்ட்டுகளுக்குள்ள அதிகாரங்கள், சம்மன் கேசு, வாரண்டு கேசு, ஜாமீன் கேசு, ராஜியாகிற கேசு, குற்றங்களின் தன்மையும், அவைகளின் தண்டனையின் விபரமும் காலமும், ஒரு கோர்ட்டிலிருந்து மற்றொரு கோர்ட்டுக்கு கேசுகளை மாற்றிக்கொள்ளுவது, அக்கிரமமாய்ப் பிராது கொண்டுவந்தவர்கள்பேரில் மான நஷ்டத்துக்குப்போவது முதலான கிரிமினல் சம்பந்தமான சகல விஷயங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. இதை வாசித்தவர்கள், போலீஸாரின் மிரட்டல்களுக்கு பயப்படாமல் அவர்களையே கண்டிக்கவும், அவர்களின் அனியாயச்செயல்களை வக்கீல்களைப்போல் எடுத்துக்காட்டி தகுந்தபடி சிக்ஷிக்கச்செய்தும், தங்களுக்கு வேண்டியபோது தங்கள் வீட்டுவாசலில் கார்க்கும்படிக்கும் செய்யலாம். சுயமாகவே வக்கீல்களைப்போல் கோர்ட்டுகளில் பேசலாம். கிராம பஞ்சாயத்து கோர்ட்டார், கிராமமுனிசீப் இவர்களுடைய சில அதிகாரங்களும் இதில் அடங்கியிருப்பதால், அவர்களுக்கும், ஜூரர் அஸெஸர்களுக்கும் இது மிகவும் அவசியமானது.

புது ஹிந்து தர்ம ஸ்தாபன சட்டம் விலை ரூ. 1—0—0

நமது தேசத்தில் தர்ம சொத்துக்கள், தேவாலயங்கள், மடங்கள் முதலானவைகளை பரிபாலிக்க ஏற்பட்டுள்ள இந்தச்சட்டத்தில் கமிட்டி மெம்பர்கள், பஞ்சாயத்துகள், தர்மகர்த்தாக்கள் இவர்கள் மேற்படி தர்மசொத்து விஷயமாய் இன்னின்ன அதிகாரங்களைச் செலுத்தலா மென்பது, தர்மகர்த்தாக்கள் தர்மசொத்தை துர்வினியோகப்படுத்துவது, சொந்த உபயோகத்துக்கு எடுத்துக்கொள்வது, கவனிக்காமல் அழியவிடுவது, தேவஸ்தானம் முதலியவைகளுக்குச் சொந்தமான சொத்துக்களை வெகு குறைந்த குத்தகைக்கு விடுவது, வரவேண்டிய கடன்களை வசூல் செய்யாமல் காலாவதியாகும்படி விட்டுவிடுவது முதலிய இன்னும் பலவித ஊழல்களைச் செய்து கொண்டிருக்கிற தர்மகர்த்தாக்கள் பரம்பரை வம்சஸ்தர்களாயிருந்தபோதிலும் புது சட்டப்படி ஏற்பட்டிருக்கிற போர்டார் அந்த தர்மகர்த்தர்க்களை நீக்கி, வேறு தர்மகர்த்தாவை நியமிக்கலாம். தர்மசொத்துகளை இன்னின்ன இனங்களில் நியாயமான செலவுசெய்யவேண்டுமென்றும் ஸ்கீம் ஏற்படுத்தலாம். கோவில் மடம் முதலிய தர்மசொத்துகளின் வரும்படியை அனுபவிக்கும் சிப்பந்திகள்தான் ஊழல்களை போர்டாருக்கு தெரிவிக்க வேண்டுமென்பதில்லை; கோவில் அல்லது மடத்தில், சேவிக்கப்போகிற வரும், சத்திரம் முதலிய மற்ற தர்மங்களின் பிரயோஜனத்தையடைய யோக்கியமுடையவனும் போர்டாருக்கு ரிபோர்ட் செய்யலாம். இந்தச்சட்டத்திற்கும் முன் சட்டத்திற்கும் உள்ள வித்தியாசம் தெரிவதற்காக பல ஹைக்கோர்ட்டில் ஏற்பட்ட தீர்மானங்களின் சாராம்சங்களை விவரமாய் உதாரணங்களால் வியாக்கியானம்செய்து நன்றாய் தெரியும்படி எழுதப்பட்டிருக்கிறது. தேவஸ்தானங்கள் மடங்கள் விஷயமாய் இதுவரையில் எத்தனை கேஸ்கள் ஹைக்கோட்டுகளில் தீர்மானமாயிருக்கிறதோ அத்தனை கேஸுகளையும் காட்டியிருக்கிறோம்.

தர்மசோத்துகளின் ட்ரஸ்டி ஆக்ட். அணா 0—10—0

இதில் திரஸ்டிகளுடைய நியமனங்கள், திரஸ்டியின் கடமைகள், உத்திரவாதங்கள், சுதந்தரங்கள், அதிகாரங்கள் முதலியவை இன்னதென்பதும், திரஸ்டி மைனர் முதலியவருடைய சொத்தைக்காப்பாற்றுவது, கெட்டுப்போகக் கூடியதை மாற்றுவதும், விற்றுப்பணமாக்கு

வதும், டிரஸ்டி சொத்தை நிர்வாகஞ்செய்யும்போது செலவுகளைச்செய்வது, டிரஸ்டு பணத்தை பந்தோபஸ்தாக லேவாதேவி செய்தல், டிரஸ்டி விஷயமாய் செய்த நஷ்டமான காரியங்களுக்கு டிரஸ்டு பாத்தியப்படவேண்டுமென்பது, டிரஸ்டி ஒழுங்கான வரவு செலவு கணக்கு வைக்கவேண்டுமென்பது, டிரஸ்டுசொத்து விஷயமாய் கோர்ட்டுகளில் நடவடிக்கை நடத்தலாமென்பது, இன்னபடிக்கானால் டிரஸ்டுசொத்தின் பிரயோசனத்தை அடைகிறவனுடைய மனுவின்பேரின் கோர்ட்டார் ஒரு டிரஸ்டியை நீக்கி வேறு புதிய டிரஸ்டியை நியமிக்கலாமென்பதும், இன்னும் பல விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

நில ஆக்கிரமிப்புச்சட்டம். விலை அணா 4.

பட்டாதாரர் தன்சொந்த நிலத்துக்குச் சமீபமான புறம்போக்கு சர்க்கார் நிலத்தில் தப்பித்தவறி சாகுபடி செய்துவிட்டால், அப்படிச் சாகுபடி செய்த நிலத்துக்கு சர்க்காரில் ஏராளமாய் ஒன்றுக்கு பத்து, நூறு என்று தண்டத் தீர்வை வாங்கிவந்ததை ஒரு கேஸில் கனம் ஹைகோர்ட் ஜட்ஜ் பாஷியமய்யங்கார் அவர்கள் அப்படி வசூல் செய்வது சட்டப் பிசகென்றும் அப்படி வசூல் செய்ய சர்க்காருக்கு அதிகாரமில்லை யென்றும் தீர்மானஞ் செய்ததின்பேரில் மேற்கண்ட சட்டம் உண்டாக்கப்பட்டது. இந்த சட்டத்தில் கர்ணம் முதலிய கிராம அதிகாரிகள் இன்னின்ன நிலம் புறம்போக்கென்று குடிகளுக்குத் தெரிவித்து முளையடித்துக் காட்டவேண்டு மென்றும், அப்படித் தெரிவித்துக்காட்டாமல் தண்டத் தீர்வைக்குக் கொண்டுவருவது பிசகென்றும் காட்டப்பட்டிருக்கிறதுடன் இன்னும் குடிகளுக்குச் சாதகமான பல விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

கிராம முனிசீப் மான்யூல். 1-ம் பாகம்.

(கிராம முனிசீப் டெக்ஸ்ட் பரீட்சைக் கேள்விகள் சகிதம்)

நாளது தேதிவரையில் திருத்தி யச்சிட்டது.

இது கிராம முனிசீபுகளுக்கும் கிராம முனிசீப் பரீட்சைகளுக்குப் படிக்கிறவர்களுக்கும் கிராமக்கோர்ட்டில் வியாச்சியஞ்செய்கிறவர்களுக்கும் முக்கியமானது. இதுவரையில்கிராமமுனிசீப் பரீட்சைகளில் கேட்கப்பட்ட எல்லாக்கேள்விகளையும் வினா விடையாகத்தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது. இதில் கிராமக்கோர்ட்டுகளில் ஒவ்விதம் வியா

ச்சியம் தொடருவதென்பது, பார்ட்டிகளுக்கு சம்மன் பிறப்பிப்பது, விசாரணை செய்து, தீர்ப்புச்செய்வது, எக்ஸ்பார்டி தீர்ப்பு, கிராமமுன்சீப் தீர்ப்புக்கு அப்பீல்செய்வது, கட்சிக்காரர்கள் ராஜிசெய்வது, டிக்ரியின்படி வசூலாகாவிட்டால் சொத்தை ஜப்திசெய்து ஏலம் போடுகிற விதம், கட்சிக்காரர்கள் அயலூரிலிருந்தால் எவ்விதம் சம்மனை அவர்களுக்குச்சேர்ப்பிப்பதென்பது, கிராமமுனிசீப் சொல்பக்ரிமினல்குற்றங்களைப் பரிசீலனைசெய்து குற்றவாளியைத்தண்டிக்கவேண்டுமென்பது, பக்ஷபாதமாய்நடக்கிற ஒரு கிராமக்கோர்ட்நடவடிக்கையை வேறுகிராமக்கோர்ட்டுக்கு மாற்றிக்கொள்வது, ஸ்டாம்பு விஷயமாயும் கோர்ட்க் கட்டண விஷயமாயும் கிராமமுனிசீப் கவனிக்கவேண்டிய விஷயம், குற்றங்கள் செய்யவொட்டாமல் தடுப்பது. குற்றவாளிகளைப் பிடிப்பது, சடுதி மரணம் பைத்தியக்காரன் அனாதைகுழந்தைபலஹீனர்கள்குற்றத்தொழில் ஜாதியார் புராதனகட்டடம் புதையல் பேவாரிசுசொத்து பவுண்ட் ரெயில்வே தபால் அம்மைகுத்துவது இவைகள் சம்பந்தமாய் கிராமமுனிசீப்பின் அலுவல்களும் இதில்வியக்தமாய் சொல்லப்பட்டிருக்கின்றன.

இதன்விலை ரூ 1—8—0 தபால் சார்ஜ் அணா 5.

கிராமச் சுகாதாரம் விலை அணா 0—2—0

இது முக்கியமாய் கிராமமுன்சீப் பரீட்சைக்கு படிக்கிறவர்களுக்கு உபயோகமானது. இதில் ஜலம், வாயு, குடியிருப்பு ஸ்தலம், முதலியது சுத்தமாயிருக்கவேண்டுமென்பது, வாந்திபேதி, மலேரியா, விஷஜுரம், அம்மை இரத்தபேதி, அதிசாரபேதி, நரம்புச்சிலந்தி, ப்ளேக், முதலியன வராமல் தடுத்துக்கொள்ளுகிற விதங்களும், இவைகள் வந்தால்ஆபத்துவராமல் காப்பாற்றிக்கொள்ளும்விதம், எலிக்கடி, நாய்கடி, பாம்புகடி, தேள்கொட்டு, ஜலத்தில் முழுகுவது, கட்டியிருக்கிற வஸ்திரத்தில் நெருப்புப்பிடித்தல் முதலிய ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ளுகிற வழிகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

லோகல் போர்டுகள் ஆக்ட் விலை ரூ. 1—8—0

இதில் யூனியன்போர்ட், தாலூகா போர்ட், டிஸ்ட்ரிக்ட் போர்ட் இவைகளுக்கு மெம்பர்களை ஜனங்கள் தெரிந்தெடுத்து அனுப்புகிறவிதமும், அவர்கள் ஜனங்களுக்கு உபயோகமான சுகாதாரம், படிப்பு, வைத்திய உதவி, போக்குவரத்து சாதனமான ரோட்டுகள், குடி தண்ணீர் முதலிய சௌகரியங்களைச் செய்துகொடுக்கக் கட்டுப்பட்டவர்களெ

ன்றும், அம்மை, பிளேக் முதலியவை வராமல் தடுக்க முன்னேற்பாடு செய்யவேண்டுமென்றும், பொது விஷயங்களில் அசிரத்தையாயிருப்ப வரை மெம்பராகத் தெரிந்தெடுத்தனுப்பாமலிருக்கும் அதிகாரம் பொது ஜனங்களிடத்திலிருக்கிறதென்றும், மெம்பர்கள் பொதுஜன ஊழியஞ்செய்வதே அவர்கள் கடமையென்றும், இன்னும் பல விஷயங்கள் பொதுஜனங்களுக்கு சாதகமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன.

மகம்மதியன் லா

இதில் மகம்மதியரின் பிரிவுகள், அவர்களின் வார்சுகள், தகப்பன் அதிகாரம், மைனர்களை காப்பாற்றுவது, விவாகஞ் செய்கிறவிதம், விவாக விதிகள், விவாக ருசு, சட்டப்பிரகாரன விவாகம், விவாகத்தை ரத்து செய்தல், ஸ்திரீதனம், மைனர்கள் கார்டியன், உயில் விற்பனை, காஜி அதிகாரம், சொத்து பாத்தியம், வார்சுக் கிரமம் முதலிய விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. விலை ரூபா **2—0—0**

புது ஸ்டாம்பாக்ட் விலை அணா 12.

இதில் இன்னின்ன தஸ்தாவேஜுகளுக்கு இவ்வளவு துகையுள்ள ஸ்டாம்புகள் தேவையென்பதும், ஸ்டாம்புகள் ஒட்டாமல் பத்திரங்களை எழுதுவது குற்றமென்றும், இன்னின்ன விஷயங்களுக்கு ஸ்டாம்பு வேண்டியதில்லை யென்பதும், எழுதிய பிறகு உபயோகப்படாமற் போன ஸ்டாம்பை திருப்பி கலெக்டருக்கனுப்பி அதன் கிரயத்தை திரும்பப்பெறலாமென்பதும் இதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புது இன்கம்டாக்ஸ் (வருமானவரி) சட்டம்.

இதில் வரி விதிக்கத்தக்க வரும்படி, இன்னின்ன விஷயங்களை மொத்த வரும்படியிலிருந்து கழித்துக்காட்டலாமென்பது, வரிவிதிப்பதைப்பற்றி விசாரணை, வரும்படிக்கு ஸ்டேட்மெண்டு அனுப்புவது, வரி எப்போது செலுத்துவதென்பது, பொய்கணக்கு கொடுத்தால் தண்டவரிவிதிப்பது, பிராசிகூஷன் செய்வது, பொது தர்மகாரியங்களின் வரும்படிக்கு இன்கம்டாக்ஸ் கிடையாதென்பது, இன்கம்டாக்ஸ் அப்பீல், சூபர்டாக்ஸ், வரி வசூல் செய்வது முதலிய விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூபா **1—0—0**

எஸ்டேட் லாண்ட் ஆக்ட் (ஜமீன் குடி நில) சட்டம் 1-4-0

இது ஜமீன், மிட்டா, சுரோத்திரியம், இனும் கிராமங்களிலுள்ள குடிகளுக்குள்ள பாத்தியங்கள், பூமியை சீர்திருத்தி விருத்திசெய்யாத போது ஜமீன்தார் அதிகவரி விதிக்கக்கூடாதென்பது, அக்கிரமமாய் அதிகவரி விதித்தால் கலெக்டர் முதலிய ரெவினியு ஆபீஸருக்கு அப்பீல்செய்து வஜாசெய்து கொள்ளலாமென்பது, ஜமீனிலுள்ள ஏரி கால்வாய் முதலிய ஜலாதாரங்களை ஜமீன்தார் மராமத்துசெய்யவேண்டுமென்பது, நிலத்தை சர்வேசெய்து தகுந்தபடி தீர்வை விதிப்பது, பட்டாகொடுப்பது முச்சலிக்கா வாங்குவது, குத்தகை பாக்கிக்காக ஜப்தி செய்வதும், வசூல்செய்வதும், தரிசு அல்லது சாவியானபோது தீர்வையை வஜா செய்வது, இவ்வளவு வரிதான் நிலத்தின்பேரில் விதிக்கலாமென்கிறதுமான பல விஷயங்களும், இதில் ஜமீன்தார் குடிகளுக்குள்ள மேல்வார குடிவார பாத்தியா பாத்தியங்களும் விவரமாய் வரையறுக்கப்பட்டிருக்கின்றன.

கால நிர்ணயச் சட்டம் விலை அணா 8.

இதில் வியாச்சியங்கள், அப்பீல்கள் மனுக்கள் முதலியவை தாக்கல் செய்வதற்குகாலம் இவ்வளவு வரையில் செல்லுமென்றும், இன்னின்ன பத்திரங்கள், பிராமிஸோரி நோட்டுகள், வாய்க்கடன் கடன்கள், கடைகணக்கு பாக்கிகள், வீட்டு வாடகைகள், குத்தகை பாக்கிகள் முதலிய பலவிஷயங்களை வசூல்செய்ய காலாவதி இத்தனைகாலம் வரையில் செல்லுமென்றும், ஆனால் மைனர், பைத்தியக்காரன், தேசாந்திரங்களில் வசிப்பவன், ஜயிலில் அடைப்பட்டிருக்கிறவன் முதலியவர்களுக்கு அதிககாலம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதும் அடங்கியிருக்கின்றன.

ரெஜிஸ்ட்ரேஷன் சட்டம் விலை அணா 10.

இதில் பலவித பத்திரங்களுக்கும், உயில் முதலியவைகளுக்கும் ரெஜிஸ்டர் கட்டணம் இவ்வளவு கொடுக்கவேண்டுமென்றும், அவசியம் ரெஜிஸ்டர் செய்யவேண்டிய தஸ்தவேஜுகள் இவை யென்பதையும், கட்டாய ரெஜிஸ்டர் செய்கிற விதம், பத்திரங்களுக்கு நகல் வாங்குகிற விதம், ரெஜிஸ்டர் செய்கிற உத்தியோகஸ்தரை படிகட்டி வீட்டுக்கு வரவழைத்து ரெஜிஸ்டர்செய்வது, ரெஜிஸ்டர்செய்ய மறுத்ததை சீவில் கோர்ட்டில் தாவாசெய்து ரெஜிஸ்டர் செய்யும்படிசெய்வது முதலிய பல விஷயங்களடங்கியுள்ளது.

சீவில் ட்ர என்கிற சீவில் ப்ரோசிஜர் கோட். விலை ரூ. 3.

இதில் டிஸ்ட்ரிக்ட் முனிசீப், ஜில்லா ஜட்ஜ், ஹைகோர்ட் இந்த கோர்ட்டுகளில் வியாச்சியம் தாக்கல்செய்தல், சரங்கி போடுதல், விசாரணை, டிக்கிரி, வாரண்டு, ஜப்தி, ஏலம், பாபர் வியாச்சியம், வியாச்சியம் செய்தவுடனே டிக்ரிக்கு முன்சொத்தை ஜப்திசெய்வது, ராஜியாவது, ஜில்லாகோர்ட், ஹைகோர்ட், பிரிவி கவுன்சில் இவைகளில் அப்பீல்கள் செய்வது முதலிய சீவில்கோர்ட் நடவடிக்கைகள் முழுவதும் அடங்கியிருக்கின்றன.

இந்தியன் பினல் கோட் சட்டம். விலை ரூ. 3—0—0.

இதில் இன்னின்ன காரியங்கள் சட்டவிரோதமான செய்கைகளாக பாவிக்கப்பட்டு அதைச் செய்கிறவன் குற்றவாளியாக்கப்படுவானென்பது, அந்தக்குற்றங்களுக்கு முதல் தடவை இன்ன தண்டனை விதிக்கப்படும், இரண்டாவது தடவை அல்லது மேற்பட்ட தடவைகளில் குற்றஞ்செய்தால் இன்ன தண்டனைகள் விதிக்கப்படுமென்பது, இன்னின்ன சமயத்தில் செய்கிற காரியங்கள் குற்றமாகாதென்பது, ...களான விஷயங்கள் அடங்கியுள்ளன, வெகு கடினமான பிரிவுகளை உதாரணங்களால் விளங்கியும், சுலபமாய் தெரிந்துகொள்ளுவதற்காக பலவிடங்களில் வியாக்கியானங்களால் விவரித்தும், எல்லா ஹைக்கோர்ட்டுகள், பஞ்சாப்சீப்கோர்ட் இவைகளின் தீர்ப்பை யனுசரித்தும் எழுதப்பட்டிருக்கிறது. இது கிராம பஞ்சாயத்து கோர்ட்டாருக்கு அவசியமானது.

புதிய கிராம பஞ்சாயத்து ஆக்ட். விலை ரூ. 1-4-0

இதில் (1920-ம்ஸ்டத்திய 2-வது ஆக்டால் திருத்தப்பட்ட 1889 ஸ்டத்து) **கிராம கோர்ட்டுகள் ஆக்டும்,** (1920-ம்ஸ்டத்து 15-வது) **கிராம பஞ்சாயத்து ஆக்டும்,** நாளது வரையில் திருத்தப்பட்ட ஷை ஆக்டுகளின் விதிகளுடனும், **டவுன் நியூசன்ஸ் ஆக்டுடனுங்** கூட சேர்ந்து அச்சிடப்பட்டிருக்கிறது. கிராமங்களில் பஞ்சாயத்துகளையும் பஞ்சாயத்து கோர்ட்டுகளையும் ஏற்படுத்துவது, அவைகளுக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுப்பது, தெரிந்தெடுப்பவர்களின் யோக்கியதை, பிரஸிடெண்டின் அதிகாரங்கள், பஞ்சாயத்தின் அலுவல்களும், அதிகாரங்களும், வரி வசூல்களைக் குறித்த விதிகளும், திரவிய சகாய

ம்பெறும் பாடசாலைகளை மேல்விசாரணை செய்வதும், சமுதாய புறம்போக்குகளின்மேல் அதிகாரங்களும், அடங்கியிருக்கின்றன. மேலும், கிராம பஞ்சாயத்து கோர்ட்டுகளின் சீவில் கிரிமினல் அதிகாரங்களும் அதை அனுசரித்த விதிகளும் அடங்கியிருக்கின்றன.

பரம்பரையான கிராம ஊழியம், அல்லது உத்தியோகங்களைக் குறித்த சட்டம், விதிகளுடன். (புதியபதிப்பு) ரூ 1.

இதில் அயன் கிராமங்களிலும், எஸ்டேட் கிராமங்களிலும் கிராம முன்சீப், கர்ணம், மற்ற சில்லரை சிப்பந்திகள் பரம்பரையாய் கிராம உத்தியோகங்களுக்குக் கட்டாயம் வரவேண்டுமென்றும், அவர்களைப் புறக்கணித்து வேறொருவரைநியமித்தாலும், பரம்பரைபாத்தியமுள்ளவர்கள் கலெக்டருக்கும், ரெவினியு போர்டாருக்கும், அப்பீல்சேய்து கொண்டு வேலையைப்பெறலாமென்றும், இன்னும் பரம்பரையான கிராம உத்தியோகஸ்தர்களுக்குச் சாதகமான பல விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்துதேசத்து சாட்சி ஆக்ட். விலை ரூபா 1-0-0

இதில் விவகாரத்திலுள்ள எந்த எந்த சங்கதிகள் வியாச்சியத்துக்கு ஒற்றுமையானதாயிருக்கிறதென்பது, வியாச்சியத்தில் விவகாரத்தை கட்சிக்காரர்கள் ஒப்புக்கொள்ளுதல், தஸ்தாவேஜு சாட்சியங்கள் இன்னபடியிருந்தால் ஒப்புக்கொள்ளத்தக்கது, போலீஸ் விசாரணை தஸ்தவேஜுகளும், போலீசாரிடம் ஒப்புக்கொண்டதும் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளக்கூடதென்பது, மிரட்டி ஆசைகாட்டி குற்றத்தை ஒப்புக்கொள்ளச்செய்வது சாட்சியாக பிரயோஜனப்படாதென்பது, பூமி படங்கள், கணக்கு புஸ்தகங்கள், தரும சாஸ்திரங்கள், சர்க்கார் ரெகார்டுகள்,போட்டோப்படங்கள்,தபால்கடிதங்கள், முன் தீர்ப்புகள், நிபுணர்கள் அபிப்பிராயம், வழக்கங்கள், கோட்பாடுகள், ஒரு நபருடைய அந்தஸ்து முதலிய சாட்சியங்கள், மைனர், ஊமை முதலானவர்களின் சாட்சியம், ஏற்றுக்கொள்ளத்தக்கதென்றும் நிந்தையான அவலட்சணமான வெட்கக்கேடான கேள்விகளை சாட்சிகளைக்கேட்கக் கூடாதென்பது, அனாவசியமான கேள்வியை சாட்சிகளுக்கு போடக் கூடாதென்பது முதலிய விஷயங்கள் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. இது கிராமப்பஞ்சாயத்து க்கோர்ட்டுகளுக்கு அவசியமானது.

கிராமக்கோர்ட்டுகளுக்கு வேண்டிய பாரங்கள்.

			ரூ.	அ.	ப.
ஹாஜர் முச்சிலிக்கா பாரம்	...	100-க்கு	0	10	0
சிவில் பிரதிவாதி சம்மன்	...	100-க்கு	0	10	0
சிவில் சாட்சி சம்மன்	...	100-க்கு	0	10	0
கிரிமினல் சாட்சி சம்மன்	...	100-க்கு	0	10	0
குற்றவாளி சம்மன்	...	100-க்கு	0	10	0
ஷை க்கு பிடிவாரண்டு	...	100-க்கு	0	10	0
டிக்ரியை நிறைவேற்ற ஆட்சேபனை செய்ய பிரதிவாதிக்கு நோட்டீசு	...	100-க்கு	0	10	0
ஜப்தி கட்டளைபாரம்	...	100-க்கு	0	10	0
சிவில் வாதிக்கு மறுவாயிதா நோட்டீசு	...	100-க்கு	0	10	0
பஞ்சாத்து மெம்பருக்கு நோட்டீசு	...	100-க்கு	0	10	0
க்ரிமினல் வாதிக்கு மரு ஈரங்கி. நோட்டீசு	...	100-க்கு	0	10	0
14-வது பிரிவுப்படி பிரதிவாதிக்கு நோட்டீஸ்		100-க்கு	0	10	0
[illegible]ண்ட் (பாரம்)	...	50-க்கு	0	10	0
பிரஸ்பட்டு (நிறைவேற்ற) மனுபாரம்	...	50-க்கு	0	10	0
பிராது பிளெயிண்டு பாரம்	...	50-க்கு	0	10	0
வாக்குமூல பாரம்	...	50-க்கு	0	10	0
ஏலலிஸ்தியார்	...	50-க்கு	0	10	0
கிரிமினல் கேஸ் டாக்கெட்பாரம்	...	50-க்கு	0	10	0
சிவில்கேஸ் ஷை	...	50-க்கு	0	10	0
ரெகார்டுகளுக்கு நகல் வாங்க மனு	...	50-க்கு	0	10	0
14-வது பிரிவின்படி சம்மதி உடன்படிக்கை.		50-க்கு	0	10	0
சிவில் டிக்கிரி பாரம்	...	50-க்கு	1	4	0
இரசீது கைசாத்து புக் சிறியது		1-க்கு	0	0	6
ஷை நூறு புக் மொத்தமாக வாங்கினல்		100-க்கு	2	8	0
ஷை 50-பக்கம் பெரிய புக் கெட்டி ராப்பர்		1-க்கு	0	3	0
ஷை ஷை பைண்டு புக்		1-க்கு	0	4	0
ஷை நூறு பக்கமுள்ள பைண்டு புக்		1-க்கு	0	8	0

குறிப்பு:-இதில்கண்ட பாரங்களுக்கு மாதிரி தேவையானல், 2-அணு ஸ்டாம்பு அனுப்பினல் கிடைக்கும்.

கிரந்த (சம்ஸ்கிருத) புஸ்தகங்கள்.

கல்பசிந்தாமணி உயர்ந்தது-அணா 12.

நமதுதென் தேசத்தில் அநுஷ்டிக்கிற முக்கியமான விருதங்களான விநாயக சதுர்த்தி விருதம், ருஷிபஞ்சமி, ஷஷ்டி, ஜன்மாஷ்டமி, சரஸ்வதி, துவாதசி பிருந்தாவனபூஜா, ஏகாதசி, பிரதோஷ, சிவராத்திரி, அநந்தவிருதம், உமாமகேசுவர, சித்ராபூர்ணிமை, அமாசோமவார, வரலட்சுமி, அகண்டதீப, மாகஸ்நாந, ரதசப்தமி முதலிய 15 விருதங்களின் ஆரம்ப உத்தியாபனமும், கதைகளுடன் அடங்கியுள்ளன. இது கிரந்தலிபியில் 198-பக்கங்கள் உள்ளன.

யஜுர்வேதாந்ஹிகம் அணா 6.

இதில் யஜுர்வேதிகள் அனுஷ்டிக்கவேண்டிய மகாசங்கல்பம், ஸ்நாநவிதி, ஸ்நாநாங்க தர்ப்பணம், சிகோதக, வாஸோதகமந்திரம், யக்ஞோப தர்ப்பணம், யஞோபவீததாரணமந்திரம், திரிகால சந்தியாவந்தனம், அருணாபிரார்த்தனை, சூரிய நமஸ்காரம், நவக்கிரக நமஸ்காரம், பிரம்மயக்ஞம், ஸமிதாதானம், ஔபாசனம், தர்ப்பணம், பூஜாவிதி, வைசுவதேவம், ஸிம்ஹானுவாகம், திரிசுபர்ணம், முதலியவைகள் அடங்கி இருக்கின்றன.

யஜுர்வேத சந்தியாவந்தனம்	0	1	0
யஜுர்வேத அமாவாசைத்தர்ப்பணம்	0	1	0
யஜுர்வேத உபாகர்மம்	0	2	0
ருக்வேத அமாவாசைத் தர்ப்பணம்...	0	1	0
போதாயன அமாவாசைத்தர்ப்பணம்	0	1	0

ப்ருஹன்மவிந்யா சதுஸ்ஸூத்ரீ. விலை ரு 2—0—0

(கிரந்தமூலம்-தமிழ் வியாக்கியானத்துடன்.)

இவ்வுலகில் தர்மம், அதர்மம், காமம், மோக்ஷமென நான்கு புருஷார்த்தங்கள் உள்ளன. அந்நான்கிலும் மோக்ஷந்தான் அழியாத புருஷார்த்தமென்று சுருதி, ஸ்மிருதி நியாயங்கள் மூலம் தெரிகிறது.

மோக்ஷமென்றால் ப்ரும்மஞானத்தையடைவது. ப்ரும்ம சூத்ரமென்பது வேதாந்தசாரமான உபநிஷத் அர்த்தங்களை சூத்ரமாக ஸ்ரீவேதவியாசர் லோகோபகாரமாய் இயற்றியிருக்கிறார். இந்த ப்ரும்ம சூத்ரம் த்வைத அத்வைத, விசிஷ்டாத்வைத மதஸ்தர்களால் பாஷ்யம் எழுதப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்கிருத ஞானமில்லாத கனவான்கள் வேதாந்த சாரத்தைஎளிதில் உணரவேண்டி.ஸம்ஸ்கிருதமூலம் பதவுரை, விரிவுரையுடன் விஸ்தாரமாய் எல்லாரும் தெரிந்துகொள்ளும்படி எழுதப்பட்டிருக்கிறது.

மனீஷா பஞ்சகம். விலை ரூ 1—0—0

ஒரு சமயம் ஆதி ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய ஸ்வாமிகள் மாத்தியாந்ஹிக ஸ்நாநத்திற்குகங்கைக்கரையிலுள்ள மணிகர்ணிகா கட்டத்துக்கு சிஷ்யகோடிகளோடு ஸ்நானத்துக்குப்போகும்போது எதிரில்ஒரு சண்டாளன்வர, அவனைசிஷ்யர்கள்விலகிப்போகும்படிசொல்ல,அதற்கு அந்த பஞ்சமன், விலகிப்போகும்படிசொல்பவன்எவன் ? விலகவேண்டியவன் எவன்? என்று ஸ்ரீபகவத்பாதாசார்யாளைக்கேட்க,அவர் பரமாச்சர்யமடைந்து, வேதாந்திகள் அறியமுடியாத உண்மையை [illegible] அறிந்திருப்பதால் இவனே எனக்கு குருவென்று, வேதாந்தசாரம் ததும்பும் 5 சுலோகங்களை கவனஞ்செய்தார். உடனே அந்த சண்டாளன் மறைந்துவிட்டான். அங்கே சண்டாளரூபத்தோடு வந்தவர் காசி விசுவேசுவரர்தான். சங்கரபகவத்பாதாளுடைய மஹிமையை சோதிக்க சண்டாளரூபமெடுத்து அங்கே தேன்றினார். எல்லாரும் பரமாச்சர்யமடைந்து விசுவேசுவரரையும், ஸ்வாமிகளையும் ஸ்தோத்திரம் செய்தார்கள்.

இந்த 5 - சுலோகங்களும், கிரந்தம் தேவநாகரம் இரண்டிலும் அச்சிட்டு பதவுரையும்,சுமார் 120 பக்கங்களுள்ளவிஸ்தாரமான வியாக்கியானங்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதைப் படிப்பவர்கள் வேதாந்தத்தை வெகு சுலமாய் அறிந்துகொள்ளலாம்.

கிரந்த வால்மீகி ராமாயணம் - சுந்தரகாண்டம்.

ராமானுஜீய, கோவிந்தராஜீய, மஹேசுவரதீர்த்நீய, திலகமுதலிய நான்கு வியாக்கியானங்களுடன் பெரிய கிரந்த அக்ஷரத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. டிம்மி 4-பக்க அளவில் 360 பக்கங்கொண்டது.

இது பாராயணத்துக்கும், பூஜைக்கும், விசேஷ காலங்களில் தானங்கொடுப்பதற்கும் உபயோகமானது. இராமாயணத்தைப்படிப்பவர்களும், கேட்பவர்களும், பூஜை செய்பவர்களும் சகல மனோரதங்களையும் அடைவார்களென்பது உலகப்பிரசித்தம். விலை ரூ 3—0—0

ஸ்ரீ கிருஷ்ணாய பரப்பிரம்ஹணேநம:

ஸ்ரீ ம த் பா க வ த ம்.

(கிரந்த அக்ஷரத்தில்)

பூஜிப்பதற்கும், பாரயணஞ் செய்வதற்கும், உபயோகமுள்ளதும் ஸ்ரீவேதவியாச மஹாருஷிகளால் இயற்றப்பட்டதும், பகவத்குணகணங்கள் நிறைந்ததும், சித்த சுத்தியைக் கொடுத்து மோக்ஷஸாம்ப்ராச்சியத்தை அளிக்கக்கூடியதுமான ஸ்ரீமத் பாகவதம் 12-ஸ்கந்தங்களும் ஸ்ரீதரீயம், முக்கியமான இடங்களில் வீரராகவீயம், சந்திரிகை, முனி [illegible]பிரகாசிகை முதலிய நான்கு வியாக்கியானங்களுடன், உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அழகான கிரந்த லிபியில் டிம்மி 8-பக்க அளவில் சுமார் 420-பாரம் அதாவது 3360-பக்கங்கள் அச்சிட்டு, காலிகோ அல்லது பூஜார்ஹமான கித்தான் பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை ரூபா 20. ஒரே சமயத்தில் 5-செட் புஸ்தகங்கள் வாங்குபவர்களுக்கு ஒரு செட் இனுமாய்க் கொடுக்கப்படும்.

புஸ்தகத்துக்கு ஆர்டர் செய்கிறவர்கள் புஸ்தகத்தின் கிரயத்தில் நான்கில் ஒருபங்காவது அட்வான்சாக அனுப்பவேண்டும். புஸ்தகம் அதிகபளுவாயிருப்பதால் தபாலில் அனுப்பினுல் செலவு ஜாஸ்தியாகும். ரெயில் மூலமாயனுப்பினுல் செலவு குறையும். ஆகையால், அவரவர்கள் தங்களிருப்பிடத்துக்குச் சமீபமாயுள்ள ரெயில்வே ஸ்டேஷனை எழுதியனுப்ப வேண்டும்.

தேவையுள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசதாருக்கு எழுதித் தருவித்துக்கொள்ளலாம்.

மதுகரவேணி புஸ்தகசாலை
வேப்பேரி-மதராஸ்.

ரப்பர் ஸ்டாம்பு முத்திரைகள்.



கிராமக் கோர்ட்டுகளுக்கு உதவும்படி நடுவில் அரசர் முடிவைத்து வட்டமாகவாவது, ஓவலாக முட்டை மாதிரியாகவாவது ரப்பர் ஸ்டாம்புகள் எந்தமாதிரி தேவையானாலும் தயார்செய்து கொடுக்கப்படும். வியாபாரிகள் கோவாபரேட்டிவ் சங்கங்கள், பாங்கர்கள், கண்டிராக்டர்கள், மிராசுதாரர்கள், பண்டாரிஸ்கள், சொஸைடிகள் இவர்களுக்கு எந்தெந்த மாதிரி ரப்பர் முத்திரைகள் தேவையோ அந்தந்தமாதிரி அழகாயும் நெடுநாள் உழைக்கக்கூடியதாயும் செய்து அனுப்பப்படும்.

ரப்பர்முத்திரையுடன் தானே இங்கி கொடுக்கிற பாடுடன் அனுப்பப்படும்.

ரப்பர்முத்திரை 1-க்கு ரூ 2—8—0.

பவுண்டன் பேனா

நன்றாய் வெகுகாலம் எழுதக்கூடியதும் விலைக்குத் தகுந்தபடி உயர்ந்த தங்க நிப்புபோட்டதுமான பவுண்டன் பேனாக்கள் விலை சரசமாய் எங்களிடத்தில் கிடைக்கும்.

பேனாவின் விலை ரூ 2—8—0- முதல் ரூ 7—8—0 வரையில் இருக்கிறது. பேனாவுடன் இங்கி நிறப்பும் ரப்பர் குழாயும் அனுப்பப்படும்.

இதில்கண்ட புஸ்தகங்களுக்கும் ரப்பர்முத்திரை, பவுண்டன் பேனா முதலியவைகளுக்கும் அடியில்கண்ட விலாசத்துக் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மதுகரவேணி விலாசம் புக் டிபோ,
வேபேரிபோஸ்டு-மதராஸ்.

தமிழ்ச்சட்ட புஸ்தகங்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
ஸ்டாய்யு, [illegible] வைகங்கல் விதபத்திர [illegible] முதல் [illegible] [illegible] ஷணி	[illegible]		லோ [illegible] ...	1	[illegible]
உ[illegible] பாகம், வார்சுபாத்தியம் ஸ்திரீதன முதலியதுள்ள பெரிய [illegible]துலா	2	0	குற்றச[illegible] இந்திய [illegible] பி[illegible] ...	3	[illegible]
சிவில் [illegible] பூர்த்தியாயடங் [illegible] சிவில் லா	3	0	எவி[illegible] ...	1	[illegible]
[illegible] ஸ் மாஜிஸ்ட்ரேட்சம்பந்த [illegible] க்ரிமினல் லா ...	[illegible]	[illegible]	[illegible] சட்டம் ...	1	0
புது கிராமமுனிசிப் சட்ட ...	1	8	[illegible] ...	0	10
கிராம பஞ்சாயத்து சட்டம ...	1	2	கிராம [illegible] ...	0	[illegible]
[illegible]ஸ் ஆக்ட்	0	8	[illegible] ஆக்கிரமிப்பு சட்டம் ...	0	[illegible]
			[illegible] ஆக்ட் ...	0	[illegible]
			புதிய ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்	0	10
			பரம்பரைகிராமஉத்தியோக ஆக்ட்	1	[illegible]
			புது [illegible] சட்டம் ...	1	0
			புதிய ஸ்டாம்பாக்ட் ...	0	12

தமிழ் நாவல்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
இராஜாமணி	0	8	நளாகினி விஜயம் ...	0	14
[illegible]னமாலிகா	0	[illegible]	சோ[illegible]காந்தன்	0	10
ஜயதேவன்	0	[illegible]	சுசிலா	0	10
பத்மநாபன்	0	8	நார்ஜிகா[illegible] [illegible] [illegible]யின் சரித்திரம் ...	0	[illegible]
[illegible]ருஷ்ண[illegible] ...	0	8	மோ[illegible] ...	0	[illegible]
பிரதாபஸிங்	0	8	[illegible] ...	0	2
[illegible]ஷி	0	5	நெப்போலியன சரித்திரம் ...	0	2
பாங்[illegible]ன்	0	10	இல்லறமா? துறவறமா? ...	0	1
ச[illegible]யவிஜய[illegible]	0	10	மகாமக மகாத்மியம் ...	0	2
[illegible]வெனிற்க[illegible]	0	8	[illegible] சாஸ்திரம் படங்களுடன்.	1	4
[illegible]தசந்திரிகா	0	10	15 வி[illegible]ங்கிய [illegible]	0	[illegible]
[illegible]த்திவிமானம் ...	0	14	[illegible] உயர்ந்த பதிப்பு ...	0	[illegible]
[illegible]ருகாசுவம்	0	14			

கிராமக் கோர்ட்டுகளுக்கு வேண்டிய பாரங்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
[illegible]திவாதி சம்மன் 100-க்கு	[illegible]	10	சம்மதி [illegible] 50-க்கு	0	10
[illegible] சம்மன் 100-க்கு	0	10	[illegible] மனுபாரம் 50-க்கு	0	10
[illegible]சாட்சிசம்மன் 100-க்கு	0	10	[illegible] (பாரம்) 50-க்கு	0	10
[illegible]வாளி சம்மன் 100-க்கு	0	10	[illegible] 50-க்கு	0	10
[illegible] 100-க்கு	0	[illegible]	[illegible] 50-க்கு	0	10
[illegible]றைவேற்ற ஆட்சே[illegible]	[illegible]	[illegible]	[illegible] 50-க்கு	0	[illegible]
[illegible]திவாதிக்கு [illegible]	[illegible]	[illegible]	[illegible]	0	[illegible]
[illegible] 100-க்கு	[illegible]	[illegible]	[illegible] 50-க்கு	[illegible]	10
[illegible]	[illegible]	[illegible]	சிவில் [illegible]	[illegible]	[illegible]
[illegible]	[illegible]	[illegible]	[illegible] புக் [illegible]	0	[illegible]
[illegible]	0	10	[illegible]	2	[illegible]
[illegible]	0	10	[illegible] 50 [illegible]	0	3
[illegible]-க்கு	[illegible]	[illegible]	[illegible] செட்டி [illegible]	0	4
ஜப்தி [illegible]	0	[illegible]	[illegible] 100 [illegible]-க்கு	0	[illegible]
[illegible]க்கு	0	10			

[illegible] விலாசம் புத்தகசாலை, [illegible] மகருஸ்.